தாய்வீடு

THAIVEEDU JUNE 2021 ஜூன் www.thaiveedu.com

மஹாகவி சிறப்பிதழ்

கி.ரா. எனும்
அடையா நெடுங்கதவு

40 ஆண்டுகளாக
எரியும் நினைவுகள்

NAVA WILSON LLP
BARRISTERS AND SOLICITORS
10 Milner Business Court, Suite 210
Toronto, ON M1B 3C6
416.321.1100
416.321.1107
info@navawilson.law
www.navawilson.law

RAMAN HOME COMFORT INC
HEATING
Quality Products, Certified Technicians, Reliable Service & Reasonable Prices
SAVE $2000 WHEN PURCHASING A NEW HIGH-EFFICIENCY FURNACE
LENNOX
Raman Chelliah
Sales Person
647-893-4414
Tel: 416-332-2989
Email: info@ramanhomecomfort.com
Scarborough: C105-4055 Steeles Ave. East, Scarborough, ON M1S0A7

15 years of Success
500+ Agents
VettyvelLaw
Selva Vettyvel
Broker of Record
Rishani Vettyvel
BARRISTER AND SOLICITOR
Real Estate Law
HomeLife/Future Realty Inc., Brokerage
416.568.4301
416.261.1544

AEREN Thiyagarajah BEng
Realtor
aeren.realtor@gmail.com
Dir. 647-888 3500
DILEEP Thangavel
Realtor
dileep.realtor@gmail.com
Dir. 416-666 2300
BUS: 905 201 9977 | FAX: 905 201 9229
HomeLife/ Future Realty Inc., Brokerage
Independently Owned And Operated
205 - 7 Eastvale Drive, Markham, ON L3S 4N8

அனைத்து மோட்கேஜ் தேவைகளுக்கும்
BonaFide Mortgage Solutions Inc.
Brokerage Lic# 10216
Suren Nathan
Mortgage Broker
License# M08004479
Dir. 416-436-1111
suren@bonafidemortgage.ca
Office. 416-548-7475 Fax: 416-548-7496
7 Eastvale Drive,Unit 203, Markham, ON, L3S 4N8

ALL YOUR REAL ESTATE & MORTGAGE NEEDS
விற்க எண்ணுது தொடுவானம் அல்ல
கலங்கரை விளக்கு...
Thana Yoganathan
416.418.5749
www.thanahomes.com
HOMELIFE LANDMARK REALTY INC.,BROKERAGE* OFFICE: 905-305-1600

வீடு வியாபார நிலையம்
வாங்க விற்க
HomeLife Today Realty Ltd., Brokerage*
Bus: 416-298-3200 Fax: 416-298-3440,
E-mail: kuna@kunahomes.ca
*Independently Owned and Operated
Kuna Nagalingam
Sales Representative
Sujatha Kunasegar
Sales Representative
416.402.4545

RL RAMACHANDRAN LAW
PROFESSIONAL CORPORATION
CIVIL LITIGATION •
REAL ESTATE •
FAMILY •
CORPORATE •
EMPLOYMENT •
WILLS & ESTATE •
VITHU RAMACHANDRAN
Barrister & Solicitor
416-902-8225
VITHU@RAMACHANDRAN.LAW | FAX: 416-391-6056

Ahilan Thanabalasingham
Sales Representative
416.617.1767
Office: 905.471.0002
RE/MAX
RE/MAX Royal Properties Realty Ltd., Brokerage
7595 Markham Road, Unit 19 Markham, ON L3S 0B6

UTHAYAN SIVARAJAH
416.301.5555
SUGAN SIVARAJAH 416.890.9999
RAJ SIVARAJAH 416.843.3333
SIVAKUMAR SIVARAJAH 416.453.7777
PYRAMID GROUP
ROYAL LEPAGE ignite
795 Milner Avenue, Toronto, ON M1B 3C3
Office: 416-282-3333 | Fax: 416-272-3333

Your Trusted Realtor
Buying Selling Leasing Investing
RE/ON Homes Realty Inc.
FREE HOME EVALUATION
Justin William
Broker of Record/ Owner
Dir. 416.803.7344
www.reon.ca

DENTAL CLINIC
Dr. Iru Vijayanathan BDS, MFDS, RCS(D)
3150 Eglinton Ave E, Unit -5
Scarborough
Markham & Eglinton
3301 Markham Rd, Unit 129
Scarborough
Markham & Steeles(Red Building)
416.264.3232
416.609.2022

Siva Shanmuganathan
Broker
416-545-7482
Joy Selvanayagam
Broker
416-358-6928
Knowledge. Experience. Success
Siva & Joy Real Estate Team
HomeLife/Future Realty Inc., Brokerage
205-7 Eastvale Dr., Markham ON, L3S 4N8
Bus: 905.201.9977 Fax: 905.201.9229
Independently Owned and Operated

SRI NADARAJASUNDARAM
Sales Representative
416-276-6666
RE/MAX ACE
REALTY INC. BROKERAGE
1286 Kennedy Rd, Unit 3 Toronto, ON, M1P 2L5

VENTHAN KANDIAH
Sales Representative
Cell : 6476286109
Residental
Commercial
Investment

RE/MAX ACE
REALTY INC., BROKERAGE
Baskaran Sinnadurai
Broker
Commercial · Industrial · Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com

உடனடி வேலை வாய்ப்பு!
Toronto தொழிற்சாலையில்
காலை, மாலை, இரவு நேர வேலை வாய்ப்புகள்
Shinol inc.
போக்குவரத்து வசதிகள் வழங்கப்படும்
தொடர்புகளுக்கு - 416-286-6375

MORTGAGE ARCHITECTS
THEVEN KANKESU
Mortgage Agent FSCO Lic.: M08008759
1193A Brimley Rd. #7
Toronto, Ontario, M1C 5G3
T: 416.939.8789
F: 416.439.1965
theven.kankesu@mtgarc.ca
thevenk1.tk@gmail.com

Finding Homes to Fit Your Lifestyle
Suba Aynkharan
Cell: 416-722-4444
RE/MAX COMMUNITY REALTY INC., Brokerage

தாய்வீடு

Publisher & Editor
PJ. Dilipkumar
பதிப்பாளர், ஆசிரியர்
பி.ஜெ. டிலிப்குமார்

நிறுவன வரைகலைஞர்
கருணா

ஆலோசகர் குழு
அருண்மொழிவர்மன்,
சேரன்,
துஷி ஞானப்பிரகாசம்,
ஞானம் லெம்பட்,
கந்தசாமி கங்காதரன்,
பொன்னையா விவேகானந்தன்,
ரவிச்சந்திரிகா.

ஓவியங்கள்
டிராட்ஸ்கி மருது (இந்தியா),
ஜீவா (இந்தியா),
K. கிருஷ்ணராஜா (இங்கிலாந்து),
பிருந்தாயினி(இலங்கை),
ரமணி (இலங்கை),
சௌந்தர் (இங்கிலாந்து),
றஷ்மி (இங்கிலாந்து).
எஸ். தர்மதாஸ் - செல்வன்(இலங்கை).

புகைப்படங்கள்
K. கிருஷ்ணராஜா (இங்கிலாந்து),
சர்வேசன்,
துசியந்தன் துரைரத்தினம்.

தட்டச்சு
சாம் டானியல்.

ஒப்புநோக்கல்
கௌரி,
கந்தசாமி கங்காதரன்.

பொது உறவுத் தொடர்பு
குமணன் தம்பிஐயா

ரொறன்ரோ விநியோகம்
இராமநாதன் ரூபன்,
சசி,
மெய்யழகன்.

மொன்றியால் தொடர்பு
சுகுமாரன் சின்னையா.

ஒட்டாவா தொடர்பு
அலெக்ஸ் சிவசம்பு: 1-613 -276-7253

அஞ்சல் முகவரி
Editor
P.O.Box #63581
Woodside Square
1571 Sandhurst Cir.
Toronto, ON. M1V 1V0

Tel : 416-646-3422, 416-857-6406
Fax : 416-849-0594
Web : www.thaiveedu.com
E-mail : info@thaiveedu.com

யாதும் ஊரே!

இஸ்ரேலுக்கும் பாலஸ்தீனத்துக்குமிடையிலான மோதல் மீண்டும் வெடித்துப் பற்றியெரிந்து தணிந்திருக்கிறது. பாலஸ்தீனம் மீதான இஸ்ரேலின் தாக்குதல்களும் பாலஸ்தீனத் தரப்பின் தாக்குதல்களும், இந்த உலகளாவிய நோய்த்தொற்றுக் காலத்திலும் ஈவிரக்கமற்ற செயல்களாகவே பார்க்கப்பட்டன. நடந்து முடிந்த தாக்குதல்களினால் ஏற்பட்ட உயிரிழப்புகள், மானுட அவலங்கள், சொத்து அழிவுகள் தொடர்கின்றன. இனப்படுகொலை என்ற பேரழிவின் தொடர் வரலாற்றில் தன்னைப் பாதுகாத்துக்கொள்ள பாலஸ்தீனம் இன்னும் எவ்வளவு தூரம் பயணிக்கவேண்டியுள்ளது என்ற எண்ணமே அச்சமூட்டுகின்றது.

மியான்மரில் இராணுவச் சதிப்புரட்சி நடந்தபோது உலகெங்கிலும் எதிர்ப்புத் தெரிவித்து கண்டனப் போராட்டங்கள் இடம்பெற்றன. புலம்பெயர்ந்த தமிழர்கள் நாம், 'அது யார்வீட்டுப் பிரச்சினையோ' என்று பாராமுகமாக இருந்துவிட்டோம்.

ஆனால், ஈழத்தின் சில பிரதேசங்களில் சுயாதீன இளைஞர்கள் பலரினாலும் கவனயீர்ப்புப் போராட்டங்கள் நடத்தப்பட்டன. அப்போது அவர்களை நோக்கிப் பலவாறான கேள்விகள் எழுப்பப்பட்டன.

'எங்கோ நடைபெறும் இனப்படுகொலைக்கு இங்கு கொடிபிடித்து என்ன செய்யப்போகின்றீர்கள்?', 'நாம் செத்துக்கொண்டிருந்த போது உலகம் கண்ணை மூடிக்கொண்டு தானே இருந்தது. நாம் எதற்காக எங்கோ இருக்கும் ஒரு நாட்டு மக்களுக்கு ஆதரவாகப் போராட வேண்டும்?'

இவை பெரும்பாலான மக்கள் எழுப்பிய கேள்விகள்.

புலம்பெயர் தமிழரிடமும் இதே உணர்வுநிலைதான் மேலோங்கி நிற்கின்றது. இதனாற்றான் பாதிக்கப்படும் இனங்கள் குரல்கொடுக்கும்போது நாம் அதில் கலந்துகொள்வதில்லை.

இவற்றுக்குப் பதிலளிப்பது முக்கியமானது.

இவ்வளவு நீண்ட நெடிய ஆயுத வழிப் போராட்டம் மக்களை அரசியல்மயப்படுத்தியிருக்கிறதா என்ற கேள்விதான் எம்முன் வருகிறது.

கடந்த காலத்தில், தமிழகம் போன்ற அயல் தேசத்தில் அவர்கள் எமக்காக நீதி கோரி நடத்திய போராட்டங்களை நாம் திரும்பிப் பார்க்க வேண்டும். எமக்காகத் தீக்குளித்து உயிரை மாய்த்தவர்கள், வேலையை விட்டு நீங்கி வீதியே கதியென்று இருந்தவர்கள், படிப்புகளிலிருந்து இடை விலகிப் போராடியவர்கள், அரசுகளுக்கு அழுத்தங்களைப் பிரயோகித்தவர்கள், கொடிபிடித்து, தொண்டை கிழியக் கத்தியவர்கள், குளிரிலும் வெய்யிலிலும் அலைந்து அரற்றியவர்கள் என்று... அவர்கள் எதற்காக வீதிகளில் நின்றார்கள்?

அதனை, தனியே இனப்பற்றாக மட்டும் சுருக்குவது தவறு. அது, ஓர் அடிப்படை மனித மாண்பு. யாரேனும் அதிகாரத்தினால், ஒடுக்குமுறையினால் அழியும் போது வேடிக்கை பார்ப்பது சரியானதா? இல்லை என்பது எல்லோருக்கும் தெரியும். அடக்குமுறைகளை எதிர்க்கும் தங்கள் குரல்களை அவர்கள் இயன்றளவுக்குப் பதிவு செய்தார்கள். இன்னும் சொல்லப்போனால் இப்படிப் போராடிய பலரது வாழ்க்கையும் இறுதிப்போரின் பின் தலைகீழாக மாறியது. தொழிலை, படிப்பை, சொத்தை, பதவியை இழந்து நிர்க்கதியானார்கள். அவர்களையெல்லாம் நாம் மறந்துவிட்டோமா?

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்பது வெறும் வாய்ச்சொல் மட்டும் தானா?

பாலஸ்தீனம் எரியும் போது ஈழத் தமிழர்கள் கவனம் கொள்ள வேண்டுமென்பதும், அந்த மக்களுக்கு உறுதுணையாய் இருக்கவேண்டும் என்பதும் இனப்படுகொலை நமக்கு அளித்துள்ள அரசியல் படிப்பினை. ஒடுக்கப்படும் அனைவரும் ஓரணியில் திரளுவதே ஒடுக்கப்படுபவர்களுக்கு இருக்கும் ஒரே அரசியல் தெரிவு. இல்லையென்றால், நம்மை ஒடுக்குபவரின் பக்கத்தில் அன்று நின்றவர்களை நாம் எப்படி எடுத்துக்கொண்டோமோ, அதே போன்றே வரலாற்றில் நாமும் எடுத்துக்கொள்ளப்படுவோம்.

நாம் பாலஸ்தீனத்துக்கு இங்கிருந்து விடுதலை வாங்கித்தர முடியாது என்பது தெரியும். ஆனால், அவர்களுக்கு ஆறுதலாய் இருக்கலாம். அங்கு சென்று போராடத் தேவையில்லை. ஆனால், எங்கள் சந்ததிகளுக்கு இனப்படுகொலையின் கோரத்தை, 'இப்படித்தான் நமக்கும் நடந்தது' என்ற சோகத்தைப் பதியவைத்து அவர்களை, அவர்களின் வேர்களை வரலாற்றை நோக்கித் திருப்பலாம், அவர்களை அரசியல்மயப்படுத்தலாம்.

நம் முன்னாலுள்ள எல்லா இனப்படுகொலை உதாரணங்களிலும் நாமிருக்கிறோம் என்ற யதார்த்தம் உணரப்படவேண்டும்.

அதே கண்ணீர், அதே உப்பு.
அதே குருதி, அதே நிறம்.

பெயர் தோற்றாத கட்டுரைகளுக்கு ஆசிரியரே பொறுப்பு.
ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியோரே பொறுப்பு.

தாய்வீடு இம்மாதத் தாய்வீட்டில்...

கொழும்பு துறைமுக நகரம்: இலங்கைக்கான படுகுழியின் வாசற்படி! 4
எஸ்.கே. விக்னேஸ்வரன்

'நான் கடவுளிடம் முழுவதையும் சொல்லப் போகின்றேன்' 7
- அன்வர் ஏ. கான்
தமிழில்: மணி வேலுப்பிள்ளை

மிகச்சிறந்த அமைச்சகப் பணியாளர் கௌதமன் குருசாமி 8

பாலஸ்தீனம் மீது தொடரும் ஒடுக்குமுறையும் நிலப்பறிப்பும் குடியேற்றங்களும் 9
ரூபன் சிவராஜா

தமிழகத் தேர்தல் முடிவுகள் - ஒரு பார்வை 14
நெல்லை ஜெயசிங்

ஈழத்தமிழர் இனப்படுகொலை வரலாறும் ஒன்ராறியோ அறிவூட்டல் வாரச் சட்டமூலமும் 17
நேரு குணரத்தினம்

விலங்குகளுக்கு எதிரான போர்க்குற்றம் 20
சுப்ரமணியம் ஜெயசீலன்

இலங்கையில் கருக்கலைப்பும் சட்டப் பின்னணியும் 23
கிரிஜா சிவகுமார்

நினைவாற்றலைக் கூட்டும் பச்சை, செம்மஞ்சள் நிறக் காய், கனிகள் 26
கனகசுந்தரம் முரளீதரன்

மெய்ப்பாடம் - குருவிப் பயிற்சி 28
பாதுசா ஆனந்தநடராசா

இடதுகைப் பாவனையாளர்கள் 32
எஸ். பத்மநாதன்

சரியாகத் தமிழறிவோம் - எது சரி, ஏன் சரி? 35
மாவிலி மைந்தன் சி. சண்முகராஜா

குழந்தைகளோடு கொஞ்சம் பேசுங்கள்! 39
என். கிருஷ்ணகுமார்

விண்வெளியில் வேகமாகக் குவியும் செயற்கைக்கழிவுகள் 41
குரு அரவிந்தன்

விந்தைமிகு திறன் கொண்ட விலங்குகள் 44
சுப்ரமணியம் ஜெயசீலன்

வீட்டு விலையும் விற்பனை முகவரும் 47
வேலா சுப்ரமணியம்

தேடல் தரும் பயணம் 50
மாத்தளை சோமு

தந்தை எனும் தலைவன் 52
சி. நற்குணலிங்கம்

தந்தையர் நாள், ஜூன் 2053

பெண்களுக்கெதிரான வன்முறைகளில் ஊடகங்களின் பங்களிப்பு 55
நிலாந்தி சசிகுமார்

தமிழ்ச் சினிமாவும் தடம்புரளும் தமிழரும்! 57
மா. சித்திவினாயகம்

தனித்துவமான கலைஞன் துஷி ஞானப்பிரகாசம் 60
ப. ஸ்ரீஸ்கந்தன்

மார்க்சியத்தின் காணாமல்போன பக்கங்கள் 62
ந. இரவீந்திரன்

வழக்காறும் மரபுகளும் - இருப்பும் இயல்பிழப்பும் 64
த. சிவபாலு

மீண்டும் கடந்துபோகும் யாழ். நூலக எரிப்பின் நினைவுகள் 69
என். செல்வராஜா

மலையகக் கவிதை இலக்கியச் செல்நெறி தொழிலாளர் தொண்டு கீதம் 72
மல்லியப்புசந்தி திலகர்

கி.ரா. எனும் அடையா நெடுங்கதவு 74
கிருஷி

கி.ரா.வுடன்... 77
ட்ராட்ஸ்கி மருது

கி. இராஜநாராயணனின் கோபல்லகிராமமும் இனக்குழு வாழ்க்கையும் 78
சு. வேணுகோபால்

'ஒரு தனி வீடு' நாவலுக்கு கி.ரா. எழுதிய முகவுரை 79

மட்டக்களப்புத் தேசத்துக் கோயில்கள்: சமூக ஒழுங்கமைப்பும் கருத்தியலும் 82
க. சண்முகலிங்கம்

முனியாண்டி: பிரிட்டிஷார் தடை செய்த இலங்கையின் முதலாவது கேலிச்சித்திர நையாண்டி இதழ் 85
என். சரவணன்

மட்டக்களப்பார் ஏட்டிலக்கியப் பாரம்பரியம் 92
க. பத்திநாதன்

வேளிர்! வேளிர் வந்தேறு குடிகளா? 96
செல்வநாயகி ஸ்ரீதாஸ்

தமிழியல் ஆய்வுகள் - வரலாறும் வளர்ச்சியும் 101
நா. சுப்பிரமணியன்

மேல்நிலையாக்கம் 107
க. சண்முகலிங்கம்

மஹாகவி: மீண்டும் தொடங்கும் மிடுக்கு 110
சேரன்

அப்பாவும் மஹாகவியும் 112
ஒளவை விக்னேஸ்வரன்

மஹாகவியின் வாழ்க்கை நோக்கு 113
எம்.ஏ. நுஃமான்

சாந்தமும் சந்தமும் சந்தித்த சாதாரண மனிதன் மஹாகவியின் இரு நாடகங்கள் 116
ஞானம் லெம்பட்

மறைந்த மஹாகவி 121
முருகையன்

நேர்மை 122

சிறு புல் 122

மஹாகவி - மாமா 124
சுமதி பிரான்சிஸ்

கவிஞர் மஹாகவி 127
கே.எஸ். பாலச்சந்திரன்

பிணைப்பதற்கு நின்ற கயிறோ நெடிது 129
எழில்வேந்தன்

கவிதைப் புரட்சியாளர் மஹாகவி 131
வே. விவேகானந்தன்

அம்பலவாணர் 133
மு. மகேஸ்வரன்

நானும் கொரோனாவும் 135
ரவி சுப்பிரமணியன்

தொலைக்காட்சிச்செய்தி என்னும் புதிய துறை 139
°. விக்னேஸ்வரன்

இல்லை என்பதே பதில் 144
அ. முத்துலிங்கம்

இசைத் தமிழ்ப் பாடற்பரப்பும் அவற்றின் சமகாலப் பயன்பாட்டு நிலையும் 148
கௌசல்யா சுப்பிரமணியன்

முத்தும் பன்றியும் 152
- லெனட் வுல்ஃப்
தமிழில்: என். கே. மகாலிங்கம்

பாசக் குடித்தனம் 161
நெடுந்தீவு மகேஷ்

அடுத்தமுறை 163
புனிதவேல்

பனிவிழும் பனைவனம் 165
செல்வம் அருளானந்தம்

பேசாப்பொருள் 168
வல்லிபுரம் சுகந்தன்

பிடரி சிலுப்பிய பாரசீகப் பேரரசு 172
நிமால் நாகராஜா

கொழும்பு துறைமுக நகரம்: இலங்கைக்கான படுகுழியின் வாசற்படி!

- எஸ்.கே. விக்னேஸ்வரன்

நாடு முழுவதும் கொரோனா பற்றியே பேசிக்கொண்டு இருக்கும் நிலையில், அதிக சந்தடி இல்லாமல் ஒரு முக்கியமான தீர்மானம் இலங்கையில் நடவடிக்கைக்கு வந்துள்ளது!.

இலங்கையின் எதிர்காலத்தை கிட்டத்தட்ட முழுமையாகவே மாற்றியமைக்கப் போகும் இந்தத் தீர்மானம் தான் இலங்கை அரசாங்கம் கொண்டு வந்துள்ள கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுவுக்கான சட்டமூலம்.!

முழுக்க முழுக்க சீனாவின் நிதியுதவியுடன் கட்டிமுடிக்கப்பட்டுள்ள துறைமுக நகரம் உண்மையில் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவப் போகிறதா, அல்லது தெற்காசிய சூழலில் ஒரு வல்லரசுகளுக்குகிடையிலான வர்த்தக மற்றும் அதிகாரப் போட்டிக்கான களமாக அமையப்போகிறதா என்பதையிட்டு அனைத்து நாடுகளினதும் கவனங்கள் குவிக்கப்பட்டிருக்கும் நிலையில், இந்தச் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

இலங்கை அரசாங்கம் அவசர அவசரமாகவும், முடிந்தளவுக்கு இரகசியமாகவும் இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்ததை 'போதை வஸ்துக்கு அடிமையான ஒருவர் தனது வீட்டுத் தளபாடங்களை ஒவ்வொன்றாக விற்று விற்றுப் போதை ஏற்றிக் கொள்வதைப் போன்ற ஒரு சுய அழிவு நடவடிக்கை' என்று விமர்சித்திருந்தது ஒரு ஆங்கில இணைய வழிச் செய்தி ஊடகம்.

கடந்த ஒருமாத காலத்துக்கு மேலாக உயர்நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட பத்தொன்பது வழக்குகள் காரணமாக இழுபட்டு வந்த இந்தக் கொழும்பு துறைமுகநகரப் பொருளாதார ஆணைக்குழு சட்டமூலம், நீதிமன்றம் சுட்டிக்காட்டிய திருத்தங்களுடன் சாதாரண பெரும்பான்மை அடிப்படையில் கடந்த வாரம் (மே 27) நிறைவேற்றப்பட்டு விட்டது.

இந்தச் சட்டத்தின் வருகையுடன் கிட்டத்தட்ட 1.4 பில்லியன் அமெரிக்க டொலர் செலவில் உருவாக்கப்பட்ட 2.6 சதுர கிலோமீற்றர் பரப்பளவுள்ள நிலப்பகுதியில் அமந்துள்ள துறைமுக நகரம் இயங்குவதற்கான சட்டரீதியான அங்கீகாரம் கிடைத்துவிட்டது. துறைமுகத்தை கட்டியெழுப்பிய சீன கம்பனிக்கு வழங்கப்பட வேண்டிய பகுதிகள் போக மிகுதிப் பகுதிகளிலேயே இலங்கை அரசு தனது முதலீட்டாளர்களுக்கான இடங்களை வழங்க முடியும் என்பது ஒரு வெளிப்படையாகத் தெரியும் நிலைமை என்ற போதும், நீதிமன்றம் அவை பற்றியெல்லாம் அலட்டிக் கொள்ள வில்லை. ஆனால், சில முக்கியமான திருத்தங்களை அது முன்மொழிந்து திருத்திவைத்திருக்கிறது. நீதிமன்றத்தின் இந்தத் திருத்தங்கள் ஓரளவுக்கு நடக்கக் கூடிய எல்லை மீறிய ஆணைக்குழு உறுப்பினர்களது அதிகாரங்களைக் கட்டுப்படுத்தவும், நாட்டின் சட்ட விதிகளுக்குப் பொறுப்புச் சொல்லவும் வேண்டிய அவசியத்தை வலியுறுத்துவதாகவும் அமைந்துள்ளன என்பது உண்மையே

ஆனால், இத்தகைய மாற்றங்களை நீதிமன்ற தீர்ப்புக்கேற்ப மாற்றி அமைத்து சட்டத்தை நிறைவேற்றுவதில் அரசாங்கம் அவசர அவசரமாக, போதியளவு பாராளுமன்ற விவாதத்துக்குக்கூட சந்தர்ப்பம் வழங்காமலே, அதை ஒரு சாதாரண பெரும்பான்மை வாக்கு வித்தியாசத்தில் (மூன்றில் இரண்டு பெரும்பான்மைக்கு ஒரு வாக்குக் குறைவாக) நிறைவேற்றி முடித்துள்ளது என்றால், உண்மையில் அதற்கு தேவையான, அல்லது செய்ய விரும்பும் விடயங்களை அவற்றின் மூலமே சாதித்துவிட முடியும் என அது நம்புவதே அதற்கான முக்கிய காரணமாகும். தவிரவும் நீதிமன்ற வழிநடத்தலுக்குக் கட்டுப்பட்டு, ஜனநாயக முறைப்படியே இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என்பதை திரும்பத் திரும்பச் சொல்லவும் இது பயன்படும் என்பதால் அதிகமாக அதற்கெதிராக எந்த முயற்சியையும் அது மேற்கொள்ளவில்லை.

நாட்டின் சமூக, பொருளாதார அரசியல் நிலமைகளில் பாரிய நெருக்கடிகளைத் தரக்கூடிய ஒரு திட்டத்திற்கான சட்டவிதிகளை மக்களோ, மக்களின் பிரதிநிதிகளோ விரிவாக ஆராய போதிய அவகாசம் கொடுக்காமலே அவசர அவசரமாக இந்த வாக்கெடுப்பு நடத்தப்பட்டுள்ளது. உண்மையில் இப்போது நிறைவேற்றப்பட்டுள்ள சட்டத்தின் படி இந்த துறைமுகம் பேச்சுக்கு கொழும்பு நிர்வாக மாவட்டத்தினுள் வரும் ஒரு பகுதியாக இருப்பினும், அந்த 2.6 சதுர கிலோமீர்றர் நிலப்பரப்பு, கொழும்பு மாநகர சபைக்குக் கீழ் உள்ள நிலமாகவோ, அதன் கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட இடமாகவோ இருக்கப்போவதில்லை. அது ஆணைக்குழுவின் நிலமாகவே அமையப்போகிறது. உண்மையில் இந்த ஆணைக்குழு இந்தப் பிரதேசத்தின் கட்டுப்பாட்டை முழுமையாக தனது கையிலேயே வைத்திருக்கும் இன்னொரு அதிகாரம் பெற்ற, மக்களால் தெரிவுசெய்யப்படாத தலைவர்களைக் கொண்ட ஒரு மாநகரசபையாக இயங்கும் தன்மை கொண்டதாக அமையவிருக்கிறது. இந்தப் பிரதேசத்தின் மீதான ஆணைக்குழுவின் அதிகாரங்கள் நாட்டில் ஒரு குட்டித் தனிநாட்டை நிர்வகிப்பது போன்ற நிலையையே ஏற்படுத்தும் என்பதை இந்த அரசாங்கத்தின் ஆட்சி முறை அனுபவத்தின் அடிப்படையில் அனுமானிப்பது ஒன்றும் கடினமானதல்ல. அதுவும், முழுக்க முழுக்க ஜனாதிபதியின் அல்லது அவரால் நியமிக்கப்படும் ஒரு அமைச்சரின் தற்றுணிவின் கீழ் வழிநடத்தப்படும் இந்த ஆணைக்குழுவினது நடவடிக்கைகள் பல மோசமான நிலமைகளுக்கு இட்டுச் செல்ல முடியாது என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை.

நட்டின் பொருளாதாரத்தை கட்டி எழுப்பவும், உலக நாடுகளுடனான வணிகத்தை விருத்தி செய்யவும், இலட்சக்கணக்கான

இலங்கையர்களுக்கு வேலைவாய்ப்பைத் தரவும் இந்த துறைமுக நகரம் உதவும் என்று சொல்லப்பட்ட போதும், வெளிநாட்டு நிறுவனங்கள் இலங்கையரை வேலைக்கமர்த்துவது குறைந்தபட்சம் திட்டத்தின் ஒரு புரிந்துணர்வுக்குட்பட்ட உடன்பாடாகக்கூட பேசப்படவில்லை.

இந்தச்சட்டமூலம் நிறைவேற்றப்படுவதற்கு முன்பாக எதிர்க்கட்சித் தலைவர சஜித் பிறேமதாச தலமையில் பல பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்தின் முன்னின்று எதிர்ப்புக் கோசம் எழுப்பினர். அவர்கள் இந்த நடவடிக்கையை கோட்டை அரசை, அன்றைய மன்னன் தர்மபால போர்த்துக்கேயருக்கு 1580ல் ஒப்பந்தமிட்டுக் கையளித்ததை ஒப்பிட்டு சீனாவுக்கு நாட்டை விற்பதாகக் கூறிக் குரல் எழுப்பினர். அவர்கள் உயர்த்திப்பிடித்திருந்த சுலோகம் ஒன்று இப்படி அமைந்திருந்தது: 'அன்று டொன் யுவான் தர்மபாலா, இன்று டொன் யுவான் நந்தசேன'. இந்த ஆர்ப்பாட்டத்தைக் கட்டுப்படுத்த ஜனாதிபதி முப்படைகளையும் பாதுகாப்புக்காக உசார்ப்படுத்தும் நிலமை ஏற்பட்டிருந்தது.

உண்மையில் இந்த கொழும்பு துறமுக நகரம், இன்றைய அரசாங்கத்தின் ஒரு ஆரம்பம் மட்டுமே என்று கொழும்பிலுள்ள பல அரசியல் அவதானிகள் சுட்டிக் காட்டுகின்றனர். இந்த அரசாங்கத்தின் தொடர்ச்சியான பல நடவடிக்கைகள் கொழும்பு நகரத்தின் பிரதான பகுதிகளை சீனக் கம்பனிகளுக்கு நீண்டகால அடிப்படையில் வழங்குவற்கான முயற்சியில் தீவிரமாக இயங்கி வருவதாகக் குறிப்பிடுகின்றனர்.

ஏற்னவே, பிரதமர் மஹிந்த தனது மாநகர அபிவிருத்தி அமைச்சின் கீழ் வரும் அபிவிருத்தி அதிகாரசபையினூடாக கொழும்பு நகரை அண்மித்த (கொழும்பு-1, கொழும்பு -2) பகுதியில் அமைந்துள்ள பல முக்கியமான நிலங்களை, அவர்கள் இப்போது உருவாக்கியுள்ள 'செலெந்திவ முதலீட்டு நிறுவனம்' (இது முழுக்க முழுக்க இலங்கை திறைசேரியின் முதலீட்டில் இயங்கும் நிறுவனமாகும்) மூலமாக வெளியாருக்கு நீண்டகால குத்தகைக்கு வழங்கும் நோக்குடனான ஒரு திட்டத்தை பாராளுமன்றத்துள் முன்வைத்துள்ளார் என்பது தெரிந்ததே. உண்மையில் பல முக்கியமான நிலங்களை சீனர்களுக்கும் அவர்களது நிறுவனங்களுக்கும் வழங்குவதற்கான திட்டத்துடனேயே இந்த அரசு இயங்கி வருகிறது என கொழும்பிலுள்ள அரசியல் விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர்.

சில தினங்களுக்கு முன் வெளியான ஒரு செய்தி அறிக்கையில் சீனாவுக்கு விற்கப்படவுள்ள பாரிய நிறுவனங்களான 17 நிறுவனங்களின் பட்டியலை 'லங்கா ஈ நியூஸ்' வலைத்தளம் வெளியிட்டுள்ளது. கொழும்பு 1, 2 இலுள்ள மிக முக்கியமான நிறுவனங்களுக்குச் சொந்தமான மிகப் பெறுமதி வாய்ந்த கட்டடங்கள், நிலங்கள் இரண்டு கட்டங்களாக இப்படி வழங்கப்பட உள்ளன. இந்த நடவடிக்கைகள், நாட்டை முழுக்க முழுக்க அந்நிய சக்திகளின் குறிப்பாக சீனாவின் கட்டுப்பாட்டுக்குள் தள்ளி விடும் என்று குறிப்பிடும் அந்த வலைத்தளம் இவை அனைத்தும் பிரதமரின் கட்டுப்பட்டிலுல்ள செலெந்திவ முதலீட்டு நிறுவனம் மூலமாகவே நடைபெற உள்ளது என்றும் தெரிவித்துள்ளது.

சீன அரசின் உலகளாவிய வர்த்தக மற்றும் அதற்கேற்ற வகையிலான இராணுவ நடவடிக்கைகள் மூலமாக முழு உலகுடனும் வெற்றிகரமான எல்லாவிதத் தொடர்புகளையும் கொண்டிருக்கக்கூடிய புதிய பட்டுப்பாதை, பட்டுப் பட்டி திட்ட நடவடிக்கைகளுக்கான (2013ல் தற்போதைய சீனத் தலைவர் ஜின்பிங் இனால் கொண்டுவரப்பட்ட) திட்டத்தின் தெற்காசிய கேந்திரப் புள்ளியாக அமைவது இலங்கையே. அதன் ஒரு பகுதியாக அமையவுள்ள இந்த துறைமுக நகர திட்டம் இலங்கையை ஒரு வளமுள்ள நாடாக ஆக்குமோ இல்லையோ, நிச்சயமாக இலங்கையை முற்றுமுழுதாக சீனாவின் தயவில் வாழும் ஒரு நாடாக மாற்றுவதில் வெற்றி பெற்றுவிடும் என்றே தெரிகிறது. நாட்டின் இதுவரை காலமாக பேணப்பட்ட வளங்கள் அனைத்தும் மாபெரும் நெருக்கடிக்குள்ளாகும் நிலையை இது தோற்றுவிக்கவே செய்யும்.

இலங்கை அரசு இப்போது வீழ்ந்திருப்பது, இலகுவில் மீண்டெழ முடியாத ஒரு படுகுழி. பட்டுப் பாதைத் திட்டம் பயனுள்ள ஒரு விளைவை நாட்டுக்குத் தரும் வகையில் அதைக் கையாள முடியாத, கடன்பட்ட தேசமாக மாறிக்கொண்டிருக்கும் விதத்தில் இலங்கையையும் அதன் மக்களையும் பொறிக்குள் வீழ்த்திவிட்டிருக்கிறது இந்த அரசு.

நாட்டின் எதிர்காலம் - இலங்கை மக்கள் தம் எதிர்காலத்தை தாமே எழுதுவதற்காக, தம்முள் ஒன்றுபட்டுச் செயற்படவும் தம் கைகளில் அதிகாரத்தை எடுப்பதற்கான பாதையில் இறங்கவும் தயாராகாதவரை இந்த நிலமை இன்னமும்
மோசமான நெருக்கடிகளுக்கே
இட்டுச் செல்லும்!

vickneaswaran.sk@thaiveedu.com

நூலகம்
இணையத்தில் ஒரு நூல் உலகம்
www.noolaham.org

நான் கடவுளிடம் முழுவதையும் சொல்லப் போகின்றேன்

3 வயது சீரிய குழந்தை இறக்கமுன் உதிர்த்த வாக்கு

- அன்வர் ஏ. கான்
தமிழில்: மணி வேலுப்பிள்ளை

குழந்தையின் வாக்கையும் படத்தையும் பார்த்த பிறகு நான் தூக்கத்தை இழந்தேன். மானுடம் எம்மை மாபெரும் ஏக்கத்துக்கு உள்ளாக்கும் கதையை குழந்தையின் முகத்தில் கண்டேன். இவ்வுலகில் எஞ்சிய மானுடத்திடம், அதன் மனிதாபிமானம் குறித்து வினா எழுப்பும் நிலைக்கு என்னை இக்குழந்தை தள்ளிவிட்டுள்ளது.

இளைய வறிய படையினரைப் பலியிட்டு, முதிய செல்வக் கும்பல் புரியும் போரின் தாக்கத்தை உணர்த்தும் அதேவேளை, உள்ளத்தை உருக்கி, இதயத்தை ஒடித்து, சிந்திக்க வைக்கும் வலுக் கொண்ட குழந்தையின் படமும், வாக்கும் இவை.

சீரியாவில் உள்நாட்டுப் போர்:

அறபு வசந்தம் வீசத்துவங்கிய காலம் அது. 2011 மார்ச் 15ம் திகதி சில மாணவர்கள் தமது பாடசாலைச் சுவரில், 'அடுத்தது நீர்தான், மருத்துவர் அவர்களே!' என்ற அறைகூவல் ஒன்றைப் பொறித்தார்கள். அசாத் அதிபராகப் பதவியேற்க முன்னர் மருத்துவராகப் பணியாற்றியவர்.
அன்று முதல் இரசாயன ஆயுதம், பட்டினி, நாடுகடத்தல், முற்றுகை, சட்டவிரோத கைது, சித்திரவதை கொண்டு ஒரு தசாப்தமாக, இரசியாவின் துணையுடன் புரியப்படும் சீரியாவின் உள்நாட்டுப் போரில் இலட்சக் கணக்கானோர் கொல்லப்பட்டுள்ளார்கள், காயப்பட்டுள்ளார்கள், இடம்பெயர்ந்துள்ளார்கள்...

ஐ.நா. அகதிகள் ஆணையாளர் விடுதுள்ள அறிக்கையின்படி, 2 கோடி மக்கள் கொண்ட சீரியா நாட்டிலிருந்து 66 இலட்சம் பேர் வெளியேறியுள்ளார்கள். துருக்கியில் மட்டும் 37 இலட்சம் பேர் அடைக்கலம் புகுந்துள்ளார்கள், 67 இலட்சம் பேர் உள்நாட்டிலேயே இடம்பெயர்ந்துள்ளார்கள். 1 கோடி 30 இலட்சம் பேர் வெளியுலக மனிதாபிமான உதவியில் தங்கியுள்ளார்கள்.

போரின் தன்மை:

போர் என்பது: மக்களை மக்கள் இழப்பது, உயிரெடுப்பது, உயிரிழப்பது, மக்களை வாழவிடாது மாய்ப்பது, இறைவன் அருளிய அரிய வாழ்வை ஒழிப்பது...

சமயத்தின் பெயரால் மக்கள் ஒருவரை ஒருவர் கொல்ல விழைவது அறக்கொடிய பயங்கரம் அல்லவா! எனினும் பல நூற்றாண்டுகளாக அது நடந்து வருகிறது. இன்னமும் அது தொடர நாம் அனுமதிப்பது இன்றைய தலையாய பிரச்சினை அல்லவா!

நாம் இன்னொரு நாட்டுக்குப் போய், அங்கு போர் புரியும் முயற்சியில் உதவும்பொழுது, அங்கு மேலும் நாம் தீங்கு புரிகின்றோமே ஒழிய, உண்மையில் அங்கு நாம் எதுவித உதவியும் புரியவில்லை. அங்கு நாம் சமாதானத்தை அல்லவோ நிலைநாட்ட வேண்டும்! சமய உணர்வில் ஒன்றியிருப்பதை நாம் தவிர்க்க அல்லவோ வேண்டும்!

போரினால் வெறுமனே காலமும் வலுவுமே வீணாகி வருகின்றன. போரினால் மக்களின் உள்ளம் நிறைவுகொள்ளப் போவதில்லை.

அவர்களுடைய தேவைகள் நிறைவேறப் போவதில்லை.

கொலைஞர்கள்:

'எமது சமயத்தின் பெயரால் பிற சமயத்தவரைக் கொன்று பழிவாங்கப் போகின்றோம்' என்று கூறுவோர் தமது மூளையை மாத்திரமல்ல, தமது இதயத்தையும் பயன்படுத்தவில்லை அல்லவா! அந்தக் குழந்தையின் விழிகளில் அவர்கள் பூதங்களாக மாறியவர்கள் அல்லவா!

கொல்வோரை எண்ணியும் நான் இரங்குகின்றேன். அவர்களிடம் அன்பும் பரிவும் வற்றிவிட்டன. அவர்களிடமிருந்து அவை களையப்பட்டுவிட்டன. நெறிபிறழ்ந்த கொலைஞர்கள் மீது நான் பரிவு கொள்கின்றேன். உங்களை குற்ற உணர்விலும், கழிவிரக்கத்திலும், சீற்றத்திலும், வருத்தத்திலும் ஆழ்த்தும் வாக்கினை உதிர்த்துவிட்டு அந்தக் குழந்தை இறந்து போயிற்று. குழந்தையின் வாக்கும் படமும் மாபெரும் கனதி வாய்ந்தவை என்பது உங்களுக்குப் புரியுமோ எனக்குத் தெரியாது.

எந்த தலைமுறைக்காக நீங்கள் போரிடுகின்றீர்களோ, அந்த தலைமுறையைப் பலியிட்டு நீங்கள் போரிடக் கூடாது அல்லவா! சமயப் போர்களை, சமயநெறிகளின்படி அல்லவோ புரிய வேண்டும்? இறைவனை ஒரு கருவியாக, போரை ஊக்குவிப்பவராக, ஏவிவிடுபவராக, படைதிரட்டுபவராக, ஆயுதபாணியாகத்தானே நீங்கள் பயன்படுத்துகின்றீர்கள். மண்ணுக்காகவும், நிலத்துக்காகவும், எண்ணெய்க்காகவும் புரியப்படும் போரைவிட சமயத்துக்காப் புரியப்படும் போர் அறவே கொடியது.

குழந்தை:

இந்த மூன்று வயதுக் குழந்தையின் வாக்கிற்கு மேலதிக விளக்கம் இம்மியும் தேவையில்லை. அதன் வாக்கும் படமும் உள்ளத்தைப் பிளக்கின்றது. இதயத்தைப் பிழிகின்றது. குழந்தையின் வாக்கில் அப்பாவித்தனமான, அதேவேளை நேரிய அப்பழுக்கற்ற உள்ளம் புலப்படுகின்றது. மெய்ம்மையைவிட வேறெதுவும் அதன் கண்

ணுக்குக்குப் புலனாகவில்லை. அப்பாவித்தனமாக அது முறையிடுகின்றது. அந்த அப்பாவித்தனமான முறைப்பாடே இதயத்தை தகர்க்கின்றது.

தீயோர் இறைவனின் பெயரால் தீமையை நிலைநிறுத்தி வருவதை இறைவனிடம் நான் தெரிவிக்கப் போகின்றேன்; என் ஆசைகள் ஒழிந்ததையும், என் கனவுகள் கலைந்ததையும் இறைவனிடம் நான் தெரிவிக்கப் போகின்றேன்; என் பிஞ்சுடல் நைந்து, இன்னுயிர் பிரிந்து, இருளினுள் புகுந்ததை நான் இறைவனிடம் தெரிவிக்கப் போகின்றேன்; உலகத்துக்கு திரும்பிவந்து, மதிநலத்தை இங்கு மறுபடியும் புகுத்தும்படி இறைவனிடம் கேட்கப் போகின்றேன்; என்றெல்லாம் அந்தக் குழந்தை சொல்வது போலவே எனக்குப் படுகின்றது. ஐயகோ!

அன்பும் பரிவும் இறைவனிடமிருந்து வருபவை. பிறரை ஏற்றுக் கொள்ளும் அன்பின் உறைவிடமே நல்லிதயம். ஒருவரின் இயல்பை மாற்ற, மெய்யாகவே கடவுளை அனுமதித்தால் மாத்திரமே, பிறரை ஏற்றுக்கொள்ளும் பக்குவம் கைகூடும். இறைவனால் மட்டுமே மெய்யான சமாதானத்தை நிலைநாட்ட முடியும்.

அந்த சீரிய குழந்தையின் குடும்பத்துக்காக இறைவனிடம் இத்தால் நான் இறைஞ்சுகின்றேன்.

உலகம் முழுவதும் பயங்கரவாளர்களின் தாக்குதல்களில் மாண்ட உயிர்களுக்கு இக்கட்டுரையை இத்தால் நான் சமர்ப்பணம் செய்கின்றேன்.

(Anwar A. Khan, I am gonna tell God everything, Sri Lanka Guardian, 2021-05-18, abridged and translated by Mani Velupillai, 2021-05-26.)

manivelupillai@thaiveedu.com

•

மிகச்சிறந்த அமைச்சகப் பணியாளர் கௌதமன் குருசாமி

கனடாவின் அமைச்சுகளில் பணியாற்றும் திறமையானோரை அடையாளப்படுத்தும் Terrific 25 எனும் பட்டியலை, ஒட்டாவாவில் இயங்கும் The Hill Times ஊடகம் ஆண்டுதோறும் வெளியிட்டு வருகிறது.

Terrific 25 பட்டியல் வெளியாகும் பதினெட்டாவது ஆண்டு இது.

இம்முறை திறமையும் ஆற்றலும் துடிப்பும் மிக்க தமிழ் இளைஞர் கௌதமன் குருசாமி, மிகச் சிறந்த சகலதுறைப் பணியாளர்களில் (Best All-Round Staffer) முதலிடம் பெற்றுள்ளார். அத்தோடு, அதிக விபரங்களை அறிந்த பணியாளராகவும் (Most Knowledgeable Staffer) முதலிடத்தை இன்னொருவரோடு பகிர்ந்துகொண்டுள்ளார். இவற்றோடு அவர் நின்றுவிடவில்லை. அமைச்சரவையின் சிறந்த பணியாளர்களில் (Best Cabinet Staffer) முதலிடத்தையும் பெற்றுள்ளார்.

தொழில்முறை அரசியல் பணியாளராக ஆறு ஆண்டுகள் மட்டுமே பணியாற்றியுள்ள கௌதமன் குருசாமி, Terrific 25 Staffers பட்டியலின் முதலிடத்தைப் பெற்று முத்திரை பதித்துள்ளார்.

இந்தப் பட்டியலில் கௌதமன் இடம்பெறுவது இதுவே முதன் முறை.

தற்போது சுகாதார அமைச்சரின் மூத்த கொள்கை ஆலோசகராக அவர் பணியாற்றிவருகிறார்.

இந்தப் பெருந்தொற்றுக் காலத்தில், ஒன்ராறியோ மாகாண நாடாளுமன்ற உறுப்பினர்குழுவின் உயிர்காப்பாளர் (Life saver) எனவும் The Hill Timesன் கருத்துக்கணிப்பில் பங்குபற்றிய ஒருவர் கௌதமனை வர்ணித்தார். தரவரிசைப் பட்டியலில் தனக்குக் கிடைத்திருக்கும் இடத்தை வரவேற்கும் கௌதமன், பெருந்தொற்றுக்காலத்தில் சுகாதார அமைச்சருடன் பணியாற்றியமை சிறந்த வாய்ப்பாவும் தனக்குக் கிடைத்த கௌரவமெனவும் தெரிவித்தார்.

மேலும், 'சேவையாற்றுவது நல்லது. எனது பணியை அங்கீகரித்தமைக்கு நன்றி. நாடாளுமன்றத்தில் பணியாற்றினாலும், தொகுதியில் பணியாற்றினாலும், என்ன நடக்குமெனத் தெரியாத இந்தக் காலப்பகுதியில், கனடியர்களுக்காக எம்மால் இயன்ற அனைத்தையும் செய்வதற்கே அனைத்துப் பணியாளர்களும் முயல்கிறோம்' என The Hill Times ஊடகத்துக்கு அவர் தெரிவித்தார்.

பெருமளவு கோரிக்கைகள் தொடர்பாக சுகாதார அமைச்சரின் இடைத்தரகராகச் செயற்பட்டதாலும், மக்கள் உதவிகோரித் தொடர்பு கொண்ட முதல் அலுவலகம் என்பதாலும் தான் வெற்றி பெற்றிருக்கலாமென அவர் மேலும் கூறினார்.

சிறிதளவு ஆலோசனை வழங்கி, மக்களுக்கு வழிகாட்டினால், பலருக்கு அதுமுக்கியமானதாக இருந்திருக்கலாமென நினைக்கிறேன். இந்த வெற்றிக்கான காரணங்களுள் அதுவும் ஒன்றாக இருக்கலாமென்றும் கௌதமன் கருதுகிறார்.

2020ம் ஆண்டு ஜனவரியில் இருந்து சுகாதார அமைச்சர் பட்டி ஹைடு (Patty Hajdu) அவர்களின், ஒன்ராறியோ பிராந்திய விவகாரங்கள் ஆலோசகர்களுள் ஒருவராகப் பணியாற்றிய கௌதமன், இந்த மாதத்தின் முற்பகுதியில் மூத்த கொள்கை ஆலோசகராகப் பதவி உயர்த்தப்பட்டார்.

அதற்கு முன்பு ஹைடு வேலைவாய்ப்பு அமைச்சராகப் பணியாற்றிபோது அவரது அலுவலகத்தில் இதே பணியை கௌதமன் புரிந்தார்.

லிபரல் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரியின் (ஸ்கார்பறோ - ரூஜ்பார்க்), நிறைவேற்று உதவியாளராக 2015ம் ஆண்டு கௌதமன் அரசியலில் பணியாற்ற ஆரம்பித்தமை குறிப்பிடத்தக்கது.

•

பாலஸ்தீனம் மீது தொடரும் ஒடுக்குமுறையும் நிலப்பறிப்பும் குடியேற்றங்களும்

- ரூபன் சிவராஜா

மே 10ம் நாளிலிருந்து தொடர்ச்சியாக பலஸ்தீனத்தின் காஸா மீது தனது இராணுவ இயந்திரத்தினை ஏவித் தாக்குதல்களை நடத்தியிருக்கிறது இஸ்ரேல். பெருமெடுப்பில் வான், தரை வழித்தாக்குதல்களில், மொத்தம் 240 பலஸ்தீன மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். அதில் 60 வரையானவர்கள் சிறுவர்கள். காஸாவில் அமைந்திருந்த ஊடகக் கட்டடத்தை இலக்குவைத்து வான்வெளித் தாக்குதல் நடத்தி அதனை இஸ்ரேல் படைகள் தரைமட்டமாக்கியுள்ளன. அல்-ஜசீரா, AP உட்பட்ட உலக ஊடகங்களின் அலுவலகங்கள் அக்கட்டடத்தில்தான் அமைந்திருந்தது. கட்டட உரிமையாளருக்கு முற்கூட்டியே தகவல் கொடுக்கப்பட்டு, ஒரு மணித்தியால அவகாசம் கொடுக்கப்பட்டு, 12 மாடிகளைக் கொண்ட அந்த ஊடகமையம் தகர்க்கப்பட்டுள்ளது. சாட்சிகளை முன்கூட்டியே அப்புறப்படுத்துகின்ற திட்டமிட்ட செயல் இது. 11 நாட்களின் பின் எகிப்தின் மத்தியஸ்தத்துடன், அமெரிக்காவின் திரைமறைவுப் பேச்சுகள் மூலம் இஸ்ரேல் - ஹமாஸ் தரப்புகளுக்கிடையில் போர்நிறுத்தம் எட்டப்பட்டுள்ளது.

உலக ஊடகங்கள் கொடுக்கும் பிம்பம்:

இஸ்ரேல்-பலஸ்தீன முரண்பாடு தொடர்பாக பெரும்பான்மையான உலக ஊடகங்கள் கொடுக்கின்ற பிம்பம் பெருமளவில் ஒருதலைப்பட்சமானது. ஹமாஸ் அமைப்பு இஸ்ரேல் மீது தொடுக்கின்ற ஏவுகணைத் தாக்குதலுக்கான பதிலடியாக காஸா மீது இஸ்ரேல் இராணுவத்தாக்குதல்களை மேற்கொள்கின்றது என்பதாகவே அதிகமும் செய்திகளில் சித்தரிக்கப்படுகின்றது. மேற்கின் ஊடகச் செய்திகள் இஸ்ரேல்-பலஸ்தீனப் பிரச்சினையை அதன் வரலாற்றுப் பின்னணி, சமகால நிலைமைகள் மற்றும் பலஸ்தீனம் மீதான இஸ்ரேலின் இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் தொடர்பான உண்மைகளை வெளிப்படுத்துவது குறைவு. பெரும்பான்மை ஊடகங்களில் ஒரு வகையான இஸ்ரேல் ஆதரவுப் போக்கினை அவதானிக்க முடியும். மட்டுமல்லாது பலஸ்தீனத் தரப்பு, குறிப்பாக ஹமாஸின் தாக்குதல்கள் பயங்கரவாதமாகச் சித்தரிக்கப்படுவதையும் காணலாம். இடதுசாரி ஊடகங்களிலும், செய்திகளைத் தாண்டிய அரசியல் ஆய்வுக்கட்டுரைகளிலும் பத்திகளிலும் ஓரளவு நியாயமான பார்வையைக் காணமுடியும்.

பலஸ்தீன மக்களின் பிரச்சினை என்பது, வன்முறையாகவோ, கலவரமாகவோ, பயங்கரவாதமாகவோ, பதட்டநிலை என்றோ, இருதரப்பு மோதல் என்றோ சித்தரிக்கக்கூடிய பிரச்சினை அல்ல. அதன் பரிமாணம் வேறானது. வரலாற்று நீட்சியுடையது. எழுபது ஆண்டுகளுக்கு மேலாக விடுதலைக்காகப் போராடி வருகின்ற மக்கள் அவர்கள். அவர்களுடைய விடுதலைப் போராட்டம் என்பது யூத இனவெறிக்கும், இஸ்ரேல் அரச பயங்கரவாதத்திற்கும் எதிரான போராட்டம். நில அபகரிப்பிற்கு எதிரான, அரசியல் ஒடுக்குமுறைக்கு எதிரான அந்த வரலாறு, ஆயுத விடுதலைப் போராட்டத்தாலும் சமாதானப் பேச்சுவார்த்தைகளாலுமான நிகழ்வுகளை உள்ளடக்கியது. பலஸ்தீன மக்கள் எதிர்கொள்ளும் ஒடுக்குமுறைகளில் மிக மோசமானது நில அபகரிப்பு. இஸ்ரேல் அரசின் திட்டமிட்ட யூதக்குடியேற்றங்கள் மூலமாக பலஸ்தீன மக்களின் மேற்குக்கரை மற்றும் கிழக்கு ஜெருசலேம் ஆகிய பூர்வீகப் பிரதேசங்கள் விழுங்கப்பட்டுள்ளன.

மீண்டும் மீண்டும் காஸா மீது இஸ்ரேல் இராணுவ இயந்திரம்:

கடந்த 2006லிருந்து சில ஆண்டுகால இடைவெளிகளுக்குள் தொடர்ச்சியாக தற்போதையதைப் போன்ற மோசமான தாக்குதல்களைக் காஸா மீது இஸ்ரேல் நடத்தியுள்ளது. 2006 இல் லெபனானின் ஹிஸ்புல்லாவிற்கு எதிரான பாரிய போர், 2009-2010, 2012, 2014 என காஸா மீதான இதற்கு முன்னைய இஸ்ரேலின் படையெடுப்புகள் அமைந்தன.

காஸா மீதான தாக்குதல்களுக்குக் காரணம், இஸ்ரேல் மீதான ஹமாஸ் அமைப்பின் ஏவுகணைத் தாக்குதல்கள் என்பதாகவே ஊடகங்களில் சித்தரிக்கப்படுகின்றது. ஆனால் உண்மை நிலவரம் வேறானது.

இஸ்ரேலினால் ஆக்கிரமிக்கப்பட்ட கிழக்கு ஜெருசலேமில் அமைந்துள்ள அல்-அக்ஷா மசூதி பலஸ்தீன முஸ்லீம் மக்கள் புனிதமாகக் கருதும் ஸ்தலம். அது இஸ்லாமியர்களின் 3வது புனித ஸ்தலம் எனப்படுகின்றது. அதனை ஆக்கிரமித்து அழித்து அதில் யூத ஸ்தலத்தை நிறுவும் முனைப்பு இஸ்ரேலுக்கு உண்டு. கடந்த ஏப்ரல் இஸ்லாமியர்களின் ரமலான் நோன்புகால இறுதி நாட்களில் அம்மசூதிக்குள் இஸ்ரேல் காவல்துறையினரும் இராணுவமும் நுழைந்ததில் அங்கு கலவரம் ஏற்பட்டது. பலஸ்தீன மக்களுக்கும் இஸ்ரேலிய பாதுகாப்பு மற்றும் காவல்துறையினருக்கும் இடையில் ஏற்பட்ட மோதல்களில் பல நூற்றுக்கணக்கான மக்கள் காயமடைந்தனர். இந்தக் கலவரத்திற்கான

தொடக்கப்புள்ளி, யூத கடும்போக்காளர்கள் திட்டமிட்ட ஒரு பேரணியும் இஸ்ரேல் காவல்துறை அல்-அக்ஷா மசூதியை முற்றுகையிட்டுத் தாக்கியுள்ளமையுமாகும். 'ஜெருசலேம் தினம்' என்ற பெயருடன் அந்நிகழ்வு திட்டமிடப்பட்டிருந்தது. 1967ல் நடைபெற்ற 'ஆறுநாள்' (05.06.1967 - 10.06.1967) போரில் இஸ்ரேல் படைகள் கிழக்கு ஜெருசலேமினைக் பைக்பற்றியதை நினைவுகூர்வது இந்நிகழ்வின் நோக்கம்.

1967 - ஆறுநாள் போர் ஏற்படுத்திய பாரிய மாற்றம்:

1967ன் இந்த ஆறுநாள் போர், இஸ்ரேலுக்கும் அரபுநாடுக ளுக்கும் (எகிப்த், ஜோர்டான், சிரியா) இடையில் நடைபெற் றது. குறுகிய போரெனினும் இன்றுவரை நீடிக்கின்ற அரசி யல் விளைவுகளைக் கொண்டிருக்கின்றது இப்போர். இதன் போது கைப்பற்றப்பட்ட மேற்குக்கரை, கோலான் குன்றுக ளின் பிரதேசங்கள் (Golan Heights) மற்றும் கிழக்கு ஜெருச லேம் ஆகியன இன்றுவரை இஸ்ரேலின் கட்டுப்பாட்டுக்குள் உள்ளன. அதிலும் கிழக்கு ஜெருசலேம் பலவந்தமாக இஸ் ரேலுடன் இணைக்கப்பட்டுள்ளது. இந்தப் பலவந்த இணைப் பினை ஆங்கிலத்தில் Annexation என்பார்கள். இந்தப்போ ரின் விளைவுகள் பிராந்தியத்தின் அரசியல் சூழலை பல வழிகளில் மாற்றியமைத்தது. சர்வதேச ரீதியாக இஸ்ரேல் தனது வகிபாகத்தை ஸ்திரப்படுத்திக்கொண்டது. அரபு உல கம் பலவீனப்படுத்தப்பட்டது.

தவிர, பலஸ்தீன எதிர்ப்பிற்கான இன்னுமோர் சமகாலக் காரணியும் உள்ளது. அது யூதக்குடியேற்றவாசிகளுக்கும் பலஸ்தீனக் குடும்பங்களுக்குமிடையிலான நிலம் / வீடு தொடர்பான வழக்கு ஆகும். கிழக்கு ஜெருசலேமில் உள்ள Sheik Jarrah எனும் பகுதியில் நான்கு பலஸ்தீனக்குடும்பங் களை அவர்களின் சொந்த வீடுகளிலிருந்து வெளியேற்றும் முனைப்பில் யூதக்குடியேற்றவாசிகள் இறங்கியுள்ளனர். இஸ்ரேல் உருவாக்கப்படுவதற்கு (1947)முன்பிருந்தே அந்த வீடுகள் தமக்குச் சொந்தமாக இருந்ததாக யூதக்குடியேற்ற வாசிகள் வழக்குத் தொடுத்து கீழ் நீதிமன்று ஒன்றில் வென்றுமுள்ளனர். ஆனால் இந்த வழக்கு உச்சநீதி மன்றில் மேன்முறையீடு செய்யப்பட்டிருந்தது. பலஸ்தீனர்களின் எதிர்ப்புகள் காரணமாக உச்சநீதிமன்ற வழக்கு ஒத்திவைக் கப்பட்டுள்ளது. ஆனால் 60 ஆண்டுகளுக்கு மேலாக அந்த நிலத்தில் பலஸ்தீனக்குடும்பங்கள் வாழ்ந்துள்ளன. ஜோர் டான் ஆட்சிக்காலத்தில்(1948 - 1967) அதனிடமிருந்து காணி களைப் பலஸ்தீனக் குடும்பங்கள் கொள்வனவு செய்துள் ளன எனப்படுகின்றது.

தமது நிலங்களை ஆக்கிரமித்து திட்டமிட்ட யூதக்குடியேற் றங்களை நிறுவியதை யூதர்கள் கொண்டாடுவதென்பது பலஸ்தீன மக்களை ஆத்திரமூட்டக்கூடியது. பலஸ்தீன எதிர்ப்பிற்கு அடிப்படையானது இஸ்ரேலின் தொடர்ச்சியான நில அபகரிப்பும், யூதக்குடியேற்றங்களும்.

பலஸ்தீனர்களை ஆத்திரமூட்டும் ஒடுக்கு முறைகள்:

இந்தப் பின்னணிகளில் கிழக்கு ஜெருசலேம் மக்களுக்கும் அவர்களின் போராட்டங்களுக்கும் ஆதரவாகவும், அப்பகுதி களிலிருந்து இஸ்ரேலிய இராணுவத்தையும் காவல்துறை யையும் வெளியேறக் கோரியே ஹமாஸ் அமைப்பினர் ஏவு-கணைத் தாக்குதல்களை நடத்தத் தொடங்கினர். 2014 ற்குப் பின்னர் இஸ்ரேல் மீது முதற்தடவையாக ஏவுகணைத் தாக்கு தல்களைக் ஹமாஸ் நடத்தியிருக்கின்றது. இதற்கு முந்தைய கட்டங்களிலும் இதே பற்றர்னிலேயே காஸா மீதான தரை மற்றும் வான்படைத் தாக்குதல்களை நடத்தி வந்திருக்கின் றது இஸ்ரேல். அதாவது ஹமாஸ் இஸ்ரேல் பகுதிகளுக்கு ஏவுகணைத் தாக்குதல்களை நடத்த, அதற்குப் பதிலடியா கத் தம்மைத் 'தற்பாதுகாக்கும் உரிமையின்' பெயரில் 'பயங்கரவாதிகளை' அழிக்கும் தாக்குதல் என்பதாகத் தனது போரை இஸ்ரேல் ஒவ்வொரு முறையும் நியாயப்படுத்தி வந் துள்ளது. ஆனால் காஸா மீது பெருமெடுப்பிலான படை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஏதுவாக ஹமாசை எப்படித் தூண்டவேண்டுமென்ற கைங்கரியத்தினை இஸ் ரேல் நன்கு அறிந்துவைத்திருக்கின்றது.

இஸ்ரேலிடம் Irone Dome எனப்படும் வலுவான ஏவுகணை எதிர்ப்புத் தொழில்நுட்பம் (Anti missile system) உள்ளது. ஹமாஸினால் ஏவப்படும் ஏவுகணைகளை வான்வெளியில் வைத்தே தடுத்து அழிக்கும் தொழில்நுட்பம் அது. ஆயினும் அதனையும் தாண்டிச் சில இடங்களில் ஹமாஸின் ஏவுக ணைகள் வீழ்ந்து வெடித்ததில் இம்முறை 12 வரையான இஸ்ரேலியப் பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். அவை ஈரான் ஹமாஸிற்கு வழங்கிய ஏவுகணைகள் என்று கூறப்ப டுகின்றது.

இஸ்ரேலுக்கு நிபந்தனையற்று ஆதரவளிக்கும் அமெரிக்கா:

சர்வதேச அரசியலை, குறிப்பாக அமெரிக்கா தலைமையி லான உலக அரசியலை அதன் கயமைகளைக் கருத்திலெ டுக்காமல் மேம்போக்காகப் பேச முடியாது. அமெரிக்காவின் ஆட்சி மாற்றங்கள் சர்வதேச நிலைமைகளைப் பொறுத்த வரை மாற்றங்களைக் கொண்டுவந்ததில்லை. ஒபாமா பத விக்கு வந்த போதும், இந்தியத் தமிழ்ப் பின்னணியைக் கொண்ட கமலா ஹரிஸ் துணை ஜனாதிபதியாக வந்தபோ தும் அதனைக் கொண்டாடுகின்ற 'தமிழ் உளவியல்' சில ஊடக மட்டத்திலும் சமூக மட்டத்திலும் அவதானிக்கப்பட் டிருந்தது. அது அரசியல் புரிதல் அற்ற ஒருவகை உணர்ச் சிவசப்பட்ட வெளிப்பாடு. எவர் ஆட்சிக்கு வந்தாலும் வெளி யுறவுக் கொள்கை என்று ஒன்று உள்ளது. அதுவும் பனிப் போருக்குப் பிற்பட்ட கால வெளியுறவு அரசியல் என்பது நீதியின் அடிப்படையிலான கொள்கைகளின் பாற்பட்ட தல்ல. அது முற்றிலும் பொருளாதார (மற்றும் அரசியல், இராணுவ) நலன்களை அடிப்படையாகக் கொண்டது.

இஸ்ரேலின் இராணுவ நடவடிக்கையை நிறுத்தக் கோருவது தொடர்பான தீர்மானத்தினை ஐ.நா பாதுகாப்பு அவையில் கொண்டுவருவதற்கு சில நாடுகள் எடுத்த முயற்சியினை ஜோ பைடன் தலைமையிலான அமெரிக்கா முட்டுக்கட்டை போட்டிருந்தது. இஸ்ரேல் மீது ஒரு இராஜதந்திர அழுத் தத்தினைக் கொண்டுவருவதற்குக்கூட அமெரிக்கா பின்நிற் கின்றது. 1972ம் ஆண்டிலிருந்து இற்றைவரை 43 தடவைகள் இஸ்ரேலுக்கு எதிரான ஐ.நா பாதுகாப்பு அவையின் தீர்மா னங்களைத் தனது வீட்டோ அதிகாரத்தின் மூலம் தடுத்துள் ளது. தற்போதும் அதனைச் செய்துள்ளதோடு அமெரிக்கா, ஜேர்மன் போன்ற நாடுகள் இஸ்ரேலுக்கு ஆதரவான கருத் துகளை வெளியிட்டுமுள்ளன. அதாவது ஹமாஸ் அமைப் பின் எறிகணைத் தாக்குதல்களுக்கு எதிராகத் தன்னைத் தற் காத்துக்கொள்ளும் உரிமை இஸ்ரேலுக்கு இருக்கின்றதென் பது இந்நாடுகளின் நிலைப்பாடு.

ஐ.நா என்பதுகூட அமெரிக்க நலன்களைத் தாண்டி உலக அரசியலில் வினைத்தாக்கத்தினை ஏற்படுத்தியதில்லை என் பது நெடுங்காலமாக பலமுறை மெய்ப்பிக்கப்பட்ட நிதர்ச னம். இஸ்ரேலைப் பொறுத்தமட்டிலும் ஐ.நாவினால் எவ்வி தத் தாக்கத்தையும் செலுத்த முடியாது. ஐ.நாவின் கண்ட

னங்கள் வெறும் சடங்குபூர்வமாக நிகழ்வுகளே.

அமெரிக்காவின் இராணுவ பொருளாதார உதவி:

அமெரிக்கா பாரிய அளவில் இராணுவ, பொருளாதார உதவிகளை இஸ்ரேலுக்கு பல தசாப்தங்களாக வழங்கி வருகின்றது. இராணுவ பொருளாதார உதவி என்பதற்கு அப்பால் நிபந்தனையற்ற முறையில் அரசியல், இராஜதந்திர ஆதரவினை அது இஸ்ரேலுக்கு வழங்கிவருகிறது. மறுவளமாகச் சொல்லப்போனால் ஆக்கிரமிப்பு சக்தியும் போர்க்குற்றவாளியுமான இஸ்ரேலின் அனைத்துவகையான ஆக்கிரமிப்புப் போர்கள், (பலஸ்தீன) நிலப்பறிப்பு, திட்டமிட்ட பாரிய யூதக்குடியேற்றங்கள் உட்பட்ட மனித உரிமை மீறல்களுக்கு வலுவான முண்டுகொடுப்பினைச் செய்துவருவது அமெரிக்கா மட்டுமே. அமெரிக்க - இஸ்ரேல் உறவு நெருக்கமும் தனியாகப் பேசப்படவேண்டியது.

அமெரிக்காவில் பெரும் நிறுவன மயப்படுத்தப்பட்ட யூத 'லொபி' இயக்கங்கள் தொழிற்படுகின்றன. அவை மத, அரசியல், பொருளாதாரம் எனப் பல தளங்களில் நீண்டகாலமாக இயங்கி வருவன. அங்குள்ள கிறிஸ்தவ மதபீடங்களுடனும் நெருக்கமான தொடர்புகளை யூத லொபி இயக்கங்கள் கொண்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

அமெரிக்கா ஆண்டுதோறும் வழங்கிவரும் பல பில்லியன் நிதி உட்பட்ட இராணுவ உதவிகள் குறித்த கேள்விகள் அமெரிக்காவில் எழுப்பப்படுவதில்லை. மனித உரிமை மீறல்களை மேற்கொள்ளும் உலக நாடுகளின் அரசாங்கங்களுக்கான அமெரிக்க உதவிகளைக் கேள்வியெழுப்பும், விமர்சிக்கும் தாராளவாதிகள், ஜனநாயகவாதிகள்கூட இஸ்ரேலுக்கான உதவிகளைக் கேள்வியெழுப்புவதில்லை.

மத்திய கிழக்கில் அமெரிக்க நலன்களுக்கு இஸ்ரேல் உறுதுணை:

அமெரிக்கா போன்று உலகில் வேறெந்த நாடும் இஸ்ரேலுக்கு இராஜதந்திர ஆதரவினை வழங்குவதில்லை. இந்த ஆதரவு என்பதற்கான முக்கிய அடிப்படைகளில் ஒன்று, மத்தியகிழக்கில் அமெரிக்காவின் நலன்கள் சார்ந்தது. 1967ன் பின்னர்தான் (ஆறுநாள் போரின் பின்னர்) அமெரிக்கா தீவிரமாக இஸ்ரேலை ஆதரிக்கத் தொடங்கியது. பெருவாரியாக உதவத்தொடங்கியது. அதாவது சுற்றவுள்ள அரபு நாடுகள் அனைத்தினதும் இராணுவ பலத்தினை விட இஸ்ரேல் இராணுவம் வலிமையானது என நிரூபித்த பின்னர். மேலதிக பிரதேசங்களை ஆக்கிரமித்துத் தன்னையொரு மேலாதிக்க சக்தியாக நிலைநிறுத்திக்கொண்ட பின்னரே அமெரிக்க உதவி பன்மடங்காக அதிகரித்தது.

இஸ்ரேலைச் சுற்றியுள்ள அரபு நாடுகள் இஸ்ரேலுக்கு எதிரானவை. இந்நிலையில் அவற்றுக்கிடையிலான முரண்நிலைகளை அமெரிக்கா தனது நலன்களுக்குச் சாதகமாகக்

STAY ONE STEP AHEAD OF CRA

X-CRA Officers are on staff.

SARVAA CPA
PROFESSIONAL CORPORATION

Our passion is to solve your tax problems:
- Unfiled Tax Returns - Last ten years (2011 - 2020)
- Appeals, Audits and Adjustments
- GST/HST Owner-Built & Rental Rebates
- Negotiate Collection, Garnishment and Payment Plan
- Voluntary Disclosure Program (VDP)
- Estate, Trust & Non-Residents
- US Tax (PTIN) - IRS 1040 & State Returns

CPA CHARTERED PROFESSIONAL ACCOUNTANTS

Shawn Y. Sarvaa, CPA, CGA
2750 14th Ave., Suite 206
Markham ON L3R 0B6
ideas@sarvaacpa.ca

TECHNICAL EXCELLENCE | INTEGRITY | PROFESSIONALISM

VANCOUVER 604 398 7272
TORONTO 647 219 3110
CALGARY 403 879 7272

கையாள்வதற்குரிய நாடாக மத்தியகிழக்குப் பிராந்தியத்தில் இஸ்ரேல் உள்ளது. லெபனான், பலஸ்தீன தேசியவாத எழுச்சியைத் தடுப்பது, சோவியத்தின் நட்புநாடான சிரியாவைக் கையாள்வது, அணுவாயுத நாடான ஈரானைக் கையாள்வது என்ற அமெரிக்க நலன்களும் உள்ளன. தவிர பிராந்தியத்தில் மிகச் சிறந்த வான்படையினை இஸ்ரேல் கொண்டிருக்கின்றது. இஸ்ரேல் தொடர்ச்சியாக முன்னெடுக்கும் போர்களில் அமெரிக்க ஆயுததளவாடங்களுக்கான பரிசோதனைக்களமாகவும் பார்க்கப்படுகின்றது. அது சோவியத் தயாரிப்பு ஆயுதங்களுக்கு எதிரான பரிசோதனைக்களம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இஸ்ரேல்-பலஸ்தீன முரண்பாடு - நீண்ட வரலாறு:

இஸ்ரேல்-பலஸ்தீன முரண்பாட்டுக்கு நீண்ட நெடிய வரலாறு இருக்கின்றது. அது யூதர்கள் ஐரோப்பாவிலிருந்து பலஸ்தீன நிலங்களில் குடியேறி படிப்படியாக அந்நிலங்களைத் தம்வசப்படுத்தி 1947ல் இஸ்ரேல் என்ற தேசத்தை நிறுவிய தற்கு முன்பிருந்து தொடங்குகின்றது அந்த வரலாறு. இஸ்ரேல் தேசம் உருவாக்கப்படுவதற்கு முன்னரான மத்தியகிழக்கு மற்றும் யூதர்களின் குடியேற்றமும் அபகரிப்பும் தொடர்பான வரவாற்றினைத் தனிக்கட்டுரையில் பார்ப்பது பொருத்தம்.

1947ல் ஐ.நாவின் தீர்மானத்தின்படி யூதர்கள், முஸ்லீம்கள், கிறிஸ்தவர்கள் புனிதமாகக் கருதும் ஜெருசலேம் சர்வதேச கண்காணிப்பிற்கு உட்பட்டதாகப் பேணப்படவேண்டுமென்ற தீர்மானம் எட்டப்பட்டது. ஆனால் 1948 ஐ.நா தீர்மானத்தை மீறி மேற்கு ஜெருசலேமினை இஸ்ரேல் ஆக்கிரமித்தது. கிழக்கு ஜெருசலேமினை ஜோர்தான் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தது. ஆனால் 1967-ஆறுநாள் போரில் இஸ்ரேல் கிழக்கு ஜெருசலேமினைக் கைப்பற்றியது. இன்றுவரை அதனைத் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொண்டு யூதக் குடியேற்றங்களைப் பெருமளவில் நிறுவியதோடு அதனைப் பலவந்தமாக சர்வதேச சட்டங்களை மீறி இஸ்ரேலுடன் இணைத்துக்கொண்டது. அதனைத் தலைநகரமாக்கும் முனைப்புடன் திட்டமிட்ட தீவிர நடிவடிக்கைகளை மேற் கொண்டு வருகின்றது.

ஐரோப்பாவில் யூத எதிர்ப்புவாதம்:

ஐரோப்பாவில் யூத எதிர்ப்புவாதம் (Anti semitism) வளர்ச்சி கண்ட புறநிலையில் மறுவளமாக அவர்கள் மத்தியில் சியோனிசம் (Zionism) புதிய வடிவங்களில் எழுச்சி பெற்றது. யூதர்கள் இனரீதியாக எல்லா மட்டங்களிலும் ஒடுக்கப் பட்டமை, அவர்களை இன அழிப்புச் செய்யும் நோக்கில் உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்து வெளியேற்றப்பட்டமை, படுகொலை செய்யப்பட்டமை, புறக்கணிக்கப்பட்டமையைக் குறிக்கிறது Anti semitism எனும் யூத எதிர்ப்புவாதம். சியோனிசம் என்பது தமக்காக 'இறைவனால் வாக்களிக்கப்பட்ட தொன்ம நாடான' இஸ்ரேலை அடைவதற்கான விருப்பினையும் நம்பிக்கையினையும் குறிக்கிறது.

இந்நிலையில் பழைய பலஸ்தீனத்தில் பிரித்தானிய கொலனித்துவ ஆட்சி நிலவிய காலத்திலேயே பலஸ்தீன, அரபு மக்கள் மீதான ஒடுக்குமுறைகளும் தொடங்கிவிட்டன. 1920 முதல் 1948 வரை பலஸ்தீனம் பிரித்தானியாவின்கீழ் இருந்தது. அதற்கு முன்னர் கிட்டத்தட்ட 600 ஆண்டுகள் ஒட்டமான் பேரரசின் (துருக்கியப் பேரரசு) கீழ் ஆளப்பட்டது. ஐரோப்பாவிலிருந்து இடம்பெயர்ந்த யூதர்கள் பழைய பலஸ்தீனத்தின் நிலங்களை அபகரித்தும் கொள்வனவு செய்தும் அங்கு குடியேறினர். இன்னொரு வகையில் சொல்வதானால் பிரித்தானிய கொலனித்துவத்திலேயே பலஸ்தீனம் யூதக் கொலனித்துவமாக மாறத் தொடங்கியது. அரபு நில உரிமையாளர்கள் மற்றும் வெளிநாடுகளில் வசித்தவர்களின் நிலங்களும் பெருமளவில் கொள்வனவு செய்யப்பட்டன என்பது வரலாறு. பிரித்தானிய கொலனித்துவம், இஸ்ரேல் தேசம் உருவாக்கப்படுவதற்கு முன்னரான நிலைமைகள், அரபு-யூத முரண்படுகள், பிரித்தானிய வகிபாகம், சியோனிச நகர்வுகள் என்பன தனியான கட்டுரையில் நோக்கப்பட வேண்டியவை.

பலஸ்தீனத்தின் இன்றைய நெருக்கடிகளுக்கான மூலம்:

பலஸ்தீனத்தின் இன்றைய நெருக்கடிகளுக்கு பிரித்தானிய ஆட்சியாளர்களும் முக்கிய மூல காரணி. அவர்களின் பிரித்தாளும் சூழ்ச்சிகளின் விளைவுகளில் இதுவும் ஒன்று. இலங்கைத்தீவில் தமிழர்களின் அரசியல் உரிமை இழப்பிற்கான மூலமாகவும் பிரித்தானிய ஆட்சியாளர்கள் இருந்தனர் என்பது இங்கு கவனம்கொள்ளத்தக்கது.

இஸ்ரேலின் 'தற்காப்பு உரிமை' பற்றிக் 'குரல் எழுப்பும்' அரசுகள், பலஸ்தீனர்களின் வாழ்வுரிமை பற்றிக் குரல் எழுப்புவதில்லை. ஒரு படைவலுச் சமநிலை இல்லாத இரு தரப்புகளுக்கிடையிலான முரண்பாடு இது. அரசுக்கும் அரசில்லாத தரப்பிற்கும் இடையிலான மோதல்கள். தரை, வான், கடல், பெரும் நவீன தொழில்நுட்ப படைக்கட்டுமானங்களைக் கொண்ட அரசுக்கும் போராளி அமைப்பிற்கும் இடையிலான பிணக்குகளாக உலகம் இஸ்ரேல் - பலஸ்தீனப் பிரச்சினையை அணுகுவதில்லை. பாரிய ஆக்கிரமிப்பு சக்திக்கும், பல தசாப்தங்களாக ஒடுக்கப்படும் மக்களுக்கும் இடையிலான முரண்பாட்டினை ஒரே தட்டில் வைத்து இருதரப்பு மோதல், வன்முறைகள் என்று அணுகவோ கணிக்கவோ முடியாது.

rooban.s@thaiveedu.com

Lower rates.
Exceptional service.

Connect with an insurance company that puts clients first.
Discover why The Co-operators is the right choice
for your Auto and Home insurance.

Ask us about our significant discounts, 24-hour
Emergency Claims Service, free Identity Theft coverage
with our Home policies, and Accident Forgiveness
Endorsement option. All backed by our
Claims Guarantee.

Senthooran Punithavel

Phone: **416-396-0707**
Fax: 416-396-1221
Email: Senthooran_Punithavel@cooperators.ca

We've Moved
Our New Address

10 Milner Business Court - Unit 708
Scarborough, ON M1B 3C3

குறைந்த கட்டணங்கள்
பெரும்பயன் நல்கும் சேவைகள்

வாடிக்கையாளர் நலனை முன்னிலைப்படுத்தும்
எம் காப்புறுதி அமைப்போடு தொடர்பு கொள்ளுங்கள்

வீடு, வாகன காப்புறுதி சேவைகளுக்கு உகந்த தெரிவு
The Co-operators நிறுவனமே என்பதைக் கண்டுகொள்ளுங்கள்

உங்களுக்கான கட்டணக் கழிவுகளை பெற்றுக் கொள்ளுங்கள்

24 மணிநேர அவசர கேட்பளவுச் சேவை வழங்கப்படும்

Home Auto Life Investments
Group Business Farm Travel

the co-operators
A Better Place For You®

தமிழகத் தேர்தல் முடிவுகள் - ஒரு பார்வை

- நெல்லை ஜெயசிங்

தமிழக சட்டபேரவைக்கு 234 பிரதிநிதிகளை தேர்வு செய்வதற்கான தேர்தல் கடந்த ஏப்ரல் ஆறாம் திகதி நடைபெற்றது. 6.28 கோடி வாக்காளர்களில் 4.57 கோடி பேர் தமது வாக்குகளை செலுத்தினர். கடந்த 2016 தேர்தலில் 74.81% பேர் வாக்களித்த நிலையில் 2021 தேர்தலில் 72.81% ஆக குறையலாயிற்று. 1.71 கோடி பேர் வாக்களிக்காததன் மூலம் தமது உயரிய ஜனநாயக கடமையை ஆற்றத் தவறிவிட்டனர் என்றே கூறவேண்டும். பொது விடுமுறை உட்பட அனைத்து வசதிகளும் வழங்கப்பட்ட போதும் 27% வீதத்தினர் வாக்களிக்க முன்வராமை ஜனநாயகத்தை பலவீனப்படுத்தும் செயலாக கருதப் படுகிறது.

திராவிட முன்னேற்றக் கழகம், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், நாம் தமிழர் கட்சி, அம்மா மக்கள் முன் னேற்றக் கழகம், மக்கள் நீதி மய்யம் என ஐந்து கட்சிகளின் தலைமையில் பல்வேறு கட்சிகள் இணைந்து தேர்தலில் ஐந்து முனைப் போட்டியை சந்தித்தன. தேர்தல் பிரச்சாரம் பரவலாகவும் கடுமையாகவும் இருந்த போதும் ஆட்சியை கைப்பற்றுவதற்கான போட்டியானது இரு பெரும் திராவிட கட்சிகளிடம் மட்டுமே இருந் தமையை காணமுடிந்தது. நாம் தமிழர் கட்சி தவிர்ந்த ஏனைய நான்கு கட்சிகளும் தமக்கு உடன்பாடான கட்சிகளுடன் இணைந்து கூட்டணி அமைத்து போட்டியிட்டன. இவற்றில் திமுக தலைமையிலான கூட்டணி மிக பலமானதாக கருதப்பட்டது. 2019ல் நடந்த மக்கள் அவைக்கான தேர்தலின் போது ஏற்படுத் தப்பட்ட கூட்டணியை தி.மு.க. இத்தேர்தலிலும் தக்கவைத்துக் கொண்டதுடன் வேறு சிறு கட்சிகளையும் இணைத்துக்கொண்டமை அதற்கு மிகப் பெரும் பலமாக விளங்கியது. மறுபுறம் அ.தி.மு.க. தனது கூட்டணியை தக்கவைத்துக் கொள்வதில் தவறிவிட்டது. குறிப்பாக விஜயகாந்த் தலைமையிலான தேசிய முற்போக்கு திராவிட கழகம், கிருஷ்ணசாமியின் புதிய தமிழகம் கூட்டணியிலி ருந்து விலகியமை அதிமுகவிற்கு பின்னடைவாக அமைந்தது.

தேர்தல் முடிவுகள்:

தேர்தல் முடிந்து ஒரு மாதகாலத்தில் - மே 2ல் வாக்குகள் எண் ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்பட்டன. எதிர்பார்த்த படி திமுக தனிப் பெரும்பான்மையையும் கூட்டணியுடன் இணைந்து உறுதி யான அறுதிப் பெரும்பான்மையையும் பெறலாயிற்று. மறுபுறம் அதிமுக படுதோல்வி அடையாமல் எதிர்க்கட்சியாக செயல்படக் கூடிய அளவிற்கு இடங்களை பெற்றிருப்பதையும் காணலாம்.

173 இடங்களில் போட்டியிட்ட திமுக தனித்து 125 இடங்களையும் அக்கட்சியின் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட்ட 8 பேர் என மொத்தம் 133 தொகுதிகளில் வெற்றி பெற்றுள்ளது. அதனுடன் கூட்டணி அமைத்து போட்டியிட்ட காங்கிரஸ், விடுதலை சிறுத் தைகள், இரண்டு இடதுசாரி கட்சிகள் ஆகியவை 26 இடங்களில் வெற்றி பெற்றன. ஆக மொத்தத்தில் திமுக கூட்டணி 159 இடங் களை பெறலாயிற்று. மறுபுறம் அதிமுக 179 இடங்களில் போட்டி யிட்டு 65 இடங்களையும் அதன் கூட்டணி கட்சிகளான பாட்டாளி மக்கள் கட்சி, பாரதிய ஜனதா கட்சி, புரட்சி பாரதம் ஆகியவை 10 இடங்களில் வெற்றி பெற்றன. பெரியதும் சிறியதுமாக மொத் தம் 13 கட்சிகளைச் சேர்ந்த 234 பிரதிநிதிகள் தமிழக சட்டபே வைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இரு திராவிட கட்சிகளுக்கு மாற்றாக களம் இறங்கி தனித்துப் போட்டியிட்ட நாம் தமிழர் கட்சி, அமமுக, மக்கள் நீதி மய்யம் ஆகியன ஒரு தொகுதியில் கூட வெற்றி பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். அனைத்து தொகுதிகளிலும் போட்டியிட்ட சீமான் தலைமையிலான நாம் தமிழர் கட்சி 6.85% வாக்குகளை பெற்று அதிக வாக்குகளைப் பெற்ற மூன்றாவது பெரிய கட்சி என குறிப்பிடப்பட்ட போதும் அதன் தலைவரான சீமான் தவிர மற்ற அனைத்து வேட்பாளர்களும் வைப்புத் தொகையை இழந் துள்ளமை கவனிக்கத் தக்கதாகும். இதே போன்று அமமுக 2.47% வாக்குகளையும் மக்கள் நீதி மய்யம் 2.45% வாக்குகளையும் பெற்று அனைத்து தொகுதிகளிலும் தோல்வியை சந்தித்தன. இலங்கையைப் போன்று விகிதாசார தேர்தல் முறை இருந்திருப் பின் தோல்வி அடைந்த இக்கட்சிகள் தாம் பெற்ற வாக்கு சத வீதத்திற்கு அமைய பிரதிநிதித்துவத்தை பெற்றிருக்கும். இந்திய தேர்தல் முறையில் அதற்கான வாய்ப்பு இல்லை. இந்நிலையில் இக்கட்சிகள் பெற்ற வாக்குகள் சில தொகுதிகளின் வெற்றி தோல்வியை நிர்ணயித்த போதும் தமிழக மக்கள் திராவிட கட்சிக ளுக்கு மாற்றாக இவர்களை கருதவில்லை என்பது தெளிவாக தெரிகிறது.

திராவிட அரசியல்:

1967 முதல் தற்போதைய தேர்தல் வரையிலான தேர்தல் முடிவு-களை உற்று நோக்கினால் தமிழக மக்கள் திராவிட அரசியலை ஒதுக்கி தள்ளும் மனநிலையில் இல்லை என்பது தெளிவாக தெரிகிறது. 1990 முதல் திராவிட கட்சிகளின் சமூக பங்கேற்பு கொஞ்சம் கொஞ்சமாக குறைந்து வந்தாலும் தேர்தலில் திராவிட கட்சிகளே ஆதிக்கம் செலுத்துகின்ற போக்கை காண முடிகிறது. நடந்து முடிந்த தேர்தலில் திமுக தனித்து 37.70% வாக்குகளையும் அதிமுக 33.29% வாக்குகளையும் பெற்றுள்ளன. பாஜக போன்ற மதவாத கட்சிகள் நீங்களாக மற்ற சிறிய கட்சிகளும் திராவிடம் சார்ந்த அரசியலையே முன்னெடுத்து வருகின்றன. எனவே மொத் தத்தில் 80% மேற்பட்ட மக்கள் திராவிட அரசியலை ஆதரிப்பவர்க ளாகவே இருந்து வருகின்றனர்.

பாஜக, காங்கிரஸ், இடதுசாரிகள் போன்ற தேசிய கட்சிகளை தமிழக மக்கள் மிக குறைந்த அளவே ஆதரிப்பவர்களாக இருக்கின்றனர். நடந்து முடிந்த தேர்தலில் இக்கட்சிகள் 8% குறை வான வாக்குகளையே பெற முடிந்தது. இதனால் அக்கட்சிகள் இரு பெரும் திராவிட கட்சிகளின் பின்னால் அணி திரண்டால் மட்டுமே ஓரளவு தொகுதிகளையாவது வெற்றி கொள்ளும் வாய்ப்பு கிடைக்கிறது. எனவே 1967க்கு பிறகு இருபெரும் திரா விட கட்சிகளின் மேலாதிக்கமே தொடர்ந்து வருகிறது.

திராவிட கட்சிகளின் மேலாதிக்கம் தொடர பல்வேறு காரணிகள் உதவி கரமாக இருந்துள்ளன. காலத்துக்கு காலம் மானிய விலையில் வழங்கப்பட்ட இடு பொருட்கள், கடன்கள், கடன் தள்ளுபடி, நில உடைமை, குத்தகை சீர்திருத்தம், உயர் கல்வியி லும் அரசு வேலைகளிலும் 69% இட ஒதுக்கீடு, தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்டோர் நலன், ஊட்டச்சத்து, உடல் நலம், கல்வி, மதிய உணவு திட்டம், ஆரம்ப சுகாதார திட்டங்கள், கிராமப்புற வேலைவாய்ப்பு திட்டம், தாய் சேய் நலன், பெண்கள் ஆரோக்

கியம், பெண்கள் பாதுகாப்பு என ஏராளமான திட்டங்களை இரண்டு திராவிட கட்சிகளும் நிறைவேற்றி ஏனைய மாநிலங்க ளுக்கு முன் மாதிரியாக திகழ்ந்ததை மக்கள் மறக்கவில்லை. மேலும் சமூக நீதி, பெரியார் கொள்கை, அண்ணாவின் கொள்கை என்பன திராவிட கட்சிகளால் மட்டுமே நிலை நிறுத்த முடியும் எனவும் மக்கள் நம்பலாயினர். அதனால் தேசிய கட்சிகளை புறம் தள்ளி திராவிட கட்சிகளை ஆட்சி பீடத்தில் அமர்த்தும் போக்கை தமிழக மக்கள் தொடர்ந்தும் கடைப்பிடித்து வருகின்றனர்.

திமுகவின் வெற்றி:

2016 தேர்தலில் 1.01% வாக்கு வித்தியாசத்தில் அதிமுகவிடம் வெற்றியை பறிகொடுத்த திமுக, 2021 தேர்தலில் அதிமுகவை விட 4.41% வாக்குகளை கூடுதலாக பெற்று 125 தொகுதிகளுடன் ஆட்சியை கைப்பற்றியது. பீகார் மாநிலத்தைச் சேர்ந்த பிரஷாந்த் கிஷோர் என்ற அரசியல் ஆலோசகர் தேர்தல் வெற்றிக்கான வியூகங்களை ஏற்படுத்தி வெற்றிக்கு வழிவகுத்தார் எனினும், தமிழக அரசியல் சூழ்நிலை திமுகவின் வெற்றிக்கு பெரிதும் கார ணமாகியது.

கலைஞர் மறைவிற்கு பின்னர் ஸ்டாலின் கட்சியை ஒருங்கி ணைத்து அதை திறம்பட வழிநடத்தினார். அதிமுகவின் கடந்த பத்து வருட ஆட்சியின் குறைபாடுகள் மக்கள்முன் வைக்கப்பட் டன. மத்தியில் ஆளும் பாஜகவின் செயல் திட்டங்கள் அதிமுக ஆட்சி ஊடாக தமிழகத்தில் செயல்படுத்தப்படுவதை மக்கள் விரும்பவில்லை. இதனை மக்களிடம் எடுத்துச் செல்வதில் திமுக தீவிரம் காட்டியது. குறிப்பாக நீட் எனப்படும் மருத்துவ நுழைவுத் தேர்வு, பிற்பட்டோருக்கான இட ஒதுக்கீடு, மும்மொழிக்கொள்கை, விவசாயிகள் பிரச்சினை, மறைமுக இந்தி மொழி திணிப்பு, மத் திய வேலை வாய்ப்புகளில் தமிழகம் புறக்கணிப்பு, சமூக நீதிக்கு எதிரான செயல்கள், பெரியார், அண்ணா கொள்கைகளை நீர்த் துப் போகச் செய்யும் செயல்பாடுகள், திராவிட கொள்கைகளை மழுங்கடிக்கும் பாடத்திட்டங்கள், புதிய கல்விக் கொள்கை, ஒன் றிய அரசின் எதேச்சாதிகாரம், இந்து பெரும்பான்மை வாதம், நவ தாராளமயக் கொள்கை என பல பாஜக கொள்கை திட்டங்களை அதிமுக கண்டு கொள்ளாமையை மக்கள் விரும்பவில்லை என் பதை திமுக தேர்தல் களத்தில் வெளிச்சம் போட்டு காட்டியது. எல்லாவற்றுக்கும் மேலாக மாநில சுயாட்சி மற்றும் சுயமரியாதை அதிமுக ஆட்சியில் மிகவும் பாதிப்புக்கு உள்ளாகி இருந்தது. நிதி உட்பட எந்த ஒன்றுக்கும் பஜாகவிடம் கையேந்தும் அவல நிலையை தமிழக மக்கள் விரும்பவில்லை.

சிறுபான்மை இஸ்லாமியர்களை பாதிக்கின்ற குடியுரிமை சட்டம், முத்தலாக் சட்டம், காஷ்மீர் மாநிலத்தை துண்டாடும் சட்டம் என பல சட்டங்கள் மத்தியில் நிறைவேறுவதற்கு அதிமுக உறுதுணை யாக இருந்ததை தமிழக சிறுபான்மை மக்கள் விரும்பாது தேர் தலில் அதிமுகவிற்கு எதிராக வாக்களித்தனர். இதே போன்று பஜாகவின் ஒருதலைப்பட்சமான இந்துத்துவ கொள்கைகளை எல்லா சிறுபான்மையினரும் எதிர்த்து திமுகவிற்கு ஆதரவாக வாக் களிக்க முற்பட்டதையும் காணலாம்.

அதிமுக ஆட்சியில் மத்தியில் ஆட்சி புரியும் பஜாகவின் தலை யீடு அதிக அளவில் காணப்பட்டது. எனவே ஸ்டாலின் 'தமிழகத் தின் சுய மரியாதையை மீட்டெடுக்கும் போர்' என மக்களிடம் முழக்கமிட்டதை மக்கள் வரவேற்றனர். திமுகவின் கூட்டணி கட் சிகளும் இதே நிலைப்பாட்டை எடுத்தன. இவ்வாறு அனைத்து காரணிகளும் திமுகவின் வெற்றிக்கு உறுதுணையாக அமைந்தது.

அதிமுகவின் தோல்வி:

ஜனநாயக தேர்தல் முறையில் உள்ள குறைபாடு காரணமாக 4.1% குறைவான வாக்குகளை பெற்ற அதிமுக வானது திமுகவை விட 60 தொகுதிகளை குறைவாக பெற்று ஆட்சி அதிகாரத்தை இழந்தது. இது பத்து வருட ஆட்சிக்கான மக்களின் எதிர்ப்பு மன நிலை என கூறப்பட்டபோதும் அதிமுகவின் அக, புற செயல் பாடுகளே அதன் தோல்விக்கு காரணமாக கருதப்படுகிறது.

ஜெயலலிதா தனக்குப் பின்னால் கட்சியை வழி நடத்தக் கூடிய வலிமையான தலைமையை உருவாக்கவில்லை. அவரின்பின் கட்சியின் கட்டமைப்பும் பலவீனமாகவே இருந்தது. ஜெயலலிதா வின் மறைவிற்குபின் அக்கட்சியின் தலைவர்கள் பெரிதும் ஒன்றிய அரசையே சார்ந்திருந்தார்கள். தங்களின் தனிப்பட்ட நலனை காத்திட முயன்றதால் மக்கள் நலனை தக்கவைக்க முடிய வில்லை. அதன் காரணமாகவே பாஜகவுடனான கூட்டணியை தொடர வேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்படலாயிற்று. தமிழகத்தின் மீதான பாஜகவின் செயல்பாடுகளில் மக்கள் அதிருப்தியை கொண்டிருந்தமையால் கூட்டணியை மக்கள் புறக்கணிக்க, அதி-முகவின் தோல்விக்கு அது காரணமாகியது. ஒற்றைத் தலைமை இல்லாது எடப்பாடி பழனிச்சாமி, பன்னீர்செல்வம் என இரட்டைத் தலைமை உருவானதும் அதிமுகவின் தோல்விக்கு வழிவகுத்தது. இருவரும் இணைந்து தேர்தல் பணி செய்திட முடியாத அளவிற்கு இருவரிடையே பனிப் போர் நீடித்தது.

வன்னியர்களுக்கு 10.5% இட ஒதுக்கீடு வழங்க உடன்பட்டதுடன், பட்டியல் இனத்தவர்களை (SCHEDULE CAST) உள்ளடக்கி தேவேந்திரகுல வேளாளர் என்றதொரு புதிய கட்டமைப்பையும் அதிமுக உருவாக்கியது. இது மற்ற சமூகத்தினரிடையே குழப் பத்தை ஏற்படுத்தியது. அதனால் ஒருசாரார் அதிமுகவிற்கு வாக் களிப்பதை தவிர்த்தனர் என கூறப்படுகிறது.

மேலும் ஜெயலலிதாவின் 'உடன்பிறவா சகோதரி'யான சசிகலா தேர்தலில் பெரிய பாதிப்பை ஏற்படுத்தாத போதும், அவரையும் அமமுகவின் தினகரனையும் உள்வாங்கி இருப்பின் அதிமுக கடுமையான நெருக்கடியை திமுகவிற்கு அளித்திருக்கும் என கூறப்படுகிறது. 20க்கும் மேற்பட்ட சட்ட பேரவை தொகுதிகளில் அதிமுக கூட்டணி வெற்றியை தினகரனின் அமமுக குழப்பிவிட் டதாக கூறப்படுகிறது. சில தொகுதிகளில் திமுகவின் வெற்றி வாக்கு வித்தியாசத்தை விட அமமுக கூட்டணி பெற்ற வாக்குகள் அதிகமாகும். இவ்வாறு, அதிமுகவிடம் ஆழமான திட்டமிடல் இல் லாமை திமுகவின் வெற்றியை சுலபமாக்கியது எனலாம்.

சீமானின் நாம் தமிழர் கட்சி:

ஐந்து முனைப் போட்டியில் அமமுக, மக்கள் நீதி மய்யம் கட்சி களை பின்னுக்கு தள்ளி 6.85% வாக்குகளைப் பெற்று மூன்றாம் இடத்தை பிடித்துள்ள நாம் தமிழர் கட்சி அரசியல் ஆய்வாளர்க ளின் கவனத்தை ஈர்த்ததுள்ளது. தமிழ் தேசியத்தை கொள்கையாக கொண்ட இக்கட்சிக்கு புலம் பெயர்ந்த இலங்கை தமிழர்கள் மத் தியிலும் ஆதரவு இருப்பதாக கூறப்படுகிறது. 234 தொகுதிகளி லும் தனித்து போட்டியிட்டு வாக்கு விகித அடிப்படையில் மூன் றாவது பெரிய கட்சி என்ற இலக்கை எட்டிய போதும் திராவிட கட்சி களுக்கு மாற்றாக மக்கள் இதனை கருதியதாக தெரிய வில்லை.

குறிப்பிட்ட தொகுதிகளில் வெற்றி தோல்விகளை நாம் தமிழர் கட்சி தீர்மானித்துள்ளது. சில தொகுதிகளில் கடந்த முறையை விட ஐந்து மடங்கு வாக்குகளை பெற்றபோதும் அனைத்து தொகு திகளிலும் வைப்பு தொகையை இக்கட்சி இழந்திருப்பதையும் மறுப்பதற்கில்லை. இக்கட்சி திமுகவின் வாக்குகளை பிரித்து அதிமுகவின் வெற்றிக்கு வழி வகுக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் நேர்மாறாக அதிமுக வாக்குகளே பிரிந்தன. சாதி மதத்தை சொல்லி இக்கட்சி வாக்கு கேட்கவில்லை. ஆனால் தேர் தல் வெற்றியைவிட தனக்கு இருக்கும் வாக்குகளின் வலிமையை உணர்த்தவே நாம் தமிழர் கட்சி முனைப்பு காட்டியதாகவும் அரசி யல் விமர்சகர்கள் கூறுகின்றனர். அதனாலேயே வெற்றி பற்றி கவலைப்படாமல் பொதுத் தொகுதிகளிலும் தலித் வேட்பாளர் களை நிறுத்தி கணிசமான வாக்குகளை பெற்றதாக கூறப்படுகி றது. மிகக்குறைவான ஈழ ஆதரவாளர்கள், மற்றும் ஓரளவு இளை ஞர்கள் மத்தியில் கொண்டுள்ள ஆதரவை வைத்து நாம் தமிழர் கட்சி எதிர்காலத்தில் ஆட்சியில் அமரும் என்று சொல்வதற் கில்லை.

தேர்தல் அரசியலில் சாதியம்:

தமிழகம் பெரியார் மண், சமூக நீதிக்கான தளம் என அண்மைக் காலங்களில் அதிக அளவில் சொல்லப்பட்டு வருகிறது. ஆனால் அதனை முற்றாக மறுக்கவும் ஏற்கவும் இயலாத நிலையில் தமி ழக தேர்தல் அரசியல் இருப்பதாக தெரிகிறது. மதப்பிரச்சாரத்தை பாஜக முன்னெடுத்த போதும் திராவிட கட்சிகள் உட்பட பிரதான கட்சிகள் ஜாதி, மதத்தை பிரச்சாரத்தில் முன்வைக்கவில்லை என்

பது வரவேற்கத்தக்க அம்சமாகும்.

பெயருக்கு பின்னால் சாதிப் பெயரை குறிப்பிடும் வழக்கத்திற்கு முற்றுப் புள்ளி வைத்தது திராவிட இயக்கம். பொது வெளியில் சாதி குறித்து பேசுவதையே இழிவாக எண்ணும் எண்ணத்தை தமிழ் நாட்டில் வளர்த்தெடுத்ததும் திராவிட கட்சிகளே. ஆனால் இன்று தேர்தல் அரசியல் வெற்றிக்காக குறுக்கு வழி முறைகள் தமிழகத்தை சாதி வாரியாக பிரித்து வைத்திருக்கிறதை கூர்ந்து கவனித்தால் தெரிய வரும். தேர்தல் கணக்கீடுகளில் இது பிரதி பலிப்பதை காணலாம். சாதிய கட்டமைப்பு, சாதிய எண்ணம் தமிழகத்தில் முழுமையாக ஒழியவில்லை. இந்தியாவில் கேரளாவிற்கு அடுத்து அதிகம் படித்தவர்கள் உள்ள மாநிலம் தமிழகம். ஆனால், சாதிய கட்டமைப்பு இன்றும் உயிர்ப்போடு இருக்கிறது. அதனால் இருபெரும் திராவிட கட்சிகள் உட்பட அனைத்து கட்சிகளும் பெரும்பாலான தொகுதிகளில் பலமாக இருக்கும் சமூகத்தவர்களையே வேட்பாளர்களாக நிறுத்தின. அதிக எண்ணிக்கையில் உள்ள சாதியினருக்கு போட்டியிட வாய்ப்பு கொடுக்கும் திராவிட கட்சிகளின் பயணத்தில் நாம் தமிழர் கட்சியும் தன்னை இணைத்துக் கொண்டதை வேட்பாளர் பட்டியலை பார்த்து புரிந்து கொள்ளலாம். ஒருசில விதிவிலக்குகள் இருந்த போதும் சாதி அடிப்படையிலான வேட்பாளர் தேர்வு, வாக்களிப்பு முறை தமிழகத்தில் இன்று வரையிலும் இருந்துகொண்டே இருக்கிறது. ஒரு கறுப்பர் அமெரிக்க அதிபராகலாம். ஒரு இஸ்லாமியர் லண்டன் மேயராகலாம். ஆனால் தமிழ் நாட்டில் பொது தொகுதியில் ஒரு தலித் வெற்றி பெறுவது என்பது அரிதான செயலாகும். தேர்தலுக்கு பின்னர் அமைச்சரவைக்கான தேர்வு முறையிலும் கூட சாதிய கணக்கீடு கடைப்பிடிக்கப்பட்டே வருகிறது. எனவே சமத்துவ சமூகத்திற்கான பயணம் மிக நீண்டதாக இருக்கிறது.

இலங்கை தமிழர் நலன்:

தமிழகத்தின் தேர்தல் முடிவுகள் எந்த வகையிலும் இலங்கையை, இலங்கை தமிழர்களை பாதிக்கும் என கூற முடியாது. இலங்கை இறையாண்மை உள்ள நாடென்பதால் ஒரு மாநிலமாக இருக்கும் தமிழகத்தால் நேரடியாக இலங்கை அரசு மீது எந்த அழுத்தத்தையும் அளிக்க முடியாது. அவ்வாறு ஏதாவது இருப்பின் அதனை இந்திய மத்திய அரசின் ஊடாக மட்டுமே செயற்படுத்த முடியும். உதாரணமாக மீன் பிடித்தல் தொடர்பான பிரச்சினைகளில் கூட மத்திய அரசின் ஊடாக இலங்கைக்கு அழுத்தத்தை மட்டுமே புதிய ஆட்சியாளர்களால் கொடுக்க முடியும். இதே போன்று இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக அநீதி இழைக்கப்படும் போதெல்லாம் தமிழகம் கொந்தளிக்கும். ஆங்காங்கே ஆதரவு போராட்டங்கள் நடைபெறும். தேர்தல் களத்தில் பிரச்சார பொருளாகவும் இருக்கும். ஆனால் தேர்தலின் போது உள்நாட்டு பிரச்சினைகள் முந்திக்கொள்வதால் தமிழக மக்கள் இலங்கை தமிழர்களை மட்டும் கருத்தில் கொண்டு வாக்களிப்பதில்லை. எனினும் உலகத்தமிழர்களின் அழுத்தம் பரவலாக இருப்பதன் காரணமாக தமிழக அரசியல் கட்சிகள் இலங்கை தமிழர் மீது என்றென்றும் தமது தார்மீக ஆதரவை காட்டத் தவறுவதில்லை.

அதிமுகவைவிட திமுக இலங்கை தமிழர்கள் மீது அதிக அக்கறை கொண்ட கட்சி என்ற எண்ணம் இன்றும் இருக்கிறது. அதன் ஒரு அம்சமாக முகாம்களில் இருக்கின்ற இலங்கை தமிழ் அகதிகளுக்கு குடியுரிமை வழங்க மத்திய அரசை நிர்ப்பந்திப்போம் என புதிய திமுக அரசு கூறி இருக்கிறது. மலையகத்தில் இருந்து சிறிமா சாஸ்திரி உடன் படிக்கையில் தாயகம் திரும்பிய பொன் ஜெயசீலன் என்பவர் கூடலூர் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராக தேர்வாகி இருப்பதால் இலங்கை தமிழ் அகதிகளின் குடியுரிமை உட்பட இலங்கை தமிழர் தொடர்பான விடயங்கள் இலங்கை இந்திய அரசுகளின் கவனத்தை எதிர் காலத்தில் ஈர்க்கும் என எதிர்பார்க்கலாம். புதிய திமுக அரசு முகாம்களில் 36 வருடங்களாக உரிமையற்று இருக்கின்ற இலங்கை தமிழ் அகதிகளின் குடியுரிமை, கல்வி, பொருளாதாரம், சுகாதாரம், வேலை வாய்ப்பு என அனைத்து விடயங்களிலும் அக்கறை கொள்வதுடன் இலங்கை தமிழ் மக்களின் உரிமை நலன் சார்ந்த அனைத்து விடயங்களுக்கும் குரல் கொடுக்க முன்வர வேண்டும் என்ற எதிர் பார்ப்பும் அனைவரிடமும் இருக்கிறது.

jeyasingh@thaiveedu.com

ஈழத்தமிழர் இனப்படுகொலை வரலாறும் ஒன்ராறியோ அறிவூட்டல் வாரச் சட்டமூலமும்

- நேரு குணரத்தினம்

சமீப வாரங்களாக ஈழத்தமிழர்களால் குறிப்பாகவும் உலகளாவிய தமிழ் மக்களாலும் அதிகம் பேசப் பட்ட விடயங்களில் ஒன்று - கனடாவில் தமிழர்கள் அதிகம் வதியும் அதேவேளை கனடாவில் அதிக மக்கள் வாழும் பாரிய மாகாணமான ஒன்ராறியோ பாராளுமன்றத்தில் தமிழ் இளையவரான பாராளுமன்ற உறுப்பினர் விஜய் தணிகாசத்தினால் கொண்டுவரப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட சட்டமூலம் 104 ஆன தமிழ் இனப்படுகொலை அறிவூட்டல் வாரச் சட்டமாகும்.

2009 முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை நினைவு நாட்களில் இவ்வாறான தமிழர் இனப்படுகொலைக்கு அங்கீகாரம் வழங்கும் சர்வதேச விடயம், அதுவும் சட்டமூலமாக நிறைவேற்றப்பட்டமை பெரும் மகிழ்ச்சி தரக்கூடிய விடயமே. ஒன்ராறியோ பாராளுமன் றத்தில் மே 6ம் நாள் வியாழக்கிழமை தனிநபர் சட்டமூலம் 104 மீதான 3ம் வாசிப்பைத் அடுத்து நடைபெற்ற விவாதங்களைத் தொடர்ந்து அனைத்துக் கட்சிகளும் ஏகோபித்து ஆதரவளிக்க அது சட்டமாக நிறைவேறியது.

ஸ்காபுரோ ரூச்பாக் தொகுதிக்கான ஒன்ராறியோ பாராளுமன்ற உறுப்பினரான தமிழ் இளையவர் விஜய் தணிகாசத்தினால் 2019 ஏப்ரல் 30ம் நாள் முதல்த்தடவையாக தனிநபர் சட்டமூலம் 104 ஒன்ராறியோ பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. அன்று அது முதல்வாசிப்பைத் தொடர்ந்து விவாதிக்கப்பட்டு ஏகமனதாக நிறை வேற்றப்பட்டது. அதன் பின்னர் 2019 மே 16ம் நாள் அது இரண் டாம் வாசிப்பிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு தொடர்ந்து நடை-பெற்ற விவாதங்களைத் தொடர்ந்து ஏகமனதாக அன்றி அதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து அது பாராளு மன்றக் குழுவின் பார்வைக்கு பாரப்படுத்தப்பட்டது.

தனிநபர் சட்டமூலங்கள் பெரும்பான்மையானவை இவ்வாறே முறைமைப்படுத்தப்படுபவை. இதன்பின்னர் ஆளும்கட்சியின் குறிப்பாக மாகாண முதல்வரின் அருட்கடாச்சம் கிடைத்தால் அது மூன்றாம் வாசிப்பையும் வாக்களிப்பையும் காணும். இல்லையேல் பாராளுமன்றக்குழுவிலேயே அது உயிரைவிட்டுவிடும். இவ்வாறு 2 வருடங்களாக சட்டமூலம் 104 பாராளுமன்றக்குழுவிலேயே தங்கிநின்றது.

ஒன்ராரியோ முதல்வர் டக் போட் அவர்கள் சமீபகாலமாக இச் சட்டமூலத்தை நிறைவேற்றித் தருவதாக தமிழ் மக்களிடையே நம்பிக்கையை ஏற்ப்படுத்தியிருந்த நிலையில் 2021 மே 5ம் நாள் எதுவித மாற்றங்களும் இன்றி தமிழ் இனப்படுகொலை அறிவூட் டல் வாரச்சட்டமூலம் 104 ஒன்ராறியோ பாராளுமன்றத்தில் மூன் றாம் வாசிப்பிற்கும் விவாதம் மற்றும் வாக்களிப்பிற்கும் என பாரா-ளுமன்றக்குழுவினால் பாரப்படுத்தப்பட்டது. திடுதிப்பென மறுநாள் மே 6ம் நாள் வியாழக்கிழமையே மூன்றாம் இறுதிவாசிப்பிற்கும் வாக்கெடுப்பிற்கும் என பாராளுமன்றத்தில் அது எடுத்துக்கொள் ளப்பட்டது.

இது குறித்து நடைபெற்ற விவாதத்தில் ஆளும் மற்றும் எதிர்கட் சியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் எதிர்க்கட்சித்தலை வர் அன்ரியா காவேட் உட்பட தமிழினப்படுகொலை குறித்தும் ஈழத்தமிழ் மக்கள் தொடர்ந்தும் எதிர்கொள்ளும் ஒடுக்குமுறைகள் உரிமை மறுப்புகள் குறித்தும் விரிவாக பேசினர். இச்சட்ட மூலத்தை நிறைவேற்றுவது ஒருவிதத்தில் தொடர்ந்தும் மறுக்கப்ப டும் பரிகாரநீதியாக அமையும் என்பதை வலியுறுத்தி தமது ஏகோபித்த ஆதரவை சட்டமூலத்திற்கு அனைவரும் வழங்கினர்.

சம்பிரதாயபூர்வமாக ராணியின் ஒப்பம் பெறப்பட்ட பின்னரே அது சட்டமாக பதிவில் நிரந்தரமாகும் என்ற நிலையில் ராணியின் ஒன் ராறியோ பிரதிநிதியான லெப்டினன் கவனர் எலிசபெத் டுவடெஸ் வெல் அம்மையார் மே 12ம் நாள் கையொப்பமிட ஒன்ராறியோ சட்டக்கோவையில் தனிநபர் சட்டமாக உத்தியோகபூர்வமாக இணைந்து கொண்டது.

அதில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:
Therefore, Her Majesty, by and with the advice and consent of the Legislative Assembly of the Province of Ontario, enacts as follows:

Tamil Genocide Education Week
1 (1) The seven-day period in each year ending on May 18 is proclaimed as Tamil Genocide Education Week.

Same

(2) During that period, all Ontarians are encouraged to educate themselves about, and to maintain their awareness of, the Tamil genocide and other genocides that have occurred in world history.

Commencement

2. This Act comes into force on the day it receives Royal Assent.

Short title

3. The short title of this Act is the Tamil Genocide Education Week Act, 2021.

இதன் பிரகாரம் ஒவ்வொரு வருடமும் மே 18ற்கு முந்திய ஏழு நாட்கள் ஒன்ராறியோவில் தமிழினப்படுகொலை அறிவூட்டல் வாரமாக பிரகடனப்படுத்தப்படும். இக்காலப்பகுதியில் தமிழினப்படுகொலை குறித்தும் உலகில் நடைபெற்ற ஏனைய இனப்படுகொலைகள் குறித்தும் அறிந்து கொள்ள ஒன்ராறியோ மக்கள் ஊக்குவிக்கப்படுகின்றனர். இதனை முறைமைப்படுத்தி இதற்கான முறைசார் வேலைத்திடங்களை முன்னெடுக்கும் பொறுப்பு ஒன்ராறியோ வாழ் தமிழ் சமூகத்தையே சாரும் என்பதை இங்கு வலியுறுத்தியாக வேண்டும்.

இது ஒரு தனிநபர் சட்டமூலமாதலால் அரசை இது எவ்வகையிலும் கட்டுப்படுத்தாது. அதனால் அரசு தானாக எதனையும் செய்யவேண்டிய தேவையில்லையாயினும் அதனை இணைத்து வாய்ப்புள்ள விடயங்களை முன்னெடுக்கும் சாத்தியங்களை கண்டறிந்து இணைந்து முன்னெடுப்பது சமூகத்தின் முன்னால் உள்ள இராஜதந்திர சவாலாகும்.

இச்சட்டம் உலகப்பரப்பில் ஏனைய நாடுகளிலும் நகரசபைகள் மாநகரசபைகள் மற்றும் மாகாண பாராளுமன்றங்கள் மத்திய பாராளுமன்றங்களில் தமிழினப்படுகொலையை அங்கீகரிக்க வைப்பதற்கான கதவை அகலத்திறந்து வலுவூட்டியுள்ளது என லாம். சட்டத்திற்கான முயற்சியை முன்னெடுத்த ஒன்ராறியோ பாராளுமன்ற உறுப்பினர் விஜய் தணிகாசலம் மற்றும் அதற்கு வலுவூட்டும் பின்புல முயற்சிகளை மேற்க்கொண்ட அனைவரும் பாராட்டுதல்களுக்கு உரியவர்களே.

வழமைபோல் புலத்திலும் ஈழத்தமிழர் செயற்பாடுகளை முடக்கிவிட கங்கணம் கட்டிநிற்கும் சிங்கள அரசும் அதன் கடுங்கோப்பு ஆதரவாளர்களும் இச்சட்டமூல முயற்சிக்கு எதிராகவும் இறுதிவரை கடும் யுத்தம் ஒன்றையே நடத்திமுடித்தனர். ஒரு கட்டத்தில் ஒன்ராறியோ அரசுடன் வர்த்தக உடன்படிக்கை ஒன்றை செய்து கொள்ள விரும்புவதாக வேறு புதிய வழியொன்றைத் திறக்க முயன்றனர். ஈற்றில், சட்டமாக பாராளுமன்றத்தில் நிறைவேறியவுடன் ராணியின் கையொப்பத்தை தடுத்துவிடலாம் என்ற நப்பாசையில் ஒன்ராறியோ வழக்காடு மன்றில் வழக்கு, கனடியத் தூதுவரை அழைத்து கொழும்பில் கடிதல் என வேறு முயன்று பார்த்தனர்.

ராணியின் கையொப்பம் இடப்பட்டு சட்டமானால் இலங்கைத் தீவில் நல்லிணக்க முயற்சிகள் பெரும் பாதிப்பிற்கு உள்ளாகும் என வேறு மிரட்டல். இந்நிலையில், முள்ளிவாய்காலில் அமைந்திருந்த நினைவுத்தூபி படைகளால் சேதமாக்கப்பட, இதுதானா உங்கள் நல்லிணக்க முயற்சி? என கொழும்பில் உள்ள கனடியத் தூதுவர் கேள்வி எழுப்பியது தான் கனடாவின் பதில் என்பதை கொழும்பில் உள்ளவர்கள் புரிந்து கொண்டார்களா? என்பது தான் கேள்வி.

2013ம் ஆண்டு மார்ச் மாதம் தமிழக சட்டசபையில் அன்றைய முதல்வர் ஜெயலலிதாவினால் கொண்டுவரப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானம் தமிழினப்படுகொலையை அங்கீகரித்தது. அதன் தொடர்ச்சியாக 2013ம் ஆண்டு டிசம்பர் 7 முதல் 10ம் நாள்வரை ஜேர்மனியின் பேர்கன் நகரில் கூடிய நிரந்தர மக்கள் தீர்ப்பாயம் தமிழ் மக்களுக்கு நடைபெற்றது இனப்படுகொலை தான் என ஆதாரங்களையும் ஆவணங்களையும் ஆய்ந்து தீர்ப்பளித்தது.

2015 பெப்பிவரி 10ம் நாள் வடமாகாணசபை நிறைவேற்றிய தீர்மானம் ஒன்றினூடாக தமிழினப்படுகொலை அம்மக்கள் சார்ந்து வெளிப்படுத்தியது. 2019ம் ஆண்டு கனடாவின் பாரிய மாநகர சபையான ரொரன்ரோ மாநகரசபை மே18ம் நாளை தமிழினப் படுகொலை நினைவு நாளாக பிரகடனப்படுத்தியது. அதேபோன்று அவ்வாண்டே பிராம்டன் நகரசபையும் மே 18ம் நாளை தமிழினப் படுகொலை நினைவு நாளாக பிரகடனப்படுத்தியது.

இவ்வாண்டு 2021 சனவரியில் யாழ் பல்கலைக்கழகத்தில் அமைந்திருந்த இனப்படுகொலை நினைவுத்தூபி கோத்தபாய அரசால் இரவோடு இரவாக இடித்தழிக்கப்பட்ட போது, நினைவுத்தூபியை இடித்தழிப்பதினூடாக ஒரு இனப்படுகொலை வரலாற்றை அழித்துவிட முடியாது எனக்கூறி தமது முதன்மை பூங்கா ஒன்றில் தமிழினப்படுகொலை நினைவுத்தூபி ஒன்றை அமைப்பதற்கான ஏகமனதான அங்கீகாரத்தை கனடாவின் பிரம்டன் நகரசபை தந்துள்ளது. இதன் தொடச்சியாகவே தற்போது ஒன்ராறியோ பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டம் அமைகிறது.

இவ்வாண்டு தமிழர் தாயகப்பூமியில் யாழ்ப்பாணம், மன்னார், திருமலை மற்றும் மட்டக்களப்பு கத்தோலிக்க ஆயர்கள் இணைந்து வெளியிட்ட அறிக்கையில் மே 18ம் நாளை தமிழினப்படுகொலை நாளாக விழித்தமை உலகளாவிய முயற்சிக்கு மேலும் பெரு வலுவூட்டியுள்ளது. ஆகவே ஐ.நாவைக் கடந்தும் உலக இனப்படுகொலை வரலாற்றில் தமிழினப்படுகொலையும் ஆணித்தரமாகப் பதிவு செய்யும் வாய்ப்பு இவ்வாண்டு மேலும் பிரகாசம் பெற்றுள்ளது என்றே கூறலாம். இதைவிட மேலும் உத்வேகத்துடன் புலம்பெயர் ஈழத்தமிழர் சமூகம் குறிப்பாக இணைய சமூகம் முயலுமானால் மேலும் வலுவான வெற்றிகள் தொலைவில் இல்லை என்பதே பெரும் நம்பிக்கை தரும் செய்தியாகும்.

nehru.g@thaiveedu.com

ரொறன்ரோ தமிழ்ச் சங்கம்

இணைய வழிக் கலந்துரையாடல்

நாள் : 04 ஜூன் வெள்ளிக்கிழமை 2021

நேரம் : இரவு 8:00 – 9:30 மணி (கனடிய ரொறன்ரோ)

நாள் : 05 ஜூன் சனிக்கிழமை 2021

நேரம் : காலை 1:00 – 2:30 மணி (இலண்டன்)
காலை 5:30 – 7:00 மணி (இலங்கை, இந்திய)
காலை 10:00 – 11:30 மணி(அவுஸ்திரேலியா சிட்னி)

நூல்களைப் பேசுவோம்

பேசுபவர் : பேராசிரியர் செ.யோகராசா

பேசு நூல்

உயிர்வாசம்

(எழுத்தாளர் தாமரைச்செல்வியின் நாவல்)

Zoom ID: 84777257162 Passcode: 554268

விலங்குகளுக்கு எதிரான போர்க்குற்றம்

- சுப்ரமணியம் ஜெயசீலன்

இந்தப் பிரபஞ்சத்தையே ஆளப் பிறந்த மனிதர் விண்ணையும் மண்ணையும் வெற்றி கொள்ளக்கூடிய பல்வேறு படைப்புக்களையும் கண்டுபிடிப்புக்களையும் வழங்கி, நாள் தோறும் வளர்ச்சிப் பாதையில் செல்கிறனர் என்பதில் எவ்வித வாதப் பிரதிவாதங்களும் கிடையாது. என்றாலும், மனித குலம் இன்னும் எத்தனை நூற்றாண்டுகள் கற்றுக்கொண்டாலும் இயற்கையை தன்னுடைய கடிவாளத்தில் கட்டுப்படுத்தும் செப்படிவித்தையை பூரணமாய் புரிந்துகொள்ளவே முடியாது எனலாம். மனிதரின் நாகரீக வளர்ச்சியின் ஒரு முனை எத்துணை பிரகாசமானதோ, மறு முனை அத்துணை அந்தகாரமானது, அந்த மறு முனைக்கு உதாரணமாக போரைக் கருதினால்... தாமும் அழிந்து இந்த பூமியின் ஏனைய ஜீவராசிகளையும் அழித்தொழித்து, இயற்கையை எதிர்த்து அதன் பெரும் சீற்றத்திற்கு ஆளாகி வருகின்றனர். நாம் காணும் பல இயற்கை அழிவுகள் மனிதரின் அறிவார்ந்த செயற்பாடுகளின் விளைவே என்றால் நம்ப முடிகின்றதா, ஆனால் அதுவே நிதர்சனம்.

இனம், மதம், மொழி, கொள்கை என்ற ஏதோ ஓர் அடிப்படையில் மனித குலத்திற்குள் மூண்டெழும் ஆயுதப் போராட்டங்கள், இராணுவ நடவடிக்கைகளினால் மானுட இனம் தவிர்ந்த மண்ணுலகின் ஏனைய விலங்குகள் மற்றும் இயற்கைக்கு ஏற்படும் அழிவுகளை எங்கு முறையீடு செய்வது? மனிதர் மீது மனிதர் செய்யும் கொடுரங்களை போர்க் குற்றம், இனச் சுத்திரிகரிப்பு, மனிதத்திற்கு எதிரான குற்றச் செயல் என்றெல்லாம் வகைப்படுத்துகின்றோம் இந்த மோதல்களில் ஒன்றுமறியாத விலங்கினங்களும் இயற்கையும் சிக்கித் தவிப்பதனை எப்படி வரையறுப்பது? இவற்றுக்காக யார் நியாயம் கேட்பது?

வாருங்கள் இந்த பத்தியில் விலங்கினங்களுக்கு எதிரான போர்க் குற்றச் செயல்கள் பற்றி சற்றே ஊடாடுவோம்.

போர், ஆயுத போராட்டங்கள் மற்றும் இராணுவ நடவடிக்கைகளினால் யானைகள், கொரில்லாக்கள், மறிமான்கள் உள்ளிட்ட சுமார் 200 வகையான விலங்குகள் அருகி வருகின்றன. சுவிட்சர்லாந்தின் ஜெனீவாவை மையாகக் கொண்டு இயங்கி வரும் இயற்கை வளங்களை காக்கும் சர்வதேச ஒன்றிய IUCN (International Union for the Conservation of Nature) அமைப்பு இது பற்றிய புள்ளிவிபரத் தகவல்களை வெளியிட்டுள்ளது. இயற்கைக்கு எதிராக போர்க் குற்றச் செயல்களில் ஈடுபடுவோருக்கு எதிராக தடைகள் விதிக்கப்பட வேண்டும் எனவும் இது தொடர்பிலான ஓர் பொறிமுறைமை உருவாக்கப்பட வேண்டுமெனவும் இந்த அமைப்பு பரிந்துரை செய்துள்ளது.

யுத்தம், காரணமாக வன விலங்குகள் உள்ளிட்ட உயிரினங்களில் பாதகமான தாக்கத்தைச் செலுத்துவதுடன் சில வகை உயிரினங்கள் அழிவடைவதற்கும் ஏதுவாகின்றது என, இயற்கை வளங்களை காக்கும் சர்வதேச ஒன்றியத்தின் தலைமை விஞ்ஞானி தோமஸ் புரூக்ஸ் (Thomas Brooks) தெரிவிக்கின்றார். யுத்தம் மற்றும் இராணுவ செயற்பாடுகளினால் அழிவடைந்து மற்றும் அருகி வரும் 219 உயிரினங்கள் தொடர்பிலான சிகப்பு பட்டியல் ஒன்றை இந்த அமைப்பு தயாரித்துள்ளது.

மோதல்கள் மற்றும் வளக்காப்பு என்ற தலைப்பில் அறிக்கையொன்று வெளியிடப்பட்டுள்ளது. யுத்தம் மற்றும் இதனால் ஏற்படக் கூடிய அழிவுகளிலிருந்து வளங்களை பாதுகாத்தல் என்பது குறித்து இந்த அறிக்கையில் விரிவாக விளக்கப்பட்டுள்ளது. வரலாற்று ரீதியான தரவுகளை அடிப்படையாகக் கொண்டு, மோதல்களின் போது விலங்கினங்கள் மற்றும் இயற்கை எவ்வாறு பாதிப்புக்கு உள்ளாகின்றது என்பது குறித்தும் ஆராயப்பட்டுள்ளது. யுத்த அபாயங்களின் போது எவ்வாறு இயற்கை வளங்களையும், உயிர்ப் பல்வகைமையையும் பேணிப் பாதுகாப்பது என்பது குறித்தும் இந்த அறிக்கையில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

வளங்களைப் பேணிப் பாதுகாப்பதில் முக்கிய பிரச்சினைகளில் ஒன்றாக போர் உள்ளிட்ட மோதல்களைச் சுட்டிக்காட்ட முடியும் என ஜெனீவாவை மையமாகக் கொண்டு இயங்கி வரும் பல்கலைக்கழகமொன்றின் வருகை விரிவுரையாளர் பேராசிரியர் பில் அடம்ஸ் குறிப்பிடுகின்றார். யுத்தத்தின் பின்னரான நிலைமைகளில் வனவிலங்குகள், காடுகள் உள்ளிட்டனவற்றை பேணிப் பாதுகாப்பதற்கு சொற்ப அளவிலான சந்தர்ப்பங்களே காணப்படுகின்றன எனவும் தெரிவிக்கின்றார். சில சந்தர்ப்பங்களில் சமாதான முனைப்புக்களின் ஊடாக இயற்கை வளப்பாதுகாப்பு முனைப்புக்களை முன்னெடுக்க முடிவதாகவும் தெரிவிக்கின்றார். தெற்கு ஆபிரிக்காவின் எல்லைப் பகுதி சமாதான பூங்காக்களை இதற்கான உதாரணங்களாக குறிப்பிட முடியும் எனக் கூறுகின்றார். குறிப்பாக தென் ஆபிரிக்கா, மொசாம்பிக் மற்றும் சிம்பாப்வே போன்ற நாடுகளில் சிவில் போரின் பின்னர் இவ்வாறு இயற்கை வளப் பாதுகாப்பு முனைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மனிதர்களுக்கு இடையிலான மோதல்களின் போது அனைத்து வகையான ஏனைய உயிரினங்களும் ஏதோ ஒரு வகையில் அச்சுறுத்தலுக்கு உள்ளாகின்றன என்றால் அது பிழையாகாது. மத்திய ஆபிரிக்காவின் கிழக்கு கொரில்லாக்கள் போர் காரணமாக அழிவடைந்துள்ளதாக தலைமை விஞ்ஞானி புருக்ஸ் தெரிவிக்கின்றார். கிழக்கு கொங்கோ ஜனநாயக குடியரசு மற்றும் ருவன்டாவில் இடம்பெற்ற போர் காரணமாக இந்த வகை கொரில்லாக்கள் அழிவடைந்துள்ளன. நேரடியாக கொரில்லாக்கள் கொல்லப்பட்டமை, உள்நாட்டு வனவிலங்கு பாதுகாப்பு நடவடிக்கைகளை மலினப்படுத்தல் மற்றும் வனவிலங்கு பாதுகாப்பு உத்தியோகத்தர்களை தண்டித்தல் ஆகிய வழிகளில் இவ்வாறு உயிரினங்கள் அழிவடைகின்றன என அவர் குறிப்பிடுகின்றார். சஹாலில் மறிமான்கள் போரில் நேரடியாக கொல்லப்பட்டுள்ளன, மத்திய ஆபிரிக்க குடியரசில் இடம்பெற்ற போரில் யானைகள் கொல்லப்பட்டுள்ளன. இன்னும் சற்றே பின்நோக்கிச் சென்றால் வியட்நாம் போரின் போது ஜவா ரக காண்டா மிருகங்கள் கொல்லப்பட்டதாக புருக்ஸ் உதாரணங்களை அடுக்கிச் செல்கின்றார். இந்த வகை விலங்குகள் தற்பொழுது இந்தோனேசியாவின் ஜாவா தீவுகளில் மட்டுமே வாழ்ந்து வருகின்றன.

பெரிய முலையூட்டி விலங்குகளைப் போன்றே மிகவும் சிறியவையும் அதிகம் பேசப்படாதவையுமான பல விலங்கினங்கள் போர் காரணமாக அச்சுறுத்தலுக்கு உள்ளாகி வருவதாக அவர் மேலும் குறிப்பிடுகின்றார்.

இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், ஆபிரிக்க நாடுகள், மத்திய கிழக்கு நாடுகள் உள்ளிட்ட இந்த பூமிப் பந்தின் பல நாடுகளி லும் மனிதரின் ஆயுதம் சார் போராட்டங்கள், போர்கள், வன்மு றைகளில் நேரடியாகவும் முறைமுகமான அடிப்படையிலும் இராட் சத விலங்குகள் முதல் சிறிய பூச்சியினங்களும், பெரிய விருட்சங் கள் முதல் சிறிய புல்லினங்கள் வரையும் அழிந்துள்ளதுடன், வர லாற்று சின்னங்களாக சில உருமாறிய சோகங்களும் இல்லா மலில்லை என்பதே யதார்த்தம்.

சிரியாவில் இடம்பெற்ற போர் காரணமாக மீன் வகைகள் அழிவ டைந்துள்ளன. குறிப்பாக சிரியாவில் கட்டுப்பாடற்ற எண்ணிக்கை யில் கிணறுகள் தோண்டப்பட்டதனால் மீன் வகைகளுக்கு பாரிய அச்சுறுத்தல் உருவாகியுள்ளது.

சிரியாவின் நகரங்களில் ஆயுதக் குழுக்கள் எறிகணைத் தாக்கு தல் நடத்தும் போது நீர் விநியோகக் கட்டமைப்புகள் சேதம டைந்து நீரைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலைமை உருவாகி யுள்ளது. இதனால் பொதுமக்களும் ஏனைய தரப்புக்களும் தாங் களாகவே கிணறு தோண்டி நீரைப் பயன்படுத்தி வருகின்றனர். இந்த நடவடிக்கைகளினால் நிலக்கீழ் நீர் வளம் பெரும் சவா லுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. தற்போதைய போர்க் குற்றவியல் சட்டங்களின் அடிப்படையில் மனிதருக்கு தீங்கு விளைவிக்க முயற்சித்தமை காரணமாகவும் வேண்டுமென்றே நீர் நிலைகளை அழித்தமைக்காவும் ஆயுதக் குழுக்களுக்கு எதிராக சட்ட நடவ டிக்கை எடுக்கப்பட முடியும் என்று கூறப்படுகின்றது.

ஆயுதப் போராட்டங்களின் போது உணவுக்காக நேரடியாக விலங்குகள் கொல்லப்படுகின்றன அல்லது சுற்றுச் சூழல் அழிவ டைவதனால் அந்தப் பாதிப்புக்களினால் உயிரினங்கள் அருகி வருகின்றன. போரில் ஈடுபட்டுள்ளோர் வன விலங்குகளைக் கடத்தி அதனை பணமாக்கும் சம்பவங்களும் சுட்டிக்காட்டப்பட வேண்டியவையாகும். நிலக்கண்ணி வெடிகள் உள்ளிட்ட போரு டன் தொடர்புடைய ஏதுக்களினாலும் பல வேளைகளில் விலங்கு கள் இறக்க நேரிடுகின்றது.

ஏற்கனவே குறிப்பிட்டது போன்று, போர் வன விலங்கு பாதுகாப்பு வலயங்களில் பாதக விளைவுகளை ஏற்படுத்துகின்றது. வனவி லங்கு பாதுகாப்பு அதிகாரிகள் கொல்லப்படும் துயரங்களும் அரங்கேறி வருவதாகக் புருக்ஸ் குறிப்பிடுகின்றார். போரினால் பதிவாகும் மனித உயிர்ச் சேதங்களுக்கு கொடுக்கப்படும் முக்கி யத்துவம் விலங்கினங்களுக்கு ஏற்படக்கூடிய அழிவுகளுக்கு கொடுக்கப்படுவதில்லை என்றும், இது பற்றி எவரும் கவனம் செலுத்துவதில்லை என்றும் புருக்ஸ் குறிப்பிடுகின்றார்.

சுற்றாடல் போர்க்குற்றச் செயல்கள்:

சுற்றுச் சூழலுக்கு எதிராகப் போர்க் குற்றங்களை இழைப்போ ருக்கு தடைகள் விதிக்கப்பட வேண்டுமென சர்வதேச இயற்கை வளக்காப்பு ஒன்றியம் தெரிவிக்கின்றது.

- மூலோபாய ரீதியில் காடுகளை அழித்தல்
- சூழல் கட்டமைப்பை அழித்தல்
- வன விலங்குகளை வேட்டையாடுதல்
- மரங்களை வெட்டுதல்
- இரசாயனங்களினால் சுற்றுச் சூழலுக்கு ஏற்படக்கூடிய ஆபத் துக்கள்
- ஒலியால் ஏற்படும் பாதிப்புகள்

போன்ற பல்வேறு வழிகளில் போர்கள், ஆயுதப் போராட்டங்களின் போது இயற்கையின் மீது போர்க் குற்றச் செயல்கள் இழைக்கப் படுவதாக IUCN அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எவ்வாறெனினும், இயற்கைக்கு எதிரான குற்றச் செயல்களில் ஈடு படுவோரை தண்டிப்பது என்பது முட்கள் நிறைந்த ஒரு சட்ட விவகாரமாகவே கருத வேண்டியுள்ளது. அண்மைய நாட்களில் சுற்றுச் சுழலுக்கு எதிரான குற்றச் செயல்களில் ஈடுபடுவோரை தண்டிக்குமாறு பிரயோகிக்கப்படும் அழுத்தங்கள் அதிகரித்துள் ளன.

சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் சூழல்கொல்லி (ecocide) - சுற் றுச் சூழலுக்கு தீங்கிழைப்போரை தண்டிக்கக் கூடிய விடயங்கள் உள்ளடக்கப்பட்ட போதிலும் அதனை காத்திரமான முறையில் நடைமுறைப்படுத்துவதில் பல்வேறு சிக்கல்கள் காணப்படுகின் றன. குறிப்பாக குற்றச் செயல்களை எவ்வாறு வரையறுப்பது, யார் மீது தடைகள் விதிப்பது, எந்த நீதிமன்றில் விசாரணை செய்து போன்ற கேள்விகளுக்கு இதுவரையில் தெளிவான விடை கள் கிடைக்கவில்லை.

சுற்றுச் சூழலுக்கு எதிரான போர்க் குற்றச் செயல்களை விசா ரணை செய்து தண்டிப்பதற்கு சில அடிப்படை ரீதியான மாற்றங் கள் கொண்டு வரப்பட வேண்டியது அவசியமானது என IUCN சுட்டிக்காட்டியுள்ளது.

ஐக்கிய நாடுகள் இழப்பீட்டு ஆணைக்குழுவின் அதிகாரத்தை அதிகரிக்க வேண்டும் என்பதுடன் சர்வதேச குற்றவியல் நீதிமன் றின் ஊடாக தண்டனை விதிக்கப்பட வேண்டுமெனவும் பரிந்துரை செய்துள்ளது. போர்களின் போது சுற்றுச் சூழலையும் பாதுகாக் கும் வகையில் ஜெனீவா பிரகடனத்தில் விடயங்கள் உள்ளடக்கப்

பட வேண்டுமென பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

சர்வதேச குற்றவியல் நீதிமன்றின் போர்க்குற்றச் செயல்கள் என்ற வரைவிலக்கணமானது ஜெனீவா பிரகடனத்தின் அடிப்படையில் தற்பொழுது அமைந்துள்ளது. சிவிலியன்களை சித்திரவதை செய்தல், பாலியல் குற்றச் செயல்கள், படுகொலைகள், சிறுவர் போராளிகளை ஈடுபடுத்துதல், கட்டடங்களை அழித்தல், கலாச்சார சின்னங்களை அழித்தல், நீர் விநியோகத்தை தடை செய்தல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் போர்க் குற்றச் செயல்களாக கருதப்படுகின்றது.

ஐக்கிய நாடுகள் இழப்பீட்டு ஆணைக்குழு 1991ம் ஆண்டு ஜெனீவாவில் நிறுவப்பட்டது. குவைட்டில் ஈராக்கிய படையினர் அத்து மீறி பிரவேசித்தமையினால் ஏற்பட்ட அழிவுகளுக்கு இழப்பீடு வழங்கும் நோக்கிலேயே இந்த நிறுவனம் முதலில் உருவாக்கப்பட்டது. சுற்றுச் சூழல் அழிவு தொடர்பிலும் இந்த ஆணைக்குழு 170 நட்டஈடுகளை வழங்கியுள்ளது. குறிப்பாக எண்ணெய்க் கிணறுகளை அழித்தல், எண்ணெய் வகைகளை கடலில் கலக்கச் செய்தல் என்பனவற்றுக்காக இவ்வாறு நட்டஈடு வழங்கப்பட்டது.

யுத்தங்களின் போது சுற்றுச் சூழலை பாதுகாக்கும் நோக்கில் 2013ம் ஆண்டு சர்வதேச சட்டமொன்று நிறைவேற்றப்பட்டது. சர்வதேச சட்ட ஆணைக்குழுவினால் இந்த சட்டம் நிறைவேற்றப்பட்டது.

எவ்வாறெனினும், போரின் போது இயற்கைக்கு ஏற்படுத்தப்பட்ட அழிவுகளுக்காக, விலங்கினங்களுக்கு ஏற்படுத்திய அழிவுகளுக்காக இதுவரையில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் தண்டனை எதனையும் விதித்ததில்லை.

இனச் சுத்திரிகரிப்பு, போர்க் குற்றச் செயல்கள் மற்றும் மனிதாபிமானத்திற்கு எதிரான குற்றச் செயல்கள் போன்றன தொடர்பில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றமத்தினால் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட போதிலும், சுற்றுச் சூழலுக்கு எதிரான குற்றச் செயல்கள் பற்றி தற்போதைய வரைவிலக்கணத்தில் தெளிவான உள்ளடக்கங்கள் கிடையாது.

இனச்சுத்திகரிப்பு சம்பவமொன்று தொடர்பில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் நியாயம் கோருவதனைப் போன்று இயற்கையை அழிப்பது தொடர்பில் ஆதாரங்களை சமர்ப்பித்து நியாயம் கோருவதில் பல்வேறு சவால்கள காணப்பட்டாலும், இவ்வாறான போர்க் குற்றச் செயல்களுக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியது மிகவும் அத்தியாவசியமாகின்றது.

இயற்கை அழிவுகளை போர்க் குற்றச் செயல்களாக பிரகடனம் செய்து சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதற்கு முன்னதாக அந்தந்த நாடுகளில் இயற்கையை அழிப்போரை குற்றவியல் சட்டங்களின் அடிப்படையில் தண்டிக்க வேண்டும் என IUCN தெரிவித்துள்ளது.

கொங்கோவில் இராணுவ நீதிமன்றில் சுற்றுச் சூழலுக்கு எதிராக குற்றம் இழைத்த படையினருக்கு அந்நாட்டு நீதிமன்றம் தண்டனை விதித்துள்ளது. கடந்த 2020ம் ஆண்டு ஜனவரி மாதம் 9ம் திகதி கேணல் Liwenge Eboko மற்றும் அவரது சில சாகக்ளுக்கு 16 மாத சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. கிழக்கு கொங்கோவில் அமைந்துள்ள விருங்கா வனவிலங்கு சரணாலயத்தில் விலங்குகளை படையினர் வேட்டையாடுவதனை தடுக்காத காரணத்தினால் இந்த தண்டனை விதிக்கப்பட்டது.

போர்களில் இடம்பெறும் சுற்றுச் சூழல் அழிவிற்கு எதிராக போர்க் குற்றச்செயல்களின் அடிப்படையில் சர்வதேச ரீதியில் நடவடிக்கை எடுப்பது தற்போதைக்கு சாத்தியமில்லை என்ற போதிலும், எதிர்காலத்தில் நடைமுறைச் சாத்தியமுடைய வழிமுறைகளை பின்பற்றி சட்ட நடவடிக்கை எடுக்கப்பட முடியும் என தலைமை விஞ்ஞானி புருக்ஸ் நம்பிக்கை வெளியிடுகின்றார்.

jeyaseelan.s@thaiveedu.com

இலங்கையில் கருக்கலைப்பும் சட்டப் பின்னணியும்

- கிரிஜா சிவகுமார்

2015ம் ஆண்டு மே 13ம் திகதி, இலங்கையில் - யாழ்ப்பாணம் - புங்குடுதீவில் பரிதாபகரமாகக் கொலை செய்யப்பட்ட வித்தியா சிவலோகநாதனை நாம் யாரும் மறந்திருக்கமுடியாது. புத்தகப்பை சுமந்து பள்ளி சென்ற அம்மாணவி கூட்டுப் பாலியல் வன்புணர்விற்கு ஆளாகி, கொலை செய்யப்பட்டு சடலமாக கண்டெடுக்கப்பட்ட அவலமறிந்து மனம் குமுறாதோர் யாருமில்லை. வித்தியாவிற்கு நீதிகோரி நாடு முழுவதிலும் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. அவ்விடயம் நாட்டில் ஒரு பேசுபொருளாயிருந்தது.

பாலியல் வன்புணர்வின் இறுதி விளைவாக மரணம் அமையும் போது மட்டுமே, பாதிக்கப்பட்டவர் பரிதாபத்திற்குரியவராகின்றார். எனினும், பாலியல் வன்புணர்வினால் பாதிக்கப்படுபவர்கள் உயிர் பிழைத்து, இச்சமூகத்தில் வாழ எத்தனிக்கும்பொழுது, அப்பாலியல் வன்புணர்வால் ஏற்பட்டிருக்கக்கூடிய பாதிப்புக்களை முற்றாகக் கலைந்துவிட்டு வழமைபோல வாழ்வதற்கு அவர்கள் அனுமதிக்கப்படுவார்களா? இலங்கையின் சட்டமும் சமுதாயமும் அதனை அனுமதிக்குமா?

2018ம் ஆண்டு இலங்கையில் மொத்தமாக 1,792 பாலியல் வன்புணர்வு வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. 2019ம் ஆண்டு மொத்தமாக 1,779 பாலியல் வன்புணர்வு வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருந்ததுடன் அவற்றுள் 1,490 வழக்குகள் சிறுவர்கள், அதாவது 18 வயதிற்கு கீழ்பட்டவர்கள் தொடர்பானதாகும். 2020ம் ஆண்டின் முதல் 15 நாட்களுக்குள் மாத்திரம் மொத்தமாக 200 பாலியல் வன்புணர்வு வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. இப்பாலியல் வன்புணர்வுகளினால் பாதிக்கப்படுகின்ற பெண்கள் எதிர்கொள்ளும் பாதிப்புக்கள் ஏராளம். உடல்ரீதியான பாதிப்புக்கள், உளவியல் பாதிப்புக்கள், சமூக ஒதுக்கல், தனிப்பட்ட வாழ்க்கையில் ஏற்படுகின்ற பாதிப்புக்கள் என இவற்றை அடுக்கிக் கொண்டே போகலாம். இவற்றுள், பாதிக்கப்பட்ட பெண்ணை மிகப் பாரதூரமாகப் பாதிக்கக்கூடிய விளைவொன்றாகவே 'பாலியல் வன்புணர்வின் விளைவாக கர்ப்பம் தரித்தல்' பார்க்கப்படுகின்றது. பாலியல் வன்புணர்விற்கு உட்பட்டோர் கர்ப்பம் தரிப்பதனைத் தவிர்த்துக் கொள்வதற்கான பல மருத்துவ வழிமுறைகள் காணப்படுகின்றபோதிலும், சாதாரண மட்டங்களில் வாழ்வோர் அவற்றை அறிந்து வைத்திருக்கின்ற அளவும், அவற்றை அணுகுவதற்கு உள்ள வாய்ப்புக்களும் மிகக்குறைவாகவே காணப்படுகின்றன. துரதிஷ்டவசமாக, பாலியல் வன்புணர்வினால் கர்ப்பம் தரிக்கின்ற சிறுமிகள் மற்றும் பெண்கள், அதேபோல இயற்கைக்கு முரணான குடும்ப உறவுகளால் கர்ப்பம் தரிக்கின்ற சிறுமிகள் மற்றும் பெண்கள், 'அப்பிள்ளையைப் பெற்றே தீர வேண்டும்' என்ற நிர்ப்பந்தத்திற்கு ஆளாகின்ற வகையில் இலங்கையின் சட்டக் கட்டமைப்பு அமைந்திருப்பது வேதனைக்குரியதே!

இலங்கையில் கருக்கலைப்பு தொடர்பான சட்டம் இலங்கையின் தண்டனைச் சட்டக் கோவையினூடாக ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. தண்டனைச் சட்டக் கோவையின் பிரிவு 303 முதல் பிரிவு 307 வரையான ஏற்பாடுகள் கருக்கலைப்பு பற்றிய சட்ட நிலைப்பாட்டினைத் தெளிவுபடுத்துகின்றன. இலங்கையில், 'தாயின் உயிருக்கு ஆபத்து' என்ற ஒரேயொரு சந்தர்ப்பத்தில் மாத்திரமே கருக்கலைப்பு சட்டரீதியாக அனுமதிக்கப்படுகின்றது. ஏனைய அனைத்து சந்தர்ப்பங்களிலும் கருக்கலைப்பு சட்டமுரணான செயலாகவும் தண்டனைக்குரிய குற்றமொன்றாகவுமே கருதப்படுகின்றது. கருவுற்றிருக்கும் பெண் அக்கருவினைக் கலைத்தாலோ அல்லது வேறு யாரேனும் அக்கருவினைக் கலைத்தாலோ அது மூன்று வருட சிறைத்தண்டனை வழங்கப்பட வேண்டிய ஒரு குற்றவியல் குற்றமாகக் காணப்படுகின்றது. எவ்வாறெனினும், கருவிலுள்ள குழந்தையின் அசைவுகளைத் தாய் உணரக்கூடிய காலப்பகுதிக்கு பின்னர் அக்கரு கலைக்கப்படுமாயின், சிறைத்தண்டனைக்கான கால அளவு ஏழு வருடங்களாகும்.

> **பாலியல் வன்புணர்வு என்பது உடல்ரீதியாக மட்டுமன்றி உளரீதியாகவும் பெண்களை மிகப் பாரதூரமாகப் பாதிக்கின்ற குற்றச் செயலாகும். இக்குற்றத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணமளிக்க வேண்டுமேயன்றி, அக்குற்றத்தின் விளைவினை காலம் முழுதும் அனுபவிக்கும்படி கட்டாயப்படுத்துதல் எவ்விதத்தில் நியாயமாகும்?**

கருக்கலைப்பு தொடர்பான இலங்கையின் சட்ட ஏற்பாடுகள் 1883ம் ஆண்டு தண்டனைச் சட்டக்கோவை அறிமுகப்படுத்தப்பட்ட போது உட்சேர்க்கப்பட்டவையாகும் என்பதுடன் அதன் பின்னர் எவ்விதமான மாற்றங்களுக்கும் உட்படுத்தப்படவில்லை. காலத்தின் வளர்ச்சிக்கேற்ப சட்டங்கள் இற்றைப்படுத்தப்பட வேண்டியது இன்றியமையாததொன்று என்றபோதிலும், கருக்கலைப்பு தொடர்பான சட்டங்களைப் புதுப்பிப்பதற்கான இலங்கையின் எந்தவொரு முயற்சியும் இதுவரையில் வெற்றியளிக்கவில்லை. தென்னாசிய பிராந்தியத்திலேயே ஆப்கானிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் போன்ற நாடுகளில் மட்டுமே கருக்கலைப்பு தொடர்பாக இது போன்ற இறுக்கமான சட்டங்கள் காணப்பட்டு வருகின்றன.

கருக்கலைப்பு மீதான சர்வதேச சட்ட நிலைப்பாடு:

சர்வதேச மனித உரிமைகளுக்கான சமவாயங்களுள் ஒன்றான, 'குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சமவாயத்தின்' (International Covenant on Civil and Political Rights) உறுப்புரை 6 ஆனது, 'உயிர் வாழ்வதற்கான உரிமையினை' உத்தரவாதப்படுத்துகின்றது. எவ்வாறெனினும், அவ் உறுப்புரைக்கான கருத்துரையில் (பொது கருத்துரை இலக்கம்-38), 'பாலியல் வன்புணர்வினால் மற்றும் இயற்கைக்கு முரணான குடும்ப உறவுகளினால் கர்ப்பம் தரிக்கப்படுகின்ற சந்தர்ப்பங்களில், கருக்கலைப்பிற்கான அனுமதி வழங்கப்பட வேண்டும்' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. சித்திரவதைக்கெதிரான சர்வதேச குழுவும், 'பாலியல் வன்புணர்வினால் பெண்கள் கர்ப்பமடைகின்றபோது அவர்களுக்கு கருக்கலைப்பிற்கான அனுமதி வழங்கப்பட வேண்டுமென்பதனை' வலியுறுத்துகின்றது. அவ்வாறன்றி, பாலியல் வன்புணர்வினால் பாதிக்கப்படுகின்ற ஒரு பெண்ணை அதன் விளைவாக பிறக்கவிருக்கின்ற குழந்தையைப் பெற்றெடுத்தே ஆக வேண்டுமென நிர்ப்பந்தித்தல் அப்பெண்ணை வாழ்நாள் முழுதும் சித்திரவதைக் குட்படுத்துவதாய் அமையுமென இக்குழு அடிக்கோடிட்டுக் காட்டியுள்ளது.

கருக்கலைப்பு மீதான ஏனைய நாடுகளின் நிலைப்பாடு:

கொலம்பியா, கானா, இஸ்ரேல், சிம்பாபே, தாய்வான், ருவாண்டா, எத்தியோப்பியா மற்றும் ஹொங்கொங் போன்ற பல நாடுகளில் பாலியல் வன்புணர்வினால் மற்றும் இயற்கைக்கு முரணான குடும்ப உறவுகளினால் கர்ப்பம் தரிக்கின்றபோது கருக்கலைப்பு அனுமதிக்கப்படுகின்றது. இவற்றுள், எத்தியோப்பியா மற்றும் கானா ஆகிய நாடுகளில் கருக்கலைப்பிற்கான அனுமதியினைப் பெறுவதற்கு பாலியல் வன்புணர்வினை சான்றுகளுடன் நிரூபிக்க வேண்டிய அவசியமில்லை. பாதிக்கப்பட்ட பெண்ணுடைய வாய்மொழிச் சான்றே பாலியல் வண்புணர்விற்கான போதுமான சான்றாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. இந்தியா மற்றும் பின்லாந்து போன்ற நாடுகளில் பாலியல் வன்புணர்வின் விளைவாக கர்ப்பம் தரிக்கின்றபோது கருக்கலைப்பு அனுமதிக்கப்படுகின்றது. கனடா, நியுசிலாந்து, தென்னாபிரிக்கா, யுக்ரேன், தாய்லாந்து, சுவிட்ஸர்லாந்து ஜேர்மனி போன்ற பல நாடுகளில் வேண்டுகோளொன்றினை விடுப்பதன்பேரில் கருக்கலைப்பு செய்துக்கொள்வதற்கு அனுமதிக்கப்படுகின்றது. அதாவது, எந்தவொரு காரணத்திற்காகவும் கருக்கலைப்பினை செய்துக் கொள்ளக்கூடியவகையில் இந்நாடுகளில் கருக்கலைப்பு சட்டபூர்வமானதாக்கப்பட்டுள்ளது. எவ்வாறெனினும், கருக்கலைப்பு செய்துக் கொள்வதற்கான கர்ப்பகால வாரத்தின் அளவு நாட்டிற்கு நாடு வேறுபட்டுக் காணப்படுகின்றது.

சர்வதேச மனித உரிமை சட்டங்கள் உயிர் வாழ்கின்ற உரிமைக்கான விலக்களிப்பாக 'கருக்கலைப்பினை' பாலியல் வன்புணர்வு போன்ற விதிவிலக்கான சந்தர்ப்பங்களில் ஏற்றுக்கொண்டுள்ளன என்பது மேலே கலந்துரையாடப்பட்டுள்ள ஒப்பீட்டு ஆய்வினூடாகத் தெளிவாகின்றது. பாதுகாப்பான மற்றும் சட்டபூர்வமான கருக்கலைப்பிற்கான உரிமையானது அடிப்படை மனித உரிமையொன்றாக பல்வேறு சர்வதேச மற்றும் பிராந்திய சமவாயங்களினால் பாதுகாக்கப்பட்டுள்ளதுடன், அதனைப் பல்வேறு நாடுகள் ஏற்றுக் கொண்டுள்ளன. கருக்கலைப்பிற்கான உரிமையானது பெண்களுடைய உயிர் வாழ்வதற்கான உரிமை, சுதந்திரத்திற்கான உரிமை, அந்தரங்கத்திற்கான உரிமை, இழிவான நடத்துகையிலிருந்து விடுபடுவதற்கான உரிமை மற்றும் பாரபட்சப்படுத்தப்படாதிருப்பதற்கான உரிமை என்பனவற்றுடன் நெருக்கமாகத் தொடர்புறுகின்றது.

இத்தகைய ஒரு பின்னணியில், 'தாயின் உயிருக்கு ஆபத்து' என்ற ஒரேயொரு சந்தர்ப்பத்தைத் தவிர ஏனைய அனைத்து சந்தர்ப்பங்களிலும் கருக்கலைப்பு சட்ட முரணானது என கூறுகின்ற இலங்கையின் குற்றவியல் சட்டம் பழமை வாய்ந்ததாகவும், சர்வதேச மனித உரிமைகள் நிலைப்பாட்டிற்கு முரணானதாகவும் மற்றும் பெண்களைப் பாரபட்சத்திற்கு உட்படுத்துவதாகவும் அமைந்துள்ளது.

பாலியல் வன்புணர்வு என்பது உடல்ரீதியாக மட்டுமன்றி உளரீதியாகவும் பெண்களை மிகப் பாரதூரமாகப் பாதிக்கின்ற குற்றச் செயலாகும். இக்குற்றத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணமளிக்க வேண்டுமேயன்றி, அக்குற்றத்தின் விளைவினை காலம் முழுதும் அனுபவிக்கும்படி கட்டாயப்படுத்துதல் எவ்விதத்தில் நியாயமாகும்? மதக் கோட்பாடுகளையும் தார்மீகங்களையும் காரணம்காட்டி கருக்கலைப்பு சட்டபூர்வமாக்கப்படுவதற்கு தமது எதிர்ப்பினைத் தெரிவிப்பவர்கள் நடைமுறை சூழ்நிலைகளைக் கொஞ்சம் கருத்திற்கொள்ள வேண்டும். நடைமுறை சூழ்நிலை என்னவென்றால், பதினெட்டு வயதைக்கூட பூர்த்தி செய்யாத பெண் பிள்ளைகள், தங்களைப் பெற்றெடுத்த தந்தைமாராலேயே கர்ப்பமாக்கப்படுகின்றனர் (இது கற்பனையல்ல, இலங்கையின் உண்மை!.)

kiriya.sivakumar@thaiveedu.com

சிந்தனைக் களம்
(இசை, நடனம்)

இணையவெளி உரை நிகழ்வும் கலந்துரையாடலும்.

(**Zoom ID:** 862 3686 1241 **Passcode:** 343792)

12 ஜூன் 2021 (சனிக்கிழமை) 9:00pm-10:30pm

(கனடா-ரொறன்ரோ)

(இலங்கை, இந்தியா - 13 ஜூன் 2021 ஞாயிற்றுக்கிழமை 6.30am-8:00am)
(சிட்னி - 13 ஜூன் 2021 ஞாயிற்றுக்கிழமை 11.00-12:30pm)

உரைத்தொடர் - 7

உரைப் பொருள்
கர்நாடக இசைமரபில் இராக ஆலாபனை

உரையாளர்
கலாநிதி சியாமளாங்கி கருணாகரன்

சிரேஷ்ட விரிவுரையாளர், கர்நாடக இசைத்துறை,
சுவாமி விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவகம்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.



Mega Financial Group

WE ARE PROVIDING A LIFETIME
FAMILY PROTECTION

SAVE BIG
ON COVERAGE FOR YOUR MOST PRECIOUS ASSET

OUR PRODUCTS AND SERVICES

- Life Insurance products
- Critical Illness Insurance
- Disability Insurance
- Dental & Drug Insurance
- Travel Insurance
- Non-Medical Insurance
- Mortgage Insurance
- RRSP's Investments
- RESP-Education Saving Plan
- Final Expense Products
  (Through Funeral Homes)

INDUSTRIAL ALLIANCE
Canada Life
Sun Life Financial
UL Mutual
OBF
LaCapitale
Assomption Life
RBC Insurance
Empire Life
Desjardins
Manulife Financial

www.megafinancial.ca

RAJ NADARAJAH
President & CEO
Dir: 416-666-1120
raj@megafinancial.ca

Office: 416-293 5559 • Fax: 416-293 9409
PH28 -4168 Finch Ave. E., Scarborough, ON., M1S 5H6

நினைவாற்றலைக் கூட்டும் பச்சை, செம்மஞ்சள் நிறக் காய், கனிகள்

- கனகசுந்தரம் முரளீதரன்

எமது முன்னோர்கள் உணவையே மருந்தாகப் பயன் படுத்தினார்கள் எனக் கூறப்படுவதனை நாம் அடிக் கடி கேட்டிருக்கின்றோம். தொழில்நுட்ப வளர்ச்சிக்கு முன்னதாகவே மனிதரின் அறிவாற்றலும் உடல் வலிமையும் போற் றத்தகு நிலையில் காணப்பட்டது என்றால் அது மிகையாகாது. தற்கால மானிட சமூகத்தைவிடவும் பண்டைய மனிதர்களின் உடல் மற்றும் உள ஆரோக்கியம் குறிப்பிடத்தக்களவு உயர் நிலையில் காணப்பட்டது. இவ்வாறான ஓர் நிலைமைக்கு அந்தக் காலத்து மக்கள் உட்கொண்ட உணவு வகைகளை நாம் சுட்டிக்காட்ட முடியும்.

அந்த வகையில் தற்காலத்தில் பழங்கள் மரக்கறி வகைகளை அதிகளவில் உட்கொள்வதனால் ஏற்படக்கூடிய உடல் ஆரோக் கிய நிலைமைகள் குறித்து நாம் இந்த பகுதியில் ஊடாடுவதற்கு எத்தனிக்கின்றோம்.

பழங்கள் மற்றும் மரக்கறி வகைகள் உணவில் அதிகளவில் சேர்த் துக் கொள்வோருக்கு நினைவாற்றல் குறைவது தடுக்கப்படுகின் றது என அண்மையில் முன்னெடுக்கப்பட்ட ஆய்வுகள் மூலம் தெரியவந்துள்ளது. மரக்கறிகள் மற்றும் தாவரங்களில் கரட-நொய்ட் (carotenoids) எனப்படும் தாவர வேதிப்பொருட்கள் காணப்படுகின்றன. இவை நினைவாற்றல் மங்குவதற்கு எதிராக தொழிற்படுகின்றன. எனினும் இந்தத் தாவர வேதிப் பொருட்கள் எவ்வாறு மனித மூளையைப் பாதுகாக்கின்றன என்பது குறித்த விஞ்ஞானப் பொறிமுறைமை இன்னமும் விரிவாகக் கண்டறியப்பட வில்லை.

நினைவாற்றலக்கு கரடனொய்ட் வேதிப்பொருள் மிக முக்கியமா னது என்பது புதிய ஆய்வுகள் மூலம் தெளிவாகியுள்ளது.

மருத்துவ ஊட்டச் சத்துகள் பற்றிய American Journal of Clinical Nutrition எனும் அமெரிக்க மருத்துவ சஞ்சிகையில் வெளியிடப் பட்டுள்ள ஓர் ஆய்வு அறிக்கையில் குறித்த விடயம் விபரிக்கப் பட்டுள்ளது. கரடனொய்ட் அதிகளவு செறிந்த உணவுப் பொருட்க ளைக் கூடுதலாக உட்கொள்வதன் மூலம் அல்சைமர் போன்ற நினைவாற்றல் வீழ்ச்சியடையும் நோய்கள் ஏற்படுவதனை வரைய றுக்க முடியும் என ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த வேதிப் பொருளானது பீட்டா மாச்சத்து மற்றும் பசையான புரதம் உருவாவதனை தடுக்கின்றது. இதன் மூலம் நரம்பணுக்கள் சேத மடைவது தடுக்கப்படுகின்றது.

கரடனொய்ட் என்றால் என்ன?

சிவப்பு, மஞ்சள், செம்மஞ்சள், கடும் பச்சை நிறங்களை உடைய பழங்கள், மரக்கறி வகைகளில் இயற்கையாகவே உருவாகும் கலவையாக இந்த கரடனொய்ட் என்ற வேதிப்பொருளைக் குறிப் பிட முடியும்.

உங்களது உணவில் பல்வேறு வழிகளில் பின்வரும் கரடனொய்ட் வகைகள் காணப்படுகின்றன.

- **பீட்டா கரடனொய்ட்** - கரட், வத்தாளை, மாங்காய்
- **லுடின்** - பசளி, பரட்டைக்கீரை, பெரும்பாளைக்கீரை
- **லிகோபென்** - தக்காளி சோஸ், தக்காளிச் சாறு, வத்தகைப் பழம்
- **பீட்டா க்ரைப்டோக்ஸ்ஆன்டின்** - உதாரணமாக பூசணிக் காய், பப்பாசிப்பழம்,தோடம்பழம்

அண்மைய ஆய்வு:

சிக்காகோவில் ஓய்வு பெற்றுக்கொண்ட சமூகத்தைச் சேர்ந்த 927 பேரிடம் ஆய்வாளர்கள் ஆய்வு நடத்தியுள்ளனர். இவர்களின் சரா சரி வயது 81 என்பது குறிப்பிடத்தக்கது. இந்த ஆய்வில் பங்கேற் றவர்களுக்கு அல்சைமர் நோய் ஏற்பட்டிருக்கவில்லை.

தொண்டர்கள் முழு அளவிலான உணவு முறை குறித்த வினாக் கொத்து ஒன்றை இவர்களின் வழங்கினர். ஆண்டு தோறும் நினைவாற்றல் பரிசோதனையும் நடத்தப்பட்டது. இந்த ஆய்வுகள் நடத்தப்பட்டிருந்த காலத்தில் 508 பங்கேற்பாளர்கள் காலமாகிவிட் டனர்.

ஒப்பீட்டளவில் கரடனொய்ட் குறைந்தளவு உட்கொள்பவரைவிட வும் இந்த வேதிப்பொருள் கொண்ட உணவு வகைகளை அதிக-ளவில் உணவில் சேர்த்துக்கொள்வோருக்கு அல்சைமர் நோய் ஏற் படக்கூடிய சாத்தியங்கள் 48 வீதத்தினால் குறைவு என ஆய்வா ளர்கள் தெரிவிக்கின்றனர்.

மரபணு, உடல் செயற்பாடுகள், ஏனைய ஆன்டிஒக்சிடான்ட் ஊட் டச்சத்துக்கள் என்பன உள்ளிட்ட அல்சைமர் நோய் ஏற்படக்கூடிய ஏனைய காரணிகளைக் கட்டுப்படுத்தி, உணவு தொடர்பில் முக் கிய கவனம் செலுத்தி இந்த ஆய்வு முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஆய்வில் பங்கேற்றவர்கள் உட்கொள்ளும் உணவு அளவீடு செய்யப்பட்டு அதன் அடிப்படையில் ஆய்வுகள் மேற்கொள்ளப் பட்டன.

வருடாந்த நினைவாற்றல் பரிசோதனை மற்றும் மருத்துவர்களின் கட்டமைக்கப்பட்ட பரிசோதனைகள் மூலமாக அல்சைமர் நோய் கண்டுபிடிக்கப்படுகின்றது.

அவதானிப்பு ஆய்வு முறையே இந்த ஆய்வின் பிரதான வரைய றையாகக் கருதப்படுகின்றது.

எவ்வளவு, எந்த உணவு?

இந்த ஆய்வில் பங்கேற்ற கரடனொய்ட் அதிகம் உட்கொண்டவர் களுக்கு நாள் ஒன்றுக்கு சுமார் 25 மில்லிகிராம் கிடைக்கப்பெற் றுள்ளது. கரடனொய்ட் அதிகம் காணப்படும் உணவுகளாக தக் காளி, தக்காளி சாறு, கரட், வத்தாளை, பசளி போன்ற உணவு-களை சுட்டிக்காட்ட முடியும்.

பச்சை இலை, காய்கறிகளில் அதிகளவில் லூடின் காணப்படு கின்றது. அரைக்கோப்பை பசளியில் 15 மில்லி கிராம் காணப்படு கின்றது. பரட்டைக்கீரையில் (kale), 12.5 மில்லி கிராம் காணப்படு கின்றது. சுவிஸ் சார்டில் (Swiss chard) (9.5 மில்லி கிராம் காணபப்டுகின்றது. சீமைப் பரட்டைக்கீரையில் (collards) 9 மில்லி கிராம் காணப்படுகின்றது. சீமைக் காட்டு முள்ளங்கியில் 5 மில்லி கிராம் காணபப்டுகின்றது. பூசணி வகைகள், பச்சை பியர்ஸ், ப்ரோகோலி போன்றன லூடின் உயிர்ச்சத்து கொண்ட உணவு வகைகளாகும்.

இந்த வகை உணவுகளில் அதிகளவில் லைகோபின் ஊட்டச்சத்து காணப்படுகின்றது. தக்காளிச் சாறு (ஒரு கோப்பையில் 22 மில்லி கிராம்), தக்காளி சூப் (ஒரு கோப்பையில் 26 மில்லி கிராம்), தங்காளி சோஸ் (அரைக் கோப்பையில் 17 மில்லி கிராம்) வத்த கைப்பழம் (ஒரு கோப்பையில் 7 மில்லிகிராம்) மற்றும் திராட்சை, கொய்யாப் பழங்களிலும் இந்தப் பொருள் அதிகளவில் காணப்ப டுகின்றது.

பீட்டா கரடனொய்ட் அதிகம் செறிந்துள்ள உணவு வகைகளாக கரட் சாறு, பூசணிக்காய், சமைத்த பசளிக் கீரை, சமைத்த கரட், சமைக்கப்பட்ட பரட்டைக்கீரை என்பனவற்றைக் குறிப்பிட முடியும். மஞ்சள் முலாம்பழம், பப்பாசி, மாம்பழம் போன்ற பழங்களிலும் கரடனொய்ட் செறிவாகக் காணப்படுகின்றது.

மூளையின் நலத்துக்கு அப்பால்...

கரடனொய்ட் அடங்கிய பழங்கள் மற்றும் மரக்கறி வகைகளை உணவாக உட்கொள்வதன் மூலம் நினைவாற்றல் உள்ளிட்ட மூளையுடன் தொடர்புடைய நோய்கள் குணமாவது மட்டுமன்றி இருதய நோய்களிலிருந்தும் எம்மை பாதுகாத்துக்கொள்ளலாம்.

லூடின் அடங்கிய பழங்கள் மற்றும் மரக்கறி வகைகளை அதிக-ளவில் உட்கொள்வதன் மூலம் கண் புரை நோய், விழித்திரைத் தேய்மானம் போன்ற கண்நோய்களிலிருந்து எம்மைப் பாதுகாத் துக்கொள்ள முடிகின்றது. குறிப்பாக, பழங்கள் மற்றும் மரக்கறி வகைகளை உட்கொள்வதன் மூலம் விழித்திரைத் தேய்மானம் எனும் கண்நோயிலிருந்து பாதுகாத்துக் கொள்ள முடிகின்றது.

லைகோபின் அடங்கிய உணவுப் பொருட்களை அதிகளவில் உணவில் சேர்த்துக் கொள்வதன் மூலம் சுக்கிலச்சுரப்பிப் புற்று நோயைக் கட்டுப்படுத்த முடியும் என ஆய்வாளர்கள் தெரிவிக்கின் றனர்.

இன்றைய அவசர உலகில் பல்தேசிய நிறுவனங்களின் விளம் பரங்களுக்கு அடிமைப்பட்டு, பதப்படுத்தப்பட்ட பல்வேறு உணவு, பானங்களை உண்டு உடல் உபாதைகளைத் தேடிக் கொள்வதனை விடவும், இயற்கை அன்னையின் அருங்கொடைக-ளாக இந்த காய், கனிகளை உட்கொண்டு ஆயுளை நீடித்துக் கொள்வதற்கு எத்தனிப்பதே சாலச்சிறந்த வழிமுறை.

மெய்ப்பாடம் - குருவிப் பயிற்சி

- பாதுசா ஆனந்தநடராசா

மெய்ப்பாட பயிற்சிகளில் ஒன்றான குருவிப் பயிற்சியைப் பற்றி இக்கட்டுரையில் குறிப்பிடவுள்ளோம். இப்பயிற்சியும், அக்காலச் சூழ்நிலையில் விலங்குகளை உற்றுக் கவனித்தல் மூலம் செய்யப்பட்ட பயிற்சி முறையாகும். இப்பயிற்சியின் செயல்முறையைக் கூர்ந்து கவனிப்போம் ஆயின் குருவி ஆனது நிலத்தில் குனிந்து தண்ணீர் குடித்துவிட்டு நிமிரும் நிலையைக் குறிப்பது போன்ற தோற்றத்தைக் கொடுப்பதனால், 'குருவிப் பயிற்சி' எனக் குறிப்பிட்டு உள்ளார்கள். இப் பயிற்சியைச் செய்வதற்கு உடற்பலம் மட்டும் போதாது. தன்னுடைய உடலின் எடையை கையாளும் திறன் உள்ளவர்களாகவும், பல பயிற்சிகளின் மூலம் உடலின் நெகிழ்வுத் தன்மையைப் பேணுபவர்களாகவும், நாள்தோறும் வெவ்வேறு பயிற்சிகளின் செயல் முறைகளில் அனுபவம் உள்ளவர்களாகவும் இருந்தால் மட்டுமே இந்தப் பயிற்சியைச் செய்ய முடியும்.

இப்பயிற்சியின் செயல்முறையை பார்ப்போமாயின், யோகாசனப் பயிற்சிகளில் செய்யப்படும் மலை ஆசனம், வீர ஆசனம், பாம்பாசனம், சிசுவாசனம் போன்ற ஆசனப் பயிற்சிகளை சேர்த்துச் செய்வது போன்ற பயிற்சி நிலையாகும். நாள்தோறும் யோகா ஆசிரியர்களால் பயிற்றுவிக்கப்படும் யோகாசனப் பயிற்சிகளில் இப்பயிற்சிகள் தவிர்க்க முடியாதவை ஆகவும், மிகவும் முக்கியமானவையாகவும், அதிக பயனைத் தரும் பயிற்சிகள் ஆகவும் விளங்கி வருகின்றன. எனவே, குருவிப் பயிற்சியை தலையிலிருந்து உள்ளங்கால் வரை மிகுந்த பயனளிக்கக் கூடிய ஒரு பயிற்சியாகக்கொள்ளலாம். இப்பயிற்சியைச் செய்வதன் மூலம் உடல் முழுவதற்குமான பயனைப் பெறமுடியும்.

இப்பயிற்சியின் முழுமையான விளக்கத்தினைப் பார்ப்போம்.

பயிற்சிக்குத் தயார்படுத்தல்:

குருவிப்பயிற்சிக்குத் தயார்ப்படுத்துவதற்கு வீராசனப் பயிற்சி நிலையிலிருந்து மலையா சனப்பயிற்சிக்குச் சென்று, மலை ஆசனப் பயிற்சியிலிருந்து இப்பயிற்சியைச் செய்ய வேண்டும்.

- கால்களை ஒன்றாகச் சேர்த்து கைகளைப் பக்கவாட்டில் வைத்து நேரான நிலையில் நிற்கவும்.
- முழங்கால்களை மடித்து புட்டப்பகுதியைக் குதிக்கால்களில் வைத்து கைகளை தொடைகளுக்கு மேல் வைத்து தலை, கழுத்து, தோள், முதுகுப் பகுதியை நேராக வைத்திருக்கவும்.
- உடலை முன்னோக்கி நீட்டி முழங்கால்களில் முழங்கைகளை தொட்டவாறு வைத்து கைவிரல்களை பரப்பியவாறு பெருவிரல்கள் நுனிப்பகுதியிரண்டும் தொட்ட நிலையில் நிலத்தில் வைத்து முன்நோக்கி ஒரு சாண் அளவுக்கு அளந்து வைக்கவும். கைப்பெரு விரல்களால் சின்ன விரல்கள் இரண்டையும் உள்ப்பக்கமாகத் தொட்டுகைப் பெருவிரல்களை சின்ன விரல்கள் இருந்த இடத்தில் வைத்து வெளிப்பக்கமாக அகட்டி வைக்கவும். விரல்களைச் சேர்த்து வைத்து இருக்கவும்.
- முழங்கைகளையும், முழங்கால்களையும் நீட்டி கால்ப் பாதங்களையும், உள்ளங்கைகளையும் நன்றாக நிலத்தில் அழுத்தி வைக்கவும். இடுப்புப் பகுதியை நன்கு மேல் நோக்கி உயர்த்தி மலை போன்ற தோற்றத்தில் உடலை வைத்திருக்கவும்.

இந்த மலை ஆசனப் பயிற்சி நிலையிலிருந்து குருவிப் பயிற்சியைச் செய்ய வேண்டும்.

குருவிப் பயிற்சியின் செயல்முறை:







- மலை ஆசனப் பயிற்சியிலிருந்து மூச்சை வெளிவிட்டவாறு கால் நுனி விரல்களை நிலத்தில் ஊன்றியவாறு முழங்கால்களை இரு பக்கமாகவும் இருக்கும்படி மடித்து குந்திய நிலையில் இருக்கவும்.
- பின் மூச்சை உள்ளே இழுத்தவாறு உடலை முன்பக்கமாக நீட்டி வயிற்றுப் பகுதியையும், நெஞ்சுப் பகுதியையும் நிலத்தை நோக்கி பதித்தவாறு தலையை இருகைகளுக்கும் இடையில் மூக்கு நிலத்தில்தொடுவது போன்று நிலத்திற்கு மிக அருகாமையில் முகப் பகுதியைக் கொண்டு சென்று நன்றாக முன்னோக்கி நீட்டி நன்கு மேலே உயர்த்தி மேலே பார்க்கவும்.
- மூச்சை வெளிவிட்டவாறு தலையைக் குனிந்து கீழ்நோக்கிப் பார்த்தவாறுமுழங்கை களையும் முழம் கால்களையும் நீட்டி மலை ஆசனப் பயிற்சி நிலைக்கு வரவும். இது பயிற்சியின்

ஒரு சுழற்சி ஆகும்.

பயிற்சியில் கவனத்தில் கொள்ள வேண்டிய நிலைகள்:
குருவிப் பயிற்சியில் முக்கியமானதாகக் கருதப்படும் நான்கு நிலைகளைக் கவனத்தில்கொண்டு மூச்சோடு சேர்ந்தவாறு பயிற்சி

யைச் செய்ய வேண்டும்.

- மலை ஆசனப் பயிற்சியில் இருந்து வரும் முறை.
- கால் நுனி விரல்களை நிலத்தில் ஊன்றி குந்தி இருந்த நிலை.
- இடுப்பை பதித்து உடலை முன்னோக்கி நீட்டிய நிலை.
- தலையை முன்னோக்கி கொண்டு செல்லும் நிலை.

முதலாவது நிலையான மலை ஆசனப் பயிற்சியிலிருந்து மூச்சை வெளி விட்டவாறு கைகளும் கால்களும் நிலத்தில் அழுத்தப்பட்ட நிலையில் இடுப்பு பகுதியை கீழ்நோக்கி கொண்டு செல்லவும். இரண்டாவது நிலையில் முழங்கால்களை மடிக்கும் பொழுது முழங்கால்களை நிலத்தில் வைக்காது இரு பக்கமாகவும் அகட்டி மடித்து இருக்க வேண்டும். கால் நுனி விரல்களை நிலத்தில் நன்கு ஊன்றிய நிலையில் வைத்திருத்தல் வேண்டும். இடுப் புப்பகுதி கீழ்நோக்கி இருக்கும். தலை குனிந்தவாறு வயிற்றைப் பார்த்தவாறு இருக்கும். இந்த நிலையில் கைகள் முன்னோக்கி நன்கு நீட்டப்பட்டு நிலத்தில் அழுத்தப்பட்டு இருக்கும். மூன்றா வது நிலையில் மூச்சை உள்ளே இழுத்தவாறு இடுப்பை கீழே பதிக்கும் பொழுது முதுகுப் பகுதி நெஞ்சுப் பகுதி வயிற்றுப்ப குதி நிலத்தை தொடும் அளவிற்கு கீழ்நோக்கி பின் முன்னோக்கி உயர்த்தப்படும் நிலையில் இருக்கும். தலையை இரு கைகளுக் கும் இடையில் முன்னோக்கி கொண்டு செல்லும் பொழுது மூக் கினால் நிலத்தைத் தொடுவது போன்று நிலத்திற்கு மிக அரு காமையில் முகப் பகுதியைக் கொண்டு சென்று மேலே பார்க்க வேண்டும். இந்த நிலையில் தலையை மேல் நோக்கி உயர்த்திப் பார்க்கும் பொழுது வயிற்றுப் பகுதி நெஞ்சுப் பகுதி முழுவதும் மேல் நோக்கி நீட்டி உயர்த்தப் பட்டிருக்கும்.

தோள்ப் பகுதி நன்கு பதித்து பின் நோக்கித் தள்ளியவாறு நெஞ் சுப் பகுதியானது விரிவடைந்த நிலையில் இருக்கும். தலையை உயர்த்தி மேலே பார்க்கும் பொழுது அடிவயிற்றுப் பகுதியில் இருந்து முதுகுப் பகுதி நெஞ்சுப் பகுதி முழுவதும் மேல் நோக்கி நன்கு இழுத்து நீட்டப்பட்டிருக்கும். நீட்டப்பட்டிருக்கும் கால்களை நிலத்தில் வைக்கக்கூடாது. கால் நுனி விரல்களினதும் உள்ளங் கைகளினதும் அழுத்தத்தில் உடல் இருக்கும். மூச்சில் நிலையை கவனித்து பயிற்சியைச் செய்ய வேண்டும். சில சுழற்சிகளுக்குப் பின், வீராசனத்தில் ஓய்வெடுக்க வேண்டும்.

பயிற்சியின் சுழற்சி எண்ணிக்கை:

இப்பயிற்சியை தொடர்ந்து மூன்று தடவைகள் முதல் பன்னிரண்டு தடவைகள் வரை செய்யலாம்.

மூச்சின் தன்மை:

பயிற்சியின் ஒவ்வொரு நிலையிலும் முயற்சியின் தன்மையை கவ னத்தில் கொள்ள வேண்டும். ஒவ்வொரு சுழற்சியிலும் சரியான மூச்சுவிடும் தன்மையை பின்பற்றிப் பயிற்சியைச் செய்வதால், பயிற்சியின் போது ஏற்படக்கூடிய களைப்பைத் தவிர்த்துக் கொள் ளலாம். அத்துடன் மேலதிகமான உடல்ப் பாரத்தை உணராது எளிமையாகச் செய்ய குறிப்பிடப்பட்டுள்ள மூச்சின் தன்மையை பின்பற்றினால் உதவியா இருக்கும்.

தொடக்க நிலையான மலை ஆசன நிலையில் இருந்து, மூச்சை உள்ளே இழுத்தவாறு குதிக்கால்களுக்கு மேல் இருக்கவும். மூச்சை அடக்கி உடலை நிலத்துக்கு அருகாமையில் பதித்து முன்னால் கொண்டுவந்து தலையையும் நெஞ்சையும் மேலே உயர்த்தவும்.
மூச்சை வெளியே விட்டவாறு மலை ஆசன நிலைக்கு வரவும். இவ்வாறு ஒவ்வொரு சுழற்சியிலும் மூச்சைப் பின்பற்றி பயிற்சியை செய்யவும். பயிற்சியின் முடிவில் வீராசன நிலையில் இருந்து மூச்சை ஓய்வுபடுத்தவும்.

பயிற்சியின் பொதுவான தவறுகள்:

- மலை ஆசனப் பயிற்சியில் இடுப்பை உயர்த்திய நிலையில் இருக்கும் பொழுது முழங்கால்கள் மற்றும் முழங்கைகளை மடிக்கக் கூடாது.
- முழங்கால்கள் மடித்துக்கொண்டு குந்தி இருக்கும் நிலையில் முழங்கால்கள் மற்றும் முழங்கைகளை நிலத்தில் வைக்கக்கூ டாது.
- குந்தி இருக்கும் நிலையில் கால்களை அகட்டிய நிலையில், முழங்கால்கள் பக்கவாட்டில் நோக்கி இருத்தல் வேண்டும், முழங்கால்கள் முன்னோக்கி இருக்கக்கூடாது.

- பயிற்சியில் முன்னோக்கிச் செல்லும் பொழுது முழங்கைகளை அகட்டி வைத்திருக்கக் கூடாது முழங்கை உடலோடு ஒட்டிய வாறு இருக்க வேண்டும்.
- தோள்களை உயர்த்தி வைத்திருக்கக்கூடாது.
- ஆசனத்துக்கு செல்லும்பொழுது கால் பாதங்கள் முழுவதையும் நிலத்தில் வைக்கக்கூடாது.

பயிற்சியின் பயன்கள்:
குருவி பயிற்சியின் செயல்முறையை பார்ப்போமாயின் உடலின் எல்லா உறுப்புகளும் செயல்படுத்தப்பட்டு உடல் முழுவதும் பய னைப் பெறுகின்ற ஒரு பயிற்சி என்றே கூறலாம்.

தசைக் கூட்டங்களின் செயல்பாடுகள் ஆனது உடல் முழுவதற் குமான செயற்பாடுகளுக்கு காரணமாக அமைகிறது.

நுணுக்கமான தசை அசைவுகள் உடலை வலிமைப்படுத்துவது டன், மூட்டுக்களை சீரான செயல்பாட்டில் வைத்திருப்பதற்கு உதவுகின்றது. மேலுடம்புப் பகுதி மட்டுமன்றி உடம்பின் கீழ்ப் பகுதியும் வலுவூட்டப்படுகின்றது. தசை நார்களை நீட்டிக்கும் பொழுது நெகிழ்வுத் தன்மையும், தசைநார்களை குறுக்கும் பொழுது வலுவூட்டலும் ஏற்படுகின்றது. வலுவான தோள்கள், முள்ளந்தண்டு பகுதி, நெஞ்சுத் தசைகள், கை தசைகள், வயிற்றுத் தசைகள், கால்த் தசைகள், முதுகுத் தசைகள், புட்டத் தசைகள், தொடைகள், கணுக்கால் கெண்டைக்கால் கால் விரல் கள் இவற்றின் செயல்பாடுகள் சீரான, வலுவான நிலையை வளர்க்க உதவுகிறது.

தோள்கள்:
இப்பயிற்சியில் தோள் பகுதி அதிக வலு ஊட்டப்படுகிறது. தோள்பட்டையானது எழுப்பி உயர்த்தப்படுவதனால் தோள்த் தசைகள் வலுவேற்றப்பட்டு (rhomboidmuscle) தோள்களின் பின் பக்கம் உள்ள தட்டையான தசைகள், (tricepsmuscle) தோள்க ளின் பின்பக்கம் உள்ள முத்தலை தசைகள் நன்கு இயக்கம் பெற்று அவற்றின் செயல்பாட்டுத் திறன் அதிகரிக்கப்படுகின்றது. கழுத்துக்கும், தோளிக்கும் இடைப்பட்ட தசை ஆனது திடமான தோற்றத்தையும், நல்லதொரு அமைப்பையும் பெறுகின்றது.



நெஞ்சுப் பகுதி:
நெஞ்சுப் பகுதியை நன்றாக அகட்டி விரிவுபடுத்தப்படுவதனால் நெஞ்சுப் பகுதியில் தசைகள் யாவும் விரிவடைந்து மூச்சின் கொள்ளளவு அதிகரித்து உடல் முழுவதற்கும் உயிர் சக்தி ஓட்டத் தினை அதிகரிக்கின்றது. இதனால் மூச்சு விடும் பிரச்சினைக ளுக்கு தீர்வு ஏற்படுகிறது.

வயிற்றுப்பகுதி:
வயிற்றுத் தசைகள் நன்கு இழுத்து நீட்டப்படுகின்றன. இதனால் ஊளைச் சதைகள், வயிற்றில் கொழுப்பு கரைக்கப்படுகின்றன. சமிபாட்டுத் திறன் அதிகரிக்கின்றது.

முதுகுத் தசைகள்:
முதுகுத் தசைகள் நன்றாக முன்நோக்கி நீட்டி இழுக்கப்படுகின் றன. இதனால் முள்ளந்தண்டு பகுதியின் நெகிழ்வுத் தன்மையை ஏற்படுவதற்குக் காரணமான பசை போன்ற திரவத் தன்மை அதி-கரிக்கப்படுகிறது. அத்துடன் முள் எலும்புகள் செறிவு ஊட்டப் பட்டு இலகுவாக வளைந்துகொடுக்கும் தன்மை அதிகரிக்கின்றது.

இடுப்பெலும்பு அசைவுகள் இலகுவாக்கப்படுகின்றது. புட்டப் பகுதி தசைகள், தொடைப் பகுதி தசைகள் கெண்டைக்கால் கணுக்கால் தசைகள் கால்விரல் தசைகள் இவற்றின் இயக்கமா னது எலும்புகள் மூட்டுக்களை நீட்டி வளைத்து எடுப்பதற்கு உத வுகின்றன.

இப்பயிற்சியில் கால்ப் பாதங்களின் அசைவுகள் முக்கியம் பெறு கின்றன. கால் பாதங்கள் விரிவு அடைவதுடன் கால் விரல்கள் நன்கு விரித்து நீட்டப்பட்டு வலிமை பெறுகின்றன.

தசைகளின் நீட்டி வளைக்கும் தன்மையினால் எலும்புகள் மூட் டுக்களின் இயக்கமானது நெகிழ்வுத்தன்மையுடனும், இலகுவாக வும் செயல்படுகின்றன. எலும்புகளின் திடத்தன்மை அதிகரிக்க படுகின்றது.

எலும்புகளைப் பிணைக்கும் தசை நார்கள் வலுவேற்றப்பட்டு நரம்புகள் யாவும் விரிவடைகின்றன.

பல தசைக் கூட்டங்களின் ஒருங்கிணைந்த செயல்பாட்டினால் உடலின் சக்தி நிலை அதிகரிக்கப்படுகிறது. இதனால் சகிப்புத் தன்மையுடன், வாழ்க்கையில் சவால்களை எதிர்நோக்கும் திறனும் அதிகரிக்கின்றது. இச்செயலால் சமச்சீர் பேணப்படுகின்றது.

இப்பயிற்சியினால் உடலில் வியர்வை நன்கு வெளியேற்றப்பட்டு உடலின் கெட்ட நீர் வெளியேறி கபத்தை குறைக்கின்றது. தோல் பிரச்சினைகளைத் சீர் செய்வதுடன் தோலில் ஏற்படும் கட்டிகள், வேனல் கட்டிகள் வராமல் தடுக்கின்றது.

பண்டைத்தமிழரின் மெய்ப் பாடப்பயிற்சிகளில் முக்கியமான பயிற்சியாக குருவி பயிற்சியும் இருந்து வந்துள்ளது என்பதனை இன்று வரை அறியக்கூடியதாக உள்ளது ஏனெனில், இன்றும் ஆதிக் கலையான சிலம்பக்க கலையில், முக்கிய உடற்பயிற்சிக-ளில் ஒன்றாக இப்பயிற்சியை கற்பித்து வருகின்றார்கள். அத்து டன் இப்பயிற்சியில் இடம்பெறும் அங்க அசைவுகள் ஆனது யோகாசனப் பயிற்சி முறைகளிலும் பின்பற்றப்பட்டு வருகின்றது.

குருவி பயிற்சியிலே மேல், கீழ் முன், பின் உடம்புகள் யாவும் செயல்படுத்தப்படுவதனால் அதிக பயனளிக்கும் ஒரு பயிற்சி யாக விளங்கி வருகின்றது. இலகுவாக இப்பயிற்சியை செய்துவிட முடியாது. பல பயிற்சிகள் செய்து உடலை வளைக்கும் தன் மையை அதிகரிப்பதன் மூலம் இப்பயிற்சியை செய்துவிட முடி யும். யோகா ஆசன பயிற்சிகளை செய்து நாள்தோறும் பழக்கப் பட்டவர்களுக்கு மெய்ப்பாடப் பயிற்சியான குருவிப் பயிற்சியை செய்வதற்கு இலகுவானதாக இருக்கும்.

pathusha@thaiveedu.com

●



1ST MORTGAGE SPECIALS

5 Year Variable 2.35%
5 Year Fixed 3.24%
*Some Conditions Applied, Please Call For More Details



2ND MORTGAGE SPECIALS

Up To 80% in GTA. 75% on other major cities.
No Income Verification.
No Minimum Credit Score.
Quick Closing
Rates from 7.99% to 12.99%

-digi Media Creations-

BonaFide Mortgage Solutions Inc.
the true freedom...
Brokerage Lic# 10216

TD Canada Trust · Scotiabank · Street Capital · First National Financial LP · MCAP · ICICI Bank · MERIX

Suren Nathan AMP
Mortgage Broker
License# M08004479

Dir. **416-436-1111**

Office. 416-548-7475 Fax: 416-548-7496
suren@bonafidemortgage.ca,
7 Eastvale Drive,Unit 203, Markham, ON, L3S 4N8

இடதுகைப் பாவனையாளர்கள்

- எஸ். பத்மநாதன்

சர்வதேச இடதுகை பாவனையாளர் தினமானது (International Left Handers Day) ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 13ம் திகதி உலகெங்கும் கொண்டாடப்பட்டு வருகின்றது. இச்செய்தி ஒருவேளை பலரும் அறியாத வியப்பான செய்தியாகக்கூட இருக்கலாம். இடதுகைப் பாவனையாளர்கள் லண்டனில் 1990ல் தம் உரிமைகளுக்காகவென ஒரு சங்கத்தினை உருவாக்கினர். இச்சங்கத்தின் பரிந்துரையின் பேரில் 1992ல் உலகெங்கிலும் உள்ள இடதுகைப் பாவனையாளர்கள் இணைந்து பல்வேறு கொண்டாட்டங்களைக் கொண்டாட ஆரம்பித்தனர்.

உலகெங்கிலும் இடதுகைப் பாவனையாளர்கள் பற்றிய ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த முற்பட்ட இவர்கள், இடதுகை விளையாட்டுப் போட்டிகள், விருந்துகள் என்பவற்றினை உலகெங்கும் முன்னெடுத்துவருகின்றனர். Lefty Zones என்ற அமைப்பினூடாக தங்கள் படைப்பாற்றலை வெளிப்படுத்த முனைகின்றனர்.

உலக சனத்தொகையில் ஏறக்குறைய 90 வீதமானவர்கள் வலதுகைப் பாவனையாளர்களாகவும் ஏனைய 10 வீதமானவர்கள் இடதுகைப் பாவனையாளர்களாகவும் உள்ளார்கள். இடதுகைப் பாவனையாளர்கள் குறைந்த அளவினர் என்றாலும் அவர்கள் சகல துறைகளிலும் பிரகாசிக்கின்றனர். வலது கைப்பாவனையாளர்கள் போன்று இவர்களும் சுறுசுறுப்பாக இயங்குகின்றனர். சிலர், இன்னும் அவர்களைவிட வேகமாகச் செயற்படுபவர்களாகவும் இருக்கக் காண்கின்றோம். உலகில் வெகுசிலரே இரண்டு கைகளையும் பாவிக்க கூடியவர்களாகவுள்ளார்கள். இவர்களை 'Mixed Handedness எனலாம். அத்துடன் 'Ambidexterity' எனவும் அழைக்கலாம்.

இடதுகைப் பழக்கம் என்பது பற்றி பல்வேறு ஆய்வுகள் உள்ளன. 'ஒரு குழந்தை கருவில் உள்ளபோதே இத்தன்மை உருவாகிவிடுகிறது' என ஆய்வுகள் கூறுகின்றன. 2013ல் நடைபெற்ற ஆய்வுகளில் 39 வீதமான பிள்ளைகள் 6 தொடக்கம் 14 மாதங்களிலும் 97 வீதமான பிள்ளைகள் 18 தொடக்கம் 24 மாதங்களிலும் தங்களது இடதுகைப் பழக்கத்தினை ஆரம்பித்து விடுவர் என கண்டறியப்பட்டுள்ளது. இவர்கள், விரல் சூப்புவதுமுதல் சகல தேவைகளுக்கும் இடது கையையே பயன்படுத்த தொடங்குவர். எடுத்ததற்கெல்லாம் வலதுகையைவிட இடது கையே செயற்படும். இதற்குக் காரணம் மூளையின் மாறுபாடான செயற்பாடாகும்.

பொதுவாக எமது மூளை இரண்டு பிரிவுகளாக (Chamber) உள்ளது. ஒவ்வொரு பக்கத்திற்கும் அதற்கென்று சிலவிசேட செயல்பாடுகள் உள. வலது பக்க மூளை சில பண்புகளைக் கொண்டிருக்கும். படைப்பாற்றல் (Creativity) உணர்ச்சி (Feeling) காட்சியுணர்வு (Perception) இசை (Music) பகற்கனவு (Day Dreaming) போன்றவற்றையுடையது. இடது பக்க மூளை தர்க்கம், ஆய்வு, கணிதம், மொழி, சிந்தனை, பாடல்வரிகள் போன்றவற்றை இயக்கும் சக்தி கொண்டது. இரண்டும் இணைந்தே எமது முழுமை தீர்மானிக்கப்படுகிறது. இதில் எது கூடியது, எது குறைந்தது என்று எதுவுமில்லை. இரண்டு பக்க மூளையும் சிறப்பாகச் செயற்படுபவர் நிறைந்த அறிவாளியாக இருப்பர்.

இடது பக்க மூளை ஒரு Digital சக்தி கொண்டதெனவும் கூறுவர். இடது பக்க மூளை வாசிப்பு, எழுத்து, கணிதம், தர்க்க சிந்தனை என்பவற்றைக் கொண்டிருப்பதால் வலது கைப்பாவனையாளர்களுக்கு அது உதவுகிறது. ஆனால் வலது பக்க மூளை அதீதமாக செயல்படுவதால் இடதுகைப் பழக்கமாகிறது. அதாவது வலது மூளைதிறன் இடதுகை பாவனையாளர்களை உருவாக்கிவிடுகிறது. இவர்கள் வலது கை பாவனையாளர்களைவிட வேகமாக எழுதுவார்கள். ஓவியம் வரைதல், நேராகக் கோடிடுதல் போன்ற நுணுக்கமான வேலைகளை சீராகச்செய்வார்கள். சுருக்கமாக வலதுகை பாவனையாளர்களைப் போல சகல வேலைகளையும் சாதாரணமாகச் செய்வார்கள்.

இடதுகை பாவனையாளர்கள் சில சூழ்நிலைகளில் தாழ்வு மனப்பான்மையுடன் இருக்கின்றனர். ஆனால் உண்மையில் அவர்கள் அதிக சிறப்புடையவர்களாக உள்ளனர். உலகில் உள்ள பல்வேறு விளையாட்டுக்களில் இவர்கள் பிரகாசிக்கின்றனர். சிலவேளைகளில் இவர்களுக்கென விசேட கையுறைகள் தயாரிக்கப்படுகின்றன. மல்யுத்தம், டென்னிஸ் விளையாட்டுக்களிலும் பல சிறந்த வீரர்கள் உள்ளனர். பல விளையாட்டுக்களில் சிறப்புற்றாலும் சில விளையாட்டு விதிகளை இவர்களால் பின்பற்ற முடியாது. அதே வேளையில் இவர்கள், மதிநுட்பமுடையவர்கள், படைப்பாற்றல் உள்ளவர்கள் எனவும் நம்பப்படுகிறது.

அதேவேளை, அதிகமான குற்றவாளிகள் இடதுகைப் பாவனையாளர்களே என்றும் கூறப்படுகிறது. உளவியலாளர் Theodore Black என்பவர் 1977ல் கூறியுள்ள ஒரு கருத்து என்னவென்றால், முரண் மூளை (Schizophrenia) நோய், மற்றும் 'Trigrain' எனப்படும் ஒற்றைத்தலைவலி போன்ற நோய்கள் இவர்களுக்கு அதிகம் என்கிறார்.

உண்மையில் இடதுகை பாவனையாளர்களின் மரபணு பற்றிய முழுமையான ஆய்வுத் தரவுகள் இதுவரை கிடைக்கப் பெறவில்லை. சில அறிஞர்கள் இடது பக்க கையை பாவிப்பதனை மரபணுவுடன் தொடர்புபடுத்துகின்றனர். இதனால் சிறிய பிள்ளைகளுக்கு ஏற்படும் Dyslexia போன்ற சில மனக்குழப்பங்களும் இடதுகைப் பாவனை உள்ளவர்களுக்கே அதிகம் என ஆய்வுகள் உள. அதே வேளையில் இடதுகை பாவனையாளர்களுக்கு மூட்டுவலி, குடற்புண் ஏற்படுவது குறைவாகும். பெற்றோர்கள் இருவரும் இடதுகை பாவனையாளர் என்றால் பிள்ளைகளும் அவ்வாறு இருக்க சந்தர்ப்பம் உள்ளது.

American Journal of Psychology என்ற சஞ்சிகை, இடதுகைப் பாவனையாளரிடம் சிறந்த ஓவியக்கலை அதிகம் உள்ளதெனவும் விரிமுறை சிந்தனை (Divergent- Thinking) அதிகம் உள்ளதெனவும் கூறுகின்றது. அதேவேளையில் இவர்கள் வலதுகைப் பாவனையாளர்களைவிட 10 வீதம் சம்பளம் குறைவாக பெறுவதாகவும் கூறப்பட்டுள்ளது. ஆனால் இதற்கு மாறாக, அமெரிக்க ஜனாதிபதிகள் வாழ்வு வேறுவிதமாக உள்ளது. அமெரிக்காவின் ஜனாதிபதிகளில் பலரும் கூட இடதுகை பாவனையாளர்கள். George as Dubey, Gerald Ford, Bill Clinton, Barack Obama என்ப் பலர் இதில் அடங்குவர். இதே வேளையில் ரொனால்ட் றீகனும் இடதுகை பாவனையாளராக பிறந்தவர் எனவும் இளமையில், ஆசிரியர்கள் அவரை வலதுகை பாவனைக்கு மாற்றியமைத்தார்கள் என



வும் கூறப்படுகிறது. நெதர்லாந்து ஆய்வு ஒன்று இடது கை அரசியல்வாதிகள் சிறந்த பேச்சாளர்களாக இருப்பார்கள் என்கிறது.

உலகில் சிறந்த கோல்ப் (Golf) விளையாட்டு வீரர் Phil Mickelson, டென்னிஸ் வீரர் Rafael Nadal எல்லோரும் இடதுகை பாவனையாளர்களே. இடதுகை பாவனையாளர்கள், அதிகம் பயப்படுபவர்களாகவும், எதிர்மறையான உணர்வு உள்ளவர்களாகவும் இருந்துள்ளனர். 12 நாடுகளில் 25,000 பேரிடம் மேற்கொண்ட ஆய்வில் இம்முடிவு வெளியானது. ஒசாமா பின்லேடன் (Osama Bin Laden)உம் ஓர் இடதுகைக்காரர். இதேவேளையில் சென்ற். லோறன்ஸ் பல்கலைக்கழகம் நடத்திய IQ எனப்படும் நுண்மதிப் போட்டிப் பரீட்சையில் இடதுகை பாவனையாளர்கள் பலர் 140க்கு மேல் புள்ளிகள் எடுத்துள்ளனர். பெஞ்சமின் பிராங்ளின், ஐசக் நியூட்டன், ஐன்ஸ்ரீன் ஆகியோரும் இடதுகை பாவனையாளர்களே. Tom Cruise, Paul Maccartney, Oprah Winfrey போன்ற சில பிர முகர்களும் இடது கை பாவனையாளர்களே. இடதுகை பாவனையாளர்களுக்கு அடிக்கடி தேவையற்றுக் கோபம் வரும் எனவும் கூறப்படுகின்றது.

1990களில் ஆரம்பிக்கப்பட்ட 'Left Handers Club என்ற அமையம் ஐக்கிய இராச்சியத்தில் (U.K) நிறுவப்பட்டதாகும். இவர்களது கருத்துப்படியும் இடதுகை பாவனையாளர்கள், சிறந்த விளையாட்டு வீரர்கள், சிறந்த மேதாவிகள், பணக்காரர்கள், சிறந்த நீச்சல் வீரர்கள், விரைவாகச் சிந்திப்பவர்கள், அதிக ஞாபகசக்தியுள்ளவர்கள், சிறப்பாக வீடியோ விளையாட்டு செய்பவர்கள், விரைவில் பக்கவாதம் ஏற்படாதவர்கள் என்பதுடன் சிறந்த ஓவியர்கள் எனவும் வரையறுக்கின்றனர். இதற்கு உதாரணம், லியனாடோ டாவின்சி, மைக்கல் ஆஞ்சலோ, றெம்பிராண்ட் ஆகியோரைக் குறிப்பிடுகின்றனர்.

நாம் அறிந்திராத வேறு பல உண்மைகளும் உள. அதாவது இவர்கள் மிக விரைவாக தட்டச்சு செய்வார்கள். வலது கையால் 450 வார்த்தைகள் தட்டச்சுச் செய்யும் வேளையில் இடது கையால் இவர்கள் 1000 வார்த்தைகள் தட்டச்சுச் செய்வார்களாம். சில மொழிகள் இவர்களுக்கு இலகுவானது. ஹீப்ரு, அரபிக் மொழிகளே அவை. ஹீப்ரு வலதுபக்கத்திலிருந்து இடது பக்கமே எழுதப்படும். இதனால் இது இவர்களுக்கு மிகவும் இலகுவானதாகும்.

இடதுகை பாவனையாளர்க்கென தனியான கோல்ப் (Golf) சங்கங்கள் உள்ளன. இவர்களுக்கென விசேடமான உபகரணங்கள் தேவைப்படுகின்றன. கனடாவிலும் Nike Golf Clubs, Kids Golf Gloves, Amazon, இப்படி பலஉள. இப்படி உலகெங்கிலும் இடதுகை பாவனையாளர்களுக்கு விசேட சலுகைகள் பல உள்ளன. இதுமட்டுமின்றி ஏனைய விளையாட்டுக்களில் இணைபவர்களுக்கும் கருவிகள் விசேடமாக வழங்கப்படுகின்றன. பல பொறியியலாளர்கள் இதற்காக புதிய கருவிகளை வடிவமைக்கிறனர். பொதுவாக இடதுகை பாவனையாளர்கள், எண்ணிக்கையில் குறைந்தவர்களாக இருந்தாலும் சமூகத்தில் அவர்களுக்கு உயரிய அந்தஸ்து உண்டு.

இடது கையால் மின்சார கிட்டார் (Electric Guitar) வாசிப்பவர்கள் அநேகம் பேர். இவர்களுக்கென தனியாகவடிவமைக்கப்பட்ட கருவிகள் உள்ளன. Electric to String Left - என்ற பெயருடன் பல நிறுவனங்கள் கிட்டார்களைத் தயாரிக்கின்றன. Left South paw Guitars நிறுவனம் இவர்களுக்கென பெரிய கிட்டார்களைத் தயாரிக்கின்றது. 'Anything Left Handed Co UK என்ற நிறுவனம் இவர்களுக்காக பல வருடங்களாக பெரிய நூல்நிலையத்தை நடத்தி வருகின்றது. அத்துடன் வர்த்தக நிலையம், பலவாறான விளையாட்டுச் சங்கம் என்பவற்றையும் இடதுகைப் பழக்கமுள்ள சிறுவர்களுக்கென தனியான ஒய்வு நிலையங்களையும் நடத்துகின்றது. இவர்களுக்கென தனியான செய்திதாள் கூட உள்ளது. தனிப்பட்ட கொள்கைகள், நண்பர்கள் இணைப்பு, வீடியோ காட்சிகள், பல வித பரீட்சைகள் என்பவற்றையெல்லாம் நடத்தி புகழ் பெற்றுள்ளது. அத்துடன் பல பரிசு பொருட்களையும் இவர்களுக்கு அனுப்பி உதவுகிறது. எந்த கேள்விக்கும் பதில் தருகிறது. பாட சாலைகளில் உள்ள இடதுகைப் பழக்க பிள்ளைகளையும் நேரே சென்று உற்சாகப்படுத்துகிறது.

ஐக்கியஇராச்சிய பிரின்ஸ் சார்ள்ஸ் ஒரு இடதுகை பாவனையாளர் என்பதால் தனது மகனையும் இடதுகை பாவனையாளராக மாற்ற ஆசிரியர்களை வேண்டி நிற்கிறார். இது எந்த அளவுக்கு சாத்தியமோ தெரியவில்லை. ஆனால் அவருக்கு அப்படி ஒரு ஆசை. இதே வேளையில் Left என்ற சொல்லுக்கு அகராதிகளில் சில விளக்கச்சொற்கள் குறிப்பிடப்படுவதால் பலர் வேதனைப்படுவர். பலவீனம், பிரச்சினை, சகிக்கமுடியாமை இப்படியெல்லாம் எழுதியுள்ளனர். லத்தீன் மொழியில் Left என்பது, ஏதோ பாவம் செய்தவர்போல் உள்ளது. எப்படியிருப்பினும் இடதுகைப் பாவனையாளர்களை எல்லோரும் ஒரு விநோதமாகவே பார்க்கின்றனர்.

பெண்களைவிட ஆண்களே இருமடங்கு இடது கைபாவனையாளர்களாவர். இதே வேளையில் ஒருவேதனையான செய்தி என்னவெனில் வலதுகை பாவனையாளர்களைவிட இடதுகை பாவனையாளர்கள் சராசரியாக 9 வருடங்கள் குறைவாக வாழ்கிறனர் என்பதாகும்.

இன்னொரு விநோதமான செய்தி, இடதுகைப் பாவனையாளர்களுக்கு தனியான நாட்காட்டிகளும் உண்டு. இதில் வாசிப்பதற்கு இலகுவாக திகதிகள் அமைக்கப்பட்டிருக்கும். இடதுகைப் பாவனையாளர்கள் கட்டக்கலை, கணிதம் போன்றவற்றில் சிறந்துள்ளனர். 'I May be Left Handed But I am always Right' என்ற வாக்கியம் பல இடங்களில் பாவிக்கப்படுகிறது. ரீசேட்ஸ், குவளைகளில் இவ்வாறு எழுதி தங்களை ஆற்றிக்கொள்கிறார்கள். இடதுகைப் பாவனையாளர்களுக்கு ஸ்கொலர்சிப் (Scholarships) வழங்கும் நிறுவனங்களும் உள.

பல பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் இடதுகைகளை பாவிப்பதாக மனம் வருந்துவர். ஆனால் இதனை யாராலும் மாற்றமுடியாது. வலது பக்க மூளை இடது பக்கத்தினை கட்டுப்படுத்த ஆரம்பித்தால் இதனை மாற்றவே முடியாது.

pathmanathan.s@thaiveedu.com

BUY OR SELL

PYRAMID GROUP
REAL ESTATE PROFESSIONALS
www.pyramidgroup.com

POWER BROTHERS REAL ESTATE

UTHAYAN SIVARAJAH BROKER 416.301.5555
RAJ SIVARAJAH BROKER 416.843.3333
KUMAR SIVARAJAH SALES REPRESENTATIVE 416.453.7777

@uthayansivarajah @uthayansivarajah

ROYAL LEPAGE ignite Realty, Brokerage
795 Milner Avenue, Toronto, ON M1B 3C3
Office: 416-282-3333 | Fax: 416-272-3333
INDEPENDENTLY OWNED AND OPERATED

INTEGRITY | KNOWLEDGE | SUCCESS | TEAMWORK

சரியாகத் தமிழறிவோம்!

எது சரி? ஏன் சரி?

4

- மாவிலி மைந்தன்
சி. சண்முகராஜா

கடந்த மாதங்களில் வெளிவந்த தாய் வீடு மாத இதழ்களில் 'சரி யாகத் தமிழறிவோம் - எது சரி, ஏன் சரி?' என்ற தலைப்பிலான கட்டுரையின் மூன்று பகுதிகள் இடம் பெற்றிருக்கின்றன. பகுதி மூன்றில் தமிழ் மொழியில் சொற்கள் புணர்ச்சி பெறுவதன் முக்கியத்துவம் பற்றி யும், புணர்ச்சி வகைகளில் ஒன்றான தோன்றல் விகாரப் புணர்ச்சி யில் வல்லினம் மிகும் இடங்கள் எவை என்பது பற்றியும் விபரித்-திருந்தேன். வல்லினம் மிகுந்து வரவேண்டிய இடங்களில் வல்-லினம் மிகாது எழுதுவதும் மிகாது இருக்க வேண்டிய இடங்களில் மிகுத்து எழுதுவதுமான தவறு தற்காலத்தில் பொதுவாகவே காணப்படுவது பற்றியும் அக்கட்டுரையில் குறிப்பிட்டிருந்தேன். வல்லினம் மிகும் இடங்கள் பற்றி அறிந்து கொள்வது எவ்வளவு முக்கியமோ அதுபோலவே வல்லினம் மிகா இடங்கள் பற்றியும் அறிந்து கொள்வதும் மிகவும் முக்கியமானது. ஆகவே வல்லினம் மிகாத இடங்கள் எவை என்பது பற்றி இக்கட்டுரையில் பார்க்க லாம். சென்ற மாதம் வெளிவந்த இக்கட்டுரையின் பகுதி 3ஐப் படித்தறிந்து கொள்வது இக்கட்டுரையைத் தெளிவாகவும் இலகு வாகவும் விளங்கிக் கொள்வதற்கு மிக உறுதுணையாக இருக்கும் என்பதையும் குறிப்பிடவிரும்புகிறேன்.

வல்லினம் மிகாத இடங்கள்:

முன்னைய கட்டுரையில் கூறியவாறு வருமொழி முதலில் க, ச, த, ப ஆகிய நான்கு வல்லெழுத்துகள் வருமிடங்களில் மட்டுமே அவற்றின் இனமான வல்லொற்று மிகும் என்பதை நாம் நினை வில் இருத்திக் கொள்ள வேண்டும். அந்த அடிப்படையில் எந் தெந்த இடங்களில் வல்லினம் மிகாதிருக்கும் என்பதையும் இங்கே பார்ப்போம்.

வருமொழி முதலில் 'க, ச, த, ப' இருக்கப் பின்வருமிடங்களில் வல்லினம் மிகுவதில்லை.

1. உயிரீற்று எழுத்து வரும் சொற்களான,

'அவ்வாறு, இவ்வாறு, எவ்வாறு' ஆகிய சொற்களின் பின் வல்லி னம் மிகாது.

எடுத்துக் காட்டு: அவ்வாறு பேசினார், இவ்வாறு சொன்னார், எவ்வாறு செய்தார் என எழுத வேண்டும். அவ்வாறுப் பேசினார், இவ்வாறுச் சொன்னார், எவ்வாறுச் செய்தார் என வல்லொற்று மிகுத்து எழுதுவது பிழையாகும்.

'அப்படிப்பட்ட, இப்படிப்பட்ட, எப்படிப்பட்ட' என்னும் சொற்களின் பின் வல்லினம் மிகாது.

எடுத்துக் காட்டு: அப்படிப்பட்ட செயல், இப்படிப்பட்ட கருத்து, எப்படிப்பட்ட பேச்சு என எழுதுவதுதான் சரி. அப்படிப்பட்டச் செயல், இப்படிப்பட்டக் கருத்து, எப்படிப்பட்டப் பேச்சு என வல்லொற்று மிகுத்து எழுதுவது பிழை.

'நேற்றைய, இன்றைய, நாளைய' என்னும் சொற்களின் பின் வல் லினம் மிகாது.

எடுத்துக் காட்டு: நேற்றைய செய்தி, இன்றைய கூட்டம், நாளைய தீர்ப்பு என எழுத வேண்டும். வல்லொற்று மிகுத்து எழு துவது பிழை.

2. ஒரு சொல் 'கள்' விகுதிபெற்றுப் பன்மை வடிவம் பெறும்போது வல்லினம் மிகாது. அங்கே வல்லினமெய் சேர்ப்பது பிழையானது. பல தமிழறிஞர்களே கூட இந்தப் பிழையை இழைப்பது பொது வாகவே காணப்படுவது கவலைக்குரியது.

எடுத்துக் காட்டு: கருத்துகள், வாழ்த்துகள், எழுத்துகள் என எழு-துவதே சரியானது. இந்த இடத்தில்தான் பலரும் தவறிழைக்கி றார்கள். கருத்துக்கள், வாழ்த்துக்கள், எழுத்துக்கள் என எழுதுவது முற்றிலும் பிழையானது.

இதற்கும் ஒரு விதிவிலக்கு இருக்கிறது. இரண்டு குறில் எழுத்து களாக ஒரு சொல் அமைந்து அதனுடன் 'கள்' விகுதி இணைந் தால் இடையில் வல்லொற்று மிகும்.

எடுத்துக் காட்டு: பசு + கள் - பசுக்கள், அணு + கள் - அணுக் கள், புழு + கள் - புழுக்கள். இந்த விதிவிலக்கைக் கவனத்தில் கொள்ளுங்கள்.

3. ஐகார ஒரெழுத்துச் சொற்களுடன் 'கள்' விகுதி இணையும் போதும் வல்லினம் மிகாது.

எடுத்துக் காட்டு: பை + கள் - பைகள், கை + கள் - கைகள்

4. வினைத்தொகையின் பின் வல்லினம் மிகாது. வினைத்தொகை என்பது ஒரு வினைச்சொல்லும் ஒரு பெயர்ச்சொல்லும் இணைந்த கூட்டுச்சொல். இதில் முதலில் வினைச்சொல் முற்றுப்பெறாது வந்து அதன் பின்வரும் பெயர்ச்சொல்லை மூன்று காலங்களாலும் குறிப்பால் உணர்த்தும்.

எடுத்துக் காட்டு: விரி + சுடர் - விரிசுடர், பாய் + புலி - பாய்புலி, ஊறு + காய் - ஊறுகாய் என இவை வல்லொற்று மிகாமலே வரும்.

5. உம்மைத் தொகையின் இடையே வல்லினம் மிகாது. 'உம்' என்னும் இடைச்சொல் மறைந்திருப்பது உம்மைத்தொகை எனப்ப டும். எடுத்துக்காட்டாக, காய்கனி என்பது, காயும் கனியும் என்பதைக் குறிப்பதாகும். காயும் கனியும் என்பதிலுள்ள 'உம்'

எனும் இடைச்சொல் மறைந்து காய்கனியாயிற்று.

எனவே காய்கனி, தாய்தந்தை, இரவுபகல் போன்ற உம்மைத் தொகையிடையே வல்லினம் மிகுந்து வராது என்பதைத் தெளிந்து கொள்வோம்.

6. இரண்டாம் வேற்றுமைத் தொகையின் பின் வல்லினம் மிகாது. வேற்றுமை உருபு மறைந்திருப்பது வேற்றுமைத் தொகை எனப் படும். கடையைத் திறந்தான் என்னும் தொடரிலுள்ள 'ஐ' உருபு மறைந்து வரும்போது கடை திறந்தான் என வரும். இதனை இரண்டாம் வேற்றுமைத் தொகைக்கு ஒரு எடுத்துக்காட்டாகக் கூற லாம்.

இவ்வாறு, சில எடுத்துக் காட்டுகளாகக் கதையைச் சொன்னார் - கதை சொன்னார் எனவும், புகழைப் பெற்றார் - புகழ் பெற்றார் எனவும் இரண்டாம் வேற்றுமைத் தொகை வருமிடங்களில் வல் லொற்று மிகாது வரும்.

7. மூன்றாம் வேற்றுமை விரியின் பின் வல்லினம் மிகாது. வேற் றுமை உருபுகள் வெளிப்பட்டு வரும் இடங்கள் வேற்றுமை விரி எனப்படும். அதாவது 'ஒடு, ஓடு' ஆகிய மூன்றாம் வேற்றுமை உருபுகள் வெளிப்பட்டு வரும் இடங்களில் வல்லினம் மிகாது.

எடுத்துக் காட்டு: சீதையோடு சென்றான், அவனோடு பேசினேன் என வல்லினம் மிகாது வரும். சீதையோடுச் சென்றான், அவ-னோடுப் பேசினேன் என்றவாறு எழுதுவது பிழை.

8. 'கொண்டு, இருந்து, உடைய' என்னும் சொல்லுருகளின் பின் வல்லினம் மிகாது.

எடுத்துக் காட்டு: அறிவைக்கொண்டு சிந்தி, மேலிருந்து குதி, என்னுடைய புத்தகம் என வல்லினம் மிகாது வரும்.

9. ஆறாம் வேற்றுமையாகிய 'அது' உருபு விரியின் பின் வல்லி னம் மிகாது.

எடுத்துக் காட்டு: என் + அது + திட்டம் - எனது திட்டம். புலி + இன் + அது + தோல் - புலியினது தோல்

10. வியங்கோள் வினைமுற்றை அடுத்து வல்லினம் மிகாது. வியங்கோள் வினைமுற்று என்பது வாழ்த்துதல், வைதல், வேண் டல், விதித்தல் ஆகிய நான்கு பொருளில் 'க, ய' என்னும் எழுத் துகளில் முற்றுப் பெற்றிருக்கும்.

எடுத்துக் காட்டு: கற்க கசடற, வாழிய செந்தமிழ் என வல்லினம் மிகாது வரும். கற்கக் கசடற, வாழியச் செந்தமிழ் என எழுதுவது பிழை.

11. விளித்தொடரை அடுத்து வல்லினம் மிகாது. விளித்தல் என் றால் அழைத்தல் என்பது பொருள்.

எடுத்துக் காட்டு: முருகா கேள், மகனே படி, கிளியே பேசு என வல்லினம் மிகாது வரும்.

12. 'அவை, இவை, எவை' என்னும் சொற்களை அடுத்து வல்லி னம் மிகாது.

எடுத்துக் காட்டு: அவை பறவைகள், இவை தடங்கள், எவை தெரியுமா?

அவை, இவை என்னும் சொற்கள் பிற சொற்களுடன் இணைந்து பின்னொட்டாக வரக்கூடிய இடங்களிலும் வல்லொற்று மிகாது.

எடுத்துக் காட்டு: போன்றவை பிறமொழிச் சொற்கள், ஆகியவை கணக்கிலில்லை

13. அது, இது, என்னும் சுட்டுச் சொற்களை அடுத்தும், 'எது, யாது' என்னும் வினாச் சொல்லுக்குப் பின்னும் வல்லினம் மிகாது.

எடுத்துக் காட்டு: அது கடை, எது கோயில், யாது கேட்டான்

14. 'அத்தனை, இத்தனை, எத்தனை' ஆகிய சொற்களின் பின் வல்லினம் மிகாது.

எடுத்துக் காட்டு: அத்தனை பேரும், எத்தனை கட்சிகள்

15. அளவுப் பெயரைச் சுட்டும் 'அவ்வளவு, இவ்வளவு, எவ்வளவு' ஆகிய சொற்களின் பின் வல்லினம் மிகாது.

ஒரு சொல் 'கள்' விகுதி பெற்றுப் பன்மை வடிவம் பெறும்போது வல்லினம் மிகாது. அங்கே வல்லின மெய் சேர்ப்பது பிழையானது. பல தமிழறிஞர்களேகூட இந்தப் பிழையை இழைப்பது கவலைக்குரியது.'

எடுத்துக் காட்டு: அவ்வளவு பெரியவனா? எவ்வளவு கொடுத் தான்?

16. பெயரெச்சத்தின் பின் வல்லினம் மிகாது. முடிவுபெறாத வினைச்சொல் பெயர்ச்சொல்லைக் கொண்டு முடிவது பெயரெச்ச மாகும்.

எடுத்துக் காட்டு: ஓடிய குதிரை, வரைந்த படம்

17. எதிர்மறைப் பெயரெச்சத்தின் பின் வல்லினம் மிகாது. எதிர்ம றைப் பொருளைத்தரும் வினையெச்சச் சொல் பெயர்ச்சொல்லைக் கொண்டு முடிவது எதிர்மறைப் பெயரெச்சமாகும்.

எடுத்துக் காட்டு: காணாத கண்கள், செல்லாத காசு

ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தின் பின் வல்லினம் மிகும்

தாய்வீடு இதழ் பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம்.
விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.

E-mail:info@thaiveedu.com
Fax: 1-416-849-0594 Tel:1-416-857-6406

என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

எடுத்துக் காட்டு: காணாக் கண்கள், செல்லாக் காசு

18. குறிப்புப் பெயரெச்சத்தின் பின் வல்லினம் மிகாது. காலத்தை உணர்த்தாது பண்பை மட்டும் உணர்த்தும் பெரிய, சிறிய, புதிய, அரிய போன்ற சொற்கள் குறிப்புப் பெயரெச்சம் எனப்படும்.

எடுத்துக் காட்டு: பெரிய கடை, முக்கிய செய்தி

19. எழுவாய்த் தொடரில் வல்லினம் மிகாது

எடுத்துக் காட்டு: கமலா பார்த்தாள், மழை பொழிந்தது

20. எட்டு, பத்து தவிர பிற எண்ணுப்பெயர் பின் வல்லினம் மிகாது.

எடுத்துக் காட்டு: மூன்று கண்கள், ஆறு படை

21. 'படி, மாறு' என்னும் சொற்கள் ஒரு சொல்லின் பின்னொட்டாக இணைந்து சொற்றொடரில் வரும்போது அதன்பின் வல்லினம் மிகாது.

எடுத்துக் காட்டு: கண்டபடி பேசினான், தருமாறு கேட்டேன்.

'அப்படி, இப்படி, எப்படி' ஆகிய சொற்களின் பின் வல்லினம் மிகும் என்பது முன்னைய கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது காண்க.

22. 'ண்டு, ந்து, ன்று' ஆகிய மூன்று மென்தொடர்க் குற்றியலுக ரங்கள் வினையெச்சமாக வரும்போது அவற்றின் பின் வல்லினம் மிகாது.

எடுத்துக் காட்டு: கண்டு கொண்டான், வந்து பார்த்தான், தின்று தீர்த்தான்

'ன்று' எனமுடியும் குற்றியலகரம் கன்று என்பதுபோலப் பெயர்ச் சொல்லில் வருமானால் அதன் பின் வல்லினம் மிகும்.

எடுத்துக் காட்டு: கன்று + குட்டி - கன்றுக் குட்டி. இந்தப் புற நடையை நினைவிற் கொள்ளுங்கள்.

23. ய்து என்னும் யகர மெய் பயின்று வரும் இடைத்தொடர்க் குற்றியலுகர வினையெச்சத்தின் பின் வல்லினம் மிகாது.

எடுத்துக் காட்டு: செய்து பாருங்கள், பெய்து தீர்த்தது

24. பல, சில ஆகிய சொற்களின் பின் பெயர்ச் சொற்கள் வரும் போது வல்லினம் மிகாது.

எடுத்துக் காட்டு: பல புத்தகங்கள், சில பூக்கள்

25. 'ஆ, ஓ' என்னும் வினா எழுத்துகளும் 'ஏ' என்னும் விளி எழுத்தும் இணைந்து வரும் சொற்களின் பின் வல்லினம் மிகாது.

எடுத்துக் காட்டு: அவளா சொன்னாள்?, இவனா செய்தான்? அவனே செய்தான்.

26. இரண்டு வடமொழிச் சொற்களை இணைத்து எழுதும்போது இடையே வல்லினம் மிகாது.

எடுத்துக் காட்டு: தேசபக்தி, ஞானபுத்திரன், கலாசாரம்

27. உயர்திணைப் பொதுப் பெயர்களின் பின் வல்லினம் மிகாது.

எடுத்துக் காட்டு: மாணவர் கூடினர், தொழிலாளர் தலைவன்.

28. வினைமுற்றுத் தொடரில் வல்லினம் மிகாது.

எடுத்துக் காட்டு: முழங்கின சங்குகள், வந்தது குதிரை

29. அடுக்குத்தொடர், இரட்டைக் கிளவி ஆகிய இரு சொற்களின் பின்னும் வல்லினம் மிகாது. அடுக்குத்தொடர் என்பது இரண்டு, மூன்று அல்லது நான்கு முறை ஒரு சொல் அடுத்தடுத்து வரு வது.

எடுத்துக் காட்டு: பார்பார், பாம்புபாம்பு. ஒவ்வொரு சொல்லை யும் பிரித்தால் பொருள் தரும். இச்சொற்களுக்கிடையில் வல் லொற்று மிகாது.

இரட்டைக் கிளவி என்பது இரட்டைச் சொல் எனப் பொருள்படும். இவை ஒலிக்குறிப்புச் சொற்கள். இரட்டைச் சொல்லைக் பிரிக்க முடியாது. ஒன்றாக நின்றுதான் பொருள் தரும். பிரித்தால் பொருள் தராது. இச்சொற்களுக்கிடையிலும் வல்லொற்று மிகாது.

எடுத்துக் காட்டு: சலசல, கலகல

இதுவரை வல்லினம் மிகா இடங்கள் எவை என்பதை அறிந்து கொண்டோம். எமது அன்றாட வழக்கில் பிழையாக வல்லொற்று மிகுத்தும், மிகாமலும் வழங்கும் சில சொற்கள் எவ்வாறு பொருள் வேறுபாடுகளைத் தோற்றுவிக்கின்றன என்பதை உங்கள் கவனத் துக்கு எடுத்துக்காட்டாக இங்கே தருகிறேன்.

தொலைபேசி என்பதே பொதுவாக வழக்கிலிருக்கிறது. அது பேசித் தொலை எனப் பொருள்படும். தொலைப்பேசி என்பதே தொலை தூரத்துக்குப் பேசும் கருவியைக் குறிக்கும் சரியான சொல்.

திருநிறை செல்வன் என்பதில் திருநிறை என்னும் சொல் மூன்று காலத்தையும் உணர்த்தும் வினைத் தொகையாகும். திருநிறை செல்வன் என்றால் செல்வம் நிறைந்த, நிறைகின்ற, நிறையப் போகின்ற செல்வன் எனப் பொருள்படும். திருநிறைச் செல்வன் என எழுதினால் செல்வத்தை நிறைத்து வைத்துள்ள செல்வன் எனப் பொருள்படும். திருமண அழைப்பிதழ்களில் திருநிறை செல் வன் என எழுதுவதே சரியானது. இதைப் போலவே திருவளர்ச் செல்வன் என்பதும் பிழையானது. திருவளர் செல்வன் என்பதே சரியானது. இவற்றைப் போலவே கீழேயுள்ள எடுத்துக்காட்டுக ளையும் பாருங்கள்.

நடுகல் என்பது நடும் கல், நட்ட கல் அல்லது நடப்படவுள்ள கல் என்பதைக் குறிக்கும். நடுக்கல் என்பது நடுவிலேயுள்ள கல் எனப் பொருளாகும். தமிழ் படி என்பது தமிழைப் படி எனவும், தமிழ்ப் படி என்பது தமிழிலுள்ள பிரதி எனவும் பொருள்படும். சின்னதிரை, சிறிய திரை என்பதையும், சின்னத்திரை, சின்னத்தை யுடைய திரை என்பதையும் குறிக்கும். கடைபிடி என வல்லொற்று இல்லாமல் எழுதினால் ஒரு கடையைப் பிடி எனப் பொருள் தரும். கடைப்பிடி என எழுதினால்தான் பின்பற்று என்னும் பொரு ளுக்குச் சரியான சொல்லாக இருக்கும்.

இவை சில எடுத்துக் காட்டுகளே. இவ்வாறே பல சொற்கள் வல் லினம் மிகுத்தும் மிகாதும் எழுதப்படுவதும் பேசப்படுவதும் பொது வாகவே வழக்கத்தில் வந்துவிட்டன. எனவே நாம் வல்லினம் மிகா இடங்களையும், மிகும் இடங்களையும் மிகக் கவனமாகப் படித்த றிந்து ஒற்றுப் பிழையில்லாமல் எழுதுவதற்கும் பேசுவதற்கும் நாம் முயற்சி செய்ய வேண்டும். சரியாகத் தமிழறிந்து எழுதுவோம். பேசுவோம். அதனால் நமது தேனினும் இனிய தமிழ் மொழி செழுமை குன்றாது வளர்ச்சி பெறும் என்பதும் திண்ணம்.

(இன்னும் வளரும்)

shanmugarajah@thaiveedu.com

"

BRING YOUR
PARENTS AND
GRANDPARENTS
WORRY FREE

Visit your one stop solution center
for all your super visa insurance needs...

SuperVisa.Today

www.supervisa.today #416 321 6000

குழந்தைகளோடு கொஞ்சம் பேசுங்கள்!

- என். கிருஷ்ணகுமார்

குழந்தைகள் பாடசாலை செல்லும் முதல் நாளிலிருந்து சிறப்பாக கல்விக் கற்கவேண்டுமென அனைத்து பெற்றோர்களுமே ஆசைப்படுவார்கள். பெற்றோர்களின் ஆசைபோலவே பல குழந்தைகள் சிறப்பாக கல்வி கற்பார்கள். எனினும், ஒருசில குழந்தைகள் சிரமப்படுவார்கள். குழந்தைகளிடையே காணப்படும் இந்த கற்றல் வேறுபாடுகள் பொதுவானது தான். கிராமங்கள் மற்றும் தோட்டப் புறங்களிலுள்ள பாடசாலைகளில் பொதுவாக ஒரே பிரதேசத்தில் வசிக்கின்ற பிள்ளைகளே கல்வி கற்பார்கள். இத்தகைய சந்தர்ப்பங்களில், அப்பிள்ளைகளுக்கிடையிலான கற்றல் வேறுபாடுகள் குறைந்தளவிலேயே காணப்படுகின்றபோதிலும், அக்கற்றல் வேறுபாட்டினை எளிதாக இனங்கண்டுக் கொள்ள முடியும். ஆனால், நகர்ப்புற பாடசாலைகளில் படிக்கின்ற பிள்ளைகளுக்கும் (Children in rich background), பின்தங்கிய பிரதேசங்களில் படிக்கின்ற பிள்ளைகளுக்கும் (Children with poor background and poor Socio-Economic Status) இடையிலான கற்றல் வேறுபாடு அதிகமாகக் காணப்படினும், அதனை இனங்கண்டு கொள்வது மிகக் கடினமாகும். பொதுவாக தேசிய மட்டத்தில் நடத்தப்படும் பொதுப் பரீட்சைகளின்போதே அது தெரியவருவதை அவதானிக்க முடிகிறது. நகர்புற பாடசாலைகளில் கூடிய பெறுபேறுகளும் பின்தங்கிய பிரதேச பாடசாலைகளில் குறைவான பெறுபேறுகளும் வெளிவருகிறது. இந்த வேறுபாட்டிற்கு செல்வாக்குச் செலுத்தும் பல காரணிகளுள் பிள்ளைகளின் வாய்மொழி விருத்தியும் ஒன்றாகும். எனவே பிள்ளைகளிடையே வாய்மொழி விருத்தியில் காணப்படும் வேறுபாடுகள் பற்றியும் அது பிள்ளைகளின் கல்வியில் ஏற்படுத்தும் தாக்கம் பற்றியுமே இந்தக் கட்டுரையில் கலந்துரையாட இருக்கிறோம்.

பிள்ளைகள் எவ்வாறு கற்றுக்கொள்கிறார்கள்?

குழந்தைகள் தாயின் கருப்பையிலிருக்கும்போதே கற்கத் தொடங்கிவிடுகிறார்கள் என்பதை நாம் அறிவோம். எனினும், மொழிக் கற்றலைப் பிள்ளைகள் தாம் பிறந்ததிலிருந்து அவர்கள் வாழும் சூழலுக்கேற்ப தனது தாய், உறவினர்கள் மற்றும் சுற்றத்தாரிடமிருந்து கற்றுக்கொள்கிறார்கள். பிள்ளைகளின் கற்றல் விருத்திக்கு அடிப்படையாயமைவது கேட்டல், பேச்சு, வாசிப்பு மற்றும் எழுத்து ஆகிய நான்கு மொழித்திறன்களேயாகும். இவற்றிலே கேட்டலும் பேச்சும் குழந்தை பிறந்ததிலிருந்தே விருத்தியடைய ஆரம்பித்துவிடும். வாசிப்பும் எழுத்தும் எழுத்துக் கற்றலுடன் ஆரம்பமாகின்றது. பிள்ளைகளின் வாய்மொழி விருத்திக்கு மேற்குறிப்பிட்ட நான்கும் உதவுகின்றதாயினும் அவற்றில் கேட்டலும் பேச்சும் முதன்மையானவையாகும்.

தன்னை சுற்றியிருப்பவர்கள் பேசுவதை ஒரு குழந்தை புரிந்து கொள்ள வேண்டுமாயின், அக்குழந்தைக்கு தான் செவிமடுத்த சகல சொற்களும் பொருள் தெரிந்த சொற்களாக இருப்பது அவசியம். அதேபோல தனது எண்ணத்தை பேச்சுமொழியின் மூலமாக வெளிப்படுத்த வேண்டுமாயின், அக்குழந்தைக்கு தேவையானளவு சொற்களஞ்சியம் வேண்டும். ஒருவர் தான் பேசுகின்ற மொழியில் தனக்குப் பொருள் தெரிந்த சொற்களின் தொகுப்பே சொற்களஞ்சியம் என வரைவிலக்கணப்படுத்திக்கொள்ளலாம். எனவே குழந்தைகள் தெரிந்து வைத்திருக்கும் அல்லது பயன்படுத்தும் சொற்களின் அளவே அவர்களின் வாய்மொழி விருத்தியைத் தீர்மானிக்கின்றது. அதிகமான சொற்களைத் தெரிந்து வைத்திருக்கும் பிள்ளைகள் மற்றவர்கள் பேசுவதை சிரமமின்றி புரிந்துகொள்வதுடன் தனது கருத்துக்களையும் சிரமமின்றி வெளிப்படுத்திவிடுவார்கள். அதேபோல அதிகமான சொற்களஞ்சியமுடைய பிள்ளைகளே தான் வாசிக்கும் விடயங்களை முழுமையாகப் புரிந்துக்கொள்வார்கள். அவர்களாலேயே சிறப்பாக எழுதவும் முடியும்.

பெற்றோர்கள் தங்கள் நேரத்தை அதிகமாகப் பிள்ளைகளோடு செலவிட்டு அவர்களுக்கு உதவியும் ஊக்கமுமளிக்கும்போது பிள்ளைகள் புலமை மிக்கவர்களாகுவார்கள் என்றும் இந்த வாய்ப்புக் கிடைக்காத பிள்ளைகளின் புலமை ஒப்பீட்டு ரீதியில் குறைவு என்றும் ஆய்வுகள் கூறுகின்றன.

பிள்ளைகள் தெரிந்துக்கொள்ளும் சொற்களின் அளவு:

குழந்தைகள் பிறந்து ஐந்தாவது மாதத்திலிருந்து தனியொலிகளை (அசைகள் - single-syllable sounds) எழுப்புவார்கள் என்றும், 9-12 மாதத்திற்குள் ஒருசில சொற்களைப் பேசுவார்கள் என்றும், 12-18 மாதங்களில் 20 சொற்கள் வரையில் தெரிந்துவைத்திருப்பார்கள் என்றும், 2வது வயதில் 200-300 புதிய சொற்களைத் தெரிந்திருப்

பார்கள் என்றும், மூன்றாவது வயதில் 900-1000 சொற்கள் வரையிலும், நான்காவது வயதின் இறுதியில் 1500-1600 சொற்கள் வரையிலும், ஐந்தாவது வயதில் 2100-2200 சொற்கள் வரையிலும், ஆறாவது வயதில் 2600 சொற்களை பயன்படுத்துவார்கள் என்றும் 12வது வயதில் சுமார் 20000-24000 சொற்களைப் பயன்படுத்துவதுடன் சுமார் 50000 வரையான புதிய சொற்களைப் புரிந்துக்கொள்வார்கள் என்றும் ஆய்வுகள் கூறுகின்றன.

சொற்களஞ்சிய விருத்திப் பற்றி ஆய்வுகள் கூறும் விடயங்கள்:

சமூக-பொருளாதார அந்தஸ்த்து கூடிய பிள்ளைகளுக்கும் சமூக பொருளாதார அந்தஸ்த்து குறைந்த பிள்ளைகளுக்கும் இடையில் சொற்களஞ்சிய விருத்தியில் பாரிய வித்தியாசம் காணப்படுகின்றது என்றும், சொற்களஞ்சியம் விருத்தியடையாத பிள்ளைகள் தங்களுடைய குழந்தைப்பருவம், முன்பள்ளிப் பருவம் மற்றும் ஆரம்பக் கல்வியில் அதிக நன்மையடைய முடியாதவர்களாகவும் அறிகைக் திறன் மற்றும் மொழித்திறனில் பின்னடைந்தவர்களாகவும் காணப்படுவார்கள் என்றும், Betty Hart மற்றும் Teddy Hesley ஆகியோர் தமது ஆய்வில் தெரிவித்துள்ளார்கள். அதேநேரம் மொழிக் கற்றலில் சமூகப் பொருளாதார அந்தஸ்த்து குறைந்த பிள்ளைகள் சமூகப் பொருளாதார அந்தஸ்த்து கூடிய பிள்ளைகளைவிட இரண்டு மடங்கு குறைவான அடைவுகளையே கொண்டிருப்பார்கள் என்று ஆய்வாளரும் கல்வியியலாளரும் பேராசிரியருமான சுசான் B. நியூமன் (Prof Susan B. Nueman) ஆய்வுகளினூடாகக் கூறுகின்றார்.

குறைந்த வருமானமுடைய, குறைந்த கல்வியறிவுடைய பெற்றோர்களுடைய பிள்ளைகள் வசதியானப் பின்னணியைக் கொண்ட சக பாடிகளைவிட குறைவான மொழித்திறனுடனேயே பாடசாலைக்கு வருகிறார்கள் என்றும் சில மதிப்பீடுகளின்படி, 5 வயதையடைந்த சமூக பொருளாதாரத்தில் குறைந்த பிள்ளைகளிடத்தில் தரப்படுத்தப்பட்ட மொழிவிருத்தி சோதனையில் எதிர்பார்க்கப்படும் அடைவைவிட இரண்டு வருடங்கள் பின்னடைவாகவே இருக்கிறார்கள் என்றும் பேராசிரியர் ஆன் பெர்னால்ட் (Anne Bernald) தனது ஸ்டேன்போட் எனும் ஆய்வுக்குழுவுடன் இணைந்து மேற்கொண்ட ஆய்வில் குறிப்பிடுகிறார்.

தவிரவும், என்னி பெர்னால்ட் கடமையாற்றும் ஸ்டேன்போட் பல்கலைக்கழகத்திற்கு அருகில் வசிக்கும் சமூகப் பொருளாதாரத்தில் உயர்ந்தப் பின்னணியைக்கொண்ட சுமார் 18 மாத வயதையடைந்த 20 குழந்தைளைத் தெரிவு செய்து, அவர்களுடைய சொற்களஞ்சியம் மற்றும் மொழித் துலங்காற்றல் வேகத்தை (Language Processing Speed) தனது பல்கலைக்கழக ஆய்வுக்கூடத்தில் பரிச்சார்த்தமாக ஆய்வு செய்தார். அதாவது ஒரு எளிய வாய் மொழி மூலமான குறிப்பை அடிப்படையாகக் கொண்டு எவ்வளவு வேகமாகவும் சரியாகவும் குறிப்பிட்ட உருவத்தை இனங்காண்கிறார்கள் என்பதே அந்த ஆய்வு. தொடர்ந்து 6 மாதங்களின்பின் பின்தொடர் சோதனையொன்றையும் செய்து பிள்ளைகளிடத்தில் விருத்தியை சோதனைச் செய்துள்ளார்.

பின்னர் இவ் ஆய்வினை விரிவாக்கம் செய்வதற்காக, பல்கலைக் கழகத்திற்கு சில மணிநேர தூரத்தில் வசிக்கும் குறைந்த வருமானமும் குறைந்த கல்வியறிவும் கொண்ட குடும்பங்களில் வசிக்கும் 18 மாத வயதையடைந்த 28 குழந்தைகளைத் தெரிவு செய்து தனது பல்கலைக்கழக ஆய்வுக் கூடத்தில் செய்த அதே சோதனையை செய்ததுடன் 6 மாதங்களின்பின் பின்தொடர் சோதனையையும் செய்துள்ளார்.

குறிப்பிட்ட குழந்தைகளை அவர்களுடைய தாயின் அடியில் இருத்தி, அவர்களுக்கு முன்னால் ஒரு நாய் மற்றும் பந்தினை வைத்து அறிவுறுத்தல் வழங்கியதுடன் பிள்ளைகளின் துலங்களை அவதானிக்க ஒரு தரமிக்க கெமராவினால் காணொளிப் பதிவும் செய்துள்ளார். பின்னர் காணொளியைப் பரிசோதித்தப்போது 'அந்தப் பந்தினைப் பாருங்கள்' மற்றும் 'அந்த நாயினைப் பாருங்கள்' ஆகிய இரண்டு அறிவுறுத்தலுக்கும் குழந்தைகளின் பார்வை சரியான உருவத்தை நோக்கித் திரும்புகிறதா என அவதானித்துள்ளார். இவ்வாறு பிள்ளைகள் மொழியைப் புரிந்துக் கொள்கின்ற இயலுமையை மில்லிசெக்கன்களில் துல்லியமாக அளவிட்டுள்ளார்.

இந்த ஆய்வின் முடிவாக, சமூகப் பொருளாதார நிலையில் உயர்ந்தப் பின்னணியைக் கொண்ட பிள்ளைகள் 750 மில்லி செக்கன்களில் சரியான உருவத்தை இனங்கண்டதாகவும், குறைந்த சமூகப் பொருளாதார நிலையில் பின்னணியைக் கொண்ட பிள்ளைகளுக்கு மேலதிகமாக 200 மில்லிசெக்கன்கள் தேவைப்பட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார். அதேநேரம் 200 மில்லி செக்கன் வித்தியாசமானது, 18 மாத வயதையுடைய குழந்தைகளைப் பொறுத்தளவில் மிகவும் சிறிதெனினும் அது மூளையின் துலங்காற்றல் வேகத்தைப் பொறுத்தமட்டில் மிகப்பெரிது என்றும் அவர் கூறியுள்ளார். அதேநேரம் குறைந்த சமூக பொருளாதார அந்தஸ்த்தையுடைய பிள்ளைகள் 24 மாதத்தில் கொண்டிருந்த இயலுமையளவை கூடிய சமூக பொருளாதார அந்தஸ்த்தையுடைய பிள்ளைகள் 18 மாதங்களிலேயே கொண்டிருந்தனர் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

அதேநேரம் 18-24 மாத வயதுக்கிடையில் உயர்ந்த சமூக பொருளாதார அந்தஸ்த்துடைய பிள்ளைகள் 260 புதிய சொற்களைத் தெரிந்திருந்தார்கள் என்றும் அதே வயதெல்லையிலுள்ள குறைந்த சமூக பொருளாதார அந்தஸ்த்தையுடைய பிள்ளைகள் 30 வீதமான சொற்களையே தெரிந்திருந்தார்கள் என்றும் குறிப்பிடுகிறார்.

மொழி துலங்காற்றல் திறன் மற்றும் சொற்களஞ்சிய அறிவைப் பொறுத்தமட்டில் இரண்டு வயதையடையும் சமூக பொருளாதார அந்தஸ்த்தில் உயர்ந்த பிள்ளைகளுக்கும் சமூக பொருளாதார அந்தஸ்த்தில் குறைந்த பிள்ளைகளுக்குமிடையில் 6 மாத இடைவெளி காணப்படுகின்றது. இந்த வேறுபாடானது குழந்தைகளின் எதிர்காலத்திலும் வளர்ந்துக்கொண்டே செல்லுமெனவும், அது கல்வி ரீதியிலான வெற்றிகளிலும் தொழில் வாய்ப்புகளிலும் பல்வேறு தாக்கங்களை ஏற்படுத்தும் என்றும் அன்னி பெர்னால்ட் தனது ஆய்வில் குறிப்பிடுகிறார்.

முடிவாக:

பெற்றோர்கள் தங்கள் நேரத்தை அதிகமாகப் பிள்ளைகளோடு செலவிட்டு அவர்களுக்கு உதவியும் ஊக்கமுமளிக்கும்போது பிள்ளைகள் புலமை மிக்கவர்களாகுவார்கள் என்றும் இந்த வாய்ப்பு கிடைக்காத பிள்ளைகளின் புலமை ஒப்பீட்டு ரீதியில் குறைவு என்றும் ஆய்வுகள் கூறுகின்றன. பிள்ளைகளின் கல்வி விருத்திக்கு அவர்களின் வாய்மொழி விருத்தியே அடிப்படை. வாய்மொழி விருத்திக்கு சொற்களஞ்சிய விருத்தி அடிப்படை. தொகையான சொற்களஞ்சிய விருத்தி மற்றும் வாய்மொழி விருத்திக்கு சமூக பொருளாதார அந்தஸ்த்து மட்டும் உயர்வாக இருப்பது போதாது. அவர்கள் கல்வி கற்கும் பாடசாலையின் பௌதீக சூழல் மற்றும் வளங்கள், ஆசிரியர்களின் தொழில் வாண்மைத்துவம் என பல அம்சங்கள் சிறப்பாக அமைவது அவசியமானது என ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள். எனினும் 5 வயதையடையும்வரை பிள்ளைகள் பெற்றோர்களின் கரங்களிலேயே இருக்கிறார்கள். ஒரே இரவில் சமூகப் பொருளாதாரப் பின்னணியை வசதிமிக்கதாக மாற்றுவது கிராமங்களிலும் தோட்டங்களிலும் வாழும் பெற்றோர்களால் முடியாத காரியம். எனினும், தங்களுடைய குழந்தைகளோடு தங்களது நேரத்தை செலவிட முடியுமல்லவா? பிள்ளைகளோடு உரையாடும்போது வாய்மொழித் திறனும் சொற்களஞ்சியமும் விருத்தியடையும். அதன் காரணமாக பிள்ளைகளின் அறிதல் திறன் வளர்ச்சியடையும். எனவே பிள்ளைகளுடன் உரையாடுவதன் மூலம் அவர்களுடைய எதிர்காலத்தை இன்னுமொரு படி மேலே உயர்த்த முடியுமல்லவா? அதனால் கூறுகிறேன். உங்கள் குழந்தைகளோடு கொஞ்சம் பேசுங்கள்.

உசாத்துணை:

- https://www.business-standard.com/article/news-ani/language-gap-between-rich-poor-kids-begins-in-infancy-117041500213_1.html

krishnakumar.n@thaiveedu.com

விண்வெளியில் வேகமாகக் குவியும் செயற்கைக் கழிவுகள்

- குரு அரவிந்தன்

‘விண்வெளிப் பாவனைகள் தொடர்ந்தும் அதிகரித்துக் கொண்டிருப்பதாலும், விண்வெளியில் குப்பைகள் தொடர்ந்தும் குவிக்கப்படுவதாலும் நாம் எல்லோரும் சர்வதேச ரீதியாக இணைந்து இந்த விடயத்தில் பொறுப்பாகக் கவனம் செலுத்தவேண்டும்’ என்று வெள்ளைமாளிகை ஊடகச் செயலாளர் Jen Psaki சமீபத்தில் குறிப்பிட்டிருந்தார். (‘The risks of growing congestion due to space debris and growing activity in space and we want to work with the international community’ White House press secretary Jen Psaki said at a news briefing.) காகம் இருக்கப் பனம்பழம் விழுந்த கதை போல, இதே நேரம் சீனா நாட்டின் ரொக்கெட்டான லோங் மாச்-5பி பூமியை நோக்கித் திரும்பும்போது, விண்வெளியில் பழுதடைந்து போயிருந்தது. இது வரை மௌனம் சாதித்த சீன ஊடகங்கள், மே மாதம் 7ம் திகதி தமது லோங் மாச்-5பி ரொக்கெட் பழுதடைந்திருப்பதாகவும், இது வழமையாக நடக்கும் ஒரு சாதாரண நிகழ்வு என்றும் ஊடகப் பேச்சாளரான வாங் வின்பின் குறிப்பிட்டதாகத் தெரிவித்திருந்தன. அமெரிக்கா இதைச் சுட்டிக்காட்டும் வரை சீன நாட்டு ஊடகங்கள் மௌனம் சாதித்திருந்தன.

ஊடகப் பேச்சாளரின் வேண்டுகோளில் இருந்து விண்வெளியில் குவிக்கப்படும் செயற்கைக்கழிவுகள் இனி வருங்காலங்களில் பூமியின் சுற்றுச்சூழல் பாதிப்படைவதற்கு முக்கிய காரணமாக அமையலாம் என எம்மை நம்பவைக்கின்றது. இயற்கை மாற்றங்கள் காரணமாக ஏற்கனவே எண்ணுக்கணக்கற்ற விண்கற்கள் விண்வெளியில் வலம் வந்து கொண்டிருக்கின்றன. ஒரு வீட்டைக் கட்டும் போது அதற்காகப் பாவித்த தேவையற்ற பொருட்களை வீட்டைச் சுற்றி எறிந்து விட்டுப் போனால் எப்படி இருக்குமோ, அதே போலத்தான் பாவித்த பொருட்களை விண்வெளியில் எறிந்து விட்டுப் போனால் சூழல் எப்படி இருக்கும் என்பதை நாம் கற்பனை செய்து பார்க்க முடியும். காரணம் சீனா நாடு போலவே ஒவ்வொரு நாடுகளும் இனிவரும் காலங்களில் தமக்கான விண்வெளி நிலையங்களைத் (Space station) தனித்தனியாக விண்வெளியில் அமைக்கப் போகின்றன. தமக்கான விண்கலங்களையும் அதிக அளவில் பாவிக்கப் போகின்றன. வேற்றுக் கிரகங்களுக்குப் பயணிக்கும் போது இந்த விண்வெளி நிலையங்கள் தங்கிச் செல்லும் இடமாகவும் இருக்கப் போகின்றன. அப்படியான காலத்தில் சில பொது விதிமுறைகளை எல்லா நாடுகளும் கவனத்தில் கொள்ளாவிட்டால் வெகு வேகமாக விண்வெளி குப்பைகள் நிறைந்த இடமாக மாறிவிட வாய்ப்புண்டு. விண்வெளிக் குப்பைகளை அகற்றுவது என்பது இலகுவான காரியமல்ல.

சீனா நாடு தனக்காக, சொந்தமாக ஒரு விண்வெளி நிலையத்தை விண்வெளியில் நிறுவ ஆரம்பித்துவிட்டது. அதன் முதற்கட்டமாக அதற்குத் தேவையான பொருட்களைக் கொண்டு செல்வதற்கு லோங் மாச்-5பி என்ற ரொக்கெட்டை விண்வெளிக்கு அனுப்பி இருந்தது. சென்ற ஏப்ரல் மாதம் அனுப்பப்பட்ட சீனாவின் ராக்கெட்டான இந்த லோங் மாச்-5பி (Long March 5B) பூமியை நோக்கித் திரும்பி வரும் போது. தொழில் நுட்பக் கோளாறு காரணமாக விண்வெளியில் பழுதடைந்து போனது. அதனால் தரைக்கட்டுப்பாட்டை மீறி உடைந்து போயிருந்தது. அதன் சிறிய பாகங்கள் ஈர்ப்புவிசை வேகம் காரணமாகப் பூமியை நோக்கி வரும்போது எரிந்து போனாலும் முக்கியமான பகுதி (Tanks and thrusters made stainless steel or titanium) பூமியை நோக்கி மிகவேகமாக வந்து கொண்டிருந்ததை அமெரிக்காவின் விண்வெளி அவதானநிலையம் ஒன்று சுட்டிக் காட்டியிருந்தது. தரையில் வந்து விழுந்தால் அதனால் பாதிப்பு ஏற்படும் என்பதையும் குறிப்பிட்டிருந்தது. பூமியில் கடற்பரப்பே அதிகமாக இருப்பதால் அனேகமாகக் கடலில்தான் விழும் என்ற எதிர்பார்ப்பும் இருந்தது. அந்த 18 தொன் எடை கொண்ட ரொக்கெட் பூமியின் கவர்ச்சிக்குள் வந்ததால், பூமியை நோக்கி இழுக்கப்பட்டது, இல்லாவிட்டால் அது விண்வெளியிலேயே சுற்றிக் கொண்டு இருக்க வேண்டி வந்திருக்கும். இப்படியான செயற்கைக் குப்பைகள் கட்டுப்பாடற்று விண்வெளியில் குவிந்தால் ஒரு காலத்தில் பூமிக்குக் கிடைக்கும் சூரிய வெளிச்சத்தை அவை தடை செய்யவும் வாய்ப்புண்டு. சூரிய வெளிச்சம் குறையக் குறையப் பூமி குளிரடையத் தொடங்கலாம். தாவரங்களின் வளர்ச்சி பாதிக்கப்பட்டால், பிராணவாயு குறைவடையலாம். மழை பெய்யாமல் போகலாம். நீண்ட காலப் போக்கில், உயிரினங்கள் சுவாசிக்க முடியாமல் போனால், செவ்வாய்க் கிரகம் போல நாங்கள் வாழும் பூமியும் மாறி விடலாம்.

கடந்த காலத்தில் நடந்த, விண்வெளி சம்பந்தமான சில முக்கிய சம்பவங்களை எடுத்துப் பார்ப்போம். சென்ற மே மாதம் 8ம் திகதி சீனாவின் லோங் மாச்-5பி ரொட்கெட்டின் 30 மீட்டர் நீளமும், 5 மீட்டர் அகலமும் கொண்ட முக்கிய பகுதி இந்து சமுத்திரத்தில் மாலைதீவுகளுக்கு அருகே (longitude 72.47 degrees east and latitude 2.65 degrees north) விழுந்ததாக சீனா அறிவித்திருந்தது. ஏற்கனவே விண்வெளியில் இருக்கும் சர்வதேச விண்வெளி நிலையம் போல சீனா தனக்காக ஒரு விண்வெளி நிலையத்தை அமைப்பதில் வேகமாக ஈடுபட்டிருக்கின்றது. அதற்கான உபகரணங்களைக் கடந்த ஏப்ரல் மாதம் 29ம் திகதி கொண்டு சென்ற ரொக்கெட்டான லோங் மார்ச்தான் திரும்பி வரும்போது, யந்திரக் கோளாறு காரணமாக உடைந்து போயிருந்தது. 90 நிமிடத்திற்கு ஒரு முறை பூமியைச் சுற்றிக் கொண்டு விநாடிக்கு 7.8 கிலோ மீட்டர் வேகத்தில் தரையை நோக்கி வந்த லோங் மாச் ரொக்கெட் இந்து சமுத்திரத்தில் விழுந்தது.

மேல் நாட்டு ஊடகங்கள் இதைப் பெரிய விடயமாக எடுத்தாலும் சீனா இதைப் பெரிதுபடுத்தவில்லை. இது ஒரு தவிர்க்க முடியாத சாதாரண நிகழ்வு என்பதை சீனா சுட்டிக்காட்டியது. அமெரிக்காவின் ஸ்பேஸ் எக்ஸ் பால்கன்-9 (Reentry of a SpaceX Falcon 9) திரும்பி பூமியின் ஈர்ப்புக்குள் வந்ததையும் சில ஊடகங்கள் சுட்டிக்காட்டின. இது போன்ற சில நிகழ்வுகள் ஏற்கனவே நடைபெற்றிருக்கின்றன என்பதையும் சீனா ஊடகங்கள் தெளிவுபடுத்தி இருந்தன. எனவே சீனாவைச் சுட்டிக்காட்டிய ஏனைய ஊடகங்கள் மௌனம் சாதிக்க வேண்டி வந்தது. முன்பும் இது போல அமெரிக்காவின் ஸ்கைலாப், சோவியற்யூனியனின் சல்யூட் மற்றும் மிர் விண்வெளி நிலையம் (Skylab, Salyut 7 and Mir space station) போன்ற மிகப்பெரிய விண்கலங்களும் கட்டுப்பாடற்ற நிலையில் பூமியில் வந்து விழுந்தன என்பதை சீனா ஊடகங்கள் தெரிவித்திருந்தன. தொடக்க காலத்தில் சோவியற்யூனியனும் அமெரிக்கா

வும் தான் விண்வெளிப் போட்டியில் ஈடுபட்டிருந்தன. அப்பொழுது எல்லாம் பெரிதுபடுத்தாத விடயத்தை இப்போது ஏன் பெரிதுபடுத்துகிறார்கள் என்ற கேள்வியை ஆசிய நாடுகளில் ஒன்றான சீனா எழுப்பியிருந்தது. விண்வெளி ஆய்வில் முன்னோடியாக இருந்த ரஷ்யா விண்வெளிப் போட்டியில் தற்காலிகமாக ஒதுங்கி இருப்பதால், தற்போது அமெரிக்காவும் சீனாவும் விண்வெளிப் போட்டியில் மும்முரமாக ஈடுபடத் தொடங்கிவிட்டன. அமெரிக்காவுக்குப் போட்டியாகச் சீனா செவ்வாய்க்கிரகத்திலும் தனது ரோபோவை பாதுகாப்பாகத் தரை இறக்கி இருக்கின்றது.

சுமார் 42 வருடங்களுக்குமுன் அமெரிக்காவின் முதலாவது விண்வெளி நிலையமான ஸ்கைலாப் (Skylab) 1979ஆம் ஆண்டு யூலை மாதம் பூமியை நோக்கி வந்து, அவுஸ்ரேலியாவுக்கு அருகே இந்து சமுத்திரத்தில் விழுந்தது. இந்த 85 தொன் நிறையுள்ள ஸ்கைலாப் 1973ம் ஆண்டு விண்வெளிக்கு அனுப்பப்பட்டது. இது 82 அடி நீளமும், 56 அடி அகலமும், 36 அடி உயரமும் கொண்டது. பூமியில் இருந்து சுமார் 270 மைல் உயரத்தில் விண்வெளியில் நிறுவப்பட்டது. இந்த ஸ்கைலாப் 93 நிமிடங்களுக்கு ஒரு முறை விண்வெளியில் பூமியைச் சுற்றி வந்தது. விண்வெளி ஆய்வுக்கு மிகவும் உதவியாக இருந்த ஸ்கைலாப் யந்திரக் கோளாறு காரணமாக பாவனையற்று விண்வெளியில் கைவிடப்பட்டது. அமெரிக்கா அதைத் திருத்தி அமைக்க முற்பட்டாலும், அதற்கான உடனடியான, வேகமாகச் செய்யக்கூடிய போதிய வசதிகள் அப்போது அமெரிக்காவிடம் இருக்கவில்லை. புவி ஈர்ப்புக்குள் இழுக்கப்பட்டு, பூமியில் வந்து விழுந்த இதன் சில பாகங்கள், வரலாற்று முக்கியத்துவம் கருதிச் சேகரிக்கப்பட்டு அவுஸ்ரேலியாவில் உள்ள காட்சியகத்திலும், அலபாமாவில் உள்ள காட்சியகத்திலும் வைக்கப்பட்டிருக்கின்றன.

ஸ்கைலாப் போலவே சேவியட் யூனியனின் சல்யூட்-7 (Salyut 7) பழுதடைந்ததால் பூவியீர்பில் அகப்பட்டு தரையில் விழுந்தது. 1971ம் அண்டு விண்வெளிக்கு அனுப்பப்பட்ட சல்யூட்-1 தான் முதலாவது விண்வெளி நிலையம் என்ற பெயரைத் தட்டிக் கொண்டது. இந்த வரிசையில் 1982ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 19ம் திகதி விண்வெளிக்கு அனுப்பப்பட்ட விண்வெளி நிலையமான சல்யூட்-7 விண்வெளியில் இயங்கத் தொடங்கியது. இது 16 மீட்டர் நீளமும், 4.15 மீட்டர் அகலமும் கொண்டது. 89.21 நிமிடங்களுக்கு ஒரு முறை பூமியைச் சுற்றி வந்தது. இது சுமார் ஆறு வருடங்கள் விண்வெளியில் பயன்பாட்டில் இருந்தது. வாயுக் கசிவு, மின்சாரக் கோளாறு போன்ற காரணங்களால் பாவனையற்றுக் கைவிடப்பட்டது. பழுதடைந்த நிலையில் புவி ஈர்ப்புக்குள் அகப்பட்ட சல்யூட்-7ன் பாகங்கள் 1991ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 7ம் திகதி தென் பசுபிக் கடலில் விழுந்தது. அதன் சில பாகங்கள் ஆஜன்ரைனாவிலும் கண்டெடுக்கப்பட்டன. இந்த விண்வெளி நிலையத்தைக் கருப்பொருளாக வைத்து கிம் சிப்பென்கோவின் நெறிப்படுத்தலில் அங்கிலப்படம் ஒன்றும் 2017ம் ஆண்டு வெளிவந்தது.

அடுத்ததாக ரஷ்யாவின் விண்வெளி நிலையமான மிர் விண்வெளி நிலையம் (Mir space station) 1986ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 20ம் திகதி விண்வெளியில் இயங்கத்தெடங்கியது. 15வருட சேவையின் பின், செயல் இழந்த நிலையில் கைவிடப்பட்டது. 2001ம் ஆண்டு மார்ச் மாதம் 23ம் திகதி புவியீர்பில் அகப்பட்டு பசுபிக் கடலில் வந்து விழுந்தது. சுமார் 250 மைல் உயரத்தில் விண் வெளியில் 17,885 மைல்கள் வேகத்தில், 91.9 நிமிடத்திற்கு ஒரு முறை பூமியைச் சுற்றி வந்தது. இது 62 அடி நீளமும் 101 அடி அகலமும் 90 அடி உயரமும் கொண்டது. 1995ம் ஆண்டில் இருந்து அமெரிக்க விண்கலங்களும் இந்த ரஸ்ய விண்வெளி நிலையத்தோடு தொடர்பு கொள்ளத் தொடங்கின. 1997ம் ஆண்டு யூன் மாதம் பொருட்களைக் கொண்டு சென்ற விண்கலம் ஒன்று மோதியதால் சூரிய சக்தியை கொடுக்கும் தகட்டில் பாதிப்பு ஏற்பட்டதால், யந்திரக் கோளாறு ஏற்பட்டது. இதனுடைய காலத்தில் 12 நாடுகளில் இருந்து 125 விண்வெளி வீரர்கள் இதில் தங்கி இருந்து ஆய்வுகளை மேற்கொண்டு இருந்திருக்கிறார்கள்.

இது போன்ற செயலிழந்த விண்கலங்கள் சுமார் 3000க்கு மேற்பட்டவை விண்வெளியில் சுற்றிக் கொண்டிருக்கின்றன. 10 சென்ரிமீட்டரை விட பெரிதான சுமார் 34,000 துண்டுகளும் இதேபோல விண் வெளியில் கொட்டிக் கிடக்கின்றன. சுமார் 500,000 சிறிய செயற்கைக் கழிவுகளும் விண்வெளியில் கிடக்கின்றன. சுமார் 8000 மெற்றிக்தொன் நிறையுள்ள சிறிய உலோகத் துண்டுகளும் இதில் அடங்கும். இவை எல்லாம் சுமார் 1200 மைல்களுக்கு மேல் விண் வெளியில் காணப்படுகின்றன. இவை புவியீர்ப்பால் இழுக்கப்படும் போது, ஒரு துப்பாக்கி ரவையைவிட ஐந்து மடங்கு வேகமாகப் பூமியைத்தாக்குகின்றன. இந்தக் குப்பைகள் (Space junk, or space debris, is any piece of machinery or debris left by humans in space.) விண்வெளிப் போக்குவரத்திற்கு மட்டுமல்ல, புவியின் சுற்றுச் சூழலுக்கும் இவை பாதுகாப்பானதல்ல. 1970ம் ஆண்டுகளில் இருந்து இப்படியான மனிதனால் அனுப்பப்பட்ட குப்பைகள் பூமியில் வந்து விழத்தொடங்கி இருக்கின்றன. இவை குடிமனைகள் மேல் வந்து விழுந்தால் உயிர்ச்சேதங்கள் ஏற்படலாம். இனந் தெரியாத நோய்கள் பரவுவதற்கும் வழி வகுக்கலாம். ரஷ்யாவின் உளவு விண்கலமான கொஸ்மோஸ் 954 வடமேற்கு கனடியப் பரப்பில் விழுந்தபோது பல மைல் தூரத்திற்கு கதிர்வீச்சு இருந்தது அவதானிக்கப்பட்டது. சுமார் 6 கோடி மில்லியன் டொலர்களுக்கு மேல் அதைத் துப்புரவு செய்யக் கனடா செலவிட்டது. அடுத்த தலைமுறையினருக்கு இதனால் பாதிப்புகள் ஏற்படலாம். எனவே பாவனையற்ற, பயன்படாத பாகங்களைக் குறிப்பிட்ட காலத்திற்குள் விண்வெளியில் இருந்து அகற்றுவதற்கு இதில் சம்பந்தப்பட்ட எல்லா நாடுகளும் ஒன்றிணைந்து, காலம் தாழ்த்தாது நடவடிக்கைகளை மேற்கொள்வது சிறப்பானது.

உசாத்துணை:
https://spacenews.com/long-march-5b-falls-into-indian-ocean
https://www.nasa.gov/mission_pages/station/news/orbital_debris.html

kuruaravindan@thaiveedu.com

MORTGAGE SOLUTIONS

SAVE UPTO 75% REFINANCE

MONTHLY SAVING

$2,409

		Before	After
Mortgage Payment	$320,000 @ 2.90%	$1,498.02	-
Auto Loan	$21,000 @ 7.50%	$764.25	$0.00
Line of Credit - 1	$16,000 @ 6.50%	$566.67	$0.00
Line of Credit -2	$12,500 @ 7.00%	$447.92	$0.00
Credit Card -1	$ 8,800 @12.00%	$352.00	$0.00
Credit Card - 2	$ 5,200 @ 19.00%	$238.34	$0.00
Store Card	$ 3,000 @ 24.00%	$150.00	$0.00
New Mortgage	$386,500 @ 2.9%		$1,605.00
Total Debt		$ 386,500.00	$ 386,500.00
Total Payment		$4,014.20	$1,524.55

KIRUBA THANABALASINGHAM

Mortgage Agent Lic# M12002440

info@mortgagesolutions.ca

www.MortgageSolutions.ca

Ultimate Mortgage and Finance Solutions Inc. Lic#11995

Prime + 1% Lower Rate

$50,000 EQUITY LOAN

GET APPROVED WITHIN 24 HOURS

416.298.2777

$375 Mo.

MARKHAM & STEELES - BLUE BUILDING

B105 - 3341 Markham Road, Toronto, ON M1X 0A5

விந்தைமிகு திறன் கொண்ட விலங்குகள்

- சுப்ரமணியம் ஜெயசீலன்

ஆச்சரியங்களும் அற்புதங்களும் அபரிமிதமாய் விஞ்சிக் கிடக்கும் இந்த மண் உருண்டைதனில் எல்லாமே விந்தையானதுதான். பட்டாம்பூச்சி, சிட்டுக் குருவி முதல் இராட்சத திமிங்கிலங்கள் வரையில் அனைத்துமே படைப்பில் தனித்துவமானவைதான். பூமியில் அனைத்துப் படைப்புக்களுமே விந்தை மிக்கவைதான் அதிலும் சில வகையான சிருஷ்டிகள் ஆச்சரியத்தை ஏற்படுத்தும் வகையிலானவை. 'எட்டாம் அறிவுடைய' விலங்கு, பூமியே அழிந்தாலும் உயிர் வாழும் திறன்கொண்ட விலங்கு, மிமிக்கிரி செய்யும் பறவை, காந்தபுல உணர்திறன் கொண்ட விலங்கு, ஏவுகணை வேகத்தில் பறக்கும் பறவை, எவ்வளவு உயரத்திலிருந்து விழுந்தாலும் ஒரு காயமும் ஏற்படாத விலங்கு, எந்த உணவை சாப்பிட்டாலும் சமிபாடடையும் திறன்கொண்ட விலங்கு என சித்திரக் கதைகளில் வரும் கற்பனை பாத்திரங்களை விஞ்சும் அளவிற்கு சில விலங்கினங்களுக்கு காணப்படும் அசாத்தியமான திறன்களும் அவற்றை தன் இருப்பிற்காக அந்த விலங்கினங்கள் எவ்வாறு பயன்படுத்திக் கொள்கின்றன என்பது பற்றியும் ஓர் சிறு அலசலாக இந்த பத்தி அமைகின்றது.

கடல் ஆமைகள்:

கடல் ஆமைகளுக்கு காந்தபுல விசை உணர்திறன் காணப்படுகின்றது. பெண் கடல் ஆமைகளுக்கு இந்த ஆற்றல் அதிகளவில் காணப்படுகின்றது. கடற்கரையில் எந்த பகுதியில் முட்டைகள் போடப்பட்டது என்பதனை கண்டறிந்து கொள்வதற்கு இந்த உணர்திறன் உதவுகின்றது. கடலில் காணப்படும் மிகப் பெரிய ஆமை இனமான பேராமைகளுக்கு உயிரியல் கடிகாரம் காணப்படுகின்றது, அதனை மூன்றாம் கண் என்றும் அழைக்க முடியும். எந்த இடத்திற்கு நகர வேண்டும், எங்கு உணவு கிடைக்கும் எந்த இடத்தில் முட்டைகள் இட்டிருக்கின்றோம் போன்ற விடயங்களை துல்லியமாக அறிந்து கொள்வதற்கு பேராமைகள் இந்த மூன்றாம் கண்ணை பயன்படுத்துகின்றன. இந்தப் பேராமைகள் 'தோல் முதுகு ஆமை' எனவும் அழைக்கப்படுகின்றது. இந்த ஆமைகளின் உடல் அமைப்பு பருவ மாற்றங்களை அறிந்துகொள்ளக் கூடிய வகையிலானது. நீண்ட நெடுந்தூரம் நீந்திச் சென்றாலும் உணவு கிடைக்கும் இடங்கள் மற்றும் வாழும் கடல்கரை என்பன வற்றை அறிந்து கொள்ளும் ஆற்றல் கொண்டவை.

உலகில் இவ்வாறு ஓர் இடத்திலிருந்து மற்றுமொரு இடத்திற்கு நகரக்கூடிய ஆற்றல் கொண்ட பல்வேறு விலங்கினங்கள் காணப்பட்டாலும் கடல் ஆமைகள் காந்தபுல விசை உணர்திறனைக் கொண்டு நகர்கின்றன. magnetotactic என்ற பக்ரீரியா ஒன்றின் உதவியுடன் இந்த காந்தபுல உணர்திறனை ஆமைகள் பயன்படுத்துகின்றன.

யாழ் பறவை:

யாழ் பறவையானது விசித்திரமான சக்தியைக் கொண்ட பறவையாக அறிமுகம் செய்யமுடியும். இந்தப் பறவையினங்கள் அவுஸ்திரேலியாவை பூர்வீகமாகக் கொண்டவையாகும். சுற்றுச் சூழலில் கேட்கக் கூடிய இயற்கை மற்றும் செயற்கையான ஒலி வடிவங்களை உள்வாங்கி அதேபோன்று ஓசை எழுப்பும் வித்தியாசமான ஆற்றலைக் கொண்டவை இந்த பறவைகள். நாய் குரைப்பது, வாகனங்களின் சய்ரன் சத்தம், 'கமரா'வின் 'சட்டர்' ஒலி போன்ற வித்தியாசமான எந்தவொரு ஒலியையும் கேட்டு அதனைப் போன்றே ஒலி எழுப்பும் வல்லமை இந்த அவுஸ்திரேலிய யாழ் பறவைகளுக்கு உண்டு. இந்த பறவைகளில் ஆண் பறவைகள் மிகவும் எழிலான தோற்றத்தைக் கொண்டவையாகும். அவுஸ்திரேலியாவின் விசேடமான பூர்வீக பறவைகளில் இந்த யாழ் பறவைக்கு முக்கிய இடமுண்டு.

கலைமான்:

துருவமான் அல்லது கலைமான் எனப்படும் இந்த விலங்கினங்களுக்கு விசேட ஆற்றல் காணப்படுகின்றது. இந்த மான்களைப் போன்று கண் பார்வையுடைய வேறும் விலங்குகளை நாம் இந்த பூமியில் பார்க்க முடியாது எனலாம். இந்த வகை மான்கள் துருவப் பகுதிகளில் அதிகளவில் வாழ்ந்து வருகின்றன.

இந்த மான்கள் துருவப் பகுதியில் வாழ்வதனால் கோடை காலம் முதல் பனிக்காலம் வரையிலான காலப் பகுதியில் பாரியளவிலான காலநிலை மாற்றத்தை இவை சந்திக்க நேரிடுகின்றது. குறிப்பாக இரண்டு மாதங்கள் தொடர்ச்சியாக சூரிய ஒளியையும் இரண்டு மாதங்கள் தொடர்ச்சியாக இரவையும் இவை கடந்து வர நேரிடுகின்றது.

எவ்வாறெனினும் துருவமான்கள் இந்த இரண்டு நிலைமைகளையும் லாவகமாக கையாளக்கூடிய இயற்கை சக்தியைக் தன்னகத்தே கொண்டுள்ளன. பல்வேறு ஒளி சூழ்நிலைகளின் போதும் பார்வையை துல்லியமாக பேணும் ஆற்றல் இந்த துருவமான்களுக்கு உண்டு.

குளிர் காலத்தில் கடும் நீல நிறமாகவும், கோடை காலத்தில் தங்க மஞ்சள் நிறமாகவும் இவற்றின் கண்கள் சூழலுக்கு ஏற்ற வகையில் மாற்றமடைகின்றது. புற ஊதாக் கதிர்களை ஊடறுத்து பார்க்கக்கூடிய அபார ஆற்றல் இந்த வகை விலங்குகளுக்கு காணப்படுகின்றது.

ஸ்லாத்:

ஸ்லாத் அல்லது அசையா கரடி எனப்படும் இந்த விலங்கிடம் விசேட ஓர் சக்தி காணப்படுகின்றது. இந்த விலங்குகள் எவ்வளவு உயரத்தில் இருந்து விழுந்தாலும் காயங்கள் ஏற்படாது என்பது குறிப்பிடத்தக்கது. சுமார் நூறு அடி உயரத்திலிருந்து கீழே விழுந்தாலும் இந்த வகை விலங்குகளுக்கு காயங்கள் ஏற்படாது என்பது ஆச்சரியமானது. இந்த வகை விலங்குகள் மிகவும் மெதுவாக அசையக்கூடியவை என்பது குறிப்பிடத்தக்கது.

மர உச்சியிலிருந்து கீழே விழுந்தாலும் காயங்கள் ஏற்படாதிருப்பது தொடர்பில் விஞ்ஞான ரீதியான ஆய்வுகளும் நடத்தப்பட்டுள்ளன. சில வேளைகளில் காயங்கள் ஏற்பட்டாலும் விரைவில் அந்த காயங்கள் குணமடைந்து விடும். இந்த விலங்குகளின் உடலில் ஓர் வகை பூஞ்சனம் போன்ற பொருள் காணப்படுவதாகவும் இவற்றின் மயிர்களில் பெரும் எண்ணிக்கையிலான சிறு பூச்சிகள் வாழ்வதாகவும் அவை இந்த உலகில் வேறும் எங்கும் கிடையாது என வும் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

கணவாய் மீன்:

கணவாய் மீன் எனப்படும் இந்த கடல் வாழ் உயிரினமும் இயற்கையாகவே அபாரமான சக்தியைக் கொண்டது. கணவாய் மீன்கள் தனது உருவத்தை முழுவதுமாக மறைத்துக் கொள்ளும் ஆற்றலைக் கொண்டது. விலங்கின உலகில் கணவாய் மீன்களைப் போன்று உருமறைப்பு வித்தைக் கொண்ட வேறும் விலங்குகள் இல்லை எனலாம். இந்த கணவாய் மீன்கள் தங்களது உருவத்தை கலைத்து கடலின் எந்தவொரு உருவத்தைப் போலவும் மாற்றமடைந்துவிடக்கூடிய ஆற்றல் உண்டு.

கணவாய் மீன்களை வேட்டையாடக்கூடிய ஏனைய விலங்குகளிடமிருந்து தப்பித்துக் கொள்ளும் நோக்கில் இவை நிறமாற்ற உத்தியை பின்பற்றுகின்றன. இவற்றின் தோல் பகுதியில் நிற மாற்றத்திற்கு தேவையான ஓர் பொருள் உண்டு எனவும் அவை சூழலுக்கு ஏற்ற வகையில் நிறத்தை மாற்றிக் கொள்வதாகவும் ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

கடல் அட்டை அல்லது கடல் வெள்ளரி:

கடல் அட்டையானது கடல் வாழ் ஓர் உயிரினமாகும். இந்த கடல் அட்டைகள் தங்களது உள் உறுப்புக்களை துண்டித்து மீள வளரச் செய்யக்கூடிய அபாரமான திறனைக் கொண்டவையாகும். எதிரிகளிடமிருந்து தன்னை பாதுகாத்துக் கொள்ளும் நோக்கில் இவை உடல் உள்ளுறுப்புக்களை துண்டித்துக் கொள்கின்றது. உடல் உறுப்புக்களை துண்டித்து அவற்றில் விசத்தன்மையை வெளிப்படுத்தி எதிரிகளை கொல்லக்கூடிய திறன் கொண்டவை.

வெளவால்:

மிருகத்தை விடவும் மனிதர் உயர்ந்து காணப்படுவதற்கான பிரதான ஏதுவாக நாம் ஆறாம் அறிவினை குறிப்பிடுகின்றோம் எனினும் இந்த வெளவால்களுக்கு ஆறாம், ஏழாம், எட்டம் அறிவு காணப்படுகின்றது. ஒலி அதிர்வலைகளை அவதானித்தல், புவிக் காந்தவியல் அளவீடு மற்றும் ஒளிமுனைவாக்கம் ஆகிய திறன்கள் இவற்றிடம் காணப்படுகின்றது.

தனது இரையை வேட்டையாடுவதற்கு வெளவால்கள் ஒலி அதிர்வலைகளைப் பயன்படுத்துகின்றன. வெளவால்கள் தனது வாய் மற்றும் மூக்கு ஊடாக அல்ட்ராசொனிக் ஒலியை எழுப்பி தனது சுற்றுச் சூழல் பற்றி தெரிந்து கொள்கின்றது. இந்த விலங்கு எழுப்பும் ஒலி அலைகளைக் கொண்டு ஓர் ராடார் எவ்வாறு தகவல் திரட்டுகின்றதோ அந்த அளவிற்கு தகவல்கள் திரட்டப்படுகின்றன.

16 முதல் 165 அடி தொலைவில் உள்ள பொருட்கள், விடயங்களை அடையாளம் கண்டு கொள்ள இந்த ஒலி அலைகள் பயன்படுத்தப்படுகின்றன.

ஏனைய விலங்குகளைப் போன்று பார்வைத் திறன் வெளவால்களுக்கு இல்லை என்ற போதிலும் சூரிய அஸ்தமனம், சூரியன் மேகக் கூட்டத்தினால் மறைந்துள்ளதா போன்ற துல்லியமான விடயங்களை அறிந்துகொள்ளக்கூடிய அபார ஆற்றல் வெளவால்களுக்கு உண்டு.

பொரி ராஜாளி:

பொரி ராஜாளிகள் மின்னல் வேகத்தை உடையவை. இந்த பூமியில் வாழும் மிகவும் வேகமான விலங்கினமாக பொரி ராஜாளிகள் காணப்படுகின்றன. இதனால் இவை வாழும் ஏவுகணைகள் என வும் அழைக்கப்படுகின்றன. நியூசிலாந்து மற்றும் துருவப் பகுதிகள் தவிர்ந்த ஏனைய இடங்களில் இந்த ராஜாளிகளை காண முடியும். மேலிருந்து தரையிறங்கும் போது இவற்றின் வேகம் மணிக்கு 200 மைல்களாகும். சில ராஜாளிகள் மணிக்கு 242 மைல் வேகத்தில் தரையிறங்கக்கூடியவை. வேட்டையாடாத சந்தர்ப்பங்களில் இந்தப் பறவைகள் மணிக்கு 40 முதல் 60 மைல் வேகத்தில் தரையிறங்குகின்றன.

இறக்கை அமைப்பு, இறகுகளின் கடினத்தன்மை, மிகச் சிறந்த சுவாசக் கட்டமைப்பு என்பனவே இந்த பறவைகளின் வேகத்திற்கான பிரதான ஏதுக்களாகும். இவற்றின் சுவாசப்பை வெளிச் சுவாசத்தின் போதும் திறந்திருக்கும் என்பதனால் சுவாசக் காற்று இடையறாமல் கிடைப்பதுடன் மிக அதிகளவான ஒட்சிசன் வாயுவை பெற்றுக்கொள்கின்றன. இவற்றின் இதயத்துடிப்பு ஒரு நிமிடத்திற்கு 600 முதல் 900 வரையிலானது என்பதுடன் இறகுகளை ஒரு செக்கனுக்கு நான்கு தடவை வரையில் வேகமாக அசைக்கும் வல்லமை கொண்டவை.

வேகத்தை போன்ற இவற்றின் கண் பார்வையும் மிகவும் துல்லியமானவை. ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் இருந்து இரையை கண்டு கொள்ளும் திறன் இந்த பொரி ராஜாளிகளுக்கு உண்டு. இரையை நோக்கி வேகமாக கீழே இறங்கும் போது தனது உடலை பற்றி இறக்கைகளை சுற்றிக் கொள்கின்றன. இதனால் இரையை தாக்குவது சுலமானதாகின்றது.

நீர்க்கரடி:

இயற்கையாகவே விந்தை மிகுந்த திறன்களைக் கொண்ட மற்றுமொரு விலங்கினமாக இந்த நீர்க்கரடி அல்லது மெதுநடையனைக் குறிப்பிட முடியும். உலகில் வாழும் மிகவும் சக்தி வாய்ந்த விலங்கினமாக இந்த விலங்கு கருதப்படுகின்றது. ஏனெனில் இவற்றை கொல்வது சாத்தியமானதல்ல. மிகவும் உச்சமான பௌதீக நிலைமைகளை இந்த விலங்கு தாக்குபிடிக்கக் கூடியதாகும். 150 முதல் 272 பாகை செல்சியஸ் வெப்பநிலையிலும் உயிர் வாழக்கூடியது. மிகக் கடுயைமான அழுத்த நிலைமைகளிலும் உயிர் வாழக்கூடியது என்பதுடன் 30 ஆண்டுகள் வரையில் உணவு நீரின்றி உயிர் வாழக்கூடியவை என்றால் நம்ப முடிகின்றதா?

இந்த வகை விலங்கினங்கள் எந்தவொரு சூழலிலும் வாழக்கூடியவை. எனினும், பொதுவாக குளங்களின் ஆழத்தில், ஈரமான சூழல்களில் இவை வாழ்கின்றன. கதிர்வீச்சு, சுடுநீர், கடலின் ஆழமான பகுதியில் காணப்படும் அழுத்தத்தை விடவும் ஆறு மடங்கு அழுத்தமான பகுதியிலும் வாழக்கூடியவை.

மனித இனம் முற்று முழுதாக அழிந்து போனாலும் இந்த வகை உயிரினம் வாழக்கூடியவை என ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். ஹாவார்ட் மற்றும் ஒக்ஸ்பார்ட் பல்கலைக்கழகத்தினால் முன்னெடுக்கப்பட்ட ஆய்வுகளின் மூலம் அழிக்க முடியாத உயிரினமாக இந்த நீர்க் கரடிகள் கண்டறியப்பட்டுள்ளன. பல பில்லியன் ஆண்டுகளின் பின்னர் பூமியின் மீது விண் கல் வீழ்ந்தோ அல்லது ஏதேனும் ஓர் பேரழிவின் மூலம் மனித இனம் அழிந்து போனாலும், இந்த வகை விலங்குகள் உயிர் வாழக்கூடியவை என தெரிவித்துள்ளனர்.

உயிர் வாழ்வதற்கு பொருத்தற்ற சூழ்நிலைகளின் போது உடலில் மாற்றங்களைச் செய்து அந்த சூழ்நிலைக்கு ஏற்ற வகையில் இவை உயிர் வாழக்கூடிய அபார ஆற்றல் கொண்டவை என ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

கழுதைப் புலிகள்:

இந்த கழுதைப் புலிகளுக்கு இயற்கையாகவே ஓர் சக்தி காணப்படுகின்றது. எந்தவொரு விலங்கினத்தையும் உணவாக உட்கொள்ளக் கூடிய திறன் உண்டு. அழுகிய உடல்களோ அல்லது உயிருடனான விலங்குகளையோ உணவாக உட்கொள்ளக்கூடியவை. இவற்றின் தாடைகள் எலும்புகளையும் உடைத்துவிடக் கூடிய அளவிற்கு வலுவானவை. விலங்குகளின் கொம்புகள், மயிர்கள் போன்றன மட்டுமே இந்த கழுதைப் புலிகளின் வயிற்றில் சமிபாடு அடையாத விலங்குப் பாகங்களாகும்.

கிழக்கு மற்றும் தென் ஆபிரிக்க நாடுகளில் இந்த வகை விலங்கினங்கள் அதிகளவில் வாழ்கின்றன. கழுதைப் புலிகளின் வயிறு 14.5 கிலோ கிராம் எடையுடைய இறைச்சியை தாங்கிக்கொள்ளக் கூடியது என்பது குறிப்பிடத்தக்கது. இவற்றின் வயிற்றில் காணப்படும் ஒரு வகை அமிலம் அனைத்து வகையிலான உணவுகளையும் சமிபாடடையச் செய்கின்றது என ஆய்வாளர்கள் கண்ட றிந்துள்ளனர்.

jeyaseelan.s@thaiveedu.com

Buy, Sell Invest

RE/ON

Homes Realty Inc.

Brokerage

Gnani & Judy

Real Estate

www.reongtahomes.com
www.reongtacondos.com

Judy

Gnanendran

Gnanendran B.Com (Hons)
Realtor
416.629.9797

(905) 209 8080
25 KARACHI DR, UNIT #15
MARKHAM, ON L3S 0B5

Narasingham
Realtor
416.937.8090

Ceycan Transhipping Inc.

INTERNATIONAL FORWARDING LOGISTICS

EXCLUSIVE SOLE AGENTS FOR CEYLON SHIPPING LINES IN CANADA

REGULAR PERSONAL EFFECTS SHIPMENTS BY SEA & AIR TO SRI LANKA

For Shipping Schedule Visit
www.ceycantranship.com

For further information contact
Kumar (905) 673-9873

SRI LANKA'S BEST CLEARING FACILITIES

COLOMBO
Ceylon Shipping Lines Ltd
760 Dr Danister De Silva Mw,
Colombo 9
Tel : 2680301 – 308

KANDY
Ceylon Shipping Lines Ltd
175 Parangantota Road
Mavilmada - Kandy
Tel : 812 234356/57/59

BATTICALOA
Ceylon Shipping Lines Ltd
134 Main Street
Addalachenai - 09
Tel : 067 2277302

OUR AGENTS ACROSS CANADA

Head Office
(905) 673-9873

Toronto/ New Market/Durham region
Sam (647) 986-2393

Brampton/Mississauga/Halton /Peel region
Neel (647) 891-9445

Ottawa
Iggy - 613 799 3519 /613 237 3569

Hamilton/Waterloo /St Catherines
Dharmaweera (519) 760-1280

Montreal
Gana (514) 573-0093

Edmonton/Calgary
Randy (604) 399-8785
Email : randy.kulasekare@kmrgloballogistics.com

Vancouver/British Columbia
Randy (604) 273-4911
KMR Global Logistics Ltd.
135 & 140 - 14480 Knox Way Richmond
British Columbia, V6V 2Z5
Email : admin@kmrgloballogistics.com

United Kingdom :
Atlas Shipping 430 High Rd
Willesden London NW10 2HA
Tel: 02024596633 - Mobile 07949143535

1981 Boylen Road, Unit #5, Mississauga, Ontario L5S 1R9
sales@ceycantranship.com web: ceycantranship.com

வீட்டு விலையும் விற்பனை முகவரும் 2

- வேலா சுப்ரமணியம்

புதிய தொழில் நுட்பங்கள்:

நாளாந்தம் பொதுவாக எல்லாத் துறைகளிலும் தொழில்நுட்ப வளர்ச்சிகள் ஏற்பட்டுக்கொண்டே இருக்கின்றன. இருக்கக் கூடிய குறிப்பிட்ட தொழில்சார்ந்த புதிய தொழில் நுட்பங்களை சாதாரண பொது மக்கள் உடனுக்குடன் அறிந்து கொள்ள வாய்ப்பில்லை. எனவே காலத்திற்குக் காலம் புதிதாக வரும் தொழில்நுட்பங்களை கற்று, அறிந்து அவற்றின் மூலம் முதற்தரமான சேவையை வழங்கக் கூடிய முகவரைத் தேர்ந்து எடுப்பதன் மூலம் அதிக பலனைப் பெறலாம்.

ஒரு வீடு விற்பனை முகவர் தனது தொழிலைச் செய்வதற்கு பொதுவாக ஒரு தொலைபேசி, கணினி, தொலைநகல் இயந்திரம், Printer போன்றவற்றை வைத்திருப்பது அவசியம். ஆனால் மேற் குறிப்பிட்ட எதுவும் இல்லாமல் முகவராகப் பணியாற்றுபவர்கள் எல்லாச் சமூகத்திலும் இருக்கவே இருக்கிறார்கள். கைத்தொலை பேசி இல்லாமல் ஒரு முகவரா என்று பலரும் ஆச்சரியப்படலாம். ஆனால் கைத்தொலைபேசியே இல்லாத ஒரு முகவரூடாக நான் வீட்டை விற்றுப் பட்டபாடு இன்னும் நினைவில் இருக்கிறது.

வீடு விற்பனை அலுவலகங்களுக்குச் சென்று அங்குள்ள வசதிகளையும் இயந்திரங்களையும் பாவிப்பவர்கள் பலர் இருக்கிறார்கள். அது தப்பே இல்லை. வீடு விற்பனைத்துறையில் நேரம் என்பதும் துரிதம் என்பதும் பல லட்சம் டொலர்களைத் தரக்கூடியவை என்பதை பல சந்தர்ப்பங்களில் எனது அனுபவரீதியாக உணர்ந்திருக்கிறேன். இது யாரும் மறுக்கமுடியாத உண்மை.

பல முகவர்களிடமும் கைத்தொலைபேசி இருக்கும் ஆனால் அவர்களது இலக்கங்கள் விளம்பரப்படுத்தப்படாது இருக்கும். குறிப்பாக MLS Listingஐ பார்த்தால் முகவரின் தொலைபேசி இலக்கத்திற்குப் பதிலாக அவர்களது அலுவலக தொலைபேசி இலக்கமே போடப்பட்டிருக்கும். குறிப்பிட்ட முகவருடன் தொடர்பு கொண்டு உடனடியாக ஏதாவது தகவல் பெறவேண்டும் என்றால் அல்லது முடிவு எடுக்கவேண்டுமென்றால் அவலுவலக இலக்கத்துடன் தொடர்பு கொண்டு செய்தியை விடவேண்டும் பின்னர் அலுவலகம் குறிப்பிட்ட முகவருக்குச் செய்தி அனுப்பி, அதன் பின்னர் அவர் தொடர்பு கொண்டால் மட்டுமே பேசமுடியும். இதில் பல முகவர்கள் செய்திகளுக்குப் பதில் அளிப்பதே இல்லை, சிலர் காலம் கடந்து அழைப்பார்கள். அத்தகைய அழைப்புகளும் பதில்களும் சில வேளைகளில் பலனற்றவையாக போய்விடும். ஒரு சில முகவர்கள் மட்டும் உடன் அழைப்பார்கள். உரிய தகவல்களைப் பரிமாறுவார்கள். மாறாக ஒரு குறிப்பிட்ட முகவருடன் அவரது கைத்தொலைபேசி மூலம் உடன் தொடர்பு கொள்ளும் பட்சத்தில் எவ்வளவு இலகுவாக முடிவுகளை எடுத்துவிடமுடியும் என்பதை அனுபவத்தில் தான் ஒருவரால் உணர்ந்துகொள்ள முடியும். எனவே ஒரு முகவரைத் தெரிவு செய்யும் போது அவரது நேரடித் தொலை பேசி இலக்கம், அவரை எவ்வளவு தூரம் அணுகக்கூடியதாக உள்ளது என்பதையும் அவர் எவ்வாறு தனது தொடர்பாடல்களைப் பேணிவருகிறார் என்பதையும் நன்கு ஆராய்ந்து முடிவுகளை எடுங்கள்.

தொழில்நுட்பம் என்று கூறும்போது புதிய தொழில்நுட்பம் இல்லாவிட்டாலும் சில அடிப்படைக் கூறுகளாவது கடைப்பிடிக்கப்பட வேண்டும். ஒரு முகவருக்கு ஓர் ஒப்பந்தத்தை தயார் செய்து அனுப்பினால், அது கைச்சாத்திடப்பட்ட பின்னர் திரும்பி வரும் போது அல்லது மாற்றங்கள் செய்து திரும்பி வரும் போது அவற்றை வாசிக்க முடியாத நிலை இருக்கும். இத்தகைய திருப்பி அனுப்பப்படும் ஒப்பந்தங்கள் சலவை செய்யப்பட்ட வையா? என்றுகூட சில வேளைகளில் நினைக்கத் தோன்றும். தொலை நகலில் திருப்பி அனுப்புவது மின்னஞ்சலில் திருப்பி அனுப்புவது இவை தான் சாதாரண நடைமுறை. ஆனால், அவை ஏனோ முறையாகப் பயன்படுத் தப்படுவதில்லை. எல்லோரிடமும் 'Smart Phone' இருக்கும். இவற்றில் ஒரு சிறு Scan செய்யும் மென்பொருளை பதிவிறக்கம் செய்து வைத்திருந்து பயன்படுத்தினால் கூட, தரமான பத்திரங்களைப் பரிமாற முடியும். குறிப்பாக ஒப்பந்தங்களை நிரப்பும் போதும் கைச்சாத்திடும்போதும் 'கறுப்பு' மை பேனாக்கள் பயன்படுத்தப்படவேண்டியது அவசியம். அது மட்டுமன்றி ஒரு முகவர் தன்னிடம் தரமான தொழில் நுட்பம் இருந்தபோதும் மறுபக்கம் இருக்கக்கூடிய மட்டமான தரங்களில் உள்ள முகவர்களின் சேவைகளையும் சமாளிக்கும் விதத்தில் செயற்படக்கூடிய முகவர்களை தெரிவு செய்தல் அதிக பலனளிக்கும்.

நீங்கள் ஒரு வீட்டை வாங்க அல்லது விற்க முற்படும்போது நீங்கள் இருப்பது ஒரு இடமாக இருக்கும், வேலை செய்யுமிடம் இன்னொன்றாக இருக்கும். அதேவேளை உங்கள் முகவர் இருப்பது வேறு ஒரு இடமாக இருக்கும். மிகவும் பரபரப்பான வாழ்க்கை முறையில் சிக்கி ஓய்வு நேரமே இல்லாது ஓடிக்கொண்டிருக்கும் காலச் சூழலில் கிடைக்கக்கூடிய தொழில் நுட்பங்களை பயன்படுத்தினால் மட்டுமே வீடு சம்பந்தப்பட்ட கொடுக்கல் வாங்கல்களைச் சிறப்பாகவும், சிரமமின்றியும் குறுகிய நேரத்தில் செய்யமுடியும். உதாரணமாக ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படும் போதும்,

நூலகம்
இணையத்தில் ஒரு நூல் உலகம்
www.noolaham.org

கைமாறப்படும் போதும் விற்பனை செய்பவர்களையோ அல்லது வாங்குபவர்களையோ நேரில் சந்தித்து கைச்சாத்துப் பெறுவது வழமை. சம்பந்தப்பட்டவர்கள் வேலை முடிந்து வரும்வரை காத்திருப்பதும் அல்லது அவர்களைத் தேடி முகவர்கள் ஓடித்திரிந்து சந்திப்பதும் முன்னர் இருந்த நடைமுறைகள். தற்போதும் இதனையே பல முகவர்கள் பின் பற்றுகிறார்கள். ஆனால், இருந்த இடத்தில் இருந்த படியே 'Docu Sign' போன்ற நடைமுறை மூலம் சட்டரீதியான கைச்சாத்துக்களை கைத்தொலைபேசி பாவிப்பதன் மூலம் கூட சில நிமிடங்களில் செய்துவிடமுடியும். இதன் மூலம் நேரத்தை மிச்சப்படுத்துவது மட்டுமல்ல பலவித ஏமாற்றங்களையும் தேவையற்ற சிரமங்களையும் தவிர்த்துக்கொள்ளலாம். எனவே ஒரு முகவரைத் தெரிவு செய்யும் பொது இத்தகைய நடைமுறைகள் சாத்தியமா? என்பதை முன் கூட்டியே அறிந்து கொண்டு செயற்படுவது பல விதத்தில் நன்மை பயக்கும்.

விளம்பரங்களும் சிபாரிசும்:

ஒரு சிறந்த முகவரைத் தெரிவு செய்வதற்கு விளம்பரங்களை மட்டும் பார்த்து இறுதி முடிவெடுக்காமல் அவரைப்பற்றி உங்கள் நண்பர்கள் உறவினர்களிடம் விசாரித்து, அவர்களின் அண்மைக்கால அனுபவத்தின் அடிப்படையில் முகவர்களைத் தெரிவு செய்தல் பொருத்தமானது. தங்களது சுயநலங்களுக்காக சிபாரிசு செய்யக்கூடிய நண்பர்களையோ, உறவினர்களையோ இனங்கண்டு கொள்ளவேண்டிய பொறுப்பு உங்களுடையது. குறிப்பாக உங்கள் தேவை என்னவோ அதற்கேற்ற அனுபவம் பெற்றிருக்கக் கூடிய ஒருவரிடம் இருந்து சிபார்சினைப் பெற்று செயற்படுதல் பலனளிக்கும்.

குறைவான தரகு (Low Commission):

குறிப்பாக ஒரு வீட்டை ஒருவர் விற்கின்ற போது குறைந்தளவு செலவில் விற்க முற்படுவது இயல்பு. பொதுவாக சந்தைப்படுத்தும் முகவருக்கு 2½ வீதமும் வாங்கிக் கொடுக்கும் முகவருக்கு 2½ வீதமுமாக தரகு முறை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆனால் போட்டியின் காரணமாக இந்த விகிதாசாரங்களைக் குறைப்பதில் நுகர்வோர் குறியாக இருக்கிறார்கள்.

ஒரு வீட்டைச் சந்தைப்படுத்தும் போது அதற்கென ஒரு முகவர் பல செலவுகளைச் செய்து விளம்பரப்படுத்த வேண்டி இருக்கும் பல மணித்தியாலங்களை செலவிட வேண்டி இருக்கும். அது மட்டுமன்றி குறிப்பிட்ட முகவர் அவர் சார்ந்திருக்கும் வீடுவிற்பனை நிறுவனத்திற்குரிய கட்டணங்களையோ அல்லது ஒரு குறிப்பிட்ட விகிதாசாரத்தையோ செலுத்த வேண்டியிருக்கும்.

எனவே அளவுக்கதிகமாக தங்கள் கட்டணங்களைக் குறைக்கும் முகவர்கள் உரிய சேவைகளைக் கொடுக்கவே முடியாது. எனவே குறைந்த கட்டணத்தால் கவரப்படும் நுகர்வோர் பலவித ஏமாற்றங்களைச் சந்திக்க வேண்டிவரும் என்பது தவிர்க்க முடியாதது. இது ஆரோக்கியமானதல்ல. குறைந்த கட்டணம் என்ற பெயரில் மட்டமான சேவைகளைக் தரக்கூடிய முகவர்களைத் தவிர்த்து, சிறந்த, முறையான சேவைகளைத் தரக்கூடிய முகவர்களைத் தெரிவு செய்தல் அவசியமானது. உண்மையில் ஒரு வீட்டை உரியமுறையில் தயார் செய்து வாங்குபவர்கள் பலரது கவனத்தையும் உள் வாங்கக் கூடிய முறையில் சந்தைப்படுத்தும் போது சாதாரண சந்தை விலையைவிட அதிக விலைக்கு ஒரு வீட்டை விற்கமுடியும். முகவரின் தரகுக் கட்டணத்தை குறைப்பதால் வரும் இலாபத்தைவிட வீட்டை அதிக விலைக்கு விற்பதால் வரும் இலாபம் பன்மடங்காக இருக்கும் என்பதைக் கவனத்திற்கொள்ளவும். சுருங்கக் கூறுவதானால் ஒரு நல்ல விலைக்கு ஒரு வீட்டை விற்கும் சந்தர்ப்பத்தில் மறைமுகமாக வாங்குபவரே விற்கும் முகவரின் தரகுக் கட்டணத்தையும் பொறுத்துக் கொள்கிறார் என்பது ஆழமாக சிந்திப்பவர்களுக்குப் புரியும்.

எனவே, ஒருமுகவரைத் தெரிவு செய்யும் போது குறைந்த கட்டணத்தில் மோகம் கொள்ளாது, சிறந்த சேவையையும் உங்கள் வீட்டிற்கு உச்சப் பெறுமதியையும் பெற்றுத் தரக்கூடிய முகவர்களைத் தெரிவு செய்யுங்கள்.

பதிவு செய்யப்பட்ட அதிகாரமளிக்கப்பட்ட முகவர்கள்:

ஒரு முகவரைத் தெரிவு செய்யும் போது அவருக்கு உரிய பகுதியில் விற்பனை அல்லது கொள்வனவு செய்ய அனுமதி உண்டா? பதிவுசெய்யப்பட்டவரா? என்பவற்றை முன்கூட்டியே அறிந்து கொள்ளுதல் நல்லது. விற்பனை அனுமதி பெற்றவர் ஒருவராக இருக்க, அதிகாரம் பெறப்படாத முகவரின் உதவியாளர்கள் பல இடங்களில் களத்தில் இருப்பதைக் காணமுடிகிறது. பிரச்சினை என்று வருகின்றபோது பலவித சட்டச் சிக்கல்களை எதிர்கொள்ள இவை வழிவகுக்கும்.

ஒருவருக்கு மாகாண ரீதியான அனுமதிப்பத்திரம் இருந்தாலும் பிரதேச அடிப்படையில் சில கட்டுப்பாடுகள் இருக்கும். உதாரணமாக Toronto Real Estate Boardல் பதிவு செய்யப்பட்டுள்ள ஒரு முகவர் Ottawa Real Estate boardல் பதிவு செய்யப்படாமல் இருக்கலாம். உதாரணமாக Kingston cityல் ஒருவர் ஒரு வீட்டை விற்கவோ அல்லது வாங்கவோ முற்படும்போது அந்த பிரதேசத்திற்

குரிய Real Estate boardல் பதிவுசெய்யப்படாத ஒரு முகவரைத் தேர்ந்தெடுத்தால் பல அசௌகரியங்களைச் சந்திக்க நேரிடும். எனவே இவற்றைக் கவனத்தில் எடுத்து முகவர்களைத் தெரிவு செய்தல் நன்று.

விருதுகள் பெற்ற முகவர்கள்:

எந்தத்துறையிலும் ஒருவர் விருதுகள்பெற்றுக் கௌரவிக்கப்படுகி-றார் என்றால் அவரது சேவையை அவர் சார்ந்த நிறுவனமோ அல்லது பொதுமக்களோ அங்கீகரித்து கௌரவிக்கிறார்கள் என்று தான் அர்த்தம். வீடு விற்பனைத் துறையிலும் வருடா வருடம் அதிக வீடுகளை விற்பனை செய்த முகவர்கள் ஒவ்வொருவித தர நிர்ணய அடிப்படையில் விருதுகள் கொடுக்கப்பட்டு கௌரவிக்கப் படுகிறார்கள். எனவே உயர் விருது பெற்றவர்கள் ஏற்கனவே அத் துறையில் திறம்படச் செயற்படுகிறார்கள் என்பது உறுதிப்படுத்தப் பட்டிருக்கிறது.

மறுபுறம், அதி உயர்விருதுகள் பெறும் முகவர்கள் அவரது துறை யில் பரபரப்பாக இருப்பதால் தனிப்பட்ட கவனத்தை இழக்கும் சந்தர்ப்பமும் உண்டு என்பதையும் கவனத்தில் கொள்ளவும்.

மதிப்பாய்வு (Review):

தற்போதய சூழ்நிலையில் எதற்கு எடுத்தாலும் ஒரு பொருளை வாங்க முன்னரோ அல்லது சேவையைப் பெற முன்னரோ அவை பற்றி மதிப்பாய்வு செய்து விட்டுப், பின்னர் அவற்றைப் பெற வாய்ப்பு உள்ளது. அந்த வகையில் ஒரு முகவரைத் தெரிவு செய்ய முன்னர் கணினியின் துணைகொண்டு அவரைப்பற்றி இலகுவில் ஆய்வு செய்து விடலாம். Google என்பது ஒரு அரு மையான வழிகாட்டி.

அது மட்டுமன்றி சமூக வலைத்தளங்களின் ஊடாக அவர்களது சுயவிளம்பரங்களுடன் சேர்த்து சில உள்ளார்ந்த பண்புகளையும் தொழில்சார் மதிப்பாய்வுகளையும் அறிந்து கொள்ளமுடியும்.

காலம் கடந்தபின், ஐயோ! இவரைப் பற்றி முதலில் தெரியாமல் போய்விட்டதே! என்ற ஏக்கத்தைத் தவிர்க்க இவை ஓரளவு வழி வகுக்கும்.

சுருங்கக் கூறுவதானால், இந்நாட்டில் பொதுவாக ஒரு முகவரைத் தெரிவுசெய்வதென்றால் குறைந்தது மூவரை நேர்முகப்பரீட்சை செய்வார்கள். பின்னர் தகுதி கண்ட ஒருவரைத் தெரிவு செய்வார் கள். நாங்களும் இத்தகைய நல்ல நடைமுறைகளைப் பின்பற்ற லாம்.

ஏற்கனவே கடந்த இதழில் குறிப்பிட்டது போல உறவினர், நண் பர்கள், உடன்தொழில் புரிபவர்கள் என்ற உறவு நிலைகளைக் கடந்து, பல ஆயிரம் டொலர்கள் சம்பந்தப்பட்ட கொடுக்கல் வாங்கல்களை ஏற்றபடி முன்னெடுக்க உதவக் கூடிய சரியான முகவர்களைத் தெரிவு செய்வதிலேயே வாழ்நாளில் உங்களுக்கு ஏற்படக் கூடிய இலாபமும் நஷ்டமும் தங்கி உள்ளது.

வீடு விற்பனையின் போது வீட்டுப்பரிசோதனை, அடமானக்கடன் ஒழுங்கு, சட்டத்தரணி ஒழுங்கு, Moving, Staging, Professional Pho-tography, Painting and handy man jobs எனப் பல்வேறு தேவைகளுக்கும் முகம் கொடுக்கவேண்டிய தேவை ஏற்படும். இவை எல்லாவற்றையும் சிறப்பாக ஒழுங்கு செய்யக்கூடிய முக வர்களைத் தேர்ந்து எடுத்துவிட்டால் எல்லாம் சிறப்பாகவும் மகிழ் வாகவும் நிறைவடைந்து நிம்மதியான
வாழ்வும் கிடைக்கும்

சிந்தியுங்கள்! செயற்படுங்கள்!

velasubramaniam@thaiveedu.com

தேடல் தரும் பயணம்

- மாத்தளை சோமு

வாழ்க்கையே ஒரு பயணம் எனச் சொன்னாலும், மனிதர்களின் வாழ்க்கையில் பல்வேறு நோக்கங்களோடு பயணங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. ஆதியில் மனிதர் மெள்ளமெள்ளமாய் நகரத் தொடங்கிய போது தான், தான் வாழ்ந்த உலகமே பெரியது என உணரத் தொடங்கினர். அதற்குப் பிறகுதான் அறிவு விரியத் தொடங்கியது. உலகத்தில் வாழ்ந்த மனிதர்கள் ஒரே இடத்தில் இருந்திருந்தால் பல்வேறு மாற்றங்கள், உலகத்தில் உருவாகியி ருக்காது. மனிதர் நகர, நகரத்தான் மாற்றங்கள் உருவாகின. அவற்றோடு மனிதரும் மாறத் தொடங்கினர்.

உலக வரலாற்றைப் பார்க்கிறபோது, பயணம் போன இனமே, பல்வேறு சாதனைகளை நிகழ்த்தியிருக்கிறது. பயணம் போனவர் களே சாதனை செய்திருக்கிறார்கள். மார்க்கப்போலோவின் பய ணம் தமிழரின் கடல் நாகரிகத்தைச் சொல்லியது. கொலம்பஸ் ஸின் பயணம் அமெரிக்காவைத் தேடியது. காப்டன் குக்கின் பய ணம் ஆஸ்திரேலியாவைச் சொந்தமாக்கியது. வாஸ்கொடகாமா வின் பயணம் கிறிஸ்தவத்தை கீழைத் தேச நாடுகளுக்கு அறிமுக மாக்கியது. காந்தியின் தென்னாபிரிக்கப் பயணம் இந்திய நாட் டிற்கு சுதந்திரம் உருவாக வழிகாட்டியது.

பயணம் மனிதருக்குத் தேவையானது. எனவே பயணம் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதில் நமக்குத் தெளிவு தேவை. தெரிந்த வர்களை, உறவினர்களைப் பார்க்கிற பயணம் இந்தப் 'பயண'த் திற்குள் வராது. ஓர் ஆங்கிலேயர் இன்னொரு ஆங்கிலேயரைப் பார்க்கப் பயணம் போகமாட்டாராம். அதில் உண்மையும் இருக் கின்றது. ஆங்கிலேயர் ஆங்கிலேயரைப் பார்க்கப் போகாததால் தான், புதிய புதிய நாடுகளையும், வெவ்வேறு மனிதர்களைக் கண் டனர். அமெரிக்கா, ஆஸ்திரேலியா, கனடா, நியூசிலாந்து போன்ற நாடுகள் அப்படித்தான் அவர்கள் பார்வையில் 'கண்டுபிடிக்கப் பட்டவை'யாகும்.

மேல்நாட்டவர் பயணத்தைத் திட்டமிடுவதில் கெட்டிக்காரர்கள். அவர்களுக்கு உதவ பல பயண நூல்கள் இருக்கின்றன. அந்த நூல்களில், எந்த நாட்டில் என்ன பிரச்சினை? அங்கு எப்படி நடக்க வேண்டும் என்பதைத் தெளிவாக எழுதியிருக்கிறார்கள். உதாரணமாக இந்தியாவுக்கு வருகிற மேல்நாட்டினர், இந்தியா வின் பாதுகாப்பான குடிநீர், பேரம் பேசி பொருள் வாங்குவது பற்றியெல்லாம் தெரிந்துதான் பயணமாக வருகிறார்கள். எனவே அவர்கள் ஆப்பிரிக்க வெய்யில், அரேபிய பாலைவனம், நோர்வே குளிர், சீன நெரிசல் ஆகியவற்றைத் தெரிந்து கொண்டே பயணம் போகிறார்கள். ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டிற்குப் பய ணம் போவதில் பல நன்மைகள் கிடைக்கின்றன. ஒரு பயணம் மனிதர்களைப் புரிந்து கொள்ளவும், இன்னொரு உலகத்தை அறி யவும் உதவும்.

ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டிற்குப் போகிற போதுதான் அந்நாட்டு மொழி, பண்பாடு, தனித்துவம் என்பதை அறிய முடி யும். எந்த ஒரு பயணத்தின் முடிவிலும், புதிய நண்பர்களைச் சந் திக்காவிட்டால் அப்பயணம் தோல்வியில் முடிந்தது என்பது அர்த் தமாகும். விஞ்ஞானம் கைகூடாத காலத்தில் நமது முன்னோர்கள் பயணத்தின் மூலம் வியக்கவைக்கிற சாதனைகளைச் செய்திருக்கி றார்கள். இன்றைக்கு அறிவியல் வீட்டுக்குள் விழுந்து கிடக்கிற காலத்தில் மனிதர்கள் பயணத்தின் மூலம் சாதனை செய்யாவிடில் வேதனையே மிஞ்சும். ஆகவே ஒவ்வொருவரும் தொடங்குகிற பயணம் இன்னொரு தொடக்கத்தை உருவாக்க வேண்டும். வெறு மனே பொழுது போக்கவும் நாளைக் கடத்தவும் பயணம் தேவை யில்லை.

நாங்களும் இதுபோன்று பயணம் போனால்தான் எங்களைத் நாங் களே எடை போட்டுப் பார்த்துக்கொள்ள முடியும். தாய்மொழியின் வலிமையை அதனைப் போற்றுகிற சீனா, ஜப்பான், ரஷ்யா, ஜெர்மனி, மலேசியா போன்ற இன்னும் பல நாடுகளுக்குப் போனால் உணரமுடியும். தமிழரின் வாழ்க்கைக் கூறுகளில் மறைந்திருக்கிற பண்பாட்டு அறிவியலை அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா, பிரிட்டன், ஜெர்மனி, கொரியா போன்ற இன்னும் பல நாடுகளுக்குப் பயணம் போனால் புரியும். ஏழ்மையின் கோரத்தை சோமாலியா, எதிதோப்பியா போன்ற இன்னும் பல நாடுகளுக்குப் போனால் அறியலாம். அரசியல் கட்சி தாண்டிய மனித உரிமையின் மேன்மை நிலவுவதை நேர்வே நாட்டிற்குப் போனால் பார்க்கலாம். மலை, மரங்கள் ஆகியவற்றின் அழகை யும் அதன் இயற்கை நிலையில் போற்றுவதையும் சுவிஸர்லாந்து நாட்டில் காண முடியும். அகோர வெய்யிலை, சுட்டெரிக்கிற சூரி யனை பாலைவனத்திற்குப் போனால் பார்க்கலாம். எறும்புகளுக்கு இணையான ஜப்பானியர்களின் சுறுசுறுப்பை ஜப்பானில் காண லாம். இவ்வாறு பயணப்பட்டியல் போடலாம்.

ஆனால், பயணம் ஒவ்வொரு மனிதருக்கும் முக்கியமானது. எங்கு பயணம் போனாலும் அங்கு எதையாவது படித்துவிட்டு வரவேண் டும். இளைய வயதில் பயணம் போனால் உன் கல்விக்கான கல் வியைக் கற்று வர வேண்டும். வயது வந்தவர் பயணம் போனால் அனுபவங்களைப் பெறவேண்டும். ஒரு மனிதர் உலகத்தில் பய ணம் போனால் அவருக்கு என்ன வேண்டுமோ என்ன அறிய வேண்டுமோ அதனைத் தேடி, அதனைத் தான் வாழும் நாட்டிற் குக் கொண்டு வந்து ஒப்பிட்டுச் சிந்திக்க வேண்டும். போகிற பய ணத்தில் இட்லியையும், சோற்றையும் தேடி அலையக் கூடாது. எல்லை தாண்டி இருக்கிற அறிவு, பண்பாட்டுச் செல்வங்களைத் தேட வேண்டும். அவற்றை அறிந்து புரிந்து கொண்டு வந்தாலே போன பயணம் வெற்றி அடைந்ததாக அர்த்தமாகிறது.

மயக்கத்தில் மாயும் வாழ்வு:

மயக்கமா? தயக்கமா? மனதிலே குழப்பமா? என்ற கவிஞர் கண்ணதாசனின் பாடல் புகழ் பெற்றது. இந்த மயக்கம், தயக்கம் ஆகிய இரண்டும் வெவ்வேறு திசை சார்ந்தவை. ஆனால் அவை ஒன்றோடு ஒன்று தொடர்பு கொண்டவையாகும். மனிதர்களுக்கு அவ்வப்போது மயக்கமும் வரும். தயக்கமும் வரும். சிலருக்கு சில காலத்தில் மயக்கம் வரும். சிலருக்கு சில நேரத்தில் தயக்கம் வரும். இந்த மயக்கத்தையும் தயக்கத்தையும் ஒப்பீடு செய்கிற போது, மயக்கம் தயக்கத்தைக் கபளீகரம் செய்து அறிவை மயக் கத்தில் ஆழ்த்திவிடுகிற அபாரசக்தி கொண்டதாக இருக்கிறது. தயக்கம் என்ற கதவை திறந்து விடுகிறபோதே மயக்கம் அதனை விழுங்கிவிடத் தயாராக இருக்கிறது. ஆகவே தயக்கத்தை விட மயக்கமே சக்தி வாய்ந்தது.

புராணங்களையும் வரலாறுகளையும் பார்க்கிறபோது மயக்கத்தில் வீழ்ந்த மன்னர்கள் எழுந்து நிற்கவே இல்லை. ராமாயணக் கதை யைப் பார்க்கின்றபோது சீதை மீது கொண்ட மயக்கமே இரா வணனை வீழ்த்துகிறது என்பது தெளிவானது. இதே போன்று உலக வரலாற்றில் மயக்கத்தால் மன்னர்கள், பெரிய மனிதர்கள் வீழ்ந்து போயிருப்பது பதிவாகியுள்ளது. ஆனால், இந்த மயக்கம் பதவியால், போதையால், புகழால், பொருளால், மங்கையால் வரும். ஒரு மன்னனோ, மந்திரியோ மயக்கமானால் நாட்டின் முன் னேற்றம் கெடும். அரசின் மயக்கம் ஆட்சியைக் கெடுக்கும். மந்தி ரியின் மயக்கம் அவர் சார்ந்த துறையைக் கெடுக்கும். ஒரு சமூ கமே மயக்கத்தில் கிடந்தால் அடுத்த தலைமுறை மேல் எழாது.

இன்றையத் தமிழ் சமூகத்தை அரசியல் மயக்கம், சினிமா மயக் கம், மத மயக்கம், மேலை நாட்டு மயக்கம், பிற மொழி மயக்கம் என்பன வெவ்வேறு கோணாங்களில் வீழ்த்திக் கொண்டிருக்கிறது. தமிழரின் தெளிவற்ற அரசியலால் தனி மனித தலைமை மயக்கத் தில் வரலாறு வீணடிக்கப்படுகிறது. சினிமா மயக்கத்தால் சிந்தை கலங்கிய ஒரு தலைமுறை உருவாகிக் கொண்டிருக்கிறது. மேல் நாட்டு மொழி மற்றும் நாகரீக மயக்கத்தால் கல்விப் பாதை சீர ழிந்து கொண்டிருக்கிறது. வெறும் சடங்குகளையும் சாமியார்களை யும் நம்புகிற மதமயக்கம் தெளிவில்லாத ஆன்மீகத்தைப் போதிக் கிறது. உலகத்தில் வேறு இனத்தில் இல்லாத இந்த மயக்கங்கள் தமிழரைப் பிடித்துப் பயமுறுத்திக் கொண்டிருக்கின்றன.

தமிழ் சினிமா கடல் கடந்தும் மயக்கத்தைத் தமிழருக்குக் கொடுக் கின்றது. இந்த சினிமா மயக்கம் கலையாது இருக்க தமிழ் அரசி யல் தலைமை கவனமாய் காவல் செய்கிறது. ஆக அரசியல், சினிமா மயக்கங்கள் தமிழரின் அறிவுப்பாதையைத் திசை திருப்பு கின்றன.

மக்களோ சினிமா, அரசியல் கலந்த மயக்கத்தில் விழுந்து கல் விப்பாதையில் தெளிவில்லாமல் போய்க் கொண்டிருக்கிறார்கள். ஒரு இனம் எழுந்து நிற்க வேண்டுமானால் அரசியல், சினிமா போன்ற மயக்கங்களில் இருந்து விடுபட வேண்டும். சினிமா மயக் கம் நிஜ வாழ்க்கையை நிழலாக்கிவிடும். அரசியல் மயக்கம் இனத்தின் உரிமைகளைப் பாழடித்துவிடும். அரசியல் தேவையா னது, சினிமா தேவையானது, ஆனால் அந்த அரசியல், சினிமா மீதான மயக்கம் தேவையற்றது.

தமிழர்களிடம் நிலவுகிற அரசியல் மீதான, சினிமா மீதான மயக் கத்தினால் மொழி, பண்பாடு, உரிமை, ஜனநாயகம் என்பனவற் றில் தெளிவில்லாத நிலை கோலோச்சுகின்றது. இதனை நீர்த்து விடாமல் வைத்திருக்கின்றன தமிழகத்தின் தொலைகாட்சி ஒளிப ரப்புகள். இவ்வொளிபரப்புகள் கட்சிகளின் சார்பிலும், சினிமாக்கா ரர்கள் சார்பிலும் இயங்குகின்றன. உலகெங்கும் காண முடியாத வாறு தமிழகத்தின் முக்கிய அரசியல் கட்சிகள் ஏதோவொரு வழி யில் தொலைக்காட்சி ஒளிபரப்புகளை நடத்துகின்றன. இவர்கள் காட்டுகிற செய்திகளில் உண்மைத் தன்மை மறைக்கப்பட்டு தத்த மக்கு ஏற்றவாறும் ஒளிபரப்புச் செய்யப்படுகின்றன. இது இவ்வாறு இருக்க இன்னொரு பக்கத்தில் கட்சி சாராத தொலைகாட்சி ஒளி பரப்புகள் சினிமா சார்ந்த நிகழ்ச்சிகளுக்கே முன்னுரிமை கொடுக் கின்றன. இவ்வாறு அரசியல், சினிமா மயக்கம் வீடுகள்தோறும் விதைக்கப்படுகின்றன. புதிதாகவரும் தலைமுறையினருக்கு அறி ஞர்களோ, விஞ்ஞானிகளோ, நேர்மையானவர்களோ, ஒழுக்கமான வர்களோ தெரிய நியாயம் இல்லாமல் போய்விடுகின்றது.

ஓர் இனமும் எந்த மயக்கத்தினுள்ளும் சிக்காமல் கல்வி அறிவு டன் பட்டறிவும் பெறவேண்டும். அப்போது தான் அந்த இனம் தலைநிமிர்ந்து வாழமுடியும். முன்னே சொன்ன போலிச் சினிமா, அரசியல் மயக்கங்களின் நிழல்கள்கூட வீட்டில் படியாமல் வரும் தலைமுறையினரைப் பாதுகாக்க வேண்டும். அப்போதுதான் வரும் தலைமுறையில் அரசியல், சினிமா போன்ற மயக்கங்கள் செத்துப் போகும். இனமும் மொழியும்
தலைநிமிர்ந்து நிற்கும்.

somu@thaiveedu.com

DEBT FREE CREDIT SOLUTION

Seeking freedom from DEBT?
We offer Total Debt FREE SOLUTIONS

Elankeeran .T
Certified Insolvency Counsellor
By Canadian Association of Insolvency and Restructuring Professionals (CAIRP)

• கடன் தொகையினை 80% வரை குறைத்து அதனை வட்டியின்றி ஒரு மாதத் தவணையில் கட்ட ஏற்பாடு செய்தல்.
We provide expert advice on how to consolidate and reduce debt payments safely without borrowing money.

• பாதுகாப்பான முறையில் கடனை அடைப்பது பற்றிய அறிவுரையும் ஆலோசனையும் தரப்படும்.
We shield you from your creditors and offer you a guranteed protection.

SETTLEMENT
CONSUMER PROPOSAL
BANKRUPTCY

Cell. 416.834.7227 Fax. 1.877.800.789
Tel. 416.434.1522 freedebt.toro@gmail.com

Head Office:
10 Milner Business Court, Suite 334
Toronto, ON. M1B 3C6

Branch Office:
101 Palstan Road
Mississauga, ON. L4Y 4E7

www.TotalDebtFree.ca

தந்தை எனும் தலைவன்

- சி. நற்குணலிங்கம்

ஒரு குழந்தை தன் சமூகத்தில் காணும் முதல் ஆண் தந்தையே. தந்தை ஒரு ஆசான். எல்லாப் பிள்ளைகளுக்கும் தந்தைதான் முதல் கதாநாயகன். தந்தையின் பந்தம் உணர்வுகளால் உணரப்படக்கூடியது. 'அன்னையும், பிதாவும் முன்னறி தெய்வம்' என்ற வாக்கியத்துக்கு ஏற்ப உலகின் கடவுளர்களாக பெற்றோரையே வணங்கினோம், வணங்குகிறோம்.

தந்தை தந்தையாகவே இருக்க வேண்டும். அதைத்தான் பிள்ளைகளும் எதிர்பார்க்கிறார்கள். ஒரு தந்தை நல்ல எண்ணங்களுடன் வாழ்ந்தால் அது பிள்ளைகள்மீது விதைக்கப்பட்டு நல்ல எண்ணங்களால் சந்ததி சிறப்புப்பெறும். தன் உழைப்பாலும், உணர்வாலும், அன்பெனும் குணத்தாலும் தன் பிள்ளைகளுக்கு ஒரு சிறந்த தோழனாய், தலைவனாய் திகழும். தந்தைக்கென்று சரித்திரத்தில் என்றும் ஓர் அத்தியாயம் உண்டு.

அன்னையிட்ட உணவு உடலுக்கு அமுது. தந்தையிட்ட தைரியம் மனதுக்கு அமுது. நமக்கு முதல் குருவாக இருந்து இந்த உலகத்தை நமக்கு உணர்த்துபவரும் நமது தந்தைதான் என்பது அனைவரும் அறிந்ததே. சிறந்த தந்தை என்பவன் தன் வாழ்க்கையில் சந்தித்த தடுமாற்றங்களையும், பாதக அனுபவங்களையும் தன் பிள்ளைகள் சந்திக்கக்கூடாது என்று நினைப்பவன். வாழ்க்கை என்பது மிக எளிது என நமக்கு கற்றுக்கொடுக்கும் ஆசிரியர் நம் தந்தையே.

சிலரது வாழ்க்கையில் அவர்களது தந்தையே குருவாக, பின்பற்றும் நபராக விளங்குகிறார். ஒழுக்கத்தையும், அன்பையும் கூட்டி வளர்ப்பவராகவும் கண்ணும் கருத்துமாகக் காப்பவராகவும், விழி மூடினாலும் பிள்ளைகள் நினைவாக இருப்பவர்தான் தந்தை. அறிவெனும் அமுதூட்டி அகிலத்தில் ஒழி வீசி வாழ வழிகாட்டுபவர் தந்தை. சில குடும்பங்களில் தாயாகவும், தந்தையாகவும் இருந்து குடும்பத்தைக் காக்கிறார்கள். தந்தை சொல் கேட்டு வளரும் பிள்ளைகள் தடம்மாறிச் செல்வதில்லை. இதனால்த்தான் 'தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை' என்கிறார்கள். தந்தையர் தம் குடும்பத்தைப் பாதுகாத்து மனைவி, மக்களின் நல்வாழ்வுக்காக பல தியாகங்களைச் செய்து வாழ்ந்துவருபவர். 'திரைகடல் ஓடியும் திரவியம் தேடு' என்பதற்கமைய நாடுவிட்டு நாடு சென்று உழைத்துக் குடும்பத்தைப் பராமரிக்கும் தந்தையர் அதிகம். பொருளாதார வளம் தேடும் தந்தையருக்கு ஏற்படும் நெருக்கடிகளோ ஏராளம். 'சாண் ஏற முழம் சறுக்கும்' நிலையே இன்றைய நிலைப்பாடு. குடும்ப முன்னேற்றத்துக்காக தந்தையர் சுமக்கும் சுமைகளோ அதிகம். இதனால்த்தான் மேற்கு வேர்ஜினியாவில் 1908ம் ஆண்டு ஆலயத்தில் நடைபெற்ற ஆராதனையின்போது தந்தயரைக் கௌரவிக்க வேண்டுமெனவும் விழா ஆரம்பிக்கப்பட்டது. அன்றுமுதல் 'தந்தையர் தினம்' கொண்டாடப்பட்டுவருகின்றது.

தந்தை எடுத்துக்காட்டாக விளங்கவேண்டிய ஒரு முக்கியமான பாத்திரம்.

இன்றைய காலத்தில் வாழ்க்கை என்ற வண்டி இயந்திரமயமானதாய் மாறிவிட்டது. வாழ்க்கையை இன்பமயமானதாய் மாற்றுவதும், துயரக்கடலாக மாற்றுவதும் தந்தையின் வாழ்க்கை முறையிலும் தங்கியுள்ளது. தந்தை அடுத்தவரின் சுதந்திரத்தை மதிக்கவும் நேசிக்கவும் தெரிந்தவரானால் என்றும் மகிழ்ச்சிதான். தந்தைமீது பிள்ளைகளின் பிரியம் அதிகமாக இருக்குமானால் நிச்சயமாக தந்தைக்கு பாசம், அன்பு அதிகமாக இருக்கும். வீட்டை நிம்மதி தரும் இடமாக வைத்திருந்தால்த்தான் வீட்டில் குதூகலம் குடிகொள்ளும். இல்லையேல் சோகமாகவே வீடு காட்சியளிக்கும்.

ஒரு நாட்டின் அத்திபாரம்கூட ஒவ்வொரு வீட்டிலும் இருந்துதான் உருவாக்கப்படுகின்றது. அதாவது வீட்டில் வளரும் குழந்தைகளின் மூலமே ஆரம்பிக்கப்படுகின்றது. வீடு என்பது உடலுக்கும், உள்ளத்துக்கும் அமைதிதரும் இடமாக அமையவேண்டும். வன்முறைகள், வேற்றுமைகள், தாக்கங்கள் வீட்டுக்குள் நிகழ்வதை அனுமதிக்காத தந்தை வீட்டில் இருந்தால் ஆளுமையான குழந்தைகள் உருவாக முடியும். 'தாயொடு அறுசுவைபோம், தந்தையொடு கல்விபோம்' எனப் பொதுவாகச் சொல்வார்கள். குழந்தை வளர்ப்பில் தந்தையின் பங்கு வலியது. தந்தையின் கவனத்துடன் வளர்க்கப்படும் குழந்தையின் எதிர்காலம் அழகும், அர்த்தமும் பொதிந்ததாக மாறுகிறது. பிள்ளை வளர்ப்பு என்பது உணவை சுவைபடச் சமைப்பதுபோல, உணவில் உப்பு, காரம், புளிப்பு, உவர்ப்பு இவையாவும் சரியான அளவில் இருந்தால்த்தான் உணவை சுவைபட உண்ண முடியும்.

தந்தை என்ற உறவு சரியாக அமைந்தால் பிள்ளைகளின் தலை எழுத்தே மாறிப்போகும். ஒரு குழந்தையின் ஆளுமை உருவாக்கத்தில் தந்தைக்குப் பெரிய பங்கு உண்டு. 'சான்றோன் ஆக்கு தல் தந்தைக்குக் கடனே' புறனானூறு கூறுகிறது. 'தந்தை மகற்கு ஆற்றும் நன்றி அவையத்து முந்தியிருப்பச் செயல்' வள்ளுவன் கூற்று. 'தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை' கொன்றைவேந்தன் மொழிகிறது. கண்ணன் பாட்டில் கண்ணனை பல்வேறு உறவு நிலைகளில் நோக்கிப் பாடியுள்ள பாரதியார் 'கண்ணன் என் தந்தை' எனும் தலைப்பில் படைத்துள்ள பாடல் சிறப்பானது. 'எங்கள் தந்தையர் நாடென்ற பேச்சினிலே ஒரு சக்தி பிறக்குது மூச்சினிலே' என பாரதியார் தன் பாடலில் தந்தைக்கு புகழ் மாலை சூடியுள்ளார். இவை தந்தையின் பெருமைகளை பறை சாற்றுகின்றன.

சொர்க்கமே என்றாலும் அது சொந்த வீடு போல வருமா...

Uthayan Alex Sivasambu B.Sc. (Hons), M.B.A

Broker

Ottawa: 613.276.SALE (7253)
Toronto: 416.659.SELL (7355)
alex-sivasambu@coldwellbanker.ca, www.sivasamburealty.com

COLDWELL BANKER

தந்தை இரவிலே தாமதித்து இல்லம் செல்வதை இயன்றவரை குறைத்துக்கொள்ள வேண்டும். தாமதிது வீடு வந்தால் தகுந்த காரணம் சொல்ல வேண்டும். தப்பிருந்தால் மன்னிப்பு கேட்பது நல்லது. வீட்டில் இயலாத நிலை இருந்தால் குடும்பத்துக்கு உதவ பின்வாங்கக் கூடாது. சின்னச் சின்ன சண்டைகள் தினந் தோறும் போட்டாலும் வீட்டில் சினம் கூடிப் பெருஞ்சண்டை வந்தி டாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். தந்தையால் மற்றவர்கள் கண்ணீர் வடிக்க அனுமதிக்கக் கூடாது. மாறாகக் கண்ணீர் வடியு மானால் வடிகின்ற கண்ணீர் ஆனந்தக் கண்ணீராகத்தான் இருக்க வேண்டும். ஆத்திரம் கூடினால் அடிக்கும் பழக்கத்தை அறவே வெறுத்திட வேண்டும். பிள்ளைகள் குற்றம் செய்தால் அணைத் துப் புரியவைக்க வேண்டும். பிள்ளைகள் நண்பர்களுடன் நட் பைத் தொடர அனுமதிக்க வேண்டும். அவர்களுக்கும் மனசிருப் பதை தந்தையின் மனம் புரிந்துகொள்ள வேண்டும். எந்தச் சந் தர்ப்பத்திலும் பொறுப்பற்ற தந்தையாக நடந்துகொள்ளக் கூடாது. அது வெறுப்பை ஏற்படுதி தந்தை பிள்ளைகளுக்கிடையில் பிரிவை ஏற்படுத்திவிடும்.

பல தந்தையர் எப்படி வாழவேண்டும் என்பதற்கு உதாரணமாகி-றார்கள். சில தந்தையர் எப்படி வாழக்கூடாது என்பதற்கு உதார ணமாகிப்போகிறார்கள். ஒரு தந்தைதான் தலைமைத்துவத்தின் முன்னோடியாகத் திகழ்கிறார். மனைவிக்குப் பிடிக்கும், மகளுக் குப் பிடிக்கும், மகனுக்குப் பிடிக்கும் என வாழும் அப்பாவுக்கு மறந்துபோய்விடுகிறது தனக்கு என்ன பிடிக்கும் என்று. நமக்கு கற்றுக் கொடுப்பவரெல்லாம் ஆசிரியரல்ல. யாரிடம் நாம் கற்றுக் கொள்கிறோமோ அவரே நமக்கு ஆசிரியர். இந்த வகையில் தந்தையும் ஆசிரியரே. தந்தையின் பாசம் எம் வாழ்வோடு கலந் தது, இணைந்தது. தந்தையின் பெருமை சொல்லி அடங்காது.

'ஒரு தந்தை நூறு ஆசிரியர்களுக்குமேல் ஆவார்' என தந்தைக்கு புகழாரம் சூட்டுகிறது இங்கிலாந்துப் பழமொழி. 'கடவுள் உயர இருக்கிறார். பூமியில் தந்தை இருக்கிறார்' என கடவுளுக்கு நிக ராக தந்தையை போற்றி உரைக்கும் ரஷ்யப் பழமொழி. 'தாயும், தந்தையும் செல்லாத பாதையில் நீ செல்ல வேண்டாம்' என எச்ச ரிக்கை விடுக்கிறது ஆபிரிக்கப் பழமொழி. 'ஒரு தந்தை பத்துக் குழந்தைகளைப் பேணி வளர்க்கலாம். பத்துக் குழந்தைகள் ஒரு தந்தையைப் பேணுவது அரிது' இது சீனப்பழமொழி. 'என் தந்தை எனக்கு எப்படி வாழவேண்டும் என்று நேரடியாகச் சொல்லிக் கொடுக்கவில்லை. அவன் வாழ்ந்தான் அதை உடனிருந்து நான் பார்த்துக்கொண்டிருந்தேன்' என்கிறார் கேப்ரியேல் கார்ஸியா மார்க்வெஸ். தந்தை பற்றி ஒரு மகனின் கூற்று 'அப்பா உங்கள் உயிரின் ஒரு துளியில் இருந்து என் உலகம் தொடங்குகிறது'. ஔவையாரின் பொன்மொழி 'அன்னையும், பிதாவும் முன்னறி தெய்வம்'. 'தந்தையைப்போல் ஒரு தெய்வம் உண்டோ? ஒரு மக னுக்குச் சர்வமும் அவர் என்றால் விந்தை உண்டோ? என்ற திரைப்பாடல் வரிகள், 'சிங்கம் என்றால் தந்தைதான். செல்வம் என்றால் என் தந்தைதான்' என்ற கவியரசு வைரமுத்துவின் வைர-வரிகள் தந்தையின் மகிமையை வெளிக்கொணர்கின்றன.

தம்மின்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லாம் இனிது

என்று தம் பிள்ளைகள் அறிவு மிக்கவராக இருப்பது தம்மைக் காட்டிலும் பூமியில் அழியாமல் தொடரும் உயிர்களுக்கெல்லாம் இனிது என்கிறார் வள்ளுவர்.

தகப்பனின் கண்டிப்பை உணராத பிள்ளைகள் கடைசியில் வருந் துவர், கலங்குவர். பொறுப்பு என்பது சாதாரண விடயமல்ல. நீ ஒரு அப்பாவாகும்போது அதை நீ கட்டாயம் உணர்வாய். உணக் காக வாழ்வின் இறுதிவரை போராடும் ஒரு உறவுதான் அப்பா. அதை நீ என்றுமே உதாசீனப்படுத்திவிடாதே. அம்மாவின் பாசம் கருணையில் தெரியும். தந்தையின் பாசம் அவரது கடமையில் புரியும்.

natkunalingam@thaiveedu.com

தந்தையர் நாள் ஜூன் 20

உங்கள் தந்தையை நினைத்துப் பாருங்கள்!

- பொதுவாக தந்தைகளின் இறுதிக் காலம் பெரும்பாலும் மௌனத்திலும், தனிமையிலும் சில சமயம் ஒதுக்கி வைக்கப் பட்டும், புறக்கணிப்பிலும் கழிய நேரிடுகிறது என்பது வருத்தத் துக்கு உரியது.
- இதனால் தான் தந்தைமார் தாம் உழைத்துக் கொண்டே இருக்க வேண்டும் என்றும், முற்றாக ஓய்வு பெற்று மூலைக்கு செல்வதற்கு முன்னர் மரணித்துவிட வேண்டும் என்றும் நினைக் கின்றனர்.
- குடும்பத்துக்காக உழைத்து உழைத்து ஓடான பின்னர் அவரை கௌரவமாக வாழ வழிசெய்ய வேண்டும். மூலையில் இருத்தி, மௌனத்தில் ஆழ்த்தி, 'மூன்று வேளையும் சாப்பிட்டு விட்டு பேசாமல் கிடந்தால் போதும்' என்ற மனப்பான்மையுடன் தான் பல பிள்ளைகள் தந்தையரை நடத்தி வருகின்றனர்.
- வயதான தந்தை தன் குடும்பத்தினரிடமிருந்து மிகக் கொஞ்ச மாகத் தான் கேட்பார். ஏனெனில் கேட்டுப் பழகாத குடும்பத் தலைவராக இருந்தவர். கொடுக்க மட்டுமே தெரிந்து வைத்தி ருந்தவர். எனவே வயதான காலத்தில் வாய் திறந்து கேட்க மாட்டார். குடும்பத்தினர் தான் அவரின் தேவைகளை அறிந்து நிறைவேற்றி வைக்க வேண்டும்.
- வாசிக்கும் பழக்கம் உள்ளவரானால் குறைந்த பட்சம் வாரப் பத்திரிகையாவது வாங்கிக் கொடுங்கள்.
- சில்லறைச் செலவுகளுக்காக கொஞ்சம் பணமும் கொடுங்கள்.
- மூலையில் அமர்த்தாமல் சிறிய வேலைகளைக் கொடுங்கள்.
- பேத்தி, பேரன்களை அவரிடம் இருந்து பிரிக்காதீர்கள். அவர் கள் தந்தையால் கொண்டாடப்படும் செல்வங்கள்.
- குடும்பத் தேவைகளைப் பார்த்து பார்த்து செய்தவருக்கு, இப்போது உங்கள் காலம், பார்த்துப் பார்த்து செய்வதற்கு.
- ஒருவர் மறைந்த பின்னர், அதைச் செய்யவில்லையே, இதைச் செய்திருக்கலாமே என்று எண்ணிப் புலம்புவதைவிட அவர் உயிருடன் இருக்கும்போதே தந்தையின் இறுதி காலம் அமை தியாகக் கழிவதற்கு வழி வகை செய்யுங்கள்.
- வயதானவர்களுக்கு தனிமை மிகக் கொடுமையானது. ஒரு சிறிய வானொலியை வாங்கிக் கொடுங்கள். முடிந்தால் தனி டி.வி இல்லையேல் உங்களுடன் அமர்ந்து தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை பார்க்கவாவது விடுங்கள்.
- தன் மனைவியை இழந்த தந்தையின் தனிமை மிகமிகக் கொடு மையானது என்பதை உணர்ந்து கொள்ளளுங்கள்.
- குடும்பத் தலைவன், அதிகாரம் செலுத்தியவன், சம்பாதித்தவன், பிறர் மதிப்புக்கு உரியவன் என்றெல்லாம் வாழ்ந்து விட்ட தந்தை, தன் அதிகாரமும் அன்பும் நெருக்கமும் காட்டக் கூடிய, எது வேண்டுமானாலும் பகிர்ந்து கொள்ளக்கூடிய மனை வியை இழந்தபின் கையறு நிலைக்கு ஆளாகிவிடுகிறார் என் பதை உணர்ந்து கொள்ளுங்கள்.
- இவற்றை உணர்ந்து தந்தைக்கு மரியாதை செய்யுங்கள், அவர் கௌரவிக்கப்பட வேண்டியவர்...!

கடன் தொல்லையா?



பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

- ✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை
- ✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது
- ✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.
- ✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

Trustee in bankruptcy இணைந்து ஒரே கூரையின் கீழ் இயங்கும் ஒரு தமிழர் நிறுவனம்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

Sri Vallipuranathar

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive
Scarborough, ON M1H 3G5
Tel: **416.439.0224**
Cell: **416.450.5011**
Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com
contact@creditsolutioncanada.com

பெண்களுக்கெதிரான வன்முறைகளில் ஊடகங்களின் பங்களிப்பு

- நிலாந்தி சசிகுமார்

வன்முறை என்பது கோழையின் ஆயுதம் என்பதைப் புரிந்துகொள்ளாதவர்களும் ஆணாதிக்கக் கட்டமைப்புக்குள் ஆட்பட்டிருப்போரும் வன்முறையை மிகச் சாதாரணமாகக் கைக்கொள்கின்றனர். உண்மையில் வன்முறை என்பது உடலை மாத்திரமன்றி உள்ளத்தையும் பாதிக்கும் என்பதும், அது மனிதரின் அனைத்துச் செயற்பாடுகளிலும் தாக்கத்தை ஏற்படுத்தி வாழ்க்கை முறையையே மாற்றியமைக்கக் கூடிய சக்தி வாய்ந்தது என்பதும் யாருக்கும் புரிவதில்லை. எவ்வளவு பெரிய உருவமாக இருந்தாலும் ஒரு சிறு முள் தைத்ததும் எவ்வாறு துடித்துப் போகின்றோம். அதே போல் தான் வன்முறையின் தாக்கத்துக்கும் அளவில்லை. அதன் தாக்கம் மிகப் பெரிது என்பது உண்மை. இது இனம், மதம், மொழி, பால் கடந்ததொன்று. வன்முறைக்கு உட்படும் நபர் யாராக இருப்பினும் அவருக்காகக் குரல் கொடுப்பது அவசியமானதொன்றாகும். பெரியவர்கள், சிறியவர்கள், வயதானவர்கள், குழந்தைகள், பெண்கள், திருநர்கள், ஆண்கள் என யார் வேண்டுமானாலும் வன்முறைக்கு ஆளாக்கப் படலாம்.

இன்னுமொரு உடல் மீது அதிகாரத்தைப் பிரயோகிக்க வன்முறையை கட்டவிழ்த்துவிட யார், யாருக்கு, எப்போது, உரிமை வழங்கினார்கள்? குடும்பத்தில் நிகழும் குடும்ப வன்முறைகள் குறிப்பாக ஆண்களால் பெண்களுக்கு நடைபெறுவது மிகச் சாதாரணமாகப் பார்க்கப்படுகிறது. அது குடும்பம் என்ற நிறுவனத்தால் அங்கீகரிக்கவும்படுகிறது.

இது இவ்வாறு இருக்க ஊடகங்களில் பெண்களுக்கெதிரான வன்முறைகள் நாளுக்கு நாள் அதிகரிப்பதை யாரும் உணராமல் இருப்பது ஒன்றும் ஆச்சர்யம் இல்லை. காரணம் கண்ணெதிரே நிகழும் வன்முறைகளையே கண்டும் காணாமல் இருக்கையில் மறைந்திருக்கும் ஊடக வன்முறையிலிருந்து எவ்விதத்தில் பாதுகாப்புப் பெறுவது? குறிப்பாக பாலியல் சார்ந்த வன்முறைகள் ஊடகங்களின் ஊடாக எவ்விதம் அசுர வேகத்தில் வளர்ச்சியுறுகின்றன என்பதைப் பற்றிய புரிதல் எத்தனை பேருக்கு உண்டு.

ஊடகங்களைப் பொறுத்தளவில் பெண்கள் எப்போதுமே ஒரு போதைப் பொருளாகவும் கிளுகிளுப்பூட்டும் பதுமைகளாகவுமே தென்படுவது வேதனையானது. விளம்பரங்களுக்காகவும் வாசகர்களை, வாடிக்கையாளர்களைக் கூட்டும் முயற்சியாகவும் இதனைக் கைக்கொள்கின்ற போது அதனால் பெண்கள் அனுபவிக்கும் அவதூறுகள் அவமானங்கள் பற்றி கிஞ்சித்தும் சிந்திக்காத போக்கு பெரும்பாலான ஊடகங்களிலும் உண்டு.

பெரும்பாலும் பொதுத்தளத்தில் இயங்கும் பெண்களை இழிவாகவும் மட்டமான எண்ணவோட்டத்துடனும் நோக்குபவர்கள் அதிகம். அதேசமயம் பொதுத் தளத்தில் இயங்கும் பெண்களுக்கு அதிகமான ஆண்கள் மற்றும் பெண்களுடன் தொழில்ரீதியிலான தொடர்புகளும் நட்பும் இருப்பது சகஜம். ஆனால், அதுதொடர்பான தவறான கண்ணோட்டத்தோடும் கீழ்த்தரமான சிந்தனைகளோடும் பிறரால் பார்க்கப்படுவதும் பேசப்படுவதும் ஊடகங்களில் அதிகரித்து வருகிறது.

ஆண்கள் தங்களுக்கென்று விதித்துக் கொண்ட தளங்களை பெண்கள் தங்கள் முயற்சியாலும் விடாமுயற்சியாலும் ஆளுமையாலும் தொட்டுச் செல்கையில் ஆச்சர்யப்படும் ஆண்கள் ஒரு கட்டத்தில் கோவப்பட்டு, பொறாமைப்பட்டு, அதுவே வெறுப்பாக மாறி விடுகிறது. இதனால் அப்பெண்கள் மீது மதம் மற்றும் கலாசாரம் என்ற போர்வையில் பாலியல் ரீதியிலான அடக்குமுறை சார்ந்த ஆணாதிக்க வாதங்களை முன் வைக்கிறார்கள். இதனால், தங்களுக்கு 'கலாச்சாரக் காவலர்கள்' என ஒரு போலியான வேடத்தைப் போட்டுக் கொள்கிறார்கள். பொதுவெளிக்குப் பெண்கள் வருவதைத் தடை செய்வதற்காகவும், இனி வர இருப்பவர்களுக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் நோக்கிலும், தற்போது பொதுத் தளத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் பெண்கள் மீது ஆண்கள் காட்டும் கையாலாகாத்தனமே பாலியல் அவதூறு ஆகும். கருத்தியல் ரீதியிலான விவாதங்களைத் தவிர்த்து வெறும் பாலியல் மற்றும் உடல் சார்ந்த விவாதங்களை முன்வைப்பதன் மூலம் பெண்களை அடக்கிவிடலாம் என்ற ஆண்களின் புத்திக்கு, பெண்கள் குறித்து ஆரம்பத்தில் இருந்து அவர்களுக்குப் புகட்டப்பட்டு வந்த கற்பிதங்களே காரணம்.

அதே வேளை, ஒருவரை சுதந்திரமாக இயங்கவிட மறுத்தலும் ஒருவகையில் வன்முறை தான். இதுபோன்று சின்னச்சின்ன விடயம் என்று கண்டும் காணாமல் விடப்படும் எத்தனையோ வன்முறைகள் காலப்போக்கில் மனவழுத்தத்தை ஏற்படுத்தி, அவர்களை தற்கொலை வரை துரத்தியுள்ளதை எத்தனை பேர் அறிவார்கள்? சமூகத்தின் பார்வையானது பாதிக்கப்பட்டவரையே - அதிலும் பெண்களையே குற்றவாளியாகப் பார்க்கும் போது, அவர்களுக்காக குரல் கொடுக்கவும் யாரும் முன்வருவதில்லை. காரணம், நாளை தங்களுக்கும் இவ்வாறான அவதூறுகள் வீசப்படலாம் என்ற பயம். ஆரம்பத்திலேயே ஒன்றிணைந்து, இவ்வாறான இழிவான செயல்களுக்கு எதிராகக் குரல் கொடுக்கும் போது, மீண்டும் மீண்டும் இவ்வாறான இழிசெயல்களால் பாதிக்கப்படுவதைத் தடுக்க முடியும் என்பதை யாரும் உணர்வதில்லை. அதே வேளை பாதிக்கப்பட்டவர்களுக்காக குரல் கொடுத்தும் போராடியும் வரும் நல்லுள்ளங்களும் இல்லாமலும் இல்லை.

ஊடகங்களில் பிரபலமாக இருக்கும் பெண்களை அடையாளம் கண்டு அவர்களுடன் நட்பு ரீதியிலான அழைப்பை விடுப்பதும் அதன் பின் நட்பு என்ற போர்வையில் அவர்களுடன் பேச்சை வளர்ப்பது குடும்பப் பின்னணி பற்றி அறிந்து கொள்வது அதைத் தொடர்ந்து வட்ஸ்அப் பேஸ்புக் மூலம் ஆபாசப் பேச்சுக்கள் படங்களை அனுப்புவது என காமத்துக்கான வெளியாக ஊடகங்களை ஆண்கள் பயன்படுத்துகின்றனர். பாலியல் பண்டமாக மாத்திரம் பெண்களைப் பார்க்கும் புத்தியே இதற்கான காரணம். அதிலும் நட்புத் தொடர்பு என்பதை வெளி உலகத்திற்குத் தெரியாமல் வைத்திருக்கவே அனேகமான ஆண்கள் விரும்புகின்றனர். நட்பில் இருக்கும் பெண்ணை தவறாகப் பயன்படுத்தும் நோக்க மன்றி இதற்கு வேறேன்ன காரணம் இருக்க முடியும்.

தற்போதைய பெருந்தொற்றுக் காலத்தில் பாடசாலைகளும் கல்லூரிகளும் மூடப்பட்டு அனைத்துப் பாடங்களும் 'சூம்' அப் மூல மாக முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கும் இக்காலப்பகுதியில் மிக மிக ஆபத்தான ஒரு சூழல் மறைமுகமாக ஏற்பட்டுள்ளது. ஆம், அது இளம் மாணவியரை தவறாக வழிநடத்துகின்ற அல்லது வழிப்படுத்துகின்ற செயற்பாடு. அண்மையில் பேசுபொருளாய் விவாதப் பொருளாய் மாறியுள்ள பத்மா சேசாத்ரி விவகாரம். கல்லூரியின் ஒரு ஆசிரியர் பெண் பிள்ளைகள் முன்னிலையில் அரை நிர்வாணமாக அமர்ந்து பாடம் நடத்தியமை மற்றும் மாணவிகளின் வட்ஸ்அப் நம்பருக்கு ஆபாச வீடியோக்கள் படங்கள் மற்றும் செய்திகளை அனுப்புவது போன்ற குற்றச் சாட்டின் பேரில் அளிக்கப்பட்ட புகார் மற்றும் கைது. இதைத் தாண்டி அவ்வாசிரியர் கொடுத்த வாக்குமூலம் இப்பிரச்சினையின் தீவிரத்தை அதிகப் படுத்தியுள்ளது எனலாம். இவ்வாறான இழிவான செயலை தான் இன்று நேற்று அல்ல கடந்த ஐந்து வருடங்களாக செய்து வருவ தாக சொல்லும் அவ்வாசிரியரின் பின்னால் பக்க பலமாக பலர் இருப்பது கொடுமையின் உச்சம். தான் மட்டும் இல்லை அனேக ஆசிரியர்கள் இவ்வாறு தான் நடந்து கொள்கிறார்கள் என்பதும், தற்போது வெளியாகிக் கொண்டிருக்கும் பாதிக்கப்பட்டவர்களின் கணக்கற்ற புகார்களும் எவ்வாறான ஒரு சமூகத்தை உருவாக்கி வைத்துள்ளது என்பதும் உருவாக்கப் போகின்றது என்பதுமாக பதைபதைப்புடன் பெற்றோர்கள் மற்றும் எதிர்காலம் முழித்துக் கொண்டிருக்கிறது.

இதற்கெல்லாம் காரணம் என்ன? பெண்கள் தமக்கு நடைபெறும் இவ்வாறான பாலியல் சார்ந்த வற்புறுத்தல்களையும் பாலியல் வன்முறைகளையும் வெளியில் சொல்லக்கூடாத ஒன்றாக சொல்லிச் சொல்லி வளர்த்த வளர்ப்புத் தானே. அதிலும் பாதிக்கப்பட்ட பெண்ணையும் அவளின் நடத்தை மற்றும் உடைகளிலும் குற்றம் சாட்டி குற்றவாளிக் கூண்டில் நிற்க வைக்க காத்திருக்கும் இச்சமூகத்திடம் என்ன நியாயத்தை பெண் எதிர்பார்க்க முடியும். எது நடந்தாலும் அதையும் தாண்டிச் செல்வோம் என்று கடந்து விட்ட எத்தனை எத்தனை பாலியல் கொடுமைகள் ஒவ்வொரு பெண்ணின் அடியாழத்திலும் புதைந்திருக்கின்றன தெரியுமா?

ஏதோ ஒரு கட்டத்தில் அந்தப் பெண் தன்னை சுதாகரித்துக் கொண்டால் குறித்த ஆணிடம் இருந்து விலகிக் கொண்டால் உடனடியான அந்த ஆண் எடுக்கும் நடவடிக்கை அந்தப் பெண் குறித்தான பாலியல் அவதூறை ஊடகங்களில் பரப்புவதுதான். பொதுவெளியில் சிறுநீர் கழிப்பதை எப்படி ஒரு ஆணால் குற்ற மாகப் பார்க்க முடியாதோ அதே போல் ஒரு பெண் மீது தான் வீசும் பாலியல் அவதூறுகள் குறித்தும் எந்தவொரு குற்ற உணர்வும் ஆணுக்கு இருப்பதில்லை. தங்களின் சந்தோசங்களையும் இச்சைகளையும் மட்டும் கருத்தில் கொள்ளும் ஆண்கள், குறித்த பெண் பற்றியோ அவளது குடும்பம் பற்றியோ எந்தக் கவலையும் படுவதில்லை. ஆனால், எந்தப் பெண்ணைக் கேட்டாலும் அவர்களை ரொம்பவே நம்பினேன், எனது குடும்ப விடயங்களைக் கூட நண்பன் என்ற முறையில் தான் கூறினேன், ஆனால் இப்படிச் செய்து விட்டான்... இவ்வாறு என்னை அசிங்கப்படுத்தி விட்டான்... என்று புலம்பித் திரிவார்கள். இதன்பின்னர் தங்களது பொதுத் தளத்தை மூடி விட்டு மீண்டும் நான்கு சுவரே கதியென ஆவார்கள்.

இந்த இடத்தில் தான் நாம் தவறு செய்கிறோம். ஆம். பொதுத் தளத்தில் இயங்கும் போது நாம் பல விமர்சனங்களுக்கு உட்படுத்தப்படுவோம் என்பதை ஓரளவிற்காவது உணரவும், அதில் மூழ்கி விடக்கூடாது என்ற முடிவுடனும் இறங்க வேண்டும்.

பாலியல் ரீதியிலான வசவுகள் மட்டுமே பெண்களை அடக்கும் என்ற அவர்களின் எண்ணத்தைத் தகர்ப்போம். அதிலிருந்து மீள ஒரே வழி, அதே வழியில் செல்லும் எமது உறுதியான பயணம் மட்டுமேயாகும்.

nilanthy.s@thaiveedu.com

தமிழ்ச் சினிமாவும் தடம்புரளும் தமிழரும்!

மா. சித்திவினாயகம்

புதுயுகத்தை பூவுலகில் புத்துயிராக்கும் ஜீவநாடி என்று நம்பியிருந்தவர்களின் எண்ணத்தைத் தின்றபடி ஏழைகளின் கண்ணீரை ஏப்பமிடத்துடித்து நிற்கிறது இந்தியச் சினிமா. சர்வதேச வர்த்தக வியாபாரிகளால் விரித்துக்கிடக்கிற இந்த அபாயகரமான வலையமைப்பினுள் சிக்கித் தவிக்கிற அப்பாவி மாந்தருள் புலம்பெயர் தமிழரும் கணிசமாக உள்ளனர்.

கலாச்சாரத்தின் காவலன் என்கின்ற கபடமான போர்வையினுள் கலாச்சாரச் சீரழிவை ஏற்படுத்துகிற அபாயகரமான இந்தச் சினிமாவை தங்கள் சுகபோக அரசியல், பொருளியல் காரணங்களுக்காக ஆகர்ஷித்துக்கொண்டிருக்கிற பல தமிழினத் தலைமைப் பேர்வழிகளை நானறிவேன். தமிழிலே பெயரில்லாத, தமிழ்ப் பெயர்வைக்க விரும்பாத, தமிழரேயல்லாத நடிக நடிகையரை, அவர்தம் படங்களை நீண்டவரிசையில்நின்று பார்த்துத் தொலைக்கின்ற, அதற்காக தொலைக்காட்சியோடும், கணினியோடும் கட்டியழுகின்ற பிரமுகர்கள்தான் இன்றைக்கு தமிழ்பெயர் மன்றங்கள் வைத்து மற்றவர் குழந்தைகட்கு தமிழ்பெயர் சூட்டத் துடிக்கின்றார்கள். இதற்கும் ஒருபடி மேலே போய் தமிழக படங்களின் உப்புச்சப்பற்ற பாடல்களுக்கு வெளிநாடுகளில் நடனமிட்டு மகிழ்கின்றார்கள். அத்தகு சினிமாப் பாடல்களையே நெட்டுருப்போட்டு தம் இலக்கிய மேடையெங்கும் பாடித் திரிகின்றார்கள்.

இந்நிலையில் 'நான் எல்லோரையும் கொல்லுவேன்' என்று ஈழ விடுதலைப்போராளி பேசுவதாக நடிகை சமந்தா அவர்களின் கொச்சை வசவோடு வெளிவரவிருப்பது Family Man 2வது தொடர் என்கின்றார்கள். அதில், சென்னையை மையமாகக்கொண்ட புலிக் கிளர்ச்சியாளர்கள் பாகிஸ்தானின் உளவு அமைப்பான (ISI) உடன் சேர்ந்துகொண்டு தீவிர வாதம் செய்வது போலான காட்சிகள் புகுத்தப்பட்டுள்ளதாக அதன் 'ட்ரெயிலர்' பேசுகிறது.

நடிகை சொல்வதைப் போன்று எல்லோரையும் கொல்வேன் என்கின்ற வன்முறை கொண்ட புரட்சிக்காரர்களாகவா ஈழ விடுதலைப் புரட்சியாளர்கள் இருந்தார்கள்? உண்மையில் தமிழர்களை ஆயுதம் ஏந்தவைத்த சிங்கள அரச பயங்கரவாதத்தின் வன்கொடுமையை மற்றும் அதில் இந்திய அரசின் வகிபாகத்தை மறைப்பதற்காக எடுக்கப்பட்ட இந்தியக் கனவான்களின் உத்தியே இத்திரைத் தொடர். இத்தனைக்கும் தமிழர்களுக்கு எதிராக இலங்கை யரசோடு இறுதி யுத்தத்தில் கைகோர்த்து நின்றதில் பாகிஸ்தானும் அதன் உளவாளிகளான ISIஐயும் முக்கியமானவர்கள். உண்மையை மூடி மறைக்கும் இத்தகு வன்மங்களைத்தான் புலிக்காய்ச்சல் காரர்களும், அரச ஒத்தோடிகளானோரும் 'தாம் செய்வது இன்னதுதான் என்று அறிந்து கொண்டே' செய்து வருகின்றார்கள்.

இன்று எல்லாவித அழித்தொழிப்பிற்குள்ளும், அவஸ்தைக்குள்ளும், இழப்பிற்குள்ளும் சிக்கிய எம் தமிழ்ச் சந்ததி தனித்துவத்தோடும் அதன் கலாச்சார விழுமியங்களோடும் நிம்மதியாக வாழ்ந்திட முடியாத நிலையை எட்டியிருக்கிறது. நாமிருந்த தமிழர் தேசம் சனி கிரகத்தைப் போல விஷவாயுக்களாலும், நிரம்பிய கந்தக மண்செறிவாலும், நாட்பட்ட கண்ணி வெடிகளாலும் நிரம்பிக் கிடக்கிறது. அவை காற்றில் பரவி மானுட சுவாசக்காற்றில் நோய்க்கிருமிகளை தருவிப்பதாக கொரோனாவிற்கு முன்னதாகவே சமூக ஆர்வலர்கள் அடிக்கடி சொல்லி வருகின்றார்கள். அந்த மண்ணின் வாழ்வாதாரம் சீர்குலைந்து கிடக்கிறது. பேரினவாதக் குடியேற்றம், கல் அகழ்வு, மணற்கொள்ளைகளால் தமிழர் நிலம் திட்டமிட்டு அழிக்கப்படுகின்றது. இலங்கையில் சீனர்களுக்கும், சீன மொழிக்கும் வழங்கப்பட்டிருக்கிற மொழியந்தஸ்துகூடத் தமிழிற்கில்லை.

இன்றைக்கு பிரிவினை கோரிப் போராடி அரசால் அழிக்கப்பட்டதாகச் சொல்லப்படும் புலிகள் இல்லை. இத்தகுசூழலில்கூட 60 வருடத்திற்கு மேலான தமிழரின் நியாயமான தேசிய அரசியல் போராட்டம் பற்றியோ அல்லது அவர்களின் ஜனநாயக உரிமை பற்றியோ இலங்கை அரசு பேச மறுக்கிறது. அரசு பேசவில்லை என்பதைவிட காலங்காலமாக புலி எதிர்ப்பு அரசியல் செய்தவர்கள் புலியில்லாவிடில் தமிழர்க்குப் பல புதுமைகளை படைப்போம் என்று புலியுள்ள காலங்களில் பேசியவர்கள் இன்றும் பிச்சைக்காரன் புண்போல அதையே பேசிக்கொண்டிருக்கிறார்கள். இவர்கள் இன்றைக்கு அரச ஒத்தோடிகளாகமாறி இருப்பதும், இவர்கள் இணக்கஅரசியல் பேசுவதும் பலரும் அறிந்த செய்திதான். மலையக மக்கள், முஸ்லிம் மக்கள், தமிழ் மக்கள், சிங்கள முற்போக்கு சக்திகள் என்போரை எல்லாம் ஒன்றிணைத்து போராட்டச் சக்திகளாக போராட்டத்தின் ஆதரவுச் சக்திகளாக்குவோம் என்று பேசிய, எழுதிய நண்பர்களும் இன்று மௌனிகளாகவே உள்ளார்கள்.

இன்று தோற்றுப் போய்க் கிடக்கின்றது தமிழரின் தலைவிதி.

இந்தத் தமிழரின் தோல்வி, இன்னும் எத்தனை காலம் புலியின் தோல்வியாக முத்திரை குத்தப்பட்டு, வடக்குக் கிழக்கில் வாழும் ஒட்டுமொத்த சமூகத்தின் மேலும் அப்பழியைச் சொல்லிக் கொண்டிருக்க முடியும். நமது மரபின், பண்பாட்டின், அறிவுப் பாரம்பரியத்தின் அத்தனை அசைவுகளையும், உள்ளடக்கியதாக நம்முன்னோர்களின் தலைமுறை தலைமுறையான உழைப்பினதும் சிந்தனையின் விளைச்சலாகப் பிறந்த தமிழ்மொழியை வாழவைக்க வென ஈழம் கேட்டுக் கோஷம் எழுப்பியவர்கள் நாமெல்லோரும் தான்.

ஈழம் கோரியதையும் தமிழர் உரிமைகள் அரசினால் இற்றைவரை நசுக்கப்படுதலையும் தனித்த புலிதோல்வியாக மட்டுமே நாம் இனியும் பொருதிக் கொண்டிருக்க முடியுமா? இன்று பிரிவினைவாதம் என்பதே பிழையென்று நல்ல பிள்ளையாகின்றார்கள் சிலர். கொழும்பில் தமிழர் இருப்பதைப் போல யாழ்ப்பாணத்தில் சிங்களவர் இருப்பதில் தப்பில்லை என்கின்றனர் சிலர். காலங்காலமாய் வாழ்ந்த மனிதரை அடித்துத் துரத்தி அகதியாக்கித் தொலைதூரங்களில் அவர்களைத் தொலைத்துவிட்டு, அவர்தம் பாழடைந்த வீடுகளில் புது ஜனரஞ்சனைகளை உருவாக்க வேண்டுமென்கின்றார்கள் புதிய பொருண்மிய வாதிகள்.

உண்மையில் தோல்வியிலிருந்து நாம் எதைக் கற்றுக்கொண்டோம்?

யாரும் கேட்காமல் மக்களுக்காக, அவர்கள் உரிமைக்காக நாங்களாகவே போராட வந்தோம் என்று முன்பு மார்தட்டிய எல்லா இயக்கத்தினரும் தமிழ் மக்களை முட்டுச் சந்தியில் கொண்டு வந்து நிறுத்திய குற்றவாளிகளில்லையா? நடந்தது இன அழிப்பல்ல. அது புலிப் பயங்கரவாதத்தை அழிப்பதற்கான நடவடிக்கையே என்பவர்கள் முள்ளிவாய்க்காலின் பேரழிவிற்குப் பிறகு ஏதாவது மாற்று உபாயங்களையும் மாற்று வேலைத்திட்டங்களையும் அரசுக்கு சிபார்சு செய்தோ அல்லது முன்னெடுத்தோ அந்த மக்களைநெறிப்படுத்தினார்களா?

அவர்களெல்லாம் இப்போ எங்கே? என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்?

ஈழத்தமிழரின் போர்க்குணத்தைக் கருவழித்து வேண்டுமென்றே பேரினவாத இராணுவம் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களைக் கொன்று குவித்தது என்று கண்ணாரக் கண்டவர்கள்கூட அதை இன அழிப்பு என்பதற்குத் தயங்குகின்றார்கள். முள்ளிவாய்க்கால்ப் படுகொலைகளை மானுடப்பேரவலமாக அதுவொரு காலத்துயரமாக கதை, கவிதை இலக்கியம் படைப்பவர்கள் ராஜபக்ஸாக்களின் காலடியில் நின்று தங்களைப் படம்பிடித்து வருகின்றார்கள்.

தமிழே தம் உயிர் மூச்சு என்று வாழுவதாகச் சொல்கிற புலம்பெயர் தமிழர்களின் பேச்சில் மட்டும் தமிழ் இருந்தால் சரியா? செயலிலும் அது வேண்டாமா?. அபத்தமும் ஆபாசமும் நிறைந்த வெற்றுச் சந்தைதான் நாம் கட்டி வளர்த்திருக்கிற சினிமா. இதையே கலை என்று கொண்டாடி அங்குல அங்குலமாக ரசித்துக்கொண்டிருக்கின்றார்கள் புலம் பெயர் மக்கள். தமிழ்த் திரைப்படங்கள் பேசத்தொடங்கி கிட்டத்தட்ட ஒரு நூற்றாண்டை அண்மித்து விட்டது. அதன் முழு நீளப் படமாக காளிதாஸ் 1931ல் வெளியாகியது. 1937ல்வெளியான சிந்தாமணி ஒரே திரையரங்கில், ஓர் ஆண்டுக்கு மேல் ஓடிய முதல் தமிழ்ப்படம், என்ற புதிய சாதனைபடைத்தது என்று பதிவு செய்கின்றார்கள். ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தின், தணிக்கை வாரியம் சுதந்திரப் போராட்டத்திற்கு வலுவூட்டக் கூடிய போராட்டக் குணமிக்க, உணர்வுமிக்க தமிழ்க் காவியங்களை தயாரிக்க இடம் தரவில்லை. முற்போக்கு எழுச்சி மிக்க படங்கள் தயாரிப்பு நிலையிலேயே கைவிடப்பட்டன. அதனால் புராணப் புரட்டுகளும், ராஜா ராணிக் கதைகளும் மட்டுமே வளர இடமுண்டாயிற்று. இதன் உச்சமாக தமிழில் வெளிவந்த முதல் வண்ணப்படமாக 'அலிபாபாவும் நாற்பது திருடர்களும்' 1956ல் வெளிவந்தது. இன்றைக்கு இராணிக்கதைகளிலிருந்தும், கட்டுக்கதைகளிலிருந்தும், காதல் கதைகட்கு கைமாறியிருக்கிறது தமிழ்ச்சினிமா. அதன் நீண்ட வரலாற்றில் தமிழையும், தமிழின அறிவியலையும், மானிடநேயத்தையும், மனுக்குல ஒற்றுமையையும் தட்டி எழுப்பித் தலை நிமிர வைத்துள்ளதென சொன்னால் அதைவிட அபத்தம் வேறில்லை.

சினிமாக்கள் கருத்துக்களை விதைக்கின்றன என்பதில் மாற்றுக் கருத்தில்லைத்தான். ஆனாலும், அந்தக் கருத்துக்கள் சமூகத்துக்கு உண்டாக்கும் நல்லவை என்ன? கெட்டவை என்ன? என்று பகுத்துப் பார்க்கவேண்டியவர்கள், திரைப்படம் எதைச் சொன்னாலும் கை எடுத்துக் கும்பிடும் பக்தர்களாகிய கையறு நிலையில் உள்ளமை அபாயகரமானது. அச்சம் தருவது. நடிக்கின்ற நடிகரைத் தெய்வமாக்கியும், காக்கும் ஆபத்தாண்டவர்களாக்கியும், மகிழ்கின்றவர்களிடத்து சினிமா ஒரு பொழுது போக்குச் சாதனம் என்கின்ற கருதுகோள் கொஞ்சமும் எடுபடாது. அவ்வாறு தெய்வமாக்கப்பட்ட பலர் தமிழக அரசியலில் மட்டுமல்ல உலக அரசியலிலும் நம் கண்முன் விரிகின்றார்கள். சமூகச் சீரழிவுகளை வளர்த்து விடும் புராணக் கட்டுக்களையும், இதிகாச இடர்களையும் மக்கள்மனதில் விதைத்து மக்களை மாக்களாக்கிவிட்ட சினிமா இன்றைக்கும் அக்கொள்கையிலிருந்து கொஞ்சமும் விலகவில்லை.

புலம்பெயர் தமிழரைச் சுற்றிப் படர்கின்ற இந்தச் சினிமா மோகம் வேறு தினுசில் அங்கு முகாமிட்டிருக்கிறது. நடிகர் நடிகையரை கொண்டாடங்களுக்கு, களியாட்டங்களுக்கு வரவழைத்தல், அவர்களைப் பிரதம விருந்தினர்களாக்கி விழாக்கள், சிறப்பு நிகழ்வுகள், கோவில் திருவிழாக்கள், விருது வழங்கல்கள், நூல் வெளியீடுகள், இசைக்கச்சேரிகள், நடன நிகழ்வுகள் என்று அவர்களின் மத்தியஸ்தத்தில் புலம் பெயர் தமிழர் கைதட்டுகின்றார்கள். வசந்த கால இரவுகள் நடிகர்கள் அல்லது சினிமாத்துறை சார்ந்த வரகள் இல்லாமல் புலம்பெயர் நிலத்தில் இல்லை என்கின்ற அளவிற்கு இறுகப் பின்னப்பட்டிருக்கிறது. தமிழிற்காகவும், தமிழர் நலனுக்காகவும் இயங்குவதாகச் சொல்கின்ற அமைப்புகள்கூட தமிழ் வல்லுனர்களை மொழிசார் புலைமையாளர்களை அழைப்பதற்குப் பதிலாக சினிமாக்காரரையே அழைத்து பார்வைப் பொருளாக்கிக் காட்சிப்படுத்திச் சந்தைப்படுத்துகின்றார்கள். இன்றைய பெருந்தொற்றுக் காலத்தில்கூட மெய்நிகர்செயலி (zoom) ஊடாக அவர்களைத்தான் தங்களின் முதன்மை அதிதி ஆக்குகின்றார்கள். இதில் மிகப்பெரிய சோகம் என்னவெனில் 'ஈழத்துத் தமிழர் பிரச்சினை எவ்வாறு முடியும்' என்று ஏதுமறியா அவர்களைப் போட்டுப் பிடுங்கிஎடுக்கிறது zoom வழியாகப் பல புலம் பெயர் ஊடகங்கள்.

கடந்த மே மாத தாய்வீடு இதழிற்காக முன்னாள் உதவி அரச அதிபர் மைதிலி அவர்களினால் எழுதப்பட்ட 'கர்நாடக சங்கீதமும் தமிழிசையும்' என்கின்ற அரிய ஆய்வில் 'தமிழிற் பாடியமையால் மேடையின் புனிதம் கெட்டது' என்று கச்சேரி செய்த மேடையை விட்டே கீழே இறங்கிப் போன ஆணவம் கொண்ட மேற்தட்டு இசைமேதைகளை அவர் இனங்காட்டியிருந்தார். அவ்வாறான மேட்டிமைக்காரர்களை அதிதிகளாக அழைப்பதையே பல புலம் பெயர் அரங்கேற்றங்கள் 'மாண்பு' என்று இற்றைவரை கருதுகின்றன.

பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் - தத்தம்
கருமமே கட்டளைக் கல்

என்கின்ற வள்ளுவர் வாய்மொழிக்கேற்ப, பொய்மையாளர்களின் முகத்திரையை கிழித்தெறியவும் காலம்காலமாய் போடப்பட்டிருக்கிற கட்டுக்களை உடைத்தெறியவும் வேண்டிய தேவை புலம் பெயர் மக்களுக்குண்டு. ஆனாலும், அவர்கள் மௌனத்துடன் வாழத் தலைப்பட்டுள்ளார்கள். இவர்களின் இத்தகு மௌனம் கொடுமையாளர்களின் சந்தர்ப்பவாதத்தினை-விடவும் கொடியது.

sithivinayagam@thaiveedu.com

திருமணம், பூப்புனிதநீராட்டுவிழா, பிறந்தநாள் அழைப்பிதழ்கள்
அச்சிட தொரன்ரோவில் புதிய காட்சியறையுடன்
MENAKA CARD
மேனகா அழைப்பிதழ்
Invitations for all occasions
80 Nashdene Road, Suite 113, (E Block), Toronto, Ontario, M1V 5E4. Tel : 416.335.1155

உலகின் முன்னணி காணி, வீடு விற்பனை நிறுவனமான **RE/MAX** முதல் தடவையாக யாழ் மண்ணில்

RE/MAX NORTH REALTY

கனடாவிலிருந்து தாயகத்தில் எப்பாகத்திலும் வீடு காணி வாங்க விற்க சிறந்த ஒரு நண்பர் உங்களை வழிநடத்த

LKR 15,000,000 CAD $ 109,025
Beach Side Land for sale in Pothuvil (Sangamam Village, Thirukovil)
Land Size: 01 Acre

LKR 77,500,000 CAD $ 574,582
Famous and spacious Commercial Building For sale in Prime Location Jaffna
Land Size - 34 Perch • Building Size - 5358sqft

LKR 140,000,000 CAD $ 1,015,257
Famous Palmera Eco Resorts for sale in Nilaveli, Trincomalee
Land Size :- 143 Perch • Total Sqft :- 38,932

LKR 6,000,000 CAD $ 43,236
House For Sale in Memorial Lane, Manipay
Land size - 16.05 Perch

LKR 5,000,000 CAD $ 35,449
House For Sale in Urumpirai West
Land size - 41.9 Perch

LKR 28,000,000 CAD $ 204,219
Brand New 2 Story House For Sale in Vannarpannai
Land Size - 23.1 Perch

LKR 10,000,000 CAD $ 70,877
Land for sale in Kanagar village, Pottuvil
Land Size - 732 Perch

LKR 2,800,000 CAD -$ 20,476
Land For Sale in Muthamil Road, Kottaddy
Land Size - 13.2 Perch

LKR 6,800,000 SOLD
House For Sale in Thinaveli
Land Size - 23.12 Perch

LKR 22,000,000 CAD $ 159,281
Land for sale in Tanankilappu, Chavakachcheri
Total Land Size - 110 Larchams

LKR 2,000,000 CAD $ 14,450
Land For Sale In Valvettithurai
Land Size - 30 Perch

LKR 2,100,000 SOLD
Land for sale in 3rd Cross St, Paasaiyoor
Land Size: - 30 Perch

LKR 4,000,000 CAD $ 28,937
Land For Sale In Valvettithurai
Land Size - 60 Perch

LKR 9,000,000 CAD $ 65,480
Land For Sale In Valvettithurai
Land Size - 83.8 Perch

LKR 12,000,000 CAD $ 87,692
House with Land For Sale in Allarai North
Land Size - 125perch

LKR 600,000,000 CAD $ 4,395,926
Luxurious Business complex For Sale In Kiramakottu Junction Point Pedro
Land Size - 61 Perch • Total Sqft - 50,771

LKR 27,500,000 SOLD
Two Story Luxury House For Sale in Nallur
Land Size: - 10 Perch

LKR 36,000,000 CAD $ 262,381
Land For Sale in Palaly road, Vasavilan
Land Size - 150 Perch

LKR 3,000,000 CAD $ 21,677
Land for Sale In Valvettithurai
Land Size - 45 Perch

LKR SOLD
Land For Sale in Kaithady
Land Size - 38 Perch

Lathan Varatharajah
Broker Owner
+94 76 493 3331
lathan@remaxnorth.lk

Sarmilin Rajeevan
Real Estate Representative
+94 77 227 6498
sarmilin@remaxnorth.lk

வீடு, காணி வியாபாரம் வாங்க விற்க நம்பிக்கையுடன் நாடுங்கள் நட்பான விற்பனை முகவர்கள் ஒரே முகவரியில்

+94 77 566 0000 • +94 21 468 0780

www.remaxnorth.lk

111C Kannathiddy Road, Jaffna, Sri Lanka

Nitharsan Antonrasa
Real Estate Representative
Mobile: +94 77 222 0243
nitharsan@remaxnorth.lk

M.T. Mohamed Ismail
Real Estate Representative
+94 77 221 6916
ismail@remaxnorth.lk

தனித்துவமான கலைஞன் துஷி ஞானப்பிரகாசம்

ஆழத்து முத்துக்கள்

- ப. ஸ்ரீஸ்கந்தன்

சிலர் மேன்மையுடன் பிறக்கிறார்கள்,
சிலர் உழைப்பால் மேன்மை அடைகிறார்கள்,
சிலர் மீது மேன்மை திணிக்கப்படுகிறது.

இவ்வாறு பாடசாலை நாட்களில் முதன்முதலாக நடித்த ஷேக்ஸ் பியரின் நாடகமொன்றில் இவர் பேசிய வசனம் போல, நாடகங் கள் இவர் மீது திணிக்கப்பட, நாடகவுலகில் மேன்மை பெற்றவர் எமது இம்மாதக் கலைஞன் துஷி ஞானப்பிரகாசம். ஆற்றலும் ஆளுமையும் மிக்க ஒரு தனித்துவமான நாடகக்கலைஞனாக அறி யப்பட்ட அவரை ஆழத்து முத்துக்களில் பதிவிடுவது மகிழ்ச்சி யைத் தருகிறது.

நாடகப் பேராசான்களால் கைபிடித்து அரங்கிற்கு அழைத்துவர ஆசிபெற்ற கலைஞன் இவர். நிகழ்ச்சித்தொகுப்பாளராக, வானொ லிக் கலைஞராக, நடிகராக, நெறியாளராக, தமிழிலும் ஆங்கிலத் திலும் புலமைமிக்க கலைஞனாக அரங்கிற்கு இவர் ஆற்றிய பணிகள் அளப்பரியன.

அச்சுவேலியைச் சேர்ந்த வில்பிரட் ஞானப்பிரகாசம் - இளவா லையைச் சேர்ந்த ரீட்டா இணையரின் மகனான இவர் அச்சுவேலி மேரி திரேசா மகாவித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வியையும் இள வாலை புனித ஹென்றியரசர் கல்லூரி, கொழும்பு புனித யோசப் கல்லூரி ஆகியவற்றில் உயர்கல்வியையும் கற்றவர். 18வது வய தில் கனடாவுக்கு குடிபெயர்ந்த இவர் ஒட்டவா பல்கலைக்கழகப் பட்டதாரியாவார்.

அச்சுவேலி, இளவாலைப் பகுதிகளில் நடைபெறும் நாடகம், கூத்துக்களைப் பார்த்த அலுபவமும் தாயாரின் கலையார்வமும் காரணமாக பாடசாலை நாடகங்களில் சிறுசிறு வேடங்கள் ஏற்று நடித்துக்கொண்டிருந்தவரின் ஆற்றலைப் பார்த்த புனித ஹென்றி யரசர் பாடசாலையின் ஆசிரியர் நாடக ஆசான் P.A.C. ஆனந்த ராஜா அவர்கள் தனது நாடகங்களில் இவரை நடிக்கவைத்தார். ஷேக்ஸ்பியரின் Midsummer Night's Dream, யூலியசீசர் போன்ற பல ஆங்கில நாடகங்களிலும் 'யானையும் சிட்டுக்குருவியும்', 'ஒரு மனிதன்' போன்ற பல தமிழ் நாடகங்களிலும் நடித்திருந்தார். இவர் நடித்த குழந்தை ம. சண்முகலிங்கத்தின் 'வால்ப்பேத்தை கள்' நாடகம் 40 தடவைகளுக்கு மேல் மேடையேற்றம் கண்டது. யாழ்ப்பாண கல்வி முறைகளையும் பெற்றோர் அதனைக் கையா ளும் வகைமைகளையும் கேள்விக்குட்படுத்திய இந்நாடகத்தை ஊர் ஊராகச் சைக்கிளில் சென்று மேடையேற்றினர். கல்லூரியைச் சேர்ந்த A.R. விஜயகுமார், L.M. றேமன் ஆகிய கலைஞர்கள் இவ ருக்கு நாடகப்பயிற்சிகள் அளித்தமை குறிப்பிடத்தக்கது.

தான் நடித்த 'இனிக் கதவு திறக்கட்டும்', 'வால்ப்மேத்தைகள்' ஆகிய நாடகங்களை அச்சுவேலி சுவாமி ஞானப்பிரகாசர் இளை ஞர் மன்ற ஆண்டு விழாவுக்காக, தனது 16 வயதிலேயே பழக்கி மேடையேற்றிமை காத்திரமான நெறியாளரின் வரவைக் கட்டியம் கூறியது.

கனடாவில் கல்லூரியில் படிக்கும் நாட்களில் கல்லூரியில் இடம் பெற்ற கலைவிழாவுக்கான நாடகப் பொறுப்பு துஷியின் மீது சுமத்தப்பட்டது. இதன் போது இளவாலை விஜேந்திரன் எழுதி L.M. றேமன் இயக்கி ஹென்றிசியன் கவின்கலை மன்றம் ஊரில் மேடையேற்றிய 'இனிக் கதவு திறக்கட்டும்' என்ற நாகடத்தின் நினைவுகளை மீட்டு, மீள்பிரதியாக்கம் செய்து மேடையேற்றினார். துஷி இயக்கி, பிரதான பாத்திரத்தில் நடித்த இந்நாடகம் தமிழ் இளைஞர்களின் எதிர்காலம் பற்றிப் பேசியது.ஒட்டாவா பல்கலைக் கழகத்தில் பயிலும் காலத்தில் பிரபல நாடக, இசைக் கலைஞ னான சிவசோதியின் தொடர்பு ஏற்பட்டு அவர் இயக்கிய பல நாடகங்களில் பிரதான பாத்திரங்களில் துஷி நடித்திருந்தார். ஒரே வீட்டில் வாழும் தமிழர்களுக்கிடையே ஏற்படும் முரண்கள் பற்றிய 'உன்னை நீ அறிவாய்', கோபம் மனிதனின் எதிர்மறையான சத்தியை எவ்வாறு தூண்டுகிறது என்பதை விளக்கும் 'கோபப்பட்டவரே', மாண வர்களின் பாலியல் ஈர்ப்புப் பிரச்சினைகளைப் பேசிய 'இடரினும் தளரினும்' என்பன இவ்வாறு இவர் நடித்த நாடகங்களாகும்.

கனடிய மண்ணில் வரலாறு படைத்த 'ஔவையார்' நாடகத்தில் பிற்பாட்டு பாடுவதற்காக கலைபண்பாட்டுக் கழகத்துக்கு உள் வாங்கப்பட்ட கலைஞர் துஷி, அந்நாடகத்தில் சிறு பாத்திரங்களி லும் நடித்திருந்தார். அதில் ஔவையாராகத் தோன்றிப் புகழ்பெற்ற கலைஞன் அன்ரன் பீலிக்ஸ் அவர்களுடன் ஏற்பட்ட நட்பு விசா லமானது எனக் குறிப்பிட்டார். தொடர்ந்து கலைபண்பாட்டுக் கழ கத்துக்காக பேராசிரியர் இ. பாலசுந்தரம் எழுதி அண்ணாவியார் கணபதிப்பிள்ளை அண்ணாவியம் செய்த 'கனடா வந்த கண் ணம்மை', அன்ரன் பீலிக்ஸ் இயக்கிய 'குன்றில் ஒலித்த குரல்', மலர்மணாளன் என்ற பெயரில் K.S. பாலச்சந்திரன் எழுதி இயக்

கிய 'மடிப்பிச்சை', 'கனவுகளும் தீவுகளும்', 'குரங்கு கைபட்ட தலையணைப்பஞ்சுகள்' மற்றும் S.S. அச்சுதன்பிள்ளை, கலை வாணி ராஜகுமாரன் ஆகியோரின் நாடகங்களிலும் இவர் நடித்தி ருந்தார். மேலும் கழகத்தின் தமிழ்க்கலை பண்பாட்டுக் கல்லூரி யில் ஆசிரியராகவும் இவர் கடமையாற்றினார்.

இதே காலகட்டத்தில், கனடா திருமறைக் கலாமன்றத்தினர் மேடை யேற்றிய பலிக்களம், கல்வாரிக் கலம்பகம் ஆகிய திருப்பாடுக- ளின் காட்சிகள் நாடகங்களிலும் துஷி நடித்திருந்தார். மேலும், இங்கு நடைபெற்ற மரியசேவியர் அடிகளாரின் புத்தக வெளியீட்டு விழாவில் மேடையேறிய 'யாழ்பாணன்' என்ற வார்த்தைகளற்ற நாடகத்தில் பாணனாக வேடமேற்றுப் பெரும் பாராட்டுக்களைப் பெற்றுக்கொண்டார். இந்த ஆற்றுகைக்காக மரியசேவியர் அடிகள் வழங்கிய அரங்கப் பயிற்சியானது வாழ்நாளில் கிடைத்த பெரும் அனுபவமாகக் குறிப்பிட்டார்.

இவ்வாறு பல்வேறு அமைப்புகளுடன் இயக்கிவந்த போதிலும் இவரைப் பிரபலமான கலைஞராக அடையாளப்படுத்தியது கனே டிய தமிழ் கலைஞர்கள் கழகமே. பிரபல கலைஞன் K.S. பாலச் சந்திரனின் வழிகாட்டலில் இயங்கிய அக்கழகம் நடத்திய பாரதி விழாவில் பாரதியின் 'குயில் பாட்டு' நாடகத்தில் பாரதியாக

நடித்து இவர் புகழ் சேர்த்தார். மேலும், கழகம் மேடையேற்றிய K.S. பாலச்சந்திரனின் கலாட்டாக்காரர்கள், காரோட்டம், தலை முறைகள் ஆகியவற்றில் பிரதான கதாபத்திரங்களில் இவர் நடித் திருந்தார். கனேடிய தமிழ் கலைஞர் கழகம் தயாரித்து K.S. பாலச்சந்திரன் இயக்கிய கனவுகளும் தீவுகளும், மென்மையான வைரங்கள் ஆகிய திரைப்படங்களிலும் துஷி நடித்திருந்தமை நினைவு கொள்ளத்தக்கது.

இதனது நீட்சியாக, உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் பாடசாலை பழைய மாணவர் சங்கத்தினர் நடத்திய 'வானவில்' நிகழ்ச்சிக்காக கலைஞர் சொர்ணலிங்கம் எழுதி கேதீஸ்வரன் இயக்கிய 'இது எழுதா விதியா', 'இது ஏமாற்றமா' ஆகிய நாடகங்களில் துஷி பிர தான பாத்திரங்களில் நடித்தார்.

நாடகத் தேடல்மிக்கவரான கலைஞர் துஷி ஞானப்பிரகாசம் அவர் களைக் காத்திரமான நெறியாளராக, தரமான மொழி பெயர்ப்பா ளராக அடுத்த பரிமாணத்துக்கு அழைத்துச் சென்றது மனவெளி கலையாற்றுக் குழுவின் அரங்காடல் நிகழ்வாகும். 2001ல் இடம் பெற்ற 9வது அரங்காடல் நிகழ்வில் மேடையேறிய மஹாகவியின் 'புதியதொரு வீடு' நாடகத்துடன் மனவெளி கலையாற்றுக் குழு வில் செயற்பட ஆரம்பிக்கிறார். இவர் மாயனாக வேடமேற்ற இந் நாடகத்தை செல்வன் நெறியாள்கை செய்திருந்தார். இந்நாடகத் தில் சுப்புலஷ்மி காசிநாதன், சுகந்தன் போன்ற கலைஞர்களும் பிரதான பாத்திரங்களில் நடித்திருந்தனர்.

பத்தாவது அரங்காடல் நிகழ்வில் அமெரிக்க நாடகாசிரியரான Murray Schisgal எழுதிய 'தள்ளுவண்டிக்காரர்கள்' (The Pushcart Peddlers) நாடகத்தை நெறியாள்கை செய்ததன் மூலம் தமிழ் நாடகவுலகில் சீரிய நாடக நெறியாளராக துஷி தன்னைப் பதிவு செய்கிறார். துஷி முதன் முதலாக நெறியாள்கை செய்த இந்நாட கத்தில் துஷியுடன் P.A. சுதாகரன், கஜேந்தினி செல்வராஜா ஆகி யோரும் நடித்திருந்தனர். புதிய நாட்டுக்கு வரும் இரு குடிவர வாளர்கள் எவ்வாறு தங்களுக்குள் போட்டி போட்டு மோதிக் கொள்கிறார்கள் என்பதைச் சித்திரிக்கும் இந்நாடகத்தை K.S. பாலச்சந்திரன் மொழிபெயர்த்திருந்தார். அடுத்த அரங்காடலில், வாசிப்பதற்கே கடினமான இந்திரா பார்த்தசாரதியின் 'காலயந்தி ரங்கள்' என்ற நாடகப் பிரதியை நெறியாள்கை செய்து தீவிர நாடக நெறியளராகப் பரிணமித்தார். நீரா சிற்சபைசன், சாலினி சண்முகநாதன், குமார் ஜெயபால், P.A. சுதாகரன், வில்வமோகன் ஆகியோர் இந்நாடகத்தில் நடித்திருந்தனர். இவரது நாடக ஆசான் P.A.C. ஆனந்தராஜா அவர்கள் இந்நாடகத்தை நேரில் பார்த்துப் பாராட்டியது பெரும் பேறாக நினைவுகொள்கிறார். காலம் தான் மானுட முன்னேற்றம் நடைபெறுவதற்கான வெளி என்ற கருத்தாக்கத்தை முன்வைத்த நாடகம் அது.

2005ல் இடம்பெற்ற அரங்காடலில் இத்தாலிய நாடகாசிரியரான Mario Fratti எழுதிய 'வதை' (The Satraps) என்ற நாடகத்தை இயக்கியதோடு அதில் நடித்துமிருந்தார். நோபல் பரிசு பெற்ற சிலி நாட்டின் கவிஞரான பப்லோ நெருடா அவர்களின் இறுதிக் காலத்தில் சதிப்புரட்சி மூலம் ஆட்சிக்கு வந்த பினசே அரசு அவர் மீது மேற்கொண்ட வதைகளைச் சொல்லும் இந்நாடகத்தில் பப்லோ நெருடாவாக K.S. பாலச்சந்திரன் பாத்திரமேற்றுச் சிறப் புச் செய்திருந்தார்.

ரஷ்ய நாடகாசிரியரான Ivan Turgenev எழுதிய 'Stony Broke' என்ற நாடகத்தை மொழிபெயர்த்து 'மீண்டும் தொடங்கும் மிடுக்கு' என்ற பெயரில் அரங்காடலில் மேடையேற்றினார். இதுவே துஷி மொழிபெயர்ப்பு செய்த முதலாவது நாடகமாகும். மனிதர்களின் போலி வாழ்க்கையை அம்பலப்படுத்தும் இந்நாடகத்தை துஷியே நெறியாள்கை செய்திருந்தார். இந்நாடகத்தில் சந்திரகுப்தன், ராஜன், சாலினி சண்முகநாதன், கணேஷ் ஆகியோர் நடித்திருந்த னர். அடுத்த அரங்காடலில் ஆங்கில நாடகாசிரியரான Harold Pinter எழுதிய New World Order என்ற நாடகத்தை மொழிபெ யர்த்து 'இப்பொழுதும் எப்பொழுதும்' எனத் தலைப்பிட்டு மேடை-யேற்றினார். ஆட்சியாளர் மக்கள் மீது எவ்வாறு அதிகாரங்களைத் திணிக்கிறார்கள் என்பதை விளக்கும் இக்குறியீட்டு நாடகத்தை துஷி இயக்கியிருந்தார். இந்நாடகத்தில் கிங்ஸிலி சுவாம்பிள்ளை, சேகர் தம்பிராஜா, துவாரகா ஆகியோர் நடித்திருந்தனர்.

பின்னர், 18வது அரங்காடல் நிகழ்வில் செழியனின் 'பூச்சியப் பெருவெளி' (மூலம்: வைக்கம் முகமது பஷீரின் சிறுகதை) என்ற நாடகத்தை துஷி இயக்கியிருந்தார். செய்தி ஊடகங்களின் போலித்தன்மையை வெளிக்கொணரும் இந்நாடகத்தில் சந்திரகுப் தன், சேகர் தம்பிராஜா, நீரா சிற்சபைசன், கிள்ளிவளவன், ஷாலினி சண்முகநாதன், சுதர்சனா சர்வேசன், சஹாப் ஜேசுதாசன் ஆகியோர் நடித்திருந்தனர். இக்காலப் பகுதியில் இளையோருக் கான நாடகப் பயிற்சிப் பட்டறையை நான்கு மாதங்களாகத் தொடர்ந்து நடத்தியமை துஷியின் நாடகப் பணிகளில் குறிப்பி டத்தக்கது. பட்டறையின் முடிவில் இளையோர் தயாரித்த 'Stan-dardized' என்ற நாடகம் அரங்காடலில் மேடையேற்றம் கண்டது.

எமது தேசிய பிரச்சினையை ஏனைய இனத்தவரிடையே எடுத்துச் சொல்லவும் தமிழ் நாடக மரபை அடுத்த கட்டத்துக்குக் கொண்டு செல்லும் நோக்கிலும் புகலி அரங்கக் குழுவை (Asylum Theatre Group) நண்பர்களுடன் இணைந்து இவர் ஆரம்பித்தார். கறுப்பு யூலையின் 25 வருட நினைவைக் குறிக்கும் வகையில் 2008ல் 'What if the rain fails' என்ற ஆங்கில நாடகத்தை துஷி நெறி யாள்கை செய்தார். கவிஞர் சேரன் எழுதிய இப்பிரதி, கலவரத் தின் நேரடி சாட்சியான ஒருவர் மேடையில் தான் கண்ட காட்சி-களைப் பதிவு செய்வதாக அமைந்திருந்தது. சேகர் தம்பிராஜா, நீரா சிற்சபைசன் ஆகியோர் உதவி இயக்குநர்களாகப் பணி யாற்ற, ஓவியர் கருணா நிழல், ஒளி அமைப்பினைக் கையாண் டார். Toronto Young Theatre இல் பல தடவைகள் பெரும் வர வேற்புடன் மேடையேற்றப்பட்ட இந்நாடகத்தில் குரும்பசிட்டி இராச ரட்னம், Sherryn Aiken ஆகியோர் பிரதான பாத்திரங்களில் நடித் திருந்தனர்.

புகலி அரங்கக் குழுவினர் அடுத்ததாக கவிஞர்கள் புதுவை இரத்தினதுரை, சேரன், வ.ஐ.ச. ஜெயபாலன் ஆகியோரின் கவிதை களின் மொழிபெயர்ப்பைக் கொண்டதொரு கவிதா அளிக்கையை நிகழ்த்தினர். துஷி நெறியாள்கை செய்த 'Not by our tears' என்ற இந்நிகழ்வு ரொறன்ரோ பல்கலைக்கழகம், அமெரிக்க தமிழ் சங் கங்களின் சம்மேளன மாநாடு (Fetna) உட்பட 10 இடங்களில் மேடையேற்றப்பட்டது. இவ்வாறாக வெவ்வேறு கவிதா நிகழ்வு களை ஸ்காபரோ சிவிக் சென்ரர், ரொறன்ரோ பொதுசன நூலகம் போன்ற பல இடங்களில் புகலி அரங்கக் குழுவினர் அளிக்கை கள் செய்துள்ளனர்.
பல்கலைக்கழக தமிழ் இருக்கைக்கான நிதி சேகரிப்பு நிகழ்ச் சிக்காக சேரனின் கவிதைகளாலான 'படத்திலுள்ள குழந்தைகள், பெண்கள், ஆண்கள்' என்ற கவிதா நிகழ்வை புகலி அரங்கக் குழுவினர் இசைக்கலாமன்ற அரங்கில் மேடையேற்றினர். துஷி இயக்கிய இவ்வளிக்கையில் களப்பூரான் தங்கா, சுகந்தன், சிந்தியா, அரசி ஆகியோர் பங்குபற்றியிருந்தனர்.

Cahoots Theatre மேடையேற்றிய 'The Enchanted Loom' என்ற ஆங்கில நாடகத்தில் மொழி, கலாச்சார ஆலோசகராகவும் பயிற் சியாளராகவும் பணிபுரிந்தமை துஷியினது நாடக ஆற்றலில் இன் னொரு மைல்கல். சுவேந்தினி லெனா எழுதிய இந்நாடகத்தின் தமிழ் மொழிபெயர்ப்புக்காக 10 நாட்கள் கியூபெக் நகரில் தங்கி யிருந்து ஏனைய நாடகாசிரியர்கள், மொழிபெயர்ப்பாளர்களோடு கலந்துரையாடியமை மறக்க முடியாத பேரனுபவமாகக் குறிப்பி டுகிறார்.

நாடகங்கள், கவிதா நிகழ்வுகள் போல் கூத்துக்களிலும் அதீத ஈடுபாடு கொண்ட கலைஞர் துஷி, தாய்வீடு பத்திரிகை நடத்தும் அரங்கியல் விழாவில் மேடையேறிய அற்றைத்திங்கள், சிறியன சிந்தியாதான் ஆகிய கூத்துக்களில் பாடி நடித்து அசத்தினார். தாய்வீடு பத்திரிகைக்காகப் பல மொழிபெயர்ப்புகளையும் நேர்கா ணல்களையும் இவர் செய்துள்ளார்.

நாடகப் பொதுவெளியில் ஆற்றல் மிக்க ஒரு பண்பாளனாக அறியப்படுபவர் கலைஞர் துஷி ஞானப்பிரகாசம். கலைகளின் வெவ்வேறு கூறுகளில் தன் புலமையை நிகழ்த்திக் காட்டிய கலைஞன். இப்பதிவுக்கான அவருடனான உரையாடல் இனிதாகவும் நிறைவாகவும் இருந்தது.

sriskandan@thaiveedu.com

மார்க்சியத்தின் காணாமல்போன பக்கங்கள்

- ந. இரவீந்திரன்

இன்றைய உலக நெருக்கடியாக உள்ள கொரோனா-19 பெருந்தொற்றினை முதலாளித்துவ நாடுகள் கையாள்வதில் மிகுந்த சிரமத்தை எதிர்நோக்கி நிற்கின்றன. சோசலிசத்தை முன்னெடுக்க முயலும் சீனா, கியூபா, வட கொரியா, வியட்நாம் போன்ற நாடுகள் ஒப்பீட்டுரீதியில் கடும் பிரயத்தனங்கள் இன்றி நோய்த் தொற்றிலிருந்து மக்களை மீட்டு வருகின்றன. அந்நாடுகள் கையாளும் அதீத கட்டுப்பாடுகள், ஒழுங்குமுறைகள் என்பன ஜனநாயக - சுதந்திர இலட்சியங்களுக்கு ஒத்துவராதவை என்பதனால் அவை கையாளும் முறைகளைத் தம்மால் ஏற்க இயலாதென முதலாளித்துவ நாடுகள் கூறுகின்றன.

ஆயினும், நியூசிலாந்து போன்ற முதலாளித்துவ நாடுகள் சில அதேவகைக் கட்டுப்பாடுகளைக் கையாண்டு நோயைக் கட்டுக்குள் கொண்டுவரக் காண்கிறோம். இன்று அநேகமான ஐரோப்பிய நாடுகளும் இறுக்கமான கட்டுப்பாடுகளுடனேயே நோயைத் தணிக்க நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளன. மூலதனப் பெருக்கத்துக்கு 'சுதந்திரமாக' உலாவும் அவசியம் உள்ளதெனும்போது மக்கள் பாதுகாப்பைவிடவும் 'ஜனநாயக உரிமைகள்' முக்கியத்துவம் உடையன என வலியுறுத்தும் தேவையைக் கொண்டிருப்பது முதலாளித்துவம். அத்தகைய ஜனநாயக - சுதந்திர மனப்பாங்குடன் கும்பமேளா கொண்டாட விடப்பட்ட இந்திய மக்கள் கொத்துக் கொத்தாக இறந்து, எரிக்கவும் இட நெருக்கடி என்ற நிலை ஏற்பட்டிருப்பதை இந்தியாவில் காண்கிறோம்.

அதேவேளை சோசலிசத்தை முன்னெடுக்க எத்தனிக்கும் நாடுகள் சோசலிச சமூகத்துக்கான ஜனநாயகத்தையும் சுதந்திரத்தையும் போதிய அளவு அனுமதிக்க இயலாதிருப்பது நெருடலான விவகாரம் என்பதில் மாற்றுக் கருத்து இருக்க இயலாது. அங்கு மக்கள் அனுபவிக்கும் மேலான வாழ்வியல் அம்சங்களை மறைத்து காப்பிரேட் ஊடக பிரசாரங்கள் பொய்யான சித்திரங்களைப் பரப்புகின்றன. ஏகாதிபத்திய மேலாண்மை உலகை அச்சுறுத்தும் இன்றைய சூழலில் பெரும் சிரம பிரயத்தனங்களுடனேயே அவை சோசலிச முன்னெடுப்புக்கு ஆட்படுகின்றன - அதன் நெருக்கு வாரங்களில் சோசலிச முகாம் இருந்த காலத்தைப் போல முழுமையான சோசலிசப் பொருளாதார முன்னெடுப்புச் சாத்தியம் அற்றுப்போய் தேசிய முதலாளித்துவத்துக்கு அனுமதி வழங்கிச் சந்தைச் சோசலிசம் எனும் புதிய முறையொன்றை அவை மேற் கொள்ளும்படி நிர்ப்பந்திக்கப்படுள்ளன என்பவற்றையும் கவனத்தில் கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம்.

வழக்கத்தில் உள்ள மார்க்சிய உரையாடலில் 'சந்தைச் சோசலிசம்' என்பதற்கு இடமில்லை. சந்தை தீர்மானிக்கும் கேள்வி அடிப்படையில் வெளிப்பாடுகளை உற்பத்தியாளர்கள் வழங்கிச் சுதந்திரப் போட்டி ஊடாக வணிகத்தைப் பெருக்க ஏற்றது முதலாளித்துவத்துக்கு உரியதான சந்தைப் பொருளாதார முறை. மாறாக சோசலிச அமைப்பு மக்களது தேவைகளைக் கண்டறிந்து அவற்றை உற்பத்தி செய்யும் திட்டமிட்ட பொருளாதாரக் கொள்கையை முன்னெடுப்பன. இரண்டையும் இணைக்கும் நிர்ப்பந்தம் தமது நாடுகளுக்கான பிரத்தியேக மார்க்சியப் பிரயோகம் என அந்த நாடுகள் கூறுகின்றன.

ஒடுக்கப்பட்ட தேசங்களாக இருந்து ஏகாதிபத்தியப் பிணைப்பைத் தகர்த்த தேசிய விடுதலைப் போராட்டங்கள் ஊடாக தோற்றம் பெற்றவை இன்றைய சோசலிச முனைப்பு நாடுகள். பாட்டாளி வர்க்கப் புரட்சி வாயிலாக கட்டியெழுப்பப்படும் சோசலிச முன்னெடுப்பில் இருந்து வேறுபட்ட வடிவத்தை தமது நாடுகள் கோரி நிற்கும் பொதுப்பண்பை அவை புரிந்துகொண்டு வரலாற்று மாற்றப்போக்கை வலியுறுத்தித் தாம் கட்டியெழுப்ப முனையும் சோசலிசத்துக்கான புதிய கோட்பாட்டை அந்த நாடுகளின் மார்க்சிய அணிகள் செய்யத் தவறியுள்ளன.

அதன் காரணமாக அவை ஏற்கனவே அறியப்பட்ட சோசலிசப் பாதையில் இருந்து விலகிவிட்டன என்ற குற்றச்சாட்டுடன் உலக நாடுகள் பலவற்றின் மார்க்சியர்கள் புனிதமான பாட்டாளி வர்க்கப் புரட்சி ஒன்றின் வரவுக்காக காத்து நிற்கின்றனர். இன்னமும் வர்க்கப் புரட்சிக் கோட்பாட்டைச் சுமந்தபடி மாறிவிட்ட வரலாற்றுச் செல்நெறிப் பிரகாரம் விடுதலைத் தேசியங்கள் கட்டியெழுப்பும் சோசலிச முயற்சிக்கு அனுசரணையாக தமது நாடுகளின் புற நிலைகளை அவதானங்கொள்ள இயலாதிருக்கின்றனர். அதன்வழி புதிய புரட்சியின் கோரிக்கைகளைக் கவனங்கொண்டு அவற்றுக்குரிய அணி சேர்க்கைகளை முன்னெடுக்க இயலாது உள்ளனர்.

இவ்வகையில் மார்க்சியம் வளர்ச்சி பெறாமல் தேக்கமுற்றது ஏன்? வரலாற்றியக்க மாற்றங்களுடன் விருத்தி பெற்றவாறு இயங்கு நிலை கொண்டதே மார்க்சியம். அந்தப் பண்பை இழந்து ஜனநாயக மறுப்புடன் கூடிய கட்சித் தலைமைகளின் மத்தியத்துவ முடிவுகளில் தங்கியிருக்கும் அதிகாரம்பெற்ற கொம்யூனிஸ்ட் கட்சிகள் ஏற்கனவே சென்ற தடங்களில் ஓட முற்பட்டு மார்க்சியத்துக்கான வளர்திசைப் பக்கங்களைக்காணாமல் ஆக்கிவிட்டன. தொலைந்து போன மார்க்சியப் பக்கங்கள் தேடிக் கண்டடையப்பட வேண்டும்.

தென்னமெரிக்க மாரக்சியர்கள் அதிகாரம்பெற்ற கொம்யூனிஸ்ட் கட்சிகளுக்கு வெளியே மாற்று இயங்கு முறைக்கு உரிய மார்க்சியத்தை வளர்த்தெடுக்க முற்படுவதைனைக் காண இயலுமாயுள்ளது. மார்த்தா ஹானேக்கர் போன்றோர் '21ம் நூற்றாண்டுக்கான மார்க்சியம்' பற்றிப் பேசுவது இதன்பாற்பட்டது. வெனிசுலாவில் சாவேஷ் தொடக்கி வைத்த மாற்று வழி சோசலிச முன்னெடுப்பு நம்பிக்கை ஊட்டுவதாய் தொடர்கிறது.

மார்க்சியத்தை வளர்த்தெடுக்கத் தவறி புனித மந்திரமாக மாற்றுவது ஆரம்பம் முதல் இருந்து வந்த பிரச்சினை. ஏங்கெல்சுடன் தொடர்புபட்டு இயங்கி அதிகார நிலைப்பட்ட மார்க்சியரான காவுத்க்சி இரண்டாம் அகிலத்தை தவறாக வழிநடத்துகிறவராக இருந்தார். முதலாம் உலக யுத்தத்தில் தேசியவாத சகதிக்குள் மூழ்கி அவரவர் தத்தமது 'தந்தையர் தேசங்களைக் காக்கும்' பணியை மேற்கொள்ள வேண்டுமென்றார்.

அந்தத் தேசியவாதத்தை நிராகரித்த லெனின் ஏகாதிபத்திய யுத்தத்துக்கு எதிராக உள்நாட்டு யுத்தத்தை முன்னெடுக்க அறைகூவி அழைப்புவிடுத்து 1917 ஒக்ரோபர் புரட்சிக்குத் தலைமை தாங்கினார். உலகப் புரட்சி ஏற்படும் வகையில் தொழிலாளர் எழுச்சிகள் ஒவ்வொரு நாடாகப் பரவும் நிரந்தரப் புரட்சி ஏற்பட இயலாதெனக் கண்டறிந்து தனியொரு நாட்டில் சோசலிசம் சாத்தியம் எனும் வளர்ச்சியை மார்க்சியத்தில் ஏற்படுத்திக்கொண்டார்.

இந்த மார்க்சிய விருத்தியை ஏற்காத மார்க்சியரான ட்ரொட்ஸ்கி போன்றோருடனும் ஐக்கியப்பட்டு புரட்சியின் வெற்றியைச் சாத்தியப்படுத்தியவர் லெனின். பெப்ரவரிப் புரட்சியில் அதிகாரம் பெற்ற கெரன்ஸ்கி அரசை ஆதரித்து ஏகாதிபத்திய யுத்தத்தை ரஷ்யா முன்னெடுக்க இடமளித்த இரண்டாம் அகிலத் தத்துவ மேதை பிளெக்கனோவ் ஒக்ரோபர் புரட்சித் தலைவரல்ல என்ற போதிலும் முன்னதாக ரஷ்யாவில் அவர் பரப்புரை செய்த மார்க்சியப் பங்களிப்பைத் தொடர்ந்து மறுபதிப்புகளாக வெளியிட வேண்டுமென வலியுறுத்தியவர் லெனின்.

லெனினிசத்தைப் பிரயோகித்த ஸ்டாலினும் மாஓ சேதுங்கும் விடுதலை பெற்ற தேசங்களுக்குப் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் பொருத்தமற்றது எனக் கண்டறியத் தவறினர். சோசலிச ஜனநாயக முன்னுதாரணத்தை வழங்கத் தவறினர். மாறிவந்த உலக வரலாற்று செல்நெறித் திருப்பத்தை மனங்கொள்ளத் தவறினர். இரு பாட்டாளி வர்க்கத் தலைவர்களும் சோசலிச நிர்மாணத்துக்கு மகத்தான பங்களிப்பை நல்கிய போதிலும் மார்க்சிய - லெனினியத்தை வளர்த்தெடுக்கத் தவறியமையால் காணாமல் போய்விட்ட அந்தப் புதிய பக்கங்களைக் கண்டறியும் பொறுப்பு உலக மார்க்சியர்களின் முன்!

இன்றைய உலக நெருக்கடிகளுக்குத் தீர்வு கண்டடைய ஏற்ற மார்க்சிஸ - லெனினிச விருத்தி கண்டறியப்படாமல் மக்கள் விடுதலை எட்டப்படமாட்டாது. தேடலைத் தொடர்வோம்!

raveendran.n@thaiveedu.com

உங்கள் நம்பிக்கையோடு
எங்கள் 18 ஆண்டுகால சேவை...

STANDARD MORTGAGES INC

- Mortgages
- Refinance
- Second Mortgages
- Short Term Secured Loans

SMI

STANDARD
MORTGAGES INC.
Residential & Commercial

சுமையான கடன்கனை சுகமான அனுபவமாக்கிட

Raj Subrayam AMP
Director

80 Corporate Drive, Suite # 307 Toronto, Ontario, M1H 3G5
Tel: 416 298 1700
Fax: 416 754 8651
www.standardmortgagesinc.com
raj@smi4loan.com

வழக்காறும் மரபுகளும் - இருப்பும் இயல்பிழப்பும்

- த. சிவபாலு

தொடர்ந்து பின்பற்றப்படும் வழக்காறு ஒன்றை 'மரபு' என்ற சொற்பதம் பெரிதும் குறிப்பிடுகின்றது. வழக்காறு அல்லது மரபு என்பது ஒரு இனத்தின் பெரும்பாலானவர்களால் செய்யப்படும் நடைமுறைச் செயற்பாடுகளைக் குறிக்கிறது. வழமையாக ஒரு நாட்டிற்கு இன்னொரு நாட்டில் இருந்து வந்த ஓரினத்தின் பாரம்பரிய பண்பாட்டு விழுமியங்கள், சமயச் சடங்குகளைப் பின்பற்றும் மக்களால் அவை தொன்றுதொட்டுப் பின்பற்றப்பட்டு வந்த அதே முறையில் பின்பற்றப்படுமானால் அதனை 'வழக்காற்று முறை' என்று குறிப்பிடலாம்.

எனவே பண்பாட்டையும் வழக்காற்றையும் தனித்தனியாகப் பிரித்து விட முடியாது. வழக்காறு அல்லது மரபு என்பது மக்கள் வாழ்வியலைக் குறித்து நிற்பதாகும். வழக்காறு அல்லது மரபு என்பதற்கு ஆங்கிலத்தில் custom, tradition என்ற சொற்கள் பயன்படுத்தப்படுகின்றன. வழக்காறு என்பது ஒன்றிற்குப் பொருந்தும் வகையில் மாற்றப்படக்கூடியது என்ற பொருளையும் நடைமுறையையும் தன்னகத்தே அடக்கியுள்ளது. (Custom can also mean changed to suit better: altered in order to fit somebody's requirements) வழக்காறுகள் மாறிக்கொண்டே இருப்பவை அல்ல, காலம், நேரம், இடம் கருதி மாற்றம் பெற்றே வருகின்றன என்பது வெளிப்படை.

'பண்பாடு என்பது மிகவும் இணக்கமுற்ற, ஒருங்கிணைந்த ஒன்றியமாகும். இதனுள் உள்ள கூறுகள் அனைத்தும் செயல்நிலையில் ஒன்றோடொன்று இணைந்து செயல்படுகின்றன. ஒவ்வொரு கூறும், பண்பாடு என்னும் முழுமைக்குள், மிகவும் ஏற்ற நிலையில் பொருத்தப்பட்டுள்ளது' என பக்தவத்சல பாரதி (1993 பக்.571) குறிப்பிட்டுள்ளார். இதனைச் சற்று விளக்கமாக வண. பிதா. தனிநாயகம் அடிகளார் தந்தை செல்வாவின் நினைவுப் பேருரை நிகழ்த்தியவேளை 'பண்பாடு என்றால் ஒரு இனத்தாரின் கொள்கைகள், கோட்பாடுகள், நோக்கங்கள், இலட்சியங்கள், வாழ்க்கைமுறைகள், பழக்கவழக்கங்கள், சமூகச் சட்டங்கள், சமயங்கள், வழிபாட்டு முறைகள், களவொழுக்கம், கற்பொழுக்கம், அகத்திணை, புறத்திணை மரபுகள், இலக்கிய மரபுகள், அரசியலமைப்புக்கள், ஆடை அணிகலன்கள், திருவிழாக்கள், உணவு, பொழுதுபோக்கு, விளையாட்டுகள் ஆகியவற்றையெல்லாம் குறிக்கும்' என்று குறிப்பிட்டுள்ளமையை (வண.பிதா. தனிநாயகம் அடிகளார் 'தமிழர் பண்பாடும் அதன் சிறப்பியல்புகளும்' 1980) கருத்திற்கொள்ள வேண்டும்.

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற கணியன் பூங்குன்றனாரின் வார்த்தை தமிழரின் உயர்ந்த மனப்பாங்கையும் பண்பாட்டையும் உலகறியச் செய்கின்றது. பொதுமை பேசுகின்ற நிலையிலிருந்து பண்பாட்டுக்கூறுகளை மனிதரின் வாழிடத்தையும் அவர் செய்யும் தொழிலையும் அடியாக வைத்து நோக்கியவர் தொல்காப்பியர். அவர் ஆக்கி அளித்த நூல் தொல்காப்பியம். தமிழரின் பண்பாடு உயர்ந்த பண்பாடு என்று கொள்ளவதற்கு நம்முன்னோரின் அளிக்கைகள், தொண்டுகள், தியாகங்கள் என்பன காரணங்கள் என லாம். எமது பண்பாட்டை அறிவதற்கு முதன்நூலாகத் திகழ்வது தொல்காப்பியம் ஆகும். அது தனியே ஒரு இலக்கணநூலாக அன்றி தமிழரின் பண்பாட்டைப் பேசுகின்ற ஒரு சிறந்த இலக்கியப் பனுவலாகவும் திகழ்கின்றது. தொல்காப்பியத்தின் வழி தொல்காப்பியர் தமிழ்ப் பண்பாட்டிற்கு ஆற்றிய பங்களிப்பு யாது என்பதன் கண்ணோட்டமே இக்கட்டுரை ஆகும்.

தொல்காப்பிய மரபு சுமேரிய நாகரிக காலந்தொட்டு தொடர்ந்து வருகின்ற மிகப் பழமை மிக்க ஓர் மரபாகும். இதை தொல்காப்பியர் தனக்கு முந்தைய அறிஞர்களைப் பற்றிப் பல இடங்களில் 'என்மனார் புலர்' எனக் குறிப்பிடுதலால் ஊகிக்க முடிகின்றது. தமிழர் மரபு உலகில் காணப்படும் இன மரபுகளில் சிறப்புடையதாகும். மூன்று அதிகாரங்களாகப் பகுக்கப்பட்ட தொல்காப்பியத்தில் மிகச் சிறப்பானது பொருளதிகாரமேயாகும். இவ்வதிகாரத்தை சிறப்பாக விளங்கிக் கொள்ளவே மொழியியல் அடிப்படையில் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் என்பன முன்வைக்கப்பட்டுள்ளன.

வழக்காறுகள் அல்லது மரபுகள் மாற்றம் பெறுகின்றன என்றால் புதிய அல்லது வேறுமரபுகள் வந்து சேருகின்றன என்பது பொருளாக அமைகின்றது. எனவே நடைமுறையில் இருந்துவந்த அல்லது பின்பற்றப்பட்ட மரபுகள் நடைமுறையில் இருந்து விலகிப் போவதனைத் கட்டி இழுத்துப் பற்றி நிற்க முடியாது என்பது நடைமுறை உண்மை. பண்டய நடைமுறைகளை அப்படியே வைத்திருக்க முடியுமா என்பது இன்று எம்முன் எழுகின்ற முக்கிய கேள்வியாகும். பண்டைய பாரம்பரியங்களை நாம் அப்படியே இறுகப் பிடித்துக் கொண்டிருந்தால் மனித சமூகம் முன்னேற்றம் கண்டிருக்க முடியாது. எடுத்துக்காட்டாக, சாதிய மரபு முறைகள் எம்மத்தியில் இருந்து அகற்றப்பட நீண்டகாலப் போராட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. கல்வியறிவு வளர்ச்சியின் பயனாக சாதியத்தைப் பேணும் மரபுகள் அருகி வருகின்றன. ஆனால் அவை இன்றும் எம்மத்தியிலே நிலைத்து நிற்பதனையும் மறுப்பதற்கில்லை.

பண்டைத் தமிழகத்தில் இருந்த அல்லது பேணப்பட்டு வந்த பழந்தமிழர் மரபுகள் அருகிப் போனதற்கு அவற்றைத் தொடர்ந்து தக்க வைத்துக்கொண்டிருக்க வேண்டிய தேவை சமூகவளர்ச்சியின் காரணமாக இல்லாதொழிந்து போனது என்பதற்கு எத்தனையோ உதாரணங்களைக் காட்டலாம்.

தமிழர் சமுதாயத்தில் மட்டுமல்ல உலகின் எல்லாச் சமுதாயங்களிலும் இந்த நிலைப்பாடுகள் இடம்பெற்று வந்துள்ளன. 'பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல' என நன்னூல் தந்த பவணந்தி முனிவர் சொன்னதன் உண்மைக்கருத்தை, அதன் நிதர்சனத்தை நாம் மனித வரலாற்றைப் புரட்டிப் பார்க்கும் போது அறிவோம். மரபுகள் என்பன காலங்காலமாக நம்முன்னோரால் எமக்குக் கடத்தப்பட்டு வந்த நடைமுறைப் பழக்கவழக்கங்கள் ஆகும். இவையனைத்தையும் நாம் அப்படியே ஏற்றுக்கொண்டு நடக்கின்றோமா? அல்லது ஒரு வரையறையை ஏற்படுத்திக்

கொண்டு அதற்குள்ளே எம்மை அடைத்து வைத்திருக்கின்றோமா? என்ற கேள்விகளுக்கு என்ன விடை கிட்டப்போகின்றது? பல மரபுகளையும் பாரம்பரியங்களையும் உடைத்தெறிந்து கொண்டுதான் வந்துள்ளோம் என்பதனை ஏற்றுக்கொண்டுதான் ஆகவேண்டும்.

தமிழர் வழக்காறு மிகவும் மேன்மையானது சிறப்பானது என்றெல்லாம் பேசுகின்றோம், மதிக்கின்றோம், போற்றுகின்றோம். ஆனால் எமது வழக்காற்றை நிலைநிறுத்தத்தான் முடியுமா? எமது எதிர்காலச் சந்ததியினரிடம் அதனைக் கடத்திவிடத்தான் முடியுமா? என்பதே இன்றைய கேள்வியாகும். 'ஒரூருக்கு ஏச்சும் இன்னோரூருக்குப் பேச்சும் என்பார்கள்' மொழிவழக்கிலும் சரி நடைமுறைகளிலும் சரி சமூகத்திற்குச் சமூகம், இடத்திற்கு இடம், நாட்டிற்கு நாடு, இனத்திற்கு இனம் வேறுபாடுகள் உள்ளன. இந்தியா இலங்கை போன்ற நாடுகளில் தலைதாழ்த்தி கைகூப்பி வணக்கம் செலுத்துவது மரபு. ஆனால், இன்று அந்த மரபு அருகி விட்டது. அது நாம் வாழும் நாட்டின் பழக்கத்துடன் ஒத்துப்போகவில்லை என்பதுதான் காரணமா? இஸ்லாமியமதம் மனிதரை மனிதர் வணங்கக்கூடாது என்னும் மரபைக் கொண்டுள்ளது. சில நாட்டவர் கைகுலுக்கி வரவேற்கின்றனர். நாம் வாழும் மேலைநாட்டு வழக்காறாக அது இடம்பெறுகின்றது. 'மீன் உண்ணும் ஊருக்குப் போனால் நடுமுறி எனக்கு வேண்டும்' என்று நிற்கவேண்டும் என்பது எமது நாட்டு முதுமொழி. அதன் பொருள் 'எங்கு நாம் செல்கின்றோமோ அங்குள்ள நடைமுறைகளை எல்லாம் பின்பற்ற வேண்டும்' என்பதா?

ஒரே ஊரில் பிறந்தவர்களாக இருந்தாலும் சமயம் வேறுபட்டவர்களாக இருக்கும்போது அவர்களின் எழுத்துக்களில் வேறுபாடான மரபுகளின் தாக்கத்தைக் காணலாம். கனடாவில் வாழ்ந்துவரும் தமிழ் அறிஞர் முருக வே. பரமநாதன் அவர்களின் எழுத்துமரபு வைணவ ஆழ்வார்களினதும் சைவசமய குரவர்களினதும் சங்க இலக்கிய மரபு சார்ந்து காணப்படுவது குறிப்பிடத்தக்கது. யாழ்ப்பாணத்து கந்தபுராண சமுதாய மரபின் தாக்கம் தமிழர்களின் வாழ்வியலிலும் எழுத்து மரபிலும் தாக்கத்தைக் கொண்டுள்ளமை போன்று, மேலைநாட்டினரின் வருகையின் பயனாக அங்கு மதம் மாறியவர்களின் வாழ்வியல் பழக்கவழக்கங்களும், மரபுகளும் திரிபுபட்டுள்ளமை போன்று, கற்ற ஒரு வர்க்கத்தினரின் பண்பாட்டு நடைமுறை மரபுகளிலும் மாற்றத்தைக் கொண்டுவந்துள்ளன. நடை, உடை, உணவு பழக்கவழக்கங்களில் மாற்றங்களைக் கொண்டு வந்துள்ளமையும் மறுப்பதற்கில்லை.

எமது நாட்டில் தேசவழமைச் சட்டம் பின்பற்றப்பட்டது என்பதனால் அந்த நடைமுறையை நாம் இங்கு கொண்டுவர முடியுமா? அல்லது பின்பற்றத்தான் முடியுமா? நாம் இப்பொழுது கொண்டாடும் தைப்பொங்கலை நாம் தாயகத்தில் மேற்கொண்டதுபோன்று மேற்கொள்ளமுடியுமா? நாம் பாரம்பரியமாகப் பின்பற்றி வந்த முற்றத்தில் பொங்குதல், மாட்டுச்சாணத்தால் மெழுகுதல், மாவிலைத் தோரணம் வெளியே கட்டுதல், பொங்கலைச் சூரியனுக்குப்படைத்தல் என்பனவற்றை இங்கு நடைமுறைப்படுத்த முடியுமா? தமிழர்களால் கொண்டாடப்பட்டு வந்த நான்குநாள் கொண்டாட்டம் மட்டுமல்ல பொங்கலன்று கூட விடுமுறை எடுத்து கொண்டாடத்தான் முடிகின்றதா? எனவே எமது மரபுகள் மாற்றம் அடைகின்றன என்பதுதான் உண்மை. குறிப்பிட்ட தினத்தில் அன்றி மாதத்தில் ஏதோ ஒருநாளில் கொண்டாடினால் போதும் என்னும் மாற்றத்திற்கு நாம் வந்துள்ளோம். காரணம் காலத்தின் கட்டாயம்.

மொழி, உணவு, உடை, வாழ்வியல் நடைமுறைகள் என்னும் போது எம்மோடு ஒட்டிக்கொண்டு இன்றும் எம்மால் இறுகப் பற்றிப் பிடித்துக் கொள்ளப்படும் மரபுகள் பற்றிப் பார்ப்பது பொருத்தமாக அமையும். முக்கியமாக வழக்காறு என்று பார்க்கும்போது அவற்றுள் மிக முக்கியமானவை எனக்கருதக்கூடிய மொழி, உடை, உணவு, திருமணமும் கைமைநிலையும், விழாக்களும் கொண்டாட்டங்களும் சாதிய வழக்காறுகள் என்பன பற்றி இன்றும் எம்மிடையே நிலைத்து நிற்கும் வழக்கங்களைப் பற்றி ஆராய்தல் வேண்டும்.

மொழி மரபு: பழையன கழிதலும், புதியன புகுதலும் வழுவல காலவகையினானே' என நன்னூல் சூத்திரம் கூறுகின்றது. ஆனால் தொல்காப்பியரோ

செய்யுள் மருங்கின் மெய்பெற நாடி
இழைத்த இலக்கணம் பிழைத்தன போல
வருவன உளவெனும் வந்தவற் றியலால்
திரிபின்றி முடித்தல் தெள்ளியோர் கடனே

- தொல். பொரு. 544

கவிதை எழுதப்படும்போது அது இலக்கண வழுவின்றி எழுதப்பட வேண்டும் என்பது மரபியல் தழுவிய கவிதைகளுக்கு உரித்தானது. யாப்பிலக்கணமும் அணியிலக்கணமும் நிலைத்து நிற்பதனை காணமுடிகின்றது. ஏம்மிடையே பல யாப்பறி கவிஞர்கள் தோன்றியுள்ளனர் என்றால் அது நிலைத்து நிற்பதனைத்தானே காட்டுகின்றது. இருப்பினும் புதுக்கவிதை, வரிக்கவிதை, வசனகவிதை, என இலக்கணமரபினை மீறிக் கவிதைகள் இடம்பெறுவதனையும் நாம் காண்கிறோம்.

காலத்திற்கும் இடத்திற்கும் ஏற்ப மொழியின் பேச்சு, நடைமுறை, எழுத்து, என்பனவற்றில் மாற்றம் ஏற்பட்டுள்ளன. சங்ககாலத்தில் இருந்த செய்யுள் மரபு இன்றும் நிலைத்து நிற்கின்றது எனினும் கட்டுரைகள், கதைகள் ஆகியவற்றின் வாக்கிய அமைப்பில் மாற்றம் பெற்றுள்ளன. மிக இறுக்கமாக மொழி எழுதப்பட்டு வந்துள்ளது. நடைமுறைத்தேவை இன்று விரிவடைந்து வந்துள்ள மரபினை எமது மொழியும் பெற்றுக்கொண்டுள்ளது. இது மொழியின் வளர்ச்சியின் மரபியல் எனலாம்.

உடைமரபு:

மேலாடை இல்லாமல் வாழ்ந்த மரபு மாற்றம் பெற்று வந்துள்ளமை கண்கூடு. அதன் வழி நீண்டகால பழக்க வழக்கத்தில் எமது பாரம்பரிய உடைகளாக வேட்டி, சால்வை, அல்லது உத்தரியம், சேலை, தாவணி, சட்டை என்பனவற்றை அணிய முற்பட்ட காலந்தொட்டு இன்றுவரை அவற்றை அணிந்துவரும் மரபு காணப்படுகின்றது. திருமணத்திற்கு ஆண்கள் தலைப்பாகை அணிதலும், பெண்கள் கூறை அணிவதும் பன்னெடுங்காலமாகப் பேணப்பட்டுவரும் வழக்காறாகும். இது தமிழரிடையே இன்றும் நிலைத்து நிற்கின்றது. மேலங்கி இல்லாமல் இங்கிலாந்தில் சென்ற மகாத்மா காந்தி 'அரைநிர்வாணப் பக்கிரி' எனக் கேலி செய்யப்பட்டார். இந்த நிலையை யாரும் ஏற்றுக் கொள்ளுவார்

களா? அந்தப் பாரம்பரியம் மங்கி விட்டதா? எனில் அவை விழாக்காலங்களிலும், திருமணம், கொண்டாட்டங்களிலும் இன்றும் பேணப்படுதனால் பழைமை மிக்க மரபுகள் மாற்றங்களோடு நிலைத்து நிற்கின்றன. உடை என்பது மனிதரது அத்தியாவசிய தேவைகளில் ஒன்று. அவற்றின் வடிவங்களில் மாற்றம் ஏற்பட்டாலும் மனிதர் உடையணியும் மரபினராகவே இன்றும் வாழ்ந்து வருகின்றனர்.

ஐரோப்பியரின் வருகையின் பின்னர் எமது பாரம்பரிய உடைகளில் படிப்படியாக மாற்றம் எற்பட்டு வந்துள்ளது. வாழ்வியலுக்குப் பொருத்தமான புதியனவற்றை ஏற்றுக்கொண்டு அதன்வண்ணம் ஒழுகுவது மனிதவாழ்வின் நாகரிகம் எனக் கொள்ளப்படுகின்றது. எமது பாரம்பரிய உடைகளை புலம் பெயர்ந்த நாட்டில் தினமும் அணிந்து இந்தக் கடுங்குளிரில் வெளியே செல்ல முடியாது. உடையில் மாற்றம் எற்பட்டது, நாம் பொருத்தமானவற்றை ஏற்றுக் கொண்டதனால் அல்லவா? வேட்டி சால்வையிலும் பார்க்க பஞ்சாபியினரின் குர்த்தா, சர்வாணி என்பன இன்று இளைஞர்களிடையே விரும்பி அணியப்படும் உடைகளாக மாறிவிட்டன. அவர்கள் அதனை தமிழரின் பாரம்பரிய உடையென நம்பிக்கை வைத்துள்ளனரா எனவும் எண்ணத்தோன்றுகின்றது.

பெரியோரை மதித்தல்:

தைப்பொங்கல், புத்தாண்டு நாட்களில் பெரியவர்களின் இல்லங்களுக்குச் சென்று அவர்களின் வாழ்த்துக்களையும் மதிப்பையும் பெற்று, அவர்களின் மனங்களைக் குளிரவைத்து, அவர்களுக்கு பரிசில்கள் வழங்கி வரக் கற்றுத்தந்தது எமது பண்பாடு. இன்று தைப்பொங்கல், சித்திரைப்புத்தாண்டு, தீபாவளி தினங்களுக்கு அண்ணன், அக்கா, அம்மா, அப்பா, பெரியப்பா, பெரியம்மா, சித்தி, சித்தப்பா, மாமா, மாமி, ஊர்ப்பெரியவர்கள் என உறவு முறை கொண்டாடிச் சென்று அவர்களின் நன்மதிப்பைக்கூட எமது பிள்ளைகள் பெற்றுக்கொள்வதில்லை. அந்தப் பாரம்பரியம் அற்றே போய்விட்டது.

உறவுமுறைகள் பெயரைச் சொல்லலாமா? கணவன் பெயரைச் சொல்லலாமா என்று இருந்த மரபு முறைகள் இருந்தன. பெரியண்ணா, சின்னண்ணா, பெரியதம்பி, சின்னத்தம்பி, பெரியக்கா, சின்னக்கா, பெரியத்தான், சின்னத்தான், மச்சான், பெரியமச்சாள், சின்னமச்சாள், பெரியம்மா, பெரியப்பா, பெரியசித்தி, சின்னச்சித்தி, ஆசையம்மா, ஆசைஐயா, குஞ்சியப்பு, குஞ்சியம்மா, குஞ்சியாச்சி, ஆச்சி, என்று உரிமை பூண்டு அழைத்த முறைமைகள் குறைந்து விட்டன. பெயர் சொல்லி அழைக்கும் முறைதானே நடைமுறையில் உள்ளது. ஆசிரியர்களைத் தெய்வமாக மதித்து வந்தது எமது இனம், ஆனல் இன்று எமது பிள்ளைகள் ஆசிரியர்களைப் பெயர் சொல்லி அழைக்கின்றார்கள். அது அவர்களின் தவறல்ல இந்த நாட்டின் வழக்காற்றைப் பின்பற்றும் நிலை. அதனால் எமது வழக்காற்றையே மறந்து அல்லது தெரியாது இருக்கின்ற நிலைமை உள்ளது. மாதா, பிதா, குரு, பெரியோர், மூத்தோர் போன்றோரை மிகுந்த மரியாதையோடு மதித்து வந்தது எங்கள் இனம். இன்று பிள்ளைகள் சொல்வதைக் கேட்டு வாய் மூடி அடங்கி நடக்கும் பெற்றோரைக் காண்கின்றோம்.

அந்தணரை வணங்கும் முறை இடையில் வந்து சேர்ந்ததாகக் கொள்ளப் படுகின்றது. குறிப்பாக முதுகுடிப் பெரும்வழுதியை கரைக்கிழார் என்னும் புலவர் வேண்ட அவன் செய்ததாக சங்க இலக்கியப் பாடலான புறநானூறு பேசுகின்றது.

இறைஞ்சுக பெருமநின் சென்னி சிறந்த
நான்மறை முனிவரேந்துகை யெதிரே

- புறம் 6

அந்தணர்களைச் சிரந்தாழ்த்தி வணங்கும் வழக்கம் இன்றும் நிலைத்து நிற்பதனைக் காண்கின்றோம். அது இந்து மதத்திற்கு மட்டும் பொதுவானதல்ல, ஏனைய மக்களும் மதபோதகர்களை வணங்கும் முறையினை வழக்கமாகக் கொண்டுள்ளனர். சிறப்பாக புத்தபிக்குக்களை வணங்காதவர்கள் அரசகட்டில் ஏறமுடியாது என்பதற்கு இலங்கை ஒரு நல்ல எடுத்துக்காட்டாகும்.

திருமணங்களும் மரபுகளும்:

திருமணம் என்பது தொன்றுதொட்டே இடம்பெற்று வருகின்றது. 'காதலர் இருவர் கருத்தொருமித்து ஆதரவு பெற்றதே இன்பம்' என்பதை ஔவையின் வாயிலாகச் சங்க இலக்கியத்தில் காண்கின்றோம். இன்று திருமணப் பாரம்பரியங்கள், வழக்காறுகள், நீராட்டு விழாக்கள், பிறந்ததின விழாக்கள் என்பன சினிமாப் பாணியில் மாற்றம் பெற்றுவருகின்றன. இதற்கு ஏற்ப நாம் எமது பழக்கவழக்கங்களை விட்டுக்கொடுத்து 'கண்ட பாவனையில் கொண்டை போடும்' நிலைமைக்கு மாறவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. முக்கிய குடும்பச்சடங்குகள் பெரியவர்களின் வழிகாட்டலில் ஒரு ஒழுங்குமுறையைப் பின்பற்றி இடம்பெற்று வந்தமை இன்று நிழற்பட அல்லது தொலைக்காட்சிப் படப்பிடிப்பாளர்களின் கைகளுக்கு மாறிவிட்டன. திருமணமண்டப உரிமையாளர்களின் வார்த்தைகளுக்குக் கட்டுப்பட்டு அவர்கள் சினிமாப்பாணியில் நடத்தும் நாடகமேடையாக மாறிவிட்டன. இருப்பினும் இவை இன்றும் நிலைபெற்றுள்ளமையை மறுப்பதற்கில்லை.

பொய்யும் வழுவும் தோன்றியபின்னர்
ஐயர் யாத்தனர் கரணம் என்ப?

- தொல்.பொரு. கற்பியர் 4

தோல்காப்பியர் காலத்திற்கு முன்னரே திருமணச்சடங்குகள் இடம் பெறத் தொடங்கிவிட்டன என்பதனை இந்தப் பாயிரம் படம்பிடித்துக் காட்டுகின்றது. அந்த சடங்குமுறைகள் இன்றும் எம்மோடு ஒட்டிக்கொண்டு இருக்கின்றன.

காதல் வயப்பட்ட தலைவிக்கு பைத்தியம் அல்லது பேய் பிடித்து விட்டது என வேலனை அழைத்து பேய்விரட்டு செய்திருக்கின்றாள் சங்ககாலத்துத் தாய். சங்ககாலத்து உளவியல் முறையாக அது இடம்பெற்றுள்ளது. தனது நிலைமறந்து சதா சிந்தித்தவண்ணம் இருக்கும் மகளைக் கண்டு வேதனையுறும் தாய் அவளின் அந்த நிலையை மாற்றுவதற்கு மேற்கொள்ளும் முயற்சியே வேலனாட்டம். ஆனால் அந்த மரபு இன்று வேறுவிதமாக மாற்றமடைந்துள்ளது. பேய்விரட்டு, பில்லி சூனியம் எடுத்தல் களிப்புக்களித்தல் போன்ற மூடத்தனங்கள் புலம்பெயர்ந்த மண்ணில் கூட இடம்பெறுவதினைக் காண்கின்றோம். கனடாவிற்கு படையெடுக்கும் இந்திய சாத்திரப் பேர்வழிகள் 'படிப்பறிவற்ற' தமிழர்களின் பணத்தைப் பறிக்க ஆடும் நாடகங்களைக் கண்டும் கேட்டும் மனம் புழுங்குகின்றது.

திருமண விழா அனைத்து விடயங்களையும் மிகவும் கோலாகலமாக் காட்டவேண்டும் என்பதற்காக பணத்தை வாரி இறைப்பதோடு வெவ்வேறு கலாச்சாரப் பண்பாட்டு நடைமுறைகளை கலந்து மேற்கொள்ளுவதனையும் காண்கின்றோம். திருமணம் என்றால் என்ன என்பதனை தொல்காப்பியர் பின்வருமாறு கூறியுள்ளார்.

கற்பெனப்படுவது கரணமொடு புணரக்
கொளற்குரி மரபிற் கிழவன், கிழத்தியைக்
கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள்வதுவே

- தொல்: பொருள்: கற்பியல் 140

'கற்க கணிதம் கசடற'

மாணவர்களின் வீட்டுக்கு வருகைதந்து தனித்தனி வகுப்புகள் எடுக்கப்படும்.



பெற்றோர் பேசிச் செய்யும் திருமணம் தொன்று தொட்டுத் தமிழர்களிடையே நிலவியது என்பதனை எடுத்துக் காட்டுகின்றது. தொல்காப்பியம் உணர்த்தும் மனையறம் என்பது பாரம்பரியமாகப் பின்பற்றப்பட்டு வரும் தமிழரின் மரபு பற்றிக் குறிப்பிடுகின்றது. மாறாகக் களவொழுக்கத்தில் தலைவனும் தலைவியும் தாமே சந்தித்துப் பேசிப் பழகிப் பெற்றோரை அணுகி மணம்முடிக்கும் மரபு, உறவினர் அறியாவண்ணம் 'உடன்போக்கு' வழி இடம்பெறும் மணமுறை, களவியற்கற்பு மரபு அதாவது இன்றைய common law முறைமை போன்ற வழக்காறுகளும் இருந்துள்ளன. இவ் வழக்காறு இன்றுவரையும் தமிழர்களிடையே நிலைத்து நிற்பதனைக் காண்கின்றோம். காதலினால் கட்டுண்டு தலைவனும் தலைவியும் தாமாக விளைந்து சென்று மணம்புரியும் மரபுவழி பண்டைய தமிழகத்தில் இடம்பெற்றுள்ளமையை பின்வரும் தொல்காப்பியச் சூத்திரம் எடுத்துக்காட்டுகின்றது.

களவின் வழிவந்த கற்பிற் புணர்ச்சி
கிளைஞரின் எய்தாக் கேண்மையும் உடைத்தே
உடன்போய் வரைதலும் உண்மையான

சங்க இலக்கியங்கள் களவுவழி உடன்போக்கு மணவினைகளை விதைந்துரைப்பதனைக் காணலாம். உடன்போக்கு பாலை நிலத்திற்குரிய பண்பாகக் கொள்ளப்படுகின்றது. வெளியிடத்தில் இருந்து வந்த தலைவன். தான் காதல்கொண்ட தலைவியை அவளின் பெற்றோர் அறியாவண்ணம் கூட்டிச் செல்கின்றான். அவளும் தலைவனோடு உடன்போகின்றாள். அவ்விதம் தலைவனுடன் சென்ற தனது மகளை நினைந்து பெற்றெடுத்த தாய் இறைவனை வேண்டி ஆராதிக்கும் நிலை காணப்பட்டுள்ளது. தனது மனக்கவலையை இறைவனிடம்தானே சொல்லி அழமுடியும்.

ஈன்று புறந்தந்த வெம் முள்ளாள்
வான்றோ யிஞ்சி நன்னகர் புலம்பத்
தனிமணி யிரட்டுந் தாளுடைக் கடிகை
நுழைநுகி நெடுவேற் குறும்படை மழவர்
முனையாத் தந்து முரம்பின வீழ்த்த
வில்லேர் வாழ்க்கை விழுத்தொடை மறவர்
வல்லாண் பதுக்கைக் கடவுட் பேண்மார்
நடுகற் பலி சூட்டிக் துடிப்படுத்துத்
தோப்பிக் கள்ளொடு துரூஉப்பலி கொடுக்கும்
போக்கருங் கவலைய புலவுநா ருருஞ்சுரந்
துணந்துபிற ளாயின ளாயிநு மணிந்தணிந்
தார்வ நெஞ்சமோ டாய்நலனளை இத்தன்
மார்புதுணை யாகத் துயிற்றுக தில்ல
துஞ்சா முழவிற் கோவற் கோமா
னெடுந்தேர்க் காரி கொடுங்கான் முன்றுறைப்
பெண்ணையம் பேரியாற்று நுண்ணறல் கடுக்கு
நெறியிருங் கதுப்பினென் பேதைக்
கறியாத் தேஎத் தாற்றிய துணையே.

- குடவாயிற் கீத்தனார் (அகநானூறு, பாலை-35)

வானளாவ உயர்ந்த மதிலை உடைய பெரும் மாளிகை தனித்து நிற்க, அன்போடு பெற்றெடுத்து வளர்த்த எம்மையும் மனதில் நினையாதவளாக சென்றுவிட்டாளே இறைவா! அவள் காடுமேடுகள் வழிச் சென்று பழக்கமற்றவள். செந்நெல் அரிசி சமைத்து இளம் ஆட்டைப் பலிகொடுக்கும் புலால் மணம் வீசும் காட்டுவழி செல்லத் துணிந்தனளே எனது மகள். அவளது துயரத்திற்காக வருந்தும் தாயின் புலம்பலை மிக அழகாகச் சிந்தரிக்கும் இப் பாடல் அக்கால பாலை நிலத்திற்குரிய காதல் ஒழுக்கத்தைப் படம்பிடித்துக் காட்டுகின்றமைக்கு மேலாக இன்றும் எம்மத்தியில் பெற்றோர் சம்மதம் தராதவிடத்து காதலனுடன் உடன்போகும் தன்மையை 'ஓடிப்போதல்' என்று குறிப்பிடுவதனைக் காணலாம்.

நாம் வாழும் சூழ்நிலை, பழக்கவழக்கங்கள் மட்டுமன்றி பொருள் தேடும் முனைப்பு, அவற்றின் முறைமைகள் எல்லாமே எமது நடைமுறைகளில் மாற்றங்களை ஏற்படுத்திக் கொண்டே செல்கின்றன. 'ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்' என்றார் வள்ளுவர். அதனை நாம் பின்பற்றுகின்றோமா என்றால் இல்லை என்றே சொல்லவேண்டும்.

உணவுப் பழக்கத்திலும் பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பிய மரபினை எம்மினம் கொண்டிருந்தது என்பதற்கு சங்க இலக்கியங்களும் திருக்குறளும் தக்க சான்றுகளாக அமைகின்றன.

பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை.

- குறள் -322

எனக் குறள் கூறுவதில் இருந்து கொண்டும் கொடுத்தும் உதவியும் இல்லாதோர்க்கு இரந்தும் வாழ்ந்தவன் தமிழன் என்பதற்கான சான்றாக அமைந்துள்ளது. அதற்கு மேலாக இல்வாழ்க்கையில் உள்ள ஒருவன் துறவிகள், தவமுனிவர்கள், பிரமச்சாரிகள் ஆகிய வர்களுக்கு நல்ல துணைவனாக இருக்கவேண்டும் என்பதன் மூலம் கொடைச்சிறப்பு குறிப்பிடப்படுகின்றது.

துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை

- குறள்- 42

இல்வாழ்க்கையின் கண் நீங்கி பிரமச்சாரிய வாழ்வினை மேற் கொண்டவர்களுக்கும் நல்கூர்ந்தாருக்கும் ஒருவரும் இல்லாத நிலையில் தன்னிடம் வந்து இரப்பவர்களுக்கும் குடும்பத்தன் எப்போதும் கொடுக்கும் பண்பினைக் கொண்டிருக்க வேண்டும் என்பதனை வலியுறுத்தவதன் மூலம் தமிழர்களின் மரபில் 'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே' என்பதனன் உட்போருளைத் தெளியத் தருகின்றது.

எம் இனத்தின் பண்பாடு புலம்பெயர் மண்ணில் நிலைக்குமா என்பது கேள்விக்குறியே? வயதில் மூத்தவர்கள் எதனைச் சொன்னாலும் மதித்துச் செய்துவந்த மரபைப் பின்பற்றி வந்தவர்கள் நாம். எதற்கும் இல்லை என்ற சொல்லே வாயில் வராத அளவிற்கு பண்பாடாக நடந்தவர்கள். இன்று எமது இளையர்களின் வாக்கில் மிக இலகுவாக இல்லை அல்து முடியாது என்ற சொல் வருவதற்குக் காரணம் எமது வழக்காறுகள் மங்கிவிட்டன என்பதே. பெரியவர்களை மட்டுமல்ல சகபாடிகளையும் ஏனையவர்களையும் மதிக்க வேண்டும் என்பதுதான் பொதுவாகக் கற்றுத்தரப்படும் பாடமாக அமைந்தாலும் எமது இளந்தலைமுறையினர் அவ்விதம் நடந்து கொள்ளாதது மனதிற்கு கவலையளிக்கின்றது. தாம் சொல்வதைக் கேட்கவேண்டும் என்னும் எண்ணம் இளைஞர்களிடையே முனைப்புப் பெற்று வருவதனையும் காண்கின்றோம். இது தமிழர்களிடம் மட்டுமன்றி மனித குலத்திற்கே சாபக்கேடாக அமைந்துவிடலாம்.

இன்று வாழ்வியலில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள்தான் இவற்றிற்கு முக்கிய காரணிகளாக ஆகின்றன. நாம் ஒவ்வொருவரும் ஆடம்பரமான வாழ்க்கைக்காக போராட்டம் நடத்துகின்றோம். இதற்காக எவற்றைச் செய்யவேண்டுமோ அவற்றைச் செய்கின்றோம். இதனால் எமது பண்பாடு, பாரம்பரியம் அனைத்தையும் கைவிடுகின்றோம். நல்ல உளப்பாங்கு, ஆத்மீகம் தொடர்பான விழுமியங்களுக்கு எந்தவித முக்கியத்துவமும் கொடுப்பதில்லை. இந்திய சமுதாய அமைப்பில் கொடுக்கப்பட்டு வந்த முக்கியத்துவம் நல்ல சமூகக் கட்டுக்கோப்பையும் பண்பையும் வளர்த்து வந்துள்ளது. ஆனால் அவை இன்று புறத்தொதுக்கப்படுவது எமது பாரம்பரியங்களை நாம் மறந்துவிடும் நிலையினை ஏற்படுத்துகிறது.

வாழ்க்கையை ஆடம்பரமாக்க வேண்டும் என்பதற்காக ஒழுக்கத்தையும் நற்பண்பினையும் மறந்துவிடுகின்றார்கள். இதனால் தாம் செய்யும் பணிக்கு மேலாக எதனையும் செய்வதற்கு கையூட்டை எதிர்பார்க்கும் அலுவலர்களைக் காண்கின்றோம். கையூட்டு என்னும் பணத்தால் தம்மை வளப்படுத்துவதோடு அதனைக் கொடுத்துத்தான் தமது தேவைகளைச் சாதிக்கும் நிலைமையும் எமது சமூகத்தில் இன்று தலைவிரித்து ஆடுகின்றது. காலங்காலமாக நாம் கட்டிக்காத்துவந்த பாரம்பரியங்கள், மிக உயர்ந்த ஒழுக்கப் பண்புகளை காற்றில் பறக்க விடுகின்றோம். அவற்றை எமது இளந்தலைமுறைக்குக் கடத்த நாம் எந்த முயற்சியையும் எடுப்பதில்லை. சமுதாயத்தில் ஒழுக்கக்கேடு தலைவிரித்தாடுகின்றது. இவற்றிற்கு நாம் அனைவரும் பொறுப்பேற்க வேண்டிய நிலை யில் உள்ளோம்.

sivapalu@thaiveedu.com

கடன் பிரச்சனைகளா?

- கடன் அட்டை சிக்கல்கள்
- வங்கிக்கடன் சிக்கல்கள்
- கலக்சன் கம்பனி போன் தொல்லை
- ஊதிய கையகப்படுத்தும் சிக்கல்கள்
- இது போன்ற கடன் பிரச்சனைகளால் தினந்தோறும் வீட்டில் சண்டை

நல்ல செய்தி

எம்மிடம் தீர்வு உண்டு

நம்மால் 80% வரை உங்கள் கடன்களை குறைக்க முடியும், உங்களால் முடிந்த குறைந்த மாதக்கட்டணம் மட்டும் செலுத்தலாம். இது ஒரு கடன் ஒருங்கிணைப்பு பெறுவது போல.

இலவச ஆலோசனை பெற

JANNET FINANCIAL SERVICES INC.

Ms. Jennet Sam & Mr. Stalin Dominic

Tel: 647-894-3876

FaX: 905-471-8080

Email: jennet_renni@hotmail.com

உடன் தழையுங்கள் உடனடியாக உங்கள் புதிய வாழ்க்கையை தொடங்க

வீடு | வணிகம்
★ வாங்க ★ விற்க ★ வாடகைக்கு...

Residential | Commercial
★ BUY ★ SELL ★ LEASE

$985,000
TORONTO
3 | 2

$849,000
AJAX
4+2 | 4

$899,000
MARKHAM
3 | 3

$689,900
OSHAWA
3 | 3

$649,900
TORONTO
4 | 2

Sell Your House for Highest Price - Here Are Some Recent Proven Results

$131,000 SOLD OVER ASKING
Mornigside & Stains
3 | 3 Town house

$180,000 SOLD OVER ASKING
Rossland & Chrch
5+2 | 7- Detached

$30,000 SOLD OVER ASKING
Middlefield & Finch
2+1 | 2 Condo

$26,000 SOLD OVER ASKING
Rossland & Chrch
3+1 | 3 Town House

CALL YOUR PROFESSIONAL SERVICE

Rave
P. Raveenthiran
Sales Representative

Dir: 416-567-2462
Email: realtor.rave@gmail.com

HOMELIFE
HIGHER STANDARDS
HomeLife G1 Realty Inc.
HomeLife/Future
Realty Inc.,Brokerage
205-7 Eastvale Dr,Markham ON. L3S 4N8
Bus: 905.201.9977

List your property with me...
FREE!
- Home Evaluation
- Home Staging
- Professional Photography
- Social Media Marketing
- Just Listed & Feature Sheet

மீண்டும் கடந்துபோகும் யாழ். நூலக எரிப்பின் நினைவுகள்

- என். செல்வராஜா

யாழ்ப்பாணப் பொதுசன நூல்நிலையம் கயவர்களின் தீக்குச்சி உரசலால் எரியுண்டுபோன எமது கலாச்சாரப் பெட்டகத்தின் நாற்பதாவது ஆண்டின் சம்பிரதாய நினைவுகூரல்கள் இதோ எம்மைக்கடந்து போகின்றன. மீண்டும் ஒரு நினைவுகூரலுக்காக அடுத்த ஆண்டும் மே, ஜூன் மாதங்களில் நாங்கள் விழித்துக்கொள்வோம். அதற்கிடையில் மேலும் பல கிடைத்தற்கரிய ஆவணங்களை நாங்கள் தொலைத்துவிட்டிருப்போம்.

1970 வரைக்குமான யாழ்ப்பாண பொதுசன நூலகத்தின் ஆரம்ப கால வரலாறு க.சி. குலரத்தினம் அவர்களால் ஆவணமாக்கப் பட்டது. யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவந்த 'ஈழநாடு' நாளிதழில் 20.07.1982 முதல் 19.08.1982 வரை தொடர்ச்சியாக இக்கட்டுரைத்தொடர் வெளிவந்தது. இடப்பற்றாக்குறை காரணமாக 19.08.1982 அன்று 'இனித் தொடராது' என்ற முடிவுக்குறிப்புடன் ஈழநாடு நிர்வாகத்தால் இவ்வரலாறு முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. அமரர் க.சி. குலரத்தினம் அவர்கள் 1981ல் எரியூட்டல் வரை அத்தொடரை எழுதத் தயாராகியிருந்தார் என்பதை நான் அறிந்திருந்தேன். பத்திரிகைத்தாள் தட்டுப்பாடு என்ற போர்வையின்கீழ் ஒரு வரலாற்றுத் தொடர் பொறுப்பற்ற விதத்தில் பத்திரிகை நிர்வாகத்தினரால் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டிருந்தது. அமரர் குலரத்தினம் அத்தொடரை பின்னர் தொடர்ந்து எழுதிமுடிக்கவேயில்லை. இத்தொடர் கட்டுரையே யாழ்ப்பாணப் பொது நூலக ஆரம்பகால வரலாற்றை விரிவாகக் கூறும் முதலாவது ஆவணமாகும். இது பின்னர் எஸ்.பொ., கலாநிதி வே.இ. பாக்கியநாதன் ஆகியோரின் கட்டுரைகளுடன், 'யாழ்ப்பாணம் நூல்நிலையம் - ஓர் ஆவணம்' என்ற தலைப்பில் அவுஸ்திரேலியா - மித்ரா வெளியீட்டகத்தினூடாக பெப்பிரவரி 1997ல் வெளியிடப்பட்டிருந்தது.

ஈழநாடு தொடரின் பின்னர் யாழ்ப்பாண மாநகர சபையால் ஜூன் 1984ல் 'மீள்விக்கப்பெற்ற கட்டடத் திறப்பு விழா ஞாபகார்த்த மலர்' என்ற ஆவணம் வெளிவந்தது. பின்னர் 1989இல் சார்ள்ஸ் ஜங்கரன் என்ற அன்றைய பாடசாலை மாணவனின் 'அணையாத அறிவாலயம்' என்ற நூலக எரிப்பு தொடர்பான சிறிய கவிதைத் தொகுப்பொன்று வெளிவந்தது. அதன் பின்னர் நீண்டகால இடைவெளியில் 2001ல் 'யாழ்ப்பாணப் பொது நூலகம் ஒரு வரலாற்றுத் தொகுப்பு' என்ற என். செல்வராஜாவின் ஆவண நூல் வெளிவந்து ஈழத்தமிழர்களை மாத்திரமல்லாது உலகத் தமிழர்களையும் யாழ் நூலகம் பற்றிய வரலாற்றுத் தேடல்களுக்கு உட்படுத்தியிருந்தது.

யாழ். பொது நூலக வரலாறு தொடர்பான பல்வேறு நினைவுப் பதிவுகளின் எழுச்சியை 2001ன் பின்னர் பல்வேறு நூல்களின் வழியாகவும், ஆவணப் படங்களின் வழியாகவும் அறியமுடிகின்றது. Rising from the Ashes (என்.செல்வராஜா, 2003), யாழ்ப்பாண நூலகம் அதன் சாம்பலிலிருந்து எழுகின்றது, The Jaffna Public Library Rises from it's Ashes (வி.எஸ். துரைராஜா, 2009), தீ தின்ற தமிழர் தேட்டம் (என். செல்வராஜா, 2013), உயில்: நூலகக் கவிதைகள் (க. நவநீதகிருஷ்ணன், 2015), யாழ்ப்பாண பொதுசன நூலகம் எரிக்கப்பட்டு 34 ஆண்டுகள் 01.06.2015: உண்மை நிகழ்வுகளின் தொகுப்பு (தங்க. முகுந்தன், 2015), யாழ்ப்பாணப் பொது நூலகம் அன்றும் இன்றும் (ரூபவதி நடராஜா, 2019), Memorable Tidbits including the Jaffna Library Fire (Edward Gunawardena)

இனவிரோதிகளால் தேடியழிக்க முடியாதபடி பாதுகாக்கும் வேலைத்திட்டமொன்றை நாம் உடனடியாகத் தொடங்கப்போகிறோமா அன்றேல் அடுத்த ஆண்டு நினைவுகூரலை எதிர்பார்த்து மீண்டும் எமது மற்றைய வழமையான 'அத்தியாவசிய' வேலைகளுக்குள் எம்மை ஈடுபடுத்திக்கொண்டு இதனையும் மௌனமாகக் கடந்துசெல்லப்போகின்றோமா?

ஆகிய நூல்கள் நானறிந்தவை. நானறியாதுபோன இன்னும் சிலவும் ஆங்காங்கே இருக்கக்கூடும்.

யாழ்ப்பாணப் பொது நூலகத்தின் அழிப்பின் - அதன்மூலம் நிகழ்த்தப்பெற்ற கலாச்சாரப் படுகொலையின் அரசியலை, அந்தச் சூழல் பற்றிய விழிப்புணர்வினை, எமது மக்களிடம் நீங்காத நினைவுகளாக வருடாந்த நினைவுகூரல்களின் வழியாக எடுத்துச் செல்வதில் நாமனைவரும் இன்றுவரை வெற்றிகண்டுவந்திருக்கின்றோம். இந்த ஆறாவடு நீண்டகாலம் எமது மனங்களில் நிலை கொண்டிருக்கும் என்பதை நாமறிவோம்.

இருப்பினும், இந்த நினைவு கூரல்களிடையே நாம் முக்கியமான-தொரு விடயத்தை - யாழ்ப்பாண பொதுசன நூலகத்தின் அழிப்பின் மூலம் நாம் கற்றிருக்க வேண்டிய ஒரு முக்கிய வரலாற்றுப்

பாடத்தை, நாற்பதாண்டு காலமாக கற்றுக்கொள்ளத் தவறிவிட் டோமோ என்ற மனக்குறை எனக்கு இன்னமும் உண்டு. இத்த கைய நூலக எரிப்பின் வழியாக எமது இனத்தின் கலாச்சாரத்தை, முதுசொத்தை அழித்துத் துடைத்தெறிய முனைந்த கயவர்களின் விருப்பத்தை இன்று எங்களது அறியாமையாலும் அக்கறையின் மையாலும் நாங்களே எங்களது கரங்களில் ஏந்திக்கொண்டிருக்கி-றோம். இன்றளவில் வெள்ளம், சுனாமி போன்ற இயற்கை அழிவு களாலும், போரினாலும், புலப்பெயர்வுகளினாலும், முறையான பராமரிப்பின்றியும் நாம் இழந்தவை கணக்கற்றவை என்பதை கண்டறியும்போது இந்த மனக்குறை பூதாகாரமாக எழுந்து நின்று எம்மைப் பயமுறுத்துகின்றது. நூலகம் எரிக்கப்பட்டு நாற்பதாண் டுகள் கடந்த நிலையில் இன்றுவரை நாம் இழந்தவை எவ்வளவு என்பதை, தாயகத்தின் நூலகங்களிலும் தனியார் இல்லங்களிலும் பழைய நூல்களைத் தேடி அலைந்துவரும் என்னைப் போன்ற வர்கள் தான் நன்கறிவர். 'தோலிருக்கச் சுளை இல்லாது போகும்' ஒரு நிலை அது.

ஒவ்வொரு படைப்பாளியும் தனது நூல்கள் எங்கோ ஒரு நூல கத்தில் பாதுகாப்பாக இருக்கும் என்ற நம்பிக்கையுடனேயே வாழ்ந்து மறைந்து விடுகிறார். நூலகம் வேறு, ஆவணக் காப்பகம் வேறு என்ற உண்மையை அந்த அப்பாவி எழுத்தாளர் மாத்திர மல்லாது எம்மில் பலரும் இன்றளவில் அறிந்திராதது கவலைக் குரியது. பட்டியலாக்கம், பகுப்பாக்கம், 'டிஜிட்டைசேஷன்' என்று நூலகத் தொழில்நுட்பங்களில் அக்கறை செலுத்தும் அளவிற்கு எமது நூலகக் கல்வியியலாளர்கள்கூட நூலகமும் சமூகமும் பற் றிய அடிப்படை கல்வியை எதிர்கால நூலகர்களின் மனதில் விதைப்பதில் வெற்றிகண்டுள்ளார்களா என்பதை அவர்களால் உருவாக்கப்பட்டு வரும் புதிய நூலகர்களின் செயற்பாடுகளின் வழியாக நாம் அறிந்துகொள்ள வேண்டும். இலங்கையில் அர சாங்கம் சட்டபூர்வமாக ஆவணக் காப்பகத்தையோ சுவடிச்சாலை யையோ மாகாண அரசின் பொறுப்பில் இயங்கவிடாமல் மத்திய மயமாக்கி வைத்திருப்பதன் அரசியல் உள்நோக்கம் என்ன என்ப தையும் நாம் உணரவேண்டியவர்களாயுள்ளோம்.

இன்றுவரை, தமிழ்ப் பிரதேசங்களில் நூற்றுக்கணக்கான பொதுசன நிறுவனங்கள் தனிநபர்களின் கூட்டு முயற்சியினால் உருவாக்கப் பட்டு வெற்றிகரமாக ஒரு காலத்தில் இயங்கி கால ஓட்டத்தில் இயக்கமின்றி மறைந்து மறக்கப்பட்டுவிட்டன. அவற்றின் வரலாற்று ஆவணங்கள் இன்று எங்கே பாதுகாக்கப்பட்டு வருகின்றன? அரச நிறுவனங்களின் பெறுமதிமிக்க வரலாற்றாவணங்கள் கொழும்பு சுவடிகள் காப்பகத்தில் பாதுகாக்கப்பட்டு வருவதுபோல, எமது உள்ளூர் நிறுவனங்களின் ஆண்டறிக்கைகள், வரலாற்று முக்கியத் துவமான கடிதங்கள் போன்ற வரலாற்றாவணச் சேர்க்கையினை தமிழ்ப் பிரதேசங்களில் இயங்கிவரும் பல்கலைக்கழக நூலகத்தி னதும் மாநகர பொது நூலகங்களினதும் சுவடிக் காப்பகப் பிரிவு கள் தேடிப்பாதுகாத்து வைத்திருக்கவேண்டுமல்லவா? செய்கிறார் களா? தேடிப்பாருங்கள்.

இனியொரு நூலகம் அழிக்கப்பட்டால்கூட அந்நூலகத்தில் இருந்த ஆவணம் மின்வருடல் செய்து உலகின் எங்கோ ஒரு இடத்தில் பாதுகாக்கப்படுகின்றது என்பதை நாம் உறுதிப்படுத் திக்கொள்ள வேண்டும் என்ற முனைப்புடன் எம்மிடையே இயங் கும் 'நூலகம் நிறுவனம்' போன்ற இணையவழி நிறுவனங்களை நிதித்தட்டுப்பாடின்றி தொடர்ந்து வேகமாக இயங்கவைக்க எம் மிடையே உள்ள தனவந்தர்கள் சிறிய அளவிலாவது நிதியுதவி வழங்க முன்வரவேண்டும். அதனால் அவர்களது ஆவணமாக்கல் பயணத்தை விரைவுபடுத்தலாம் என்பது வெளிப்படை. இதனை நாம் அனைவரும் செய்யவெண்டும் என்றும், அது எம் ஒவ்வொரு வரினதும் தார்மீகப் பணி என்றும் நினைத்துப்பார்த்திருக்கிறோமா? அது அடுத்தவரின் வேலை என்றல்லவா கடந்துசென்றிருக்கிறோம்.

2001ல் நான் 'யாழ்ப்பாணப் பொது நூலகம்-ஓர் ஆவணம்' என்ற நூலை தொகுத்திருந்த வேளை, யாழ்ப்பாண நூலகம் புனரமைக் கப்பட்டிருக்கவில்லை. இழுபறிகளுடன் அதற்கான ஆயத்தங்களே மேற்கொள்ளப்பட்டு வந்திருந்தன. இன்று அந்த நூலகம் எரிக் கப்படுவதற்கு முன்னர் இருந்த அறைகுறை நிலைமையை விட வும், 1950களில் அமரர் வி.எம். நரசிம்மன் அவர்கள் யாழ். மாந-கரசபைக்கு வழங்கிய வரைபடத்துக்கமைய முழுமையான கட்ட வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டு, 2,50,000ற்கும் அதிகமான நூல்க ளுடன் புதுப்பொலிவு பெற்றுக் காணப்படுகின்றது. இன்றைய தலைமுறையினருக்கு அந்த நூலகம் சாம்பல் மேட்டிலிருந்து பீனிக்ஸ் பறவையாக எழமுயன்ற பழைய வலிமிகுந்த வரலாறு சொல்லப்படவில்லை. அழிப்பின் அடையாளமே தெரிந்துவிடாமல் திட்டமிட்டு பூசி மெழுகப்பட்டே அவர்களுக்கு அந்த நூலகம் பின்னாளில் வழங்கப்பட்டிருப்பதும் தெரிய நியாயமில்லை. இந் நிலையில் நூலகத்தை எரித்தவர்களாலேயே புதிய வரலாறு எழு தப்பட்டு வருகின்றது என்ற செய்தி எமக்குள் எச்சரிக்கை மணியை எழுப்பியிருக்கவேண்டும். நூலக எரிப்பில் நேரடிப் பங் காளனாக இருந்த எட்வர்ட் குணவர்த்தன என்ற முன்னாள் டீ.ஐ.ஜீ. எழுதிய சுயவரலாற்று நூலான Memorable Tidbits including The Jaffna Library Fire, என்ற நூலில் தமிழீழ விடுதலைப் புலிகளே 1981ல் யாழ்ப்பாண நூலகத்தை தீயிட்டுக்கொழுத்தினார்கள் என்று

படம்: ஐயா

புதிய வரலாற்றை எழுதுகின்றார். இனி எதிர்காலத்தில் இத்தகைய அபத்தங்களே எமது வரலாறாகும்.

நூலகத்தின் எரிப்பு இரு பக்கங்களைக் கொண்டது. எரித்தவர்கள் ஒரு பக்கம், எரியுண்டதை உணர்ந்தறிந்த பாதிக்கப்பட்டவர்கள் மறுபக்கம். பலரும் பார்க்கத் தக்கதாக நூலகம் எரிக்கப்பட வில்லை என்பது வரலாற்று உண்மை. அரச உயர் அதிகாரிகள் உள்ளிட்ட அரசியல்வாதிகளை அரச பாதுகாப்புப் படைகள் கொலை வெறிகொண்டு தேடி அலைந்து திரிந்த அன்றைய இர விலும் மறுநாளும் செய்தி சேகரிக்கவோ, பார்வையிடவோ எவரும் அனுமதிக்கப்பட்டிருக்கவில்லை. இப்பொழுதுதான் எரித்தவரின் சாட்சியங்கள் படிப்படியாக வெளிவருகின்றன.

யாழ்ப்பாண நூலகத்திற்கு அருகில் தீயணைப்பு இயந்திரங்க ளையே கொண்டு செல்ல அங்கிருந்த வெறிகொண்ட அரச படை கள் அனுமதிக்கவில்லை. நூலகம் எரிக்கப்பட்ட செய்தியறிந்த மாநகர ஆணையாளர் சி.வி.கே. சிவஞானம் துப்பாக்கிமுனையில் திரப்பியனுப்பட்டார். யோகேஸ்வரன் தம்பதியினரைத் தேடிச்சென்ற படையினர் அவர்கள் மதிலால் பாய்ந்து மயிரிழையில் தப்பிச் சென்றதால் அவர்களது வீட்டைக் கொழுத்தினார்கள். அரசியல்வா திகளைத் தேடி கட்சி அலுவலகத்திற்குச் சென்ற அவர்கள் அவர் களை அங்கு காணமுடியாதுபோன ஏமாற்றத்தால் கட்சி அலுவல கத்தையே தீவைத்துக் கொளுத்தினார்கள். உள்ளூர் ஊரடங்கு நகரில் அமுல்படுத்தப்பட்டிருந்தது. இந்த நிலையில் ஜூன் 1ம் திகதி காலையில் நூலக எரிப்பின் எச்சங்களைக் காணச்செல்ல அன்றோ மறுநாளோ பார்வையாளர்களை அனுமதித்திருக்க வில்லை. அனைத்தும் இருட்டினுள்ளேயே சாட்சியமற்று மேலேற் றப்பட்டுவிட்டது. இந்தச் செய்தியை மக்களுக்குத் தெரிவித்திடக் கூடுமென்றே அதனைத் தடுக்கும் முயற்சியாக, ஈழநாடு பத்தி ரிகை காரியாலயமும் மறுநாள் எரித்து அழிக்கப்பட்டது. மே மாதம் நள்ளிரவு அச்சிடப்பட்ட ஜூன் 01ம் திகதிக்குரிய ஈழநாடு இதழ் யாழ்நகர் எரியூட்டப்பட்ட செய்தியைக் கூட மேலோட்ட மாகக் கடைகள் எரிக்கப்பட்டன என்பதுடன் 'இச்செய்தி அச்சுக் குப் போகும்வரை (31.05.1981 நள்ளிரவு) யாழ் நகரில் பல கடை கள் தீக்கிரையாகிக்கொண்டிருந்தன. தியேட்டர் ஒன்றும் தீக்கிரை யாகியுள்ளது'என்றே குறிப்பிட்டுள்ளது. அதன் பின்னர் ஜூன் 6ம் திகதிதான் பத்திரிகையின் அடுத்த இதழ் வெளிவந்துள்ளது. அதில் யாழ்ப்பாண நூலகம் எரியூட்டப்பட்டதாக ஒரு செய்திகூட இருக்கவில்லை. செய்தித் தணிக்கை பற்றிய முதற் பக்கக் குறிப்பே எமக்கு பத்திரிகையின் பக்கங்களில் சொல்லப்படாத சேதியை சொல்லிவைத்திருந்தன.

யாழ்ப்பாண நூலகம் எரியூட்டப்பட்டதை யாழ். சம்பத்திரிசியார் கல்லூரி மாடியில் தன் அறையிலிருந்து கண்ட தாவீது அடிகளார் அதனை தொலைபேசியின் ஊடாக கொழும்பு நண்பரொருவருடன் உரையாடியபோது வெளிப்படுத்தியிருக்கிறார். அந்த உரையா டலே யாழ். நூலக எரிப்புச் செய்தியினை கொழும்புக்கு எடுத்துச் சொன்னது. அவரது மரணமும் யாழ்ப்பாண நூலக எரியூட்டல் வரலாற்றுடன் சம்பந்தப்பட்டது. அவரின் மறைவு தொடர்பான கண்ணீர் அஞ்சலியில் 01.06.1981 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அவரது கல்லறை வாசகமொன்றில் அது 02.06.1981 என்ற குறிப் பிடப்பட்டுள்ளதை 'தனிநாயகம் என்னும் தமிழ்நாயகம்' என்ற தலைப்பில் அமுதன் அடிகளாரினால் தொகுக்கப்பட்டு சென்னை உலகத்தமிழர் பதிப்பகத்தால் வெளியிடப்பெற்ற நூலில் (268ம் பக்கத்தில்) உள்ள புகைப்படம் ஒன்றின் வாயிலாக அறிந்து கொள்ள முடிந்தது. தாவீது அடிகளார் மாரடைப்பால் ஜூன் 1ம் திகதி மரணமானார் என்று ஒரு செய்தியே இன்றளவில் பரவலாக அறியப்பட்டு வந்துள்ளது. இதனை இன்றும் உயிருடன் வாழும், அமரர் தாவீது அடிகளாருடன் நெருங்கிப் பழகியவர்கள் தெளிவு-படுத்தாவிட்டால் யாழ்ப்பாண நூலகத்தின் எரிப்பு மே 31 இரவா, ஜூன் 1ம் திகதி இரவா என்ற குழப்பம் நிலவுவது போலவே இவ ரது மரணத் திகதியும் வரலாற்றில் தெளிவற்றதாகி விடும்.

வரலாற்றை முறையாக ஆவணப்படுத்துவதில் எமக்குள்ள அசமந் தப் போக்கு இத்தகைய குழப்பங்களுக்கு வித்திடுகின்றன. கட்டு ரையாளர்கள் தெளிவான சிந்தனையுடனும் சமூகப் பொறுப்புணர் வுடனும் தமது படைப்பாக்கங்களை எதிர்காலத்தில் வெளியிட வேண்டும் என்பது வரலாற்றுக் கடமையாகும்.

எமது பண்பாட்டு / கலாசாரப் படுகொலையின் திட்டமிட்ட அழிப் பினை நினைவுகூர்வதுடன் எமது பணி நிறைவடைந்தவிட்டதாகக் கருதாமல், எமக்கானதொரு வரலாற்று ஆவணச்சேர்க்கையினை புகலிடத்துத் தமிழர்களின் உதவியுடன் இனவிரோதிகளால் தேடிய ழிக்க முடியாதபடி பாதுகாக்கும் வேலைத்திட்டமொன்றை நாம் உடனடியாகத் தொடங்கப் போகிறோமா அன்றேல் அடுத்த ஆண்டு நினைவுகூரலை எதிர்பார்த்து மீண்டும் எமது மற்றைய வழமையான 'அத்தியாவசிய' வேலைகளுக்குள் எம்மை ஈடுபடுத் திக்கொண்டு இதனையும் மௌனமாகக் கடந்துசெல்லப் போகின்றோமா?

selvarajah.n@thaiveedu.com

மலையகக் கவிதை இலக்கியச் செல்நெறி

தொழிலாளர் தொண்டு கீதம்

12

- மல்லியப்புசந்தி திலகர்

மலையகத்தின் இரத்தினபுரி மாவட்டத்தின் காவத்தை பிரதேச ஹவுப்பே தோட்டத்தைச் சேர்ந்தவர் பாவலர் வி.பி. கருப்பையா. நாட்டுப்பறப் பாடகரான இவர் தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கை வரலாற்றை யும் அவர்களுக்கான சீர்திருத்தக் கருத்துக்களையும் பாடிவந்துள் ளதுடன் அவற்றுள் சிலவற்றைத் தொகுத்து நூலாக்கி 1961ம் ஆண்டு வெளியிட்டும் உள்ளார். 'தொழிலாளர் தொண்டு கீதம்' என தலைப்பிடப்பட்டுள்ள இந்த பாட்டுப் புத்தகத்தை தானே காவத்தை, பியசிரி அச்சகத்தில் அச்சிட்டு வெளியிட்டதாகவும் குறிப்பு எழுதியுள்ளார்.

பாரத நாட்டை மறந்து இலங்கையில்
பாட்டாளி மக்களாய் வந்தவரே
வானரஞ்சூரர்களாண்ட மலை - நாட்டை
வாழ யாமாய் வெட்டி மீண்ட வரே
...
உங்களுக் கிங்கே சொந்நதமிருக்கென்று
ஓட்டு உரிமையந்தான் பறித்து - இந்த
நாட்டிலிருந்து கடத்திவிட - என்ன
நாயமிருக்குது கேளுங்களே

என வரலாற்றில் தாம் வந்து காட்டை நாடாக்கிய விதத்தையும் பின்னர் தமது நாட்டு உரிமையைப் பறித்து நாடு கடத்திவிட எத் தனிப்பதில் என்ன நியாயம் இருக்கிறது எனவும் கேள்வி எழுப்புகி-றார்.

வாதாடி வெள்ளையராண்டிடவும் - நல்ல
வங்க சமூகம் பல தோன்றிடவும்
மேதாவியாக்கி இந்நாட்டைத் திருத்திடக்
கூட்டமாய் நம்மை யழைத்திடவும்

ஓட்டுப் பதிவு உரிமைகளும் - இந்த
நாட்டிலே சொந்தமிருக்குதென்று
போட்டு பலனை எடுத்துத் திடமுடந்
தோட்டங்களாக அமைந்திட்டென்று

கூட்டிவந்து மலைநாட்டினிலே - நம்மை
வாட்டி வதைத்திட்ட ஆங்கிலேயர்
காட்டிக் கொடுத்து நடந்துவிட்டார் - சொந்த
நாட்டுக்கும் ஒட்டம் பிடித்து விட்டார்

என இலங்கைக்கு தம்மை அழைத்துவந்த வெள்ளையர்கள் தமது நாட்டுக்கு ஓடிவிட்டார்கள் என ஏளனம் செய்கிறார். காட்டிக் கொடுத்துவிட்டதாகச் சாடுகிறார்.

இறுதியாக,
என்ன முடிவு எடுப்பாரோ இந்த
ஏழைகள் வாழப் பொறுப்பாரோ
மாளுமரனும் உமையவளும் - லங்கை
மாதாவும் நம்மவளைக் காப்பாரோ

என இலங்கை ஆட்சியர் எத்தகைய முடிவை எடுப்பாரோ என ஏக்கம் கொண்டவராக தனது பாடலை நிறைவு செய்கிறார்.

குடியுரிமைப் பறிக்கப்பட்டு நாடற்றவராக இருந்த மலையகத் தமிழ் மக்கள் அறுபதுகளில் கொண்டிருந்த எதிர்பார்ப்பை மிகச் சரியாக பாவலர் வி.பி. கருப்பையா இந்தப் பாடல்களில் பதிவு செய்துள்ளார்.

அதேநேரம் நாட்டுரிமை பறிக்கப்பட்டு அரசியல் உரிமை மறுக் கப்பட்டிருந்த மக்கள் தொழிற்சங்க கட்டைமப்பில் இணையக் கோரியும் பாடல்களைப் பாடியள்ளார்.

தோட்டத் தொழிலாளர்களே தோழர்களே வாரும் - நான்
சொல்லுவதைக் கேளும் - தொழில்ச்
சங்கத்திலே சேரும்
அங்கத்தனராக இருந்து மக்களாக வாழும்

நாட்டையும் வளமாக்கிப் பலனைப் போட்டவன் தொழிலாளி
உரிமை கேட்டவந் தொழிலாளி - இப்போ
பலத்துவமாயத் துடித்து அரசை எதிர்த்தவன் தொழிலாளி

என தனது சமூகத்துக்கான குடியுரிமைப்போராட்டத்தினை தொழி லாளர்கள் மத்தியில் கொண்டுசேர்த்துள்ளார்.

சமரசமாய்ப் பேசி நம்மளின்
சலுகையைத் தருவாறோ - தேசத்
தலைவர்கள் வருவாரோ - நேச
உறவுடனிருப்பாறோ - போலி
வேசத்தினால்த் தூஷனித்து தேசத்தை பகைப்பாரோ

என தனது சமூகத்தின் விடுதலைக்கான தலைவர்களை தனது பாடல்களின் ஊடாகத் தேடி இருக்கிறார்.

வாருங்கள் வாருங்கள் தோழர்களே - வளமுடன்
கூறுவேங் கேளுங்களே - நாம்
வாழ்ந்திடும் தோட்டத்திலே இருந்திடும்

வள்ளலலைப் பாருங்களே

நல்லவர்போல் நடித்து - மக்களை
நாளுக்கு நாள் கெடுத்து
உள்ளங் குமரவைக்கும் கை - பந்தம்
ஊழியரை அகற்றும்

சிந்தனைச் செய்திடுங்கோ சங்கத்திலே
சேர்ந்தொன்றா வாழ்ந்திடுங்கோ
பந்தம் பிடித்து வரும் பாவிகளைச்
சொந்தம் பாராட்டதிங்கோ

என தொழிலாளர்களுக்கான எச்சரிக்கைப் பாடல்களையும் பாடி யுள்ளார் பாவலர் வி.பி. கருப்பையா.

இவரது சமகாலத்தில் கண்டி மாவட்டம் கம்பளை பகுதியில் வாழ்ந்தவர் பாவலர் எம்.எஸ். மாரிமுத்து. இவர் 1963ம் ஆண்டு மலையக மக்களின் மாண்பு கூறும் 'மதுர மணிக் கீதம்' எனும் பாட்டுப் புத்தகத்தை வெளியிட்டு உள்ளார்.

இவரது பாடல்களில் எள்ளலும் கேள்வியுமாய் தொழிலாளி முழக் கப்பாடல்களை அவதானிக்கலாம்.

காத்தான், கருப்பன் காணுவெட்டாட்டிக் கம்பனி ஏதுங்க?
காமாட்சி கண்ணம்மா கொந்தரப்பு
வெட்டாட்டி காடாய்ப் போகும் போங்க
குமரம்மா முனியம்மா கொழுந்து
புடுங்காட்டி கங்காணி ஏதுங்க - எங்க
குப்பம்மா சுப்பம்மா பால்மரம் வெட்டாட்டி
டயர் டியுப்பு ஏதுங்க?
ஆண்களும் பெண்களும்
பாடுபடாட்டி ஆபீசு ஏதுங்க? - பெரிய
அய்யாமார்கள் குந்திக்கிட்டு எழுத
அதற்கிடம் இல்லை போங்க

இப்படி கேள்விகளோடு கம்பனி, டயர், டியுப் போன்ற பாவனை ஆங்கிலச் சொற்களையும் கூட இவர் முச்சந்தி பாடல்களில் பாடி வைத்துள்ளார். பெரும்பாலும் தேயிலைத் தோட்டத் தொழிலாளர் கள் பற்றியே அதிகம் பாடப்பட்டுள்ள நிலையில் பால் வெட்டும் ரப்பர் தோட்டத் தொழிலாளர்கள் பற்றியும் பாவலர் எம்.எஸ். மாரிமுத்து பாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

60களில் மலையகத்தில் ஏற்பட்ட தொழிற்சங்க சந்தா பிரச்சினை குறித்தும் பாடியுள்ள இவரின் பாடல் ஒன்று இவ்வாறு அமைகி றது.

சங்க முழங்குது பங்கு பிரியுது
சந்தாக் குறையுதுங்க - ஐயா சந்தா குறையுதுங்க
உரிமை பறிபோகுது ஊதாரிச்செலவாகுது
வந்த பணத்துக்குங்க ஐயா
'வவுச்சர்' உண்டா குடுங்க
பாட்டாளி சங்கத்தில்
பணக்காரன் ஆதிக்கம் பரவி வருகுதுங்க - ஐயா
பல சங்கமாகுதுங்க

இந்தப் பாடல்களை அவதானிக்கும்போது 60களிலும் இப்போதும் மலையக தொழிற்சங்க அரசியல் கலாசாரம் பாரிய அளவில் மாற்றம் இல்லாத ஒரு போக்கை அவதானிக்கலாம். ஆனாலும் மலையகத்தில் சமகாலத்தில் எழுந்துள்ள 'சந்தா' தொடர்பான பிரச்சினை எதிர்வரும் காலங்களில் மலையக தொழிற்சங்க கட்ட மைப்பில் மாத்திரம் இன்றி அரசியல் கட்டமைப்பிலும் மாற்றத்தை வேண்டி நிற்கிறது.

(தொடரும்)

thilagar@thaiveedu.com



கி.ரா. எனும் அடையா நெடுங்கதவு

- கிருஷி

சத்தமில்லாமல் ஒரு மௌனப் புரட்சியை நிகழ்த்தி விட்டு, கி.ரா. என்று எல்லோராலும் உரிமையோடும் பிரியத்தோடும் அழைக்கப்பட்ட கி. ராஜநாராயணன் நம் எல்லோரிடமிருந்தும் துன்பங்கள் மண்டிக் கிடக்கும் இந்த ஸ்தூல உலகிலிருந்து மனநிறைவோடு விடைபெற்றுக்கொண்டார், மிச்சமிருந்த மிச்சக் கதைகளையும் எழுதி முடித்து விட்டு.

சுதந்திரம் பெற்று இந்த 74 ஆண்டுகளில் (ஏறக்குறைய முக்கால் நூற்றாண்டு காலத்தில்) நடைபெறாத ஒரு மகத்தான மாற்றத்தை, ஒரு புதிய அத்தியாயத்தை எழுதிவிட்டு விடைபெற்றிருக்கிறார். கி.ரா. மறைந்த பின் எழுதிய அத்யாயம் இது.

தமிழ் இலக்கிய உலகில் 150 ஆண்டு கால வரலாற்றில் எத்தனை எத்தனை உன்னதப் படைப்பாளிகள் தோன்றி தமிழ் மனங்களில் ஆளுமையும் சிந்தையில் மாற்றமும் செலுத்தியிருக்கிறார்கள்.

எந்த ஓர் எழுத்தாளருக்கும் அரசு மரியாதையுடன் துப்பாக்கிக் குண்டுகள் முழுங்க இறுதி அஞ்சலி நிகழ்ச்சி நடைபெற்றதில்லை தமிழ் நாட்டில். தமிழக அரசியல் - சமூக - கலாசார வெளியில் - வழியில் இது ஓர் திருப்புமுனை. மறைந்த பின் கி.ரா. நிகழ்த்திய மௌனப் புரட்சி.

புதுச்சேரியில் பிரபஞ்சன் மறைந்த போது நண்பர் பி.என்.எஸ். எடுத்துக் கொண்ட பெரும் முயற்சியினால் பிரபஞ்சன் இறுதி அஞ்சலி அரசு மரியாதையுடன் நடந்தது - புதுச்சேரியில். ஆனால், எந்த அமைப்புகளும் முன்முயற்சி எடுப்பதற்கு முன்பாகவே அரசின் அறிவிப்பு வெளியாகிறது.

அதற்கு கி.ரா. மூத்த - முதுபெரும் - தனித்துவம் மிக்க எழுத்தாளர் என்பது மட்டுமே காரணமல்ல பின்னே...!

இடைசெவலில் தான் பிறந்த மண்ணிலே - அதுவும் சின்னஞ் சிறிய கிராமத்திலே ஒரு அரசாங்கமே தமிழகத்தின் தலைநகரிலிருந்து பல நூறுமைல்கள் பயணம் செய்து ராணி மங்கம்மான் நெடுஞ்சாலையிலிருந்து குறைந்தது இரண்டு மைல் விலகி - கிராமத்துச் சாலையில் மெல்ல சக்கரங்கள் உருள நகர்ந்து. அரசு மரியாதையுடன் இறுதி அஞ்சலி நடைபெற்றது என்றால். அதன் பின்னணி தான் என்ன!

தாய்க்குத் தாயாய் அம்மா கணவதி அம்மாவைப் போல் தாதிக்குத் தாதியாய் பத்தாண்டு காலமாக இரண்டாவது மகன் பிரபி என்று பிரியமாக அழைக்கப்பட்ட பிரபாகரனிடம் 'என்ன நடந்தது பிரபி' என்று நல்லடக்கம் செய்யப்பட்ட அன்றிரவு கேட்டேன். ஃபோனை எடுக்கும் மனநிலை எங்கே இருக்கப் போகிறது பிரபிக்கு என்ற தயக்கத்தில் தான் முயற்சித்தேன்.

அவராகவே ஃபோனில் கூப்பிட்டார் பிரபி. ஒரு மணி நேரத்துக்குக் குறையாமல் பேசினார். முந்தின நாள் 17 மே 2021-ல் இரவு சரியாக 10.55 - 11.00க்கு சரியாக அஞ்சு நிமிசம் மகன் பிரபியைத் தன் இரு கரங்களாலும் ஆரத்தழுவும் நிலையில் கி.ரா. வார்த்தையில் சொன்னால் சீவன் பிரிகிறது.

கி.ரா. பக்கத்திலேயே அமர்ந்திருக்கிறார் பிரபி.

'எப்படா பிரியும் என் சீவன்'
'சும்மா இருங்கப்பா போகாம..'
'அந்தாலே எட்டிக்கிட்டு மிதிக்கன்னா...'
என்று அழுத்தம் கொடுக்கிறார் கி.ரா.
மெல்லக் சிரிக்கிறார் பிரபி
'சிரிப்பு...' என்ற நக்கல் தொனியில் பிரிகிறது கி.ரா. சீவன்.
மறுநாள் காலையில் பத்திரிகையாளர் கூட்டம்.

'புதுச்சேரியில் இவ்வளவு ஆண்டுகாலம் இருந்துவிட்டீர்கள். கி.ரா.வின் இறுதி அஞ்சலி இங்கு தானே'. சற்றும் யோசிக்காமல் - எந்த வித யோசனைக்கும் இடம் கொடாமல்.

'அண்ணனும் நானும் கலந்து பேசிட்டோம் இடைசெவலில் தான் எல்லாம்' என்கிறார் மின்னல் பொழுதில் பிரபி.

அந்த நேரம் தான் புதுச்சேரி கவர்னர் தமிழிசை சௌந்தர்ராஜன் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்த வந்த நேரம். 'புதுச்சேரி அரசின் சார்பாக கி.ரா. இறுதி நிகழ்ச்சிகளை அரசு மரியாதையுடன் நடத்தலாம்' என்று இருந்தோம். கி.ரா.வின் மகன் தமிழ் நாட்டில் கி.ரா.வின் இடைசெவலிலேயே நடத்தவிருக்கிறோம் என்று சொல்லி விட்டார். எனவே இப்பொழுதே இங்கேயே புதுச்சேரி அரசின் சார்பாக எமது இறுதி அஞ்சலியைச் செலுத்திக் கொள்கிறோம். மாண்புமிகு ஸ்டாலின் தலைமையிலான தமிழக அரசு - அரசு மரியாதையுடன் இறுதி அஞ்சலியை நிகழ்த்தும் என்பதில் எந்த விதச் சந்தேகமுமில்லை. என்கிறார். புதுச்சேரி ஆளுநர் தமிழிசை சௌந்தர்ராஜன் ஊடகங்களின் முன்னே.

பிரபியும் பத்திரிகையாளர்கள் முன்னே 'கி.ரா.வின் இறுதி அஞ்சலி நிகழ்வை அரசு மரியாதையுடன் நிகழ்த்திட வேண்டும் என தமிழக முதல்வர் ஸ்டாலின் ஐயா அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்' என்கிறார்.

செய்திகள் ஃப்ளாஷ் ஆகிறது ஊடகங்கள் வழியே உலகெலாம். மின்னற் பொழுதில் அடைய வேண்டிய கண்களையும் காதுகளையும் சென்றடைகின்றன.

கொஞ்ச நேரத்திலேயே தமிழக முதல்வர் ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பு அதிகாரப்பூர்வமாக வெளிவருகிறது.

கேட்டும் பெற முடியாத வேண்டுகோள் நிறைவேறுகிறது. கேட்காமலே கேட்காத வேண்டுகோள்களும் உத்திரவாதமாக அறிவிக்கிறார் முதல்வர் ஸ்டாலின்.

- கி.ரா. பிறந்த மண்ணாகிய இடைசெவலில் அரசு மரியாதையுடன் இறுதி அஞ்சலி நடைபெறும்.





- கி.ரா. பயின்ற பள்ளி பழைமை மாறாமல் புதுப்பிக்கப்படும்.
- கோவில்பட்டியில் கி.ரா.வுக்குச் சிலை நிறுவப்படும்.

தானாக முன்வந்து ரொம்ப இயல்பாக நடந்த இந்நிகழ்வுகள் - தமிழ் நெஞ்சங்களில் அமிழ்தத்தை வார்த்தன.

பாண்டிச்சேரி - விழுப்புரம் வழியே வழிநெடுக முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தவரும், இடது சிந்தையர்களும் 'வீர வணக்கம் வீர வணக்கம்' என்று முழக்கமிட்டு மாலையிட்டு மலர்தூவி தமது இதயத்து அஞ்சலி செலுத்தி மனம் ஆறினார்.

இடைசெவலில் அரசு மரியாதையுடன் துப்பாக்கிக் குண்டுகள் முழங்க கி.ரா.வுக்கு அரசு இறுதி அஞ்சலி செலுத்தி - தமிழுக்கும் தமிழ் நாட்டுக்கும் - தமிழ் பண்பாட்டுக்கும் - தனக்கும் பெருமையும், கௌரவமும் சேர்த்துக்கொண்டது முதல்வர் ஸ்டாலின்தலைமையிலான தமிழக அரசு.

தமிழக அரசை வாழ்த்துகிறோம் நன்றியுடன்!

சரி..., இந்தத் தேதியில் கி.ரா.வின் மறைவுச் செய்தி நிகழாமல்... ஒரு பத்துப் பதினைந்து நாட்களுக்கு முன் நிகழ்ந்திருந்தால்...? அதி மில்லியன் டாலர் கேள்வி அல்ல...!

விவேகானந்தர் தன் இறுதிக்கணத்தைத் தீர்மானித்தது போன்று கீ.ரா. என்ற இலக்கிய ரிஷியும் தனது நேரத்தை தீர்மானித்த இந்த மாயத்தை நிகழ்த்தியிருப்பாரோ...! சமூக, அரசியல், கலாச்சார தமிழ் வாழ்வில் - புதிய அத்யாயத்தை தன் மறைவின் மூலம் - தன் மறைவின் பின் நிகழ்த்த வேண்டும் என்பது அவர் ஆழ் மனத்தின் உள்ளொளியோ...! எப்படியோ இந்த விஷயத்திலும் கி.ரா.வே முன்னத்தி ஏர்! சொல்லேர் உழவர் அல்லவா!

கரிசல் வட்டாரச் சொல்லகராதி - மாரீஸ் போன்ற அற்புத ஓவியர்களின் (Layout Artist) துணையோடு உருவாக்கியதாகட்டும். கழனியூரன், பாரத தேவி போன்றோரை ஊக்கப்படுத்தி நாட்டுப்புறக் கதைகளைச்சேகரித்ததாகட்டும். ஒவ்வொரு பதிப்பிலும். அவர்கள் பெயரை தன் பெயரோடு சமமாக இணைத்து அச்சிட்டதாகட்டும்.

எந்த எழுத்தாளனும் எழுதத் துணியாத பாலியல் கதைகள் -மறைவாகச் சொன்ன கதைகள் ஆகட்டும் - நிறைய எதிர்ப்புகளை மீறி எழுதியதாகட்டும். ஆர்ப்பாட்டம், போராட்டம் என்றெல்லாம் நடந்திருக்கிறது. கபூனியூரன் பிரபல்யமானதும், அவர் தோப்பில் மீரான் வீட்டில் தலைமறைவு கொள்ள நேர்ந்த அதிசயங்களையும் நிகழ்த்தக் காரணமாக இருந்தது கி.ரா.வின் கைவண்ணத்தான்.

விவசாய சங்கப் போராட்டத்தில் சிறைக்குச் சென்றதகாட்டும். வெள்ளையர் ஆட்சிக் காலத்தில் கம்யூனிஸ்ட் கட்சி தடை செய்யப்பட்டிருந்த காலத்தில் கு. அழகர்சாமியும் கி.ரா.வும் இணைந்து அவர்கள் தலைமையில் செங்கொடி ஏற்றி - இடைசெவல் தொடங்கி கிராமங்களின் ஒற்றையடிப் பாதைகளின் வழியே மேதின ஊர்வலம் நடத்தியது ஆகட்டும்..

எல்லாவற்றிலும் எழுத்தாளர்களின் முன்னோடி...

எழுத்தாளர்களும், கலைஞர்களும், ஓவியர்களும், தகைமை வாய்ந்த ஆர். நல்ல கண்ணு, வை. கோபால்சாமி, கே.எஸ். ராதாகிருஷ்ணன் போன்றோரும் இளையராஜா, நடிகர் சிவகுமார், ஆதி மூலம், ட்ராட்ஸ்கி மருது போன்றோர் எல்லோரும் பரஸ்பரக் காதலோடு வருவதும் போவதுமாக இருந்தது கி.ராவின் ராஜபவனம். அவர் வீட்டுக் கதவு அடையா நெடுங்கதவாக இருந்தது.

அவரின் - இனிய இல்லத்தரசி கணவதி அம்மாள் கையால் ரெண்டுவாய்ச் சாப்பிட்டவர்களும் வாய் திகட்டச் சொன்ன கி.ரா.வின் கதைகளோடும், கை மணக்கக் கொடுத்த கி.ரா.வின் இல்லத்தரசி கணவதி அம்மாளின் விருந்தின் வாசத்தோடும் - கி.ரா.வின் 'கதவு' வழியே வந்தவர்கள் எழுத்தாளர்கள் ஆனார்கள். சாஹித்ய அகடாமி விருது வாங்கினார்கள். திரைப்படம் எடுத்தார்கள். கோவில்பட்டி எங்கும் எழுத்தாளர்கள் நிரம்பி இருக்க - தமிழகம் எங்கும் பரவியிருக்கிறார்கள்.

அடையா நெடுங்கதவு கி.ரா.வின் இறுதி அஞ்சலி நிகழ்விற்கு - முதல் முறையாக கி.ரா.வின் இடைசெவல் கிராமத்திற்கு தலைநகரமே நேரில் வந்தது.

கி.ரா.வின் சொந்த நிலத்தில் தமிழக அமைச்சர்கள் தங்கம் தென்னரசு, அனிதா ராதாகிருஷ்ணன், கீதா ஜீவன். சபாநாயகர் அப்பாவு, எம்.பிக்கள் கனிமொழி, மார்க்சிஸ்ட் சு. வெங்கடேசன் சட்டமன்ற உறுப்பினர்கள் மார்க்கண்டேயன், சதன் திருமலைக்குமார், ரகுராமன், தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் செந்தில் ராஜ், எஸ்.பி. ஜெயகுமார், ம.தி.மு.க. வைகோவின் மகன் துரை வைகோ. ஆகியோர் அஞ்சலி செலுத்தி... 21 குண்டுகள் முழங்க வழி அனுப்புதல் நடைபெற்றது.

தமிழக வரலாற்றின் கரடு முரடான நிலத்தில் பொன் ஏர் பூட்டி முதல் உழவைத் தொடங்கி இருக்கிறார் மறைந்த பின் கி.ரா. எனும் சொல்லோ உழவர்.

kirushi@thaiveedu.com

கி.ரா.வுடன்..

- ட்ராட்ஸ்கி மருது

கி.ரா.வின் கதைகளைப் படித்திருந்தாலும், 80களின் கடைசியில் மூத்த ஓவியர் ஆதிமூலமும் நானும் மத்திய அரசின் நெசவாளர் பணி மையத்தில் ஓவியர்களாக இருந்தோம். எங்கள் அலுவலகமும் அண்ணா சாலைக்கு இடம் பெயர்ந்த நேரம். அலுவலகக் கட்டடத்தின் இரண்டாவது மாடி தான் ஓவியர்களுக்கான தளம். இங்கு நாங்கள் இருவரும் பொது வெளியிலும் இயங்குகிறபடியால் ஓவியர்கள், இளம் கலைஞர்கள், எழுத்தாளர்கள், திரைப்படக் கலைஞர்கள், பத்திரிகைச் செயற்பாட்டாளர்கள், அப்போது சென்னை வந்து சேர்ந்த இலங்கைத் தமிழ், அரசியல் செயல்பாட்டாளர்கள் என்று எப்போது நண்பர்கள் வந்து போகிற இடமாக இருந்தது எங்கள் அலுவலகம். வெகுமக்கள் பத்திரிகைகளில் ஆதியும், நானும் இயங்கிய ஆரம்பம். மெதுவாக... குங்குமம் என ஆரம்பித்து இ.ரா. வேலுச்சாமியால் ஆனந்த விகடனுக்கும் ஓவியம் அளிக்க ஆரம்பித்த நேரம் அப்படித்தான். கி.ரா.வின் தொடருக்கு ஆதி சித்திரங்களைத் தீட்டினார். அடுத்து ஜூனியர் விகடனில் வந்த அவரது தொடருக்கு நான் வரைந்தேன். பின் தொடர்ந்து தாய் இதழில் 'வயது வந்தவர்க்கு மட்டும்' என்ற அவரது தொடருக்கும் வரைந்தேன். கி.ரா.விற்கு ஆரம்பத்தில் ஆதி வீட்டில் வரைந்து அலுவலகம் கொண்டு வருவார். என்னிடம் முதலில் காண்பிப்பர். அதுவும் பெரிய பேப்பரில் வரைந்து கொண்டு வருவார். ஆனந்த விகடன் காரர்கள் திண்டாடுவார்கள்.

கி.ரா.வின் எழுத்து வெகு மக்களிடம் செல்ல அப்போதைய எங்களின் நவீன பாணி ஓவியங்களின் வீச்சும் ஒரு காரணம் என்று அவரே அடிக்கடி சொல்வார், பெரும் அடக்கத்துடன். நான் அவரை வியந்து பார்ப்பேன் அப்போதும். அவர் வயது குறித்தும். அவரது அற்புதமான இயல்புமிக்க உரையாடலும் ஒரு கவர்ச்சி தான். அவ்வப்போது அவர் சென்னை வரும் போது எங்களது மாடிக்கும் வராமல் இருக்காது அவரது சென்னை விஜயம். தொடர்ந்து அவரது பல நூல்களுக்கு ஆதியும் நானும் பங்களித்தோம். ஆதி மறைவின் போதும் உடல் நலமில்லாத நிலையிலும் சென்னை வந்தார்.

ஆதிக்குப் பிறகும் நான் தொடர்ந்தேன். பாண்டிச்சேரிக்கு தொடர்ந்து செல்ல முடியவில்லை என்றாலும் ஏதாவது எனது ஒரு சித்திரம் அவரை பாதித்தால் உடனே தொலைபேசியில் அழைத்துப் பாராட்டி விடுவார்.

ஆதியும் நானும் அவரது சொற் பிரயோகத்தை வியந்து பேசிய படி இருப்போம். எனது சகோதரர் திலக்கின் நண்பன் கு. அழகிரி சாமியின் மகன் சாரங்கன். அவரோடு அவருடைய விளம்பரப் படங்களுக்கு - 80க்கும் மேலான படங்கள் கலை இயக்குநராக இயங்கிய காலத்திலும் அழிகரிசாமிக்கும் அவருக்கும் உள்ள தொடர்பு பற்றிய சம்பவங்கள் பல சொல்லிக் கேட்டிருப்பான் சாரங்கன்.

நான் வரைந்த கு. அழகிரிசாமி ஓவியமும் அவருக்குப்பிடித்த ஒன்று. அந்தத் தொகுப்பை சென்னையில் அவரே வெளியிட்டார்.

தாய் வார இதழில் வந்த 'வயது வந்தவர்களுக்கு மட்டும்' என்ற தொடருக்கு விரசம் வந்துவிடாதபடி எனது சித்திரங்கள் பற்றியும் பலர் பாராட்டினாலும், பொது வெளியில் குடும்பத்தினர் அனைவரும் படிக்கும் இதழில் சித்திரமாகத் தீட்டும் போது நகைச்சுவை தான் வெளிப்பட வேண்டுமே தவிர விரசம் தோன்றிவிடக்கூடாது என்றும், படித்தவர் படம் பார்த்து நகைக்க வேண்டும் என்கிறபடி வரைந்தது சவாலான ஒன்று தான் என்றும் கி.ரா. பாராட்டினாலும், எனது தந்தை அச்சித்திரங்களைப் பற்றி ஒரு கருத்தைக் கூறியது இன்றும் மறக்க வில்லை. அவர் "அப்படியான கதை எழுதலாம் படிப்பவர் மனதில் சித்திரம் இன்னும் நின்றுவிடும். நீ அதற்கு வரைய வேண்டுமா என்று நினைத்தேம்பா" என்று கூறியதும், பிறகு "நீ பொறுப்போடு தான் செய்திருக்கிறாய்" என்று பாராட்டிய தும் நினைவிலேயே இருக்கிறது. என்னவெனில், எனது மூன்று நான்கு வயதிலிருந்து நான் வரைகின்ற சித்திரங்களின் முடிவு அவரிடம் காட்டிப் பாராட்டுப் பெறுவதும் எனது வாழ்வில் ஒரு



தொடர் நிகழ்ச்சியாக இருந்தது. எனது தந்தை மரணிக்கிற வரையில் எனது அனைத்து சித்திரங்களையும் ரசித்துப் பாராட்டி மகிழ்வார்.

கி.ரா. எனது தந்தையின் இடத்தில் நின்றவர்களில் முக்கியமான வர். அவ்விடத்தை நிறப்பியவர். கடைசிக் காலங்களில் அவரோடு சந்திப்புகள் அருகிவிட்டது என்றாலும், தோற்றப் பொலிவுடன் அவர் ஆதி மற்றும் எனக்கு முன் அமர்ந்திருக்கிறச் சித்திரம் இப் போதும் நின்றுகொண்டிருக்கிறது.

பின்நாளில் அவரது 'ஒருத்தி' திரைப்படத்திற்கும் நான் கலை இயக்குநராக வேலையை ஆரம்பித்துவிட்டோன். ஐரோப்பியப் பயணம் முக்கியமாகிவிட்டதால் பயணிக்கவேண்டி, அந்த வாய்ப்பு நிறைவேறாமல் போய்டவிட்டது.

கி.ரா.வின் எழுத்து, கிராமமும் கதாபாத்திரங்களும் தமிழ் மனங்களில் என்றும் வாழும்.

trotskymarudu@thaiveedu.com

தமிழகத்தில் ஒரு புதிய கிராமம் உண்டான கதையை சொல்கிறது இந்நாவல். பதினாறாம் நூற்றாண்டில் நிகழ்ந்த இந்திய அரசியல் சூழலில் விளைந்த விளைச்சல் இது. புதிய கிராமம் என்றால் எல்லா அம்சங்களிலும் புதிது. மொழி, பண்பாடு, பழக்கவழக்கம், உருவம், நம்பிக்கைகள், பயம், ஏக்கம், கவர்ச்சி என தமிழ்மண்ணிற்கு புதியனவோடு வந்த நாயக்கர்களை மையமாக வைத்து எழுதப்பட்ட நாவல்.

இந்நாவலில் இடையறாது ஓடும் காலம்தான் கதாநாயகன். முன்னூறு ஆண்டு கால காலமாற்றங்கள் அப்படியே உருண்டு புரண்டுவரவில்லை. ஆந்திராவிலிருந்து முஸ்லீம்களால் துரத்தப்பட்ட நாயக்கர் என்ற தேசிய இனம் தமிழ்நாட்டுக்குள் அடைக்கலமடைந்து - வளர்ந்து - சிதைந்து போன மிக மெல்லிதான ஒன்றை இழை இடையறாது சொல்லப்படுகிறது. அந்த இனத்திற்குள் பன்முகப்பட்ட மனிதர்கள் இனங்காட்டப்படுகிறார்கள். அவர்களை வாசிக்க வாசிக்க சுகமாக இருக்கிறது. அந்த மனிதர்களின் முழு ஆளுமையை நோக்கிய பயணமாக இல்லை. அம்மனிதர்களிடம் ஏதோ ஒரு கணத்தில் வெளிப்பட்ட தூக்கலான அம்சங்களைத் தொகுத்துச் சொல்கிறார். அந்த அம்சம் கி.ராவிற்கே உரிய கவர்ச்சியான தொனியில் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த சிறு அம்சத்திற்குள் உடலசைவுகளின் சகல நுட்பங்களை வெளிப்படுத்தியபடியும், மனசஞ்சாரத்தை அளவோடும் சொல்லும் வித்தை செவ்வியல் தன்மையை எட்டிப்பிடிக்கிறது.

'கைகளால் கோரி அந்தக் குளுமையான தண்ணீரில் முகத்தை வைத்து அளைந்தாள். ஒரு குழந்தையை வாரி எடுத்து அதன் மெல்லிய வயிற்றில் வைத்து முகத்தைப் புதைத்து சுகம் காணும் ஒரு தாயின் செய்கையைப் போலிருந்தது அவள் செய்தது' கொலைப்படுவதற்கு முன் எழுதப்பட்ட வரிகள். எவ்வித பதட்டங்களையும் வாசகன் முன் விரிக்காமல் வெகு இயல்பாக கி.ரா.இப்படித்தான் கதையை நகட்டுகிறார். அடுத்தநொடி பற்றிய கவனத்தை துறந்துவிட்டு நிகழ்வின் நியதிப்படி எழுதிச்செல்லும் கலை கி.ராவிடம் அகப்பட்டதுபோல் மற்ற எழுத்தாளர்களிடம் முகிழ்க்கவில்லை. அதற்குக்காரணம் கற்பனையின் பரப்பிலிருந்து மாந்தர்களை உருவாக்காமல் கேள்விப்பட்ட, பார்த்த, வாழ்ந்து முடிந்த மனிதர்களை இலக்கிய பிரதிக்குள் இழுத்து வருவதுதான்.

இந்த அம்சத்தை புனைவு மாந்தருக்குள் கையாளப்படும் போது அதன் இலக்கியத்தன்மை மிகப்பிரமாண்டமாக மாற வாய்ப்பிருக்கிறது. புனைவு மாந்தனைத் தன் இஷ்டப்படி வளைத்து நிமிர்த்தி இழுத்து விசிறிவிட்டு விளையாடலாம். உண்மையில் வாழ்ந்த மனிதர்களைப் பதிவு செய்யும் போது யதார்க்கப் படைப்பாளிகள் அப்படிச் செய்வதை பழுது என்று நினைத்து ஒதுங்கிக் கொள்கின்றனர். சேதாரம் இல்லாமல் வார்த்தைகளில் உருவாக்கிவிட நினைக்கிறார்கள். அல்லது பார்த்த மனிதரைச் சிதைத்து உருவாக்க மனம் ஒப்புக்கொள்வதில்லை. அந்த மாந்தருக்குள் படைப்பாளி தன்னையும் புகுத்திக்கொள்வது என்பது நம் படைப்பாளிகளிடம் நிகழவில்லை. கி.ரா. அதில் கெட்டிக்காரர் போல தென்படும். அந்தக் கெட்டிக்காரர் தன்மை உள்ளம் சார்ந்தல்ல. உடல் சார்ந்து மட்டுமே நின்றுவிடுகிறது.

கோபல்ல கிராமம் இழந்த காலங்களின் மேல் விழுந்த கவர்ச்சியை அப்படியே பெயர்த்து முன்வைக்கிறது. இது கி.ரா.வின் மனம் சார்ந்த செயல்பாட்டால் நிகழ்வது. துயரமான நிகழ்வும் மகிழ்ச்சியான நிகழ்வும் கவர்ச்சியாகச் சொல்லப்படுகின்றன. இதற்கு அவரிடம் வாய்த்திருக்கும் நடை மக்கள் மொழியில் உருவாக்கிக் கொண்டதுதான். மற்றவர்களும் பேச்சுமொழியைக் கையாண்டாலும் இவரிடம் உருவாகும் ரம்யம் வெளிப்படுவதில்லை. கி.ரா.விடம் நிகழ்வுக்கான வார்த்தைகளின் தேர்வு வெகு இயல்பாக இருக்கின்றன. மற்றவர்களின் எழுத்துக்களில் வட்டார மொழி இருக்கிறதே தவிர அது பொதித்து வைத்திருக்கும் தொனி காதுகளில் ஒலிப்பதில்லை.

இந்த கவர்ச்சியைத் தாண்டி வாழ்வின் விரிவான தளங்களை நோக்கி கி.ரா படைப்பு நகர்வதில்லை. தன்னைத்தானே இயங்கிக் கொண்டிருக்கும் படைப்பு நிலை இல்லாமல் ஒருவர் எப்போதும் நம் முன் சம்மணங்கால் போட்டுக்கொண்டு கதை சொல்லும்

பாங்கு இவரின் எழுத்தம்சமாக இருக்கிறது. இதனால் மன நெருக் கடிகளுக்கும் வரலாற்றின் நெருக்கடிகளுக்கும் உரிய காலம் படைப்பில் நழுவி விடுகிறது. மாறாக மனசும், காலமும் கதை சொல்லியின் போங்கால் தொட்டுக்கொண்டு போகின்றன. இந்த நிலையிலும்கூட கி.ரா.வின் எழுத்து காட்சி ரூபம் பெற்று வாசக ருக்குள் ஓர் உலகத்தை விரிக்கத் தொடங்கிவிடுகிறது. அதற்கு அவரிடம் இருக்கும் சொல்தொனி, உடலசைவும்தான் காரணம். ஐம்பதுகளின் தொடக்கத்தில் மிக முக்கிய நாவலாக கருதப்பட்ட இன்றளவும் கருதப்படும் 'பொய்த்தேவு' நகர்வு ஒரு கதை சொல் லியின் பார்வையில்தான் சொல்லப்படுகிறது. கி.ரா.விடம் வெளிப் படும் காட்சிரூபம் பொய்த்தேவில் வெளிப்படவில்லை. வாழ்வின் மீதான விமர்சனம் பொய்த்தேவில் இருக்கிறது. கோபல்லகிராமத் தில் இல்லை. இரண்டிலும் இருவேறுபட்ட குறைகள் இருக்கின் றன. கி.ரா. எழுத்துக்கள் இந்த விமர்சன பார்வை வந்திருந்தால் தமிழில் எப்போதோ ஆகச்சிறந்த நாவல் எழுதப்பட்டிருக்கும். கி.ரா.வால் நிகழ்ந்திருக்க வேண்டிய ஒரு இலக்கிய நிகழ்வு நிக ழாமலே போய்விட்டது. அவரிடம் மட்டுமே தமிழ் மண் மனம் மிக வலுவாக இருக்கிறது. அடுத்த இடத்தில்தான் தி. ஜானகிராமனை சொல்ல முடியும்.

இயல்பின் அம்சங்கள் நிறைவாக சொல்லப்பட்டிருக்கும் படைப்பு கோபல்ல கிராமம். கி.ரா. எந்த கதாமாந்தர்களின் பக்கமும் சாய்ந் தும் கொள்ளாமல் விலகியும் நிற்காமல் சொல்கிறார். அதனதன் குணஇயல்புக்கு உந்து கி.ரா. தன்னிடம் உள்ள பூசு பொடியை அம்மனிதர்கள் மீது தடவிவிடுகிறார். சொல்தொனிதான் அந்த பூசு பொடி.

அவ்வக்காலத்தின் மனிதர்கள் அசலாக வருகிறார்கள். அவர்களை வைத்து வரலாற்றின் ஓர் இழையை படைப்புக்குள் ஓடவிடுகிறார். சுல்த்தான்களில் தாக்குதலால் (ஆந்திர கர்நாடக தேசத்தில்) விஜயநகரப் பேரரசு சிதைகிறது. வேளாண்மக்களுக்கு முஸ்லிம்க ளால் நேர்ந்த அவமானங்கள் சொல்லப்படவில்லை. அவமானத் திற்குள்ளான மக்கள் தப்பித்துத் தமிழகம் வருகின்றனர். அவமா னங்களை மூடி மறைத்து தங்களுக்கு ஒருவித தெய்வாம்சத்தைப் போர்த்திக்கொண்டு தமிழகம் வருகின்றனர். அந்த புராணிகம்தான் அவமானத்தைக் கிளறாமல் தாக்கும் கவசம் என மிகச்சரியாகத் தேர்கின்றனர். காலம் அப்படி. புதிய தேசத்தில் புகும்போது மரி யாதையில்லாமல் போய்விடக்கூடாது என்ற அச்சத்தால் உருவாக் கப்பட்ட புனைவுதான் தெய்வாம்ச கற்பனைகள். அவர்கள் பட்ட அடிகளிலிருந்துதான் அது உருவாகியது. அந்த அனுபவ உல கத்திற்குள் கி.ரா. உட்புகாமல் நாயக்கர் உருவாக்கி வழங்கி வரும் கர்ண பரம்பரை கதையை எவ்வித விமர்சனமும் இல்லாமல் அப்படியே எடுத்துக்கொண்டு விட்டார். அந்த கதை கி.ரா.வின் கண்களில் கவர்ச்சிமிக்க மொழியால் சொல்லப்பட்டிருக்கிறது. புராணிகத்தை உடைத்து கி.ரா. உள்ளே புகுந்திருந்தால் மாபெ ரும் வரலாற்றுத்தன்மையை வரித்துக்கொண்ட நாவலாக மாறியி ருக்கும்.

கோபல்ல கிராமத்தின் கதை முந்நூறு ஆண்டுகள் ஊடாடினாலும் கட்டபொம்மன் வாழ்ந்த காலம்தான் நாவலின் மையமான காலம். கொள்ளையடிப்பது ஒரு இனத்தாருக்கு குலத்தொழில். விவசாயம் பார்ப்பது இன்னொரு இனத்தாருக்குக் குலத்தொழில் இப்படி தச்சுத்தொழில், ஊர்க்காவல் என ஒவ்வொரு இனத்தாருக்குரிய குலத்தொழில் நொல்லைக் கண்கொண்டு பார்க்கப்படாமல் அவர் களின் வாழ்க்கையின் இயல்பான அம்சமாகப் பார்க்கப்படுகிறது. தீவட்டிக் கொள்ளைக்காரர்கள் கோபல்லகிராமத்தை முற்றுகையி டும்போது நாயக்கர்கள் அதை எதிர்கொள்ளும் முகத்தான் இருப் பது. கோவித்துக் கொண்டுவந்த நகையாசாரியின் மனைவிக்கு ஏற்படும் தண்ணீர்தாகம் திருடனுக்கு ஏற்படும் தண்டட்டிகள் மீதான திருட்டு மோகம் இரண்டு எதிர்நிலைகள் மோதிக்கொள்வது கழுவேற்றப்பட்ட திருடனை ஒரு குற்றவாளியாகவே சித்தரிக்காமல் திருட்டின் அனுபவங்கள் அவனுள் நிகழும் மாற்றங்களாகக் காட் டுவது. ஆந்திராவில் வைணவ விவசாய சமூகம் வியாபார தொழில்சார்ந்த முகமதிய சமூகத்தாரால் நெருக்குதலுக்கு உள் ளாக்கப்படுகின்றனர். பண்பாட்டு கலப்பிற்கு (மணமுறை) தாக்குப் பிடிக்க முடியாமல் தப்பிப்பது. தென்தமிழகத்தில் குடியேறிய நாயக்கர்கள் காட்டை செப்பனிட்டு விவசாயத்திற்குகந்த ஒரு கிராமத்தை உருவாக்குவது என காலத்தின் நிகழ்வுகள் இயல்பு குன்றாமல் சொல்லப்படுவதால் கோபல்லகிராமம் செவ்வியல் தன்மையை ஏற்றிருக்கிறது எனலாம்.

கிராமத்தின் குணாம்சம் கி.ரா. படைப்புகளில் உருவாகி இருப் பதுபோல் வேறு படைப்பாளிகளிடம் இல்லை.

- வாதியானவள் வழக்கைக் கேட்டுக்கொண்டு இருப்பவரையே தனது பிரதிவாதியாகப் பாவித்துக்கொண்டு 'பாவிப்பயிலே, உனக்கு நா என்ன செஞ்சேன்? எனக்கு நீ இப்பிடிச் செய்ய லாமா?' என்று கேட்பாள். பார்ப்பவர்களுக்கு, வழக்குறைப்பவ னுக்கும் கேட்பவனுக்கும்தான் தகறாரோ என்று நினைக்கத் தோன்றும்.
- 'என்னமா இருக்கு இந்தத் தண்ணி நாய்க்குட்டி வளக்கலாம் போலிருக்கே' என்றான் மனம் திறந்த ஆனந்தத்தோடு.
- 'ஐயா இப்பிடிக்கூடி ஒரு பொம்பிளை போனதைப் பாத்தி யளா?'
- கோவிந்தப்ப நாயக்கர் பாக்குப் பெட்டிக்குள் கையைவிட்டார் கண்களை மூடிக்கொண்டு பாக்குகளை அள்ளினார் சரியாக ஐந்து பாக்குகள் வரவேண்டுமென்று நினைத்தார் அவரை மீறி அவருடைய கைக்குளிருக்கும் பாக்குகளை விரல்களை உணர் வினால் எண்ணிப் பார்த்தன. கை அது தப்பு பட்டென்று எடுக் கணும். பிறகு அதை எண்ணிப் பார்க்கலாம். இப்படி எடுத்தால் அது கூட்டா?' கையில் வந்த பாக்குகளைப் போட்ட விட்டு திரும்பவும் எடுக்க ஆரம்பித்தார்.
- இலை அவ்வளத்தையும் உதிர்த்துவிட்டு நெத்துகள் மட்டுமே கொண்டுள்ள வாகை மரத்தைப் பார்த்தால், 'இந்த வாகைக்கு லச்சை கிடையாது. எல்லாத்தையும் உதிர்த்துட்டு அம்மணமாய் நிற்கிறதைப் பார்' என்பார்.
- திரவத்தி எழுந்ததும் அவருடைய முதுகில், உடம்பில் பட்டிருக் கும் மண்ணையெல்லாம் சின்னத்தம்பி தனது கைகளால் துடைத்து விட்டான். அப்போதுதான் திரவத்தி நாயக்கர் அப்ப டிச் சொன்னார். அடேய் சின்னத்தம்பி சரியான மனுசுடா உனக்கு. நல்ல மனசுக்காரன்டா நீ.
- காயடி கொண்டய்யாவைப் பார்த்து, 'உன்னோடு யாரும் மல் லுக்கு வரமாட்டார்கள் உன்னைப் பார்த்தாலே பயமாக இருக்கு' என்பார் அக்கையா!
- இந்தச் சூரியோதயம் ஒன்றை எத்தனை தரம் பார்த்தாலும் சலிப்பதில்லை. அது ஒரு நித்தப்புதுமை அன்றலர்ந்த மலர் போல. இந்த கண்கசாத சூரியனை, பூப்படையாத மங்கை யைப் பார்ப்பது போல கூசாமல் பார்க்கலாம்.

இப்படி பக்கத்துக்குப் பக்கம் மண்ணின் குணம் தன் போக்கில் பெருகிக்கொண்டே இருக்கிறது. தமிழ் இலக்கியத்திற்கு கி.ரா. தந்த மிகப்பெரிய கொடை இதுதான். வெனயமான மாந்தன் ஒரு வன் இந்நாவலில் வருகிறான். அவன் அக்கய்யா. அவனுடைய சூட்சுமமான வெளிப்பாடுகள் தமிழ்ப்பண்பாட்டை அடையாளப் படுத்துகின்றன. அவனுடைய வாழ்க்கைப் பயணத்திற்குள் நாவல் சென்றிருந்தால் நம் வாழ்க்கை முறையில் பல போலிப் பெருமை-களை எள்ளி நகையாடியிருப்பான். இவ்வகையில் அக்கய்யா பாத்திரம் சாத்தியத்திற்கான வழி. கி.ரா.வின் நோக்கம் கோபல்ல கிராமம் தமிழ்நாட்டில் எப்படி உருவானது? எப்படி உருமாறியது? அங்கு மனிதர்கள் என்னவிதமாய் வாழ்ந்தார்கள்! என்பதுதான். அதனால் அக்கய்யா எல்லா மனிதர்கள் போல அவனும் ஒருவன் - அவர்களுள் ஒருவன் என்பதாக அமைத்திருக்கிறார். இந்த நோக்கில் கி.ரா. போனஸ் செய்திருக்கிறார் எனலாம். குரூரமான நிகழ்வுகளும் இவருடைய ஆளுமையில் சந்தோசமிக்கத் தருணங் களாக வாசகர் முன் மாறிவிடுகின்றன. திருடனை கழுவேற்றும் இடத்திலும் தண்டட்டிக்காக கர்ப்பிணியை நீரில் முக்கி கொலை செய்யும் இடத்திலும் பதைபதைப்பு மறைந்து விநோதமான வாழ்க்கை நடைமுறையாகக் காட்டுகிறார். தேர்வு சார்ந்த நிகழ்ச் சித் தொகுப்புகளால் ஒரு வசீகரத்தை படைப்பில் ஏற்படுத்துவதில் கி.ரா. கொள்ள ஆசைப்படுகிறார். எப்படியிருந்தாலும் கிராமத்தின் அசலான மனிதர்களைப் படைப்பில் உருவாக்கிக்காட்டும் வித்தை கி.ரா.விடம் பலமாக இருக்கிறது.

venugopal@thaiveedu.com

‘ஒரு தனி வீடு’ நாவலுக்கு கி.ரா. எழுதிய முகவுரை

(கி.ரா. (1922-2021) என்று அன்புடன் அழைக்கப்பட்ட, எங்களுடன் வாழ்ந்த கி. ராஜநாராயணன் கரிசல்காடு தந்த முதுபெரும் தமிழ் எழுத்தாளர். கோபல்ல கிராமம், கோபல்லபுரத்து மக்கள் என்ற முக்கியமான நாவல்களைத் தந்தவர். நாட்டுப்புறக் கதை களஞ்சியம் என்ற கதைகளை 944 பக்க நூலாக எமக்கு அளித்தவர். கிராமத்தில் புழங்கும் பாலியல் கதைகளை துணிந்து தன் ஆக்கங்களில் படைத்தவர். வட்டார வழக்கில் தன் கதைகளைச் சொல்லியவர். 1991ல் சாகித்திய விருது பெற்றவர். இந்திய கம்யுனிஸ்ட் கட்சியில் அங்கத்தவராக இருந்தவர். 1947-1951ல் விவசாயிகள் கலகத்தை ஆதரித்ததற்காகவும் அதில் பங்குபற்றியதற்காகவும் இரண்டு முறை சிறை சென்றவர். அவருடைய ‘கிடை’ சிறுகதை ‘ஒருத்தி’ என்ற பெயரில் திரைப்படமாகவும் எடுக்கப்பட்டுள்ளது.

கி. ராஜநாராயணன் அவர்கள் தனது 99வது வயதில் எம்மைவிட்டுப் பிரிந்தார்.

மு. தளையசிங்கத்தின் ‘ஒரு தனி வீடு’ நாவலை தமிழ் நாட்டில் பிரசுரிக்க கி.ரா. எடுத்த முயற்சிகளும், அதற்கு அவர் எழுதிய முகவுரையும் நவீன இலக்கிய வரலாற்றில் முக்கியத்துவம் பெறுபவை. அதனால் அவர் எழுதிய அந்த முகவுரை இங்கே பிரசுரமாகிறது.)

ஒப்புக் கொண்டதனால் செய்கிற காரியந்தானே தவிர தளையசிங்கத்தின் புத்தகத்துக்கு முகவுரை எழு தும் தகுதி எனக்குக்கிடையாது. அவருடைய ‘போர்ப் பறை’ யைப் படிக்க ஆரம்பித்ததுமே சிறந்த ஒரு சுயம்பான சிந்தனை யாளர் அவர் என்பது தெரிந்துவிடும்.

திரு. ஆர். பத்மநாபனும், யேசுராசாவும் இங்கே வந்திருந்தபோது ஈழத்தின் இலக்கியப் படைப்பாளிகளில் யார் யாரை எல்லாம் படித்திருப்பதாக என்னிடம் கேட்டபோது, ‘அங்குள்ள ஒர்த்தரை யுமே நாம் படிச்சதில்லை. நானிருக்கிறது ஒரு குக்கிராமம். புத்த கங்களுக்கு எங்கே போறது. அதோட இங்கிருக்கிறவர்களையே நா சரியாகப் படிக்கலையெ. ‘சரஸ்வதி’ பத்திரிகை வந்திட்டிருந் தப்பொதான் அங்கேயும் பலர் இருக்கிறதை கண்டுகொள்ள முடிஞ்சது’ என்றேன்.

ஈழத்துக் கலை இலக்கியக்காரர்களைப் பற்றிய பேச்சு விரிந்த போது மு. தளையசிங்கத்தைப் பற்றிய கேள்வி வந்தது. யார் கையிலேயோ ‘போர்ப்பறை’ இருந்ததை வாங்கி அவசரவெட்டில் ஒரு பார்வை பார்த்தது. கொஞ்சம் கண் நுழைஞ்சதுமே அடே என்று மனசில் தைக்கும்படி இருந்தன என்றேன்.

அவர்கள் இலங்கை திரும்பியதும் திரு. பத்மநாபன் எங்களுக்கா கவும், எனக்காகவும் பல புத்தகங்களை தபாலில் அனுப்பி வைத்தார். அவைகளில் ‘போர்ப்பறை’, ‘புதுயுகம் பிறக்கிறது,’ ‘மெய்யுள்’ இவை மூன்றும் இருந்தது.

மூன்றையும் படித்து முடித்தபோது, தளையசிங்கத்தின் வெளி-வராத கையெழுத்துப் பிரதியாகவே இருக்கும் நான்கு நாவல்க ளையும் புத்தகமாகக் கொண்டுவந்துவிடவேணுமே என்கிற பரப ரப்பு மனசில தோன்றிவிட்டது. முதலில் ‘ஒரு தனி வீடு’ கொண்டு வருவோம் என்று நினைத்து உடனே அதை நகல் எடுத்து அனுப்பும்படி அவர்களைக் கேட்டுக் கொண்டேன்.

1983-ல் நடந்த ஜுலை கலவரத்தின்போது அகதிகளாக யாரோ பேர் தெரியாத அகதி ஒருவர் மூலம் ‘ஒரு தனி வீடு’ தட்டச் சுப்பிரதி என் கைக்கு வந்து சேர்ந்தது. படித்து பார்த்துவிட்டு நண்பர் மீராவுக்கு அனுப்பி வைத்தேன் புத்தகமாக ஆக்க. அவருக்கு தளையசிங்கத்தின் எழுத்துகளைப் புத்தகங்களாகக் கொண்டு வரும் பாக்கியம் இல்லை போலும். அது என்னிடமே திரும்பி வந்துவிட்டது. குங்கிப் போனேன். என்ன செய்வது என்று தெரியவில்லை. யாருமற்ற ஒரு தீவில் அனாதையாக மாட்டிக் கொண்ட ஒரு நிலைபோல் தோன்றியது.
தமிழக்கத்தின் பிரபல வாரப் பத்திரிகைகளில் தொடராகக் கொண்டுவர முயற்சி மேற்கொள்ளுமாறு நண்பர் வண்ணநிலவ னைக் கேட்டுக்கொண்டேன். அவர் அதைக் கையில் எடுத்துக் கொண்டு - தளையசிங்கத்துக்காக அல்ல! - எனக்காகப் படிகள் ஏறி ஏறி இறங்கினார். எந்த இடத்திலும் கதை பெயரவில்லை.

குற்றாலத்தில் ரசிகமணி டி.கே.சி. நினைவு விழாவுக்கு வந்திருந்த அன்பர் ரி.டி. திருமலையும் அவரது சகாவும் என் கையிலிருந்த ‘போர்ப்பறை’ புத்தகத்தை வாங்கி ஒரு பார்வை பார்த்தார்கள். அதிலுள்ள தளையசிங்கத்தின் முன்னுரையைப் படித்ததுமே இதை ‘உலக இதய ஒலி’ பத்திரிகையில் வெளியிடலாமா என்று கேட்டார்கள். ‘ஓ, பேஷாய்’ என்று சொன்னேன். அப்படியானால் தளையசிங்கம் பற்றி நீங்கள் ஒரு சிறிய குறிப்பு எழுதிக்கொடுத்து எங்களுக்கு உதவவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். எழுதி அனுப்பினேன். இரண்டுமே ‘இதய ஒலி’யில் வெளிவந்தது. இவைகளைப் படித்த பலர் மு. தளையசிங்கத்தைப் பற்றியும் அவரது புத்தகங்கள் எங்கே கிடைக்கும் என்றும் விசாரித்தார்கள். இப்படிக் கடிதங்கள் எழுதி விசாரித்தவர்களில் கோவை. சி. கோவிந்தனும் ஒருவர். இவரது கடிதத்தில் அவரது வெளிவராத மற்றப் புத்தகங்களையும் அச்சாக்கம் செய்ய விருப்பம் தெரிவித்து எழுதியிருந்தார். கேட்க வேண்டுமா சந்தோஷத்துக்கு. ஆனாலும் சரீ, வெளியிடுங்கள் என்று சொல்லமுடியவில்லை!

புத்தகம் வெளியிடுவது என்கிறது அவ்வளவு லேசு இல்லை. முதலில் அதை சுத்தமாகவும் அழகாகவும் அச்சாக்கத் தெரிந்தி ருக்க வேண்டும். இதெல்லாத்தையும் விட ‘பையிண்டு’ பண்ணு கிற காரியமிருக்கே அடேயப்பா, அது ரொம்பக் கஷ்டம். அடுத்து, அதை விற்று முதலாக்குகிறதுயிருக்கே. அது ரொம்ப ரொம்ப கஷ்டம். இதுக்கென்றுள்ள கெட்டிக்காரத்தனம் ரொம்பச் சிலருக்குத் தான் தெரியும். வெறும் ஆசைமட்டும் இருந்து என்ன செய்ய?

என்றெல்லாம் கேட்டு எழுதியிருந்தேன். அடுத்த தபாலிலேயே வந்தது பதில். அவர்கள் நடத்திக்கொண்டிருக்கிற ‘சமுதாயம் பிர-சுராலயம்’ பற்றியும் இதுவரை அவர்கள் வெளியிட்டுள்ள புத்தகங் களின் பட்டியல் பற்றியும். ரெட்டைச் சந்தோஷமாகி விட்டது எனக்கு.

இதோ புத்தகமாகவும் வந்துவிட்டது. கோவிந்தனைப் பாராட்ட வேண்டும். இதுவரை நீங்கள் வாசித்தது இந்த முகவுரைக்கு எழுதப்பட்ட முன்னுரை. இனி ‘ஒரு தனி வீடு’க்கு வருவோம்.

இந்த நாவலை தளையசிங்கம் 1960ல் தனது பல்கலைக்கழ கப் பட்டப்படிப்பு முடித்து வெளிவந்தவுடன் எழுதி முடித்தார். நாவலில் வரும் கதையின் ஆரம்ப காலகட்டம் 1949 என்று தெரிகி றது. களம் அவர் பிறந்த புங்குடுதீவுதான். புங்குடுதீவைப் பற்றி அவர் இப்படிச் சொல்லுகிறார்:

‘மாங்காய் நுனியைச் சுற்றி மொய்க்கும் எறும்புகளைப் போல இலங்கைத் தீவின் யாழ்ப்பாணக் குடாநாட்டின் முனையைச் சுற்

றிக் கிடக்கும் சின்னஞ்சிறு தீவுகளில் ஒன்றான இந்தப் புங்குடுதீ வின் படம் உயிரியல் மாணவனின் குறிப்புப் புத்தகத்திலிருக்கும் அமீபா படத்தை நினைவூட்டும்.'

'பனைகளால் வரும் பண்டங்களோடு அந்தக் கடலில் கிடைக்கும் மீனையும் நண்டையும் சேர்த்துக் கொண்டால் எந்தப் பஞ்சம் வந்தாலும் பயப்படாமல் வாழலாம்' என்றும் சொல்லுகிறார்.

கதை சுவாரஸ்யமான காதல்கதையாகத்தான் தொடங்குகிறது. கதைப் பாத்திரங்கள் வேற்று மண்ணிலிருந்தாலும் நம்மவர்களாக இருப்பதால் அவர்கள்பேரில் நமக்குப் பிரியமாக இருக்கிறது.

அவர்கள் பேசுகிற வட்டாரத்தமிழ் ரஸிக்கும்படியாகவே இருக்கி றது. முதலில் படிக்கிறவர்களுக்கு - இங்கேயுள்ளவர்களுக்குப் புரி யாதது போலத் தெரிந்தாலும், பழகப் பழக இனிக்கும் நெல்லிக் கனிபோல ஆகிவிடும்.

மனுசவாழ்க்கையின் அந்தரங்கங்களைப்பற்றிச் சொல்லிக் கொண்டே போகப்போக வாசிக்கிறதுக்குச் சுவையாகத்தான் இருக் கும். சுரங்கத்துக்குள் இறங்கி வெட்டி எடுத்துக்கொண்டு வந்து சுத்தமாக்கி, பொன்னை ஆபரணங்களாக - தினுசுதினுசாக - செய்து தருகிற வித்தையைத்தான் இந்த எழுத்தாளர்களும் செய்து கொண்டிருக்கிறார்கள்.

தளையசிங்கம் மூன்று விஷயங்களைக் கொண்டவராக இருக்கி றார். இலக்கியம் - ஆன்மீகம் - அரசியல்.

சிறுவயசிலேயே அவர் எல்லாத் தத்துவங்களையும் அறிந்து-ணர்ந்து ஒரு முடிவுக்கு வந்தவர்.

சரி என்று பட்டதைத் தயங்காமல் வாதத்திறமையோடு துணிந்து எழுதியவர்.

சொல்லிக்கொண்டே இருக்காமல் செயலிலும் இறங்கி நடந்து காட்டியவர்.

தளையசிங்கம் இந்த நாவலை எழுதி முடித்து கால் நூற்றாண்டு ஆகப்போகிறது. இது புத்தகமாக வெளியேவர இத்தனை நாட்கள் ஆகியிருக்கிறது. இன்னும் அச்சேறாத அவருடைய நாவல்களான 'கல்கி புராணம்'. 'ஒளியை நோக்கி', 'யாத்திரை' இவை மூன்றும் சீக்கிரமே வெளியாகும் என்று நம்ப இடமிருக்கிறது.

தனக்கு என்று வசிக்க ஒவ்வொரு குடும்பத்துக்கும் ஒரு தனிவீடு இருப்பதுபோல - அப்படி இருந்தால்தான் நிம்மதி. அது பீத்தல்க் குடிசையாக இருந்தாலும். - ஈழத்துக் தமிழனுக்கும் ஒரு தனி வீடு இருக்க வேண்டும் என்று தளையசிங்கம் எப்பவோ தீர்மானித்து விட்டார். அதை இந்த நாவலில் சொல்லவும் சொல்லிவிட்டார். நமக்கும் இப்போ இது சரி என்றுதான் படுகிறது.

ஒரு கூட்டுக் குடும்பத்தில் அண்ணன் தம்பிக்குள் புகைச்சல் என்று வந்துவிட்டால் வேற குடி வைத்துவிடுகிறோம். தம்பி யையோ அண்ணனையோ அவனுடைய குடும்பத்தோடு. ஆட்டுக் கானது தான் குட்டிக்கும் என்று சொல்வது போல் ஒரு குடும்பத் துக்கானதுதான் நாட்டுக்கும்.

இந்த நாவலில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியைப் பற்றி ஒரு குறை கூறல் (விமர்சனம்?) வருகிறது. இந்தக் 'குற்றச்சாட்டை' ஆட்சேபித்துத்தான் நண்பர் மீரா இதை புத்தமாகக் கொண்டு வர முடியாது என்று சொன்னது.

கம்யூனிஸ்டுகளைக் குறை கூறுவது என்பது இது முதல் தடவை அல்ல. அது எத்தனையோ குறை கூறல்களுக்கு மத்தியில் வளர்ந்த கட்சி. குறை உண்மையாக இருக்கும் பட்சத்தில் அது அதைப் பாதித்துவிட்டுப் போகட்டும். குறை உண்மை இல்லை என்று இருந்தால் அந்தக் குறையே குறை பட்டுப்போகும்.

'உள்ளூர் சாதிப்பிரச்சினையில் தாழ்த்தப்பட்ட மக்களை உயர் சாதிக்கு எதிராக போராடத் தூண்டும் இவர்கள் - கம்யூனிஸ்டுகள் - தமிழனின் நிலம், மொழி, கலாச்சாரம், செல்வம், கற்பு, உயிர் இவை யாவற்றையும் வந்து பேரினவாதிகள் சூறையாடும் போது மட்டும் பார்த்துக்கொண்டிருப்பது ஏன்?'

இந்தக் கேள்வி அப்படியே நம்முன் நிற்கிறது.

கம்யூனிஸ்டுகளிடமுள்ள சிறந்த அம்சங்கங்களெல்லாம் தளைய சிங்கத்துக்கு உடன்பாடுதான்.

'கம்யூனிசம் காட்டும் சமூக, அரசியல், பொருளாதாரப் பார்வை யின் பக்கபலத்தோடு எமது ஆழமான சமய கலாச்சார உரிமை-களையும் ஏற்றுக்கொண்டு எவன் போராடுகிறானோ அவனே எந்த விடுதலை இயக்கத்துக்கும் தலைமை தாங்கக் கூடியவனாக இருப்பான்' என்கிறார். (பக்கம் 144).

நிம்மதியாக வாழ்ந்து கொண்டிருந்த தமிழ் மக்களை 1956ல் பதவி ஏற்றதும் பண்டாரநாயகாவின் அரசுதான் 'சிங்களம் மட்டும்' என்கிற சட்டத்தை பாராளுமன்றத்தில் நிறைவேற்றியதன் மூலம் கிளர்ந்தெழ வைக்கிறது.

அந்தச் சட்டத்தை எதிர்த்து அமைதியாக நடத்திய சத்யாகிர கத்தை - 'காலிமுக சத்யாக்கிரகம்' - சிங்கள வகுப்புவாதிகள் வந்து இவர்களை அடித்து, உதைத்து, கல்லெறிந்து காடைத் தனத்தைக் கட்டவிழ்த்துவிட்டதோடு, தென் இலங்கையில் பல தமிழர்கள் தாக்கப்பட்டு கடைகள் உடைக்கப்பட்டு சூறையாடப் படுகின்றன.

வேண்டுமென்றே பிரதமர் பண்டாரநாயகா 'தமிழர்கள் அனுபவிக் கட்டும்' என்ற போக்கில் ஊரடங்குச் சட்டத்தைப் பிறப்பிக்கத் தாமதித்த அந்த 24 மணித்தியாலங்கள்...' என்கிறார்.

இப்படியாக முதல் முதலில் ஒரு இனக்கலவரத்தைச் சிங்களப் பேரின வகுப்புவாதிகள் துவக்குகிறார்கள்.

பிரசித்திபெற்ற வவுனியா மாநாடு 1958ல் கூடுகிறது. தமிழரின் ஒருமித்த குரலாக.

மாநாடு நடந்து முடிந்ததுமே அதன் வெற்றி, சிங்கள வகுப்புவா-திகளின் வயித்தெரிச்சல் கொடூரமாக, அரக்கத்தனமாக ஆரம்பமா கிறது.

அதை இந்த நாவலின் இரண்டாம் பாகம் 6வது அத்தியாயத்தின் ஆரம்ப இரண்டு பக்கங்களில் சுருக்கமாக வர்ணித்திருப்பது இப்போது நடந்த 1983 ஜுலை வன்செயல்களை அப்படியே வர்ணித்திருப்பது போலவே இருக்கிறது.

கதாநாயகன் சிங்கராசன் இப்படி முடிவுடன் பேசுகிறான்:

'நாங்க ஒரு சமஷ்டி கேக்கக்கூடாது. மாஸ்டர் இனி, தனித்தமிழ் நாடு கேட்பது. அதற்காகப் போராடுவதுதான் தமிழன் செய்ய வேண்டிய வேலை. அதில் வரும் கஷ்டங்களைத் தவிர்க்க முடி யாது. அதையெல்லாம் பொருட்படுத்தக்கூடாது. சரித்திர நியதி அது. சுதந்திரம் கிடைக்கும்வரை நாம் போராடுவோம். போராடு கிறபோது எங்கள்ள பலர் சாவினம். அதுக்காக நாங்க பயந்திர மாட்டம்.'

இவ்வாறாக ஈழத்துத் தமிழ்மக்கள் தங்களது சுதந்திரப் போராட் டத்தை ஆரம்பிக்க நிர்பந்தப்படுத்தப்பட்டார்கள்.

உலகத்தில் இதுவரை தங்களது சுதந்திரக்காகப் போராடிய மக் கள் முதலில் செந்நீரில் சிதைவுற்றாலும் காலந்தாழ்ந்தேனும் இறு தியில் வெற்றிதான் பெற்றிருக்கிறார்கள்.

யுத்தமானாலும் கலவரமானாலும் பாதிக்கப்படுவது பெண்தான். அவளுடைய கண்ணீருக்குக் கங்குகரையே இல்லை. முன்பு இதே தீவில் சீதா அழுதுகொண்டிருந்தாள். இப்போ சேதா அழுது கொண்டிருக்கிறாள். அவள் இன்னமும் அழுது கொண்டிருக்கி றாள். அவள் அழுகையை எப்போது நிறுத்துவாள்? ஈழமாதாவின் முகத்தில் புன்னகை பொலிவுறும்போது.

●

மட்டக்களப்புத் தேசத்துக் கோயில்கள்: சமூக ஒழுங்கமைப்பும் கருத்தியலும்

- க. சண்முகலிங்கம்

1911ல் எழுதப்பட்ட சனத்தொகைக் கணிப்பு அறிக்கையில் இலங்கையின் கிழக்குப் பகுதியான மட்டக்களப்பு 'முற்குகர் தேசம்' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்கு ஏறக்குறைய நூறு ஆண்டுகளுக்கு முன்னர் பிரதம நீதியரசராக இருந்த சேர். அலெக்சாண்டர் ஜோன்ஸ்டன் என்பவர், மட்டக்களப்பில் முக்குவர் (முற்குகர்) என்ற சமூகப் பிரினர் நில உடைமையாளர்களாகவும், அரசியல் அதிகாரத்தையுடைய 'வன்னிமை' எனப்படும் சிற்றரசுகளின் தலைவர்களாகவும் இருந்தனர் என்றும் குறிப்பிட்டுள்ளார். வரலாற்று ஆசிரியர்களும் மானிடவியலாளர்களும் மட்டக்களப்புப் பிராந்தியத்தில் கி.பி. 13ம் நூற்றாண்டிற்குப் பிற்பட்ட காலத்தில், சமூக, பொருளாதார, அரசியல், பண்பாட்டு வாழ்க்கையில் 'முக்குவர் மேலாண்மை' (Mukkuvar Dominance) வெளிப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளனர்.

மட்டக்களப்பில் முக்குவர் மேலாண்மையின் அடையாளங்கள் 20ம் நூற்றாண்டில் படிப்படியாக மறைந்து வந்துள்ளன. முக்குவர்கள் தமது சமூகப்படி நிலையில் உயர் நிலையைத் தொடர்ந்தும் பாதுகாத்து வந்த போதும் ஏனைய சில உயர் சாதிப் பிரிவினர் முக்குவர்களுக்குப் போட்டியாக தம் உயர்வையும் சமத்துவத்தையும் வெளிப்படுத்தினர் எனவும் ஆய்வாளர்கள் எடுத்துக் காட்டியுள்ளனர். மட்டக்களப்பு வாவிக்கு மேற்குப் புறத்தில் அமைந்துள்ள படுவான்கரைக் கிராமங்களில் ஒன்றான கொக்கட்டிச்சோலையில், ஏனைய இடங்களைவிட முக்குவர் சமூகப் பிரிவினரின் ஐக்கியமும் மேலாண்மையும் 20ம் நூற்றாண்டின் பிற்பகுதிவரை நீடித்தது என்பதை மக்கீல்வ்ரெய் (McGilvray) என்ற ஆய்வாளர் எடுத்துக்காட்டியுள்ளார், இக்கிராமத்தில் 1970களிலும், பின்னர் 1993லும் இவர் நடத்திய களஆய்வுகளின் போது பெறப்பட்ட தகவல்களைக் கொண்டு இக்கிராமத்தின் புகழ்பெற்ற தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தின் நிர்வாகம் பற்றி இவர் எழுதியுள்ளார். (McGilvray 2011, 138 - 142)

தேசத்துக் கோவில்கள்:

மட்டக்களப்புப் பிராந்தியம் முக்குவர் தேசமாக எழுச்சியுற்ற வரலாற்றுடன் அப்பிராந்தியத்தின் 'தேசத்துக் கோயில்கள்' சிலவற்றின் தோற்றமும் வளர்ச்சியும் தொடர்புற்றதாய் காணப்படுகிறது. இத்தேசத்துக் கோவில்களில் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயம், மண்டூர் கந்தசுவாமி ஆலயம், திருக்கோயில் சித்திர வேலாயுதர் சுவாமி ஆலயம் என்ற மூன்று ஆலயங்களும் சிறப்பிடம் பெற்றுள்ளன. இம்மூன்ற கோவில்களினதும் நிர்வாகம், சமய நடைமுறைகள், வழக்கங்கள் ஆகியவற்றில் பொதுவான ஒற்றுமைக் கூறுகள் காணப்படுவதோடு, ஒவ்வொரு கோவிலும் பல சிறப்புக் கூறுகளைக் கொண்டனவாயும் காணப்படுகின்றன. தேசத்துக் கோவில்களின் நிர்வாகம் தொடர்பான சர்ச்சைகளில் அடிக்கடி இடம்பெறும் சொல்லாடல்களில் 'உரிமை', 'பங்கு', 'வரிசை' என்னும் சொற்கள் மட்டக்களப்புக்கே உரிய சிறப்பான அர்த்தத்தை உடையனவாக அமைந்துள்ளன. தேசத்துக் கோவில் ஒரு பிராந்தியத்தின் முழுச் சமூகத்தினதும் வழிபாட்டுக்கு உரிய பொதுக்கோவில் ஆகும். இதன் சமய நடைமுறைகள் தொடர்பாக வெவ்வேறு சமூகப் பிரிவினர்களுக்குரிய 'உரிமைகள்' (Rights) இருந்து வந்தன. உரிமைகள் என்று கூறும்போது அதனோடு தொடர்புடைய இணைக் கருத்தான தகுதிக்கேடுகள் (Disabilities) என்பதையும் கவனத்தில் கொள்ளவேண்டும். ஒரு சமூகப் பிரிவினர் உரிமைகளை அனுபவிக்கும் போது இன்னும் சிலர் மீது தகுதிக்கேடுகள் அல்லது சுமைகள் சுமத்தப்படுவது வழமையான ஒன்றே. ஆயினும் சமூகத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட கோயில் கருத்தியல், மேலாண்மையுடைய சமூகப்பிரிவினரும், அப்பிரிவினரின் கட்டுப்பாட்டில் உள்ள பிற சமூகப்பிரிவினரும் சமத்துவமாகப் பங்கேற்கின்றனர் என்றே கூறுகிறது. கோயில் 'பங்கு' (Share) என்ற கருத்து கோயில் 'வண்ணக்கர்' முதல் மேளமடிக்கும் வள்ளுவ 'மூப்பனார்' வரை யாவருக்கும் 'பங்குகள்' உள்ளன. கூட்டான உடைமையாகவே (Joint Ownership) கோவில் நிர்வகிக்கப்படுகிறது என்ற தோற்றத்தைத் தருவதாக உள்ளது. ஆலயத்தின் ஆண்டுத் திருவிழாவின் இறுதி நாள் இரவு நிகழ்வுகளில் இடம்பெறும் 'குடுக்கை கூறுதல்' என்ற சடங்கியல் நிகழ்வு முக்கியமானது. உருவத்திலும் அளவிலும் சமமான முட்டிகளில் கோவில் பிரசாதமான 'கஞ்சி' நிரப்பப்பட்டிருக்கும். இம்முட்டிகளை கோவில் கடமைகளுடன் தொடர்புடைய தாய் வழிக் குடிகளின் (Matriclans) பிரதிநிதிகள் பெற்றுச் செல்வர். 'குடுக்கை கூறுதல்' கோயில் பங்கு உடையவர்களுக்கு 'வரிசைகள்' (Honours) அல்லது கௌரவம் வழங்கிச் சிறப்பித்தல் எனப்படும். மேற்தோற்றத்தில் இச்சடங்கியல் குறியீடுகளில் (Ritual Symbolism) சமூக இணக்கப்பாடும் ஒற்றுமையும் வெளிப்பட்டுத் தெரிகின்ற போதும் கோயிற் பிணக்குகளின் அடிப்படையாக சமூகப் பிரிவினர்களின் உரிமைக் கோரிக்கைகள் பற்றிய முரண்பாடுகள் அமைந்திருந்தன. அடுத்து கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தின் நிர்வாகம் தொடர்பாக பண்டை நாள் முதல் இருந்து வந்த ஒழுங்குமுறைகள் பற்றி நோக்குவோம். இவ் ஒழுங்கு முறைகள் வெவ்வேறு சமூகப் பிரிவினர்களின் 'உரிமைகள்' அவர்களிற்கு உரிய 'பங்கு', 'சமயச் சடங்கு'களின்போது வழங்கப்படும் 'வரிசைகள்' எனப்படும் கௌரவம் ஆகியன பற்றிய புரிதலை எமக்கு வழங்குவனவாக இருக்கும்.

தான்தோன்றீஸ்வரர் ஆலயம்:

தான்தோன்றீஸ்வரர் கோவில் அமைந்துள்ள கொக்கட்டிச்சோலைக் கிராமம் 20ம் நூற்றாண்டின் பிற்பகுதிவரை முக்குவர் என்ற சமூகப் பிரிவினரின் மேலாண்மை ஓங்கியிருந்த கிராமமாகும். 1975ம் ஆண்டில் மக்கீல்வ்ரெய் இங்கு களஆய்வு நிகழ்த்தினார். பின்னர் 1993ம் ஆண்டிலும் அங்கு சென்று தரவுகளைப் பெற்றார். தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தின் 'வண்ணக்கர்களாக' முக்குவர் சமூகத்தின் முதன்மைக் குடிகளான பின்வரும் மூன்று குடிகளைச் சேர்ந்தோர் பதவி வகித்தனர்.

- உலகிப்போடி குடி - 01 வண்ணக்கர்
- காலிங்க குடி - 01 வண்ணக்கர்
- படையாண்ட குடி - 01 வண்ணக்கர்

இம்மூவரும் கோவிலின் உடைமையாளர்கள் அல்லது நம்பிக் கைப் பொறுப்பாளர்கள் என்ற தகுதி நிலையை உடையவர்களாய் இருந்தனர். வண்ணக்கர் பதவிக்குத் தெரிவு செய்யப்படுபவர் இறக்கும் வரை அப்பதவியில் தொடர்ந்திருப்பார். இக்கோவிலின் பூசகராக குருக்கள் வம்சத்தைச் சேர்ந்த வீரசைவக் குருக்கள் இருந்தார். தான்தோன்றிஸ்வரர் கோவிலின் சமயச் சடங்குகளின் மேற்பார்வைக் கடமைகள் செய்வோராக (Ritual Overseers) கோயி லார் என்ற சமூகப் பிரிவினர் விளங்கினர். கோயிலார் சமூகப்பிரிவி னரின் குடியிருப்புகள் கோயிலுக்கு அண்மையில் அமைந்திருந் தன. மக்கீல்வ்ரெய் அங்கு 1975ல் சென்றார் எனக் குறிப்பிட் டோம். அவர் அங்கு செல்வதற்கு முன்பே 1960களில் தான்தோன் றீஸ்வரர் கோவில் முகாமைத்துவ நடவடிக்கைகளில் ஒரு முக்கிய மான மாற்றம் ஏற்பட்டிருந்தது.

கொக்கட்டிச் சோலைக்கு 8 மைல் தூரத்தில் அமைந்துள்ள பழு காமம் என்ற வேளாளர் கிராமத்திற்கு கொக்கட்டிச் சோலை தான் தோன்றீஸ்வரர் ஆலயத்தின் ஆண்டுத் திருவிழா தொடர்பாக சில 'உரிமைகளும்' 'பங்கும்' (Share) இருந்து வந்தது. பழுகாமத்தின் வேளாளர் சமூகப் பிரிவைச் சேர்ந்த அத்தியகுடி, வைத்தினாகுடி என்ற இருகுடிகளின் பிரதிநிதியான 'தேசத்து வன்னிமை' தான் தோன்றீஸ்வரர் கோவிலின் சடங்கியல் மேலாளராக (Ritual Over-seer) இருந்தார். 'தேசத்து வன்னிமை' பதவி மேற்குறித்த இரு குடிகளினதும் கூட்டு உடைமையான (Joint Ownership) உரிமை யாகும். பழுகாமத்தில் 'அத்திய முன்மாரி நெல்வயல்' என்று அழைக்கப்பட்ட நெல்வயல் தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தின் 'சடங்கியல் மேற்பார்வை' கடமைகளை ஆற்றுவதற்காக ஒதுக்கப் பட்ட நெற்காணிகள் ஆகும். இக்காணிகளின் பயிர்ச்செய்கையை அத்தியகுடி, வைத்தினாகுடி என்ற இருகுடிகளின் பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு சபை கண்காணித்து வந்தது. அக்காணிகளின் விளைவின் ஒருபகுதியை கோவில் பண்டசாலைக்கு அனுப்பி வைப்பர். 'தேசத்து வன்னிமை' இதன் பாதுகாப்பு, கணக்கு வைப்பு ஆகிய பொறுப்புக்களை ஏற்றிருந்தார். ஆண்டுத் திருவி ழாக் காலத்தில் கோயில் சடங்குகளை மேற்பார்வை செய்யும் பொறுப்புடையவர்கள் கோவிலிலேயே நிரந்தரமாகத் தங்கியிருந்து பணியாற்றுவர். கோயில் பணிகள் செவ்வனே நிறைவேற்றப்படுவ தற்கு 'கோயிலார்' என்ற சமூகப் பிரிவினர் தேசத்து வன்னிமையின் உதவியாளர்களாக இருந்து வந்தனர். ஆண்டுத் திருவிழாக்காலத் தில் கோவில் பணிகளில் உதவுவதற்காக பழுகாமத்தைச் சேர்ந்த மேலதிக ஆளணியினரும் வந்து சேருவர்.

மேலே விபரித்துக் கூறியபடி முக்குவர், வேளாளர், கோயிலார் என்ற மூன்று சமூகப் பிரிவினரதும் உரிமைகளும் கடமைகளும் பண்டுதொட்டு இருந்து வந்த வழக்காறுகளின்படி பின்பற்றப்பட்டு வந்தன. முக்குவ வண்ணக்கர்கள் தாமே கோயிலின் உடைமை யாளர்கள் என்ற அதிகார தோரணையை எக்காலத்தும் விட்டுக் கொடுக்கவில்லை. அவர்கள் பழுகாமத்து வேளாளர் சமூகத்தின் பிரதிநிதியான 'தேசத்து வன்னிமையை' தமக்குக் கீழ் பணியாற் றும் உதவியாளராகவே கருதி வந்தனர். கோயில் மேற்பார்வை யாளர் வண்ணக்கர்களுக்கு கட்டுப்பட்டவர்களாய் செயற்பட்டும் வந்தனர். கோயிலார் என்ற சமூகப் பிரிவினர் தொண்டூழியம், செய்வோர் என்ற நிலையிலேயே வேளாளரால் நோக்கப்பட்டனர். 1950களில் முக்குவர் வேளாளர் உறவுகளில் முரண்பாடுகளும், முறுகல் நிலையும் தோன்றியது. 1950களில் தோன்றிய முரண்பாடு கள் 1960களில் அதிகரித்தன. முக்குவரின் குறியீட்டு மேலாண் மையை (Symbolic Domination) வேளாளர்களால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. இக்காலத்தில் இடம் பெற்ற சட்டசபைத் தேர்தல் அரசியலும் இரு தரப்பாருக்கும் இடையிலான முறுகல் நிலையை அதிகரித்தது. 1960களில் பழுகாமத்தின் வேளாளர் சமூகத்தினர் திடீரென கோவில் கடமைகளை செய்வதை நிறுத்தினர். அத் தோடு 'அத்தியமுன்மாரி' நெல்வயல்களின் விளைபொருளை கோவிலுக்கு கொடுப்பதற்கும் மறுத்து விட்டனர். இதனால் எழுந்த பிணக்கு நீதிமன்றம் வரை சென்றது. நீதிமன்றத் தீர்ப்பு பழுகாமம் வேளாளர்களுக்கு சார்பாகவே அமைந்தது. இதனால் அவர்கள் மகிழ்ச்சியடைந்தனர். முக்குவர் சமூகப் பிரிவினருக்கு இது வருத் தத்தை உண்டாக்கியது. 1960களில் இவ்விரு சமூகப் பிரிவினர்க ளுக்கும் இடையில் ஏற்பட்ட முரண்பாடுகள் கோயிலார் சமூகப்பி ரிவினர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பாக அமைந்தது. அவர்கள் தாமே கோவிலின் உண்மையான மேற்பார்வையாளர்கள் (Over-seers) என்று கூறத்தொடங்கினர். நடைமுறையிலும் வேளாளர் பிரிவினர் முன்பு செய்த பணிகளை கோயிலார் பொறுப்பேற்கும் நிலையும் ஏற்பட்டது. இதன் மூலம் சமூகப்படி நிலையில் தமது உயர்ச்சியையும் அப்பிரினர் உறுதி செய்து கொண்டனர்.

ஆண்டுத்திருவிழாச் சடங்குகள் தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தின் ஆண்டுத் திருவிழாக் காலத்தில் இடம்பெறும் சடங்குகளில் 'குடுக்கை கூறுதல்' என்னும் சடங்கு முக்கியமானது என்பதைக் குறிப்பிட்டோம். 1975ம் ஆண்டு நடைபெற்ற ஆண்டுத் திருவிழா வினை மக்கீல்வ்ரெய் அவதானித்துக் குறிப்புகளை எழுதிக்கொண் டார். முக்குவர் சமூகத்தைச் சேர்ந்தவரான பாடசாலை ஆசிரியர் ஒருவர் 'முட்டிகளை' பெறவேண்டிய குடிகளின் பெயர்களைச் சொல்லி அழைத்தார். 120 பெயர்கள் அவரால் வாசிக்கப்பட்டன. தேசத்துக்குகோயிலின் பிராந்தியத்திற்கு உரியதான இன்றைய சமூக ஒழுங்கமைப்புக்கும் ஆசிரியர் வாசித்த குடிப்பட்டியலிற்கும் இடையே தொடர்பின்மை காணப்பட்டது. 120 முட்டிகளில் 36 முட்டிகளே சபையில் கூடியிருந்தவர்களினால் பெறப்பட்டன. செட் டிகள் என்ற சமூகப் பிரிவினருக்கு உரிய 10 முட்டிகளில் ஒன்றை-யேனும் பெறுவதற்கு எவரும் வந்திருக்கவில்லை. முழுமட்டக்களப் புப் பிராந்தியத்திலுமே இன்று செட்டிகள் என்ற பிரிவினர் இல்லை எனவும், அப்பிரிவினர் அடையாளம் தெரியாது மறைந்து விட்டனர் என்றும் கூறப்படுகிறது. 'குடுக்கை கூறுதல்' அல்லது முட்டிகள் வழங்குதல் ஒரு குறியீட்டியல் சடங்கு ஆகும். இப்பகுதியின் குடி யேற்ற வரலாறு பற்றிய புனைவுகள் ஊடாக சமூக ஒழுங்கமைப் பினை நியாயப்படுத்தும் சடங்காக இது அமைந்தது. குடுக்கை கூறுதலின் முக்கிய அம்சங்களாவன:

- காயில் பிரசாதமான கஞ்சி நிரப்பப்பட்ட முட்டிகள் பிராந்தியத் தின் சமூக ஒழுங்கமைப்பை பிரதிபலிப்பனவாக அமைந்தன.
- பிராந்தியத்தின் முழுச் சமூகத்திற்கும் கோவில் திருவிழாவில் 'பங்கு' உண்டு.
- முட்டிகள் அளவிலும், உருவத்திலும் சமமானவை. இது சமூக 'சமத்துவத்தை' வெளிப்படுத்துவது.

மட்டக்களப்பின் மரபுவழித் தமிழறிஞர்களால் எழுதப்பட்ட நூல்க ளிலும், கட்டுரைகளிலும் தான்தோன்றீஸ்வரம், மண்டூர் கந்தசுவாமி கோயில், திருக்கோயில் சித்திரவேலாயுதர் ஆகிய கோயில்களின் வரலாறும் வழக்காறுகளும் விபரிக்கப்பட்டுள்ளன. ஆயினும் இவ் விபரிப்புகள் 'உரிமை' 'பங்கு' 'வரிசை' ஆகிய சொல்லாடல்க ளுக்குள் மறைந்திருக்கும் சமூக முரண்பாடுகளை விளக்கத் தவறி யுள்ளன என்றே தோன்றுகிறது. மானிடவியலாளர் மக்கீல்வ்ரெய் இதுபற்றி அறிவொளி பாய்ச்சும் நுட்பமான கருத்துக்களைக் கூறியுள்ளார். அவை பற்றி பிறிதொரு கட்டுரையில் எடுத்துக் கூறு வோம்.

(- தொடரும்)

உசாத்துணை:

- McGilvray. Dennis .B (2008), Reprint (2011), S.S.A, Colombo Srilanka.
- கந்தையா வி.சி. மட்டக்களப்பு சைவக் கோவில்கள் - 1, இந்து சமயத் திணைக்களம் பிரதேச அபிவிருத்தி அமைச்சு, கொழும்பு.

shanmugalingam@thaiveedu.com

வீடு வாங்க விற்க...

10 வருட வீட்டுப்பரிசோதனை அனுபவத்துடன்

வீட்டுப் பரிசோதகர் வீடு விற்பனை முகவரானால்...

வாங்கப் போகிறீர்களா?

- தரமான வீடு தவறிப்போகாது
- பிடித்த வீடு மலிவாய் கிடைக்கும்
- வாங்கியபின் ஏமாற்றங்கள் இல்லை
- பெருவருவாய் தரும் முதலீடு

விற்கப் போகிறீர்களா?

- இலவச வீட்டுப் பரிசோதனையும் ஆலோசனைகளும்
- விற்றபின் வரும் தடங்கல்கள் தவிர்ப்பு
- சந்தை விலைக்குக் குறையாத பெறுமதி
- உச்சப் பெறுமதிக்கான உபாயங்கள்

www.vela4homes.com

Condo - 188 Dalhousie St
1 BR+ 1 WR, 743 Sft- Loft

$ Cash incentive for referrals

Condo - 38 Elm St.
1 BR+1 WR, 697 SFT

Best investment

3+2 Bedrooms, 1+1 Kitchen
4 WR + Walkout Bsmt
Fully Renovated
Separate Entrance
Dual Units (city approved)

Estate Home

Deer Creek
Over 9,000 Sft,
Fully Renovated
1.45 Acre

Vela Subramaniam

Experienced Home Inspector
Sales Representative

Dir: 416-786-0760
info@vela4homes.com
www.vela4homes.com

Homelife/Future Realty Inc. Brokerage
Independently Owned and Operated
Bus: 416-264-0101 Fax: 905-201-9229
205-7 Eastvale Dr., Markham, ON L3S 4N8

Chairman's Club Award Winner 2015
Chairman's Club Award Winner 2017
Chairman's Club Award Winner 2018
HOMELIFE HIGHER STANDARDS

முனியாண்டி:
பிரிட்டிஷார் தடை செய்த இலங்கையின் முதலாவது கேலிச்சித்திர நையாண்டி இதழ்

- என். சரவணன்

இலங்கையின் முதலாவது நையாண்டி சஞ்சிகை 'முனியாண்டி' என்கிற பெயரில் வெளியான இதழ். 'முனியாண்டி' என்றதும் தமிழ் என்று கருதிவிடாதீர்கள். அது ஒரு ஆங்கில இதழ். 1869 தொடக்கம் 1871 வரையான மூன்று ஆண்டுகள் மட்டுமே வெளியானது இது. ஒரு நையாண்டி இதழுக்கு ஒரு தமிழ் பெயரை ஆங்கிலேயர் ஒருவர் இட்டதன் காரணமென்ன. 'முனியாண்டி' என்கிற தமிழ்ப் பெயர் நையாண்டிக் குரியவர்களாக கருதுகின்ற ஒரு உளவியல் அன்று இருந்திருப்பதை நம்மால் உணரமுடிகிறது. மலையகத்திலும், அதற்கு வெளியிலும் வாழ்ந்த இந்திய வம்சாவளியினரில் இந்தப் பெயர் மிகவும் பிரபல்யம்.

இதுவொரு நகைச்சுவை சஞ்சிகையாக மட்டுமல்லாமல் சிரிப்புடன் சிந்தனையையும் தூண்டும் சஞ்சிகையாகவும் இருந்தது.

ஆரம்ப காலங்களில் வெகுஜன காட்சிப்படுத்தல் கலாசாரத்தின் ஓர் ஊடக வகையாக அறிமுகமாகி அதன் பின் வளர்ந்து வந்தது. தொழில்நுட்ப வளர்ச்சிக்கேற்ப தனிக் காட்சிக் கார்ட்டூன்களாகவும், பின்னர் சித்திரக் கதைகளாகவும், காலப்போக்கில் தொலைக் காட்சி கார்டூன்களாகவும், பின்னர் இருபரிமாண, முப்பரிமாண கார்டூன்களாகவும் வளர்ந்து இன்று யதார்த்த சினிமா காட்சியுடன் போட்டிப்போட்டுக்கொண்டு கார்டூன் திரைப்படங்கள் சந்தையில் மட்டுமன்றி வெகுஜன இரசனையிலும் கோலோச்சுமளவுக்கு வளர்ந்து நிற்கின்றன.

இலங்கையில் 'முனியாண்டி' என்கிற பெயர் மலையகத்தில் பிரசித்தம் பெற்றது. 'முனியாண்டி' என்கிற பெயர் இந்தியவம்சாவளியினர் பயந்து 'பயபக்தியோடு' வழிபடும் தெய்வம். தென்னிந்தியாவிலிருந்து இலங்கைக்கு இந்திய வம்சாவளியினர் கொண்டு வரப்பட்டபோது அங்கிருந்து விழிம்பு நிலைச் சாதியினரையே பெரும் படையாக கொண்டுவந்ததை நாமறிவோம். அப்பேர்ப்பட்ட மலையகச் சமூகத்தில் கடவுள் வழிபாடென்பது விளிம்புநிலை சிறுதெய்வ வழிபாடுகளே வெகுஜன வழிபாட்டுப் பண்பாடாக நிலைத்திருந்தது. சுடலைமாடன், முனியாண்டி, கருப்புசாமி போன்ற தெய்வங்களையே அவர்கள் வணங்கினார்கள். அதுபோல அந்த குலதெய்வங்களின் பெயர்களை தமது பிள்ளைகளுக்கும் சூடுவதை பலர் வழமையாகக் கொண்டிருந்தனர். இந்த 'முனியாண்டி' போன்ற பெயர்களைக் கொண்ட மலையகத் தொழிலாளர் பலர் அடிநிலை தொழில்களில் பணிபுரிந்தார்கள். ஆக துரைமாருக்கும், பெரிய கண்காணி அல்லது எஜமானர்களுக்கு 'இளக்காரமான'வர்களாக இருந்தார்கள். அவர்கள் கேலிக்கும் ஆளானார்கள். ஜோன் கெப்பர் ஒரு துட்டத்துரையும்கூட. அப்பேர்ப்பட்டவர் தனது அரசியல் கிண்டல் கவர்ச்சிக்கு இந்தப் பெயரை சூட்டியிருப்பதன் உளவியலை நம்மால் புரிந்துகொள்ள முடிகிறது.

'முனியாண்டி', ஆங்கிலத்தில் நகைச்சுவையான, விளக்கப்படங்களையும் நையாண்டி கேலிச்சித்திரங்களையும் உள்ளடக்கிய இதழானது 1869 முதல் மூன்றே ஆண்டுகள் மட்டும் தான் தாக்குப் பிடித்தது. அதன் தீவிர அரச எதிர்ப்புப் போக்கின் காரணமாக ஆங்கிலேய அரசால் இறுதியில் தடை செய்யப்பட்டது. இரு வாரங்களுக்கொரு முறை பத்து பக்கங்களில் வெளியான 'முனியாண்டி' ஒரு சில்லிங்குக்கு அப்போது விற்பனையானது. அரசியல் நிகழ்வுகள், விவாதங்கள், துணுக்குகள், செய்திகள், சிறு கட்டுரைகள், வாசகர் கடிதம், ஆசிரியர் பதில் எனப் பல ஆக்கங்கள் அதில் உள்ளடங்கியிருந்தது.

'முனியாண்டி'யில் இருக்கிற காலனித்துவ எதிர்ப்பையும் ஆதரவையும் பற்றி ஆராய்ந்த காஞ்சனகேசி வர்ணபால அது ஒரு முரண் நகையான போக்கென்கிறார்.

'முனியாண்டி' காலனித்துவ அதிகாரத்துவ ஆட்சியையும், அன்றைய உயர் குழாமினரின் பாசாங்குகளையும், முட்டாள்தனங்களையும் கேலி செய்து அம்பலப்படுத்தியது.

இரு வாரங்களுக்கு ஒருமுறை வெளியான இந்த 'முனியாண்டி' இதழ் Fonseka's Press என்கிற பதிப்பகத்தில் ஜோன் கேப்பரால் வெளியிடப்பட்டிருக்கிறது. கொழும்பு சதாம் வீதியில் (Chatham Street) அப்போது அதன் காரியாலயம் இருந்திருக்கிறது. 1870ல் வெளியான Blue Book வெளியீட்டின் தகவலின்படி 2400 பிரதிகள் அன்றைய காலத்திலேயே விநியோகிக்கப்பட்டுள்ளது.

கெப்பர் ஏற்கெனவே லண்டனில் London Globe மற்றும் Charles

Dickens'ன் பிரபல சஞ்சிகைகளிலும் பணியாற்றிய அனுபவமுடை யவர்.

இலங்கையில் ஊடக வளர்ச்சி:

19ம் நூற்றாண்டில் இலங்கைச் சமூகத்தில் ஊடக கலாசாரம், வாசிப்புப் பண்பாடு எல்லாம் எப்படி இருந்தது என்பதை வைத்தே 'முனியாண்டி'யின் வகிபாகத்தையும் கவனித்தல் அவசியம். ஆங் கில வெளியீடுகளைப் பொறுத்தளவில் பெரும்பாலும் மதம், ஆட்சி நிர்வாகம் என்பவை தொடர்பாகவும், மற்றும்படி இலக்க ணம், சோதிடம், மருத்துவம், விவசாயம் போன்றன தொடர்பான வெளியீடுகளே பெரும்பாலும் இருந்தன. பத்திரிகைகளின் வருகை இலங்கைச் சமூகத்தில் நிச்சயம் பெரும் மாற்றங்களைக் கொண்ட வந்தது. வாசிப்பு என்பது ஒரு வர்க்கத்தோடும், சாதியோடும், அந் தஸ்தோடும், கல்வி படைத்தவர்களோடும் மட்டுப்பட்டிருந்த நிலைமை மாறி அது பாமரர்களையும் படிப்படியாக அடைந்து கொண்டிருந்த காலம். எழுத்துக்களால் மட்டுமே குவிக்கப்பட்ட ஊடகங்கள் மெதுவாக காட்சிப்படுத்தலுக்குள் நுழையத் தொடங் கியது.

புகைப்படக் கருவிகள் வந்தடைவதற்கு முன்னர், அப்புகைப்படங் களை பதிப்புத் துறையில் பயன்படுத்துவதற்கு முன்னர் ஓவியங் களே காட்சிப்படுத்தப் பயன்படுத்தப்பட்ட ஊடகமாக இருந்தன. அதிலும் குறிப்பாக கொட்டோவியங்களே அன்றைய ஆரம்ப தொழிநுட்ப வசதிகளுக்கு சாத்தியமாக இருந்தன. எனவே ஓவியங் களுடனான பதிப்புகளுக்கு பெரும் வரவேற்பிருந்தன. வெகுஜன காட்சிப்படுத்தல் ஊடகமாக அதுதான் விளங்கியது. 1737ல் இலங் கையில் டச்சு ஆட்சியின் போது அச்சு இயந்திரம் அறிமுகப்படுத் தப்பட்டு, சிறு நூல் பதிப்புகளும் பிரசுரங்களும், அரச ஆவணங் களும் பதிப்பிக்கப்பட்டலும் பத்திரிகைகள் எதுவும் தொடங்கப்பட வில்லை.

ஆனால் ஆங்கிலேய ஆட்சியில் பத்திரிகைகளுக்கு பெரும் மவுசு வந்தது. பத்திரிகைத்துறையின் வளர்ச்சியும் அந்த இடத்துக்கு வந் தடைந்திருந்தது. கோல்புறுக் - கமரூன் அரசியல் திட்டக் காலத் தில் இலங்கையின் பத்திரிகைத்துறையின் நுழைவுக்கான அவசி யத்தையும், வாய்ப்பையும் உருவாக்கியது. கோல்புறுக் - கமரூன் அரசியல் திட்டத்தினால் உருவான சிவில் நிர்வாகம், நீதித்துறை, நிதித்துறை சார் ஏற்பாடுகள் பதிவுகளின் ஆவணப்படுத்தலுக்கும், தொடர்பாடலுக்கும் அச்சுப் பதிப்புத்துறையின் பரப்பை விசாலப் படுத்தியது. அதுபோல அந்த ஆட்சிக்கு தகவல்களை பரப்புவ தற்கும், பெறுவதற்கும் பத்திரிகைகளின் தேவையும் உணரப்பட் டது. கோல்புறூக் விசாரணைக் கமிஷன் வந்திருந்தபோது இலங் கையில் அரசாங்க அச்சகத்துறை சிறிய அளவில் தொடங்கி இயக்கிக்கொண்டுதான் இருந்தது.

இன்னும் சொல்லப்போனால் ஆங்கிலேயர் இலங்கையை முழுவ தும் கைப்பற்றுவதற்கு முன்னரே அதாவது 1802லேயே அரசாங்க வர்த்தமானி பத்திரிகை (Government Gazette) ஆரம்பிக்கப்பட்டு விட்டது. 1831ல் Colombo Journal தனியார் இதழ் ஆளுநரின் ஆத ரவோடு வெளியாகத் தொடங்கிவிட்டது.

மேலும் The Observer and Commercial, Advertiser ஆகியவை 1832லும், The Ceylon Chronicle (1837), The Ceylon Herald (1837), The Ceylon Times (1846), The Examiner (1846) என்பவை மட்டு மன்றி, முதலாவது சிங்களப் பத்திரிகையான லங்காலோக (1860) அதன் பின்னர் லக்மினிபான(1862). என்பவை வெளிவந்ததோடு யாழ்ப்பானியாத்தில் இருந்து இலங்கையின் முதலாவது தமிழ் பத்திரிகையான உதய தாரகையும் 1841ல் வெளிவந்தது. பாலியர் நேசன் 1859லும் வெளியானது.

கலாநிதி விஸ்வவர்ணபால குறிப்பிடும்போது இலங்கையின் கட்சி அரசியல் முறையின் வளர்ச்சிக்கும், சுதேசிகளின் அரசியல் ஆர் வத்துக்கும் இப்பத்திரிகைகளின் வகிபாகம் பெரிதும் இருந்தது என்கிறார். இப்படியே இதன் நீட்சியாக The Observer, The Ceylon Times ஆகிய இரு போட்டிப் பத்திரிகைகள் சுமார் ஐம்பது ஆண் டுகள் இலங்கையின் பத்திரிகைத்துறையிலும், அரசியல் நடத்தை யிலும் பெரும் செல்வாக்கு செலுத்தின. இவற்றில் The Observer அரசையும், அரசின் பிழையான ஆட்சியையும் கடுமையாக விமர் சிக்கின்ற பத்திரிகையாக அன்று இருந்தபோதும் பிற்காலத்தில் தனது போக்கை மாற்றிக்கொண்டதை காண முடியும். அது அரச எதிப்பு பத்திரிகையாகவே பொதுவில் அடையாளப்படுத்தப்பட் டது. இதே காலத்தில் The Examiner பத்திரிகையும் ஒரு அரச எதிர்ப்பு பத்திரிகையாகத்தான் அடையாளம் காணப்பட்டது. அதே வேளை The Ceylon Times பத்திரிகை அரசாங்கத்துக்கும், ஆளு நருக்கும் ஆதரவான பத்திரிகையாகவே இயங்கி வந்தது. 19ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இருந்து காட்சி ஊடகமாக கோட் டோவியங்கள் கார்டூன் வடிவில் அறிமுகமானதுபோல அதே நூற்றாண்டின் இறுதியில் புகைப்படங்களும் அறிமுகமாகின.

ஆங்கிலேயர்களின் பிரதான வருமானமாக பெருந்தோட்டத்துறை இருந்தபோதும், 1869 கோப்பி பயிர்செய்கையின் அழிவின் காரண மாக ஆங்கிலேய அரசு பெரும் வருமான வீழ்ச்சியை சந்தித்தது. இதை சமாளிக்க அரசு வரிகளை உயர்த்தியது. அது சமூக அரசியல் காரணிகளிலும் மாற்றங்களை ஏற்படுத்தியது. இதனால் விளைந்த சமூக நெருக்கடிகளை பத்திரிகைகள் பதிவுசெய்தன. விமர்சித்தன. இதே காலத்தில் வெளிவந்த Ceylon Independent, Ceylon Patriot போன்ற பத்திரிகைகளும் அரசை விமர்சிப்பதற்கு களமிறங்கின. இந்த சூழலில் சிங்களப் பத்திரிகைகளின் தோற் றமும் சாமான்ய வெகுஜன தகவல் தொடர்பாடலைத் திறந்தன. காலனித்துவத்துக்கு எதிரான கூட்டு மனநிலை உருவெடுத்தது. காலனித்துவத்துக்கு எதிராக மட்டுமன்றி, கிறிஸ்தவத்துக்கு எதி ராகவும் இந்த மனநிலை ஒன்றுசேர்ந்தது. பல சிங்கள சஞ்சி கைகளும், பத்திரிகைகளும் தோன்றி பரவின. அது ஒரு தேசிய அலையையும் சுதேசிய வாதத்தையும், தேசியவாதத்தையும், ஈற் றில் சிங்கள பௌத்த வாதத்துக்கும் இட்டுச் சென்ற வரலாறை அறிவீர்கள்.

இங்கிலாந்தில் தான் இந்த பஞ்ச் வகை இதழ்கள் முதன் முதலில் தோற்றம்பெற்றன. இங்கிலாந்தில் 1841ல் தொடக்கப்பட்ட 'Punch, or The London Charivari' என்கிற இதழ் தான் கேலிச்சித்திர இதழ்களுக்கெல்லாம் முன்னோடி. 151 வருடங்களாக லண்டனில் வெளிவந்த இந்த இதழ் 1992ல் மூடப்பட்டது. பின் மீண்டும் 1996ல் தொடங்கப்பட்டு 2002ல் மீண்டும் மூடப்பட்டுவிட்டது. இந்த பஞ்ச் இதழின் பாதிப்பில் ஐரோப்பிய நாடுகளில் மட்டுமல்லாது, இங்கி லாந்தின் காலனித்துவ செல்வாக்குக்குட்பட்ட பல நாடுகளில் இதனையொத்த இதழ்கள் தொடங்கப்பட்டன. சீனாவில் 1867ல் இருந்து வெளிவரத் தொடங்கியது. இந்தியாவில் லக்னோவில் 1877ல் அதாவது இலங்கையில் வெளிவரத் தொடங்கி எட்டு ஆண்டுகளின் பின்னர் உருது மொழியில் 'அவாத் பஞ்ச்' (Awadh Punch) என்கிற பெயரில் வெளிவரத் தொடங்கியது. அளவிலும், தோற்றத்திலும், தலைப்பிலும் கூட இவற்றுக்கிடைய சம ஒற்றுமை காணப்படுவதை இன்றும் அவற்றை நோக்கும் போது காண முடி கிறது. அவுஸ்திரேலியாவில் 'Melbourne Punch', இந்தியாவில் 'Awadh Punch' என்றெல்லாம் வெளிவந்த போது இலங்கையில் 'முனியாண்டி' என்கிற பெயரில் பஞ்ச் இதழில் கார்டூன் என்று அழைக்கப்படும் நகைச்சுவை கோட்டோவியங்கள் முதன்முதலில் 1943ல் இருந்துதான் பயன்படுத்தப்பட்டன. அரசியல் கேலிச்சித்தி ரங்கள் அப்போது பஞ்ச் என்று தான் அழைத்தார்கள்.

'முனியாண்டி'யின் வருகை:

இந்த சூழலில் தான் 'முனியாண்டி'யின் வருகையும் நிகழ்ந்தது. இதே காலத்தில் பிரபலமாக இருந்த The Observer, The Ceylon Times போன்றனவற்றில் கோட்டோவியங்கள் இருந்தபோதும் அவை கேலிச்சித்திரங்களாக பரிமாற்றமடையவில்லை. 'முனி யாண்டி'யில் வெகுஜன செய்திகள், அரசியல் வர்ணனை, அதிகா ரிகளின் மோசடிகள், கிசுகிசு விடயங்கள் ஊழல்கள் என்பவற்றை எழுத்துக்களாலும், கேலிச்சித்திரங்களாலும் வெளிபடுத்தியது. அது ஒரு பெரும் வாசகர் பரப்பை பெருக்கியது. The Ceylon Times அதை ஆதரித்து பலப்படுத்தியது. 'முனியாண்டி'யின் ஓராண்டு நிறைவின் போது அது பத்தாயிரம் சந்தாதாரர்களை எட்டியிருந்தது. 3.09.1870 அன்று, 'முனியாண்டி' 9999 வாசகர்களை எட்டிவிட்டதாக அறிவித்தது. சுமார் 150 ஆண்டுகளுக்கு முன்னர் இப்படிப்பட்ட ஒரு நிலையை எண்ணிப்பாருங்கள்.

THE MILITARY.
[From a Sketch by John K. L. Vandort.]

THE PRISONER.
[From a Sketch by John K. L. Vandort.]

THE POLICE.
[From a Sketch by John K. L. Vandort.]

16 யூலை 1869ல் வெளிவந்த The Ceylon Times பத்திரிகையில் 'முனியாண்டி' இதழின் முதல் பதிப்பு தீர்ந்துவிட்டத்தையும் அதைக் கோரியவர்களுக்கு மீண்டும் கிடைக்கச் செய்வதாகவும் விளம்பரம் செய்யப்பட்டிருந்தது.

The Ceylon Times பத்திரிகைக்கும் 'முனியாண்டி'க்கும் உள்ள உறவு என்னவென்பது இரகசியமல்ல. The Ceylon Times ஐ வெளியிட்ட அதே ஜோன் கெப்பர் தான் 'முனியாண்டி'யைத் தொடக்கி நடத்திவந்தார். எனவே இதே காலத்தில் அவர் அரசியல் செயற்பாடுகளிலும் ஈடுபட்டிருந்தார். எனவே அரச எதிர்ப்பு விடயங்களுக்கு 'முனியாண்டி'யை நன்றாகப் பயன்படுத்திக் கொண்டார். அரச ஆதரவுப் பத்திரிகையான The Observer பத்திரிகை இந்த இரண்டுக்கும் உள்ள உறவைச் சாடி விமர்சித்தது. 'முனியாண்டி' லாபம் சம்பாதிக்கும் பத்திரிகை இல்லை என்றும், அது கட்சியின் நிகழ்ச்சிநிரலுக்ககாக பேனை, பென்சில் கையாளும் திறமைபடைத்த சில கனவான்களால் சிறிய சமூகப் பிரச்சினைகளை ஊதிப்பெருப்பிக்கும் பத்திரிகை என்று The Observer சாடியது. இதற்கு 22 யூன் 1869ல் வெளிவந்த The Ceylon Times பத்திரிகையில் கெப்பர் பதிலடி கொடுக்கிறார். இப்படிப்பட்ட கிண்டல் காட்சி வடிவத்திலான எதிர்ப்பை ஆங்கிலேய அரசு முதற் தடவை சந்திக்கிறது.

வான் டோர்ட் (J.L.K. Van Dort - 1831-98):

'முனியாண்டி' பத்திரிகையின் பிரதான ஓவியராக இயங்கியவர் வான் டோர்ட் (J.L.K. Van Dort - 1831-98) அவர் இலங்கைவாழ் பரங்கி இனத்தவர். மிகப் பெரிய ஓவியர். அவரைப் பற்றிய தனிக் கற்கை வேண்டும் எனலாம். ஓவியங்களின் மூலம் இலங்கையைப் பதிவு செய்தவர்களில் முக்கியமானவர். இலங்கை நில அளவை காரியாலயத்தில் பணியாற்றிக்கொண்டிருந்தவர் அவர். அதே வேளை அவர் பல்வேறு பத்திரிகைகள், சஞ்சிகைகள், நூல்கள் என்பவற்றுக்கு கோட்டோவியங்களை வரைந்து கொடுப்பதையும் ஒரு பணியாகக் கொண்டிருந்தார். உதாரணத்துக்கு A.M. Ferguson இன் Souvenirs of Ceylon (1868) and Capper's Old Ceylon (1877) போன்றவற்றைக் குறிப்பிடலாம். அவர் லண்டனில் இருந்து வெளியாகும் ஊடகங்களுக்கும் ஓவியங்களை வரைந்து வந்தார். ஆங்கிலேய அரசின் மீது இருந்த விமர்சன உணர்வு அவரின் ஓவியங்களில் வெளிப்பட்டன. ஆங்கிலேய அதிகாரிகளை மட்டுமல்லாது உள்ளூர் சுதேசிய மேட்டுக்குடியினரையும் அவரின் ஓவியப் படைப்புகளின் மூலம் விமர்சித்தார். 1868இல் Alistair MacKenzie Ferguson ntspapl; l Souvenirs of Ceylon என்கிற அவரின் நூலில் நீதிபதிகள், பதிவாளர்கள், ஜூரிகள், மொழிபெயர்ப்பாளர்கள், சாட்சிகள் போன்றோரை வான் டோர்ட் வரைந்திருப்பதைப் பார்ப்பவர்களுக்கு அவரின் அறச் சீற்றத்தைப் புரிந்துகொள்ள முடியும். வான் டோர்ட் வரைந்த பல ஓவியங்களில் அவரின் கையெழுத்தைக் காணமுடியாது. எனவே இன்றும் பலரும் அவரால் வரையப்பட்ட ஓவியங்களாய் அடையாளம் காண முடியாதுள்ளனர். அவர் ஒரு அரசாங்க ஊழியராக இருக்கும் நிலையில் அவை தனக்கு சட்டச் சிக்கலை ஏற்படுத்தும் என்பதற்காகவே அவர் அவ்வாறு கையெழுத்துக்களைப் பயன்படுத்தவில்லை என்று பீரிஸ் குறிப்பிடுகிறார்.

'முனியாண்டி'வான் டோர்ட்டுக்கு சிறந்த களமாக அமைந்தது. ஆனாலும் 'முனியாண்டி' ஆங்கிலம் கற்ற படித்த ஆங்கிலேயர்களிடமும், உள்ளூர் மேட்டுக்குடி பிரமுகர்களிடமும் தான் சென்றடைந்தது. காலனித்துவ அரசை சாடும் ஒன்றாக இருந்தாலும் அது சுதந்திரம் சுயராஜ்ஜியம் என்பவற்றை உந்தும் ஒன்றாக இருக்கவில்லை. காலனித்துவ ஆட்சிக்குள் சீர்த்திருத்த வசதி வாய்ப்புகளை பேணும் ஒன்றாகத் தான் அது இருந்தது. 'முனியாண்டி'யின் விற்பனையும், விளம்பரமும் தான் அதைப் பேணி வந்தது. அதன் விளம்பரங்கள் The Ceylon Timesன் நான்காவது வாரத்திலும் வெளியாகிக்கொண்டிருந்தது.

'முனியாண்டி'யில் வெளியான வான் டோர்ட்டின் கேலிச்சித்திரங்களில் பெரும்பாலும் ஒரு குரங்கை குறியீடாக வைத்து கிண்டல் செய்வதைக் காணலாம். சில இடங்களில் அதை ஒரு அனுமாராகவும் சித்திரிக்கிறார். இதையே பேலிஸ் அப்புஹாமியின் கவட்டகத்திகயா சஞ்சிகையிலும் காணமுடியும். அவரும் தனது முதலாவது சஞ்சிகையிலிருந்தே குரங்கைக் குறியீடாகக் கொண்ட கேலிச் சித்திரங்களை வெளியிட்டிருக்கிறார்.

'... தூர மேற்குத் திசையில் இருந்து வந்த நீங்கள், இங்கே எந்த நம்பிக்கையை ஏற்படுத்தியிருக்கிறீர்கள்? இந்த 'காட்டுமிராண்டிகளுக்கு' (உங்கள் நாகரிகத்தை விட பழமையானது என்கிறீர்களா?) கற்பிக்க, ஐரோப்பாவில் உங்கள் மதத்தையும் ஒழுக்கத்தையும் கற்றுக்கொடுத்து சுத்திகரிப்பு செய்ய வந்தீர்களாக்கும்? பராக்கிரமபாகு கட்டிய பாரிய சமுத்திரத்தை விடவா உங்கள் கலையும், விஞ்ஞானமும் இலக்கியங்களும் பெரிதாகப் போகிறது. இல்லை! ஆனால் வெறுமனே உங்கள் சுயநல நோக்கங்களை இலக்காகக் கொண்டு, பணம் சம்பாதிக்கும் ஒரே இலட்சியத்துடன் இங்கு வந்துள்ளீர்கள். உங்கள் மதம் பின்தொடர்வதற்கானது உங்கள் கடவுள் 'சர்வ வல்லமையுள்ள ரூபாய்', மற்றவர்கள் உங்களை பின்பற்றுவதற்காக உங்கள் சட்டம், உங்கள் லாபம் சதம் சதங்களாக. உங்கள் கொள்கை சுயநலம், மேலும் உங்கள் நம்பிக்கை பொதுவாகவே தாழ்மையானது...'

இப்படி... குரங்குப் படத்துடன் உள்ள கேலிச்சித்திரத்துடன் ஒரு குறிப்பு வெளியாகியிருக்கிறது.

அந்த ஓவியத்தில் குரங்குக் கூட்டங்களுடன் உள்ள பெரிய குரங்கை 'முனியாண்டி' அரசனாக சித்திரிக்கிறார் வான் டோர்ட்.

ஒரு ஜெனரல் தன் முன் மண்டியிட்டுக்கொண்டிருக்கும் ஒரு பெண்ணின் மார்புகளை தன் ஒரு கையால் அழுத்திக்கொண்டு மறு கையால் தன் கண்களை மூடிக்கொண்டிருப்பதாகவும் இன்னொரு பெண் அவருக்குப் பின்னால் யாழ்ப்பாணத்தில் இருந்து கொண்டு வந்த நகைகளை கொடுப்பதற்காக காத்திருப்பது போலவும் 19 யூன் 1869 வெளியான முனியாண்டியில் ஓர் ஓவியம் காணப்படுகிறது. அந்த ஓவியத்தில் சில பெண்கள் அழுதபடி கண்களை துடைத்தபடி செல்வதையும் காட்சிப்படுத்துகிறது. ஒரு புறம் ஊழல் இன்னொரு புறம் பாலியல் துஷ்பிரயோகம் என்பவற்றை சித்திரிக்கும் ஒரு காட்சி அன்றைய ஊடகமொன்றில் அழுத்தமாக பதிவு செய்யப்பட்டிருப்பதை இங்கே காணலாம்.

இந்த கேலிச்சித்திரம் அப்போது பரபரப்பாக விவாதிக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக போட்டிப் பத்திரிகைகளான The Ceylon Times, The Observer ஆகியனவற்றுக்கு இடையில் காரசாரமான எதிர்வினைகளும் பரஸ்பரம் நிகழ்ந்திருக்கிறது.

இன்னொரு ஓவியத்தில் கண்டி கம்பளைக்கூடாக நாவலப்பிட்டி வரை இரயில்பாதையை விரிவாக்குவதற்காக மலையொன்றில் இருந்து நில அளவையில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் ஒருவரையும் அவரின் எஜமான் கோர்ட்டும் தொப்பியுடனும் பெரிய பூட்ஸ் சப் பாத்துக்களை அணிந்தபடி, கைகளை கோர்ட்டின் இரு பைகளுக்குள் இட்டபடி, கால்கள் இரண்டையும் அகற்றி வைத்துக் கொண்டு கையிடுக்கில் ஒரு கைத்தடியையும் வைத்துக்கொண்டு கவனித்துக் கொண்டிருக்கிறார். அப்பால் கூலித் தொழிலாளர்கள் பணிகளில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள். நில அளவையாளர் பார்த்துக்கொண்டிருக்கும் தூரக்கண்ணாடிக்கு முன்னாள் கீழியிருந்து ஒரு கூழித்தொழிலாளர் மண்வெட்டியைத் தூக்கி அதனை மறைத்துக்கொண்டிருப்பதாகவும் ஒரு காட்சி.

எவ்வாறிருந்தாலும் 1871ம் ஆண்டு மே மாதம் ஆங்கிலேய அரசால் 'முனியாண்டி' தடை செய்யப்பட்டது. 'முனியாண்டி' ஓர் அரச எதிர்ப்பு சஞ்சிகையாகவே அது முடிவுசெய்தது. ஆங்கிலேய அரசு அப்போது பேச்சு சுதந்திரத்தின் பேரால் சகித்துவந்தாலும் ஒரு கட்டத்துக்கு பின்னர் பொறுமை தாளாமல் முனியாண்டியை நிறுத்தி தனது 'கருத்துச் சுதந்திர ஜனநாயகம்' எப்பேற்பட்டது என்பதை வெளிக்காட்டியது. 'முனியாண்டி' முடிவுக்கு வந்தாலும் அது ஏற்படுத்திய தாக்கம் இருந்துகொண்டு தான் இருந்தது. அதன் பாதிப்பில் 'முனியாண்டி' நின்றுபோன அடுத்த ஆண்டே 'கவட்ட கத்திகயா' என்கிற கேலிச்சித்திர சஞ்சிகை வெளிவந்தது. அதைத் தொடர்ந்து அதுபோன்ற பல சஞ்சிகைகள் தொடர்ந்து வெளிவந்தன.

சிரித்திரன்:

தமிழில் சிரித்திரன் இதழ் 1963ம் ஆண்டில் சி. சிவஞானசுந்தரம் (சிரித்திரன் சுந்தர்) அவர்களால் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப் பட்ட நகைச்சுவை இதழ். அவர் மறையும் வரை 32 ஆண்டு காலம் அவரே தொடர்ந்து ஆசிரியராக இருந்து நடத்திவந்தார். அவரின் மறைவோடு அதுவும் நின்று போனது.

சிரித்திரனில் சிந்தனை மிகுந்த படைப்புகளைப் போல, அதில் வெளிவந்த தனிச்சிறப்புமிக்க கேலிச் சித்திரங்களும், கருத்தோவியங்களும் சிந்தனையைத் தூண்டக்கூடியன. சிரித்திரனின் வரலாற்றுத் தனிச்சிறப்பின் காரணமாக அப்படியொரு இதழின் தேவையை அதன் பின்னர் எவரும் பூர்த்தி செய்யாத நிலையில் Centre for Creativity and Innovation நிறுவனத்தால் 2021 சனவரி தொடக்கம் யாழ்ப்பாணத்தில் இருந்து உலகெங்கும் கிடைக்க கூடிய வகையில் அச்சுப்பிரதியாக வெளியிடப்பட்டு வருகின்றது சிரித்திரன்.

'கவட்ட கத்திகயா':

சிரித்திரன் 32 ஆண்டுகள் ஒரே ஆசிரியரைக் கொண்டு வெளிவந்ததைப் போலவே சிங்களத்திலும் 38 ஆண்டுகள் தனி ஆசிரியரால் வெளிக்கொணரப்பட்ட ஒரு கேலிச்சித்திர இதழ் உண்டு. சிங்களத்தில் இத்தகைய கிண்டல்களை 'விகட்ட' என்பார்கள். அப்படி 'கவட்ட கத்திகயா' ('நையாண்டிப் பேச்சாளன்') 1872.01.01 அன்றிலிருந்து 40 ஆண்டுகள் வெளிவந்தது. அதாவது சிங்களத்தில் முதலாவது பத்திரிகை வெளிவருவதற்கு பத்தே ஆண்டுகளுக்கு முன் வெளிவந்த பத்திரிகை அது. அப்போது அதன் விலை 6 சதங்கள்.

'கவட்ட கத்திகயா' இதழில் அதன் ஆசிரியர் பேலியகொட G.D. பேலிஸ் அப்புஹாமியின் (27.02.1847 - 04.09.1910) நையாண்டிக் கவிதைகள், துணுக்குகள், கட்டுரை என்பவற்றின் சுவாரசியத்துக் காகவே அதிக வாசகர்களால் கவரப்பட்டு பல வருடங்களுக்கு வெளியாகிக் கொண்டிருந்தது. அப்பத்திரிகையைத் தொடங்கிய போது அவரின் வயது 25 தான்.

அன்றைய அரசியல்வாதிகள், முக்கிய அறியப்பட்ட பிரமுகர்கள் போன்றோரின் தீய செயல்களை பரிகசிக்கும் வகையிலும், தாக்

கும் வகையிலும் அந்த இதழின் உள்ளடக்கம் இருந்தது. 38 ஆண்டுகள் இலங்கையில் ஒரு பத்திரிகை ஆசிரியராக நீடித்த ஒரே ஒருவராக G.D. பேலிஸ் அப்புஹாமி இருக்கக்கூடும். இலங்கையின் ஊடகத்துறையில் அதுவொரு சாதனை தான்.

தெலங்கபாத என்கிற கிராமத்தில் பிறந்த பேலிஸ் அப்புஹாமி அங்குள்ள விகாரையில் கல்விகற்று ஆளானவர். பேலிஸ் அப்புஹாமியின் முகம் தாடி, மீசையால் நிறைந்திருக்கும். அவரின் வாழ்நாள் முழுவதும் அதே வளர்ந்த தாடி மீசையுடன் தான் காணப்பட்டார். அவரின் வாழ்க்கையில் எந்நேரமும் நகைச்சுவை உணர்வோடும், யாரையாவது நையாண்டி செய்வதுமாக இருப்பதை வழக்கமாகக் கொண்டிருந்ததால் அவரை 'விகட ரஜா' (நையாண்டி மன்னன்) என்று அழைத்தார்கள். ஒருவரை கிண்டல் செய்ய வாய்ப்பு கிடைத்தால் அவர் எப்பேர்ப்பட்டவர் என்றெல்லாம் பார்க்காமல் தன் வேலையைப் பார்த்துவிடுவார். 'கவட்ட கத்திகயா' பத்திரிகையின் முகப்பில் 'நையாண்டி பண்ண ஏற்பட்டால் தராதரம் பார்ப்பதில்லை' என்று நிரந்தர சுலோகமொன்றை அவர் எப்போதும் பயன்படுத்தி வந்தார். அதையே வாழ்நாளிலும் கடைபிடித்தார்.

தான் வணங்கும் தனது மதிப்புக்கு பாத்திரமான அன்றைய பிர பல பௌத்த தேரரான ஹிக்கடுவே சுமங்கள தேரரை கிண்டல் செய்ய வாய்ப்பு கிடைத்தபோது அதற்கும் அவர் தயங்கவில்லை. அவரின் துணிச்சலுக்கு எடுத்துக்காட்டாக ஒரு சம்பவத்தை சிங்கள நூல்கள் குறிப்பிடுவது வழக்கம். ஒரு முறை அரச குடும்பத்தின் குறிப்பொன்றைக் கொண்ட கைக்குட்டைகள் சந்தையில் விற்பனை செய்யப்பட்டிருந்தன. அதனைப் பார்த்த அப்புஹாமி தனது கட்டுரையொன்றில் 'ஆங்கிலேய அரச குடும்பம் கோவண மாகிவிட்டது.' என்று எழுதியதற்காக அப்புஹாமிக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டது. நீதிமன்றத்துக்கு அவர் தனது வழக்கறிஞரையும் நிராகரித்துவிட்டு தானே பதிலளிக்க ஆஜரானார் அப்புஹாமி. வழக்கை காண்பதற்காக பலர் கூடியிருந்தார்கள். தனக்கு பதிலளிக்கும் சந்தர்ப்பம் வந்தபோது அவர் அங்குள்ள எவரையும் பொருட்படுத்தாது, தனது ஆடைகளை ஒவ்வொன்றாகக் கழற்றி அங்குள்ளவர்களை சற்று வியப்புக்குள்ளாக்கிக் கொண்டிருந்தார். சுதந்திரமாக தனது கருத்தை வெளிப்படுத்த வேண்டுமென்றால் தனது கோவணத்தையும் கழற்றவேண்டும் என்று கூறிக்கொண்டே அவர் தனது கோவணத்தையும் கழற்ற முயற்சித்த வேளை நீதிபதி சத்தமிட்டு தடுத்தாராம். 'நான் சுதந்திரமாக எனது கருத்தை வெளிப்படுத்தவே முயன்றேன் அதற்கு இடமளிக்கமாட்டீர்கள் என்று தெரிகிறது, அப்படிஎன்றால் இதோ பாருங்கள் கோவணத்துக்குள் அரச குடும்பம் என்று கூறி கோவணத்தை தூக்கிக் காட்டினாராம். 'இந்தப் பைத்தியக்காரனை நீதிமன்றத்தை விட்டு விரட்டுங்கள்' என்று கூறி நீதிபதி அங்கிருந்து அவரை விரட்டச் செய்தாராம். அவர் வழக்கில் இருந்தும் விடுதலையானார். இது அப்போது மிகவும் பிரபலமாக பேசப்பட்ட கதை. அடுத்த இதழில் 'அரச கோவணம் விடுதலை பெற்றது' என்கிற தலைப்பில் 'கவட்ட கத்திகயா' பத்திரிகையில் ஒரு கட்டுரையையும் வெளியிட்டார்.

சிங்களப் பத்திரிகைத்துறை வரலாற்றில் நகைச்சுவை இதழ்கள் என எத்தனையோ வெளிவந்து நின்று போயிருந்தாலும் 'கவட்ட கத்திகயா' தனியிடத்தில் இன்றும் பார்க்கப்படுகிறது அதற்கான காரணம் அது வெளிவந்த காலம், வெளியான காலங்களின் அளவு, ஒரே ஆசிரியர், அதன் காட்டமான உள்ளடக்கம் என்பவை தான்.

முதலாவது நகைச்சுவைப் பத்திரிகை மாத்திரமல்ல, கேலிசித்திரம் வெளியான முதலாவது சிங்களப் பத்திரிகையும் இது தான். தேசிய விடுதலைக்கு பங்களித்தவர்கள் வரிசையில் வைத்து போற்றப்படுகிறார் அப்புஹாமி. அந்தளவு தனது பத்திரிகையை தேசிய உணர்வுக்காகவும், ஆங்கிலேய எதிர்ப்புக்காகவும் பயன்படுத்தி வந்திருக்கிறார். அப்புஹாமி 1910.09.04 அன்று அவர் மரணமடையும் வரை வெளியானது. 1903ம் ஆண்டு பம்பாய் நகரில் நிகழ்ந்த பத்திரிகை ஆசிரியர்களின் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றியிருக்கிறார். அவர் எழுதிய சில சிங்கள இலக்கிய நூல்களும் மிகவும் கவனத்துக்குரிய நூல்களாக திகழ்கின்றன.

'கவட்ட கத்திகயா'வுக்கு முன்னோடியாகவும், முன்னுதாரணமாகவும் இருந்தது நிச்சயம் 'முனியாண்டி' இதழ் தான். 'முனியாண்டி' நிகழ்த்தி வந்த காலனித்துவ அரச எதிர்ப்பை 'கவட்ட கத்திகயா' தான் அதன்பின் முனியாண்டியின் பாணியில் முன்னெடுத்தது என்றே சொல்லவேண்டும். ஏனென்றால் அதைத் தவிர வேறொரு முன்னுதாரண சஞ்சிகையும் அவர் காலத்தில் இருந்திருக்கவில்லை. அப்புஹாமி மறைவுக்குப் பின்னரும் மூன்று ஆண்டுகள் அது டேவிட், ஜோர்ஜ் ஆகிய அவரின் இரு புதல்வர்களால் வெளிக்கொணரப்பட்டபோதும் அது வெற்றியளிக்கவில்லை. அதுவும் 1913ல் நின்றுபோனது. அவர் வாழ்ந்த காலத்திலேயே 'கவட்ட தூத்தயா' என்கிற பெயரில் சீ.என்.த. சில்வா என்பவரால்

10.07.1889ல் ஒரு நகைச்சுவைப் பத்திரிகை வெளிக்கொணரப்பட்டபோதும் அதுவும் அத்தனை காலம் தாக்கு பிடிக்கவில்லை.

ஆங்கிலேயர் காலத்தில் இப்படியான இருபதுக்கும் மேற்பட்ட நையாண்டி இதழ்கள் சிங்களத்தில் மாத்திரம் வெளிவந்திருக்கின்றன. அவற்றில் சில உதாரணத்திற்கு:

- கவட்ட கத்திகயா - பேலிஸ் அப்புஹாமி - 1872.01.01
- கவட்ட மித்றயா - பி. பொன்சேகா - 1889.04.13
- கவட்ட தூதயா - சி.என்.டி சில்வா - 1889.07.10
- லங்கா கவட்ட மித்றயா - - 1890.08.10
- கவட்ட நரேந்திறயா - டி.டி. கோட்டை - 1891.08.15
- கவட்ட ராலஹாமி - எம்.டபிள்யூ.சி. தர்மவர்தன - 1893.09.15
- கவட்டயா - பீட்டர் சில்வா - 1894.09.15
- தெனுமெதி கவட்டயா - அ.ஜெ. பெரேரா - 1895.07.12
- மொரட்டு நரேந்திறயா - டபிள்யூ.எச். பெர்னாண்டோ - 1899
- கவட்ட றால - 1910.01
- சிங்கள கவட்டயா - ஆ.எம். ப்ரீரேரா - 1912.12.14
- கவட்ட அங்கன - 1914
- கவட்ட திலக்க - டபிள்யூ.எம். பெரேரா.
- லங்கா கவட்டயா - - 1916
- கவட்ட ராஜ - டி.ஈ.எஸ். ஜெயசூரியா - 1918

அவரளவுக்கு விடாப்பிடியாகவும் சுறுசுறுப்பாகவும் அப்பேர்பட்ட பத்திரிகையை வெளிக்கொணர எவரும் இருக்காததால் மற்றவை எல்லாம் தோல்வியில் முடிந்தன. அவரே இப்படி எழுதியிருக்கிறார்...

சோம்பேறிதனத்தால் உறங்குவோரே
கொச்சிமிளகாய் சற்றெடுங்கள்
அரைத்து பின்னாடி வஸ்தி செய்யுங்கள்
சோம்பேறித்தனம் ஓடிவிடும்...

என்று சிங்களத்தில் கவித்துவத்துடன் எழுதியிருந்தார்.

'முனியாண்டி' மேலும் ஆழமாக பன்முகப்பட்ட கோணங்களில் ஆராயக் கூடிய ஒரு முக்கிய இதழ். அது பல கேலிச்சித்திர இதழ்களுக்கும் ஒரு முன்னோடி இதழ் மாத்திரமன்று, அது ஏற்ப

டுத்திய சமூக அரசியல் அதிர்வுகள் நமது ஆய்வுப்பரப்புக்குள் கொண்டுவரவேண்டிய ஒரு இதழ். இக்கட்டுரை வெறும் அறிமுகம் தான்.

ஜோன் கெப்பர்:

இலங்கையின் ஊடகத்துறையின் பிதாமகன் என்று சொல்லகூடிய ஜோன் பெர்குசனின் உறவினர் தான் ஜோன் கெப்பர் (John Capper - 1814-1898). இலங்கையின் வளர்ச்சியில் பங்களிப்பைச் செலுத்திய ஆங்கிலேய காலனித்துவவாதிகளில் ஒருவர் ஜோன் கெப்பர் எனலாம். குறிப்பாக ஆங்கில மொழி ஊடகத்துறையில் அதிலும் ஓர் ஆசிரியராக (Editorship) அவர் ஒரு முன்னோடி

JOHN CAPPER.

என்று இலங்கையில் அறியப்படுபவர். பத்திரிகைகளையும் சஞ்சிகைகளையும் மட்டுமன்றி, வரலாற்றுத் தகவல்களையும், குறிப்புகளையும் கொண்ட வெளியீடுகளை வெளியிட்டுக்கொண்டே இருந்தார்.

இலங்கை மட்டுமன்றி, இந்தியா, அவுஸ்திரேலியா பற்றியும் அதே வகை வெளியீடுகளை வெளியிட்டார். ஓர் அபுனைவாளனாக தனது பாத்திரத்தை ஆற்றிவந்த அவர் ஒரு கட்டத்தில் புனைவிலக்கியத்திலும் ஆர்வப்பட்டார். சார்ள்ஸ் டிக்கன்ஸ் போன்றோரது இலக்கியங்களின் பாதிப்பில் அவர் ஒரு முக்கிய பாத்திரங்களை மையமாக வைத்து இலங்கையில் ஒரு நாவலை எழுதிவந்தார். அது முடிவடையமுன்னரே அவர் மரணமானார்.

கோப்பி தொகை விற்பனை வியாபாரத்தில் அவர் இணைந்ததைத் தொடர்ந்து அவர் Acland & Boyd என்கிற கம்பனியின் சார்பாக 1937ம் ஆண்டு இலங்கை வந்து சேர்ந்தார். கூடவே கருவா, தேங்காய் எண்ணெய் தொழில் வளர்ச்சிக்காகவும் அனுப்பட்டிருந்தார். புதிய கோப்பித் தோட்டங்களை நிறுவுவதற்காக அதிகளவிலான பூர்வீக தாவரங்களை அகற்றுவதை மேற்பார்வையிட்டார். அவர் இலங்கை வருவதற்கு முன்னர் நீராவி, சுரங்கவேலை என்பவற்றுடன் தொடர்புடைய ஒரு சஞ்சிகையில் ஓர் ஊடகவியலாளனாக பணியாற்றிய அனுபவத்தைக் கொண்டவர்.

கெப்பர் The Mining and Steam Navigation Gazette இதழின் இணை ஆசிரியராக பணியாற்றிய அனுபவமுடையவர். இலங்கையில் அவர் The Ceylon Magazine பத்திரிகையைத் தொடங்கினார். அறிவார்ந்தவர்களின் படைப்புகளைக் கொண்ட ஒரு ஆய்விதழாக அது இயங்கி நல்ல வரவேற்பைப் பெற்றது. இதன் நீட்சியாகத் தான் அன்றைய இலங்கையின் புத்திஜீவிகளுடன் இணைந்து ராஜரீக ஆசிய கழகத்தின் இலங்கைக் கிளையை தொடங்கினார்கள். அதன் முதல் செயலாளராக கெப்பர் இயங்கினார். அது வெளியிட்ட 'The Journal of the Ceylon Branch of the Royal Asiatic Society' இலங்கையின் முதற்தர ஆய்விதழாக அன்று தொடக்கம் இன்று வரை இருந்து வருவதை அறிவீர்கள். 1846ல் அவர் Bessellஜ ஆசிரியராகக் கொண்டு உருவான Ceylon Examiner பத்திரிகையில் முக்கிய பங்காற்றினார். இந்த இடைக்காலத்தில் அவர் யாழ்ப்பாணத்துக்கான நீதவானாகவும் பணியாற்றினார்.

1847ல் இலங்கையில் கோப்பித் தொழில் பெரும் வீழ்ச்சியடைந்தது. கெப்பர் பணியாற்றிய கம்பனி இலங்கையில் தனது தொழிலைக் கைவிட்டது. கெப்பரும் லண்டனுக்கு நாடு திரும்பினார். லண்டனில் அவர் தொடர்ந்தும் எழுத்துப் பணிகளில் தீவிரமாக இயங்கினார். ஏறத்தாள பத்தாண்டுகளுக்குப்பின் கெப்பர் 1858ல் மீண்டும் இலங்கை வந்தடைந்தார். அவர் Ceylon Times பத்திரிகையை கொள்வனவு செய்து சில ஆண்டுகள் அதனை நடத்தி வந்தார். அது நட்டத்தில் இயங்கவே 1874ல் அவர் அப்பத்திரிகையை மீண்டும் விற்றுவிட்டார்.

கெப்பர் இலங்கையையும் அதன் அரசியலையும் அறிந்த பிரமுகரானார். அதன் பின்னர் அவர் அரசாங்க சபைக்கு உத்தியோகபற்றற்ற உறுப்பினராக தெரிவானார். ஆனால், அப்போது ஆங்கிலேய அரசின் சில கொள்கைகளை எதிர்த்து 15 நவம்பர் 1864 அன்று அவரும் மேலும் ஐந்து உத்தியோகபற்றற்ற உறுப்பினர்களும் (இரு ஆங்கிலேயர்களும், மூன்று இலங்கையர்களும்) ஒன்றாக இராஜினாமா செய்தார்கள். அது மட்டுமன்றி அவர்கள் சிலோன் லீக் (Ceylon League) என்கிற ஒரு அரசியல் இயக்கத்தைத் தொடங்கினார்கள். அது அப்போது புதிதாக நியமிக்கப்பட்டிருந்த ஆளுநர் சேர். ஹெர்குலஸ் ராபின்சனுக்கு (Sir Hercules Robinson) சிம்ம சொப்பனமாகத் திகழ்ந்தது.

இந்த காலப்பகுதியில் தான் அவர் 'முனியாண்டி' இதழை நடத்தினார். 'முனியாண்டி' இதழ் தனது அரசியல் பணிகளுக்கு நன்றாகப் பயன்படுத்திக்கொண்டார். லண்டனில் மிகப் பிரபலமாக இருந்த பஞ்ச் இதழ்களின் அனுபவங்கள் அவருக்கு இலங்கைப் பத்திரிகையில் பிரயோகித்து புது ஊடக வடிவத்தை இயக்கிக் கட்டினார்.

1883ல் அவர் கல்கத்தாவுக்குச் சென்று Handbook to the Ceylon Court, Calcutta International Exhibition ஆகிய நூல்களைத் தொகுத்துவிட்டு இலங்கை வந்ததும் தனது இரு மகன்களான Frank Augustus Capper, Herbert Henry Capper ஆகியோரிடம் Ceylon Times பத்திரிகையை ஒப்படைத்தார். அப்பத்திரிகை The Times of Ceylon என்கிற பெயர் மாற்றம்பெற்று தினசரி மாலை நேரப் பத்திரிகையாக வெளிவந்தது. விரைவிலேயே அது இலங்கையின் முன்னணிப் பத்திரிகையாக ஆனது. அந்த இரு மகன்களே கெப்பருக்குப் பின் வெற்றிகரமாக The Times of Ceylon பத்திரிகையை நடத்தினார்கள்.

கெப்பர் 1884ம் ஆண்டு இங்கிலாந்துக்கு திரும்பிவிட்டார். அங்கே மிடில்செக்ஸின் புல்ஹாம் என்கிற பிரதேசத்தில் 1898ல் தனது 83வது வயதில் இறந்தார்.

ஜோன் கெப்பரின் சில பிரபல நூல்கள்:

- Capper. John - Old Ceylon Sketches of Ceylon Life in olden times
- Capper. John, - The Duke of Edinburgh in Ceylon.
- Capper, John. - Pictures from the East. 1854
- Capper, John. - India and Ceylon: The Three Presidencies of India 1853
- Capper, John. - A Book of Elephant and Elk Sport 1871
- Capper, John. - A Full Account of the Buddhist Controversy, Held at Pantura, 1873

sarawanan.n@thaiveedu.com

மோட்கேஜ்

புதிய, முதல் தரம் வீடு வாங்குவோருக்கான மோட்கேஜ்.
1ஆம், 2ஆம், 3ஆம், Bridge, Private மோட்கேஜ்
சுய தொழில் புரிவோருக்கான மோட்கேஜ்
பழுதடைந்த கிரடிற் உள்ளவர்களுக்கான மோட்கேஜ்
குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கான மோட்கேஜ்

MORTGAGE

NESAN
416-908-5656

Residential / Commercial / Industrial / Investment Properties

1st, 2nd and 3rd Mortgages · Refinance · Secured Line of Credit
New House Commitment, Pre-approval · Home Equity Loan

1st Mortgage ('A' lender) Majaor, Under write Banks

Mortgage Amount	Weekly	Bi Weekly	Semi Month	Month
698,000	659.62	1319.25	1429.19	2858.37
546,000	515.98	1031.96	1117.96	2235.92

1st Mortgage ('B' lender) Under write Banks, Trust, Cridit Union

Mortgage Amount	Weekly	Bi Weekly	Semi Month	Month
698,000	765.04	1530.08	1657.59	3315.17
546,000	598.44	1196.88	1296.62	2593.24

Private Mortgage ('C' lender) Private lender

Mortgage Amount	Weekly	Bi Weekly	Semi Month	Month
698,000	1059.81	2119.62	2296.26	4592.52

2nd Mortgage ('D' lender) Private lender

Mortgage Amount	Weekly	Bi Weekly	Semi Month	Month
98,000	179.15	358.29	388.15	776.30

3rd Mortgage ('E' lender) Private lender

Mortgage Amount	Weekly	Bi Weekly	Semi Month	Month
49,000	113.72	227.43	246.39	492.77

Secure Line of Credit & Loan

Mortgage Amount	Secure Line of Credit	Home Equity Loan
225,000	1005.95 / per month	1276.51 / per month

MORTGAGE ALLIANCE
Thavaneesan Subra
Independently Owned and Operated
Brokerage # 10530

1585 Markham Rd, Unit # 407,
Toronto, ON. M1B 2W1
www. nesan.ca
mortgage@nesan.ca

SUBRA MORTGAGE SOLUTIONS INC.
Office: 1-844-878-2721
Fax: 647-351-3099

மட்டக்களப்பார் ஏட்டிலக்கியப் பாரம்பரியம்

- க. பத்திநாதன்

அச்சு வாகனத்தின் வருகை வரையிலும் தமிழர்தம் இலக்கியங்கள் ஏடுகளின் வாயிலாக வளப்படுத்-தப்பட்டுவந்தமையே நீண்ட நெடிய வரலாறாக வுள்ளது. அதற்கு கிழக்கீழமும் விதிவிலக்கல்ல. அவ்வகையிலே தான் மட்டக்களப்பாரின் ஏட்டிலக்கியப் பாரம்பரியத்தை சற்று அலசிப் பார்ப்பது இப்பத்தியின் நோக்கு.

பொதுவாக மட்டக்களப்பாரை அறிவுலகில் நிறுத்திப் பார்க்கும் மரபு, மட்டக்களப்பாருக்கும் இன்றுவரை மிகக்குறைவாகவே காணப்படுகின்றது. இதற்குக் காரணங்கள் பலவுண்டு. பொத்தம் பொதுவாக 'மட்டக்களப்பார் மடையர்' என வேற்றுப்புலத்தார் குறைகூற, அதற்கு மட்டக்களப்பார் வால் பிடித்த வரலாற்றிற்கு இன்றும் ஆதாரம் ஒய்யாரமாய் கிடக்கிறது.

நிற்க, இனி பத்திக்குள் நேரடியாகப் போகலாம்.

உலகத்தமிழர் வரலாற்றிலே மட்டக்களப்பார் இன்று வரைக்கும் இலக்கணத் தமிழைத் தம் பேச்சுவழக்கில் லாவகமாகப் பேசிக் கொண்டிருக்கும் தனித்துவத்ததைப் போல, ஏட்டிலக்கியங்களிலும் தமக்கான தனித்த பாணியையும், பங்களிப்புக்களையும் பேணத் தவறவில்லை. சுவடிகள் என்றால் அதிலே புராணங்கள், மருத்து வக் குறிப்புக்கள், மந்திரக் குறிப்புக்கள் தான் இருக்கும் என்ற எண்ண வழக்கிற்கு நேரெதிரான இலக்கியச்சுவை ஆதாரங்கள் மட்டக்களப்பார் ஏட்டிலக்கியப் பாரம்பரியத்தில் உண்டென்றால் அது மிகையாகாது. மட்டக்களப்பிலே எழுத்திலக்கியங்கள் செழிப் புறத் தொடங்கிய காலம் தொடக்கம் சுவடியாக்கங்கள் மலிவுற்றே வந்துள்ளன. இதனை சுவடிகளினை உண்டாக்கிய மூலக்கூறுக ளைக் கொண்டும் இலகுவாக அறிந்துகொள்ள முடியும். உதாரண மாக பனை ஓலை, தென்னை ஓலை, கமுகம் ஓலை, தளப்பத்து ஓலை என கிடைக்கக் கூடிய, சுவடிக்காகப் பயன்படுத்தக் கூடிய அனைத்துவகையான ஓலைகளையும் பயன்படுத்தி ஏராளமான ஏட்டிலக்கியங்கள் ஆக்கப்பட்டுள்ளமையானது மட்டக்களப்பார் அறிவுப்புல வரலாற்றின் மைல்கல் அல்லவா?

இங்கு ஆக்கப்பட்டுள்ள ஏட்டிலக்கியங்கள் பேரிலக்கியம், சிற்றி லக்கியம், நாட்டார் கதைகள், சாதகக் குறிப்புக்கள், வரவுசெலவுக் குறிப்புக்கள், மருத்துவக் குறிப்புக்கள், மந்திரக் குறிப்புக்கள், புராண இதிகாசங்கள், பாரதம், இராமாயணம், இராவண சங்கா ரம், ஆருடங்கள், சோதிடங்கள், கூத்துக்கள், நாடகங்கள், திரட்டு கள், அம்மாணை, அகவல், பத்துகள், பத்ததிகள், சிந்துவகை கள், அவதாரச் சருக்கங்கள், காவியங்கள், ஊர்சுற்றுக் காவியங் கள், கல்வெட்டு, வானியல் சாஸ்திரம், சித்திரை புத்திரன் கதை, அரிச்சந்திரன் கதை, பயண சாஸ்திரம், சகுன சாஸ்திரம், பூரண சாஸ்திரம், வசந்தன் கூத்து, ஞானகற்பம், ருது சோதிடம், வெற்றி லைச் சாஸ்திரம், கணித பயிற்சிப் புத்தகம், விதானமாலைப் புத்த கம், தூதுக்கள் என பலவாறும் காணப்படுகின்றயானது மட்டக் களப்பின் மானுடவியல் போக்கினை அறிந்துணர எத்துணைதூரம் உரம் சேர்ப்பதாக அமையும்.

கலைப்படைப்புக்கள் சார்ந்து ஏட்டிலக்கியங்கள் ஆக்கப்பட்டுள்ள மைக்கு மட்டக்களப்பார் கலைஇலக்கியச் சுவடிளே ஈழத்தில் பெரும் ஆதாரம் எனலாம். சிற்றிலக்கிய கிராமிய வடிவங்கள் அனைத்திலும் சுவடிகள் வகைவகையாக ஏராளமாக ஆக்கப்பட் டுள்ளன. இலக்கண வடிவம், பேச்சு வழக்கென்று இருமொழித் தன்மையிலும் இற்றைக்கு 400 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இலக்கியப் பனுவல்கள் ஏட்டிலேறி உள்ளன. உதாரணமாக சிலவற்றை பார்த்துவிட்டு நகர்வது மிகப்பொருத்தமாக அமையும்.

அவ்வகையில்

அம்மானை மெட்டிலே...

- பெரியவள்ளியம்மன் அம்மானை
- வள்ளியம்மன் அம்மானை
- இராமர் அம்மானை
- கஞ்சன் / கம்சன் அம்மானை
- குறும்பாரளந்தாரக அம்மானை
- பாரளந்தாரக அம்மானை
- பாரத அம்மானை
- சித்திரங்காதன் அம்மானை
- தெய்வேந்திரன் அம்மானை
- மார்க்கண்ட (மார்க்கண்டேய) அம்மானை
- வைகுந்த அம்மாணை
- திருவம்மாணை

முதலானவையும்.

அகவல்மெட்டிலே...

- வயிரவர் அகவல்
- கண்ணகி அம்மன் அகவல்
- பிள்ளையார் அகவல்
- மாரியம்மன் அகவல்
- மாரியம்மன் பெரிய அகவல்
- மணோன்மணி பூசை அகவல்
- வதனமார் அகவல்
- முருகையன் அகவல்
- நாகதம்பிரான் அகவல்
- வராகி அகவல் போன்றவையும்

காவிய மெட்டில்...

- மாரியம்மன் காவியம்
- வதனமார் காவியம்
- வயிரவன் காவியம்

- கண்ணகி அம்மன் பேரில் சிலம்புகூறல் காவியம்
- கலியாணக் கால்சுற்றுக் காவியம்
- பலவரிக் காவியம்
- ஆனைக்கட்டு காவியம்
- பட்டிமேட்டம்மன் காவியம்
- புதுக்குடியிருப்பு கண்ணகி அம்மன் காவியம்
- ஆதிவயிரவர் காவியம்
- தம்பிலுவில் அம்மன் காவியம்
- கன்னங்குடா அம்மன் காவியம்
- செட்டிபாளையத்தம்மன் காவியம்
- கயிலைநகர் (தாழ்ங்குடா) கண்ணகி அம்மன் காவியம்
- வற்றாப்பளை அம்மன் பேரில் காவியம்

முதலியனவும். மட்டக்களப்புக்கே உரியதான வசந்தன் கூத்துப் பாணியில் ஏட்டிலக்கியங்கள் அபரிமிதமாகப் படைக்கப்பட்டுள் ளன. இன்றும் மட்டக்களப்பில் வேளாண்மை அறுவடை காலங் களில் வசந்தன் கூத்துகள் ஆடப்பட்டுக் கொண்டே இருக்கின்றன யாவரும் அறிந்த கலைஞகர் உண்மை. அவ்வகையில்,

வசந்தன் கூத்துப்பாணி...

- பிள்ளையார் வசந்தன்
- கண்ணகி அம்மன் பேரில் வசந்தன்
- அபய வசந்தன்
- முத்தமிழ் வசந்தன்
- செல்லப்பிள்ளை வசந்தன்
- சிங்கு வசந்தன்
- சவணிக்க வசந்தன் (சவணிக்க - பழம்பெரும் வாத்தியக் கருவி)
- வேளாண்மைவெட்டு வசந்தன்
- இந்திரசித்து வசந்தன்
- அனுமான் வசந்தன்
- முசுற்று வசந்தன்
- குறத்தி வசந்தன்
- ஊஞ்சல் வசந்தன்
- கூவாக்குயில் வசந்தன்
- கிறுகு வசந்தன்
- கும்மி வசந்தன்
- அறுகம்பூ வசந்தன்
- பல்லக்கு வசந்தன்

முதலானவையும்.

கூத்துப் பனுவல்களாக...

- செம்பகராசன் நாடகம்
- சாரங்கரூபன் நாடகம்
- நரேந்திரரூபன் நாடகம்
- சாரங்கதரன் நாடகம்
- அனுவுருத்துரன் நாடகம்
- பிறதுமன் நாடகம்
- மதுரவாசகன் நாடகம்
- தருமபுத்திரன் நாடகம்
- காஞ்சிராசன் நாடகம்
- மதனரூபன் நாடகம்.
- உருப்பினி / சுந்தரி கதை
- கோவலர் கதை
- குருக்கேத்திரன் போர்

முதலானவையும் கிடைக்க பெற்றுள்ளவற்றில் இருந்து அறிய முடிந்தவைகளாம். இவற்றைவிட சிந்து மெட்டில் (எண்ணெய்ச் சிந்து), பத்து மெட்டில் (நடராசர் பத்து), குளிர்த்திமெட்டில் (கண் ணகி அம்மன் குளிர்த்தி) என உள்ளதனைத்தையும் கூறிச்சென் றால் இப்பத்தி போதாமல் போகும். இன்று தமிழரின் நாடகம் கூத்து என்பதுதான் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாகக் காணப்படுகி றது. நாடகம் என்ற சொல்லாடல் தமிழில் மட்டக்களப்பாரிடத்தே கி.பி. 1700 காலப்பகுதிகளிலேயே அறியப்பட்டிருக்கின்றமைக்கு மேற்கூறப்பட்ட கூத்து வடிவங்களே போதுமான உதாரணங் கள். (சாரங்க ரூபன் நாடகம் - கி.பி.1736). இவ்வாறான கலை இலக் கியப் பாரம்பரியங்கள் கணிசமான அளவில் மட்டக்களப்பின் படு வான்கரைப் பகுதிகளை அண்டியே படைக்கப்பட்டுள்ளமையினை யும் அறிய முடிகின்றது. அதனடிப்படையிலேயே மட்டக்களப்பின் கலைப்பாரம்பரியம் முகிழ்ந்துள்ளமையானது இவ்வாறான ஏட் டிலக்கியங்கள் வாயிலாக வெளிப்பட்டு நிற்கின்றன.

இதுவல்லவா ஓர் இனத்தின் ஆழமான கலைத் தொடர்ச்சிச் சொத்து.

இவ்வாறான ஏட்டிலக்கியங்கள் மருத்துவத்துறையிலும் பல பிரி வுகளாக இங்கு படைக்கப்பட்டுள்ளமையினைப் பார்க்கும் போது மிகப்பெருமையாகக் காணப்படுகின்றது. ஒவ்வொரு விடயங்க ளையும் பிரித்தறிந்து மருத்துவம் பார்த்த, அவற்றை நூலாக்கிய வைத்தியர்கள் எமது முன்னோர்களாக இருந்துள்ளமையினை அறிந்துணரும் வேளை மனம் புளங்காகிதம் கொள்கிறது. மனிதர் முதல் விலங்குகள் வரைக்குமான மருத்துவச் சுவடிகளும்கூட ஆக்கப்படுள்ளன. உதாரணமாக,

மருத்துவத் துறையில்...

- வாகடங்கள் (ரணவாகடம், குணவாகடம், கட்டுவாகடம்)
- மாட்டு வாகடம்
- பாம்பு வைத்தியம்
- சர்ப்ப விதி
- சாவியத்தொகை சித்தியாருடகம்
- வைத்திய மூலிகை அகராதி
- பிள்ளைத்தாச்சி தொழில்
- விஷ வைத்தியம்
- சித்த வைத்தியம்
- ஆயர் வேதம்
- மூலிகை மருந்து
- கை மருந்து
- மருத்துவ மந்திரம்
- யுநானிபதார்த்த குணவிளக்கம்
- நாட்டு வைத்தியம்
- நாடி விதி
- வைத்திய சாகடம்
- விஷசத்தியாரூடகம்
- சித்தாரூடக நொண்டிச் சிந்து
- பூரண சூத்திரம்
- அமுதாகரம் - விஷ வைத்தியம்
- சத்தி எடுக்கும் நிதானம்

முதலானவை அறியப்பட்டுள்ளன. இவற்றுள் ஒவ்வொன்றும் ஒவ் வொரு வகையாகவும், ஒவ்வொரு நோய்க்குமான மிகவும் நுணுக் கமான மருத்துவமுறைகளுடன் எழுதப்பட்டுள்ளமையினை அவ்வ வற்றின் உட்கருத்துக்களை ஆராயும் இடத்து அறிய முடிகிறது. கிடைத்தற்கரிய, வேறெங்கும் கிடைத்திட அறியமுடியாத ஏடுக- ளின் சிலதை இங்கு சொல்லிச் செல்லாவிடின் இப்பத்தி வலுவி ழந்துவிடும்.

யுநானிபதார்த்த குணவிளக்கம் எனும் வைத்தியநூலைப் பற்றி சற்றுப் பார்க்கலாம். யுநாநிபதார்த்த குணவிளக்ககார சங்கிரகம் எழுதியவர் - மண்முனையைச் சேர்ந்த வைத்தியர் காத்தி. ஆண்டு நான்கு ஒற்றைகள் 19ம் நூற்றாண்டின் முற்பகுதியில் எழுதப்பட்டுள்ளது. ஏனையவை 1877ம் ஆண்டு எழுதப்பட்டுள்ளது. 498 பக்கங்கள். முதலாவது ஒற்றையில் விநாயகர் காப்பு, வாக்குண்டாம் - தேவாரம் என்பன உள்ளன. அடுத்து யூநாநி - பதார்த்த குண விளக்ககாரசங்கிரகம் வரலாறு கூறப்பட்டுள்ளது. அதில் இவ்வாறான தகவல்கள் காணப்படுகின்றன. கடவுள் முதன்மையில் மனிதனாகப் படைக்கப்பட்ட ஆதாம் எனப்படுவபவருக்கு மருத்துவ நூலில் சொல்லப்பட்ட ரோகங்களைனைத்தும் நேரிட்டன. சுப்போ ஆண்டவனால் உபதேசிக்கப்பட்ட 'உரோக்கியாவரணங்களே' பரம்பரையாக வழங்கி வந்தன. அவைகளைத் திரட்டி முன்னுள்ள பண்டிதர்கள் சகீரலெட்சணம், ரோகநிதானம், நாடி முதலிய வகைகளைச் சேர்த்து மிகத் தெளிவாகவும், விரிவாகவும் ஏடுநூல் செய்தார்கள். பின்பு 'ஹக்கிம்' முதலிய பண்டிதர்கள் அநேக விசயங்களைச் சேர்த்து புதிதாக சில நூல்கள் செய்தார்கள். இவ்வாறு பல வைத்தியர்கள் பல விடயங்களைச் சேர்த்து பலவகையான பதார்த்த குணநூல்களைச் செய்தார்கள். சமஸ்கிருத பாசையில் இருந்த பல பதார்த்தங்களையும், பாரிசு (paris) பாசையில் இருந்தவற்றையும்கூட மொழிபெயர்த்தார்கள். இதில் மூலிகை அளவு, வகை என்பவற்றின் குணமும், தீரும் வியாதியும் கூறப்பட்டுள்ளது. இதுபோன்ற வைத்திய ஏடுகள் ஐரோப்பியர் ஆட்சிக்காலத்தில் அவர்கள் எமது மருத்துவக் குறிப்புக்களையும், அவர் தம் மருத்துவக் குறிப்புக்களையும் கலந்து இவ்வாறாக எழுத வைத்துள்ளதனையும் அறிய முடிகின்றது.

இதனைப் போலவே ஆர்வத்தைத் தூண்டத்தக்க ஒருவகையான ஏட்டுப்பிரதியையும் அறிய முடிகின்றது.

குடிமக்கள் வரவு என்பதே அதன் தலைப்பாகும் இது ஒரு கல்வெட்டு ஏடாகும்(கல்வெட்டு - வரலாறு). மட்டக்களப்பின் பல்வேறு பாகங்களிலும் ஏற்பட்ட குடியேற்றங்கள் இதுபற்றிக் கூறுகின்றது. இதில் குகன் முறைக் கல்வெட்டு, கலியுகக் கல்வெட்டு என்பன காணப்படுகின்றன. மட்டக்களப்பின் மண்முனைப்பற்று, கொக்கட்டிச் சோலையிற் குடிபதியாயிருந்து காலஞ்சென்று போனவரும் குகன் மரபில் பெரிய பாலகப் போடியாரின் வம்சத்தில் உதித்த வருமாகிய திருவாளர் க.வ.வி. அழகிப்போடியாரின் ஒரேமகன் செம்பாப்போடி ஆசிரியரால் வியவருடம் 1886ம் ஆண்டு, ஆவணி மாதம் 23ம் திகதி தாழங்குடாவில் எழுதப்பட்டுள்ளது. இவ்வேட்டில் ஆரம்பம் முதல் மட்டக்களப்பின் வரலாறு கூறப்பட்டு இறுதிப்பகுதியில் யாழ்ப்பாண வரலாறும் சேர்க்கப்பட்டுள்ளது.
இவ்வாறான இன்னுமொரு அரிய ஏட்டிலக்கிய வடிவமும் கிடைக்கப் பெற்றது. அதனை ஆராய சுவாரஸ்யமான தகவல்கள் வெளிப்பட்டன. அவ்வேடு தனிப்பட்ட ஒருவருடைய கணக்கு வழக்குகள் ஆகும். ஒரு விவசாய போடியாருடைய கணக்குகளாக காணப்படுகின்றது. 1909, 1914, 1922, 1932, 1933, 1944, ஆகிய ஆண்டுகளில் எழுதப்பட்டுள்ளது ஒவ்வொரு வருடமும் அவர் விவசாய போகத்தின் போது வாங்கும் பொருட்கள், பிறருக்கு வழங்கும் கடன், அடகு பிடிக்கும் பொருட்கள், விதைக்கும் நெல் வகைகள், விற்கும் பொருட்கள், நெல்விளைச்சல் முதலியன குறிப்பிடப்பட்டுள்ளன ஒவ்வொரு ஓலைகளிலும் ஆண்டுகள் குறிப்பிடப்பட்டிருப்பது விசேட அம்சமாகும், சில ஓலைகளில் வட்டார வழக்கு சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன உதாரணமாக புக்கை, வட்டயக்கூலி, அட்டாளை போன்றவற்றை குறிப்பிடலாம். அக்காலத்தில் பாவனையில் இருந்த நெல்வகைகள் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. உதாரணமாக மொட்டச்சம்பா, பொக்கணியன், பெருங்கறுப்பன், வணன், கறுத்தவாணன், முருங்கக்காயன், கல்லுருண்டை, முந்திரியான், தவிட்டு சம்பா, உதன்சம்பா, குருவியான். மட்டக்களப்பில் நெல்பயிரிடப்படும் சில இடங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன உதாரணமாக குறின்சாமுனை, காயன்குளம், மண்டகத்தடி, கரையாக்கந்தீவு, முள்ளாமுனை, இதன் மூலம் பண்டைய கிராமங்களின் பெயர்களை அறியலாம், நெல் அளக்கும் அளவை முறையான அவணம் முறை பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறு பல விடயங்களை அறிய முடிந்த போதிலும் ஏட்டின் உரிமையாளர் பற்றியும் எழுதியவர் பற்றியும் அறியக் கிடைக்காதது சற்றுக் கசப்புத்தான்.

இது போலவே அம்மானை மெட்டில் பாரதக் கதையைக் கூறுவதான பாரத அம்மானை எனும் சுவடியையும் பார்க்கக் கிடைத்தது. இது இசையுடன் பாடுவதற்கேற்ப விருத்தப்பாவில், எதுகை மோனையுடனும் எழுதப்பட்டுள்ளது. 852 பக்கங்கள் உள்ளன. அதில் 2256 பாடல்கள் காணப்படுகின்றன. இடையிடையே சுவடிப் பக்கங்கள் சிதைவடைந்திருந்தாலும் எழுத்துக்கள் தெளிவாக உள்ளன. எழுதியவர் பெயரோ, ஆண்டோ நேரடியாகக் கூறப்பட வில்லை. ஆசிரியர் அவற்றை மறைமுகமாகவே பாடலில் கூறியுள்ளார். அக்காலத்தில் தாழ்ந்த குலத்தினர் இவ்வாறு தம் பெயர் மறைத்து இலக்கியம் கூறுவது இயல்பாக இருந்துள்ளது. உதாரணமாக 'மட்டுறையும் செவ்வழு நீர்வன் கமலப்பூவுடனே' என்றே ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார். அதை பிரித்தறிந்தால் இவ்வாறு அமையும். மட்டுறையும் - மட்டக்களப்பு வாவியோரமாக அமைந்திருக்கும் 'புதூர்' என்பது எழுதியவர் ஊராகும். செவ்வழுநீர் - செம்மை+கழு+நீர் - செல்லப்பு, அடுத்து கமலப்பூ என்பது - கமலம் - வைரம் + பூ - முத்து = வைரமுத்து ஆகவே எழுதியவர் செல்லப்பு வைரமுத்து ஆவார். மூலப்பிரதி எழுதப்பட்ட காலம் - தமிழ் மன்னன் தெரிகார்கோள் - கரிகாற்சோழன் காலம் - 13ம் நூற்றாண்டின் நடுப்பகுதி. இப்பிரதி எழுதப்பட்ட காலம் - தனியுன்னாப் பூபாலன்காலம் அதாவது கண்டியரசன் காலம் - 15ம் நூற்றாண்டின் முற்பகுதி. பேச்சுவழக்குச் சொற்கள் தாராளமாகப் ஏட்டுக்குரியவடிவில் பின்பற்றப்பட்டுள்ளன. நிகண்டில் உள்ள பழந்தமிழ்சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. உதாரணம் - சீராடி, மண்டலம், மண்டி. வேற்றுமொழிச் சொற்கள் எங்குமே பயன்படுத்தப்படவில்லை.

மாபெரும் இலக்கியத்தைப் படைக்ககூடிய ஒருவர் தனது அங்க அடையாளங்களை மறைக்கும் அளவிற்கு மட்டக்களப்பில் சாதிய மைப்பு காணப்பட்டுள்ளது. ஒரு தாழ்ந்த சாதியைச் சேர்ந்த ஒருவர் எவ்வாறு பாரதத்தைக் கொண்டு இலக்கியம் பண்ணலாம் என்ற உயர்குடிகளின் இழிவான சாதியப்பாகுபாட்டினை அறிவதற்கு இவ்விலக்கிய ஆதாரம் எத்துணை வலுசேர்ப்பதாக அமைந்து விடுகின்றது. இத்தனைக்கும் இவ்விலக்கியத்தினைப் படைத்த படைப்பாளி யாவரும் அறியத்தக்க வகையில் எளிய நடையிலும், பேச்சுவழக்கிலும் தனது அறிவுப்புலத்தைக் கையாண்டுள்ளமை எத்துணைதூரம் சிறப்பான விடயமாக அமைகின்றது என்பதனை வாசித்து சுவைப்போரே அறிந்து கொள்ள முடியும்.

இவ்வாறான மானுடவியல், நாட்டாரியல் ரீதியான பண்புக்கூறுகளினைக் கொண்டமைந்த எமது மட்டக்களப்பார் எவ்வளவு தூரம் கலை, இலக்கியம், கலாசாரம், மருத்துவம், பொருளாதாரம், சோதிடம், அறிவியல் ரீதியாக தமக்கான தனித்திறத்துடன் வாழ்ந்துள்ளனர் என்பதை, மேற்கண்டவாறான கணிசமான ஏட்டிலக்கியங்களினை மேலெழுந்த வாரியாக புரட்டியபோதே அறியமுடிகின்றது எனில், துறைசார் வல்லுனர்களினால் முறையான ஆய்வுக்கு உட்படுமானால் மறைக்கப்பட்ட, மறக்கப்பட்ட எமது வரலாற்றுப் பக்கங்களின் உண்மைத் தன்மைகளை அறியமுடியும் அல்லவா?. இத்தனைக்கும் இக்கட்டுரையில் பதிவு செய்யப்பட்ட சுவடிகள் மட்டக்களப்பின் பாதி நிலப்பரப்பு வரைக்கும் அடங்காத குறைவான இடங்களில் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்டவைகளே ஆகும். இலங்கைத் தமிழர் தம் நெடிய வரலாற்றிலே மட்டக்களப்பாரின் அறிவுப்புலம் என்பது தமிழரின் வரலாற்றுத் தாக்கத்தில் எவ்வளவு தூரம் காத்திரமாக இருந்துள்ளது என்பதற்கு இவ்வகையான ஏட்டிலக்கியப் பாரம்பரியங்கள் என்பது தவிர்க்க முடியாத எடுகோள்களாய் அமைந்துவிடும் என்பதே அறிந்துணர்ந்த உண்மையாகும்.

(இக்கட்டுரையினை பகுதிகளாகவோ, முழுமையாகவோ மீள்பிரசுரம் செய்பவர்களும், தகவல்களை மீளப் பயன்படுத்துபவர்களும் உசாத்துணையினை மேற்கோளிடும் அறிவுநாணயத்தைப் பின்பற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீகள்.)

நன்றி:
வித்தகர் கு. சண்முகம்
(மட்டக்களப்பு, களுவன்கேணி)

pathinathan@thaiveedu.com

BUYING OR SELLING

Residential, Commercial, Land & Investment Properties

For Sellers:

- Free Market Evaluation Available
- Competitive Commission Packages Available
- Will pay for Staging & Condition
- WIll pay the Professional Photographer
- Virtual Tour
- Color Brochure
- Will do open house until house get sold
- Will market your home with social medias

SATHY & NITHY REAL ESTATE TEAM

For Buyers:

- Will find the home in any area within your budget
- Get you the lowest mortgage. rate

NITHY
SATHYAKUMAR
Sales Representative
Dir: 416.728.2454
Email: realtornithy@gmail.com

SATHY
SIVASUBRAMANIAM
Broker
Dir: 416.624.5044
Email: realtorsathy@gmail.com

16th Avenue / 9th Line $1,550

FOR LEASE — BEDROOMS:2 WASHROOMS:1

Morningside / Finch $1,200

FOR LEASE — BEDROOMS:1+1 WASHROOMS:1

Pharmacy Ave/Lawrence Ave $1,600

FOR LEASE — BEDROOMS:3 WASHROOMS:1

Victoria Park / Ellesmere $2,000

FOR LEASE — BEDROOMS:2 WASHROOMS:1

Rossland/Wilson $599,900

FOR SALE — BEDROOMS:3+2 WASHROOMS:2

Crowder Blvd / Leslie St $549,900

FOR SALE — BEDROOMS:3+1 WASHROOMS:2

Simcoe/Britannia $509,000

FOR SALE — BEDROOMS:4 WASHROOMS:3

Yonge/Front $659,000

FOR SALE — BEDROOMS:1+1 WASHROOMS:1

King/Blue Jays $699,000

FOR SALE — BEDROOMS:1 WASHROOMS:1

Lawrence Ave E/Orton Park $699,000

FOR SALE — BEDROOMS:3+1 WASHROOMS:3

Finch / Victoria Park $759,000

FOR SALE — BEDROOMS:3 WASHROOMS:2

Hoover Park/Tenth Line $769,900

FOR SALE — BEDROOMS:3+1 WASHROOMS:3

Brock/Hwy 2 $799,000

FOR SALE — BEDROOMS:3 WASHROOMS:4

Dufferin/Summeridge $889,000

FOR SALE — BEDROOMS:3 WASHROOMS:4

Markham/Sheppard $799,000

FOR SALE — BEDROOMS:4+2 WASHROOMS:3

Pharmacy/N.Eglinton $838,000

FOR SALE — BEDROOMS:3+2 WASHROOMS:2

RE/MAX Remax Realtron Realty Inc., Brokerage
Bus: 905 470 9800

Web: realtorsathy.com

வேளிர்!
வேளிர் வந்தேறு குடிகளா?

7

- செல்வநாயகி ஸ்ரீதாஸ்

கபிலரின் அதிர்ச்சி

வேளிர் மன்னர்கள் இருவரிடமும் ஏற்பட்ட அனுபவத்தால் கபிலர் சோர்வடைந்துவிடவில்லை. முதல் தடவை மறுக்கப்பட்ட போது அவருக்கு ஏற்பட்டது பெரிய அதிர்ச்சி. புறநானூறு 200ம் பாடலை அத்துணை எதிர்பார்ப்புடன் பாடினார். 'மறுப்பை' அவர் எதிர் பார்க்கவில்லை. இரண்டாம் தடவையாக அதே அனுபவம் ஏற் பட்டபோது அதை அவரது புத்தியால் ஏற்றுக்கொள்ள முடிய வில்லை. சிந்திக்க வைத்தது.

சங்கப் புலவர்களும் ஒரு வகையில் இதிகாச, புராணங்களில் பேசப்படும் முனிவர்களை ஒத்தவர்கள். முனிவர்கள் கோபம் சாபத் தில் முடிவதைக் காண்கிறோம்.

ஆனால், கபிலரின் புலமை அறிவின் நிறைவாகும். சங்கச் சான் றோரான கபிலர் சான்றாண்மையின் மொத்த வடிவம். அவருடைய கோபம், கொண்ட கருமத்தை முடிக்கும் வைராக்கியத்தை அவ ருக்குத் தந்தது. நண்பன், பாரிமகளிரை அரச குலத்து மணமக னுக்கே மணமுடித்துக் கொடுக்கவேண்டும் என்ற அவரது நோக் கத்தில் தளர்வு ஏற்படவில்லை. பாரி மகளிர் கற்றறிந்தவர்கள். கபிலரின் நிலமையைப் புரிந்து கொண்டார்கள்.

சங்க காலத் தமிழகம்:

சங்க காலத் தமிழகம், சேரநாடு, சோழநாடு, பாண்டியநாடு

ஆகிய பேரசுகளையும் வேளிர்களால் ஆளப்பட்ட கொங்குநாடு, வேணாடு, பறம்பு மலை, பொதிய மலை, பொதினி மலை, நள்ளி மலை, கொல்லி மலை, குதிரை மலை முதலிய சுதந்திரமான சிற் றரசுக்களையும், இவை தவிர வேறும் சில சிற்றரசுக்களையும் கொண்டிருந்தது. இவ் அரசுகளிடையே அடிக்கடி போர்கள் நடை-பெற்றன. எல்லைகள் மாறின. அரச விரிவாக்க காலத்தில் இது சாதாரண நிகழ்வு. போரில் ஒருவருக்கொருவர் உதவுவதும் உண்டு. சிற்றரசர்கள், பேரரசர்களின் பகையைச் சம்பாதித்துக் கொள்ளாமல் இருப்பதற்காக, வேந்தர்களின் எதிரிகளுக்கு உதவு-வதையோ அல்லது அவர்களுடன் திருமண உறவு வைத்துக் கொள்வதையோ தவிர்ப்பார்கள்.

இப்படியான தவிர்ப்புத் தான் விச்சிக்கோவாலும் இருங்கோ-வேளாலும் மேற்கொள்ளப்பட்டது.

வேளிர்களான எழினி, குதிரைமலையையும்; அதியமான், தகடூரை யும்; திருமுடிக் காரி என்னும் மலையமான் கோவலூரையும்; வல்வில் ஓரி, கொல்லிமலையையும்; நள்ளி, நள்ளிமலையையும்; பேகன், பொதினிமலையையும்; ஆய் அன்டிரன், பொதியமலை-யையும்; பாரி, பறம்பு மலையையும் ஏறக்குறைய ஒரே காலத்தில் ஆண்டிருக்கிறார்கள். இவர்கள் கடை எழு வள்ளல்களாக இலக் கியங்களில் அறியப்படுகிறார்கள். இவர்கள் பெரும்பாலும் மலைப்பகுதியை ஆண்டதை நாம் குறித்துக் கொள்ள வேண்டும்.

வேளிரது மூலம் அதாவது:

- 'வேளிர் யார்? அவர்கள் எந்த நாட்டின் மைந்தர்கள்'
- 'அவர்கள் எக்காலத்தில் தமிழக வரலாற்றில் வெளிப்பட்டார்கள்'
- அவர்கள் தமிழ் நாட்டிற்கு உரியவர்களா? அல்லது வந்தேறு குடிகளா?

என்பன போன்ற சில அடிப்படை விடயங்கள் இங்கு தெளிவுப டுத்தவேண்டியதாக உள்ளது.

பெருமதிப்பிற்குரிய மு. இராகவையங்கார் அவர்களது 'வேளிர் வரலாறு' என்னும் ஆய்வு நூலில் 'வேளிரது மூலம்' பற்றிக் கூறப் பட்டுள்ள சில தகவல்களைக் குறித்து இன்றைய நிலைப்பாடு என்ன என்பதைத் தெளிவுபடுத்த வேண்டியது ஒரு ஆய்வாளராக எனது கடமை.

திரு. மு. இராகவையங்கார் அவர்கள், கபிலர், இருங்கோவேள் மேல் பாடிய புறநானூற்றுப் (201) பாடற் பகுதியை, வேளிர் ஆட்சி தமிழ் நாட்டில் தொடங்கிய காலத்தைக் கணிப்பதற்கும் அவர்கள் வந்தேறு குடிகள் என்பதை நிறுவுவதற்கும் சான்றாகக் கொள்கிறார். பாடற் பகுதி வருமாறு,

நீயே, வடபான் முனிவன் தடவினுள் தோன்றிச்
செம்பு புனைந்து இயற்றிய சேண் நெடும் புரிசை
உவரா ஈகைத் துவரை யாண்டு
நாற்பத்து ஒன்பது வழிமுறை வந்த
வேளிருள் வேளே

- புறநானூறு பா. 201: 8-10

கபிலர் பாடலிலிருந்து, வேளிர் குடி 49 தலைமுறை தொடர்ந்து ஆண்டிருக்கிறார்கள் என்பது அறியப்படுகிறது. சீன அரசர், ஜப் பானிய அரசர் போன்ற பல்வேறு நாடுகளின் அரசர் ஆட்சிக் காலத்தைக் கணித்து, அவற்றின் அடிப்படையில் ஒரு அரசனது ஆட்சிக்காலம் சராசரி 21 ஆண்டுகள் எனக் கொண்டு, இருங்கோ-வேளின் முன்னோர் தென்னாட்டு அரசியல் வரலாற்றில் அரசர்க ளாக, இருங்கோவேள் காலத்திற்கு ஏறக்குறைய 1000 ஆண்டுக ளுக்கு முன் ஆளத் தொடங்கியிருக்கிறார்கள் என்கிறார்.

இங்கு இரு தகவல்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

- இருங்கோவேளின் மூதாதையர் ஆட்சித் தொடக்கம் கி.மு. 1000ம்

ஆண்டுக்கு முன்னையது என்பது,

- வேளிர் வந்தேறு குடிகள் என்பது.

இருங்கோவேளின் ஆட்சித் தொடக்க காலம் கி.மு. 1000ம் ஆண்டிற்கு முன்னையது என்பது ஓரளவுக்கு எமது கணிப்புடன் ஒத்துப் போகிறது. ஆதிச்சநல்லூர் முதலிய அகழ்வாய்வுக் களங்களில் நடந்த ஆய்வுகளின் சான்றுகள் அடிப்படையில், தமிழ் நாட்டில் கி.மு. 1000ம் ஆண்டளவில் ஒரு வலுவான அரசக் கட்டமைப்பு இருந்திருக்கவேண்டும் என்பதை ஏற்கெனவே நான் சான்றுகளுடன் நிறுவியிருக்கிறேன்.

மௌரிய அரசனான அசோகன் கல்வெட்டில் (கி.மு.3ம் நூற்றாண்டு) தென்னாட்டை ஆண்ட சேர, சோழ, பாண்டியருடன் தகடூரை ஆண்ட அதியமானும், 'சோடா, பாடா, ஸதியபுதோ, கேதள புதோ' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறான். 'ஸதியபுதோ' என்றது அதியமான் என்னும் குறுநில மன்னனை என்பது பிற்காலக் கல்வெட்டுச் சான்று மூலம் உறுதி செய்யப்பட்டது.

இதன் மூலம்...

- தமிழ் நாட்டில், அசோகன் போன்ற அயல் நாட்டு மன்னரால் அறியப்பட்ட அரசுகள் இருந்திருக்கின்றன என்பதும்,
- சங்ககாலம், அசோகன் கல்வெட்டின் காலத்துடன் ஒத்தது என்பதும்,
- தமிழ் நாட்டில் மூவேந்தர் தவிரவும் அசோகனால் அறியப்படும் அளவுக்கு அதியமான் போன்ற சிற்றரசுகள் சிறப்பாக இருந்தன என்பதும் உறுதி செய்யப்படுகிறது.

அதியமானும் ஔவையாரும் ஒத்த காலத்தவர். ஔவையார் அக நானூறு 78ம் பாடலில் கபிலரது அரிய செயலை வியந்து பாடியிருக்கிறார். எனவே கபிலர், ஔவையார், அதியமான் ஆகியோர் சமகாலத்தவர் என்பது தெளிவு. அதியமானின் காலம் ஏறக்குறைய கி.மு. 3ம் நூற்றாண்டாக இருக்கையில் கபிலர் காலமும், அவரோடு ஒத்த இருங்கோவேளின் காலமும் கி.மு. 3ம் நூற்றாண்டு என்று கொள்வதில் தப்பில்லை. இந்த அடிப்படையில் இருங்கோவேளின் மூதாதையர், குழு நிலையிலிருந்து படிப்படியாக அரச விரிவாக்கம் செய்த காலப்பகுதியைக் கணக்கிட்டால் அது, ஏறக் குறைய கி.மு. 13ம் நூற்றாண்டுக்குத் தள்ளப்படலாம். இதனை ஏற்பதும் விடுவதும் எதிர்கால அகழ்வாய்வு முடிவுகளைப் பொறுத்ததே. இப்போதைக்கு, கி.மு. 1000 என்று கொள்வதில் தப்பில்லை.

வேளிர் வந்தேறு குடிகளா?

பெருமதிப்பிற்குரிய மு. இராகவையங்கார் அவர்களின் ஆய்வுக்கு வருகிறேன்.

- பண்டைய இதிகாச, புராணக் கதைகள் பெரும்பாலும் அக்காலத்துக் கற்றறிந்தோராலும் நம்பப்பட்டு இலக்கியங்களிலும் பதிவு செய்யப்பட்டன. ஆண்டாண்டு காலமாக இவற்றைக்கேட்டும் சொல்லியும் எழுதியும் வருவதிலேயே இப்புராண, இதிகாசக் கதைகள் உண்மை என்ற நிலையாகி, வரலாறாகி கல்வெட்டுக்களிலும் இடம்பெறும் நிலை ஏற்பட்டுவிட்டன. நச்சினார்க்கினியர் போன்ற உரையாசிரியர் தாம் நம்புவதுடன் அவற்றைக் கேட்பவர்களும் நம்பும் வகையிலும் வரலாறாகக் கூறி வந்திருக்கிறார்கள்.

  இதனை, தொல்காப்பியம், எழுத்ததிகாரம் (நச்சினார்க்கினியர் உரை), தொல்காப்பியம் என்னும் முகவுரைப் பகுதியில் (பக்கம் 2) இரா. இளங்குமரன் அவர்கள் பின்வருமாறு உறுதி செய்வதைக் காணலாம் 'தொல்காப்பியரை சமதக்கினியார் மகனார் என்பதும் திரணதூமாக்கினியார் இவர் பெயர் என்பதும் பரசுராமர் உடன் பிறந்தார் என்பதும் நச்சினார்க்கினியர் இட்டுக் கட்டுதலை அன்றி எவரும் ஒப்பிய செய்தி இல்லையாம்'.
- அரச உருவாக்க காலத்தில் அரசர்களது குலப்பெருமை பேசப்படுகிறது. அரசர்களை, இறைவனின் வழித்தோன்றல்களாக, தெய்வாம்சம் மிக்கவர்களாகக் காட்டுவது, அவர்களது அபரிமிதமான சாதனைகள் பேசப்படுவது அதி முக்கியமான தேவையாக இருந்திருக்கிறது. இதனையே சங்கப் புலவர்கள் செய்தார்கள்.
- வேளிர் உள்ளிட்ட சங்ககால மன்னர்கள் அனைவரும் தமிழ் நாட்டு ஆதிக்குடிகளே என்பது இக்கட்டுரைத் தொடரின் தொடக்கப் பகுதிகளில் நிறுவப்பட்டது.
- இவற்றுடன் கீழ்க்காணும் தகவல்களையும் இணைத்துக் கொள்ளலாம்:

  - தமிழ் நாட்டில் பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளாக பழங்குடிகள் வாழ்ந்தார்கள் என்பது இக்கட்டுரைத் தொடரின் முற்பகுதியில் நிறுவப்பட்டது. வேட்டைச் சமூகமாகவும் வேளாண் சமூகமாகவும் படிப்படியாக வளர்ந்து சிறு சிறு குழுக்களாகத் தம்மை நிலைப்படுத்திக் கொண்ட நிலையிலிருந்து அரச விரிவாக்கம் தொடங்கியிருக்கிறது. இதுவே தமிழ் நாட்டின் அரசுகளின் தொடக்கம் எனலாம். தமிழர் வந்தேறு குடிகள் அல்ல.
  - தமிழ் நாட்டின் தெற்கே குமரிக் கண்டம் அல்லது லெமூரியா அல்லது கடல்கொண்ட தென்னாடு என்ற ஒரு பெரும் நிலப்பரப்பு இருந்தது என்றும், கடல்கோள் காரணமாக அக் கண்டம் கடலில் மறைந்து போக, அங்கு வாழ்ந்த மக்கள் தற்போதைய தென் இந்தியப் பகுதிகளில் குடியேறி மேலே நகர்ந்தார்கள் என்றும் வலுவான ஒரு கருத்து நிலவுகிறது. இது பற்றி ஆய்வாளர் ஒரிஸ்ஸா பாலு அவர்கள், 'குமரிக்கண்டம் கருதுகோள் என்ற நிலையிலிருந்து மாறி, குமரிக் கண்டம் ஏன் இருந்திருக்கக்கூடாது' என்று கேட்கும் நிலைக்கு மாறியிருக்கிறது என்னும் கருத்தை முன்வைக்கிறார். குமரிக் கண்டம் இருந்தது என்னும் கோட்பாட்டை ஏற்றுக் கொண்டால், தமிழர் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் கடல்கொண்ட குமரிக் கண்டத்தில் வாழ்ந்து கடல்கோள் காரணமாக உலகின் பல பகுதிகளுக்கும் பரவியிருக்கிறார்கள் என்றாகிறது.
  - சிந்து சமவெளி பண்பாட்டின் காலம் கி.மு. 3300 முதல் 1900 வரை. ஆரியர் படையெருப்பு, இயற்கைச் சீற்றம், வெள்ளப் பெருக்கு முதலிய காரணங்களால் இப்பண்பாடு முடிவுக்கு வந்தது என்பது ஆய்வாளர் கருத்து. சிந்து சமவெளிப் பள்ளத்தாக்கிலிருந்து வெளியேறிய மக்கள், இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலும் பரவினார்கள். அவர்கள் தெற்கே தமிழ் நாடு வரையிலும் குடியேறியிருக்கிறார்கள். சிந்து சமவெளிப் பண்பாட்டிற்கு

உரியவர்கள் திராவிடரே என்னும் ஆய்வாளர் கருத்து நாளுக்கு நாள் வலுப்பெறுகிறது.

- திராவிட மொழிகள் வழங்கும் இடங்களை, இணைக்கப்பட்ட வரைபடத்தில் பார்க்கவும்.



மொத்தம் 23க்கும் மேற்பட்ட திராவிட மொழிகள் அறியப்படுகின்றன. இவை தென், நடு, வட திராவிட மொழிகள் என்று பிரிக்கப்பட்டுள்ளன.

- தென்திராவிட மொழிகள்: தமிழ், மலையாளம், கன்னடம், துளு, குடகு, தோடா, கோடா, கொரகா, இருளா.
- நடுத் திராவிட மொழிகள்: தெலுங்கு, கோண்டி, கோயா, கூயி, கூலி, கோலாமி, பர்ஜி, கதபா, கோண்டா, நாயகி, பெங்கோ, ஜதபு.
- வடதிராவிட மொழிகள்: குரூக், மால்தோ, பிராகுய்.

இவ்வரைபடத்தில் இம்மொழிகள் பரவலாக இருக்கும் இடங்களை அவதானிக்கவும். தெற்கே ஈழம் முதலாக நடுவில் கோண்டி வரை திராவிட மொழி பேசும் நிலப்பரப்புகள் நெருங்கிக் காணப்படுகின்றன. வடக்கே பிராகுய், பாக்கிஸ்தான் பகுதியிலும் குரூக் நேபாளம், வங்களாதேசப் பகுதிகளிலும் காணப்படுகின்றன.

இதன் பொருள் என்ன?

- தமிழ் மொழி ஒரு காலத்தில் இந்தியா முழுவதிலும் பேசப்பட்டது என்பதா?
- தமிழ் மொழி பேசிய சிந்து சம வெளி மக்கள் இந்தியா முழுவதிலும் பரவினர் என்பதா?
- வடக்கே பாக்கிஸ்தானிலும் நேபாளம் வங்களாதேசப் பகுதியிலும் திராவிடர் குடியேற்றத்தை எவ்வாறு நியாயப்படுத்துவது?

இது காறும் எடுத்துக்காட்டப்பட்ட சான்றுகள் மூலம் தமிழர் தமிழ் நாட்டில் வந்தேறு குடிகள் அல்ல என்பதும் சங்கப் புலவர்கள், நச்சினார்க்கினியர், பின்வந்த அறிஞர்கள் முதலியோரால் முன் வைக்கப்பட்ட தமிழர் குறித்த கருத்துக்கள் யாவும் தவறானவை என்பதும் தெளிவு.

தமிழ் நாட்டின் அரசர்களான வேளிரின் விடயத்திற்கு வருவோம். வேளிர், மூவேந்தருக்குப் பெண் கொடுத்து உறவை வளர்த்துக் கொள்ளும் வழக்கம் சங்க காலத்தில் வழக்கில் இருந்திருக்கிறது. சேர மன்னர்கள் வேளிர்களுடன் திருமணத் தொடர்பு கொண்டமையைப் பதிற்றுப்பத்து பதிகங்கள் உறுதி செய்கின்றன.

- இரண்டாம் பத்தின் பாட்டுடைத் தலைவன் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன், மூன்றாம் பத்தின் பாட்டுடைத் தலைவன் பல்யானைச் செல்கெழு குட்டுவன் ஆகிய இருவரும் சகோதரர்கள். இவர்களின் தந்தை வெளியன் வேள், தாய் வேள்மாள் நல்லினி. இருவரும் வேளிர்.
- நான்காம் பத்தின் பாட்டுடைத் தலைவன் களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரலும் எட்டாம் பத்தின் பாட்டுடைத் தலைவன் பெருஞ்சேரல் இரும் பொறையும் சகோதரர்கள். அவர்கள் தந்தை வேள் ஆவிக் கோமான் பதுமன், வேளிர் குலத்தவன்.
- ஆறாம் பத்தின் பாட்டுடைத் தலைவன் ஆடுகோட்பாட்டுச் சேரலாதனின் தந்தை வேள் ஆவிக் கோமான், வேளிர் குலத்தவன்.
- ஒன்பதாம் பத்தின் பாட்டுடைத் தலைவன் இளஞ்சேரல் இரும் பொறையின் தந்தை மையூர் கிழான் வேண்மான், தாய் வேள்மாள் அந்துவன் சென்னை, இவர்களும் வேளிரே.

அழிந்தவை போக எமக்கு இன்று கிடைத்துள்ள பதிற்றுப்பத்தின் எட்டுப் பத்துக்களில் ஆறு பத்துக்களின் பாட்டுடைத் தலைவர்கள் நேரடியாக வேளிருடன் திருமணத் தொடர்பு கொண்டவர்கள்.

ஆனால், கபிலரது மணமகன் பட்டியலில் முடியுடை வேந்தர் இல்லை.

பாரியின் புகழ்மேல் பொறாமை கொண்ட மூவேந்தர்களும், பறம்பு மலையைச் சுற்றிப் பாடி வீடு அமைத்து, நாற்படைகள் கொண்டு முற்றுக்கையிட்டு, பல திங்கள் (மாதங்கள்), போரிட்டும் பாரியின் பறம்பு மலையைக் கைப்பற்ற முடியவில்லை. ஈற்றில் கபட நாடகமாடிப் பாரியைக் கொன்று அவன் அரசைக் கைப்பற்றி, பாரி மகளிரை அநாதைகளாக்கி அலைய விட்டார்கள்.

இத்தகைய மூவேந்தருக்குப் பெண் கொடுக்கக் கபிலர் முன்வருவாரா? இருங்கோவேளுக்குக் கூறியது தான் முடியுடை மூவேந்தருக்கும்.

மூவேந்தரும் இணைந்து பாரியை வஞ்சனையால் கொன்றமைக்குப் பாரி தன் மகளிரை மூவேந்தருக்கு மணம் முடித்துக் கொடுக்க மறுத்தமையே காரணம் என்று ஒரு வாய் மொழிக் கதை வழி வழியாகப் பேசப்பட்டு வருகிறது. இந்த வாய்மொழிக் கதைக்குக் கபிலரது பாடல்களில் நேரடியாகவோ அன்றி மறைமுகமாகவோ எந்தவித சான்றும் கிடையாது. இத்தகைய வரலாற்றுத் தவறுகள் தொடர்ந்து நடந்து கொண்டே இருக்கின்றன.

பாரியுடன் போரிட்ட மூவேந்தர் யார் என்பது பற்றிய தகவல் எதுவும் கபிலர் பாடலில் கிடைக்கவில்லை. கபிலர், பதிற்றுப்பத்து, 7ம் பத்தில் செல்வக்கடுங்கோ வாழியாதன் என்னும் சேர மன்னனைப் பாடியிருக்கிறார். பாரியின் வீழ்ச்சியின் பின்பே இப் பாடல் பாடப்பட்டிருக்கிறது என்பது அகச்சான்று மூலம் தெளிவு.

....., ..., எம் கோன்
புலர்ந்த சாந்தின் புலரா ஈகை
மலர்ந்த மார்பின் மா வண் பாரி
முழவு மண் புலர இரவலர் இனைய
வாராச் சேண் புலம் படர்ந்ததோன் அளிக்க என
இரக்கு வாரேன் எஞ்சிக் கூறேன்.

- பதிற்றுப்பத்து பாடல் 61

7ம் பத்தின் தலைவன் செல்வக்கடுங்கோ வாழியாதன் தான் பாரியுடன் போரிட்ட சேரமன்னனாக இருந்தால் கபிலர் அவனைப்பாடியிருக்கமுடியாது.

நண்பன் பாரியைக் கொன்ற மூவேந்தருக்குப் பாரி மகளிரை மணமுடித்துக் கொடுப்பதற்குக் கபிலர் ஒருப்பட மாட்டார். பாரியைக் கபடமாகக் கொன்று அவன் அரசை அபகரித்தவர்களுடன் திருமணத் தொடர்பை ஏற்படுத்திக் கொள்ள பாரி உயிரோடிருந்

தால் சம்மதித்திருப்பானா?

கபிலர் வேளிரையே மணமக்களாக்க விரும்பினார். வேளிர், வீரத் தால் அறியப்பட்டவர்கள். மூவேந்தருடன் ஒக்க வைத்துப் பேசப்ப டுபவர்கள். 'தொல்குடி வேளிர்' என்றும் 'எவ்வி தொல்குடி படி இயர்' என்றும் பலவாறாக வேளிர் பழமை சங்க இலக்கியங்களில் பேசப்படுகிறது. தமிழ் நாட்டின் மலைப் பிரதேச அரசுகள் பல, வேளிர் சிற்றரசுகளாகவே இருந்தன.

வேளிர், அறிவாளிகள், கொடையாளிகள், அஞ்சா நெஞ்சத்தர். அவர்களில் ஒருவன் பாரி மகளிருக்கு ஏற்ற மணமகனாக அமை-வான் என்று கபிலர் நம்பினார்.

ஆதிச்சநல்லூர் அகழாய்வும் வேளிரும்:

தொல்காப்பியத்தில் (கி.மு. 711) அரச விரிவாக்கம் தெளிவாகவும் சிறப்பாகவும் பேசப்பட்டிருக்கிறது. ஆதிச்சநல்லூர் (கி.மு. 905) இரும்புத் தொழில், நெசவுத் தொழில், தச்சுத் தொழில், பானை வனையும் தொழில் முதலியவை பெரிய அளவில் நடைபெற்றிருக் கின்றன. ஆதிச்சநல்லூர் ஒரு பெரும் வணிக நகரமாக இருந் தமை சான்றுகளுடன் நிறுவப்பட்டுள்ளது. வணிகம் மிகப் பெரிய அளவில் நடந்திருக்கிறது. ஒரு பெரும் வணிக நகரத்தைக் கொண்டு நடத்துவதற்கான பெரியதொரு அரசியல் கட்டமைப்பு ஆதிச்சநல்லூரில் இருந்திருக்கவேண்டும். ஆதிச்சநல்லூரில் வாழ்ந்த மக்கள் வேளாண் தொழிலை மேற்கொண்டு வேளாண் குடிகளாக வாழ்ந்திருக்கிறார்கள் என்பது தெளிவு.

பெருங்கற்படைக் காலத்தில் வேளிர், சிறு சிறு குழுத் தலை வர்களாக உருப்பெற்றிருக்க வேண்டும். பெருங்கற்படைக் காலத் தைத் தொடர்ந்த ஆதிச்சநல்லூர் பண்பாட்டுக் காலத்தில் தமிழ் நாட்டில் சிறுகச் சிறுக வளர்ந்த வேளிர் குடிகள் பெரு வளர்ச்சி பெற்றிருக்கவேண்டும்.

இணைக்கப்பட்டுள்ள வரைபடத்தில் ஆதிச்சநல்லூர், திருநெல்வே லிக்கு அண்மையில் அமைந்திருப்பதை அவதானிக்கலாம்.

பாரியின் பறம்பு மலை அரசும் ஆதிச்சநல்லூர் பகுதியில் அமைந்திருப்பது என்பது வேளிரின் ஆதிக்கத்தில் இப் பகுதி வளர்ச்சி பெற்றிருக்கலாம் என்ற கருதுகோளை முன்வைக்கிறது.

கி.மு.1000 ஆண்டுகளுக்கு முன்பே இங்கு வாழ்ந்த மக்கள் இரும்

புக் கருவிகளைப் பயன்படுத்தியிருக்கிறார்கள். அவர்கள், இரும்பை உருக்கும் உலைகள், அவை செதுக்குவதற்கும் சீராக் குவதற்குமான தொழில் நுட்பங்களை அறிந்திருக்கிறார்கள் என்று கொள்ள இடமுண்டு. கப்பல் கட்டி கடல் வாணிபம் செய்திருக்கி றார்கள். அகழ்வாய்வில் கிடைத்த பொருட்கள் உலோகவியல், மானிடவியல் துறைசார் அறிஞர்களின் சோதனையில், இவற்றின் காலம் கி.மு 1000 ஆண்டுக்கு முன்னையது என்று முடிவாகியிருக் கிறது.

பொருந்தல், ஆதிச்சநல்லூர், கீழடி ஆகிய அகழ்வாய்வுக் களங் கள் வெளிப்படுத்தும் விவசாயம், கைத்தொழில், கடல்வாணிபம், வாழ்க்கை முறை, கீழடி காட்டி நிற்கும் தமிழ் வளர்த்த பாண்டி யர், முத்துத் துறைமுகமாக விளங்கிய கொற்கை, நவீன வசதிக-ளுடன் கூடிய நகர் வாழ்க்கை முறை, முதலியவை பொருந்தல் காட்டும் விவசாயப் பண்பாட்டுடன் ஆதிச்சநல்லூர் அகழ்வாய்வில் கண்டறியப்பட்ட உலோக நாகரிகம், முதலியவற்றைத் தமிழ் நாட்டு மன்னர்கள் பற்றிய சங்கப் பாடல்களுடன் இணைத்து ஆராயும் பொழுது தமிழர் வரலாற்றின் தொடக்க காலம் பற்றிய பல உண்மைகள் வெளிச்சத்திற்குக் கொண்டு வரப்படுகின்றன.

இணைக்கப்பட்டுள்ள படம் ஆதிச்சநல்லூரில் பண்டைக் காலத் தில் வேளாண்மை பெருமளவில் நடைபெற்றிருப்பது பற்றிய அக ழாய்வுச் சான்று.

தமிழ் வளர்த்த குடிகளுள் முடியுடை மூவேந்தர்களுடன் ஒத்த தரத்தில் வைத்து எண்ணத்தக்க இன்னுமொரு குடி வேளிர் குடி. கடையெழு வள்ளல்களான பேகன், பாரி, காரி, ஆய் அண்டிரன், அதிகன், நள்ளி, ஓரி அனைவரும் வேளிர்களே. இவர்கள், கடை எழு வள்ளல்கள் என்று அழைக்கப்படுவதால் இவர்களுக்கு முன் னமே முதல், இடை வள்ளல்கள் இருந்திருக்கிறார்கள். ஆனால் ஆய்வாளர்கள் குறிக்கும் முதல், இடை வள்ளல்கள் புராண மாந் தர்களாகக் காணப்படுவது அவற்றின் உண்மைத் தன்மையைக் கேள்விக் குறியாக்குகிறது.

இன்றைய தமிழகம் மிகவும் சுருங்கிவிட்டது. தொல்காப்பியப் பாயிரமும் அதன் பின் வந்த இலக்கியங்களும் கண்ட தமிழகத்தி லிருந்து இன்றைய தமிழகம் பண்டைத் தமிழகத்தின் மேற்குப் பகுதிக் கேரளாவும் கர்நாடகாவின் மைசூர், கூர்க் பகுதிகளையும் ஆந்திராவையும் தனி மொழிகளாகப் பிரிந்து செல்லவிட்ட நிலை யில் உள்ளது.

செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்தும்
தங்குறிப்பினவே திசைச்சொற் கிளவி.

- தொல். சொல். 400.

என்னும் தொல்காப்பிய நூற்பா செந்தமிழ் பேசும் நிலத்தைச் சூழவுள்ள பன்னிரு நிலத்திலும் பேசப்படும் திசைச் சொல்லானது தத்தம் நிலத்தில் தாம் குறித்த பொருளை விளக்கும் பொதுவாகச் செந்தமிழ் நாட்டினருக்கு புரிவது அரிது என்று கூறுகியது. ஆனால், இப்பன்னிரு நிலங்கள் எவை என்று தொல்காப்பியத்தில் சொல்லப்படவில்லை. தொல்காப்பியர் காலத்தில் அவை சொல் லிக் காட்டவேண்டிய தேவை இருந்திராது.

இப்பன்னிரு கொடுந்தமிழ் நாடுகளில் 'வேணாடு' ஒன்று என்று அறியப்படுகிறது. அதாவது, பழமையான 'வேள்புலம்', வேளிர்க ளின் புலம், இது பிற்காலத்தில் 'கொங்கணம்' என்று அறியப்படு கிறது. கொங்கணம் என்னும் நாடு முன்பு தமிழ் நாட்டின் ஒரு பகுதியாக இருந்து காலப்போக்கில் கொடுந்தமிழ் நாடாக மாறி யிருக்கலாம். 'கொண்கான மலை' என்னும் மலையின் அரசனான 'கொண்கானங் கிழான்' என்னும் வள்ளலை மோசிக்கீரனார் என் னும் சங்கப்புலவர் புறநானூற்றில் 154, 155, 156 ஆகிய 3 பாடல் களில் பாடியிருக்கிறார். கொண்கானம் முற்காலத்து வேளிரது

ஆட்சிக்கு உட்பட்டிருந்தது என்பது புறநானூற்றால் அறியப்படுகறது.

'ஈயென இரத்தலோ அரிதே நீயது
நல்கினு நல்காய் ஆயினும் வெல்போர்
எறிபடைக் கோடா ஆண்மை அறுவைத்

....
கொண்பெரும் கானம் பாடலெனக்கு எளிதே'
- என்று புறநானூறு 154 ஆம் பாடலிலும்

'இலம்படு புலவர் மண்டை விளங்குபுகழ்க்
கொண் பெருங் கானத்துக் கிழவன்
தண்டார் அகல நோக்கின மலர்ந்தே'
- என்று புறநானூறு 155 ஆம் பாடலிலும்

'ஒன்று நன்குடைய பிறர் குன்றம் என்றும்
இரண்டு நன்குடைத்தே கொண்பெருங் கானம்
நச்சிச் சென்ற இரவலர்ச் சுட்டி;'
- என்று புறநானூறு 156 ஆம் பாடலிலும்

மோசிக்கீரனார் கொண்கானங்கிழான் என்னும் மலையக மன்னனின் வீரம், வெற்றி, கொடை முதலாய சிறப்புக்களைப் பாடியுள்ளார். இந் நாடு பொன் வளம் மிக்க நாடாக இருக்கவேண்டும். அதனா லேயே 'பொன்படு கொண்கான நன்னன் நல்நாட்டு 'என்று நற் றிணை 391ம் பாடலில் பாலை பாடிய பெருங்கடுங்கோ போற்றி யிருக்கிறார். இப் பாடலில் குறிப்பிடப்படும் நன்னனும் ஒரு வேளிர் மன்னனே. கொண்கான நாடு என்பது பிற்காலத்தில் கொங்கண நாடாக மருவி வழங்கியிருக்கலாம்.

இவ்வாறு தமிழ் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் தமது அரசை நிறுவி, வீரம், விவேகம், வள்ளன்மை மிக்கவர்களாக முடியுடை மூவேந்தரை ஒத்தவர்களாக மிடுக்குடன், ஏறக்குறைய கி.மு. 1000ம் ஆண்டிலிருந்து அரசாண்டிருக்கிறார்கள் என்பது ஏற்கெ னவே நிறுவப்பட்டது.

கி.மு.10ம் நூற்றாண்டு ஏறக்குறைய பெருங்கற்படைச் சின்னங்கள் காலம் முடிவடைந்து வரலாற்றுக் காலம் தொடங்கிய காலமாகும். இக் கால ஆராய்ச்சியுடன் பல வகையாலும் ஆதிச்சநல்லூர் நாக ரீக காலம் ஒத்துப் போகிறது.

வேள் புலங்கள்:

வேள் புலம் என்பது வேளிர்களால் ஆளப்பட்ட நிலம். சேர நாடு, சோழ நாடு. பாண்டி நாடு என்பது போல வேளிர் புலங்கள் என்று கூறுவதில் தப்பில்லை. வேளிர், பாண்டிநாட்டு வேளிர் என்றும் சோழ நாட்டு வேளிர் என்றும் சேர நாட்டு வேளிர் என்றும் அறியப்பட்டனர். ஆனால் அவர்கள் முடியுடை மூவேந்தருக்குக் கட்டுப்பட்டு ஆளாது, சுதந்திரமாகவே ஆட்சி புரிந்தனர். பல வேளைகளில் மூவேந்தருக்குப் போரில் உதவியுள்ளார்கள். இவர் கள், வேளாண்மை, கொற்றொழில், மண் சுடுதல், நூற்றல், கால் நடைகளை வளர்த்தல் முதலிய பல தொழில்களிலும் கைதேர்ந்தி ருந்தனர். வள்ளல் தன்மை மிக்கவர்கள்.

- பாண்டி நாட்டு வேளிர் - ஆய் அண்டிரன், திதியன், பாரி வேள், இருங்கோவேள் முதலியோ பாண்டி நாட்டுப் பகுதிக- ளில் ஆண்டார்கள்.
- சோழ நாட்டு வேளிர் - ஆதன் எழினி, அழுந்தூர் வேள் திதி யன், வேள் எவ்வி, வீரை வேண்மான வெளியன் தித்தன், நன் னன் சேய் நனனன் முதலியோர் சோழ நாட்டிற்கு உட்பட்ட பகு தியில் ஆட்சி செலுத்தினர்.
- சேர நாட்டு வேளிர் - நெடுவேளாவி, வேளாவிக் கோமான் பதுமன், வையாவிக் கோப்பெரும் பேகன், நன்னன் வேண்மான், வெளியன் வேண்மான் ஆய் எயினன் முதலியோர்.

வேளிர் அரசுகள்:

எட்டுத்தொகை, பத்துப் பாட்டு ஆகிய தொகை இலக்கியங்க ளைப் பாடியவர்கள் சான்றோரேயாயினும் அவர்களைப் பாடச் செய்த பெருமை பெரு வள்ளல்களான மன்னர்களையே சாரும். இவ் வரிசையில் கடையெழு வள்ளல்கள் ஆற்றிய தொண்டு அளப்பரியது. வள்ளல்களின் அளப்பரும் ஈகையை இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார் சிறுபாணாற்றுப்படையில்,

'எழுவர் பூண்டஈகைச் செந் நுகம்
விரிகடல் வேலி வியலகம் விளங்க
ஒருதான் தாங்கிய உரனுடை நோன்தாள்' - என்றும்
பெரும்சித்தனார்,
- புறநானூறு 158 ஆம் பாடலில்

எழுவர் மாய்ந்த பின்றை, அழிவரப்
பாடிவருநரும் பிறரும் கூடி
இரந்தோர் அற்றம் தீர்க்கென விரைந்து இவண்
உள்ளி வந்தனென் யானே'
- என்றும் விதந்து பாடியுள்ளார்கள்

இனி இவ் வேள் மன்னர்களைப் பற்றித் தனித்தனியாகப் பார்க்க லாம்.

ஆய் அண்டிரன்:

ஆய் என்பது ஆயர் குல மன்னர்களையும் அவர்கள் ஆண்ட நாட்டையும் குறிக்கும் பெயர். இவன் பொதியமலைச் சாரலில் உள்ள ஆய்குடியைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த ஆயர் குல மன்னன். இவனை வேள் ஆய் என்றும் ஆய் அண் டிரன் என்றும் அழைப்பார்கள். கடையெழு வள்ளல்களில் ஒருவ- னான ஆய் அண்டிரன் சிறுபாணாற்றுப்படையில் குறிப்பிடப்பட்டி ருக்கிறான். மன்னன் ஒருவன் பெயருடன் 'வேள்' என்பது இணைக் கப்பட்டிருந்தால் அவன் வள்ளல் என்பது பொருள். அதாவது வேள் ஆய் என்பது போல. திரு. மு. இராகவையங்கார் அவர் கள், 'இவ் அண்டிரன் என்ற சொல்லை நோக்குமிடத்து, அதற்கு வேறு சிறந்த தமிழ்ப்பொருள் காணப்படாமையின், அப் பதம், வேள் - ஆயின் குலப்பெயராகிய ஆந்திர சப்தத்தின் திரிபாக வழங்கியதென்றே சொல்லலாம்' என்கிறார். 'ஆந்திரா' என்னும் பெயர் பிற்காலத்தயது என்பதை அவர்கள் கருத்தில் கொள்ளத் தவறிவிட்டார்.

வேள் ஆய் பெரு வீரனாக அறியப்படுகிறான். வேள் ஆய்க்கும் கொங்கருக்கும் போர் மூண்டது. கொங்கரைப் போரில் வென்று அவர்களைக் குட கடற்கரையில் ஓடி ஒளிக்குமாறு செய்தான் என்று புகழப்படுகிறான். இவனுடைய பொதியமலையும் ஆய் குடியும் அம் மலைக் குழுவிலுள்ள கவிர மலையும் புலவர் பாடும் புகழ் பெற்றவை.

ஆய் பற்றிய சுவையான கதை ஒன்று கூறப்படுகிறது. வேள் ஆய்க்கு, நீல நிற நாகம் ஒன்று ஒரு ஆடையைக் கொடுத்ததாக வும் அவன் அந்த ஆடையை, ஆலமரத்தின் கீழிருந்த சிவபெரு மானுக்கு சாத்தியதாகவும் இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்த னார் சிறுபாணாற்றுப்படையில் பதிவு செய்திருக்கிறார்.

நிழல்திகழ்
நீலநாகம் நல்கிய கலிங்கம்
ஆலஅமர் செல்வற்கு அமர்ந்தனன் கொடுத்த
சாவம் தாங்கிய சாந்துபுலர் திணிதோள்
ஆர்வ நன்மொழி ஆயும்
- சிறுபாணாற்றுப்படை

ஆயை உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் புறநாநூற்றில் 127-135 வரையிலான ஒன்பது பாடல்களையும் துறையூர் ஓடைகிழார் புறநானூற்றில் 136 ஆம் பாடலையும் பாடியுள்ளனர். இவர்கள் மட்டுமல்லாமல், குட்டுவன் கீரனார், உமட்டூர் கிழார் மகனார் பரங்கொற்றனார், பரணர், காரிக் கண்ணனார் முதலிய சான்றோ ரும் பாடியிருக்கின்றனர்.

- தொடரும்

selvanayaki.s@thaiveedu.com

தமிழியல் ஆய்வுகள் - வரலாறும் வளர்ச்சியும் 15

- நா. சுப்பிரமணியன்

தமிழியலாய்வு வரலாற்றிலே 1960களை அடுத்த காலப் பகுதியின் இயங்குநிலைபற்றிய பார்வையிலே முதலாவதான 'தமிழரின் சமூகபண்பாட்டு வரலாறு சார்ந்த ஆய்வுச்செயற்பாடுகள்' பற்றி நோக்கி வருகிறோம். அவ்வகையில் குறிப்பாக, அவ்வரலாற்றின் 'தொடக்ககாலப்பகுதி' சார்ந்த பார்வைக்குக் கடந்த கட்டுரையிலே தோற்றுவாய் செய்யப் பட்டது. இங்கு அப்பார்வை தொடர்கின்றது.

மேற்படி தொடக்க காலகட்டத்தைச் சங்ககாலம் என வழங்குவது மரபாகிவிட்டது. சங்க இலக்கியங்கள் எனப்படும் எட்டுத்தொகை மற்றும் பத்துப்பாட்டு ஆகிய தொகைநூல்களின் பெருந்தொகை யான பாடல்கள் எழுந்த காலப்பகுதியாக இக்காலப்பகுதி கருதப் பட்டு வருகின்றது என்பது பொதுவாக அறியப்பட்ட செய்தியே யாம். இக்காலப்பகுதி சார்ந்தனவாக 1960களின்பின் நிகழ்ந்துள்ள பெருந்தொகையான ஆய்வுச் செயற்பாடுகளைப் பொதுவாக இரு வகைப்படுத்தலாம். ஒருவகையின அக்கால சமூக-பண்பாட்டுக் கூறுகளின் இயங்குநிலைகள் தொடர்பான தொகுநிலைப்பார்வைக ளாகும். இவை குறிப்பாக, சங்க இலக்கியங்களுக்கூடாகப் புலப் படும் சமூகச்சூழல்களையும் அவற்றுக்கும் இலக்கிய உருவாக்கத் துக்கும் உள்ள தொடர்புகளையும் வரலாற்று முறைப்படி புரிந்து கொள்ளும் நோக்குடனமைந்த பொதுநிலைப் பார்வைகளாகும்.

இக்காலப்பகுதிசார்ந்த இன்னொரு வகை ஆய்வுகள், அக்கால கட்டம்சார்ந்த குறித்த ஓர் அம்சத்தையோ அல்லது சில அம்சங் களையோ மட்டும் மையப்படுத்தி மேற்கொள்ளப்பட்டு வந்துள்ள ஆய்வுகளாகும். இவற்றுட் பல, குறிப்பாக அக்கால மொழிநிலை மற்றும் இலக்கியப்பண்பு, கலைமரபுகள் மற்றும் சிந்தனைமரபுகள் முதலியவற்றை மட்டும் நுனித்து நோக்கும் வகையில் அமைந்த வையாகும். மேற்படி இருவகைகளுள் முதலாவதான தொகு நிலைசார்ந்த வரலாற்றுப் பார்வைகளே இங்கு முதற்கவனத்துக்கு வருகின்றன.

மேற்படி முதலாவதான தொகுநிலை வரலாற்றுப் பார்வைகளாக அமைந்த ஆய்வுமுயற்சிகள் பலவற்றுள்ளும் தனிக்கவனத்துக்குரி யன என்ற வகையில் நான்கு நூலாக்கங்கள் மட்டும் முன்னைய கட்டுரையிறுதியிலே சுட்டப்பட்டன. முனைவர் கோ. கேசவன் எழு திய மண்ணும் மனித உறவுகளும் (1979,2001), பேராசிரியர் பெ. மாதையன் அவர்களின் சங்ககால இனக்குழுச் சமுதாயமும் அரசு உருவாக்கமும்(2004), பேராசிரியர் கே. பழனிவேலு எழுதிய சங்க இலக்கியம் - பாட்டு மரபும் எழுத்து மரபும்(2010) மற்றும் பேராசிரி யர் கா. இந்திரபாலா அவர்களால் தொகுக்கப்பட்டதான முன் வர லாற்றுக் காலத் தமிழ்நாடு (Early Historic Tamil Nadu) என்ற தலைப்பிலான கட்டுரைத்தொகுப்பு ஆகியனவே, அங்கு குறிப்பி டப்பட்டன.

மேற்படி காலகட்டம்சார் வரலாற்றுப்பார்வைகள் என்ற வகையில் எழுந்துள்ள பெருந்தொகையான நூலாக்கங்களையும் கட்டுரைத் தொகுப்புகளையும் ஆய்வரங்க உரைத் தொடர்களையுங்கூட இங்கு பட்டியலிட முடியும். அவ்வாறான பட்டியல் முயற்சி இங்கு தவிர்க்கப்படுகிறது. வரலாற்றுச் செல்நெறியை அடையாளங்காட்டி நிற்கும் ஆக்கங்களில் முக்கியமானவை என்றவகையிலேயே மேற் படி நான்கு நூல்கள் அங்கு சுட்டப்பட்டன. ஆனால் இவைதவிர மேலும் சில முக்கிய ஆக்கங்கள் பற்றிய தகவல்களையும்கூட இங்கு இணைத்து நோக்கவேண்டிய அவசியமுள்ளது என்பதை எனது அண்மைக்கால வாசிப்பநுபவம் உணர்த்தி நிற்கிறது. அவ் வகையில் குறிப்பாக, பேராசிரியர் கா. சுப்பிரமணியன் எழுதிய சங்ககாலச் சமுதாயம்(1982), முனைவர் ஆ. தனஞ்செயன் அவர்க ளின் சங்க இலக்கியமும் பண்பாட்டுச் சூழலியலும் (2010), தமி ழில் இலக்கிய மானிடவியல்(2014), பேராசிரியர் ராஜ்கௌதமன் எழுதிய பாட்டும் தொகையும் தொல்காப்பியமும் தமிழ்ச் சமூக உருவாக்கமும் (2ஆம்பதி. 2012) முதலியசில ஆக்கங்களுங்கூட இங்கு நமது கவனத்துக்குரியவாகின்றன.

மேற்படி ஆக்கங்களின் முக்கியத்துவம் எனத்தக்க வகையில் குறிப்பிடத்தக்க பொது அம்சம், 1960களில் தமிழியலாய்வுச் சூழ லில் அறிமுகமான 'சமூகவிஞ்ஞான அடிப்படைசார் ஆய்வு'ப்பார் வைக'ளின் - குறிப்பாக, சமூகவியல், மானுடவியல் மற்றும் ஒப்பி யல் முதலியவற்றின் தொடர்ச்சி மற்றும் வளர்ச்சி நிலைகளை அடையாளப்படுத்தக்கூடிய முக்கிய சான்றுகளாக இவ்வாக்கங்கள் திகழ்கின்றன என்பதாகும். அவ்வகையில் இவை குறிப்பாக, '1960களில் பேராசிரியர்கள் க. கைலாசபதி, கா. சிவத்தம்பி மற் றும் டாக்டர் நா. வானமாமலை முதலியவர்களின் எழுத்துகளில் தொடக்கி வைக்கப்பட்ட சிந்தனைகளை அடுத்தடுத்துவந்த தலை முறைகளுக்கு ஏற்றவகையில் விரித்தும் வளர்த்தெடுத்தும் சென் றவை' என்பதான கணிப்புக்குரியனவாகின்றன.

இவ்வாறான இவ்வாக்கங்களின் முக்கியத்துவத்தைத் தெளிந்து கொள்வதற்கு முதலிலே 1960களில் கைலாசபதி, சிவத்தம்பி, வானமாமலை முதலியோரால் தொடக்கிவைக்கப்பட்ட சமூகவிஞ் ஞான வகைசார் சிந்தனைகளின் வரலாற்று முக்கியத்துவத்தை நினைவில் இட்டுவர வேண்டியது அவசியமாகிறது. அக்காலம் வரையான தமிழக்கல்வியாளர்கள் பலரின் மத்தியில் நிலவிவந்த, 'பண்டைப் பெருமைபேசும் உணர்வுநிலைகளை' - அதாவது 'பெருமித உணர்வுகளை' - ஆய்வுநிலையிலே விமர்சனங்களுக்கு உட்படுத்தியமையேயாகும். இத்தொடர்பிலான சில விளக்கங்கள் வருமாறு:

பெருமித உணர்வுநிலைகள் மீதான விமர்சன அணுகுமுறைகளின் வரலாற்று முக்கியத்துவம்.

'சங்ககாலத் தமிழர் பண்பாட்டு நிலைகளில் சிறந்தோங்கியிருந்த னர்' என்பதாக மேற்படி 1960கள் வரையான காலகட்ட 'பெருமித உணர்வு' அமைந்திருந்தது. அவ்வாறான உணர்வுத்தளத்தில் நின்று சங்க இலக்கியங்களைத் தந்த படைப்பாளிகளை - அதா வது பாணர்கள் மற்றும் புலவர் முதலியோரைச் 'சான்றோர்' எனப் போற்றுவதும் சங்க இலக்கியத்தைச் 'சான்றோரிலக்கியம்' என வழங்குவதும் அக்காலத்தின் தமிழ்க்கல்வியாளர் சூழலில் பெரு வழக்காக நிலவி வந்துளது. 'சான்றோர்'என்றசொல்லானது நற் பண்பாளர்கள் என்ற பொருள்தருவதாகும். அவ்வகையில் சங்க இலக்கியத்தை சான்றோரிலக்கியங்கள் எனச் சுட்டும் முறைமை யானது அவற்றுக்கு, 'நற்பண்பாளர்களின் படைப்புகள்' என்பதான கணிப்பைத் தரக்கூடியனவாகும். இவ்வாறான உணர்வுநிலைக-ளின் தளத்தில் நின்று சங்ககாலத்தைப் தமிழர்பண்பாட்டின் 'பொற்காலம்' எனவும் அக்காலத் தமிழ்க்கல்வியாளர் எழுதியும் பேசியும் வந்துள்ளனர்.

மேற்சுட்டிய பெருமித உணர்வு நிலையானது நீண்ட பண்பாட்டு வரலாறுகொண்ட பல்வேறு மொழிசார்ந்தோரிடையேயும் பொது வாக நிலவிவருவதொன்றுதான். இதற்கான வரலாற்றுக்காரணிகள் பலவுள. இவை பற்றி விளக்கிப்பேச இது உரிய சந்தர்ப்பமன்று. ஒரு குறிப்பை மட்டும் சுருக்கமாக முன்வைக்க விழைகிறேன். தமி ழர்கள் தமது தனித்தன்மைகளை அடையாளங்காட்டும் பண்பாட்டு வேர்களைப் பற்றிய தேடல்களில் ஆர்வம் கொண்டிருந்த ஒரு காலகட்டமாகவே 1960கள் வரையான காலகட்டம் அமைந்திருந் தது. 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சி.வை. தாமோதரம்பிள்ளை மற்றும் உ.வே. சாமிநாதையர் முதலியோரின் முயற்சிகளால் அச் சேறிவந்த சங்க இலக்கியங்கள் அக்காலத் தமிழியலாளர்களுக் குப் பெரும் மனநிறைவை அளித்திருந்தன. அவையே தமது பண் பாட்டின் மூலவேர்களை அடையாளங் காட்டுவன என உணர்ந்த நிலையில் அவற்றின் சிறப்பம்சங்களை எடுத்துப்பேசுவது அக் காலகட்டச்சூழலின் தேவையாகவும் இருந்தது. அவ்வாறு பேசமுற் பட்டோருட் பலரும் 'தமிழுணர்வு' என்பதான சார்புநிலையில் நின்றே செயற்பட்டு வந்தனர். அவ்வாறான சார்புநிலையிலிருந்து விடுபட்டுப் 'புறநிலையாக'(objective) நின்று நோக்குவதற்கான சிந் தனைச்சூழல் அக்காலப்பகுதியில்தான் உருவாகிக் கொண்டிருந் தது. மேற்படி பெருமித உணர்வு நிலை நிலவிய வரலாற்றுப் பின் புலத்தை இவ்வாறுதான் நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

மேற்சுட்டியவாறாக உருவாகி வந்த புறநிலைப்பார்வைகள் தமிழ்ச் சூழலில் வலுப்பெறத் தொடங்கிய காலகட்டமாகவே 1960களை நாம் தரிசிக்கிறோம். மேலே நோக்கியவாறான மேற்படி கைலாச பதி முதலியோர் முன்வைத்த பார்வைகள், அணுகுமுறைகள் என் பவற்றின் வரலாற்று முக்கியத்துவம் பற்றி நாம் புரிந்துகொள்ள வேண்டிய செய்தி இதுதான். மேலே நோக்கியவாறான 'பெருமித உணர்வுநிலை'சார் எண்ணப்பாங்குகளை இவர்கள் 'சமூக விஞ் ஞான ஆய்வு'முறைமைகளின் துணைகொண்டு விமர்சித்து, தமிழி யலின் தரத்தை மேலோங்கச் செய்தனர். (இவைபற்றி முன்னரும் 11வது கட்டுரையில் விரிவாகவே நோக்கியுள்ளோம்.)

சமூக விஞ்ஞானத்துறைகளின் துணையோடு பண்டைப் பண்பாடு களை ஆராயமுற்படும்போது உலகின் எந்தமொழிசார் பண்பாட் டையும் உயர்ந்தோங்கியியிருந்த பண்பாடு என மதிப்பிடுவது சாத்தியமில்லை. ஏனெனில் உலகின் பல்வேறு நாடுகளின் சமூகங் களுட் பலவும் 'பழம்பொதுமைச்சமூகம்' என்ற அடித்தளத்திலி ருந்தே தமது வரலாறுகளைத் தொடங்கியுள்ளன. பின்னர் அவை முறையே 'அடிமைச்சமூகம்', 'உடைமைச்சமூகம்', 'முதலாளியச் சமூகம்' முதலியனவாகப் பல படிநிலைகளைக் கடந்தே இன் றைய வரலாற்றுக்கட்டத்தை அடைந்துள்ளன. சமூகவியல், மானிட வியல் முதலியவற்றின் ஊடாக நாம் புரிந்துகொள்ளக்கூடிய சமூ தாயவரலாற்றுக்காட்சி இதுதான்.

இவ்வாறான உலகப்பொதுவான சமுதாய வரலாற்றுப்பார்வைக- ளின் ஊடாகத்தமிழரின் சங்க இலக்கியப்பரப்பை நோக்கும்போது, அது புலப்படுத்தி நிற்கும் காலகட்டமானது 'பழம்பொதுமை நிலையிலிருந்து உடைமை நிலைநோக்கி மாறிக்கொண்டிருந்த காலகட்டம்' என்பது பொதுவாகவே புலனாகக்கூடிய செய்தியாகும். இதனை ஆய்வுபூர்வமாக எடுத்துப் பேசிய முன்னோடிகள் என்ற வகையிலேயே கைலாசபதி, சிவத்தம்பி, வானமாமலை முதலிய மார்க்ஸிய சமூகவியல் சிந்தனையாளர்களின் எழுத்துகள் வர லாற்று முக்கியத்துவமுடையவாயின. கைலாசபதியவர்கள் மேற் படி காலகட்டச்சமுதாயத்தை - அதாவது சங்க இலக்கியம் அடை யாளப்படுத்தும் சமுதாயத்தை - 'நாகரிக உலகின் நுழைவாயி லிலே நிற்கும் சமுதாயம்' எனக்கண்டார். இக்குறிப்பு அவருடைய 'அழிவும் ஆக்கமும்' என்ற கட்டுரையிலே (நூல்: பழந்தமிழர் வாழ்வும்வழிபாடும் - 1966-ப.27) இடம்பெற்றதாகும்.

'நாகரிகத்தின் நுழைவாயில்' என்ற தொடரானது 'நாகரிக வர லாற்றின் ஆரம்பக்கட்டம்' என்ற பொருளைத்தந்து நிற்பது வெளிப் படை. அவ்வகையில் சங்கஇலக்கியம் காட்டும் வாழ்வியலானது நாகரிகவரலாற்றின் தொடக்கநிலை மட்டுமே என்பதும் உய்த்து ணரக்கூடிய செய்திகளாகும். இவ்வாறு குறிப்பிட்டதன் மூலம் கைலாசபதியவர்கள், 'சங்ககாலத் தமிழர்பண்பாட்டு நிலைகளில் சிறந்தோங்கியிருந்தனர்' என்பதாக தமிழ்க்கல்வியாளர் பலர் மத்தி யில் நிலவிவந்த பொதுவான பெருமித எண்ணப்பாங்கை விமர் சிக்க முற்பட்டுள்ளமை வெளிப்படை. மேலும் 'நாகரிகத்தின் நுழைவாயில்' என்பதான அக்கருத்தை விளக்கிப் பேசும் வகையில் அவர் மேற்படி கட்டுரையில் முன்வைத்துள்ள மேலும்சில குறிப்பு களும்கூட இங்கு நமது கவனத்துக்குரியனவாகின்றன.

'கிறித்து சகாப்தம் தொடங்குவதற்கு ஏழெட்டு நூற்றாண்டுகளுக்கு முன்னர், தமிழக வரைப்பிலே நூற்றுக்கணக்கான குலமரபுக்குழுக் கள்(Tribes) சிதறிக்கிடந்தன. புராதன மனிதவரலாற்றாசிரியர் அநா கரிக நிலையில் (Barbarism) இப்புராதனக் கூட்டுச்சமுதாயங்கள் இயங்கின என்பர். இச்சிறு கூட்டுச்சமூகங்களில் இருந்த யாவரும் தமிழகம் ஒன்று என்னும் உணர்வு எழாதகாலத்தில் வாழ்ந்தவர்கள் என்பதை இங்கு வற்புறுத்துதல் அவசியமன்று. ஒவ்வொரு சிறு- குழுவிலும் அடங்கிய யாவரும் இரத்த உறவினால் பிணைக்கப் பட்டவர்கள். குழுவின் பொருளாதார அமைப்பைப் புராதன பொதுவுடைமை எனலாம்'.

'நூற்றுக்கணக்கான குலங்களிலிருந்து காலப்போக்கிலே தமிழகத் தில் மூன்று அரசுகள் உருவாயின. முடியுடை வேந்தர் தலைதூக் கினர். தமிழகம் நாகரிக உலகில் நுழைந்தது.' - மேற்படி நூல்: ப.28 மற்றும் ப.29.

இவ்வாறு பேராசிரியர் கைலாசபதியவர்கள், 'சங்ககால சமுதாய வரலாற்று இயங்குநிலை' தொடர்பாக கோடிட்டுக்காட்டிய மேற்படி கருத்தாக்கத்தையே அக்கால ஏனைய தமிழக மார்க்ஸியர் பலரும் கொண்டிருந்தனர். இவ்வகையில் அக்கால மற்றொரு மார்க்ஸிய சமூகவியல் ஆய்வாளரான டாக்டர் நா. வானமாமலையவர்களின் பார்வையை இங்கு பதிவுசெய்வது அவசியமாகிறது.

'வேட்டையாடும் இனக்குழுவாழ்க்கையும், ஆடுமாடு மேய்க்கும் இனக்குழு வாழ்க்கையும் அழிந்து தனிச்சொத்துரிமையும் அரசும் தேன்றிய வரலாற்றுக்காலம் என்பதை மானிடவியல் நோக்கோடு சங்க இலக்கியத்தைக் காண்போர் அறியலாம். இந்நிலைகளில் தொன்மைச்சமுதாயம் அழிந்து நிலவுடைமை அமைப்புத் தோன்றி யது...'

என்பதாக நா. வானமாமலையவர்களது அப்பார்வை தொடர்கிறது. (பார்க்க: பழந்தமிழ் இலக்கியத்தில் பொருள்முதல்வாதக் கருத் துக்கள் (1970 ஆராய்ச்சி மலர்: 2-இதழ்:1 .ப.14)

மேற்படி இருவருடைய பதிவுகளும் 'சங்கஇலக்கியம் காட்டும் சமுதாயமானது இனக்குழு நிலையிலிருந்து சொத்துரிமைச் சமு தாயமாக மாற்றமடைந்துவந்த காலகட்டச் சமுதாயமே' என்பதை யும் அவ்வகையில் அது, 'நாகரிக வரலாற்றின் ஆரம்பநிலை சார்ந்ததாகவே கொள்ளப்பட வேண்டியது' என்பதையும் உணர்த்தி நிற்கின்றமை வெளிப்படை.

தமிழக மண்ணில் பண்டைக்காலத்தில் பல்வேறு சமூகக்குழுக்கள் வாழ்ந்திருந்தன என்பதும் அவற்றின் வரலாற்றியக்கங்களின் தொடர்நிலையிலேயே சேரர், சோழர், பாண்டியர் என்ற பெயர்க ளிலான அரசகுலங்கள் மேற்கிளம்பின என்பதுமான கருத்துகள் கைலாசபதி, வானமாமலை முதலியோருக்கு முற்பட்ட காலத்திலி ருந்தே தமிழாய்வாளருள் ஒருசாரார் மத்தியில் நிலவிவந்துள்ளன. திரு. கே.என். சிவராஜபிள்ளை(1879-1941), பேராசிரியர் சு. வித்தி யானந்தன்(1924-1989) முதலியோர் தமது எழுத்துகளில் இவ்வகை யிலான கருத்துநிலைகளை உணர்த்தியுள்ளனர். (பார்க்க: K.N. Sivarajapillai, Chronology of Early Tamils-1932p.195, சு. வித்தியா னந்தன், தமிழர் சால்பு-1954. ப. 40)

மேற்சுட்டியவாறாக நிலவிவந்த கருத்துகளை முன்வைத்து சங்ககா லப்பகுதி வரலாற்று நிலையைச் சமூகவிஞ்ஞான நோக்கில் விளக்கிப் பேசமுற்பட்ட முன்னோடிகள் என்ற வகையிலேயே - குறிப்பாக, 'சங்ககாலப்பகுதியை தமிழர் நாகரிக உருவாக்கத்தின் ஆரம்பக்கட்டம் என்பதாக அடையாளப்படுத்திய வகையிலேயே - மேற்படி கைலாசபதி, வானமாமலை முதலியோரின் சிந்தனைகள் இங்கு எமது தனிக்கவனத்துக்கு உரியவாகின்றன.

மேற்சுட்டியவாறான சமூகவியல்சார் வரலாற்றுப்பார்வைகளின் தளத்தில் நின்று கைலாசபதியவர்களால் முன்வைக்கப்பட்ட மேலும் இரு சிந்தனைகளும்கூட இங்கு நமது கவனத்துக்குரிய னவாகின்றன. அவற்றுளொன்று, 'சங்ககால இலக்கியப் படைப்பா-

ளிகளான பாணர், புலவர் முதலியோருக்கும் அக்கால இனக்கு முத்தலைவர்கள், குறுநிலத்தலைவர்கள் மற்றும் முடியுடை மூவேந்தர்கள் ஆகியோருக்கும் இடையில் நிலவிய உறவு பற்றிய-தாகும். இன்னொன்று, 'சங்கப்பாடல்கள் வாய்மொழிப்பாடல்களாக உருவானவை' என்ற கருத்தாக்கமாகும். இவ்விரு அம்சங்கள் பற்றிய சில குறிப்புகள் வருமாறு.

சங்ககாலப் பாணர், புலவர் முதலியோருக்கும் இனக்குமுத்தலைவர்கள், குறுநிலத்தலைவர்கள் மற்றும் முடியுடை மூவேந்தர்கள் ஆகியோருக்குமிடையிலான உறவு பற்றிய பார்வையிலே கைலாசபதியவர்கள் முன்வைக்கும் முக்கியசெய்தி,

'புலவர்களுள் பலரும் மேற்படி தலைவர்களைச் சார்ந்து அவர்களால் ஆதரிக்கப்பட்டு வந்தவர்கள். அவ்வகையில் அத்தலைவர்கள் புரியும் போர்களையும் அத்தொடர்பிலான அழிப்புச் செயற்பாடுகளையுங்கூட 'வீரச்செயல்களாக' விதந்து போற்றவேண்டிய நிலையில் அவர்கள்(புலவர்கள்) இருந்தவர்கள். பலர் அவ்வாறு போற்றிப்பாடியவர்களுங்கூட' என்பதாகும்.

எனவே, 'அவ்வாறான அவர்களைச் சான்றோராக - நற்பண்பாளர்களாக - உயர்த்திப் பேசுவதிலோ அவர்களது ஆக்கங்களைச் சான்றோரிலக்கியம் எனக்கொள்வதிலோ அர்த்தமில்லை' என்பதே கைலாசபதியவர்களின் முடிபான கருத்தாகும். அவருடைய மேற்சுட்டிய 'அழிவும் ஆக்கமும்' என்ற கட்டுரையிலே பெரும்பகுதி மேற்படி அம்சங்களையே விரிவாக எடுத்துரைத்துள்ளது. (பார்க்க: பழந்தமிழர் வாழ்வும்வழிபாடும் -1966-ப.க்-32-43)

'சங்கப்பாடல்கள் வாய்மொழிப்பாடல்களாக உருவானவை' என்ற கருத்தாக்கமானது கைலாசபதியவர்களால் அவரது 'Tamil Heroic Poetry' என்ற Ph.D.பட்ட ஆய்வேட்டிலே முன்வைக்கப்பட்டதாகும். இதுபற்றி இத்தொடரின் 6வது கட்டுரையில் நோக்கியுள்ளோம். கைலாசபதியவர்கள் இக்கருத்தாக்கத்தை முன்வைக்கும் வரையான காலப்பகுதியில், 'சங்கப்பாடல்கள் புலவர்களால் எழுதப்பட்ட ஆக்கங்களே' என்ற கருத்தே நிலவிவந்துளது. அவ்வகையில் கைலாசபதியவர்களுடைய மேற்படி கருத்து புதுமையானதாக அமைந்தது. அக்கருத்தை முழுநிலையில் ஏற்பதில் அக்காலப்பகுதித் தமிழியலாளரிடையில் தயக்கமும் நிலவியது என்பதையும் இங்கு குறிப்பிடுவது அவசியாகும். (இத்தொடர்பிலான மேலதிக விளக்கங்களை பின்னர் கே. பழனிவேலு அவர்களது சங்க இலக்கியம் பாட்டுமரபும் எழுத்துமரபும் என்ற நூல்பற்றிய பகுதியில் விரிவாக நோக்கலாம்.)

மேற்சுட்டியவாறாக தமிழரின் பண்டைய சமுதாயவரலாறு தொடர்பாகவும் அக்கால இலக்கியச்சூழல் தொடர்பாகவும் 1960களில் கைலாசபதி வானமாமலை முதலிய மார்க்ஸியர்களால் தொடக்கி வைக்கப்பட்ட பார்வைகள் மற்றும் அணுகுமுறைகள் ஆகியன தமிழாய்வியலை 'பெருமித உணர்வுநிலை', 'மரபுணர்ச்சி' ஆகிய சார்புநிலைகளிலிருந்து மீட்டெடுக்கும் முயற்சிகளாகவும் அவ்வகையில், 'ஆய்வுச்செயற்பாடுகளுக்கு இன்றியமையாததாகிய 'புற நிலைநோக்கு'க்குக்கு அழுத்தம் கொடுப்பனவாகவும் அமைந்தவை என்பது வெளிப்படை.

இவ்வாறான புறநிலை நோக்கு சமகாலத் தமிழகத்தில் பெற்றிருந்த வரவேற்புக்கு டாக்டர் நா. வானமாமலையவர்களின் தலைமையில் இயங்கிய 'நெல்லை ஆய்வுக்குழு' ஒரு முக்கியசான்று என்பதை முன்னரே நோக்கியுள்ளோம். தமிழகம், ஈழம் என்பவற்றுக்கு அப்பாலான தமிழ்ச்சூழலில் இப்புறநிலைப்பார்வையானது அக்காலத்தில் உள்வாங்கப் பெற்றிருந்தமைக்கு இன்னொரு சான்றையும் இங்கு பதிவுசெய்வது அவசியமாகும். டாக்டர் எஸ். சிங்காரவேலு என்ற தமிழறிஞரின் Social Life of Tamils (Classical Period) என்ற நூலே அச்சான்றாகும். 1966ல் மலேசியப் பல்கலைக் கழகத்தால் வெளியிடப்பட்ட இவ்வாக்கம் புராதன தமிழரின் சமூக வாழ்வை மானிடவியல் நோக்கில் அணுகியதாகும். (தகவல்: க. சண்முகலிங்கம் 'ஆக்க இலக்கியமும் மானிடவியலும்' என்ற கட்டுரை. நூல்: ஆக்க இலக்கியமும் அறிவியலும், இலங்கைப்பல்கலைக்கழக யாழ்ப்பாண வளாக தமிழ்த்துறை வெளியீடு 1977 பக்:10-13)

இவ்வாறாக பண்டைய சமுதாயநிலை, இலக்கியச்சூழல் ஆகியன தொடர்பாக 1960களில் முனைப்புறத் தொடங்கிய புறநிலைப்பார்வைகளும் அணுகுமுறைகளும் அடுத்துவந்த காலங்களிலும் சீரான வேகத்துடன் உயிர்ப்புடன் தொடர்ந்தன என்பதை உறுதி-செய்யும் சான்றுகளாகவே மேற்சுட்டிய முனைவர்கள் கோ.கேசவன், கா. சுப்பிரமணியன், பெ. மாதையன் முதலியோரின் முற்குறித்த எழுத்தாக்கங்கள் திகழ்கின்றன. அக்காரணத்தாலேயே அவை இங்கு நமது கவனிப்பையும் கணிப்பையும் பெறுகின்றன.

மேற்குறித்தவற்றுள் கே.பழனிவேலு அவர்களுடைய சங்க இலக்கியம் பாட்டுமரபும் எழுத்து மரபும் என்ற நூலைத்தவிர ஏனையவை உள்ளடக்க அம்சங்களில் ஒத்ததன்மைகள் கொண்டவையாகும். இவை குறிப்பாக, சங்ககாலத்தின் 'இனக்குழு வாழ்வியலிலிருந்து அரசுநிலை நோக்கியதான வரலாற்றுச்செல்நெறி'யை மையப்படுத்திய பார்வைகளாகும். இவையே நமது முதற் கவனத்துக்குரியனவாகின்றன. பேராசிரியர் கே. பழனிவேலு அவர்களின் ஆக்கமானது இலக்கிய உருவாக்க நிலை தொடர்பானது. அவ்வகையில் அதுமேற்சுட்டியவற்றின் தொடர்ச்சியாகத் தனியாக நோக்குதற்குரியதாகும்.

இனக்குழு வாழ்நிலையிலிருந்து அரசுநிலை நோக்கியதான வரலாற்றுச் செல்நெறியை மையப்படுத்திய ஆய்வு முயற்சிகள் - பொது அவதானிப்பு:

இவ்வகையில் நமது முதற்கவனத்துக்கு வருவது முனைவர் கோ. கேசவன்(1946-1998) அவர்களின் மண்ணும் மனித உறவுகளும் என்ற நூலாகும். பேராசிரியர் க.கைலாசபதியவர்களின் முன்னுரையுடன் 1979ல் வெளிவந்த இவ்வாக்கம் அவருடைய இறப்பின் பின்னர் 2001ல் திருத்திய முதற்பதிப்பாக அச்சேறியுள்ளது. மார்க்ஸிய ஆய்வாளரான கேசவன் அவர்கள் கல்லூரித் தமிழாசிரியராகத் திகழ்ந்தவர். இவர் கலை இலக்கியம் என்பவற்றின் சமுதாயப் பயன்பாட்டில் உறுதியான நம்பிக்கை கொண்டு தீவிரமாக இயங்கி நின்றவருங்கூட.

அவருடைய இந்நூல் 'போரும் புதுமையும்', 'புலவரும் புரவலரும்', 'மாயையும் உண்மையும்', 'மண்ணும் மனித உறவுகளும்' ஆகிய தலைப்புகளிலான நான்கு கட்டுரைகளின் தொகுப்பாகும். முதலிரு கட்டுரைகளின் உள்ளடக்கங்களும் சங்க இலக்கியப் பரப்பை மையப்படுத்தியவையாகும். 'மாயையும் உண்மையும்' என்ற தலைப்பிலான மூன்றாவது கட்டுரையானது பண்டைய தமிழ்ச்சங்கங்கள் பற்றி நிலவி வந்த கருத்தாக்கங்கள் பற்றிய விமர்சனமாகும். எனவே அதுவும் மேற்படி தொடக்ககாலப் பகுதிக்குரியதாகிறது. நான்காவது கட்டுரை, 'மண்ணும் மனித உறவுகளும்' பிற்காலச் சோழர்காலத்தின் பிரமதேயக்கிராங்களின் சமூக அமைப்பு பற்றிய ஆய்வுநோக்காகும். இங்கே மேற்சுட்டிய முதலிரு கட்டுரைகளே 'இனக்குழுநிலையிலிருந்து அரசுநிலை நோக்கிய வரலாற்றியக்க நிலையை மையப்படுத்தியனவாகும். அவையே இங்கு நமது கவனத்துக்கு வருகின்றன.

முதலாவது கட்டுரையானது சங்கத்தமிழர் சமுதாயத்தின் பொருளியல்சார் இயங்குநிலையிலே போர் - வீரம் என்ற அம்சம் வகித்திருந்த முக்கிய பங்கைக் கருத்துள் கொண்ட ஒரு வரலாற்றுப் பார்வையாகும். இவ்வகையில் குறிப்பாக, அக்காலச் சமூகப்போர்களின் காரணங்கள், முறைகள், விளைவுகள் ஆகியவற்றைப் பற்றியே அவர் பேசவிழைந்துள்ளார் என்பதை இக்கட்டுரைத் தொடக்கத்திலேயே (துணைத் தலைப்பாக அமைந்த குறிப்பில்) அவர் உணர்த்தி விடுகிறார். சங்கப்பாடற் பரப்பிலே குறிப்பாக புறநானூறு என்ற தொகுப்பை முக்கிய ஆதாரமாகக் கொண்டே அவரது இவ்வாய்வு அமைந்துளது. இவ்வாய்வில் அவருடைய பார்வை அமைந்துள்ள முறைமையை நோக்குவதற்கு முதலிலே ஆதார நூலான புறநானூறு தொகுப்பின் முக்கியத்துவம் தொடர்பான பொதுவான புரிதலுக்கான சிறு குறிப்பொன்றை இங்கு முன்வைப்பது அவசியமாகிறது.

சங்கநூல் வரிசையிலே 'எட்டுத்தொகை' என்ற பெருந்தொகுப்பில் ஒன்றாகப் பேணப்பட்டு வந்துள்ளதான புறநானூறு என்ற தொகுப்பாக்கம் 400 பாடல்களைக் கொண்டதாகும். சங்க காலப் புறப்பாடற்பரப்பிலே இதற்குரிய முக்கியத்துவம் என்ற வகையிலே குறிப்பிடப்பட வேண்டிய விடயம், பண்டைத் தமிழகத்தின் பல்வேறு நிலச்சூழல்களின் சமூக பண்பாட்டம்சங்களைக் காட்சிப்ப

டுத்தும் தொன்மையான 'பண்பாட்டுப்பிரதி'யாக இது திகழ்கின்றது என்பதாகும். இனக்குழு மாந்தர், குறுநிலத்தலைவர்கள் மற்றும் மூவேந்தர்கள் காலகட்ட சமூகத்தினர் ஆகிய பலவகையினரின் வாழ்வியல் அம்சங்களை இத்தொகுப்பின் பாடல்களில் தரிசிக்க முடியும். எட்டுத்தொகை என்ற பெருந்தொகுப்பிலுள்ள ஏனைய புறத்திணை ஆக்கங்களான பதிற்றுப்பத்து, பரிபாடல் மற்றும் பத்துப்பாட்டு என்ற பெருந்தொகுப்பிலுள்ள ஆற்றுப்படைகள், மதுரைக்காஞ்சி, பட்டினப்பாலை முதலான எந்த ஆக்கங்களுக்கும் இச்சிறப்பில்லை. அவை ஒவ்வொன்றும் குறித்த சில அரசர்கள், தலைவர்கள் பற்றியும் குறித்த சில சூழல்களின் வாழ்வியல்கள் மற்றும் சமய நம்பிக்கைகள் பற்றியுமான தனித்தனிப் பார்வைகளாக உருவானவையேயாகும். அவ்வகையில் சங்ககாலத் தமிழ் நிலப்பரப்பு முழுவதையும் தழுவிய பொதுவாழ்வியல் தொடர்பான பலநிலைத் தரவுகளைப் பெறவிளைவோருக்குப் புறநானூறு என்ற இவ்வாக்கமே முதன்மையான சான்றாதாரமாகப் பயன்பட்டு வந்துள்ளது - பயன்பட்டு வருகின்றது. இவ்வகையில் முனைவர் கேசவன் அவர்கள் இவ்வாக்கத்தை மையப்படுத்தி தமது ஆய்வை மேற்கொண்டமை சாலப் பொருத்தமானதே.

மேற்படி புறநானூறு தொகுப்பின் பாடல்களின் வைப்பு முறையானது திட்டப்பாங்காக அமைந்ததன்று. அதாவது அப்பாடல்களின் உள்ளடக்க அம்சங்களைத் தொடர்புறுத்தித் தொகுத்தறிவதற்கான முறையில் அத்தொகுப்பாக்கம் கட்டமைக்கப்பட்டிருக்கவில்லை என்பதே இங்கு தெரிந்து கொள்வேண்டிய செய்தியாகும். இதனால் அதிலுள்ள பாடல்கள் பாடப்பட்டிருக்கக்கூடிய காலகட்டங்களைக் கண்டறிவதும் பொதுப்பார்வையிலே சாத்தியமில்லை. பாடப்பட்டோர் மற்றும் பாடுபொருள்கள் ஆகியவற்றை நுனித்து நோக்குவதனூடாகவே அதன் அமைப்புமுறை மற்றும் பாடல்கள் எழுந்த காலங்கள் ஆகியன பற்றிய சிலமுடிபுகளுக்கு ஆய்வாளர்கள் வர முடியும். கேசவன் அவர்கள் இவ்வாறான ஒரு பார்வையை முன்வைத்தே இந்நூலிலுள்ள பாடல்கள் எழுந்த கால கட்டங்களை அடையாளங்காண முற்பட்டுள்ளார்.

2 முதல் 85 வரையிலுள்ள பாடல்களும் பின்னர் 196-225 வரையான பாடல்களும் மூவேந்தர்களான சேர, சோழ, பாண்டிய மன்னர்களைப் பாடுபவை. 87முதல் 181வரையான பாடல்களில் குறுநில மன்னர்கள் பாடப்பட்டுள்ளனர். 368 முதல் 400 வரையான பகுதியில் மூவேந்தர்கள் குறுநிலமன்னர்கள் ஆகிய இருசாரார் பற்றிய பாடல்களும் கலந்து இடம்பெற்றுள்ளன. 112-120, 217-227, 230-243 ஆகிய எண்கள்சார் பாடல்கள் பொதுவாக 'கையறுநிலை' என்பதான துன்ப-துயர உணர்வுசார் பாடல்களாக அமைந்தவையாகும்.

இவ்வாறாக, பாடப்பட்டோர் மற்றும் பாடுபொருள் ஆகியவற்றை முன்வைத்து அப்பாடல்களின் வைப்புமுறையை நோக்கி வந்த கேசவன் அவர்கள் 269-358 வரையான எண்களுள்ள பாடல்கள் ஏனைய பாடல்களிலிருந்து சற்று விலகிக் காணப்படுகின்றன என்பதான அவதானிப்பை முன்வைக்கிறார். அதனடிப்படையில் அவை பழம்பாடல்களாக இருக்கலாம் எனவும் ஊகிக்கிறார். இதனை அவருடைய கூற்றாகவே நாம் இங்கு நோக்கலாம்.

'புறநானூற்றின் மைய நீரோட்டத்தில் 269 முதல் 358 வரையிலான பாடல்கள் கொஞ்சம் விலகிக் காணப்படுகின்றன. பழம் பாடல்கள் சிலவற்றுள் விரவிக் காணப்படும் ஆரிய நம்பிக்கை, ஆரிய வழிபாட்டுக் கருத்துகள் அங்கே சிறிதுமில்லை. வீரமய மான போட்டி உணர்வுகளும் வீரச்சாவுகளும் அங்கே மலிந்து கிடக்கின்றன. அங்கே இரத்தக்கலப்பு உறவு முறைகளின் பரிபூரணமான சிறப்பைக் காண்கிறோம்.... இவைகள் அரசு என்ற அமைப்பே தோன்றாத அல்லது மிகக்கருவில் இருக்கும் நேரத்தில் பழமையான கூட்டுச் சமுதாயத்தின் வாழ்நெறிகளைத் தெரிவிக்கும் பாடல்களாக இருக்கலாம். இயற்கையின் மடியிலே தவழ்ந்து, கிடைத்த பொருள்களையெல்லாம் எல்லோரும் பங்கிட்டுக் கொண்ட சமுதாயத்தின் பாடல்களாக இருக்கலாம்...'

(மண்ணும் மனித உறவுகளும். திருத்திய முதற் பதிப்பு-2001.பக்.19-.20)

இவ்வாறு தொடர்கிறது அவருடைய ஊகம். (இங்கே 'பழமையான கூட்டுச்சமுதாயம்' என அவர் சுட்டுவது பண்டைய இனக்குழு நிலைச் சமுதாயத்தையேயாகும்)

மேற்சுட்டியவாறான ஊகத்தின் தளத்தில் நின்றே அவர் இக்கட்டுரையின் மையப்பொருளை விரித்துச் செல்கிறார். அவ்வகையில் அவர் புறநானூறு தொகுப்பின் பழைய பாடல்கள் என ஊகிக்கப்படுபவை புலப்படுத்தி நிற்கும் சமூக நிலைகளுக்கும் அரசுநிலை தேன்றிவிட்ட காலப்பாடல்கள் - அதாவது மூவேந்தரைப் பாடும் பாடல்கள் - காட்டும் சமூகநிலைகளுக்கும் இடையிலான விடயங்களை ஒப்பியல் நோக்கில் எடுத்துரைத்துள்ளார். குறிப்பாக, கூட்டுச்சமூக வாழ்விலே நடந்த போர்களுக்கும் அரசுகள் உருவாகிய நிலையிலே நடந்த போர்களுக்குமிடையிலான வேறுபாடுகளுங் கூட அவரால் தெளிவாக எடுத்துரைக்கப்பட்டுளது.

'... கூட்டுச்சமூகத்தில் தங்கள் சொந்த உடன்பிறப்பாளனோடு உரிமைக்காகப் போராட்டம் நடத்திய அசிங்கத்தைக் காணமுடியாது. தன் சகோதரனைக் கொன்ற எதிரியைப் பழிவாங்கத் துடிக்கும் வீரனையே காண்கிறோம்(புறம் 300,304) ஆனால் இந்தக் கூட்டுச் சமூக அமைப்புக்குப் பின்வந்த அமைப்புகளிலே இதைப்பற்றிக் கவலையில்லை. யாரோடு வேண்டுமானாலும் உரிமைக்கு மோதிடலாம். அவர் உற்றார் உறவினராக இருக்கலாம். அன்னியனாகக் கூட இருக்கலாம். சொந்தத் தந்தையாகவோ தமையனாகவோகூட இருக்கலாம்... கோப்பெருஞ்சோழனுக்கும் அவன் பரம்பரையினருக்கும் உரிமை காரணமாக மோதல்கள் எழலாம். கரிகாலனும் அவன் தாயத்தினரும் போர்செய்யலாம். அத்திமாலையணிந்த நலங்கிள்ளிக்கும் நெடுங்கிள்ளிக்கும் இடையே உரிமை காரணமாகச் சண்டை மூளலாம்...' எனத் தொடர்கிறது, இந்த ஒப்பீட்டுரை.(மேற்படி பக்.24-25)

கூட்டுச் சமுதாய வாழ்வில் உறவுகளுக்குள் உரிமைசார் மோதல்கள் நிகழ்வதற்கான தேவைகள் ஏற்படுவதில்லை. எனவே புறநானூற்றின் பழம்பாடல்கள் என ஊகிக்கப்படுபவற்றுள் அவ்வாறான சான்றுகள் இல்லை என்கிறார் கேசவன். ஆனால் சொத்துரிமைச் சமுதாயம் உருவாகிவிட்ட காலப்பகுதியிலேயே அந்த உடைமைகளைப் பாதுகாக்கும் நோக்கில் உறவுகளுக்குள்ளும் போர்கள் நிகழவேண்டிய தேவைகளும் ஏற்படுவது பொதுவான சமுதாய வரலாற்று நியதியேயாம். இதனையே கேசவன் புறநானூற்றின் மூவேந்தர் தொடர்பான பாடல்களின் ஊடாக நமது கவனத்துக்கு

கோலங்கள்

அரங்கேற்றம், கலைநிகழ்ச்சி, திருமணம், பூப்புனித நீராட்டு போன்ற வைபவங்களுக்கு கோலம் போட்டு அலங்கரிக்க, Floor Decoration for Arangetram Wedding and other Cultural Functions.

Bhamini:

647 294 0736,

416 491 6057.

முன்வைக்கிறார்.

இனக்குழுத் தலைவர்களுக்கும் பின்னாளில் அரசர்களாக எழுச்சி பெற்றவர்களுக்கும் இடையிலான சமூகமதிப்பு நிலையிலான வேறுபாட்டம்சங்களை உணர்த்தவல்ல சில சான்றுகளையும் அவர் எடுத்துக்காட்டியுள்ளார்.

'... அரசர்களுக்கென்று, பண்டையகூட்டுச் சமுதாயத் தலைவர் களுக்கு இல்லாத பெருமைகளெல்லாம் இலக்கியத்தில் காணப் படுகின்றன. இவர்களுக்குத்தான் முரசு, வெண்கொற்றக் குடை, அடையாளப்பூ பெறும் தகுதி கொடுக்கப்பட்டது. பண்டைய சமுதாயத்தலைவர்களுக்கு இவையெல்லாம் கிடையாது. முரசு - காவல் முரசு - வேந்தர்களுக்கே உண்டு...'

எனத்தொடர்கிறது இந்த ஒப்பீடு. இந்த ஒப்பீட்டிலே புறநானூற் றின் சான்றுகள் என்றவகையில் 109,122,

137, 156 என ஒரு நீண்ட எண்வரிசையைப் பதிவு செய்துள்ளார். இவற்றுடனமையாது எட்டுத்தொகை நூல்களிலொன்றான குறுந் தொகையின் 380ம் பாடலையும் ஒரு சான்றாகக் காட்டியுள்ளார். (மேற்படி பக.35-36) முனைவர் கேசவன் அவர்களுடைய பார்வை, அணுகுமுறை மற்றும் எடுத்துரைப்பு ஆகியவற்றைப் புரிந்து கொள்வதற்கான சில குறிப்புகள் மட்டுமே இங்கு முன்வைக்கப்பட் டன.

கேசவன் அவர்களது 'புலவரும் புரவலரும்'என்ற தலைப்பிலான இரண்டாவது கட்டுரையும் மேற்சுட்டிய புறநானூறு தொகுப்பை மையப்படுத்திய பார்வையேயாகும். சங்ககாலத்தின் புலவர் சமூ கத்துக்கும் அக்கால ஆளும் வர்க்கத்தினருக்கும் இடையில் நில விய உறவுநிலை பற்றிய பார்வையேயாகும். பேராசிரியர் கைலாச பதியவர்கள், 'அழிவும் ஆக்கமும்' என்ற கட்டுரையிலே சங்ககா லப் புலவர்களுக்கும் அக்கால ஆளும் வர்க்கத்தினருக்குமிடையி லிருந்த உறவுநிலை என்ற அம்சத்துக்கு முக்கிய இடமளித்திருந் தார் என்பதை மேலே நோக்கியிருந்தோம். அவ்வாறு கைலாசபதி யவர்களால் நோக்கப்பட்டிருந்த பொருண்மையையே கேசவன் அவர்கள் மேலும் அகலப்படுத்தி விளக்கிப்பேச முற்பட்டுள்ளார். 'புலவர்களின் உலகியல் வாழ்க்கை, 'புலவர்கள் அரசர்களுடன் முரண்படல்', 'புலவர்களின் பிரச்சாரப்பணி', 'புலவர்களும் போர்க ளும்', 'புலவர்களும் அறிவுரையும்'. 'புலவர்கள் பெற்ற பரிசில் கள்' என்பனவாக மேற்படி பொருண்மையை அவர் அகலப்படுத் திக் கொண்டுள்ளார்.

கைலாசபதியவர்களின் மேற்படி 'அழிவும் ஆக்கமும்' கட்டுரை யானது, 'அக்காலப்புலவர்கள் ஆள்வோரைச் சார்ந்தியங்க வேண் டிய நிலையிலிருந்தமையைச் சான்றுகளுடன் சுட்டியுணர்த்தியது. கேசவனவர்களது இக்கட்டுரையும் ஏறத்தாழ அதே தொனிப்பொ ருள் சார்ந்ததேயாகும்.

'மொத்தத்தில் பெரும்பாலான புலவர்கள் அரசுகளின் நிலைபேற் றுப் போராட்டத்தில் தம்மை அறிவுபூர்வமாகவும் உணர்வுபூர்வமா கவும் முழுமையாகவே ஐக்கியப்படுத்திக்கொண்டு, தவிர்க்கவிய லாத அம்சங்களை உட்கிரகித்து மன்னனிடத்தில் சரியான இடம் தேடிப் போராடியுள்ளார்கள் வெற்றிபெற்றுள்ளார்கள்' இவ்வாறு அரசர்களுடன் தொடர்பு கொண்டிருந்த புலவர்கள் நிரந்தரமா கவே அவைகளில் வீற்றிருக்க ஆரம்பித்தனர்.'

என அமைந்துள்ள நிறைவுக்குறிப்பானது (மேற்படி.ப.84) இத னையே உணர்த்தி நிற்கிறது.

அவ்வகையில் இக்கட்டுரையானது கைலாசபதியின் மேற்படி கட் டுரையின் தொடர்ச்சியும் வளர்ச்சியுமாகக் கணிக்கப்பட வேண்டிய-தாகிறது. சங்ககால சமூக வரலாற்றின் இயங்குநிலையைப் புற நானூறு தொகுப்பை மையப்படுத்தி நின்று தரிசிக்கவிழைவோர் வாசிக்கவேண்டிய மிகவும் பயன்படவல்ல தரவுகளைக் கொண்ட னவாக மேற்படி 'போரும் புதுமையும்', 'புலவரும் புரவலரும்', ஆகிய இரு கட்டுரைகளும் திகழ்கின்றன.

அடுத்து இங்கு நமது கவனத்துக்கு வருவது, 1982ல் வெளிவந்த தான பேராசிரியர் முனைவர் கா.சுப்பிரமணியன் அவர்களது சங்க காலச் சமுதாயம் என்ற நூலாகும். இது, 'சங்க இலக்கியத்தில் இனக்குழுவாழ்க்கை', 'சங்கால அரசர்', 'நாண்மகிழிருக்கை', 'சங்ககால வாழ்க்கையில் மந்திரம், சமயம், ஆகியவற்றின் பங்கு', 'ஆற்றுப்படை - ஒரு சமுதாய வரலாற்று விளக்கம்' ஆகிய ஐந்து கட்டுரைகளின் தொகுப்பாகும். இக்கட்டுரைகள் சங்ககா லத்தை மையப்படுத்திய நுண்ணாய்வுகள் என்பதை அவற்றின் தலைப்புகளே தெளிவுறுத்துவன. (நாண்மகிழிருக்கை - நாள் - மகிழிருக்கை. என்பது அரசர் தலைவர் முதலியோர் நாள்தோறும் தமது உடன் கூட்டத்தினருடன் அமர்ந்திருக்கும் அரசவை. பார்க்க: மலைபடுகடாம்-76ம்அடி.)

'சங்க இலக்கியத்தில் இனக்குழுவாழ்க்கை' முதலாவது கட்டுரை யிலே அவர், 'சங்ககாலமானது வரலாற்றிலே பெரும் சமூகமாற்றம் நிகழ்ந்த காலம்' என்பதான முற்கோளை முன்னிறுத்தி அக்கால இனக்குழு வாழ்க்கை தொடர்பான சான்றுகளை எடுத்துக் காட்டி யுள்ளார். ஏனையகட்டுரைகளும் தத்தம் பொருண்மைசார்ந்த அம் சங்களைச் சிறப்பாகவே எடுத்தரைத்துள்ளன.

இந்நூலின் சிறப்பம்சம் என்ற வகையிலே இங்கு குறிப்பிட வேண் டிய முக்கிய விடயம் மானிடவியல் பார்வை சார்ந்து இது அணு கப்பட்டுள்ளமையாகும். இவ்வாறான இந்நூலின் அணுமுறைச் சிறப்பைப் பேராசிரியர் ஆ. தனஞ்செயன் அவர்கள் 'தமிழ் இலக் கிய மானிடவியல் தோற்றமும் அதன் முன்னோடிகளும்' என்ற தமது கட்டுரையிலே (உங்கள் நூலகம் ஜனவரி-2015)மதிப்பிட்டுள் ளார்.

அதில் அவர் முதலிலே இலக்கியமானிடவியல் என்ற அணுகு முறை பற்றி விவரிக்கிறார். அதனையடுத்து அவ்வணுகுமுறையா னது தமிழிலே பயின்றுவந்த வரலாற்றை - குறிப்பாக, பேராசிரியர் க. கைலாசபதியவர்கள் தமது 'பேய்மகளிர்' என்ற கட்டுரையில் (நூல்: பண்டைத்தமிழர் வாழ்வும் வழிபாடும் -1966) அவ்வணுகு முறை பயின்றுள்ளமையை அடையாளங்காட்டுகிறார். அவ்விளக் கங்களைத் தொடர்ந்தே பேராசிரியர் கா. சுப்பிரமணியன் அவர்க ளது சங்ககாலச் சமுதாயம் என்ற ஆக்கம் தொடர்பான மதிப் பீட்டை அவர் முன்வைக்கிறார். அந்த மதிப்பீட்டின் ஒரு பகுதி வருமாறு:

'குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல் ஆகிய ஐந்து நிலங்களில் வாழ்ந்த மக்களின் நடத்தைமுறைகளைப் பற்றிப்பே சும் சங்கப்பாடற் செய்திகளை இனக்குழுப்பண்பாடுகளில் காணப் படும் நடத்தை முறைகளோடு ஒப்பிட்டு நோக்குவதன் வாயிலாக அவை ஒவ்வொன்றும் எவ்வாறு பண்டைய இனக்குழுவாழ்க்கை யின் வெளிப்பாடுகளாக அமைகின்றன என்பதை கா. சுப்பிரமணி யன் நிறுவுகிறார். அவ்வகையில் பாடல்கள் பிரதிபலிக்கும் மக்க ளின் நம்பிக்கைகள், சடங்குகள் போன்றவை மந்திரச் சடங்கு, வனச்சடங்கு, மந்திரம் வழிபாடு ஆகிய இரண்டும் கலந்த சடங்கு, வேட்டைச் சடங்கு என்பனவாக அமையுமாற்றை விளக்குகிறார்.

தொல்பழங்குடிச் சமயமரபான குலக்குறியியலை, சங்கப்பாடல் கள் பிரதிபலிப்பதையும் விளக்குகிறார். பொதுவாக இனக்குழுப் பயன்பாட்டில் ஆவியியம், உயிரியக்கொள்கை (nimatism)குலக்கு றியியல் முதலிய தொல்பழஞ் சமயவடிவங்களும் ஏனையபல மர புகளும் ஒருங்கிணைந்து காணப்படும் இனக்குழுப்பண்பாட்டைச் சங்கப்பாடல்கள் பிரதிபலிப்பதைக் கொண்டு, பண்பாட்டிடை ஒப் பாய்வுக் கண்ணோட்டத்தில், 'சங்க இலக்கியத்தில் இனக்குழு வாழ்க்கை, (பக்.9-53), சங்ககாலச்சமுதாய வாழ்வில் மந்திரம், சம யம் ஆகியவற்றின் பங்கு ஆகிய இரண்டு கட்டுரைகளும் தர்க்க ரீதியாக விவாதித்துள்ளன. இந்த இரண்டு கட்டுரைகளிலும் இழையோடும் மானிடவியல் அணுகுமுறையின் வாயிலாகப் பேரா சிரியர் கா.சுப்பிரமணியன் தமிழில் இலக்கியமானிடவியல் தோன்று வதற்கு வித்திட்டவர்களில் ஒருவராகத் திகழ்கிறார்.'

பேராசிரியர் ஆ.தனஞ்செயன் அவர்களின் இம்மதிப்பீடே பேராசிரி யர் கா. சுப்பிரமணியனின் இந்நூலின் தகைமையை உணர்த்துதற் குப் போதுமானதாகும்.

(தொடரும்)

subramanian.n@thaiveedu.com

FOR SALE/ LEASE

FOR ALL YOUR REAL ESTATE NEEDS

கனவு இல்லம்

கைகளில் வர...

உங்கள் வீடு விற்பனை முகவர்...

மேல்நிலையாக்கம் (Sanskritization)

- க. சண்முகலிங்கம்

தனிநபர்களும், குழுக்களும் சமூகத்தில் வகிக்கும் இடம் அல்லது அந்தஸ்தில் ஏற்படும் மாற்றத்தைச் சமூக அசைவியக்கம் என்பர். சமூகம் வரன்முறை அமைப்புடையதாயும் உயர்வு தாழ்வு என்னும் பேதம் உடையதாயும் உள்ளது. சமூகத்தின் கீழ்ப்படியில் இருந்து உயர்படிகளை நோக்கிய மாற்றத்தை கூட்டாக ஒரு குறித்த சமூகக்குழுவும் பெறுதல் இயலும். அவ்வித மாற்றம் சமூகத்தின் பல்வேறு குழுக்களின் சார்புநிலை அந்தஸ்தில் மாற்றத்தை உண்டாக்கும்.

நவீனகாலத்தில் எமது நாட்டிலும் தென்னாசியாவின் பிறநாடுகளிலும் சமூக அசைவியக்கம் முன்னரில்லாத துரிதகதியில் செயற்பட்டது. இதன் பிரதான உந்துசக்தி மேற்குமயமாதல் (Westernization) என்பது வெளிப்படை. இதையே நவீனமயமாதல் (Modernization) என்றும் குறிப்பர்.

மேற்கத்தைய தொடர்புக்கு முன்னர் இந்திய சமூகம் மாற்றமின்றி சமூக அசைவியக்கமின்றி நிலைத்திருந்ததாகக் கூறமுடியுமா? மேற்குமயமாதலிற்கு முற்பட்டதான மேல்நிலையாக்கம் என்னும் செயல்முறை இந்திய சமூகத்தில் நிகழ்ந்து வந்தது. அது இன்றும் செயல்படுகிறது. அதனை 'சான்ஸ்கிறிற்ரைசேசன்' (Sanskritization) என்ற கருத்தாக்கம் மூலம் விளக்கியுள்ளார் எம்.என். சிறிநிவாஸ் என்னும் இந்திய சமூகவியலாளர். தமிழில் இதனை 'மேல்நிலையாக்கம்' எனக் குறிப்பிடலாம். மேல்நிலையாக்கம் சமூக அசைவியக்கத்தின் உடன் நிகழ்வான பண்பாட்டு மாற்றத்தையே (Cultural Change) குறிக்கிறது.

இந்துமதப் பண்பாட்டின் முக்கிய சில கூறுகளை பகுத்தறிந்து இனம் கண்டுகொள்ள இது நமக்கு உதவும்.

'The Cohesive Role of Sanskritization' என்ற தலைப்பில் எம்.என். சிறிநிவாஸ் எழுதிய பழைய கட்டுரை ஒன்றினைத் தழுவி எமது கண்ணோட்டத்தில் அவரின் இக்கருத்தாக்கத்தை இங்கு தந்துள்ளோம். இக்கட்டுரை 'India and Ceylon-Unity and Diversity' (Ed. Philip Mason), 1967) என்ற நூலில் உள்ளது.

தாழ்நிலையில் உள்ள இனக்குழு (Tribe), சமூகக்குழு அல்லது சாதி தன்னிலும் மேல் நிலையில் உள்ள உயர் சமூகக் குழாத்தின் பழக்க வழக்கங்கள், சடங்குகள், நம்பிக்கைகள், மத வழிபாட்டு முறைகள், சிந்தனைப் பாங்குகள் ஆகியவற்றைக் கடைப்பிடித்தலே சன்ஸ்கிறிற்றைசேசன் அல்லது மேல்நிலையாக்கம். மேல்நிலைப் பண்பாட்டை சமஸ்கிருதம் என்ற சொல் குறிக்கின்றது. பிராமணர் சமூகமும் வடமொழிசார் பண்பாடும் இந்துமதப் பாரம்பரியத்தில் மேல்நிலைப் பண்பாட்டைச் சுட்டி நின்றதால் சன்ஸ்கிறிற்றைசேசன் என்ற சொற்புனைவு மேல் நிலையாக்கத்தை விளங்குவதற்குப் பொருத்தமாயுள்ளது. தாழ்நிலையில் இருந்த சமூகக் குழுவின் எழுச்சி வெறுமனே பண்பாட்டு நிலைப்பட்ட உயர்ச்சி அன்று. குறித்த சமூகக் குழுவின் மேல் நோக்கிய இடப் பெயர்வை, சமூக அசைவியக்கத்தை அது குறிக்கும். இவ்வித இடப்பெயர்ச்சி இரு காரணங்களால் ஏற்படலாம்.

- சமூகக் குழுவொன்றின் பொருளியல் அந்தஸ்தில் ஏற்படும் மாற்றம். முன்னேறிய விவசாய உற்பத்தி முறையை மேற்கொள்ளும் இனக்குழுமம் ஒன்று உணவு சேகரிக்கும் அல்லது வேட்டையாடும் வாழ்முறையில் இருந்து உயர்ச்சியடைவதை உதாரணமாகக் குறிக்கலாம்.
- ஒரு சமூகக் குழு அல்லது குலம் சடுதியாக அரசியல் பலம் பெற்ற குழுவாக மாறுதல். புதிதாகக் கிடைத்த அரசியல் பலம் அக்குழுவை சமூக ஏணிப்படியில் உயர்த்திவிடும்.

இவ்விரு காரணங்களும் ஒன்றிணைந்தும் ஒரு குழுவின் உயர்ச்சிக்குத் துணையாகச் செயற்படலாம். குழுக்களின் இத்தகைய எழுச்சி அவற்றிற்குத் தம்மைப் பற்றிய புதிய தன் உணர்வை உருவாக்கும். சமயச்சார்பற்ற மட்டத்தில் அதாவது பொருளியல் அரசியல் தளத்தில் ஏற்படும் இந்த எழுச்சிக்கு மதநிலைப்பட்ட அங்கீகாரம் வழங்கப்படவேண்டும். அந்த அங்கீகாரம் எப்படிக் கிடைக்கிறது? ஒரு இனக்குழுவாக அல்லது சமூக அந்தஸ்தில் கீழ்ப்பட்ட சாதியாக இருந்து பொருளியல் அல்லது அரசியல் பலம் காரணமாக சமூக ஏணியில் உயர்ந்து செல்லும் பொழுது அச்சமூகக் குழுவின் குலதெய்வங்களும் வணக்க முறைகளும் ஒரு இனக்குழுவின் வணக்கமுறை என்ற நிலைமாறி இந்து மதத்தின் உயர் நெறிக்குள் (Great Tradition) ஓர் இடத்தைத் தேடிக் கொள்கின்றன. உயர் அந்தஸ்துக்குப் பொருத்தமான உயர் பண்பாட்டை அச்சமூகக் குழு தழுவிக்கொள்கிறது.

உயர் சாதிகள், சமூகத்தின் மேற்தட்டினர், மேலோர்கள் (Elites) தமது பண்பாட்டை உயர்ந்ததாகவும் மேன்மையுடையதாகவும் கருதுவர். சமூகத்தின் கீழ் நிலையில் உள்ளோர் இந்தப் பண்பாட்டை ஏக்கத்துடன் பார்ப்பதுண்டு. இதைத் தமதாக்கிக் கொள்ளும் ஆவல் சமூக அந்தஸ்தில் உயரும் போது அவர்களிடம் உண்டாகும். இது ஒரு கௌரவப்பிரச்சினையும் ஆகும். தாழ்ந்தோர், உயர் குலத்தாரின் பழக்கவழக்கங்கள், உடைகள், பண்பாடு ஆகியவற்றை பின்பற்றவும் தமதாக்கிக் கொள்ளவும் முனையும் பொழுது அதற்கு எதிராக வன்முறைகளும் ஏற்படுவதுண்டு. இத்தகைய தடைகளையும் மீறி மேல்நிலையாக்கம் இந்திய சமூகத்தில் ஏற்பட்டு வந்துள்ளது.

மேல்நிலையாக்கம், பழமையானதும் பன்முகப்பட்டதுமான பண்பாட்டுச் செயல்முறை. மேல் நிலையாக்கத்தின் தாக்கத்தை மொழி, இலக்கியம், இசை, நடனம், நாடகம், சடங்கு, மதம், வாழ்க்கை முறை ஆகிய எல்லாவகைப் பண்பாட்டு அம்சங்களிலும் காணலாம். மதக்கொள்கை, வழிபாட்டு முறை, சமய அனுட்டானம் ஆகியவற்றிற்கு மட்டுமன்றி பண்பாட்டின் எல்லா அம்சங்களிற்கும் விஸ்தரிக்கப்படக் கூடியது இது. ஐயனார், வைரவர், காளி போன்ற தெய்வ வணக்கமுறைகள் கிராமிய மக்களிடம் பரவலாக உள்ளன. நகரங்களின் சேரிகளில் வாழும் ஏழைகளும் இத்தெய்வங்களைப் போற்றுவர். சிவன், முருகன், விநாயகர் முதலிய கடவுளரின் கோவில்கள் ஆகம விதிகளின்படி இயங்குபவை. மதக்கிரியைகளை, கோட்பாடுகளை நன்கு கற்ற அந்தணர்களால் நித்திய வழிபாடுகள் இக்கோவில்களில் செய்யப்படும். உயர்நெறியை பின்பற்றுவோரின் கோவில்கள், நாட்டார் தெய்வக் கோவில்கள் என்ற வேறுபாடு உள்ளது. மலைநாட்டின் நகரப்பகுதிகளில் உள்ள கோவில்கள் தோட்டங்களில் உள்ள கோவில்களி

லிருந்து முற்றிலும் வேறுபட்டவை. இந்தப் பண்பாட்டு இடைவெளி மதத்தில் மட்டுமல்ல இசை, நடனம், நாடகம், இலக்கியம் ஆகிய வற்றிலும் கூட உண்டு. காத்தவராயன் கூத்து, பரதநாட்டியம், நையாண்டி மேளம், கர்நாடக இசை என்பன ஒன்றில் இருந்து மற்றது அந்தஸ்து பேதம் கொண்டிருப்பதன் அடிப்படைக்காரணம் யாது? சமூகக் குழுக்களின் மேலாதிக்கம் தனித்து அரசியல் பொருளியல் தளங்களில் மட்டும் செயற்படுவதில்லை. பண்பாட்டு மேலாதிக்கம் என்ற இன்னோர் அம்சமும் உள்ளதென்பதை சிறி நிவாஸின் கருத்தாக்கம் எமக்குத் தெளிவுபடுத்துகிறது.

இந்திய வரலாற்றில் அதன் சமூக பரிணாமத்தில் மேல்நிலையாக் கம் வகித்த பங்கினை விளக்கும் பொழுது இந்து மதத்தின் தனித்தன்மையான சிறப்பியல்புகள் சிலவற்றை சிறிநிவாஸ் சுட்டிக் காட்டுகின்றார். இந்து மதத்தின் இவ்வியல்புகளில் முக்கியமானது அதன் பல்லினத் தன்மை (Diversity) எனலாம். இந்து மதம் பல் லினப்பட்ட வணக்க முறைகளின் இறுக்கமற்ற கூட்டமைப்பாக (A Lose Confederation of Innumerable Cults) உள்ளது. இந்த ஒருங் கிணைப்பிற்கான நூலிழைதான் மேல்நிலையாக்கம். கிராமியத் தெய்வங்கள், சாதித் தெய்வங்கள், ஒரு குலத்தின் மூதாதையரை தெய்வமாக உயர்த்தி வழிபடும் வணக்கமுறைகள் முதல் சிவன், விஷ்ணு, பிரம்மா, பார்வதி வரை எண்ணிறந்த தெய்வங்களும் வழிபாட்டு முறைகளும் இந்து மதத்தில் உள்ளன. இதனால் சமூக அசைவியக்கத்தின் பயனாக எழும் பண்பாட்டு மாற்றம் இலகு வாகச் செயற்படுகிறது.

இந்து மதத்தின் மூலதத்துவம் இதுதான் என்று வரையறுப்பது கடினம். கத்தோலிக்க மதம் போன்று ஒருங்கிணைக்கப்பட்ட அதி காரக் கட்டமைப்பு அதற்கு இல்லை. வழிபாட்டிற்காக யாவரும் ஒன்று கூடும் கட்டாயம் இல்லை. சமய மாற்றத்தை நோக்காகக் கொண்டு உழைக்கும் குருமார் இல்லை. இதனால் அது வரை யறையற்ற மதமாக இருந்து வந்துள்ளது.

இந்து மதத்தின் பல கடவுளர் வணக்கமுறை மேல்நிலையாக் கத்தை இலகுபடுத்தியது. அதில் பல கடவுளர் வணக்கம் இருந்த போதும் முழுமுதற் கடவுள் ஒருவர் உள்ளார் என்னும் கருத்து, 'கடவுள் ஒருவரே அவரைப்பல பெயர்களால் அழைக்கிறோம்' என்ற கூற்றால் வெளிப்படுகிறது. இது பல்வேறு பண்பாடுகளின் சங்கமத்திற்கு இடம் தருகின்றது. ஒரு தெய்வத்தை வணங்கும் போது கூட அத்தெய்வத்தின் பலவித அம்சங்களையும் போற்றித் துதிக்கும் மரபு உள்ளது. 108 மந்திரங்களை அல்லது 1008 மந்தி ரங்களை உச்சரிக்கும் போது ஒரு தெய்வத்தின் பல்வேறு இயல்பு களும் குணங்களுமே போற்றித் துதிக்கப்படுகின்றன. இதுவும் பல கூட்ட மக்களினதும் வழிபாட்டு முறைகள் ஒன்று சேரவும் அங்கீகா ரம் பெறவும் வாய்ப்பு அளிக்கின்றது. பல கடவுளர்களிடையே உள்ள உறவுப் பின்னல் இந்து மதத்தின் தனித்தன்மைகளில் ஒன்று. சிவனின் மனைவி பார்வதி முருகனும் விநாயகரும் அவர்க ளின் பிள்ளைகள் எனப் போற்றப்படுவர். தெய்வங்களிடையே ஒரு வேலைப் பகுப்பும் கூட உண்டு. விக்கினங்கள் நீக்குபவன் விநா யகன். கல்வியின் தெய்வம் சரஸ்வதி. இவ்விதம் ஒவ்வொரு தெய் வங்களின் குணங்கள், இயல்புகள், தொழில்கள் வேறுபடுகின்றன.

கடந்த காலத்தை விட சமகால வரலாற்றில் மேல் நிலையாக்கம் ஒரு வகையில் கூடிய முக்கியத்துவம் பெற்றுள்ளதென்று கூற லாம். ஏனெனில் மத்திய கால இந்தியாவில் மேல் நிலையாக்கம் படிப்படியாகவும் மெதுவாகவும் ஏற்பட்டது. கீழ்ப்படியில் உள்ள மக்களுக்கு உயர்ச்சிக்கான வாய்ப்புக்கள் அரிதாகவே இருந்தன. சமூகத்தின் நோக்கு எல்லைகள் குறுகியவை. பொருளியல் மாற் றம் மந்த கதியிலேயே சென்றது. மக்கள் இடம் விட்டு இடம்பெய ரும் வாய்ப்புக்கள் இருக்கவில்லை. இதனால் கீழ் மட்டத்தில் இருந்த குழுவொன்று அரசியல் அல்லது பொருளியல் பலத்தைப் பெறுதல் சாத்தியமற்றதாயிருந்தது. தற்செயலாக அவ்வித வாய்ப்பு ஒன்றைப் பெற்று உயர்ந்தாலும் தமது பிற்பட்ட நிலை யின் அடையாளங்களைத் துடைத்தெறிவது இலகுவானதாக இருக்கவில்லை. இத்தடைகள் தீண்டப்படாதவர்களுக்கு எதிராக மிகவும் தீவிரத்தடன் செயற்பட்டதால் அத்தடைகளை மீறுவது அவர்களுக்கு அரிதாகவே இருந்தது.

இதற்கு மாறாக சமகால வரலாற்றில் ஆங்கிலச்சட்ட முறை, சன நாயக அரசியல், புதிய தொழில்வாய்ப்புகள், கல்வி ஆகியன சமூக அசைவியக்கத்திற்கு கூடிய வாய்ப்புக்களை அளிக்கின்றன. இந்நிலையில் சமூகத்தின் பண்பாட்டுத்துறை மாற்றங்களைப் புரிந்து கொள்வதற்கு மேல் நிலையாக்கம் என்ற கருத்தாக்கம் உதவுகின்றது.

இந்தியாவிற்கு மட்டுமன்றி இந்தியப் பண்பாட்டின் எல்லைக்குள் அமையும் இலங்கை, திபெத், இந்தோனேசியா ஆகிய நாடுகளின் சமூக மாற்றங்களையும் விளக்குவதற்கு இக்கருத்துப் பயன்படும்.

இலங்கையில் இந்து மதத்தின் பண்பாட்டு அம்சங்களை விளக் கும் ஆய்வுகள் பல தமிழில் வெளிவருகின்றன. இத்திமரத்தாள் முதல் இணுவில் கந்தசுவாமி வரை பல கோவில்கள் பற்றிய வரலாறுகள், வழிபாட்டு முறைகள் பற்றிய விபரத் தொகுப்புகள் உள்ளன. தரவுகளும் விபரங்களும் தேவைதான். அத்தரவுகளைப் பகுப்பாய்வதற்கான கோட்பாடும் வேண்டும். கோட்பாடு இருட்டு வழியில் செல்வதற்கு உதவும் கைவிளக்கு போன்றது.

யாழ்ப்பாணத்தில் இருந்து நீண்டகாலமாக வெளிவரும் இரகுநா தய்யர் பஞ்சாங்கம் கொடியேற்றம், திருவிழா, தேர்த்திருவிழா ஆகியன ஆகமவிதிப்படி நடைபெறும் சைவக் கோவில்களின் பட் டியலை ஆண்டு தோறும் வெளியிட்டு வருகிறது. ஒரு ஐம்ப தாண்டு காலப் பஞ்சாங்கங்கள் யாவற்றையும் கால வரன் முறைப்படி ஒருவர் ஆராய்ந்து பார்த்தால் யாழ்ப்பாணக் கிராமங் களின் சமூக மாற்றங்களை பஞ்சாங்கத்தின் பட்டியல்களைக் கொண்டு விளக்கிவிடலாம். ஒரு கிராமத்தின் கோவில், கும்பாபி ஷேகம் செய்யப்பட்டு அந்தணரால் ஆகம விதிப்படி பூஜை நிகழ்த்தப்படும் நிலைக்கு மாற்றமுறுவதை அக்கிராமத்தின் சமூக எழுச்சியின் விளைவாகக் காணலாம் என்கிறார் பேராசிரியர் கா. சிவத்தம்பி. (இவரது ஆய்வுக்கட்டுரை தலங்காவல் பிள்ளையார் கோவில் கும்பாபிசேக மலர் 1988ல் இடம் பெற்றது. பின்னர் இக் கட்டுரை பேராசிரியரது யாழ்ப்பாணம்: சமூகம், பண்பாடு கருத்து நிலை (2002) எனும் நூலில் இடம் பெற்றிருக்கிறது). பஞ்சாங்கம் தரும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு எம்.என். சிறி நிவாஸ் தெரிவிக்கும் மேல்நிலையாக்கம் என்ற கோட்பாட்டின் பின்னணியில் பேரா. சிவத்தம்பி எழுதியுள்ள கட்டுரை சமூகவியல் பண்பாட்டு ஆய்வுகளிலும், மதத்தின் சமூகவியலிலும் அக்கறை யுடையோர் அவசியம் படிக்க வேண்டிய ஒன்று.

பிற்குறிப்பு:

'மேல்நிலையாக்கம்' பற்றி எம்.என். சிறிநிவாஸ் நோக்கில் இது வரை விளக்கப்பட்டது. 50 ஆண்டுகளுக்கு மேலாக இந்திய சமூக வியலில் மிகுந்த செல்வாக்கு உடையவராக இருந்த எம்.என். சிறி நிவாஸ் முன்வைத்த இக்கருத்து தொடர்பான குறைகள் பல ஆய் வாளர்களால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. கீழே தரப்படும் குறிப் புக்கள் மேல்நிலையாக்கம் குறித்த விமர்சன நோக்கிலான புரிதலுக்கு உதவும்.

சமூக மாற்றம்

இந்தியாவில் நவீன காலத்தில் ஏற்பட்ட சமூக மாற்றங்களை விளக்குவதற்கு சமூகவியலாளர்கள் கையாண்ட நோக்குமுறை-களை நான்காக வகுத்துக் கூறலாம்.

- முரண்பாட்டு அணுகுமுறை (Conflict Approach): வர்க்க முரண் பாடு போன்ற முரண்பாடுகள் சமூகமாற்றத்திற்கு காரணமா வதை இந்த அணுகுமுறை முக்கியப்படுத்தும்.
- அமைப்பியல் அணுகுமுறை (Structural Approach): சமூகத்தின் பல்வேறு உறுப்புக்கள், பகுதிகள் என்பனவற்றிற்கிடையிலான இடைவினைகள் மோதல்கள் மூலம் சமூக மாற்றத்தை விளக்கு தல்.

- படிமலர்ச்சி அணுகுமுறை (Evolutionary Approach): பரிணாமவாத நோக்கு என்றும் இதனைக் கூறலாம்.
- பண்பாட்டு அணுகுமுறை (Cultural Approach): பண்பாட்டு மாற்றங்களின் மூலம் சமூக மாற்றம் ஏற்படுவதை இந்நோக்கு முறை எடுத்துக்கூறும்.

மேலே கூறியவற்றில் நான்காவதான பண்பாட்டு அணுகுமுறையில் மேல்நிலையாக்கம் என்ற கருத்தையும் உள்ளடக்கலாம்.

பண்பாட்டு அணுகுமுறைகள்:

பண்பாட்டு அணுகுமுறையினை நாம் பன்மையில் குறிப்பிடுதலே பொருத்தமானது.

- மேற்கு மயமாதல் (Westernization).
- நவீனமாதல் (Modernization).
- சிறுநெறி - பெருநெறி (Little Tradition - Great Tradition).
- மேல்நிலையாக்கம்.

என்றவாறாக நான்கு முக்கிய பண்பாட்டு அணுகுமுறைகள் உள்ளன. மேல்நிலையாக்கம் என்ற அணுகுமுறையினைப் பிறவற்றோடு ஒப்பிட்டு நோக்குதலும் பயன்தரும்.

மேலாதிக்கச் சாதி மாதிரி (Dominant Caste Model):

சாதி பற்றிய ஆய்வுகளில் மேலாதிக்கச்சாதி மாதிரி என்பதொன்று பிரயோகிக்கப்பட்டது. இதனை முன்மொழிந்தவர் எம்.என். சிறி நிவாஸ் அவர்களே. சனத்தொகை எண்ணிக்கை, நிலத்தின் உடைமை காரணமாக எழும் பொருளாதாரப் பலம் என்பனவற்றினால் பிறசாதிகள் மீது மேலாதிக்கத்தை ஒரு சாதி கொண்டிருக்கும். குறிப்பாக பிராந்திய மட்டத்தில் இந்நிலை காணப்படும். மேல் நிலையாக்கம் என்ற கருத்தினை மேலாதிக்க சாதி மாதிரியுடன் தொடர்புபடுத்தி நோக்குதல் வேண்டும்.

பிராமணர் - சமஸ்கிருதம்:

மேல்நிலையாக்கம் பிராமணரின் பண்பாட்டு மேலாதிக்கத்தை நியாயப்படுத்தும் கருத்து என்ற விமர்சனம் உள்ளது. சமஸ்கிருதம் என்ற மொழியுடன் அதற்கு உள்ள தொடர்பு தெளிவற்றதாக உள்ளபோதும் 'சன்கிறிற்றைசேசன்' என்ற சொல் அத்தொடர்பைச் சுட்டி நிற்கிறது. தமிழில் 'சமஸ்கிருத நெறிப்படுகை' என்று மொழிபெயர்ப்பதை விடுத்து 'மேல் நிலையாக்கம்' என்று இச்சொல் தமிழில் மொழியாக்கம் செய்யப்பட்டு உபயோகிக்கப்படுகிறது. பிராமணர் ஆதிக்கச் சாதியாக இல்லாத இலங்கைச் சூழலுக்கு மேல் நிலையாக்கம்' என்ற சொல் கூடிய பொருத்தம் உடையது. சிங்கள - பௌத்த பின்னணியில் மேல்நிலையாக்கம் பற்றி மைக்கேல் றொபேர்ட்ஸ் Caste Conflict and Elite Formation நூலில் கூறியிருக்கும் கருத்துகள் கவனத்திற்கொள்ளத்தக்கன.

செயல்வாதம் (Functionalism):

மானிடவியலிலும், சமூகவியலிலும் செயல்வாதம் என்னும் கோட்பாடு செல்வாக்குடையதாய் உள்ளது. எம்.என். சிறிநிவாஸ் செயல்வாதம் என்ற கோட்பாட்டைத் தழுவியவராவர். இந்திய சமூகவியலில் செயல் வாதத்தின் எழுச்சி என்னும் பின்னணியிலேயே மேல் நிலையாக்கம் என்ற கருத்திற்கு ஏற்பட்ட கவர்ச்சி, அதன் சிறப்புக்கள், குறைகள் என்பன புரிந்துகொள்ளப்படுதல் வேண்டும்.

shanmugalingam@thaiveedu.com

மஹாகவி :
மீண்டும் தொடங்கும் மிடுக்கு

- சேரன்

கி
ழமையில் ஒரு நாள் தமிழ்க் கடைக்கு நான் செல்வ தற்குச் சிறப்பான காரணம் ஏதாவது இருக்குமெனில் அது வல்லாரைக் கீரை. எப்பொழுதும் கிடைக்கும் எனும் உத்தரவாதமில்லைத்தான். விலையும் ஒரு பிடி ஏழு டொலர் களிலிருந்து ஒன்பது டொலர்கள் வரை ஆகும். அது கடையவரைப் பொறுத்தது. வல்லாரையை எப்போது நினைத்தாலும் சமைத்தா லும் கவிஞர் மஹாகவியின் நினைவுதான் தூக்கலாக மேலெழும். அவருக்குப் பிடித்த கீரை அது என்பது ஒன்று.

வல்லாரைக் கீரைக்கும் விலை கொடுத்து வாங்கும்
வடித்தெடுத்த கவிதைக்குக் கொடுக்காது தூங்கும்

என்ற அவர் கவிதை வரிகள் மற்றது. வல்லாரைக் கீரையை இவ் வளவு விலை கொடுத்து வாங்க வேண்டிய ஒரு காலம் வரும் என மஹாகவி எண்ணியிருப்பதற்கு வாய்ப்பில்லை. ஆனால் தமிழ்ச் சமூகத்துக்கும் உயர்ந்த கவிதைச் சுவைப்புக்கும் அத்தகைய கவி நூல்களின் விற்பனைக்கும் இடையே இருக்கிற முரண்பாட்டை அவர் தெளிவாகவே அறிந்திருந்தார்.

மஹாகவி காலமாகி இந்த ஜூன் மாதத்துடன் ஐம்பது ஆண்டுகள் ஆகின்றன. 'உயர் பதவியில் இருந்த ஏழை மனிதனாக', வாழ்

வேன் மடியும்வரை என்று பாடி அவ்வாறே வாழ்ந்து மடிந்த ஒரு உன்னதமான கவிஞனின் நினைவைக் கொண்டாடும், ஒரு சிறப்பு மலர் இது. அவர் வாழ்ந்த காலத்திலும் ஈழத்தில் பெருமளவு கொண்டாடப்பட்ட கவிஞர் அவர். வயதில் இளையவர் எனினும் 'மூத்த கவிஞர்' என அழைக்கப்பட்டவர். நாற்பத்து நான்கு ஆண்டுகள் மட்டுமே வாழ்ந்து அக்குறுகிய காலத்தில் தமிழுக்கும் தமிழ் இலக்கியத்துக்கும் அவர் வழங்கிய நற்கொடை அளப்பரிது. அந்த நற்கொடையின் சில பரிமாணங்களையும் அவர் தமிழையும் அவர் வாழ்வின் சில பகுதிகளையும் தமிழ் கூறும் நல்லுலகத்துக்கு நினைவூட்டிப் பதிவு செய்வதே இந்தச் சிறப்பு மலரின் நோக்கம்.

மஹாகவி காலமானபோது பேராசிரியர் சு. வித்தியானந்தன் எழுதிய அஞ்சலிக் கட்டுரையில் 'கவிதையே தன் ஆவியாக வாழ்ந்தவர் மஹாவி' எனக் குறிப்பிடுகிறார். 'நான் வளர்ந்த கருப்பை' என மஹாகவியைப் பாடியவர் கவி நுஃமான். 'மாண்பு மிகு பேரெழில்' எனத் தன் பாடலால் மஹாகவியை வர்ணித்தவர் மறைந்த கவிஞர் அரியாலையூர் ஐயாத்துரை. 'உங்களையும் உங்களைப் போற்றும் ஈழ இலக்கிய உலகின் தரத்தையும் தமிழ் நாடு அறியாதிருப்பது துயரம்' என எழுதியவர் தீபம் ஆசிரியரும் நாவலாசிரியருமான நா. பார்த்தசாரதி. மஹாகவியின் கவிதைகளை ஆரம்பத்தில் மஹாகவி என்ற பெயரில் கலைமகள் இதழில் வெளியிட மறுத்து, 'து.உருத்திரமூர்த்தி' எனும் பெயரில் வெளியிட்டவர் அதன் ஆசிரியர் கி.வா.ஜ என்ற கி.வா. ஜகந்நாதன். பிற்பாடு அந்த நிலைப்பாட்டை அவர் மாற்றி விட்டார்.

பாரதியும் பாரதிதாசனும் கலைவாணன் என்ற புனைபெயரில் எழுதி வந்த திருவானைக்காவல் அப்புலிங்கமுமே மஹாகவியின் விருப்புக்குரிய கவிகள். கலைவாணனை இப்போதைய தமிழ்நாடு அறியாது.

இளவயதில் மஹாகவியின் வாழ்க்கை வறுமையும் சிக்கல்களும் நிறைந்ததாகவே இருந்தது. இந்த மலரில் அவரது மருமகள் சுமதி பிரான்ஸிஸ் இதனைப் பற்றியும் குறிப்பிட்டிருக்கிறார். மஹாகவியின் தந்தை துரைசாமி ஒரு தவிற்காரர். இளவயதில் காலமாகி விட்டார். மஹாகவியின் மாமனார் (மஹாக்வியின் மனைவி பத்மாசனியின் தந்தை) முத்தையாப் பண்டிதர் ஒரு நாயனக்காரர். யாழ்ப்பாணத்தின் புகழ் பெற்ற பண்டிதர் சிவானந்தையர், தமிழறிஞரும் திருநெல்வேலி சைவ ஆசிரியர் கலாசாலையின் புகழ் பூத்த உப அதிபரும் 'மௌனத்தவமுனி' என்று சிறப்பிக்கப்பட்டவருமான பொ.கைலாசபதி ஆகியோரின் நெருங்கிய நண்பர். இவர்களின் நூல்களை இரவல் வாங்கிப் படித்தும் இவர்களோடு உறவாடியுமே பண்டிதர் தேர்வில் சித்தி பெற்று அளவெட்டி சதானந்த வித்தியாசாலையில் தமிழாசிரியராகக் கடமை செய்தவர் முத்தையாப் பண்டிதர். மஹாகவியின் கோடை நாடகத்தில் வருகிற பஞ்சையர் எனும் பாத்திரம் சிவானந்த ஐயர்தான். ஆசாரங்களையும் சாதியத்தையும் துறந்து மனிதமே வாழ்வின் அடிப்படை என்று வாழ்ந்தவர்கள் அவர்கள். உலகம் என்பது நாங்கள் உய்யக்கொண்டது. தமிழ் அறியாதோர் காதல் அறியமாட்டார் என்று கொண்டாடியவர்கள் அவர்கள். அந்த அடிநாதம்தான் மஹாகவியுடையதும்.

மஹாகவியின் கவிதைகளிலும் பாநாடகங்களிலும் காவியங்களிலும் இசைப்பாடல்களிலும் நெய்யப்பட்டுக் கிடக்கின்றன அவருடைய வாழ்க்கை நோக்கும் சிந்தனையும் மேதைமையும்.

'என் சிந்தனையைச் சின்ன மனிதருக்காய்ச் சிறிதாக்கத் தேவையில்லை' என்றும் 'வேருக்குள் உறுதி கொண்ட வேம்புகள் மனிதர்' என்றும் 'பிழையினைக் கடவுள் செய்தால் சரியாக்கல் மனிதர் வேலை' என்றும் 'இயற்கைப் பெருந்தாய் இதயத்தைப்' புரிந்து கொள்ளாது மனிதர்கள் உலகை நாசமாக்குகிறார்கள் என்றும் அறுபது ஆண்டுகள் முன்னரே பாடியவர் அவர். மானுடரின் அணு ஆயுதக் கண்டு பிடிப்புக்குப் பிற்பாடு இந்த தொல்லுலகை ஆள்கிற உரிமை நண்டுகளுக்குத் தான் இருக்கிறது என்று அவர் சொன்னார். மற்றவர் சொல்வதைப்பற்றிக் கவலைப்படாமல் 'உன்பாட்டில் மலர்வாய் நீ. நான் என்பாட்டில் எழுதுகின்றேன்' என்று காட்டு மல்லிகையைப் பார்த்து மிகுந்த நேசத்துடன் சொன்னவர் அவர்.

பகலெலாம் வயலில் வேலை செய்து விட்டுப் பொழுது சாயும் நேரம் வீடு திரும்புகிற பெண்ணின் குரலாக அவர் பாடுகிறபோது,

நான் பூத்த மல்லிகை அல்ல.
பாதம் புதிய பூவிதழ் அல்ல.
வேர்த்து எந் நாளுமே வேலை செய்வதால்
காய்த்த தோல் எனக்கு
என்கிறார்.

அந்தப் பெண்ணின் பெயர் வள்ளி. அவள் தொடர்ந்தும் சொல்கிறாள்:

நெல்லிடிக்குமாம். நீரிறைக்குமாம்.
புல் செதுக்குமாம் கைகள்.
அதனால் பொலிவு பெற்ற அவைகள்.
கல்லொடு ஒத்தது காரிகை உடல்,
வல் இடை. இடை -

அறுபத்தாறு ஆண்டுகளுக்கு முன்பு மஹாகவி எழுதியது இந்தக் கவிதை.

ஒரு வகையில் கவிகளுக்கும் மஹாகவிகளுக்கும் உள்ள தர வேறுபாடு இதுதான்: யதார்த்தம் என எளிதாகச் சொல்லப்படும் உலக வழக்கிலிருந்துதான் எல்லாக் கவிகளும் தமது பட்டறிவையும் படிமங்களையும் ஒத்திசை, ஒவ்வா இசைகளையும் பெற்றுக் கொண்டாலும் அந்த வழக்கைப் புனைவு, ஆழ்ந்த தரிசனம், தொலைநோக்கு என்பவற்றுக்கூடாக நாடக வழக்காக அவர்கள்

புடமிடுகிறபோதுதான் கவிகள் மஹாகவிகளாவது சாத்தியமாகிறது. இந்த மதிப்பிட்டுக்குக் காலம் ஒரு சிறந்த அளவுகோல். மலைகளை மதிப்பிடச் சேய்மை இன்றியமையாதது. அந்த வகையில் துரைசாமி உருத்திரமூர்த்தி நம் காலத்தில் மேலெழுந்த ஒரு மஹாகவி. அவரின் பன்னிரண்டு நூல்கள் ஏற்கெனவே வெளியாகியிருந்தாலும் அவற்றில் பெரும்பாலானவை சுற்றில் இல்லை. நூலகம் இணையத்தளத்தில் மஹாகவியின் சில நூல்கள் கிடைக்கின்றன. அவரது ஐம்பதாவது நினைவு நாளை ஒட்டி அவருடைய படைப்புக்களாக, மஹாகவி காவியங்கள், மஹாகவி நாடகங்கள், மஹாகவி கவிதைகள் இந்த ஜூன் மாதம் வெளியாகின்றன. யாழ்ப்பாணம் ஜீவநதி பதிப்பகமும் மஹாகவி நூல் வெளியீட்டுக் குழுவும் இணைந்து இந்த நூல்களை வெளியிடுகின்றன. மஹாகவியின் உற்ற நண்பரும் கவிஞரும் பேராசிரியருமான எம்.ஏ. நுஃமான் இந்த நூல்களைத் தொகுத்துள்ளார். நூலில் இடம்பெறும் மஹாகவி பற்றிய அவருடைய ஆழமான கட்டுரை ஒன்று இந்தச் சிறப்பிதழில் இடம் பெறுகிறது.

கவிதையை 'யாப்புக்குள் இருந்து யாழ் மீட்டுபவள்' என்று மஹாகவி சொல்வது வழக்கம். எனினும் 'பழைய பண்டிதர்களுக்கும் கோட்பாடுகளை விழுங்கி விட்டுச் செமித்துக் கொள்ள முடியாத வர்களுக்கும்' கவிதை உரியது அல்ல என்பது அவரது கருத்து. அந்தக் கருத்தை எதிரொலிப்பதான அவரது கவிதைகள் சிலவற்றையும் இந்த இதழில் நீங்கள் வாசிக்கலாம்.

சிறப்புக்கொரு புதிய சிகரத்தை அமைத்தவர் மஹாகவி. அவர் நினைவும் கவிதையும் சிந்தனையும் கற்பனையும் வாழ்வும் நமக்கு மேலும் வளம் சேர்க்கட்டும்.

cheran@thaiveedu.com

அப்பாவும் மஹாகவியும்

- ஔவை விக்னேஸ்வரன்

அப்பாவைப் பற்றிய நினைவுகள் என்னிடம் அதிக மில்லை என்பது துயரம். வாய் திறந்தால் கவிதை போல எங்களையும் சின்னத் தங்கம், குஞ்சு, கன்றுக்குட்டி, செல்லம் என வாயோயாமல் அழைத்து, அன்பைச் சொரிந்த எங்களுடைய அப்பாவை ஆறுவயதில் இழந்தேன். ஆனாலும் அப்பாவுடன் மட்டக்களப்பில் வாழ்ந்த காலங்கள் எமக்குப் பொற்காலம். இன்றும் நினைத்தால் இனிதாய் விரிவதாக வும் என் நினைவில் அழியாமல் இருக்கும் காலம் அது. எங்களைப் பொறுத்தவரை மட்டக்களப்பும் எங்களுடைய சொந்த ஊராகிவிட் டது. ஆனால் அப்பாவுக்கு மட்டக்களப்பில் இருந்து கொழும்-புக்கு இடமாற்றம் வந்துவிட்டது. கொழும்பு வாழ்க்கை அப்பா-வுக்கோ எங்களுக்கோ ஒரு போதுமே பிடித்த வாழ்க்கையாக இருந்ததில்லை. எனவே மட்டக்களப்பை விட்டுவிட்டுச் செல்வது பெரிய துயர் தருவதாக இருந்தது.

அப்பாவின் மண்ணிறக்கோடு போட்ட சாரமும், அவர் மடியில் சாரத்தில் இருந்து எந்த நேரமும் ஊஞ்சலாடும் கணங்களும் நினைவில் நிலைத்துவிட்டன. மட்டக்களப்பில் நாங்கள் இருந்த பெரிய அரசாங்க வீடு எந்த நேரமும் அப்பாவின் நண்பர்களால் நிறைந்திருக்கும். நுஃமான் மாமா, மௌனகுரு மாமா, சௌ மாமா (ஓவியர்), நீலாவணன் மாமா, தாசீசியஸ் மாமா, சிங்காரவேலு மாமா, ஃபாம் ஹவுஸ் மாமா (ஹாபிஸ் செய்யது அகமது) என்று மாமாக்களும், அவர்களின் நண்பர்களின் குடும்பங்களுமாக எங் கள் வீடு எப்போதும் பொலிவாக இருக்கும்.

அம்மா எங்கள் ஐந்து பேரையும் கவனித்துக் கொண்டு, வரும் விருந்தினர்களையும் எவ்வளவு அன்பாகவும், அழகாகவும் உபச ரித்தார் என்பதை நினைக்கும் போதெல்லாம் வியப்பாகவே இருக் கும். அம்மா தான் எங்கள் குடும்பத்தின் ஆணிவேர் என்றே இன்று நினைக்கத் தோன்றுகிறது. மட்டக்களப்பின் வாழ்வை நாங் கள் எல்லோரும் சுவைத்தோம். சனி, ஞாயிறுகளில் பாசிக்குடா செல்வதும், அங்கு நாள் முழுவதும் கும்மாளமடிப்பதும், எங்கள் அப்பாவுடன் நாங்கள் மகிழ்ந்ததும் மட்டக்களப்பில் தான். அப் பாவின் இலக்கிய நண்பர்கள் எல்லோரும் எங்கள் குடும்ப உறவு களாகமாறி, புதிய அருமையான ஓர் உலகம் எமக்குக் கிடைத்தது.

கொழும்புக்கு அப்பா இடமாற்றலாக சென்றபின் எப்படி வாழ்ந் தோம் என எனக்கு நினைவில்லை. சில மாதங்களாக இருக்க லாம். நகர வாழ்வின் நரகத்துள் உழன்றோம் என இப்போது நினைக்கிறேன்.

1971 ஜூன் 20ம் திகதி அப்பா கொழும்பு அரசினர் வைத்திய சாலையில் மாரடைப்பால் மறைந்தார். இரவு எட்டு மணிக்குச் செய்தி வந்தது. அடுத்த நாள் காலையிலேயே எம்மை புகையி ரதத்தில் ஏற்றி எமது ஊரான அளவெட்டிக்கு உறவினர்களும், நண்பர்களும் அனுப்பிவிட்டார்கள். அப்பா கூடவராத முதல் ரயில் பயணம் அது. அப்பா இல்லாமல் ஊரில் வாழ்க்கை தொடங்கி யது. நாங்கள் எல்லோரும் மகாஜனக் கல்லூரியில் மறுபடியும் சேர்க்கப்பட்டோம்.

நான் பத்தாம் தரம் படிக்கையில் அப்பாவின் கவிதைகளையும், நாடகங்களையும் வாசிக்கத் தொடங்கினேன். அப்போதுதான் மஹாகவியை அறியத் தொடங்கினேன். வாசிக்க, வாசிக்க பிரமிப் பும், ஏக்கமும் மனதைப் பற்றிக் கொள்ளும். நாம் அப்பாவையும், மஹாகவியையும் குறுகிய காலத்தில் இழந்துவிட்டோம் என்ற பாதிப்பை அப்போதுதான் ஆழமாக உணரத் தொடங்கினேன்.

மஹாகவியின் நினைவுகளைச் சுமந்தபடி, அவரின் கவிதைகளைப் போட்டிகளிலும், வானொலியிலும் கல்லூரியிலும் வேறு அரங்கங்க ளிலும் பாடினேன்.

மஹாகவியின் கவிதைகளின் ஓசைநயமும் தொனியும் எப்போதுமே புதுத்தெம்பையும், புத்துணர்ச்சியையும் எமகுத் தந்தன. கவிதைக-ளின் பாடு பொருள் மனிதநேயத்தை என்னுள் விதைத்தது. சவால் தன்னம்பிக்கையுடன் வாழ வேண்டும் என்ற பெரு முனைப்பை என்னுள் கிளர்த்தின அவர் கவிதைகள். ஏராளமானோர் சொல்லிச் சொல்லிக் களைத்தாலும் மஹாகவியின் இந்தப் பாடல் வரிகளைச் சொல்லாமல் விட முடியாது.

சிறுநண்டு மணல் மீது படம் ஒன்று கீறும்
சிலவேளை இதை வந்து கடல் கொண்டு போகும்.
கறி சோறு பொதியோடு தருகின்றபோதும்
கடல் மீது இவள் கொண்ட பயம் ஒன்று காணும்

எறிகின்ற கடல் என்று மனிதர்கள் அஞ்சார்
எது வந்ததெனின் என்ன அதை வென்று செல்வார்

இந்தக் கவிவரிகளும், 'வீடும் வெளியும்' எனும் அவரின் கவித் தொகையில் உள்ள 'சிறுபுல்' என்ற கவிதையும் இன்னும் பல கவி தைகளின் பாடுபொருளும் திருப்பித் திருப்பி வாசித்த பொழுது வாழ்வை எதிர்நோக்கும் வல்லமையை எனக்குத் தந்தன. மரணத் தைப் புறந்தள்ளும் வரிகளாக அவை இருந்தன.

அன்று பிறந்து
இன்று இறப்பதுள்
ஆயதன்று நம் மானிட வாழ்வு காண்.

அப்பனே மகனாகி
வளர்ந்து
உயிர் ஒய்தல் அற்று
உயர்வு ஒன்றினை
நாடலே உண்மை...

அம்மாவும் மஹாகவியின் கவிதைகளைத் திரும்பத் திரும்ப எனக்கு நினைவூட்டுவார். சொல்லிக் காட்டுவார். அவற்றுள் முக்கியமாக

மீண்டும் இவ் வையம் துலங்கப் பிறந்துள்ளாள்
ஈண்டு எமக்கந்த ஔவை

என்னும் வரிகள் இன்றுவரை என்னுள் ஒலித்துக்கொண்டே இருக் கின்றன. இந்த வரிகள் நான் பிறந்த போது அவர் எழுதியவை.

1983ல் ஈழவிடுதலை இயக்கங்கள் உருவாகிக் கொண்டிருந்த போது அவற்றில் இணைந்து வேலை செய்ய வேண்டும் என்ற பெருமுனைப்பை எனகுத் தந்தவற்றுள் மஹாகவியின் கவிதை களுக்கும் பெரும் பங்குண்டு. பின்னர் ஈழ விடுதலை இயக்கங்க ளில் மானுட நேயத்துக்கும் விடுதலை என்ற ஆழ்ந்தகன்ற பண் புக்கும் எதிரான போக்குகள் மேலோங்கி எமது ஓர்மத்தையும் அறத்தையும் சிதைத்த போது எதிர்த்து கேள்வி கேட்கும் துணி வையும் மனவுறுதியையும் மஹாகவியின் கவிதைகள் எனக்குத் தந்தன. அவை மக்களின் இன்னல், துயர், வறுமை, தீண்டாமை பற்றிய சமூக அரசியலை கோடிட்டுக் காட்டின. மஹாகவியின் கவிதைகளை வாசிக்க, வாசிக்க அவற்றினுள் எப்போதும் இழை யோடிக் கொண்டிருக்கும் மானுடநேயமும், தன்னம்பிக்கையும், எதிர்த்து நில், துணிந்து செய், சலிக்காது முன் செல் எனும் வீச்சு மிக்க அறமும் என் சிந்தனையிலும் செயற்பாடுகளிலும் பல மாற் றங்களை ஏற்படுத்தின.

1983ல் நான் கவிதை எழுதத் தொடங்கிய போது எனது கவிதை களில் உள்ளார்ந்திருந்த நம்பிக்கை மஹாகவியிடமிருந்து எனக் குக் கடத்தப்பட்டிருக்கலாம் என நான் கருதுகிறேன். மஹாகவி யின் பெருநிழலை நாங்கள் இழந்தாலும், அவர் கவிநிழலில் வாழ்கிறோம். அவர் கட்டியெழுப்பி 'நீழல்' என்று பெயர் சூட்டிய அழகிய வீட்டில் நேற்றிருந்தோம். இன்றும் இருக்கிறோம். இனியும் இருப்போம்.

avvai.v@thaiveedu.com

மஹாகவியின் வாழ்க்கை நோக்கு

- எம்.ஏ. நுஃமான்

மஹாகவி மறைந்து ஐம்பது ஆண்டுகள் ஆகின்றன. அவர் வாழ்ந்த காலத்திலும் மறைந்த பிறகும் அவரது படைப்புகள் இதுவரை பதினொரு நூல்களாக வெளி வந்துள்ளன. வள்ளி, குறும்பா, கோடை, கண்மணியாள் காதை, வீடும் வெளியும், ஒரு சாதாரண மனிதனது சரித்திரம், இரு காவியங்கள், மஹாகவி கவிதைகள், மூன்று நாடகங்கள், பொருணூறு, ஆறு காவியங்கள் ஆகியன அவை. நூல் வடிவம் பெறவேண்டிய அவரது ஏனைய படைப்புகள் இந்த ஆண்டு வெளியாகின்றன.

ஆயினும், மஹாகவி பற்றி நம்மிடையே இன்னும் ஒரு முழுமையான விமர்சன முயற்சி மேற்கொள்ளப்படவில்லை என்பதும், அவர் பற்றிய சரியான பார்வை பரவலாக்கப்படவில்லை என்பதும் விசனிக்கத்தக்கதே. இப்பின்னணியில், இக்கட்டுரையில் மஹாகவியின் நூல் உருப்பெற்ற, உருப்பெறாத படைப்புகளை அடிப்படையாகக் கொண்டு அவரது வாழ்க்கை நோக்கைத் திரட்டிக் காண்பதற்கான ஒரு முயற்சி மேற்கொள்ளப்படுகின்றது.

மஹாகவியின் படைப்புக்கள் பற்றி பின்வரும் மூன்று வினாக்களுக்கு விடை காண்பதன் மூலம் அவரது வாழ்க்கை நோக்கை - அவரது உள்ளடக்கத்தின் சாரம்சத்தை நாம் ஒருவாறு திரட்டிக் காணமுடியும்.

- சமூக அமைப்பின் எந்த தளத்தின் மீது அவரது பார்வை விழுந்திருக்கின்றது?
- அவரது படைப்புகளில் இழையோடுகின்ற பொதுத் தன்மைகள் யாவை?
- அவரது படைப்புகளில் ஆங்காங்கே வெளிப்படையாகத் தெரிகின்ற வாழ்க்கை பற்றிய கருத்தோட்டங்கள் எத்தகையன?

மஹாகவியின் படைப்புக்கள் அனைத்தையும் மொத்தமாக எடுத்து நோக்கினால் நாங்கள் சாதாரண பொதுமக்கள் என்று கருதும் கிராமப்புறத்து விவசாயிகள், நகரப் புறத்து வாழ்க்கைக்குப் பலியான ஏழைகள், மத்தியதர வர்க்கத்தினர் ஆகியோர் மீதே பெரும்பாலும் அவரது பார்வை விழுந்திருக்கின்றது என்பதைச் சுலபமாகக் காணலாம்.

நூற்றுக் கணக்கான அவரது கவிதைகளில் ஒரு கணிசமான தொகையும், அவர் எழுதிய பத்து நாடகங்களில் மேடைக்காக எழுதிய கோடை, முற்றிற்று, புதியதொரு வீடு ஆகியவையும் அவர் எழுதிய ஐந்து காவியங்களில் கல்லழகி, கந்தப்ப சபதம் தவிர சடங்கு, ஒரு சாதாரண மனிதனது சரித்திரம், கண்மணியாள் காதை ஆகியனவும் சாதாரண மக்களின் அன்றாட வாழ்க்கையையே உள்ளடக்கமாகக் கொண்டுள்ளன.

பொதுவாக 1955க்குப் பிற்பட்ட மஹாகவியின் பெரும்பாலான கவிதைகளில் சாதாரண மக்களின் அன்றாட வாழ்க்கை நிகழ்ச்சிகளும், வாழ்க்கை முரண்பாடுகளும் அவற்றின் விளைவான மனித நடத்தைகளுமே சித்திரிக்கப்பட்டிருப்பதை நாம் காணலாம். 55க்கும் - 60க்கும் இடையில் அவர் எழுதிய செத்துப் பிறந்த சிசு, மீண்டும் தொடங்கும் மிடுக்கு முதலிய கவிதைகளை உதாரணமாகக் காட்டலாம். நடப்பியல் வாழ்வில் இருந்து ஒதுங்கிச் சென்று கற்பனை உலகில் அவர் சஞ்சாரம் செய்யவில்லை என்பதையே இவை காட்டுகின்றன.

இன்னவை தாம் கவி எழுத
ஏற்றபொருள் என்று பிறர்
சொன்னவற்றை நீர் திருப்பிச்
சொல்லாதீர், சோலை, கடல்
மின்னல், முகில், தென்றலினை
மறவுங்கள்! மீந்திருக்கும்
இன்னல், உழைப்பு, ஏழ்மை, உயர்வு
என்பவற்றைப் பாடுங்கள்

என்று 1951ல் மஹாகவி எழுதினார். 'நிகழ்காலச் செய்திகளையும் பிரச்சினைகளையும் கவிதையில் ஆண்டு அதனை இன்றைய யுகத்துக்கு இழுத்துவரல் அவசியமாகும்' என்று 1968லும் அவர் எழுதினார்.

இன்றைய காலத் திருக்கும் மனிதர்கள்
இன்றைய காலத் தியங்கும் நோக்குகள்
இன்றைய காலத் திழுப்புகள் எதிர்ப்புகள்
இன்றைய காலத் திக்கட்டுக்கள்...

ஆகியவையே கவிதையில் இடம்பெற வேண்டும் என்று அவர் கருதினார். சுருக்கமாகச் சொல்வதனால் இலக்கியத்தினதும் கலைகளினதும் ஒரே ஊற்றுக்கண்ணான மனிதரது சமுதாய வாழ்வே மஹாகவியின் படைப்புக்களில் உள்ளடக்கமாகவும் உள்ளது. அவரது ஆரம்ப காலப் படைப்புகளில் சில புறநடைகள் உள்ளன. எனினும், அவரது அடிப்படை இதுவே. பெரும்பாலும் நடப்பியல் வாழ்வில் இருந்தே அவர் தன் படைப்புகளுக்கான கருப் பொருளைப் பெற்றார். தான் கண்டு அனுபவித்த வாழ்க்கையை அதன் முரண்பாடுகளை அவர் பிரதிபலித்தார்.

நடப்பியல் வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்ட இவரது பெரும்பாலான படைப்புகளில் இழையோடுகின்ற பொதுத்தன்மைகளாக நாம் மூன்று அம்சங்களைக் குறிப்பிடலாம்.

- ஆழமான மனிதாபிமானம்.
- வாழ்க்கையின் மீது ஓர் உறுதியான நம்பிக்கையும் வாழ வேண்டும் என்ற முனைப்பும்.
- சமூக ஏற்றத்தாழ்வின் மீதும் அதன் போலி ஆசாரங்கள் மீதும் எதிர்ப்பு.

இந்த மூன்று அம்சங்களும் ஒன்றிலிருந்து ஒன்று வேறுபட்டதல்ல. பதிலாக உள்ளார்ந்த உறவுள்ள ஒன்றின் பகுதிகளேயாகும். மனிதர்களையும் வாழ்க்கையையும் நேசிப்பதும் மற்றவர்களின் இன்ப துன்பங்களில் அக்கறை காட்டலும், சமூக முரண்பாடுகளைக் களைந்து அதைச் சீரமைக்க விரும்புவதும் மனிதாபிமானத்தின் அம்சங்களேயாகும். அந்தவகையில் மஹாகவியை ஒரு மனிதாபிமானி என்று அழைப்பது முற்றிலும் பொருந்தும்.

தமிழ் வழக்கிலே மனிதாபிமானம், மனிதாபிமானி ஆகிய சொற்கள் இடர் உறும் மனிதர்கள் மீது இரக்கமும் நேசபான்மையும் காட்டுவதையே பொதுவாகக் குறிக்கின்றன. மேலைத்தேச வழக்கிலே இவை இன்னும் விரிந்த பொருளைப் பெறுகின்றன. இயற்கை அதீத நம்பிக்கைகளையும் உண்மைகளையும் நிராகரித்து மனித இயற்கையின் அடிப்படையில் விழுமியங்களையும் மனித அனுபவத்தின் அடிப்படையில் உண்மைகளையும் காண்பவரையே மனிதாபிமானி என்ற சொல்லால் அழைக்கின்றனர். இந்த வரைவிலக்கணம் மஹாகவிக்கு மிகப் பொருத்தமாய் உள்ளதை நாம் காணலாம். இடர் உறும் மனிதர்கள் மீது அவர் காட்டும் இரக்கமும் நேசபான்மையும் அவரது பல கவிதைகளில் மிகத் துலக்கமாகத் தெரிகின்றன. 'வீடும் வெளியும்' தொகுப்பில் உள்ள பல கவிதைகள் இத்தகையன.

குறிப்பாக சீமாட்டி, விட்டமுதல், தேரும் திங்களும், நீருழவன், வீசாதீர், திருடாதே, செத்துப் பிறந்த சிசு, மற்றவர்க்காய்ப் பட்ட துயர் ஆகியன இதற்குச் சிறந்த உதாரணங்களாகும். கஷ்டப்படும் சாதாரண மக்களையும் அவர்களது வாழ்க்கை நெரிசல்களையும் மிகுந்த அனுதாபத்துடன் இக்கவிதைகளில் மஹாகவி சித்திரிக்கின்றார். அதேவேளை, அவரது மிகப்பல படைப்புக்களில் இயற்கை அதீத நம்பிக்கைகளை மனித வல்லமையின் மீதுள்ள நம்பிக்கையினால் அவர் நிராகரிப்பதையும் நாம் காண்கின்றோம்.

வாழ்க்கையின் மீது ஓர் உறுதியான பற்றுதலும் வாழ வேண்டும் என்ற முனைப்பும் அவரது பெரும்பாலான படைப்புக்களில் பரவலாகக் காணப்படும் இரண்டாவது அம்சமாகும். இதே காரணத்தினால் விதியையும் கடவுளையும் மஹாகவி நிராகரிக்கின்றார்.

அண்டங்கள் எல்லாம் அலுவல் படுதல்
கண்டு இங்கு உலகோர் கடவுள் பொருள் ஒன்று
உண்டொன்றிடுவார் அதை வான் உயரக்
கொண்டாடிடுவார் கோயில் களிலே.
இல்லாதது ஒன்றினையே இவர்கள்
கல்லாக் கிடுவார், உளனேல் கடவுள்
பொல்லான் அவனைப் புகழ்தல் பிழை என்று
எல்லாம் அடியேன் எதிர் வாதிடுவேன்?

என்று 1954ல் மஹாகவி எழுதினார். இறைவனின் சித்தப்படியல்ல, வாழ்க்கை தன் பாட்டிலேயே போகின்றது என்ற பொருளில், 'தம் கருத்துப்படியன்று இறைவரோ தண்டவாளத்தின் மீதே செலுத்தினார்' என்று ஒரு சாதாரண மனிதனது சரித்திரத்திலும் அவர் எழுதினார். ஆகவே, வாழ்க்கையும் வாழும் முனைப்பும் முற்றிலும் மனிதரையே சார்ந்தது என்ற கருத்துக்கு அவர் வந்தார்.

உன்னோடு மிக உலைகின்றதனால்
என்னத்தைக் கண்டனரோ இவரே
பொன்னின் பின்னோடிடும் இப் புவியின்
சின்னத் தனம் நீங்கியதோ சிறிதும்.
பொருள் மக்களிடைப் பொதுவாகிட நீ
அருள் செய்தனையோ? அதுதான் இலையே
ஒருபோதும் இனி உனை நம்பிடில், எம்
இருள் போய் அகலும் என நின் றுழலோம்

என்ற கடவுளை நோக்கிய வரிகள் இதையே காட்டுகின்றன.

பிழையினைக் கடவுள் செய்தால்
சரியாக்கல் மனிதன் வேலை

என 'புதியதொரு வீடு' நாடகத்தில் மறைக்காடர் பேசுவதும் இதையே காட்டுகின்றது.

வாழ்க்கையும் வாழும் முனைப்பும் மனிதரைச் சார்ந்தது என்றபடியினால் விரக்தி, சோர்வு ஆகியவற்றுக்குப் பதிலாக முனைவு, நம்பிக்கை என்பவற்றை அவர் ஆதாரமாகக் கொண்டார். சாவின் மீது உள்ள பயத்தைக் களைய முயன்றார்.

'காற்றினால் உலைக்கப்பட்டுக்
கழுத்தினைக் குனிந்து சாம்ப
நேற்றை மழைக்கு வந்த
நெடும்புல்லோ நாங்கள்...'

'வேருக்குள் உறுதி கொண்ட
வேம்புகள் மனிதர்...'

'உண்மை கொடிதே, உலகில் அதனோடு
போரிட்டு வாழப் புகுந்தோம் கலங்குவதோ
வீரிட்டு அலறி விழுந்து புலம்புவதோ
பார் எட்டுத் திக்காய்ப் பரந்து கிடக்கிறது'

'எறிகின்ற கடல் என்று
மனிதர்கள் அஞ்சார்
எது வந்த தெனின் என்ன
அதை வென்று சொல்வார்...'

போன்ற வரிகளை இதற்கு உதாரணமாகக் காட்டலாம். சாவின் மீது மனிதருக்கு உள்ள பயத்திற்கு ஒரு சமாதானமாகவும் தேறுதலாகவும் மனிதர் சாவதில்லை என்ற கருத்துக்கு ஒரு புதிய அழுத்தம் கொடுக்க முனைந்துள்ளார்.

'அன்று பிறந்து இன்று இறப்பதுள்
ஆயதன்று நம் மானிட வாழ்வுகாண்
அப்பனே மகனாகி, உயிர் ஒய்தலற்று
உயர்வு ஒன்றினை நாடலே உண்மை'

என்ற அவரது கருத்து முற்றிற்று என்ற நாடகத்திலும் ஒரு சாதாரண மனிதனது சரித்திரத்திலும் கலைவடிவம் பெற்றுள்ளது. வாழ்வின் மீதுள்ள பற்றுதலின் ஓர் அம்சமே இது.

கவிஞர் முருகையன் மஹாகவியின் வாழ்க்கை நோக்குப் பற்றி ஓர் இடத்தில் குறிப்பிடுகையில் 'முரண்பாடுகளையும் இடர்ப்பாடுகளையும் கண்டாலும் காணாத மாதிரி விடுத்து இதுதான் உலக இயல்பு, ஏதோ ஏலுமானவரை சமாளிக்க முயல்வோம் என்ற பார்வைதான் இவரது படைப்புக்கள் பலவற்றில் ஊடோடி நிற்பது' என்றும், 'உலகத்தை உள்ளது உள்ளபடியே ஏற்றுக் கொண்டு அந்த உலகத்தில் இயலுமானவரை சுலபமான ஒரு பாதையில் நடந்து செல்கையில் கைக்கு எட்டும் சுகானுபவங்களை நுகர்ந்து ஈடுபடும் ஒரு வாழ்க்கைத் தத்துவம் இவரது கவிதைகளில் பின்புலமாக உள்ளது' என்றும் குறிப்பிட்டுள்ளார்.

முருகையன் என்ன அடிப்படையில் இந்த கருத்துக்கு வந்தார் என்பது தெரியவில்லை. ஆனால், நாம் இதுவரை பார்த்த மஹாகவியின் வரிகளே இக்கூற்றுத் தவறானது என்பதைக் காட்டப் போதுமானவை என்று நினைக்கின்றேன். மஹாகவி பெரும்பாலும் சாதாரண மக்களின் நடப்பியல் வாழ்க்கையைத் தன் படைப்புகளுக்குக் கருவாகக் கொண்டவர். அன்றாட வாழ்க்கை அனுபவத்தைக் கருவாகக் கொள்ளும் எவரும் சமூக முரண்பாடுகளைப் பிரதிபலிக்காமல் - கண்டும் காணாதது போல் ஒதுங்கிச் செல்ல முடியாது. அத்தகைய கலைஞரின் படைப்புகளில் விரும்பியோ, விரும்பாமலோ, பிரக்ஞை பூர்வமாகவோ பிரக்ஞை பூர்வமற்றோ அவை பிரதிபலிக்கப்படவே செய்யும். அது யதார்த்த நெறியின் முக்கிய பண்பு ஆகும்.

நிலப்பிரபுத்துவ வர்க்கத்தின் சார்பில் நின்ற பால்சாக்கும், கிறிஸ்தவ ஆன்மீகவாதியான டால்ஸ்டாயும் கூட இதற்கு விதிவிலக்கு அல்ல என்பதையும் நாம் அறிவோம்.

அந்த வகையில், மஹாகவியின் முக்கியமான படைப்புக்கள் அனைத்திலும் சமூக முரண்பாடுகள் மீதும் அதன் போலி ஆசா

ரங்கள் மீதும் எதிர்ப்புணர்ச்சியும் அவற்றைக் களைய வேண்டும் என்ற விருப்பும் சில இடங்களில் வெளிப்படையாகவும் சில இடங்களில் பின்புலமாகவும் தெரிவதை நாம் காணலாம். 60-க்கு முந்திய அவரது பல தனிப்பாடல்களில் இந்த எதிர்ப்புணர்ச்சியும் சமூக முரண்பாடுகளுடன் ஒத்தியங்க முடியாத மனப்பாங்கும் தெளிவாகத் தெரிகின்றன. இம்மானிடர், இனம் உய்ய வழி உண்டோ, மடிகிறோம், இயற்கைப் பெருந்தாய் இதயம், கடவுளே முதலிய கவிதைகள் இதற்குச் சிறந்த உதாரணங்களாகும். சீமாட்டி, செத்துப் பிறந்த சிசு, விட்டமுதல், நீருழவன், திருட்டு, தேரும் திங்களும் போன்ற கவிதைகளில் மனித வாழ்வின் நெரிசலும், முரண்பாடுகளும், மோதலும் தெளிவான சித்திரங்களாகத் தீட்டப்படுகின்றன. மனித வாழ்வு ஏன் இவ்வாறு அவலமாக இருக்க வேண்டும்? என்ற கேள்வியே இப்படைப்புகளின் அடிப்படைத் தொனியாகும். இந்த அவலம் களையப்பட வேண்டும் என்ற தூண்டுதலே அவற்றின் பின்புலத்தில் அழுத்தப்படுகின்றது.

சடங்கு, கோடை, கண்மணியாள் காதை ஆகிய 60-க்குப் பிந்திய மஹாகவியின் பெரும் படைப்புக்களில் சமூக முரண்பாடுகளே பிரதிபலிக்கப்படுகின்றன. தன் திருமணத்துக்கு எந்தவித எதிர்பார்ப்புமில்லாத போதும் போலியான சடங்காசாரங்களுக்குக் கட்டுப்பட விரும்பாது தனது காதலியுடன் வன்னிப் பகுதிக்கு இடம்பெயர்ந்து செல்லும் ஒரு யாழ்ப்பாணத்து இளைஞனின் கதையைக் கூறுகின்றது சடங்கு. கோடை, ஆங்கிலேயரின் ஆட்சிக் காலத்தில் அவர்கள் தோற்றுவித்த புதிய நாகரிகத்துக்கும் பழைய விழுமியங்களுக்கும் இடையே தோன்றிய முரண்பாடுகளைச் சித்திரிப்பது. கண்மணியாள் காதை சமுதாய மூடத்தனங்களையும் சாதிக் கொடுமைகளையும் பற்றிய ஒரு துன்பியல் காவியம். இவை எல்லாம் உலகத்தை உள்ளபடி ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற மனோபாவத்தைக் காட்டவில்லை. சமூக முரண்பாடுகளையும் இடர்பாடுகளையும் கண்டும் காணாதது போல் மஹாகவி இருந்தார் என்பதற்கு அவரது படைப்புக்களில் எவ்வித ஆதாரமும் இல்லை.

மஹாகவி சமூக முரண்பாடுகள் பற்றிய தன் உணர்வுகளை தன் படைப்புக்களில் காட்சியனுபவ வெளிப்பாடுகள் மூலம் மட்டுமன்றி, கருத்துநிலையிலும் வெளிப்படுத்தியுள்ளார். 'பாதி உலகை மறுபாதி நின்றுழலும் சேதியைக் காணார். செழும் சிந்தனையற்றார், காதலோ காதல் கவிதைகளோ கட்டுவதில் போதைக் கழிக்கும் பொடியள்' என்று முரண்பாடுகளைக் காண மறுக்கும் கவிஞர்களை அவர் சாடுகின்றார் 'பிறர் உழைப்பில் பிழைத்தல்' என்ற கவிதையில் அவர் பின்வரும் கருத்துக்களைக் கூறுகின்றார்.

சுற்றம்போல் சேர்ந்து சுய உழைப்பைப் பங்கிட்டு
நிற்றலே வைய நிலை
இந்த நிலைமை இடறப் பிறந்தவரை
நிந்தித்து நீறு படுத்து
உட்கார்ந்து மற்றோர் உழைப்பிற் பிழைப்பவனின்
நிட்டுரம் நீக்கு நிலத்து
சுரண்டு வோர்க் கஞ்சிச் சுருண்டு கிடவேல்
திரண்டுபோய் நீதி பெறும்
எதுவும் எவர்க்கும் பொது என்று பெற்றால்
அதுவன்றோ வைத் தறம்

இவை எல்லாம் அடிப்படையில் சமுதாய மாற்றம் வேண்டும் என்ற மஹாகவியின் விருப்பத்தையே காட்டுகின்றன. தப்பிச் செல்லும் மனோபாவத்தைக் காட்டவில்லை. ஆனால், இந்த மாற்றத்துக்கான வழிமுறைகள் என்ன என்பது பற்றிய எவ்வித தெளிவான சிந்தனையும் அவரிடம் காணப்படவில்லை. அந்தவகைப்பட்ட அரசியல் சித்தாந்தம் எதையும் அவர் கொண்டிருக்கவில்லை. எப்போதும் இயக்க பூர்வமான நடவடிக்கைகளிலிருந்து அவர் தனித்தே நின்றார். ஆயினும், தனது இயல்பான மனிதாபிமான உணர்வு நிலைக்குட்பட்டு கஷ்டப்படும் சாதாரண மக்களின் அன்றாட வாழ்க்கை நெரிசலுக்குக் கலைவடிவம் கொடுத்தார். ஓய்தல் அற்று உய்வு ஒன்றினை நாடும் வேட்கையை அதில் அவர் அழுத்தினார். அதுவே மஹாகவியின் தனித்துவம் ஆகும்.

nuhman@thaiveedu.com

சாந்தமும் சந்தமும் சந்தித்த சாதாரண மனிதன் மஹாகவியின் இரு நாடகங்கள்

- ஞானம் லெம்பட்

அவர் மறைந்து ஐம்பது ஆண்டுகள்!. ஆனால், ஐந்து ஆண்டு கள் போலவே இன்னும் உள்ளது.

பத்திரிகை ஒன்றில் வந்த அவரது கவிதை கண்டு, மனம் மகிழ்ந்து, அவருக்கு ஒரு குறிப்பை, 'போஸ்ட்காட்'டில் நான் வரைந்தனுப்பினேன். அவர் மன்னார் கச்சேரிக்கு மாவட்டக் காணி அதிகாரியாக வந்த போது, கச்சேரி ஊழியர் ஒருவர் மூலம் என் னைச் சந்திக்க விரும்புவதாகச் செய்தி அனுப்பினார். செய்தி கொண்டு வந்தவர் இதை என் ஐயாவிடம் சொல்ல, கச்சேரி உயர் அதிகாரி பள்ளி மாணவனைச் சந்திக்க வேணுமெண்டால் 'இவன் ஏதோ வம்பு செய்திருப்பான் என நினைத்து (சிறிது பயத்துடன்) இல்லை, இல்லை... நானே இவனைக் கூட்டி வருவேன்' என்று சொல்லி வந்தவரை அனுப்பி வைத்தார். மனதில் பயத்துடனும், என்னில் கோபத்துடனும் என்னைக் கூட்டிச் சென்றார் மன்னார் கச்சேரிக்கு. ஐயாவுக்கோ யோசனை பல. கச்சேரியில் விசாரித்து அவரது கந்தோர் வாயிலில் போய் நின்றோம். உதவி ஆள் ஒருவ ருடன் கதைத்தபடி, காகிதக் கோவைகளைப் பார்த்துக் கொண்டு இருந்த அவர் 'என்ன வேணும்' என்ற பார்வையை வீசி, தன் தலையை 'வாங்கோ' என்று ஆட்டினார். 'நீங்க இவனைப் பார்க்க வேணும் எண்டியளாம்' என்றார் என் ஐயா. தன் நெற்றியைச் சுருக்கி 'உன்னையா' என்பது போல் எம்மைப் பார்த்து 'வாங்கோ' எண்டார். கந்தோர் உள்ளே போன எம்மிடம் 'சொல்லுங்கோ' எண் டார். என் ஐயா கோபங்கொண்ட பார்வையை என் மீது வீசினார். பயத்துடன் 'நான் ஞானம் லெம்பட்' என்றேன். கதிரையில் இருந்து எழும்பி 'ஓ' என்று நீண்ட சிரிப்புடன் கதிரையைக் காட்டி 'இருங்கோ' எண்டார். அவரோ பெரிய அதிகாரி. நானோ விலாச மில்லாத பள்ளிப்பயல். எனக்கு மெல்லிய நடுக்கம்.

அவரது மேசையோரமாய் இருந்த தோல்பையிலிருந்து ஒரு 'போஸ்ட் காட்டை' எடுத்து என் ஐயாவிடம் காட்டி, 'இதனால் தான் இவரைத் தேடினேன்' என்றார் எனது நடுக்கம் இன்னும் கூடியது. ஐயா கோபமாக என்னைப் பார்த்தார். என் ஐயாவின் நோக்கறிந்த அவர், அவருக்கே உரிய நளினத்துடன் 'உங்கள் மகன் எனக்க ளித்த சேட்டிபிக்கற்' என்றார். 'இவன் என்னடா எழுதியிருப்பான்' என்ற பார்வையுடன் என்னைப் பார்த்த ஐயாவிடம் மஹாகவி சொன்னார் 'என் கவிதையை ரசித்து உங்கள் மகன் எழுதிய கடி தம்' என்றார். என் ஐயாவின் முகம் சிரிக்க, என் நடுக்கம் நீங்கி யது. இதுவே எமது முதற் சந்திப்பு.

எம் சுகம் விசாரித்து 'ரீ குடிப்போம் என்று மணியை அடித்தார். வந்தவரிடம் மூன்று விரலைக் காட்டி, மூன்று 'பிளென் ரீ' கொண்டு வாறிங்களே' என்றார்.

பெரிய சிரிப்புடன் 'அப்போ எப்பிடி இருக்கிறீங்க... என்ன செய் றீங்க...' என்ற உரையாடலுடன், மேசையிலிருந்த கோவையொன் றில் சிறு குறிப்பு எழுதி மூடி விட்டு என்னைப் பார்த்து புன்முறு வலுடன் 'உங்க சிறு குறிப்புக்கு நன்றி' என்றவர் திடீரென

'கல்லடுக்கி மேலே கனத்த உருளைகளைச்
செல்லவிட்டு செல்லவிட்டு செப்பனிட்ட
நல்லதொரு வீதி'

என்று சிரித்தார், நீண்டதொரு பார்வை என் மீது விட்டார், அது 'ஞாபகம் இருக்கா' என்ற பார்வை, நானும் சிரிப்புடன்

'அதனில் வெகுண்டோடும் வண்டிகளில்
மோதி நடப்போர் முடிவெய்தும்
தீது கல, இட்ட நடைப்பாதை' என்றேன்.

பெரிய சத்தமாகச் சிரித்து விட்டு

'ஆழம் புதைத்த அறம்போல்
முளைத் தெழுந்தாய்
வாழ உனக் கென் வாழ்த்து'

என்றார். இது என்னை வாழ்த்த அவரது 'சிறுபுல்' என்ற கவிதை யின் மாற்றப்பட்ட வரிகள். ஆனால் உண்மையாகக் கவிதை முடி வது...

'ஆழப் புதைத்த அறம்போல்
முளைத்தெழுந்தாள்
வாழ அவளுக்கென வாழ்த்து' என்று.

இதுவே அவரது 'சிறுபுல்' தந்த அறிமுகம். அன்று அவர் தந்த 'பிளெயின் ரீ' என் நெஞ்சில் இன்னும் இனிக்கிறது.

நான் பிறக்கும் முன்பே ஈழத்துக் கவிதை உலகை ஆட்சி செய்த வர். ஈழத்துக் கவிதை மரம் ஆழமாக, உறுதியாக வேரோடி, விசா லமாகச் கிளை பரப்பி இருக்க காரணமான முன்னோடி. ஆனால் கலாநிதி கைலாசபதியாலும், அவரது சீடர்கள் சிலராலும் (முற் போக்கு அணியினர்) நிராகரிக்கப்பட்டவர்.

'கொண்டேன், கொடுக்கிறேன்
கொள்ளாவிட்டால் என்ன
கோதைப் பழமென் போர்
குறைகள் கண்டால் என்ன?

என வீரியத்துடன் கவிதை சொல்லி அவர்கள் எல்லோரையும் திணறடித்தவர்.

வாழ்வுமீது அதீத பற்றுக் கொண்ட இவரது பார்வை எப்பொழுதும் சமூக அமைப்பில் சாதாரண மக்கள் மீதே இருந்து வந்திருக் கிறது. சாதாரண மனிதர்கள் பற்றிய சரித்திரங்களையே தமது நாடகக் கருவாகக் கொண்டுள்ளார். கோடை, புதியதொரு வீடு, முற்றிற்று ஆகிய மேடை நாடகங்கள் மிகச் சாதாரண மக்களின் வாழ்வு நிகழ்வுகள், அவர்களது வாழ்க்கை முறைகள், அவர்கள் எதிர்கொண்ட சவால்கள், நிந்தனைகள், தீர்வுகள் என்பற்றைப் பகைப்புலனாகக் கொண்டவை. வாழ்வு துயர் நிறைந்தது என் பதை அறிந்தும் அது மகிழ்வும், இனிமையும் கொண்டவை என்ப தையே தமது நாடகங்களில் கொண்டு வந்தவர்.

இவர்மீது சிலரால் வைக்கப்பட்ட 'குற்றச்சாட்டு' இவர் முற்போக்

காளர் அல்லர் என்பது. அதாவது மார்க்சீயக் கருத்துகளை தமது படைப்புகளில் கொண்டு வரவில்லையென்பது.

இவர் கூறியதெல்லாம் மனித வரலாறு, சமூக வளர்ச்சி, அதன் மாற்றங்கள் என்பனவே.

இங்கு மார்க்சியம் பற்றி கலாநிதி சிவதம்பி கூறும் ஒரு கருத்து நோக்கற்பாலது. 'சமூகவியலின் வளர்ச்சியிலேயே மார்க்சியத்துக்கு ஒரு முக்கிய இடமுண்டு. மார்க்சியம் கூறும் சமூக வரலாறு உண்மையில் வரலாற்றுச் சமூகவியலினுள் வருவது. மனித வளர்ச்சியை, வரலாற்றை, சமூக இயக்கத்தை நாம் தனிமனிதர்களாக (தனித்தனி மனிதர்களாக) இருக்கும் அதே வேளையில், ஒட்டு மொத்தமான ஒரு விடயப்பொருளாகப் பார்க்கும் ஆற்றலை மார்க்சியம் தருகிறது.' (கார்த்திகேசு சிவத்தம்பி யாழ்ப்பாணம் சமூகம், பண்பாடு, கருத்து நிலை. பக்: XII)

பொதுவாக நாடகங்களின் கதை அமைப்பு, ரசனை, தனித்துவம் என்பவற்றைக் கொண்டு நாடகங்களை இரு பெரும் பிரிவினுள் அடக்கலாம்.

- நவீன நாடகங்கள்.
- மரபுவழி நாடகங்கள்.

மஹாகவியின் நாடகங்கள் நவீன நாடகங்கள் என்ற பிரிவுனுள் வருவது.

ஈழத்தில் கலையரசு சொர்ணலிங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்ட பார்சி நாடகங்கள் மத்திய தர மக்களுக்காகத் தயாரிக்கப்பட்டவை. எனினும் இவற்றில் சமூக, தேசியப் பிரச்சினைகள் ஆராயப்படவில்லை.

1936களில் பேராசிரியர் கணபதிப்பிள்ளை அவர்களினால் பல்கலைக்கழக அரங்குகளில் குடும்ப, சமூகப் பிரச்சினைகளை மையமாகக் கொண்ட நாடகங்கள் மேடையேற்றப்பட்டன.

1956ம் ஆண்டு இலங்கையில் எற்பட்ட அரசியல் மாற்றங்கள் காரணமாக சிங்கள நாடகங்கள் தேசியக் கொள்கைகளை அடிப்படையாக வைத்துத் தயாரிக்கப்பட்டன.

அதேவேளை, அவற்றிற்குச் சமாந்திரமாக மொழிபெயர்ப்பு நாடகங்களும் சிங்கள நாடக மேடையில் பெரும் பாதிப்புகளை ஏற்படுத்திற்று. இதன் தாக்கம் தமிழ் நாடகங்களையும் பாதிக்கத் தொடங்கிற்று. இதன் காரணமாகத் தமிழில் நான்கு வகையான நாடகங்கள் தயாரிக்கப்பட்டன. அவையாவன:

- தமிழ்பேசும் மக்களின் சமூகப் பிரச்சினைகள் சார்ந்தவை.
- யாழ்ப்பாண மக்களை மையமாகக் கொண்டு அவர்களது பிரதேச மொழிகொண்டு எழுதப்பட்டவை.
- சரித்திர இதிகாச நாடகங்கள்.
- மொழிபெயர்ப்பு நாடகங்கள்.

சிங்கள நாடகங்களின் தாக்கங்களினாலும், கொழும்பில் பெற்ற நாடகம் பற்றிய அறிவாலும் சுஹைர் கமீது, தாசீசியஸ், சுந்தரலிங்கம் போன்றோர் பல காத்திரமான நாடகங்களைத் தயாரித்தனர். இவற்றில் முருகையனின் கடுழியம், சிவானந்தனின் காலம் சிவக்கிறது, சுந்தரலிங்கத்தின் அபசுரம், மஹாகவியின் கோடை, புதியதொரு வீடு என்பன முக்கியமானவையாகும்.

மஹாகவியின் கோடை, புதியதொரு வீடு ஆகியன பா(கவிதை) நாடகங்களாகும்.

இது எளிமையான பேச்சோசையில் எழுதப்பட்ட கவிதை நாடகம். இவரது மூன்று மேடை நாடகங்களில் கோடை, புதியதொரு வீடு ஆகியனவே மேடையேற்றம் கண்டமையால் அவை இரண்டுமே இங்கு ஆய்வுக்கு உள்ளாகின.

1962ல் முருகையனால் எழுதப்பட்டு, கலாநிதி சிவத்தம்பியால் நெறியாள்கை செய்யப்பட்ட 'குற்றம் குற்றமே' என்ற கவிதை நாடகமே முதல் மேடையேற்றம் பெற்ற நாடகமாகும். இதனைத் தொடர்ந்து நீலாவணனின் 'மழைக்கை, திமிலைத்துமிலனின் முல்லைக்குமரி என்ற நாடகங்கள் மேடையேற்றம் பெற்றன. ஆனால் இவையாவும் இரசிகர்களின் கவனத்தைப் பெறவில்லை. இவைகள் இலக்கிய நாடகங்கள் என்பதும் குறிப்பிடத்தக்கவை.

மிகப்பெரிய கலைஞர்களின் படைப்புகளை அவர்கள் வாழும் காலம், அரசியற் சூழ்நிலைகள், மக்களின் பண்பாடு, அவர்களது வாழ்க்கை முறைகள் என்பனவே நிர்ணயம் செய்கின்றன. இவற்றை அன்னியர் ஆட்சிக் காலத்தில் வாழ்ந்த மஹாகவியின் கோடையில் காணலாம்.

அன்னியர் ஆட்சியினால் ஏற்பட்ட சுதந்திரத் தாகம், அரசாங்க உத்தியோக மோகம், வர்க்க முரண்பாடுகள், பொருளாதாரத் தாக்கங்கள், பண்பாட்டு மாற்றங்கள், நாட்டார் கலைகள் மேல் தட்டு மக்களின் வெறுப்புக்குட்பட்டமை, சாதி வேறுபாடு என்பவற்றால் பாதிக்கப்பட்ட ஒரு நாயனக்காரனின் கதையைக் கொண்டது கோடை.

இயல்புவாத முறையில் அமைந்த கோடை நாடகம் ஐந்து விடயங்களைக் கொண்டது.

போலி மனோபாவம்:

யாழ். உயர்தட்டு மக்களின் போலி மனோபாவத்தையும், சமூகத் திற்குப் பயந்து போலிக் கொள்கைகள் பேசி, மறைமுகமாக தாம் பேசும் கொள்கைகளுக்கு எதிராகச் செயற்படுதலையும் குறிக்கும்.

நாயனக்காரர் வீடு வந்தார் விதானையார்.
'சோடா வாங்க பொடி இல்லை' என்று சொன்ன செல்லத்திடம் விதானையார் கூறுகிறார்.

'வேண்டாம் பாருங்கோ விடியற்புறம் எழும்பி
ஆண்டான் நம் வீட்டின் அடிவளவிற்சீவுகிற
பாளை வடித்த பதநீர் அருந்தி வந்தேன்.
ஆளுக்கு நல்லது தானே, ஐயரே?
தட்டத்தை மட்டும் இங்கே தள்ளுங்கோ, போதும் அது!

சட்டப்படி குற்றம் இல்லை எனினும் எங்கள்
அப்பருக்கும் அப்பர், அவரப்பர், அவ்வப்பர்
அப்பருக்கும் அப்பர், அவர் அப்பர் கால முதல்
இன்று வரையும் இருந்து வருகின்ற
ஒன்று மரபென் றுளதே. அதனால் நாம்
கோப்பி உங்கள் வீட்டில் குடிப்பதற்கு ஞாயம் இல்லை!

சாப்பிடவும் மாட்டோம்! சரிதானே? ஐயரோ
ஞானி. பிள்ளை குட்டி இலாத தனிநபர்
நானோ உலகில் நடக்கிறவன் நாளைக்கு ஊர்
ஏனோ தானோ என்றெதையும் கதைக்குமே.
அப்பருக்கும் அப்பர், அவர் அப்பர், அவ்வப்பர்
அப்பருக்கும் அப்பர், அவர் அப்பர் காலமுதல்
நாமே இவ்வூரை நடத்துகிறோம். ஆதலினால்
ஓமோம் எமக்கென்றிருக்கு தொரு பொறுப்பு
தின்னக் குடிக்க முடியாது நும்வீட்டில்!
எங்களுக்கோர் கொள்கை இருக்கிற தையரே.

(கோடை, பக்.19)

என்று உயர் சாதி மமதையுடன் போலிக் கொள்கை பேசிய விதானையார்.

'கொள்கை இருக்கட்டும்,
கோப்பி குடியுங்கோ'

என்று செல்லமும்.

'மெள்ள மெள்ள எல்லாம் சரியாய் வரத்தானே
வேணும், குடியும், கதை வெளியில்
போகாது காணும்'

எனப் பஞ்சையர் சொன்னபின், தனது போலிக் கொள்கையைக் கைவிட்டு கோப்பியைக் குடித்து விட்டு, விழுந்தும் மீசையில் மண் ஒட்டவில்லை என்பது போல.

'சட்டப்படி இதற்கோர் 'சாச்சீட்' கிடையாது
இட்டலியைத் தின்றார் அவர். நான் இதைக்
குடித்தேன். உண்டலிலும் பார்க்கப்
பருகல் உறைப்பில்லைக் கண்டியளே'

என்று சமாதானம் கூறுவாதாகப் பிட்டுக் காட்டுகிறார் மஹாகவி.

அரசாங்க உத்தியோக மோகம்

'பொலிசாளர்!
வித்தை என்று சொல்லி,
விடியும் வரை இரவு
முற்றம் முளித்திருந்து, மூசிக் குழல் மூலம்
கத்தும் தொழிலே'

- கோடை, பக்.28

என்று செல்லம் மூலமாக நாயானம் வாசிப்பதைவிட 'பொலிசாளர்' என்ற உத்தியோக மோகத்தைச் சாட்டுகிறார் கவிஞர்.

வாழ்க்கையிலும், எதிர் காலத்திலும் உள்ள நம் பிக்கை:

(பஞ்சையர் மூலம் கூறுகிறார்).

'என்றோ ஒரு நாள் இருந்து பார் மாணிக்கம்,
நின்றந்தக் கோயில்,
நிமிர்ந்து, நெடுந்தூரம்
பார்த்துப் பயன்கள் விளைக்கின்ற கோபுரமும்,
வேர்த்துக் கலைஞர் விளைத்த மணி மண்டபமும்,
வீதிகளும், நூறுவிளக்கும், பரதத்தின்
சேதிகளைக் கூறும் சிலப்புச் சிறுபாதம்
ஆடும் அரங்கும், அறிந்து சுவைஞர்கள்
நாடிப் புகுந்து நயந்திட நீ சோமனுடன்
ஊதும் குழலில் உயிர் பெற்று உடல் புளகித்து
ஆதி அறையில் அமரும் கடவுளுமாய்
என்றோ ஒருநாள் எழும்பும், இருந்து பார்'

- கோடை, பக்.17

கட்டுடைத்து வெளிவரல்:

அரச உத்தியோக மோகம் கொண்ட செல்லம், மகள் கமலியை பொலிசாளர் முருகப்புவுக்கு திருமணம் செய்துவைக்க முயன்றும், கமலி தேசீயக் கலைஞனான, நாயனக் கலைஞனான சோமுவைத் திருமணம் செய்து...

'உண்மை கொடிதே!
உலகில் அதனுடனே போரிட்டு வாழப் புகுந்தோம்.
கலங்குவதோ வீரிட்டலறி விழுந்து புரளுவதோ
பார் எட்டுத் திக்காய் பரந்து கிடக்கிறது'

- கோடை, பக். 57

என்று பரந்து கிடக்கும் உலகில் வரும் தடைகளை உடைத்து வாழுவோம் என்கின்ற கமலியையும் படைக்கிறார் நாடகாசிரியர்.

மேலைநாட்டுத் துதிபாடல்:

(முருகப்பு மூலம்)

'தேங்கிக் கிடந்த சிறுதீவை வெள்ளையன்
ஓங்கி வளர உயர்த்தினான் இன்றிங்கே
தார்த்தெருக்கள் ஓடும், தடத்தில் ரயில் ஓடும்
வார்த்தைகளில் எல்லாம் வழிந்தோடும் இங்கிலீசு
பார்த்திருக்க மாட்டீர் அவனின்றி'

கோடை, பக். 45

என்று கூறுகிறார்.

'இவற்றையெல்லாம் நோக்குகையில் முரண்பாடுகளையும், இடர் பாடுகளையும் கண்டாலும் காணாதமாதிரி விடுத்து இதுதான் உலக இயல்பு, ஏதோ ஏலுமானவரை சமாளிக்க முயல்வோம் என்று உள்ளதை எதிர்க்காமல் உள்ளபடி ஏற்பவர் மஹாகவி' என்று முருகையன் வைத்த விமர்சனம் முற்றிலும் பிழையானது மட்டுமல்ல, போலி ஆசாரங்களை உடைத்தெறிய வேண்டுமென்ற மஹாகவியின் ஆதங்கமும் தெள்ளத் தெளிவாகிறது.

கோடையின் வெற்றியில் நான்கு நாளில் எழுதப்பட்ட நாடகம் புதியதொரு வீடு. இது ஒரு குறியீட்டு நாடகம். இது நண்பர் சிங்காரவேலு கூறிய, யாழ்ப்பாண மீன்பிடிக் கிராமம் ஒன்றில் நடந்த உண்மைக் கதையை களனாகக் கொண்டு எழுதப்பட்டது.

இது 1864 ஆண்டு அல்பிரட் லோட் ரெனிசன் (Alfred Lord Tennyson) என்பவர் எழுதிய Enoch Arden என்ற காவியத்தைத் தழுவி எழுதப்பட்டது என்பர் சிலர். ஆனால் நண்பர் சிங்காரவேலு கூறிய உண்மைக் கதையை வைத்து எழுதப்பட்டது என்பது தான்

ஓர் ஆழமான நாடகம் எல்லாப் பொருண்மைகளையும் வெளிப்படையாகக் காட்டாமல், சிலவற்றைத் தன்னகத்தே அடக்கி வைத்திருக்கும். அப்படைப்பில் புதையுண்டிருக்கும் பல கருத்துகள் சிலருக்கு முதல் மேடையேற்றத்திலோ அல்லது வாசிப்பிலோ கிட்டாது போகலாம். இவை அப்படைப்பில் பயன்படுத்தப்பட்டிருக்கும் குறியீடு அல்லது குறிப்பு மொழி காரணமாக இருக்கலாம். எனவே, அந்நாடகத்தை முழுமையாக அறிந்துகொள்ள அங்கு பயன்படுத்தப்பட்டுள்ள குறியீடுகளை அல்லது குறிப்புமொழியை ஆழமாகத் தேடி அறிதல் வேண்டும்.

உண்மை.

இரண்டாம் உலகப் போரில் காணாமற் போகும் ஒரு போர்வீரனின் கதையைக் கூறும் செக்கோசெலவாக்கிய நாவலான இருபத்தைந்தாவது மணி (Twentyfifth Hour) உம் புதியதொரு வீடு கதையை ஒத்ததே.

ஹோமர் (Homer) எழுதிய கிரேக்க காவியமான 'ஒடிசியின் கதாநாயகனான' ஒடிசியஸ் பத்துவருடங்கள் நடந்த Trojan போரின் பின் மேலும் பத்து வருடங்கள் எல்லா இடங்களும் அலைந்து, பின் நாடு திரும்புகையில் அவனது மனைவி Penelope உம் மகன் Telemachusம் அவனுக்காகக் காத்திருந்தார்கள். ஆனால் கதையின் முடிவு மாறுபட்டது என்பது கவனத்தில் கொள்ளத்தக்கது.

எனினும் 'புதியதொரு வீடு' நாடகம் மனிதவாழ்வில் மனித சக்திக்கு மீறி நிகழும் இன்னல்களையும் மனிதர் அவற்றை எதிர் கொண்டு அவற்றைக் கடந்து செல்லலையும் மையமாகக் கொண்ட ஒரு கலைப் படைப்பு' என்று பேராசிரியர் எம்.ஏ. நுஃமான் கூறுகிறார்.

நாடகம் என்பது ஒருவரின் செயலைப் பிரதிபலிப்பதாகும். அப்பிரதிபலிக்கும் செயற்பாட்டுக்கு நடிப்பு முக்கியமானதாகும். நாடகம் வெளிப்புறச் செயல்களைப் பிரதிபலிக்கும் அல்லது உள்ளார்ந்த அனுபவங்களை வெளிச் செயற்பாடுகள் மூலம் சுட்டியுணர்த்தும். இச்செயற்பாட்டைச் சுட்டியுணர்த்த குறியீடுகள் பயன்படும்.

குறியீடுகள் அனுபவத்துடன் தொடர்புடையது. இது உடல் சார்ந்த, உடல் சாரா உலகுடன் நெருக்கமானது. குறியீட்டாளர்கள் பார்வையாளர்களில் ஒருவித உணர்வாற்றல் நிலையை உருவாக்க முயல்கின்றனர்.

குறியீடுகள் நாடகங்களில் காட்சிப்படுத்துதலில் ஏற்படும் சிக்கல்களை அல்லது உணர்வுகளை ஏற்படுத்துதலில் உள்ள சிரமங்களை இலகுவாக்கி மேடையில் கொண்டுவரப் பயன்படுகிறது. கற்பனையான ஒன்றை மேடையில் கொண்டுவர மனிதர்களைக் குறியீட்டுப் பொருளாகக் காட்டுதல் நவீன நாடகங்களில் வழமையான தொன்றாகும்.

இச்செயற்பாடுகள் நாடக ஆசிரியராலும், நெறியாளராலும் மிகக் கச்சிதமாகப் புதியதொரு வீட்டில் கையாளப்பட்டுள்ளது. புதியதொரு வீட்டின் கதை மாந்தர்களின் பெயர்களே ஒரு குறியீடு தான்.

மாயன்: இவன் நாடகத்தில் மாயமாக மறைந்து மீண்டும் வருபவன். இவன் பாசமற்ற ஒருவனாக அல்லது அன்பை உருவகிக்கும் ஒருவனாக அல்லாது வாழ்வின் குறியீடாக வருகிறான். எமது வாழ்வைக்கட்டுப்படுத்தும் ஒரு மாய சக்திக்கு உடலுருக் கொடுப்பவன்.

மாசிலன்: மாசு + இலன் - மாசு இல்லாதவன். அண்ணனின் மனைவியை காரண காரியத்துடன் திருமணம் செய்பவனாதலால் மாசு இல்லாதவன்.

மயிலி: மை + இலி - குற்றமற்றவள்.

மையுண்ட நெடுங்கண்ணாத்தை: மை + உண்ட + நெடுங்கண்ணாத்தை. மை - குற்றம் பிடிப்பதில் கண்ணுடையவள்.

மறைக்காடார்: மறையாளர் ஆன்மீக வாதி, நல்லதையே செய்ய முனைபவர். பிழையினை யார் செய்தாலும் அதைத் திருத்துதல் எமது கடமை என்பவர். அவர் கூறுகிறார்.

'பிழையினைக் கடவுள் செய்தால்
சரி ஆக்கல் மனிதன் வேலை
அழ அதில் ஒன்றும் இல்லை...'

என்று...

புதியதொரு வீட்டின் குறியீடுகள் மிக ஆழமானதும் அகலமானதுமாகும்.

புதிய தொருவீட்டில், மாயன் கடலில் அடித்துச் செல்லப்படுமுன் நடந்த சம்பவத்தை மன்னவனுக்குக் கூறும் காட்சியை மேடையில் கொண்டுவருவது நாடகம் மேடையேற்றம் கண்டு ஐம்பது வருடங்கள் கழிந்தாலும் இன்னும் கண்முன் நிற்பது நாடகாசிரியரதும் நெறியாளர் தாசீசியஸ் அவர்களதும் திறமைதானே.

'அன்றைக் கரிநாள், அதோ அங்கே நம்வீடு
நின்ற காலத்தில் ஒரு நாள்...'

என்று மாயன் தனக்கு நடந்தவற்றைக் கூறத் தொடங்குகையில், பழைய நினைவுகளையும், காட்சிகளையும் மேடையில் நிழலாட்டமாகக் காட்ட ஒலி, ஒளிக்குறிப்புகளைக் காட்டும் குறியீடுகள் குறிப்பிடத்தக்கது.

நாடகத்தின் கடைசிக் காட்சியில் மாயன் தன் கையைக் காற்றில் எறிந்து வெறுவெளியில் நடப்பது அவனது மறுவாழ்வின் மறுஉருவைக் காட்டுகிறது. அவன் கடலை வெறித்துப் பார்ப்பது இழந்து போன அன்பின் ஆழத்தை மீளுருவாக்கம் செய்வதாகும். பின்னர் மீண்டும் நடந்து செல்வது அன்பின் தொடர் நிலையைக் காட்டுகிறது. நடந்தவன் இருட்டில் நின்று மீள நடப்பது 'தனியனா

கவும் என் வாழ்வில் நடப்பேன். தொடர்ந்தும் வாழுவேன் என்பதன் குறியீடாகும். காற்றின் வேகத்தில் தென்னோலை அசையும் ஓசையும், தூரத்தே ஓலமிடும் நாயின் குரலும் மாயனின் மாசற்ற அன்பு அவனிடமிருந்து தூரப் போவதையும் கூறும் குறியீடாகும்.

மாயனும் மன்னவனும் மேடைக்குக் குறுக்காக விறைப்பாகவும், அளந்து வைக்கும் காலடியுடன் நடக்கும் நடையும் மாயவனின் மன உறுதியைக் குறிக்கும் அடையாளமாகும்.

இந்நாடகம் கலைக்கும் வாழ்வுக்கும், சுதந்திரத்திற்கும் கடமைக்கும், இயற்தூண்டலுக்கும் செயல் நோக்குக்கும் இடையிலான முரண்பாட்டைக் காட்டுகிறது.

மீனவர்களின் வாழ்வு கடலோடு இருந்தாலும்...

'கறிசோறு பொதியோடு தருகின்ற போதும்
கடல்மீது இவள் கொண்ட பயம் ஒன்று காணோம்'

என்ற மனநிலையும்...

'நெறிமாறு படநூறு சுழிவந்து சூழும்
நிலையான தரைநீரில் இலைபோல் ஈடாடும்'

என்ற அவர்களது வாழ்நிலையும்...

'எறிகின்ற கடல் என்று மனிதர்கள் அஞ்சார்
எதுவந்த தெனின் என்ன அதைவென்று செல்வார்'

என்ற அவர்களது உறுதியும்...

'ஆரும் மகிழ்வடைய
ஏலங்கடி ஏலோ
ஆதவம் உதிக்கிறது
ஏலங்கடி ஏலோ

என்று மனித வாழ்வு இருளானதல்ல. அது ஒளியுடையது என்று கூறுவதே புதியதொரு வீடு.

புதியதொரு வீட்டின் முதலாவது மேடையேற்றத்தின் பின் கொழும்பு தேயிலைப் பிரச்சாரச் சபைக் கூடத்தில் நடந்த விமர்சனக் கூட்டத்தில் 'மஹாகவியின் நாடகம் அடிப்படையில் தோல்வி. சமுதாயப் பிரக்ஞை இல்லாதது' என மு. நித்தியானந்தன் வைத்த கருத்துக்குப் பதிலளித்த மஹாகவி, 'எனது கவிதைகளை நன்றாகப் படித்துவிட்டு அதில் சமூகப் பிரக்ஞை இல்லையா, உண்டா என்பதை ஆராயுங்கள்' என்றார்.

'நாடகம் பலப்பல நடக்கக் காண்கிறோம்
ஆடுவோர் தேவரும் அரக்கரும் ஆன
புராண காலப் பொய்களே அதிகம்.

ஆடையும் அணிகளும் மினுங்கும் அரிய
அரசர்களுடைய பெருமை கூறும்
சரித்திரக் கதைகளும் சரிக்குச் சரியே.

அச்சிலே அடித்த பாத்திரங்களையும்
அச்சிலே அடித்த சம்பவங்களையும்
கண்டு கண்டு கவலை கொண்டோம்'.

என்று கவலை கொண்ட மஹாகவி

'புதிய களங்கள், புதிய போர்கள்
புதிய வெற்றிகள் - இவைகளைப் புனையும்
நாடகம் வேண்டி நம் மொழி கிடந்தது
கோடையை எழுதும் காலமும் குதிர்ந்தது.

என்று கூறி கோடையைத் தொடர்ந்து புதியதொரு வீடும் எழுதியிருந்தார்.

கோடை, புதியதொரு வீடு ஆகிய நாடகங்களின் தயாரிப்பிலும், மேடையேற்றத்திலும் பங்கு கொண்டவன் என்ற ரீதியில் சில கருத்துகளை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஓர் ஆழமான நாடகம் எல்லாப் பொருண்மைகளையும் வெளிப்படையாகக் காட்டாமல், சிலவற்றைத் தன்னகத்தே அடக்கி வைத்திருக்கும். அப்படைப்பில் புதையுண்டிருக்கும் பல கருத்துகள் சிலருக்கு முதல் மேடையேற்றத்திலோ அல்லது வாசிப்பிலோ கிட்டாது போகலாம். இவை அப்படைப்பில் பயன்படுத்தப்பட்டிருக்கும் குறியீடு அல்லது குறிப்பு மொழி காரணமாக இருக்கலாம். எனவே, அந்நாடகத்தை முழுமையாக அறிந்து கொள்ள அங்கு பயன்படுத்தப்பட்டுள்ள குறியீடுகளை அல்லது குறிப்புமொழியை ஆழமாகத் தேடி அறிதல் வேண்டும். எனவே ஒரு படைப்பில், அதன் படைப்பாளி பயன்படுத்திய குறிப்பான்களைக் கண்டறிதல் வேண்டி நுகர்வோர் செய்யும் தேடல் அப்படைப்புக்குப் புதிய தோற்றத்தைக் கொடுக்கும். சில வேளைகளில் படைப்பாளி நினையாத புதிய கருத்துகள்கூட அங்கு தோன்றக் கூடும். அத்துடன் ஒரு படைப்பை பலமுறை காட்சிப்படுத்தலுக்கு அல்லது வாசிப்புக்கும் உட்படுத்துகையில் அப்படைப்பில் பல்வேறு பொருண்மைத் தளங்கள் உருவெடுக்கும்.

ஒரு படைப்பைப் பலமுறைகள் காட்சிக்கு அல்லது வாசிப்புக்கு உட்படுத்துகையில், முதற்பார்வையில் புலப்படுவது உடனிகழ்வு விளக்கமாகும். அடுத்து, அங்கு குறியீடு அல்லது குறிப்பான் பயன்படுத்தப்பட்டுள்ள சூழ்நிலையை ஆழமாக உற்று நோக்குகையில் தென்படுவது செயற்திற விளக்கமாகும். அக்குறியீடு அல்லது குறிப்பான் அச்சூழலில் எதை முதன்மைப்படுத்துகிறதோ அங்கு உற்றறிதல் முடிவான விளக்கம் ஏற்படுகிறது.

எனவே ஒரு படைப்பை மேலோட்டமாக அளவிடுதலோடு மட்டும் நில்லாது சூழ்நிலைகளோடு குறியீடுகளை ஆராயும் போது அக் குறியீடுகள் அல்லது குறிப்பான்கள் வேறு பல பொருண்மைகளைக் காட்டிக் செல்லும்.

புதியதொரு வீடு நாடகத்தில் குறியீடுகள் அல்லது குறிப்பான்கள் மையப்புள்ளியில் சூழலும் மூன்று ஆரங்களைக் கொண்ட மூன்று வட்டங்களாகும். மையப்புள்ளியை அண்டிய உள்வட்டம் 'புல நெறி'யாகும். அதைச் சுற்றியுள்ள வட்டம் நாடகமாகும். இவை இரண்டு வட்டங்களையும் உள்ளடக்கியது உலக நடப்பியலாகும்.

எனவே குறியீடுகள் நிறைந்த புதியதொருவீடு நாடகத்தின் கதையை மட்டும் பாராது குறியீடுகளையும் பாத்திரங்களின் இணைப்பு முறைமையையும் கூர்ந்து கவனித்தால் சமுதாய நிலை, நடைமுறைப் பயன்பாடு, ஒழுக்க நிலை என்பவற்றைக் கண்டறியலாம். நாடகச் சம்பவங்கள் காலப் பின்னணிக்கு ஏற்ப அமைக்கப்படாமல் உணர்வுநிலைகளின் மாற்றத்துக்கு ஏற்ப மாறுகின்றது. இது மாயனுடைய வாழ்க்கை வரலாற்றை மட்டும் சொல்லாமல் பொது மனிதர்களுடைய வரலாற்றைச் சொல்லுகின்றது. நாடகத்தின் உணர்ச்சி நிலைகளை மீண்டும் தாக்கமாகக் கொடுப்பதற்கு நாட்டார் இசையையும் நாட்டார் கூத்தும் கையாளப்படுகின்றன.

மஹாகவி சுகவீனமுற்று வைத்தியசாலையில் இருந்த போது பார்க்கச் சென்ற என்னிடம் 'டாக்குத்தர் என்னை இண்டைக்குக் கதைக்க வேண்டாமாம், இண்டைக்கு நீங்கள் கதையுங்கோ, நான் நாளைக்குக் கதைக்கிறன்' என்றார்.

அந்த 'நாளை' இன்னும் வரவில்லை, ஆனால் மன்னாரில் அவர் தந்த 'பிளேன் ரீ' இன்றும் இனிக்கிறது.

ganam.lambert@thaiveedu.com

மறைந்த மஹாகவி

- முருகையன்

ஐயர் வளர்த்த அப்புகை ஓமத் தருகே நீர்
பெய்து மகிழ்ச்சி கண்ணை மறைக்கப் பெரியோர்கள்
உய்க, உயர்க என்றுரை, ஈய உலகின்முன்
கைபிணைபட்ட காலை.

உவப்புக் கடலிலே தாம் ஆழ்ந்ததாக மஹாகவி திரு. து. உத்திர-மூர்த்தி பாடியுள்ளார். தமது சொந்த மைத்துனியாகிய பத்மாசனியை மணந்து, பாண்டியன், சேரன், சோழன், இனியாள், ஒளவை என்ற ஐந்து மகவுகளைப் பெற்று வளர்த்ததோடு, மிகவும் இளைய பிராயத்தில் அரசாங்க சேவையில் ஓர் எழுத்தராகச் சேர்ந்து, படிப்படியாக உயர்வுபெற்று, ஆட்சிமொழித் திணைக்கள உதவி ஆணையாளராகப் பணியாற்றி மறைந்தார் மகாகவி, 'ஒரு சாதாரண மனிதன்' என்ற வகையில் இதுவே அவரது சரித்திரத்தின் சுருக்கமாகும். ஆனால் இதே சரித்திரத்தின் மறுபக்கத்தைப் புரட்டிப் பார்த்தால், அங்கு ஒரு சிறந்த கவிஞரின் வளர்ச்சி வரலாறு பொறிக்கப்பட்டிருப்பதை நாம் காணலாம்.

இலங்கை நிர்வாக சேவையில் மாவட்டக் காணி அலுவலராகவும், கச்சேரி உதவி அலுவலராகவும், பிற பதவிகளிலும் பணியாற்றிய சமயத்தில், பல பிரமுகர்களுடனும் பொது மக்களுடனும் பழகும் வாய்ப்பைப் பெற்றவர் திரு. உருத்திரமூர்த்தி. ஆயினும் அவர்கள் எல்லாரையும்விட, தாம் எழுதிய கவிதைகளை ரசித்துப் படிக்கும் வாசகர்கள் மீது அவருக்கு நிறைந்த அக்கறையும் பற்றும் மதிப்பும் இருந்தன. கவிதைக் கலையே அவரது முதல் முழு முயற்சியாக இருந்தது, அவர் செய்த பணி அமைதியானது, சலசலப்பு இல்லாதது. 'மஹாகவி' என்ற புனைபெயரையுடைய இக்கவிஞர் அடக்கமே உருவமான சுபவாத்தை உடையவர்.

இவருடைய புனைபெயர் பலருக்கு ஒரு வகைத் துணுக்கத்தைத் தருவதுண்டு. ஒரு சமயம் இதுபற்றி அவருடன் பேசிக்கொண்டிருந்த போது, 'மஹாராஜன் என்றும், மஹாதேவன் என்றுங்கூட எத்தனை பேர் பெயரே வைத்துக்கொள்கிறார்கள்? நான் என்ன, வெறும் 'மஹாகவி' தானே? அதுகூட என் பெயர் அல்லவே! புனைபெயர் தானே?' என்று அவர் சொன்னார்.

ஆமாம்! நம் ஒவ்வொருவருக்கும் இடப்பட்டுள்ள பெயர்கள் எமது பெற்றோரின் இலட்சியங்களையும் பற்றுக்களையும் பிரதிபலிக்கின்றன. நாம் நமக்கே இட்டுக்கொள்ளும் புனைபெயர்கள் எமது சொந்தப் பற்றுக்களையும் இலட்சியங்களையும் பிரதிபலிப்பதில் தவறு எதுமில்லையே?

ஒரு மகாகவியாக வளர்ச்சி பெறவேண்டும் என்பதே நண்பர் உருத்திரமூர்த்தியின் லட்சியம். அந்த இலட்சியத்துக்கேற்ப இலங்கை வரலாற்றை வழிநடத்திய ஒரு பிரதான சக்தியாக அவர் விளங்கினார் என்பதிலும் ஐயமில்லை. ஆனால் அவர் இதனைப் போதனை வாயிலாகச் செய்தாரல்லர். சாதனை வாயிலாகவே செய்து வந்தார். நல்ல கவிதைகளுக்கு உதாரணமாக மிளிரும் படைப்புக்களை அவர் இடையறாது தந்துகொண்டேயிருந்தார்.

இவர் எழுதி நூல் வடிவம் பெற்ற கவிதைகள் வள்ளி, குறும்பா, கண்மணியாள் காதை, கோடை என்ற புத்தகங்களில் உள்ளன. பத்திரிகை நறுக்குகளாக ஏராளமான கவிதைகள் நூல் வடிவம் பெறக் காத்திருக்கின்றன.

'மஹாகவி'யின் பாக்கள் பழகு தமிழால் ஆனவை, தளை பிசகாது, ஓசை குழம்பாது இருப்பவை, யாப்புக்குள் இருந்து யாழ் மீட்டுபவை. மேற்பரப்பிலே வெளிப்பார்வைக்குச் சலசலப்புக் காட்டாதவை. ஆனால், நெஞ்சத்தின் அடியாழத்திலே சென்று அதைப் பவை.

இக்கவிதைகளில், எல்லார்க்கும் நன்மையை எண்ணும் ஓர் இருதயத்தை நாம் இனம் கண்டு கொள்கிறோம். 'இயற்கைப் பெருந்தாய் இதயம்' என்ற பாடல் அவரது சமாதான வேட்கையை எடுத்துரைப்பது.

பூமி கொளுத்திப் புலைமை புரிந்தால் என்
சாமீ, அவளும் சகிப்பாளோ - ஆமாம்
கொடுப்புட சிரிப்பாள் எம் கும்மாளம் மிஞ்சில்
முடிப்பாள் ஆம், வைப்பாள் ஓர் முற்று.

என்று பாடுவார் கவிஞர் மனிதாபிமானமப் பண்பு மிளிரும் இவர் பாக்களில். சாதாரண மனிதர்களின் வாழ்வு நெறிகளிலும், எண்ண ஒட்டங்களிலும் அசையாத நம்பிக்கை கொண்ட ஒரு சிறப்பையும் நாம் பார்க்கிறோம். உயர்ந்தவை, சிறந்தவை எல்லாம் லண்டனிலோ, நியூயோர்க்கிலோ, பாரிசிலோதான் தோன்றலாம். எம்மவரிடையே தோன்ற இயலாது என்று கருதுவோர் பலர் எம்முள் உண்டல்லவா? இவர்களைப் போலன்றி தம்மைச் சூழவுள்ள உடனடியான அயலிலே உறுதியான நம்பிக்கை பூண்டு, கண்முன் நிகழும் வாழ்க்கையைக் கவிதையாக்கியவர் 'மஹாகவி'. அதனாலேதான் இலக்கிய உலகில் அவர் மேம்பட்டு நின்றார். 'ஒரு சாதாரண மனிதனின் சரித்திரம்', 'சடங்கு' என்னும் அவரது காவியங்கள் மேம்பாட்டை நன்கு எடுத்துக் காட்டுவன.

கேலியும் கிண்டலுமாக எழுதுவதிலும் இவர் வல்லவர். குறும்பா என்பது அவ்வாறான கேலிக் கவிதைகள் சிலவற்றின் தொகுப்பேயாகும். 'கந்தப்ப சபதம்' என்ற கட்டுக் கதைச் சதகமும் அங்கதச் சுவை விரவியதே.

'கல்லழகி' என்பது பாரதியாரின் குயிற்பாட்டை ஒத்த போக்கை உடையது. இந்த நெடும்பாடலில் கற்சிலையின் நெஞ்சிலும் உயிர்த்துடிப்பை யூட்டும் ஆற்றல் பாவோசைக்கு உண்டு என ஒரு கதை சொல்கிறார் கவிஞர், கவிதைக் கலையின் சக்தி மேம்பாட்டை இவ்வாறு விதந்து புலப்படுத்துகிறார்.

வானொலிக்கும் மேடைக்குமெனக் கவிதை நாடகங்கள் பலவற்றையும் 'மஹாகவி' எழுதினார். 'அடிக்கரும்பு', 'சிற்பி ஈன்ற முத்து', 'திருவிழா', 'பொய்ம்மை', 'கோலம்', 'முற்றிற்று', 'கோடை', 'புதிய தொரு வீடு' என்பன அந்த நாடகங்கள். இவற்றுள் கடைசி இரண்டுமே மேடைக்கென அவர் எழுதியவை. இவை நாடக உலகில் ஒரு புதிய விழிப்பையும் உற்சாகத்தையும் தெம்பையும் உண்டாக்கின, தொடர்ந்தும் பல நாடகங்கள் 'மஹாகவி' யின் பேனாமுனையிலே பிறக்கும் என்று நம்பியிருந்தவர்கள் பலர்.

ஆனால் நம்பியிருந்தவர்களையெல்லாம் ஏமாற்றிவிட்டு, நாற்பத்தைந்து வயதிலே திடீரென்று மாரடைப்பினால் மறைந்துவிட்டார் கவிஞர். ஆறாத் துயரில் ஆழ்ந்திருக்கும் அவருடைய குடும்பத்தாருடன், பல்லாயிரக்கணக்கான கவிதையன்பர்களும் ஒருசேர மனமுருகி நிற்கின்றனர். கவிஞரின் பாக்களைப் பரப்புவதிலும் பாராட்டுவதிலும் மதிப்பிடுவதிலும் இவ்வன்பர்கள் எல்லாரும் துணை நிற்பார்களாக.

(மஹாகவி காலமானபோது அவரது மிக நெருங்கிய நண்பர், கவிஞர் இ.முருகையன் தமிழ்நாட்டில் இருந்து வெளியாகும் கலைமகள் இதழில் எழுதிய கட்டுரை. 1971.)

info@thaiveedu.com

சிறு புல்

கல்லடுக்கி மேலே கனத்த உருளைகளைச்
செல்லவிட்டுச் செல்லவிட்டுச் செப்பனிட்ட
நல்லநெடு
வீதி.

அதனில் வெகுண்டோடும் வண்டிகளில்
மோதி நடப்போர் முடிவெய்தும்
தீதகல
இட்டநடை பாதை.

இவை இரண்டின் ஓரங்கள்
முட்டுகின்ற கோட்டின் முடுக்கினிலே
பட்டவிழிக்
கின்ப விருந்தாய், இருளில் ஒளிமின்னல்
முன் பல்லைக் காட்டி முறுவலித்த
பின்போய்
ஒளியா ததுபோல் ஒரு புல் இருகைத்

தளிர் நீட்டி நின்றாள்,
தலையில்
மிளிர்கின்ற
பூவொன்றைக் கூடப்
புதிதாய்ப் புனைந்திருந்தாள்.

காவிக்குயில் வாயில் காட்டிடையே
பாவொன்று
கேட்டதனை ஒக்கும்
கிடுகிடுத்துக் கொண்டிருக்கும்
பாட்டை இடை அப் பசுமையே!

நாட்டம்
பிறவாகிச் செல்கின்ற பித்தர் உளத்தோடு
உறவாடித் தந்தாள் உவகை.

இறவாது
வேரிற் கிடந்து, வெடுக் கென்று மாரிவரப்
பூரிக்கக் கண்டால், புளகம் மெய்
ஊராதோ!

ஆழப் புதைந்த அறம்போல்
முளைத்தெழுந்தாள்
வாழ அவளுக்கென் வாழ்த்து.

நேர்மை

கையிலே குடை இல்லை கருக்கிடும்
வெய்யில் மேனி வியர்தத்து! அயல் நின்ற
தையலாள் விழி மை ஒழுகிற்று வந்து
எய்துமோ வண்டி என்றுநின் றேங்கினேன்.

ஆண்டோர் ஐம்பதுள் நாளும் அடிக்கடி
நீண்ட நேரம் வரிசையில் நின்று, பின்
மாண்டு போவது வாழ்வெனில் வாழ்வுதான்
வேண்டுமோ? அது வீண்என எண்ணினேன்.

வண்டி அவ்வழி வந்தது மெய். இதோ
அண்டை நின்றதும் உண்மை அதற்குள்ளே
ஒண்டி வாங்கில் ஒடுங்கியும், கைப்பிடி
கொண்டு தொங்கியும் கூத்திட ஏறினேன்.

ஆட்ட மிட்டுஅசைந் தோடும் அதிற் செல்லும்
கூட்டத் தார்க்குக் கொடுக்கப்படுகிற
சீட்டைத் தந்தவன் சில்லறையிற் சில
கூட்டித் தந்தனன் கூறி விடுகிறேன்.

பெற்றுக் கொண்டதும், பேச்செடுத் தென்உளம்
சற்றுக் கிண்டவும் சாகடித்தேன் அதை.
கற்றுக் கொண்டதுண்டே கடும் நேர்மையிற்
பற்றுக் கொண்டு பணத்தைத் துறப்பதா!

அன்றியும் மனை சென்றிடில், அவ்விளங்
கன்றென் மீதில்என் கால்பிடித் தேறுங்கால்,
இன்றென்றாலும் அதன் கையிலே பழம்
ஒன்றை இட்டின்பம் ஊட்டிட லாகுமே!

‘கெட்ட திச்செயல், கீழ்மை!’ என எனை
வெட்டிப் பேசுதல் வேடிக்கை, செல்வரின்
நெட்டைப் பேச்சிது, நேர்மை எவர்க்குமே
கட்டுமா, நண்ப? காசற்றவர்கள் நாம்!

உத்தேசம் வயது பதினேழாம்
உடல் இளைக்க ஆடல் பயின்றாளாம்.
எத்தேசத் தெவ்வரங்கும்
ஏறாளாம்! ஆசிரியர்
ஒத்தாசை யால், பயிற்சி பாழாம்.

‘நன்றி சொல்வேன் என் எதிரிற் தோன்று,
நாளை இரவு!’ என்றனன், உட்சான்று
‘நன்றிதல்ல,’ என்றிடினும்,
சென்று பிழை கண்டு கொண்டாள்
1+1=3



பாஞ்சாலி ஆடையை உரிந்தார்.
பாண்டவரோ கல்லாய்ச் சமைந்தார்.
‘ஏஞ்சாமி?!’ என்றழுதாள்.
இவள் களிக்கக் கண்ணபிரான்,
ஆம், சேலை ஆயிரமாய்த் தந்தார்.

மஹாகவி - மாமா

- சுமதி பிரான்சிஸ்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்ட போது தமிழ்த்துறையில் சிறப்புப் பட்டம் பெறுவதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட இருவரில் ஒருவராக நான் இருந்தேன். 1979ம் ஆண்டு 'மஹாகவியின் வாழ்க்கையும் கவிதையும்' என்ற தலைப்பில் ஆய்வு மேற்கொண்டிருந்தேன். அதற்காக அவரது துணைவியார், சகோதரிமார், நண்பர்கள் எனப் பலரைச் சந்தித்து மஹாகவி பற்றிய நிறைய விடயங்களை சேகரிக்கும் ஓர் அரிய வாய்ப்புக் கிடைத்தது. பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள் எனக்கு ஆலோசகராக இருந்து என்னை வழி நடத்தியதோடு மாத்திரமல்லாது - மஹாகவியைப் பற்றி எழுத நீதான் பொருத்தமானவள் என்று ஊக்கமும் கொடுத்தார்.

எனக்கும் மஹாகவிக்குமான தொடர்பு என்பது மாமா - மருமகளுக்கு இடையிலானது. மஹாகவியின் மூன்றாவது சகோதரியின் மகள்தான் நான். ஆனால், நான் மாமாவுடன் பழகிய நாட்கள் மிகவும் குறைவு. ஏனெனில் அவர் அரச பணி நிமித்தம் கொழும்பு, திருமலை, மன்னார், மட்டக்களப்பு என ஆங்காங்கே தங்கியிருந்த படியால் விடுமுறைக் காலங்களில் மாத்திரமே அவருடன் பழகும் வாய்ப்புக் கிட்டியது. மாமா இறக்கும்போது எனக்குப் பதினாறு வயது. பலவிடயங்கள் நினைவில் இருக்கின்றன. அவற்றைவிட என்னுடைய அம்மா மாமாவைப்பற்றிச் சொன்னவையோ இன்னும் ஏராளம். எனது அம்மாவுக்கு தனது தம்பி (மஹாகவி) என்றால் போதும், புளுகிப் புளுகிக் கதைகள் சொல்லுவார். அவரைவிடத் திறமைசாலி எவருமில்லை என்பதுதான் அவரது வாதம். அப்படித் தான் மஹாகவியும் இருந்தார். 44 வயதிற்குள் தான் வகித்த பதவியில் முன்னேறி உயரதிகாரியாகப் பொறுப்பேற்றார். அதுமாத்திரமல்லாமல் ஈழத்துக்கவிதை வரலாற்றிலும் தனக்கெனத் தனியிடம் வகித்தார்.

சிறுவயதில் மஹாகவிக்குப் பாடசாலை சென்று படிப்பதில் அவ்வளவு நாட்டமிருக்கவில்லை. அளவெட்டியில் அவரது வீட்டிற்கு அருகாமையிலுள்ள சீனன்கலட்டி, ஞானோதய வித்தியாசாலையில் ஆரம்பக்கல்வி கற்பதற்காகச் சேர்க்கப்பட்டார். இவரது தாயார் கமலாம்பாள் பாடசாலை வாசல்வரை கூட்டிச்சென்று விட்டுவிட்டு வீடு திரும்புவதற்கிடையில் அவர் பனைவடலிகளுக்கூடாக ரகசியமாக ஒரேயோட்டமாக வீடு வந்து சேர்ந்துவிடுவார். வீட்டில் அம்மா - அப்பா, நான்கு அக்காமாருடன் செல்லமாக இருந்துவிட்டு பாடசாலையில் ஆசிரியர்கள் கட்டுப்பாட்டில் இருப்பது அவருக்குப் பிடிக்கவில்லை.

இப்படிப் படிக்க விருப்பமில்லாமல் மகன் இருப்பதைக் கண்ட தாயார் மிகவும் கோபத்துடன் 'நீ படிக்கப் போகாவிட்டால் உன்னைச் சுருட்டுச் சுற்றத்தான் அனுப்பவேன்' என்று கோபத்துடன் கூறினர். அதையும் மஹாகவி பொருட்படுத்தினாரில்லை. சில நாட்கள் கழிய ஒருநாள் 'அம்மா நான் இனிப் படிக்கப்போக வில்லை. சுருட்டுத் தொழிலுக்கே போகிறேன்' என்றதும் தாயார் மிகவும் வேதனைப்பட்டு, புத்திமதிகள் கூறி படிப்பில் ஆர்வம் உண்டாக்க எவ்வளவோ பாடுபட்டார். அளவெட்டியில் அப்போது பொலிஸ் இன்ஸ்பெக்டராக இருந்த சின்னையா என்பவரிடம் ஆங்கிலம் கற்பிக்க அழைத்துச் சென்று, பாடம் முடியும்வரை தானுமிருந்து கூட்டி வருவார்.

மஹாகவிக்கு படிக்க விருப்பமில்லையே தவிர படிப்பில் வெகு கெட்டிக்காரனாக விளங்கினார். ஆறு வயதிலேயே பெரிய எழுத்து இராமணம், பாரதம் என்பவற்றைப் படித்து அந்தக் கதைகளை தனது தம்பிமாருக்குக் கூறுவார். இப்படியாக இன்பமாகப் பொழுதைக் கழித்துக் கொண்டிருந்த காலத்தில் அவரது தம்பிமார் இருவரும் வயிற்றுப்போக்கு காரணமாக காலையில் ஒருவரும் மாலையில் ஒருவரும் என இருவரும் இறந்துவிட்டார்கள். வேதனையில் தவித்தார். இவருடைய மூத்த அக்காமார் தம்பியாகிய மஹாகவியை சிறப்பாக வழிநடத்தினர். அவருடைய பத்தாவது வயதில் தந்தையார் இறந்தார். அதன்பின்னர் தான் படித்தால் தான் குடும்பத்தைக் கவனிக்க முடியும் என்பதை உணரத் தொடங்கிவிட்டார்.

1937ம் ஆண்டிலிருந்து மகாஜனக் கல்லூரியில் கல்வி கற்கத் தொடங்கிய காலங்களில் படிப்பில் அதிக அக்கறை காட்ட ஆரம்பித்துவிட்டார். அந்த நாட்களில் தான் இலக்கியத்திலும் ஈடுபாடு கொள்ளத் தொடங்கினார். எங்கள் ஊர் என்ற தலைப்பில் நாட்டின் பல்வேறு பாகங்களிலுமுள்ள கவிஞர்களைக் கவிதை புனைந்து தருமாறு சுதந்திரன் பத்திரிகையில் அறிவிக்கப்பட்டிருந்தது. அதற்காக மஹாகவி என்ற புனைபெயரில் யாழ்ப்பாணம் என்ற கவிதையை 1942ம் ஆண்டு எழுதியிருந்தார். அப்போது அவருக்கு வயது பதினைந்து.

மழைமுகில்கள் ஆறிடும்
மலைகள் இல்லை நாளெலாம்
விளைநிலங்கள் பாய்ச்சிட
விரையும் நீண்ட நதிகளின்
வழியில் இல்லை எங்கள் ஊர்

என்று தொடர்கிறது அக்கவிதை. அ.செ. முருகானந்தம், அ.ந. கந்தசாமி இருவரும் மஹாகவியின் நெருங்கிய உறவினர்கள் மாத்திரமல்ல உற்ற நண்பர்களும்கூட. பின்னாளில் இவர்கள் மூவரும் மகாஜனா தந்த மும்மணிகள் என்று போற்றப்பட்டார்கள்.

மகாஜனக்கல்லூரியில் எஸ்.எஸ்.சி பரீட்சையில் சித்தியடைந்த மஹாகவியை அந்தக் காலத்தில் அதிபராக இருந்த தெ.து. ஜயரத்தினம் மஹாகவியின்பால் மிகுந்த அன்பு மிக்கவர். தமிழ், லத்தீன், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் மிகவும் திறமை பெற்றிருந்த மஹாகவியை யாழ். இந்துக்கல்லூரியில் மேற்படிப்பிற்காகச் சேர்த்துவிட்டார் ஜயரத்தினம். அதிபரின் தூண்டுதலாலும் வேண்டுதலாலும் படிக்க ஒப்புக்கொண்டாரே தவிர நீண்ட காலமாகத் தனது மாமனாருக்குப் பராமாக இருக்க அவர் விரும்பவில்லை. நான்கு மாதங்கள்தான் உயர்தர வகுப்புப் படித்தார். படித்துக் கொண்டிருந்த போது எழுதுவினைஞர் பதவிக்கு விண்ணப்பம் கோரப்பட்டதை அறிந்த மஹாகவி எவருக்கும் தெரிவிக்காமல் அவ்வேலைக்கு விண்ணப்பித்தார். அந்தத் தெரிவில் தேர்ச்சி பெற்றபடியால் படிப்பை நிறுத்திவிட்டு கொழும்பிற்குச் சென்று வேலையை ஏற்றுக் கொண்டார்.

மஹாகவி வேலைக்குப் போய்விட்ட செய்தி அறிந்த திரு. ஜயரத்தினம் மிகவும் மனம் வருந்தி, மஹாகவிக்கு ஒரு கடிதம் அனுப்பினார். அந்தக் கடிதத்துக்கு மஹாகவி உடனே பதில் போடவில்லை. பின்னர் 1967ல் இலங்கை நிர்வாக சேவை சி.ஏ.எஸ் பரீட்சையில் சித்தியடைந்த போது ஜயரத்தினம் அவர்களுக்குப்

பதில் எழுதினார். அந்தப் பதிலோடு ஜயரத்தினம் அவர்கள் அனுப்பியிருந்த கடிதத்தையும் இணைத்திருந்தார். ஜெயரத்தினம் அவர்களின் மகள் ஜெயபவானியின் திருமணத்தின் போது மஹாகவி எழுதிய திருமண வாழ்த்து வழங்கப்பட்டது. ஜெயரத்தினம் பற்றி அற்புதமான கவிதை ஒன்றையும் மஹாகவி எழுதினார். அது ஜயரத்தினம் அவர்களைப் பாராட்டி நிகழ்த்தப்பட்ட அரங்கொன்றில் மஹாகவியால் வாசிக்கப்பட்டது.

சிறுவயதில் பாடசாலை செல்லும்போது எவ்வளவு வெறுப்போடு சென்றாரோ அதுபோலத்தான் தொடக்கத்தில் வேலைக்குப் போவதும் மஹாகவிக்குக் கசப்பாக இருந்தது. முதன்முதலாக யாழ்ப்பாணத்தைவிட்டு கொழும்புக்குச் செல்கிறார். அம்மா, சகோதரி-மாரை, தன் நண்பர்களை, தான் நேசித்த கிராமத்தை விட்டுச் செல்கிறார். அந்த வேதனைதான் அவருக்கு.

'நண்பரே, ரயில் ஆனையிறவுப் பாலத்தைத் தாண்டிப் பறக்கிறது. அஸ்தமன வேளை. யன்னல் சட்டத்தில் கைவைத்து, கைமேல் தலைசாய்த்து, அடிவானத்தே பார்வையை எறிந்து உட்கார்ந்திருந்தேன். எவ்வளவு நேரம் அவ்வாறு இருந்தேனோ அறியேன். கை நனைந்து சில்லிட்டுக் குளிர்ந்த போதுதான் சட்டென்று, ரயிலில் பிரயாணம் செய்து கொண்டிருக்கும் நினைவுற்று எழுந்து நிமிர்ந்திருந்தேன். ஆம்... நாமிருபேரும் கேணிப்பிட்டி பனங்காட்டு வெளியில் பேசி மகிழ்ந்த மாலைக்கால நினைவுகளில் ஆழ்ந்து போனேன். இனி அந்த நாட்கள் எப்பொழுது வருமோ?

பட்டப்பகலில் எல்லா மேசைகளுக்கும் மேலே மின்விளக்குகள் ஒளியை உமிழ்கின்றன. வெளியே மழைக்குளிரடிக்கிறது. உள்ளே காற்றாடிகள் இர்ரென சுழல்கின்றன. பார்ப்பதெல்லாம் புது முகங்கள், புதிய சூழல், புதிய வாழ்க்கை, புதியதொரு உலகுக்குள்ளே வந்து மாட்டிக் கொண்டுவிட்டேன் போலிருக்கிறது. என்ன பிழைப்பு, என்ன வாழ்க்கை இது! ஊரோடு ஒரு வெற்றிலை பாக்குக் கடை போட்டுக் கொண்டு உட்கார்ந்து விடலாமென்று தோன்றுகிறது.'

மஹாகவி தனக்கு எழுதிய கடிதவரிகளை உள்ளடக்கி நேசக் கவிதை சொல்லும் பறவை என்ற கட்டுரையில் அ.செ. முருகானந்தன் குறிப்பிட்டிருக்கிறார். இது மஹாகவி இறந்த பின்னர் 15.07.1971 ஈழநாடு பத்திரிகையில் வெளிவந்திருக்கிறது.

காலப்போக்கில் கொழும்புச் சூழலையும் வேலையிடத்தையும் பழகிக்கொண்டு தான் கவிதை எழுதுவதற்கு ஏற்ற களமாக மாற்றி விட்டார். விரைவாகத் தனது வேலைகளை முடித்துவிட்டு, மேசை லாச்சிக்குள் காகிதத் தாள்களை வைத்துக் கொண்டு கவிதைகளை எழுதுவார். மேலாளர் வந்தால் வேலை ஏதோ செய்வது போல் அமர்ந்திருப்பார்.

மஹாகவி 25வது வயதில் தனது மாமனார் முத்தையா என்பவரது மகளான பத்மாசனியை 02. 04. 1954ம் ஆண்டு கொழும்பில் திருமணப் பதிவு செய்து கொண்டார். இந்த மாமனார் தான் மஹாகவியின் தந்தை இறந்த பின்னர் அவரின் குடும்பத்தை கவனித்து வந்தவர் என்பவர் நினைவு கொள்ளத்தக்கது. மஹாகவி வீட்டிற்குப் பக்கத்திலேயே அவரது வீடும் அமைந்திருந்தது. சின்ன வயதிலிருந்தே தங்கச்சி, தங்கச்சி என்றழைத்து வந்த மஹாகவி திருமணத்திற்குப் பின்னரும் தங்கச்சி என்று தான் கூப்பிடுவாராம். அளவெட்டியில் திருமண நிகழ்வு முடிந்ததும் மனைவியை அழைத்துக்கொண்டு கொழும்பு சென்றார். 1954 றாகமத்திலும் 1955 குணுப்பிட்டியாவிலும் 1958 கொள்ளுப்பிட்டியி



லும் வசித்துவந்தார்கள். பாண்டியன், சேரன் இருவரும் யாழ்ப் பாணத்திலுள்ள இணுவில் வைத்தியசாலையில் பிறந்தார்கள். மூன்றாது மகனான சோழன் திருகோணமலையில் பிறந்தபோது

தோழ, எம்வாழ்வு துலங்கப் பிறந்துள்ள
சோழனும் தாயும் சுகம்

எனத் தனது நண்பர்கள் எல்லோருக்கும் தபால் அட்டை மூலமாக தெரிவித்திருந்தார். குழந்தைகள் பிறந்தபோது இப்படித் தபால் அட்டையில் செய்தியை அனுப்புவது அவர் வழக்கம்.

சேரன் பிறந்த போது எழுதியது இது:
பேரன்ப, ஒன்றும் பெரிதாய் எழுதவில்லை.
சேரன் பிறந்த செருக்கு.

ஒளவை பிறந்த போது எழுதியது:
மீண்டும் நம் வாழ்வு துலங்கப் பிறந்துள்ளாள்
ஈண்டு எமக்கந்த ஒளவை.

1967ம் ஆண்டு இலங்கை நிர்வாக சேவைத் தேர்வில் சித்தியடைந்ததன் காரணமாக மன்னார் கச்சேரியில் மாவட்டக் காணி அதிகாரியாக பதவியேற்றுக் கொண்டார். பிள்ளைகளின் படிப்பைக் குழப்பக்கூடாது என்பதற்காக அத்தையையும் பிள்ளை களையும் அளவெட்டியில் விட்டுவிட்டு, மஹாகவி தனது நண்ப ரொருவருடன் சேர்ந்து மன்னாரில் ஒருவீட்டை வாடகைக்கு எடுத்து அங்கேயே தங்கியிருந்தார். 15.06.1967 இல் திடீரென்று ஏற்பட்ட இதயநோயினால் 21 நாட்கள் யாழ்ப்பாண வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். வீட்டில் 45 நாட்கள் ஓய்வுபெற்றபின் வேலைக்குச் செல்லவேண்டியிருந்தது. இதயநோயால் பாதிக்கப் பட்ட காரணத்தினால் முதன்முதலாக யாழ்ப்பாணத்திற்கு இடமாற் றம் கிடைத்தது. 'தமிழுக்குத் தொண்டு செய்வோர் சாவதில்லை என்ற கவிக்கிணங்க புத்துயிர் பெற்றுள்ளேன்' என்று 23.18.1967ல் நுஃமானுக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

யாழ்ப்பாணக் கச்சேரிக்குத் தினமும் அளவெட்டியிலிருந்து செல் வது சிரமமாயிருந்தபடியால் கார் வாங்கினார். வேலைக்குப் போகும்போது தெரிந்தவர்கள் யாராவது நடந்து போய்க்கொண் டிருந்தால் அவர்களையும் அழைத்துக் கொண்டு செல்வது வழக் கம். பாடசாலை விடுமுறைக் காலங்களிலும் சனிக்கிழமைகளிலும் பாண்டியன், சேரன், சோழன் மூவரையும் கூட்டிச்சென்று யாழ். பொதுசன நூல்நிலையத்தில் விட்டுவிட்டு அவர் வேலைக்குப் போவார். வேலை முடிந்து திரும்பும்போது கூட்டிவருவார். அப் போது இனியாளும் ஒளவையும் சிறுவர்களாக இருந்தபடியால் அவர்கள் வீட்டில் நிற்பார்கள்.

இவற்றுக்கு அப்பால் எனக்கு மாமாவுடனான ஒருசில நினைவுகள் நிழலாடுகின்றன. எங்களை சும்மா நலம் விசாரிப்பாரே தவிர அம்மாவுடன்தான் மணிக்கணக்கில் கதைப்பார். அம்மா அடுப் படியில் சமைத்துக் கொண்டிருக்கும் போது அங்கேயே ஒரு பாயை விரித்து மாமா படுத்திருப்பார். தம்பி, தம்பி என்று அம்மா வும் அக்கம்மா, அக்கம்மா என்று மாமாவும் கதைப்பதைப் பார்த் தால் எங்களுக்குப் பொறாமையாக இருக்கும். மஹாகவி தனது நான்கு அக்காமாரையும் அக்கம்மா என்றுதான் அழைப்பார்.

மாமா, அத்தை, பிள்ளைகள் விடுமுறைக்கு ஊருக்கு வரும்போது நாங்கள் அளவெட்டிக்குப் போவதும் அவர்கள் மாவிட்டபுரத்திற்கு வருவதும் பசுமையான நினைவுகள். மாமாவுக்கு ஐந்து பிள்ளை கள். நாங்களும் ஐவர். பத்துப் பேரும் சேர்ந்தால் சொல்லவா வேணும்! விடுமுறை முடிந்து பணியிடத்திற்குச் செல்லும்போது அளவெட்டியிலிருந்து காரில் மாவிட்டபுரம் வந்து எங்களுக்குப் பயணம் சொல்லிவிட்டுத் தான் போவார்கள். அந்தக் காரில் அவர் களை வழியனுப்ப காங்கேசன்துறை புகையிரத நிலையத்திற்குச் சென்றது நினைவிருக்கிறது. காங்கேசன் துறையிலிருந்து கொழும்பு செல்லும் புகைவண்டி நீண்ட நேரம் தரித்து நிற்கிறபடி யால் உள்ளே எறிப் பார்க்கக் கால அவகாசம் இருக்கும். மாமா குடும்பம் பயணம் செய்த முதலாம் வகுப்புப் பெட்டியில் ஏறிப் பார்த்த அன்று தான் ஏர் கண்டிசனின் குளுகுளு உணர்வை முதன் முதலாக அனுபவித்தேன். இன்னுமொருமுறை அவர்க ளைப் பயணமனுப்ப பலாலி விமானநிலையத்திற்குச் சென்ற போது விமானத்தின் பிரமிப்பையும் அது மேலே பறக்கத் தொடங் குவதையும் தூரத்திலிருந்து பார்த்து வியப்படைந்தேன்.

மாமாவை கடைசியாக வழியனுப்பிய நாளை மறக்க முடியாது. விடுமுறை கழித்து கொழும்புக்குச் செல்லும் போது பயணம் சொல்ல வந்தார்கள். படலையடியில் கார் வந்து நிற்கும் சத்தம் கேட்டு நாங்களெல்லோரும் ஓடிப் போவோம். அப்போ எனக்குப் பதினாறு வயது. க.பொ.த சாதாரண வகுப்புப் படித்துக் கொண் டிருக்கிறேன். அம்மாவைப் பார்த்து, 'சுமதி பரீட்சையில் சித்திய டைந்தால் தொடர்ந்து படிக்க விடுங்கோ. படிப்பை நிறுத்திவிட வேண்டாம்' என்று கூறினார். அன்று போன மாமா திரும்பி வர வில்லை. இறந்த அவரது உடலம்தான் அளவெட்டிக்குத் வந்து சேர்ந்தது.

மாமாவின் அந்தக் கூற்றுத்தான் நான் மேற்படிப்பைத் தொடர்ந்து படித்துப் பட்டதாரியாகக் காரணமாயிருந்திருக்கிறது என்று நம்புகிறேன்.

info@thaiveedu.com

கவிஞர் மஹாகவி

- கே.எஸ். பாலச்சந்திரன்

மஹாகவியை நான் ஆரம்பத்தில் பரிச்சியம் பண்ணிக் கொண்டது அவரது கவிதை நாடகங்கள் மூலமாகத் தான். லும்பினி அரங்கிலும், பொரளை வை.எம்.பி.ஏ அரங்கிலும் இயக்குனர் தாசிசியஸ் அவர்களின் இயக்கத்தில் மேடையேறிய, 'கோடை', 'புதியதோர் வீடு' ஆகிய பாநாடகங்கள் தான் அவை.

கோடையில் இருந்து பாவரிகள்...

'நின்றந்தக் கோயில் நிமிர்ந்து நெடுந்தூரம் பார்த்துப்
பயன்கள் விளைக்கின்ற கோபுரமும்
வேர்த்துக் கலைஞர் விளைத்தமணிமண்டபமும் வீதிகளும்
நூறு விளக்கும் பரதத்தின்
சேதிகளைக் கூறும் சிலம்புச் சிறுபாதம் ஆடும் அரங்கும்
அறிந்து சுவைஞர்கள் நாடிப் புகுந்து
நயந்திட நீ சோமனுடன் ஊதும் குழலில் உயிர்பெற்றுடல்
புளகித்து ஆதி அறையில் அமரும்
கடவுளுமாய் என்றோ ஒருநாள் எழும்பும், இருந்துபார்'

புதியதோர் வீடு பா நாடகத்தில் இருந்து...

'வெறுவான வெளிமீது மழைவந்து சீறும்
வெறிகொண்ட புயல்நின்று கரகங்கள் ஆடும்
நெறிமாறு பட நூறு சுழிவந்து சூழும்
நிலையான தரைநீரில் இலைபோல் ஈடாடும்
சிறுநண்டு கடல்மீது படமொன்று கீறும்
சிலவேளை இதை வந்து கடல்
கொண்டுபோகும்'

இதுபோல நாடகம் முழுவதும் பேச்சோசையில் கவிதை வரிகள் வரும். பா நாடகம் என்றால் அது எனக்கு அன்னியமானதாக இருக்கும் என்ற என் நினைப்பு தவறு என்று புரிந்து கொண்டேன். நாடகம் எனக்கு நன்றாக பிடித்து விட்டது.

எனக்கு ஒரு நண்பன் இருந்தான். இலங்கை நிர்வாக சேவையில் உயர் பதவி வகித்த சிங்காரவேல் என்ற அந்த நண்பன் பின்னர் விபத்தொன்றில் மரணித்து விட்டான். அவன் மஹாகவி மீது மிகுந்த பற்று வைத்திருந்ததோடு, அவருடைய நாடகங்களில் சிறு பாத்திரங்களிலும் விருப்பத்துடன் நடிப்பவன். அவரைப் பற்றி அடிக்கடி சொல்லியும், அவரது நூல்களை படிக்கத்தந்தும் என் னையும் அவரையும் இணைக்கும் பாலமாக செயற்பட்டான்.

இவ்வாறு மேற்சொன்ன பாநாடகங்கள் மூலமும், அவரது 'குறும்பா' முதலான நூற்கள் மூலமும் மஹாகவி மீது மானசீக மான அபிமானத்தை வளர்த்துக் கொண்டேன், மட்டக்களப்பில் மஹாகவி ஒரு நிர்வாக அதிகாரியாக இருந்தபொழுது, அவரே முன்னின்று நடத்திய 'அண்ணாவியார் மகாநாட்டில்' கலை நிகழ்ச்சி செய்ய போயிருந்த வேளையில் தான் அவரை நேரில் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. அத்தனை வேலைகளுக்கு மத்தி யிலும், எங்கள் ஒவ்வொருவரினதும் வசதிகள் குறித்து அக்கறை யாக விசாரித்து ஆவண செய்த அந்த 'சாதாரண மனிதரின்' உயர்ந்த பண்பும், இரக்கமும் அவரது கவிதைகள் கூறுவது போலவே இருந்ததில் எனக்கு ஆச்சர்யம் இருக்கவில்லை.

1971ல் அரசகரும மொழித் திணைக்களத்தில், உதவி ஆணையா-ளராகப் பதவி பெற்று கொழும்புக்கு வந்தார். அப்போது இலங்கை வானொலியில் 'கலைக்கோலம்' நிகழ்ச்சியை தயாரித்து வழங்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டார். 'கலைக்கோலம்' என்பது நாடகம், நடனம், திரைப்படம், படைப்பிலக்கியங்கள் சம்பந்தமான விமர்சக ரீதியிலான ஒரு வாராந்த சஞ்சிகை நிகழ்ச்சி. தற்செய லாக அவரை வானொலி நிலையத்தில் சந்தித்தபோது, என்னை

யும் அந்நிகழ்ச்சிக்கு எதாவது பங்களிப்பு செய்யச்சொன்னார்.

ஏற்கெனவே காவலூர் இராசதுரை என்ற பிரபல ஒலிபரப்பாளர் 'கலைக்கோலம்' நிகழ்ச்சியை நடத்திய காலத்தில் மிக அரிதாக பங்குபற்றியிருந்தேன் என்றாலும், என் புலமை, ஆளுமை பற்றிய சுயமதிப்பீட்டை அவருக்குச் சொன்னேன். ஆனால் அவர் எனக்கு உற்சாகமூட்டி, 'விமர்சகரின் பார்வையில் இல்லாவிடினும் ஒரு ரசிகனாக உங்கள் எண்ணங்களை சொன்னால் போதும்' என்று சொல்லி, கவிஞர் மு. பொன்னம்பலத்தின் 'அது' என்ற கவிதைத் தொகுதியை என்னிடம் தந்தார்.

மு. பொன்னம்பலத்தின் கவிதைக்கோலங்களை ரசிகனாய் தரிசித்தேன்.

‘அந்தி அடிவான், அமுதக் கடைசலென
குந்தி யெழும்நிலவு, பூவரசங் குழையூடாய்
சிந்திக் கிரணங்கள் செல்லம் பொழிகின்ற
காலைப் பரிதி, கனகச் சிறுபறவை,
‘ஏலோ’ எனநீர் இறைப்போர் - இவையெனது
பிஞ்சு மனதைப் பிசைய, மறுகணமே
பெஞ்சில் எடுத்தெச்சில் பெய்து சுவரெல்லாம்
நெஞ்சில் புரண்ட நினைவுக்குத் தொட்டிலிட...
என்ன விதமாய் இளமை மறைகிறது’

அவரது கவிதைகள் என் நெஞ்சில் உருவாக்கிய உணர்வுக்குவியலை எழுத்தில் வடித்துக்கொண்டு, ஒலிபரப்புக்கு முன், காட்டி அங்கீகாரம் பெறுவதற்காக மஹாகவியின் வீட்டிற்கு விரைந்தேன். (அவர் அப்போது கொழும்பில் பாமன்கடையில் இருந்தார்).

நான் அப்படி விரைந்ததுக்கு என் கருத்தாக்கம் வானொலியில் ஒலிபரப்படும் சந்தோசம் தவிர்ந்த இன்னமொரு புறக்காரணியும் இருந்தது. அதற்காகக் கிடைக்கக்கூடிய சன்மானம் (15 ரூபா) மாதக்கடைசியில் வருமானம் குறைந்த ஒரு எழுதுவினைஞனான எனக்கு மிகப்பெரிதாகப் பட்டது.

மகாகவி வீட்டில் யாரும் இருப்பதாகத் தெரியவில்லை. ஏதோ வெறிச்சோடிய சூழல். அருகில் வசிப்பவர்களிடம் கேட்டேன். அவர் இருதய நோயுற்று, கொழும்பு பெரியாஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்டிருக்கிறார் என்ற செய்தி கிடைத்தது. துணுக்குற்ற நான் அங்கிருந்தே பஸ் எடுத்து கொழும்பு பெரியாஸ்பத்திரிக்குப் போனேன். அவரது நிலை பாரதூரமானதாக இருக்குமென்று நான் நினைக்கவில்லை. ஆனால் அந்தவாரம் நிகழ்ச்சி ஒலிப்பதிவு செய்யப்படாமல் போய்விட்டால்...

மனம் அங்கலாய்த்தது. வள்ளல் சீதக்காதியை கடைசியாக காண வந்த தமிழ் புலவரை ஒருமுறை நினைத்துக்கொள்ளுங்கள்.

ஆஸ்பத்திரியில் பார்வையாளர்கள் வந்து போய்விட்ட நிலையில், கண்களை மூடிப் படுத்திருந்த மஹாகவியின் முன்னால் போய், கையில் எழுத்துப்பிரதியுடன் வியர்க்க, விறுவிறுக்க நின்றேன். கண் விழித்து பார்த்தவர், ‘எழுதி விட்டீரா... யோசிக்காதையும்... நான் சுகமாகி வந்தவுடனே நிகழ்ச்சி செய்வோம்’ என்று சொல்லி, பிரதியை வாங்கி ‘இருக்கட்டும்... வாசித்துப் பார்க்கிறேன்’ என்று தலையணைக்கு கீழ் வைத்துக்கொண்டு விடை கொடுத்தார்.

அதுதான் அவர் என்னோடு பேசிய கடைசி வார்த்தைகளாகப் போயின. அந்த ‘அசாதாரண மனிதரின் சரித்திரம்’ நிறைவுற்றது.

கடைசியாக,

மழை தூறிய ஒரு பொழுதில், மருதானையில் டீன்ஸ் றோட்டில் உள்ள ஒரு மலர்ச்சாலையில், அவரது உடல் யாழ்ப்பாணம் கொண்டு போவதற்காக பெட்டியில் வைத்து மூடப்படுவதை, சற்று ஒதுங்கியே நின்று கலங்கிய கண்களுடன் பார்த்துக் கொண்டிருந்தேன். அங்கு நின்றவர்களுடன் நான் ஒன்றும் பேசிக்கொள்ள வில்லை. யாரையுமே எனக்கு தெரியாது. அவரைத் தவிர.

‘நீண்டு கிடந்தபடி
நீ துயின்ற பெட்டியினை
வண்டியிலே ஏற்றுதற்கு
நானும் இரு கைகொடுத்தேன்

கை கொடுத்து விட்டுக்
கருந்தார்ப் பெருந்தெருவைப்
பார்த்தபடி நின்றேன்
நான் பார்த்தபடி நின்றேன் காண்...’

(மகாகவியின் மரணம் குறித்து அவரது நெருங்கிய நண்பர் எம். ஏ. நுஹ்மான் எழுதிய கவிதை வரிகள்.)

info@thaiveedu.com

செந்திரு இரட்டையரை ஈன்றாள்.
சிந்தையிலே பேருவகை சான்றாள்.
வந்து கண்ட ஐயப்பர்
வாய்கடித்தே, ‘என்னுடையது
எந்த மகவு?’ என்ன, எதும் தோன்றாள்.

காதலரின் ஓவியம் வரைந்தான்.
கண்ணியம் உள்ளார் என நினைந்தான்.
மாதம் உருண் டோட, மறு
கண்காட்சி வந்தது. ஆ.
தீது புரிந்தார் என உணர்ந்தான்.

பிணைப்பதற்கு நின்ற கயிறோ நெடிது

- எழில்வேந்தன்

இலக்கியவாதிகளின் பிள்ளைகளான நாம் ஏனைய இலக்கிய கர்த்தாக்களையும் அவர்தம் குடும்பத்தினரையும் ஒரே குடும்பமாகப் பார்த்தால் மஹாகவி மாமா, மஹாகவி மாமி, நுஃமான் மாமா, நுஃமான் மாமி, ஸ்டீபன் மாமா (சண்முகம் சிவலிங்கம்) ஸ்டீபன் மாமி என எங்கள் உறவுகள் இனங்கள், மதங்கள், சாதிகள், கடந்ததாக விரிவுபட்டிருக்கின்றன. மஹாகவி என்ற அந்த மாபெரும் கவிஞன் எனக்கு எப்போது மாமாவாக அறிமுகமானாரோ அன்றிலிருந்து அவரது துணைவியார் பத்மாசனி அவர்களும் எனக்கு மஹாகவி மாமியாக அறிமுகமானார். அன்றிலிருந்து இன்றுவரை அவர் எனக்கு மஹாகவி மாமியாகத்தான் இருந்துவரு கின்றார். அவரது இறுதிச் சடங்கின் போது ஒருவர் என்னைக் கேட்டார் 'மாமியென்றால் எந்தவகையில் சொந்தம்?' என்று. எந்தவகையிலென்று சொல்ல?

இளவயது நினைவுகளெல்லாம் அப்படியே இளமையாகவே இருக்கின்றன. நான் சின்னவனாக இருந்தபோது மஹாகவி மாமா, மாமி, பிள்ளைகளெல்லோரும் பெரிய நீலாவணைக்கு வந்து போனது நல்ல நினைவிலிருக்கின்றது. பின்னாளில் அப்பாவின் (நீலாவணனின்) பழைய கோப்புகளைப் புரட்டிக்கொண்டு போகையில் பெரிய நீலாவணை வந்து சென்ற பின்னர் மஹாகவி எழுதிய கவிதைக் கடிதமொன்று பொக்கிஷமாகக் கிடைத்தது. எனது இள வயது நினைவுகளுக்கு ஆதாரமாக அமைந்த அக்கடிதம் இது:

அன்புடைய நண்பா
அருந்தங்காய்
பிள்ளைகளே

ஐந்து முழுநாள் நின் அன்பிற்
திளைத்ததனால்
இந்த உலகம் இனிதாகச்
சிந்தையிலே
பால்போல ஓடிப்
பழகும் ஒரு நண்பன்
நீலாவண, எனக்கு நீ!

ஊரும், தெருவும், உனது
கிணற்றெடுத்த
நீரும், மணலும் நிழலுமாய்ச்
சோரும்
பொழுதெல்லாம் என் நினைவிற்
பூரிப்புண்டாக்கும்
எழுதலாம் போலும் இதை!..

தங்கைக்கு நன்றி, தளிர்போற்
குழந்தைகட்கும்
எங்கள் நிலையை இயம்புவாய்
அங்கே நாம்
அன்று பிரிந்தோம்
அழாமல்! பிணைப்பதற்கு
நின்ற கயிறோ நெடிது!.

நண்பன்
மஹாகவி
கொழும்பு
11.05.64

சரியாக 57 ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்ட இக்கடிதத்தின் கடைசி வரிகள் 'பிணைப்பதற்கு நின்ற கயிறோ நெடிது!' மஹா

கவி எதை நினைத்து இதை எழுதினாரோ தெரியவில்லை. அந்த இனிய உறவு நெடுங்கயிறாக இன்றும் தொடர்ந்து கொண்டேயிருக்கிறது.

மஹாகவி மாமியை நான் 8 வயதுச் சிறுவனாக அறிந்த காலம் முதல் இறக்கும் வரை வரை ஒரு வித்தியாசமான பெண்மணியாகவே கண்டு வந்திருக்கிறேன். அவரது கைச் சமையலாகட்டும். பிள்ளைகளின்மேல் செலுத்தும் அக்கறையாகட்டும், அவர்கள் மீதான கண்டிப்பாகட்டும், அதுபோலவே அவர்களுக்குக் கொடுத்த சுதந்திரங்களாகட்டும் எல்லாமே எனக்கு வித்தியாசமாகவே தோன்றின. மஹாகவி மாமியோடு நெருங்கிப் பழகும் காலம் நான் சிவானந்தா வித்தியாலய விடுதியில் இருந்தபோதுதான் ஏற்பட்டது. அப்போது மஹாகவி மட்டக்களப்புக் கச்சேரியில் உயர் பதவியில் இருந்தார். விடுமுறை நாள்களில் நான் மட்டக்களப்பில், மாமா குடும்பத்தினர் வசித்துவந்த உத்தியோகபூர்வ இல்லத்திற்கு அடிக்கடி போவதுண்டு. அவ்வேளையியெல்லாம் மாமி, அவரது பிள்கைள் பாண்டியன், சேரன், சோழன், இனியாள், ஔவை ஆகியோரோடு என்னையும் ஒரு பிள்ளையாகப் பாவித்து அன்போடு அக்கறையோடு கவனிப்பார். பெரும்பாலும் பாண்டின் அளவெட்டியில் அவ்வேளை தங்கியிருந்ததால் நானே வயதில் மூத்தவ



(இடமிருந்து வலம்):
சேரன்,
நீலாவணனின் மகன் விநோதன்
(எட்டிப் பார்க்கிறார்), அரியம்,
நீலாவணன் மகள் எழிலரசி, அவருக்குப்
பின்னால் நிற்பவர் நீலாவணன், குழந்தை
கோசலாவைக் கையில் ஏந்தியபடி நிற்பவர்
திருமதி நீலாவணன், மஹாகவி, பாண்டியன்.
படத்தில் சேரனோடு நிற்பவர் நீலாவணன் வீட்டு
நாய். எம்.ஜி.ஆர். என்று அவருக்குப் பெயர்.
1964இல் எடுத்த படம்.

னென்ற ஒரு தனிக் கவனிப்பும் எனக்கு உண்டு. மாமியின் பிள்ளைகள் ஒவ்வொருவரினதும் உணவுப் பழக்கங்கள் வித்தியாசமானதாக இருந்தபோதும் சளைக்காமல் முகம் சுழிக்காமல் எல்லோருக்கும் தேவையானதைச் சமைத்துத் தருவதில் அவர் காட்டும் அக்கறையை நான் கண்டிருக்கிறேன். 'நண்டைக் கூட சமைக்கப் பழகினாள், நன்றியோடவன் திண்டு புளுகினான்' என மஹாகவி எழுதியிருக்கிறார். மாமியைப்பற்றி நினைக்கும்போதெல்லாம் மனதில் தோன்றும் ஒரு சில நினைவுகளை மீட்டிப் பார்க்கவிரும்புகிறேன். மஹாகவி மறைந்து 50 ஆண்டுகள் நிறையும் இந்தப் போதில் மஹாகவியின் முதல் வாசகியாகவும் உறுதுணையாகவும் தார்மிக பலமாகவும் சுடர் விட்ட மஹாகவி மாமியை நினைவு கூர்வது மிகப் பொருத்தமானது.

ஒருநாள் மாமாவும் மாமியும் வெளியே நண்பர்களது விருந்தொன்றில் கலந்துகொள்ள வேண்டியிருந்தது. நான் விடுமுறையில் அங்கு சென்று நின்றதால் (பாண்டியனைத் தவிர) நான்கு பிள்ளைகளையும் எனது பொறுப்பில் விட்டுச் செல்வதென்ற தீர்மானம் எடுக்கப்பட்டது. மாமியும் மாமாவும் விருந்திற்குச் சென்றுவிட்டனர். ஆனால், என்ன காரணமோ தெரியவில்லை இரவு ஒன்பது மணியளவில் மட்டக்களப்பு நகரெங்கும் மின்சாரம் துண்டிக்கப்பட்டு விட்டது. மாமி உடனடியாக என்னைத் தொலைபேசியில் கூப்பிட்டு மெழுகுவர்த்தி, நெருப்பெட்டி என்பவையெல்லாம் எங்கே இருக்கின்றன என்று கூறி பயப்படாமல் இருக்குமாறும் ஏதும் பிரச்சினையென்றால் உடனே தொலைபேசியில் அழைக்குமாறும் கூறினார். அதுமட்டுமன்றி அதற்குப்பிறகும் மின்சாரம் வரும்வரையில் அடிக்கடி அழைத்து விசாரித்தபடியேயிருந்தார்.

ஒருமுறை பாசிக்குடாவிற்கு மாமவின் காரில் நாங்களெல்லோரும் போனபோது மஹாகவி மாமி சமைத்து வந்த பூசணிக்காய் சாம்பார் இன்றும் என் நினைவைவிட்டு அகலாத ஒரு உணவாகவே நிலைத்துவிட்டது. வீட்டின் பின்புறமிருந்த பூசணிக்கொடியில் காய்த்த அந்தக் காயை, பிள்ளைகள் நாங்களெல்லோரும் சேர்ந்து ஆய்ந்தெடுக்க, மாமி சுவையாக அந்தச் சாம்பாரைச் செய்திருந்தார். இந்தச் சாம்பாரைப்பற்றி நான் பல இடங்களில் நினைவிற்கொண்டதுண்டு. ஏனெனில் நீற்றுப் பூசணிக்காயில், சாம்பாரும் செய்யலாம். அந்தச் சாம்பார் மறக்கமுடியாதவாறு சுவையாகவும் இருக்குமென்று நான் தெரிந்து கொண்டது அன்றுதான்.

மட்டக்களப்பிலிருந்து மஹாகவி மாற்றலாகிப் போனதற்குப் பின் மாமாவின் மரணத்தின்போதுதான் அளவெட்டியில் 'நீழலில்' மீண்டும் மாமியைக் காணக்கிடைத்தது. மிக இளவயதிலே தகப்பனாரை இழந்த மாமி இல்வாழ்விலும் இளவயதில் மஹாகவியை இழந்தாலும் துணிச்சலுடன் பிள்ளைகளை வளர்த்துச் சரியான பாதையிலே அவர்களுக்கு வழிகாட்டியதை மறக்கமுடியாது.

மஹாகவி மாமா மறைந்தாலும் எங்கள் இரு குடும்பத்திற்குமிடையிலான தொடர்புகள் நின்ற நெடுங்கயிறாகவே தொடர்ந்தது. எனது தந்தையாரின் மறைவின்போது மாமியும் பாண்டியனும் யாழ்ப்பாணத்திலிருந்து வந்து எங்களோடு தங்கியிருந்து எங்கள் துயரில் பங்குகொண்டனர்.

அதற்குப்பின் என் தங்கை ஊர்மிளா யாழ்ப்பாணத்தில் தங்கிக் கல்வி கற்க நேர்ந்தபோது தங்களுடனேயே தங்கிப் படிக்குமாறு கூறியதுடன் அவளை நன்கு பராமரித்தவர் மாமி. நாங்கள் எந்த அலுவலாக யாழ்ப்பாணம் போனாலும் அளவெட்டிக்குப் போகாமல் திரும்புவதே கிடையாது. அளவெட்டிக்குப் போகும்போதெல்லாம் சற்றும் ஓய்வெடுக்காமல் பம்பரமாய் சுழன்றுகொண்டிருக்கும் மாமியைப் பார்த்து நான் வியப்பதுண்டு.

பிள்ளைகளிடம் எவ்வளவுக்கெவ்வளவு கண்டிப்புக் காட்டினாலும் அவர்களது சுதந்திரத்தில் மாமி பெரிதாகத் தலையிடுவதை நான் கண்டதில்லை. பிள்ளைகள் தொடர்பான பல்வேறு விடயங்களில் அவர் நடந்துகொண்ட விதமும் ஒரு புரட்சிகரப் பெண்ணாகவே அவரை எனக்குக் காட்டியது. அதே கொள்கையுடன் அவர் கடைசி வரையில் வாழ்ந்தாரென்றே தோன்றுகிறது.

மாமியின் சமையலைப்பற்றி எழுதுவதானால் நிறையவே எழுதலாம். சமையலையும் மையலையும் அவற்றில் ஊறித் திளைத்துச் சுவைக்கும் கலைஞர் / கவிஞர் மரபுதானே நாமெல்லோரும்?

நான் ஏற்கனவே குறிப்பிட்ட பூசணிக்காய்ச் சாம்பாரோடு என்னால் மறக்கமுடியாத அவரது மற்றொரு உணவுப் பக்குவம் மோர் மிளகாயில் அவர் செய்யும் தேங்காய்ச்சம்பல்.

மாமி காலமாவதற்கு முந்தைய நாள் காலையில் அவரைப் பார்க்க வத்தளைக்குப் போயிருந்தோம். நீண்ட நேரம் பல விஷயங்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தோம். இன்னும் ஒரு நான் கைந்து வருடங்கள் இந்த உயிரை இழுத்துப் பிடிக்கப்பார்க்கிறார்கள் என்றார். ஆனால் அடுத்தநாளே மாமி எங்களைவிட்டுப் பிரிவார் என்று நான் நினைத்திருக்கவில்லை. அன்று எனக்கு என்ன தோன்றியதோ தெரியவில்லை. விடைபெறும்போது அவரது முகத்தைத் தடவி 'மாமி எல்லாம் சரிவரும்' என்று சொல்லிவிட்டு வந்தேன். எல்லாம் சரியாக வரவில்லையென அடுத்த நாள் தெரிந்துவிட்டது.

மஹாகவி மாமி,

உங்களை மறக்கமுடியாது, உங்களுக்காக மஹாகவி எழுதிய கவிதைகளையும் தான்.

info@thaiveedu.com

கவிதைப் புரட்சியாளர் மஹாகவி

- வே. விவேகானந்தன்

ஈழத்து இலக்கிய வானில் கவிஞர்கள் வரிசையில் ஒரு நட்சத்திரமாக வலம்வந்தவர் மஹாகவி என்றழைக்கப் படும் துரைசாமி உருத்திரமூர்த்தி (1927-1971). இவர், யாழ்ப்பாணக்குடா நாட்டில், கலைஞர்களினதும் கலைகளினதும் உறைவிடமாக விளங்கிய அளவெட்டியில் பிறந்தார்.

பாடசாலை மாணவனாக இருந்த பொழுதே 14 வயதினில் கவிதை எழுதத் தொடங்கினார். 16 வயதினில் இவர் எழுதிய 'மின்னல்' என்ற கவிதை ஈழகேசரிப் பத்திரிகையில் பிரசுரமானது. 17ம் வயதில் அவர் எழுதிய கவிதைகளை வானகம், புரட்சி, கவிக்கன்னி, ஆரம் ஆகிய தலைப்புகளில் நான்கு சிறிய கையெழுத்துக் கவிதை நூல்களாகத் தொகுத்திருந்தார்... அவை ஒவ்வொன்றையும் தன் இளமைக்கால இலக்கிய நண்பர்களுக்கு சமர்ப்பணம் செய்திருந்தார். இவரது இளமைக்கால இலக்கிய நண்பர்களாக அ.ந. கந்தசாமி, அ.செ. முருகானந்தம், வரதர் ஆகியோர் விளங்கினர். பண்டிதர், மாபாடி, பாணன், வாணன், மகாலட்சுமி, காப்பியாற்றுங் காப்பியனார், புதுநாப் புலவர், மஹாகவி எனப் பல புனைபெயர்களில் கவிதைகளை எழுதி வந்தபோதிலும் இறுதி-வரை மஹாகவி என்ற புனைபெயரே நிலைபெற்று விளங்கியது. 1943ம் ஆண்டிலிருந்து இவரது இளமைக்காலக் கவிதைகள் கிராம ஊழியன், மறுமலர்ச்சி, ஈழகேசரி, ஆனந்தன் போன்ற பத்திரிகைகளில் வெளிவரத் தொடங்கின.

தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியில் கல்வி கற்ற இவர், சிரேஸ்ட பாடசாலைத் தராதரப் பரீட்சையில் (S.S.C) சித்தியடைந்தும், குடும்பச் சூழ்நிலை காரணமாக, உயர் கல்வியைத் தொடராது, 1945ம் ஆண்டு நவம்பர் 20ம் திகதி, கொழும்பு திறைசேரியில் எழுதுவினைஞராகத் தனது அரச சேவையில் இணைந்து கொண்டார். பின்னர் திருகோணமலை கடற்படைக் காரியாலயத்திலும், அதனைத் தொடர்ந்து மீண்டும், கொழும்பு குடிவரவு / குடிய கல்வுத் திணைக்களத்திலும் பணியாற்றினார். 1967ம் ஆண்டு இலங்கை நிர்வாக சேவைக்குத் (C.A.S) தெரிவுசெய்யப்பட்ட உருத்திரமூர்த்தி அவர்கள், மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் மாவட்டக் காணி அதிகாரியாகவும், 1970ம் ஆண்டு மட்டக்களப்பு மாவட்ட அரச செயலகத் துணைவராகவும், 1971ம் ஆண்டு கொழும்பு அரசகரும மொழித் திணைக்களத்தில் உதவி ஆணையாளராகவும் பணியாற்றினார்.

மஹாகவி அவர்கள், சிறு வயதிலேயே கவிதை இலக்கியத் துறைகளில் கவரப்பட்டமையால், அரசபணி நிமித்தம் சென்ற இடங்களிலும் இலக்கியப் பணிகளைத் தொடர்ந்தார். குறிப்பாக 1961ம் ஆண்டு திருகோணமலைத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் முதலாவது ஆண்டு மலர் வெளியீட்டின் போது மஹாகவியின் பங்கு அளப்பரியதாகும். தமிழர்கள் அடர்த்தியாக வாழும் வடக்கு, கிழக்கு, மலையகப் பகுதிகளில் இருந்து ஏறக்குறைய முப்பதுக்கும் மேற்பட்ட எழுத்தாளர்களின் ஆக்கங்களைப் பெற்று, ஆண்டு மலரை வெளியிட்டமை ஒரு சாதனை என்றே குறிப்பிடலாம். இந்த மலர் நூலகம் இணையத் தளத்தில் கிடைக்கிறது.

மஹாகவி அவர்கள் அரச பணியில் படிப்படியாக உயர்ச்சியடைந்து சென்றது போல, கவிதைத் துறையிலும் தனது ஆளுமையை உயரத்துக்குக் கொண்டு சென்றார். நூற்றுக்கணக்கான கவிதைகளையும், இசைப்பாடல்களையும், காவியங்களையும், நாடகங்களையும் எழுதிக் குவித்தார். இவரது படைப்புகள் கவிதை, காவியம், இசைநாடகம், குறும்பா. எனப் பன்முகத் தன்மை கொண்டதாகக் காணப்பட்டன. இவரது கவிதைப் படைப்புகள் சாதாரண மக்களின் வாழ்க்கை முறையினையும் அவர்கள் எதிர்நோக்கிய நாளாந்தப் பிரச்சினைகளையும், சமூக பொருளாதார சவால்களையும் அடிநாதமாகக் கொண்டவையாகும். மகாகவியின் முதலாவது கவிதைத்தொகுப்பு 'வள்ளி' என்ற பெயரில் முதலாவது பதிப்பாக 1955ம் ஆண்டு வெளிவந்தது. இதனை வரதர் வெளியீட்டகம் வெளியிட்டிருந்தது.

மஹாகவியின் 'ஒரு சாதாரண மனிதனின் சரித்திரம்' என்ற கவிதைத்தொகுப்பு 1965ம் ஆண்டு எழுதப்பட்டது. 1966ம் ஆண்டு டிசம்பர் மாதம் முதல் பத்து வாரங்கள் சுதந்திரன் பத்திரிகையில்

இது பிரசுரிக்கப்பட்டு வந்தது. 1971ம் ஆண்டு மஹாகவி நூல் வெளியீட்டுக் குழுவினால் நூலாக வெளியிடப்பட்டது. ஒரு மனித ரின் பிறப்பு முதல் இறப்பு வரையான பருவங்களைப் பட்டினத்து அடிகள் ஆன்மீக நோக்கில் பாடலாக்க, கவிஞர் கண்ணதாசன் சமூக நோக்கில் பாடலாக்க, மஹாகவியோ தனக்கேயுரிய தனித்து வமாக அவற்றைக் காவியமாக்கினார். இக்கவிதை நூலில், பிறந் தமை, வளர்ந்தமை, திரிந்தமை, மணந்தமை, இணைந்தமை, சிறந்தமை நிறைந்தமை, நடந்தமை, இறந்தமை என்ற இயல்க ளின் கீழ் நூறு கட்டளைக் கலிப்பாக்களால் மனித வாழ்க்கை சித்திரிக்கிறார். இறுதியில், மனித வாழ்வின் முடிவைப்பாடிய மஹாகவி 'மனிதன் இறப்பதில்லை' என்ற அவரது கொள்கையை பின்வரும் வரிகளால் வலியுறுத்தியுள்ளார்.

அன்று பிறந்து
இன்று இறப்பதுள்
ஆயதன்று நம் மானிட வாழ்வுகாண்,
அப்பனே மகனாகி,
வளர்ந்து
உயிர் ஓய்தல் அற்று
உயர்வு ஒன்றினை
நாடலே உண்மை.

மஹாகவியின் வில்லுப்பாட்டு வடிவிலான படைப்பாக 1968ஆம் ஆண்டு 'கண்மணியாள் காதை' வெளிவந்தது. இது 'கலட்டி' என்ற பெயரில் 1967-1968ம் ஆண்டுகளில் 'விவேகி' என்னும் சஞ்சிகை யில், ஏழு இதழ்களில், தொடர்ச்சியாகப் பிரசுரிக்கப்பட்டு வந் தது. அப்படைப்பிலே அவர் தான் வாழ்ந்த மண்ணையும் உழைப் பாளிப் பெருமக்களையும் எவ்வாறு நேசித்தார்? என்பதற்குப் பின் வரும் பாடல் சிறந்த ஒரு எடுத்துக்காட்டாகும்.

ஆறு கடந்து திரிந்து வயல்கள்
அடைந்து கதிர்கள் விளைந்திட வான்
ஏறி உயர்ந்த மலை ஏதும் இல்லையே.
என்ற ஒரு கதை சொல்வதுண்டு.

ஏறி உயர்ந்த மலை இல்லை ஆயினும்
என்ன? இருந்தன தோள்கள்!' என்றே
கூறி உழைத்த பின் ஆறிக் கலைகளில்
ஊறிச் சிறந்தது யாழ்ப்பாணம்.

என வியந்து பாடுகிறார். மலைகள் இல்லாத குறையை தோள்கள் போக்கின. ஆறுகள் இல்லாத குறையை, உழைப்பின் காரண மாக, தோள்களிலிருந்து வடிந்தோடும் வியர்வைகள் போக்கின என்ற கருத்துகள் தொக்கி நின்று உழைப்பாளிகளின் பெருமை பற்றிக் கூறப்படுகிறது. அத்துடன் உழைப்பின் பின்னர், ஓய்வு நேரத்தின்போது, கலைகளில் ஆர்வம் கொண்டு ஈடுபட்ட மக்க ளைக் கொண்டு சிறந்து விளங்கியது யாழ்ப்பாணம் எனத் தான் வாழ்த்த மண்ணின் பெருமையை வெளிப்படுத்தியுள்ளார்.

மஹாகவியின் மேடை நாடக வடிவில் அமைந்த படைப்புகளுக்கு 'கோடை', 'புதியதொரு வீடு', 'முற்றிற்று' என்பன சிறந்த எடுத் துக்காட்டுகளாகும். இவற்றுள் 'புதியதொரு வீடு' மீனவ மக்களின் வாழ்க்கையினையும், அவர்கள் எதிர் கொள்ளும் சவால்களையும் துல்லியமாக எடுத்துக்காட்டும் ஒரு படைப்பாகும். இது 1971ஆம் ஆண்டு ஏ.சி. தாசீசியஸ் அவர்களின் நெறியாள்கையில் மேடை-யேற்றப்பட்டது. பின்னர் சி. மௌனகுரு இந்நாடகத்தைப் பல முறை மேடையேற்றினார். பாநாடகமாக அமைந்த இப்படைப்பில் பின்வரும் பாடல் உள்ளத்தை உருக்கும் தன்மை வாய்ந்தது.

சிறுநண்டு மணல்மீது படம் வந்து கீறும்
சிலவேளை இதைவந்து கடல்கொண்டு போகும்
கறிசோறு பொதியோடு தருகின்ற போதும்
கடல் மீதில் இவள் கொண்ட பயம் ஒன்று காணும்

வெறுவான வெளிமீது மழைவந்து சீறும்
வெறிகொண்ட புயல் நின்று கரகங்கள் ஆடும்
நெறிமாறு படநூறு சுழிவந்து சூழும்
நிலையான தரைநீரில் இலைபோல் ஈடாடும்.

சிறுவர்களைக் கவரும் விதத்தில் காலைக் காட்சி, மாலைக் காட்சி, காடு, அணில், சின்னக் குருவி எனப்பல தலைப்புகளில் பாடல்களைப் பாடிய அவர் சிறுவர்களின் சிந்தனையைத் தூண் டும் வகையிலும், அறிவியலில் ஆர்வம் கொள்ளும் விதத்திலும் பல பாடல்களைப் படைத்துள்ளார். அறிவியல் ரீதியாக சிறுவர்க ளின் சிந்தனையைத் தூண்டும் பாடல்களாக அவற்றில் பல அமைந்துள்ளன.

பஞ்சு காற்றில் பறப்பானேன்?
பனங்காய் நிலத்தில் விழுவானேன்?
பிஞ்சு மாங்காய் புளிப்பானேன்?
பிறகு கனிந்து சுவைப்பானேன்?

கல்லு நீருள் அமிழ்வானேன்?
கப்பல் மட்டும் மிதப்பானேன்?
புல்லு மழையில் தளிர்ப்பானேன்?
பூக்கள் மலர்ந்து சிரிப்பானேன்?

பந்தை உருட்ட உருள்வானேன்?
பாறை அசையா திருப்பானேன்?
விந்தை பலவும் நிகழ்வானேன்?
விரும்பி நாங்கள் படிப்பானேன்?

விரும்பி நாங்கள் படிப்பதற்கே
விந்தை பலவும் நிகழ்கிறதாம்
கரும்பைத் தின்னப் பிடிக்காதோ?
கற்றுக் கொள்ளத் துடிக்காதோ?

என்பதாகும்.

மேலும் 'தொழில்' என்னும் தலைப்பிலே தொழில்களின் சிறப்புப் பற்றி சிறுவர்களின் உள்ளங்களிலே மிக லாவகமாகப் புகுத்தும் தன்மை தனித்துவமானது. அதனைப் பின்வரும் பாடல்களில் அவ தானிக்கலாம்.

நெல்லை ஒருவன் விதைக்கின்றான்
நிறையச் சோறு படைக்கின்றான்
கல்லை ஒருவன் உடைக்கின்றான்
கட்டி வீடு முடிக்கின்றான்

பஞ்சை ஒருவன் நெய்கின்றான்
பால்போல் ஆடை செய்கின்றான்
அஞ்ச ஒருவன் வருகின்றான்
அவனோ கல்வி தருகின்றான்

பேனை ஒருவன் பிடிக்கின்றான்
பிஞ்சுப் பாடல் கொடுக்கின்றான்
வாளை ஒருவன் அளக்கின்றான்
மயிரைக் கூடப் பிளக்கின்றான்

வீணை ஒருத்தி எடுக்கின்றாள்
வியக்கும் இசையை வடிக்கின்றாள்
தோணி ஒருவன் வலிக்கின்றான்
தொடர்ந்து மீனாய் இழுக்கின்றான்

ஆலை ஒருவன் கட்டுகின்றான்
அதனாற் பயன்கள் காட்டுகிறான்
பாலை நிலமும் இவராலே
பசுமை பெற்று நிற்கிறதே.

இவ்வாறு சிறுவர்களுக்கான பாடல்களையும் மகாகவி எழுதியுள் ளார். இவர் மறைந்ததும், வெற்றிமணி சஞ்சிகை அவரை கௌர விக்கும் முகமாக, அவரது புகைப் படத்தை முன்பக்கத்தில் பிரசு ரித்து சிறப்பு வெளியீடாக வெளிவந்தமை இங்கு குறிப்பிடத்தக் கது.

சிறுவர் முதல் பெரியோர் வரை சிலாகித்தும் ரசித்தும் படிக்கக்கூ டிய கவிதைகளைப் படைத்து, ஈழத்துக் கவ-
ிதைத் துறையில் ஒரு புரட்சியை ஏற்படுத்திய மஹாகவி உருத்திரமூர்த்தியின் இதய கீதம் ஜூன் 20, 1971 அன்று மௌனமாகியது.

vivekananthan.v@thaiveedu.com

அம்பலவாணர்

- மு. மகேஸ்வரன்

நாங்கள் அவரை அம்பலவாணர் அத்தான் என்று தான் அழைப்போம். மாமியின் மகன். அம்பலவாணர் வீட்டுப்பெயர். சிதம்பரம் ஆடலரசனுக்கும் எங்கள் குடும்பங்களுக்கும் இருந்த ஆத்மிக, அழகியல் உறவால் உருத்திரமூர்த்தி அம்பலவாணர் ஆனார். அதுதான் அவரது தாய் கமலாம்பாளின் விருப்பப் பெயர்.

நான்கு பெண்களுக்கு பின் ஆண் குழந்தை வேண்டி, நேர்த்தி வைத்துப் பிறந்தவர் அம்பலவாணர். அம்பலவாணருக்கு கைலாச பதி, திருநாவுக்கரசு என இரண்டு தம்பிமார் இருந்தனர். எனினும் அவர்கள் இருவரும் ஒரே நாளில் சூலை நோயால் இயற்கை எய்தினார்கள்.

உருத்திரமூர்த்தி என்பது அவரது 'டாப்புப் பெயர்'. அம்பலவாணர் வீட்டுப் பெயர். கவிதைத் துறையில் ஈடுபட்டபின் எடுத்த புனை பெயர் மஹாகவி. மஹாகவியின் துணைவியார் பத்மாசனி எங்களுடைய அப்பா வழிச் சொந்தத்தில் எங்களுக்கு ஒரே அக்கா.

இந்த நெருங்கிய உறவுகளைப் பார்க்க மாவிட்டபுரத்தில் இருந்து அடிக்கடி நாங்கள் அளவெட்டி போய் வருவோம். எங்களுக்கும் எங்கள் உறவுகளுக்கும் அளவெட்டியும் மாவிட்டபுரமும் ஒரே ஊர் தான்.

அவருடைய கவிதைத் திறமைகளை என் சிறு வயதில் (10-12) விளங்கிக்கொள்ள முடியவில்லை ஆனால் அம்பலவாணர் தன் இலக்கிய வட்டார நண்பர்களுடன் கலந்துரையாடுவதை நான் அடிக்கடி பார்த்திருக்கிறேன். குறிப்பாக 'அரிச்சந்திர மயான காண்டம்' புகழ் நடிகமணி வைரமுத்து அவர்களும் அம்பலவாணரும் உரையாடி, பாடி, களிப்பாய் இருக்கும் பல தருணங்களை நான் பார்த்திருக்கிறேன். அம்பலவாணர் கையால் தாளம் போடுவார். வைரமுத்து நடித்துக் காட்டுவார். புதிய நாட்டார் பாடல்களையும் ஆட்டங்களையும் அவர்கள் உருவாக்குவார்கள். அந்தக் காட்சிகள் என் மனதில் இப்போது அகலா நினைவுகளாக உள்ளன.

அப்போது சேரன் சிறுவன். எப்போதும் கூடவே இருப்பார். நடிக மணிதான் கொஞ்சக் காலம் சேரனுக்கு மத்தளம் வாசிக்கப் பழக்கியவர். அம்பலவாணருக்குத் திடீரென இடமாற்றம் வந்தபடியால் அவர்களுடைய பல திட்டங்கள் முழுமை பெறவில்லை.

அம்பலவாணர் பற்றி எழுதும் போது அவருடைய மூத்த அக்கா மீனாட்சி சுந்தரம் பற்றியும் குறிப்பிட வேண்டும். அவருக்கு மகாபாரதம், இராமாயணம், நாலடியார், ஒழுக்க நூல்கள், ஔவையார் பாடல்கள், சித்தர் பாடல்கள், உப கதைகள் எல்லாம் அத்துப்படி. 'ஔவை' என்ற புனைபெயரில் சுதந்திரன் பத்திரிகையில் வெண்பாக்கள் எழுதியுள்ளார். அவர் கதை சொல்ல நாங்கள் சுற்றி இருந்து கேட்போம். தம்பி மகாகவி பற்றியும் அவரது கவிதைகள் பற்றியும், பின் சேரனின் பாடசாலை அனுபவங்கள் பற்றியும் சொல்வார்.

அம்பலவாணர் அப்போது சின்னக் குழந்தையாக இருந்த பாண்டியனையும் சைக்கிளில் ஏற்றிக்கொண்டு எங்களைப் பார்க்க மாவிட்டபுரம் வருவார். அவர் காற்சட்டை பொக்கற்றில் எப்பவும் ஒரு சிறிய கறுப்பு நிறச் சீப்பு வைத்திருப்பார். தனது முடியை அடிக்கடி வாரிக் கொள்வார். தலைமுடி குழம்பி இருப்பதை அவர் சகிக்க மாட்டார். பிள்ளைகளின் முடியையும் வாரிவிடுவார்.

எங்கள் அப்பா முருகையாவும் அம்பலவாணரின் மனைவி பத்மாசனியின் தந்தை முத்தையாப் பண்டிதரும் சகோதரர்கள். எங்கள் அப்பா இறந்தபோது நாங்கள் எல்லாரும் சிறுவர்கள். மிகுந்த அதிர்ச்சியும் கவலையும் நிறைந்த நிலைமை. அம்பலவாணர் அத்தான்தான் எங்களுக்கு ஆறுதல் கூறி வழிப்படுத்தியமை இப்போதும் பசுமையான நினைவாக இருக்கிறது.

அம்பலவாணர் அத்தானின் மரண வீட்டுக்கு என்னால் செல்ல முடியாதது எனக்குப் பெரிய மனத்தாக்கம். மருந்தாளராகப் புதிதாக வேலையில் நியமனம் பெற்று ஒரு சில வாரங்கள்தான் ஆகியிருந்தன.

1975ல் எனக்குத் திருமணமாகி முதலில் அவர் வீடு சென்ற போது அவர் இல்லை. அவர் நினைவாக அவருடைய கவிதைத் தொகுப்பான குறும்பாவை அவர் குடும்பத்தின் சார்பில் இனியாள் எனக்குப் பரிசளித்தார்.

அம்பலவாணர் எனக்கு வாங்கித் தந்த 'றலி' சைக்கிளை நான் கல்லூரியில் படித்த காலத்தில் - 1961இருந்து காலி மருத்துவமனையில் வேலை பார்த்த நாள் வரை (1975) பாவித்திருக்கிறேன்.

இப்போதும் கூட அளவெட்டிப் பக்கம் போகும் போது அம்பலவாணர் கட்டியெழுப்பி, 'நீழல்' எனும் பெயர் சூட்டிய வீட்டைச் சென்று பார்த்து விட்டு வருவது என் கடமைகளில் ஒன்றாக மாறி விட்டது.

●

'நீழல்' என்று பெயரிடப்பட்ட மஹாவியின் வீடு.
வீட்டின் முன் நிற்பவர் மு. மகேஸ்வரன்.

குரு அரவிந்தன் வாசகர் வட்டம் நடத்திய

திறனாய்வுப் போட்டி 2021 முடிவுகள்.

1வது பரிசு: நரேஸ் நியூட்டன்.த. கழுபோவிலை, கொழும்பு, இலங்கை

2வது பரிசு: சிவனேஸ் ரஞ்சிதா. கெக்கிராவ, இலங்கை

3வது பரிசு: முருகேஷ்.மு. வந்தவாசி, தமிழ்நாடு

4வது பரிசு: ஸ்ரீகந்தநேஷன்.ஆ.பெ. யாழ்ப்பாணம், இலங்கை

5வது பரிசு: சுப்ரபாரதிமணியன்.ப. திருப்பூர், தமிழ்நாடு

15 பாராட்டுப் பரிசுகள்
(பெயர்கள் அகர வரிசையில்)

அனுராதா பாக்கியராஜா. வெள்ளவத்தை, இலங்கை.
முனைவர் சகோ. ஜா. அருள் சுனிலா. பெரியகுளம், தேனி, தமிழ்நாடு.
மு. இப்றாகீம் பாத்திமா றுஸ்தா. காத்தான்குடி, இலங்கை.
கிறகறி பஞ்சரத்தினம் வேதநாயகம். வார்விக்ஷயர், றக்பி, ஐக்கியஇராச்சியம்.
மணி. க. மேற்கு மாம்பலம், சென்னை- 600 033. தமிழ்நாடு.
மேகநாதன். பெ. போடி நாயக்கனூர், தேனி மாவட்டம், தமிழ்நாடு.
முஹம்மது ஹனிபா முஹம்மது ஷர்பான். ஒட்டமாவடி, இலங்கை.
நளாயினி நந்தகுமார். மெல்பேர்ன், அவுஸ்ரேலியா.
பூமணி. க. செஞ்சி தாலுகா, விழுப்புரம், தமிழ்நாடு.
பூர்ணிமா. ச. நாமக்கல் மாவட்டம், தமிழ்நாடு.
பர்வின் பானு. எஸ். தேனாம்பேட்டை, சென்னை, தமிழ்நாடு.
துடுப்பதி ரகுநாதன் டி. எஸ். கோயமுத்தூர்-36 தமிழ்நாடு.
சக்திதாசன் கனகசபாபதி. 4390 ஏஜீநுசுழுனு. டென்மார்க்.
சரளா முருகையன். பென்சினர் காலனி, திருச்சி-23 தமிழ்நாடு.
தங்கராசா செல்வகுமார். குப்பிழான் தெற்கு, யாழ்ப்பாணம், இலங்கை.

10 பாராட்டுப் பரிசுகள்
(மாணவ, மாணவிகளுக்கானது)

அருச்சனா சித்திவினாயகம். ரொறன்ரோ கனடா.
தேவரூபா நாகராஜ். வடுகப்பட்டி, தமிழ்நாடு.
கிருத்திக்கா. எஸ். முனிச்சாலை, மதுரை தமிழ்நாடு.
மோனிஷா நாகராஜ். வடுகப்பட்டி, தமிழ்நாடு.
நிறோஜினி வரதராஜன். வரணி வடக்கு, இலங்கை.
றுவிங்கா ஸ்ரீ. மிசசாகா, கனடா.
சக்தயா சாம்பவி முகுந்தன். ஸ்காபரோ, கனடா.
ஸ்ரீசங்கர் அருநோதன். மட்டக்களப்பு, இலங்கை.
திவாணி கந்தசாமி. தவசிக்குளம். வவுனியா, இலங்கை.
றிசா ஜேசுதாசன் ரொறன்ரோ, கனடா.

சர்வதேச ரீதியாகக் கனடாவில் இருந்து நடந்த முதலாவது திறனாய்வுப் போட்டி - 2021இல் பங்கு பற்றிய அனைவருக்கும் நன்றி. 14 நாடுகளில் இருந்து தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நூற்றுக்கும் மேற்பட்ட திறனாய்வுக் கட்டுரைகள் வந்திருந்தன. இறுதிச் சுற்றில் சிந்தனைப்பூக்கள் எஸ். பத்மநாதன், எழுத்தாளர் கே. எஸ். சுதாகர், கவிஞர் சரேஸ் அகணி ஆகியோர் நடுவர்களாகக் கடமையாற்றினார்கள்.

பரிசு பெற்றவர்களுக்குக் காலக்கிரமத்தில் பரிசுத்தொகை அனுப்பி வைக்கப்படும். இந்தப் போட்டியை நடத்த அனுமதி தந்த எழுத்தாளர் குரு அரவிந்தன் அவர்களுக்கும், நடுவர்களுக்கும், மிகவும் ஆர்வத்தோடு போட்டியில் பங்கு பற்றியவர்களுக்கும் வாசகர்வட்டத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
மேலதிக விபரங்களுக்கு:

https://kurunovelstory.blogspot.com
https://canadiantamilsliterature.blogspot.com
http://tamilaram.blogspot.com

சுலோச்சனா அருண்
செயலாளர், குரு அரவிந்தன் வாசகர் வட்டம்.

நானும் கொரோனாவும்

- ரவி சுப்பிரமணியன்

சென்ற ஆண்டு 2020 பெப்பிரவரி இறுதி தொடங்கி பத்துமாதம் லாக்டவுனில் வீட்டில் முடங்கி கிடந்த ஏக்கத்தில் 2021 ஜனவரி துவங்கி மார்ச் வரையில் தொடர்ந்து இலக்கிய கூட்டங்களுக்காக பல ஊர்கள் செல்ல ஆரம்பித்தேன். மாசத்தில் சில நாட்களே வீட்டில் இருந்தேன். ஏப்ரல் 1ம் தேதி விஜயா பதிப்பகம் வேலாயுதம் அண்ணன் அவர்கள் கோவையில் ஏற்பாடு செய்த இலக்கிய கூட்டத்துக்கு சென்றுவிட்டு 3ம் தேதி சென்னை திரும்பினேன்.

4ம் தேதி முதல் ஜுரம், இருமல் இருந்தது. அது சாதாரண ஜுரம் என்று அசட்டையாக இருந்துவிட்டேன். இடையில் எலக்ஷன் வந்தது. உடம்பு முடியவில்லையே என்று வீட்டில் இருந்தால், என்ன ஆனாலும் நீ ஓட்டு போட்டே ஆகணும் வா வா, பூத் சிலிப் இங்க எங்க கைல இருக்கு என்று என் அனுகூல சத்ருக்கள் தொடர்ந்து என்னை போனில் அழைத்தபடி இருந்தனர். வேறு வழியின்றி சென்றேன். வாக்குச்சாவடி வாசலில் நெற்றியில் மிஷின் வைத்து ஜுரம் எவ்வளவு இருக்கிறது என்று பார்த்தவன் போட முடியாது போ போ என்று ரெண்டு தடவை அந்த மிஷினை ஆட்டிவிட்டு மூணாம் முறை அதே மிஷினையே ஆட்டி சரி போ என்று உள்ளே அனுமதித்தான். அரசின் பிரதிநிதி சொல்வதை கேட்க வேண்டுமல்லவா. தவிர போடாமல் வந்தால் வெளியில் இருக்கும் நண்பர்கள் என்னை ஜாதி பிரதிர்ஷ்ட்டம் செய்யவும் வாய்ப்பிருந்தால் ஜெயிக்க முடியாத ஒரு நல்லவனுக்கு வாக்களித்து திரும்பினேன். வரும்போது என்ன நமக்குத்தான என்று ஒவ்வொருவரும் கேட்கும் போது 'பின்ன' என்று அசட்டு ஜுர சிரிப்புடன் சொல்லி திரும்பிவிட்டேன்.

இதற்கிடையில் கவிஞரும் எழுத்தாளரும் மொழிபெயர்ப்பாளருமான என் நண்பர் டாக்டர் வசந்த் செந்திலிடம் போனில் ஆலோசனை பெற்று மாத்திரை மருந்துகள் வாங்கி சாப்பிட்டுக்கொண்டு இருந்தேன். மாத்திரைகள் எழுதி அனுப்பிய பின் அவரும் ஆர்சானிக் ஆல்பம், கப சுர குடி நீர், கசாயம், மூலிகை தேநீர் எல்லாம் குடியுங்கள். ரெண்டு வேளை ஆவி பிடிங்க பாத்துக்கலாம் என்றார். நமக்கெல்லாம் எப்படி கொரோனோ வரும் என்று நான் நினைத்தது போல டாக்டரும் நினைத்துவிட்டார்.

நாள் செல்ல செல்ல இருமல் கூடியது. ஜுரம் நிற்கவில்லை. 9ம் தேதி வேறு சில ஜுரங்கள் இருக்கிறதா பார்க்கலாம் என்று நண்பர் டெஸ்ட்கள் எழுதி தந்தார். எடுத்தேன். மாலையே வேறு ஜுரங்கள் ஏதும் இல்லை என்று வந்துவிட்டது. அப்போதான் எனக்கு சந்தேகம் வலுக்க 10ம் தேதி கோவிட் டெஸ்ட் எடுக்க சென்றேன். பெரும் ரேஷன் கடை கூட்ட நெரிசலில் ஜாதக குறிப்பு தவிர சகலமும் பூர்த்தி செய்து படிவத்தைக் கொடுத்து விட்டு இரண்டரை மணி நேரம் காத்திருந்து டெஸ்ட்டுக்கு கொடுத்து வந்தேன்.

மாலை 4 மணிக்கெல்லாம் பாசிட்டிவ் என்று ரிசல்ட் வந்துவிட்டது. அதை கையில் வைத்து கொண்டு கையில் பணமுமில்லையே என்று திக்கு திசை தெரியாமல் திகைத்துக்கொண்டிருந்தேன். அப்போது எழுத்தாளரும் வழக்கறிஞரும் பேச்சாளருமான சகோதரி சுமதி போனில் அழைத்தார். என் கதை கலைமகளில் வந்திருக்கு படிச்சிங்களா என்றார். நான் இருக்கும் நிலையை சொன்னதும் உடனடியாக எங்கெங்கோ விசாரித்து எங்கும் இடம் இல்லை என அறிந்து டாக்டர் சுதா சேஷைய்யன் மூலமாக ஸ்டான்லி மருத்துவ மனையில் இடமிருக்கிறது என்று தெரிந்து போகச்சொல்லி, எல்லா உதவிகளையும் செய்தார்.

தனியார் மருத்துவமனைக்கு போகும் வசதியில்லாததால் வாழ்வில் முதல் முறையாக சிகிச்சைக்காக ஒரு பொது மருத்துவமனைக்கு சென்றேன். மருத்துவமனைக்கு பிக்னிக் போவது போல எல்லா பொருட்களையும் எடுத்துக்கொண்டு சென்று கொண்டிருந்தேன். அப்போது சுதா சேஷைய்யனே போனில் வந்து நான் அங்க சொல்லிருக்கேன் நல்லா கவனிச்சிப்பாங்க என்று இரண்டு டாக்டர்களின் அலைபேசி எண்களை தந்தார். நன்றி சொல்லிவிட்டு ஒருவாறு பல பிரயத்தனங்களுக்குப் பிறகு அந்த அட்மீஷன் பகுதியை அலைந்து திரிந்து அடைந்தேன். அங்கும் சரவணா ஸ்டோர்ஸ் அளவு கூட்டம் இருந்தது. இந்த உடல் நிலையோடு என்ன செய்யப்போகிறோம் என்று அயர்ச்சியாக இருந்தது. இந்த சனியன் வந்தால் யாரும் கூட வர முடியாது. அங்கு உடலெல்லாம் முகமுடி அணிந்த டாக்டர்கள் பணியாளர்கள் நர்ஸுகள் தவிர, பார்த்தவர்கள் எல்லோருக்கும் ஜுரம். பலர் இருமிக்கொண்டிருந்தனர். சிலர் உட்கார முடியாமல் பாதையிலயே படுத்தும் கிடந்தனர். ஒரே பேச்சு சத்தம். சத்தமில்லா அழுகை. கொட கொட ஸ்டெச்சரிலும், கால் வைக்க இடமின்றி தாம்பு கயிறு கட்டப்பட்ட வீல் சேரிலும் மருத்துவ பணியாளர்கள் யார் யாரையோ தள்ளிகொண்டு போனார்கள். எனக்கு டீன் சுதா சொல்லியிருந்தும் அந்த மருத்துவர்களால் ஒன்றும் செய்ய முடியாத நிலை. எல்லோரும் போனில் இருந்தார்கள். மிச்ச நேரத்தில் கொஞ்சம் வேலைகள். ஆறு மணிக்கு போன எனக்கு, இரவு 12 மணிக்கு வார்டு ஒதுக்கினார்கள். அதுவரை எக்ஸ்ரே, பிளட் டெஸ்ட், ஈஸிஜி, சிடி ஸ்கேன் என்று ஒவ்வொன்றிற்கும் வரிசையில் நின்று எடுத்து அட்மீஷன் க்யூவில் நின்று படுக்கை ஒதுக்கப்பட்டு வந்து சேர்ந்தேன். அதுவரை பாத்ரூம் போகவில்லை. சாப்பிடவில்லை. சாப்பாடும் இல்லை. படுக்கைக்கு வந்தால் அது படுக்கையா என்று எனக்கு புரியவில்லை. எல்லா இடமும் நாற்றம். இருமல் சத்தம். மூச்சு திணறும் முனகல் சத்தம். அந்த பொது கழிப்பறை பஸ்டாண்ட் கழிப்பறை போல ஒரு நரகமாக இருந்தது. கண்ணுக்கு நேரே பிளாஸ்டிக் பேப்பரில் மனிதர்களை சுற்றிக்கொண்டு போனார்கள். பெரும் பீதியோடு அந்த படுக்கையில் கையில் கொண்டு போயிருந்த போர்வையை விரித்து காற்று தலையணையை ஊதி படுத்துக்கொண்டேன். ஃபேன் வேறு எங்கோ சத்தமாக சுத்திக்கொண்டிருந்தது. ஒவ்வொரு படுக்கைக்கும் எப்படி ஃபேன் வைக்க முடியும். வேர்த்துக்கொட்டியது. பக்கத்தில் ராஜ் மோகன் பாபு என்று ஒருவர் படுத்திருந்தார். அந்த பனிரெண்டு மணியிலும் எழுந்து உட்கார்ந்து வாங்க வாங்க என்று விருந்துக்கு வந்திருப்பவன் போல் உபசரித்தார். குரோனாவா என்றார். ஆமாம் என்றேன். எத்தனை நாள் ஆச்சு. இன்னைக்கு தான் டெஸ்ட்

எடுத்தேன் தெரிஞ்சது என்றேன். பயப்படாதிங்க நல்லா ஆயிடும் என்றார். அந்த வார்த்தை அப்போது எனக்கு தேவைப்பட்டது. சாப்ட்டிங்களா. இல்லை எதும் சாப்பிடலை. சட்டென சற்று தள்ளி யாரோ ஒரு படுக்கையில் இருந்தவரிடம் போய் அவர் சொல்ல, படுத்திருந்த அவர் அந்த அர்த்த ராத்திரியில் கட்டிலடுக்கடியில் இருந்த பையை திறந்து ஒரு குட் டே பிஸ்கட் பாக்கெட்டும், ஒரு மேரி பிஸ்கட் பாக்கெட்டும் கொண்டு வந்து தந்தார். பசிச்சவங்க ளுக்கு என் கையால தரணும் அதனால எந்திரிச்சு வந்தேன் என்று இருமலுக்கிடையே சொன்னார். ரெண்டு பிஸ்கட் பாக்கெட் இரவு உணவாக அமைந்ததும் என் வாழ்வில் அன்றுதான். சாப் பிட்டதும் ராஜ்மோகன் மூச்சு திணறல் இருக்கா என்று கேட்டார். அவர் கேட்டதும் எதோ திணறுவது போல் இருந்தது. பரவா யில்லை. மூச்சு திணறல் இருந்தா இப்படி எடுத்து வச்சிகங்க என்று தன் பின்னால் இருந்த ஆக்ஸிஜன் முகமூடியை எடுத்து முகத்தில் மாட்டி காண்பித்தார். அர்த்த ராத்திரி குறை வெளிச்சத் தில் பக்கத்து கட்டிலில் ஒரு சின்ன விண்வெளி வீரர் படுத்திருப் பது போல இருந்தது. என் தலைக்கு பின்னாலும் ஒரு ஆக்ஸிஜன் மாஸ்க் இருந்தது. ஆனால் எடுக்கவில்லை. எத்தனை பேர் உப-யோகப்படுத்தியதோ இந்த சுத்தமற்ற படுக்கை, கழிப்பறைகள் போல என்று எண்ணிக்கொண்டேன். அங்கங்கே இருமல் சத்தம் விட்டு விட்டு கேட்டபடி இருந்தது.

அதிகாலை நாலு மணிக்கு மூச்சு விட சிரமம் போல தோன்றிற்று. பின்னால் திரும்பி மாஸ்கை தேடினால் அதை காணும். ராஜ் மோகனை தொடாமல் எழுப்பி என்னங்க ஆக்ஸிஜனை காணுங்க என்றேன். வேற யாராவது சீரியஸ் பேஷண்டுக்காக எதும் எடுத் துட்டு பொயிருப்பாங்க என்று சொல்லிவிட்டு திரும்பி படுத்துக் கொண்டார். என்னை சுற்றி என்ன நடக்கிறது. நாம் இருக்க போகி றோமோ. இல்லை முடிவு நெருங்கிவிட்டதா என்று தோன்றிக் கொண்டிருந்தது. இந்த மூச்சு திணறலே இது போன்ற பயத்தி னால்தான் என்று அப்பறம் தோணிற்று. சே. நாம எவ்ளோ பெரிய கவிஞர் எத்தனை பேருக்கு புத்தி சொல்றவன். மரணத்தை கம்பீர மாக எதிர்கொள்வோம் என்று சற்று உள் நடுக்கத்துடன் சொல் லிக்கொண்டே வழக்கமான அரை தூக்கத்துக்கு போனேன்.

காலை சாப்பாடு எப்ப வரும் என்று காத்திருந்தேன். ஒரு வழி யாய் எட்டு மணிக்கு வந்தது. அரசாங்க சாப்பாடு காண்ட்ராக்ட் காரர்களிடம் கொடுத்து செய்ய சொன்னது. கமிஷன் எல்லாம் போக அது எப்படி இருக்குமோ, அப்படி இருந்தது. பசியாய் கிடந்தவனுக்கு ருசிக்கென்ன உரிமை இருக்கிறது. கட கடவென சாப்பிட்டேன். நர்ஸ்கள் வருகிறார்கள் டாக்டர்கள் வருகிறார்கள் எல்லோரையும் பார்க்கிறார்கள் என்னை மட்டும் எதும் கேட்க வில்லை பார்க்கவில்லை. இரவு வரை இதே கதி. எந்த மாத்திரை மருந்து ஊசி ஏதுமில்லை. இதற்கிடையில் சுதா உங்களை நல்லா கவனிச்சிக்க சொல்லிருக்கேன் நல்லா கவனிச்சிக்கறதா போன்ல எனக்கு சொன்னாங்க பயப்படாதிங்க தைரியமாக இருங்க என்றார். அவர் டீன். அவரிடம் போய் இந்த பஞ்சாயத்தை எல்லாம் ஏன் சொல்ல வேண்டும் என்று தோன்றிற்று. ஆமா, ஆமா சரிம்மா ரொம்பரொம்ப நன்றிம்மா என்று மையமாக சொல்லி வைத்தேன்.

ராஜ் மோகனுக்கு ஏதோ ஆஸ்பிட்டலில் உள்ளவர்கள் மூலம் செல்வாக்கு இருந்தது. அவருக்கென தனி சாப்பாடு வந்துகொண் டிருந்தது. ஆஸ்பத்திரி சாப்பாடையும் வேஸ்ட் பண்ணக்கூடா தில்ல சார் என்று அதையும் சாப்பிட்டுக்கொண்டு இருந்தார். தவிர எப்போதும் எதோ ஒரு பழத்தை சாப்பிட்ட படியே இருந்தார். கறி மீன் குழம்பும் வந்துகொண்டிருந்தது. அந்த ஒல்லியான உடம்பு எப்படி இவ்வளவையும் கொள்கிறது என்று எனக்கு ஆச்சர்யமாக இருந்தது. அவர் எப்போது எங்கே போய் ஷேவ் பண்ணுகிறார் என்பதும் புதிராக இருந்தது. அவர் ஒரு வாரமாக இருப்பதால் அம்பத்தி அஞ்சு வயசு மாப்பிள்ளை போல இருந்தார். ஏன் வீட்டுக்கு போகல என்று கேட்டேன். நான் தர்மபுரி சார். வீட்ல பாக்க ஆள் இல்ல. அதனால இங்கயே குவாரண்டைன் இருந் துட்டு போகலாம்ன்னு இருக்கேன் என்றார். அவரை ஆஸ்பத்திரி உபத்திரவங்கள் எதுவும் பாதிக்கவில்லை. இவன் மட்டும் எப்படி இப்படி இருக்கான் என்று மற்ற படுக்கைகார்கள் நினைக்கும் படி போனில் சினிமா பாட்டை கேட்டுக்கொண்டு எல்லாரையும் எப்படி இருக்கிங்க என்று விசாரித்தபடி உற்சாகமாக வலம் வந்து கொண்டு இருந்தார். எல்லோர்க்கும் அந்த மனம் வாய்ப்பதில்லை. கடவுள் கிருபை அது.

ரெண்டாம் நாள் காலை மாத்திரை டிரேயோடு வந்த நர்சிடம் கேட்டேன் ஏன் எனக்கு மட்டும் எந்த மாத்திரையும் தரவில்லை முந்தாநாள் இரவு வந்தேன் என்றேன். எல்லாம் சரியான இந்த ராஜ் மோகனுக்கு கூட தருகிறீர்களே என்று கேட்டேன். உடனே அவர் கட கடவென்று கத்திரிக்கோலால் ஒற்றை ஒற்றை மாத்திரை களாக வெட்டித் தந்தார். இதல்லாம் எதுக்கு என்ன என்று கேட் டேன். ஒண்ணும் பேசாதிங்க சாப்டுங்க என்றார். நான் போலீஸ் டிப்பார்ட்மெண்ட் என்றேன். அதுக்காக என்ன, இங்க எல்லாரும் ஒண்ணுதான் தெரியும்ல்ல. நேத்து அங்க படுத்திருந்தவர் என்னா ஆனார்ன்னு பாத்திங்கள்ள என்று அஞ்சு படுக்கை தள்ளி இருந்த பெட்டை காண்பித்தார். அதற்குள் அதில் வேறொரு புதியவர் படுத்து இருமிக்கொண்டிருந்தார். 'நெடு நல் உளனொருவன் இன் றில்லை என்னும் பெருமை உடைத்து இவ்வுலகு' என்று வள்ளு வன் சொன்னது போல அவர் சாதாரணமாய் சொன்னார். நான் அதுக்குப்பிறகு எதும் பேசவில்லை. அப்பறம் அவரே வந்து... இது பாரசிட்டமால், இது ஆண்டி பயாட்டிக், இது இரும்பு சத்து, இது இருமலுக்கு, இது விட்டமின் சி என்றார். நம்பித்தானே ஆகவேண்டும். மாத்திரைகளை இப்போ சாப்பிடலாமா என்றேன். ம் என்றார். அதற்குள் டியூட்டி டாக்டர் என் கையில் உள்ள மாத் திரைகளை கேட்டார். ஏன் என்றேன். இப்பதான் உங்க டெஸ்ட் ரிப்போர்ட்ஸ் எல்லாம் வந்திருக்கு. அதுக்கு தக்கதான் மாத்திரை கள் தரணும் என்று சொல்லி அதை நர்சிடம் திருப்பி கொடுத்து விட்டார். எனக்கு ஒன்றும் புரியவில்லை. பிறகு மதியமாய் வந்து ஏதேதோ மாத்திரை கொடுத்தார்கள். சாப்பிட்டேன். ஜுரம் நிற்க வில்லை. இருமல் கூடிக்கொண்டே வந்தது. ரெண்டாம் நாளும் யாரும் டாக்டர்கள் வந்து ஏதும் கேட்கவில்லை. சுதா போன் செய்து என் அசிஸ்டண்ட் ஒருத்தரை நாளை வந்து பார்க்க சொல் லிருக்கேன் பயப்படாதிங்க நல்லாயிடும் தைரியமா இருங்க என்றார். இதற்கிடையில் மறுநாள் நம் நண்பர்கள் போனில் தமிழ் புத்தாண்டு அனுப்பி கொண்டாடிக் கொண்டிருந்தார்கள். சதா போனில் சத்தம் கேட்டபடி இருந்தது. பார்க்கவும் முடியவில்லை. பதில் சொல்லவும் தெம்பில்லை. ரெண்டாம் நாள் இரவு நான் கிளம்பிவிடலாம் என்று ஒருவாறு முடிவெடுத்து ராஜ் மோகன்

தூங்கும் வரை காத்திருந்து நர்ஸ் கேபினில் இல்லாத நேரம் பார்த்து இரவு கிளம்பினேன். வாசலில் பிடித்துக்கொண்ட்டார்கள். எங்க போறிங்க. ட்ரீட்மெண்ட் சரியில்ல. நான் கிளம்புறேங்க என் றேன். போ முடியாது. ஏங்க சரியான ட்ரீட்மெண்டும் இல்லை போகவும் விடமாட்டங்கிறிங்க. சாகிறதுன்னாகூட நான் வீட்ல போய் சாகிறேன் என்றேன். இந்த பிளாஸ்ட்டிக் பேப்பர்ல்லல்லாம் சுத்தி போறத பாத்தா பயமா இருக்கு என்றேன். விடமாட்டோம். அப்பறம் நாளைக்கு குரோனோ நோயாளி தப்பி ஓட்டம்ன்னு பேப் பர்ல வரும். எஃப்.ஐ.ஆர். பதிவு பண்ணி போலீஸ் கேஸாயிடும் உங்க ஆதார் கார்டு எல்லாம் இங்க இருக்கு என்றார் அந்த வாட்ச்வுமன். சே என்ன வாழ்க்கைடா இது நிம்மதியா சாவக்கூட உரிமை இல்லாம பொயிடுச்சே. ஜெயிலைவிட மோசமா இருக்கே என்று படுக்கைக்கு திரும்பினேன். ஏழைகளுக்கு வியாதியே வரக் கூடாது என்ற நினைப்போடு அரை தூக்கத்துக்கு போனேன். காலை இன்னொரு கவிதை சகோதரி ரத்னா வெங்கட் கவிதை பத்தி பேச காலை போன் செய்தார். நான் என் பாடுகளை எல் லாம் சொல்லவும் பதறி அவரது உறவினர் - அமைச்சர் உதவியா ளர் எழுத்தாளர் பேச்சாளர் மணிகண்டன் மூலம் மாலையே என் விடுதலைக்கு ஏற்பாடு செய்தார். என் பொறுப்பில் போவதாக அவர்கள் எழுதி வாங்கிக்கொண்டு என்னை ஒரு வழியாய் அனுப்பி வைத்தார்கள்.

எப்படியோ தப்பித்து வீட்டுக்காவது வந்தோம் என்று பார்த்தால் அதற்குள் கார்ப்பரேஷன் ஆட்கள் வீட்டுக்கு வந்து சானிடைஸ் பண்ணுகிறேன் என்று எல்லா இடங்களிலும் மருந்து அடித்து, என் மனைவி, மகன், மகள் மூவரையும் ஏதோ குற்றவாளி போல் நடத்தி, வீட்டுக்கு வாசலில் வெளியே நிறுத்தி, ஏக களேபரம் செய்து, பக்கத்து அக்கத்தில் எல்லோரும் எங்களைக்கண்டு பயப்படும்படி செய்து, டெஸ்ட் எடுத்து போயிருக்கிறார்கள். நான் போகும் வரை அவர்கள் ரிசல்ட் வராமல் பதட்டத்தில் இருந்தனர். நான் வந்த பிறகு அந்த பிரகிருதிகளுக்கு போன் செய்து கேட் டால், பாசிட்டிவ்ன்னா உடனே சொல்வோம் நெகட்டிவ்ன்னா எதும் சொல்லமாட்டோம் சார் என்று சொன்னார்கள். நல்ல சிஸ்ட்டம் தேங்க்ஸ் சார் என்றேன்.

வீட்டுக்கு வந்து மூணு நாள் ஆனது. நான் தனிமையில் இருமிக் கொண்டும் ஜுரத்தோடும் கிடந்தேன். டாக்டர் செந்தில், சார் ஆக்ஸிஜன் தேவைப்பட்டால் ஒண்ணும் செய்ய முடியாது நான் ரெண்டு லட்சம் தருகிறேன் நீங்கள் எப்படியாவது மேலும் ரெண்டு லட்சம் ஏற்பாடு செய்து பிரைவேட் ஹாஸ்பிட்டல் போங்க. இல் லியா எதுக்கு உங்களுக்கு இவ்ளோ செல்வாக்கு வாழ்றதுக்கு இல்லாம சாகறதுக்கா. எல்லாத்தையும் யூஸ் பண்ணுங்க என்று கடிந்துகொண்டார். பிறகு தமிழச்சி எம்பிக்கு போன் செய்து விஷ யம் சொன்னேன். அது என்னை ஏன் இவ்வளவு தாமதம் செய்தீர் கள் என்று கடிந்துகொண்டது. கிண்டி கிங்ஸ் இன்ஸ்டியூட்டில் நல்ல பாக்கிறாங்களாம் அங்க அட்மீஷன் வாங்கி குடும்மா என்று கேட்டேன். சற்று நேரத்தில் அறுபது பேருக்கு மேல் வெயிட்டிங் கில் உள்ளார்களாம் என்று அதன் பி.ஏ இளஞ்சேரன் தகவல் சொன்னார். சரியென என் நண்பர் நீதியரசர் ஒருவரை தொடர்பு கொண்டேன். அவருக்கும் அதே தகவல். இதற்கிடையில் என் நண்பர் பயர் சர்வீஸ் எஸ்.பி சையது அகமது ஷா மருத்துவ மனைக்கே சென்று எனக்காக அட்மீஷனுக்காக போராடிக்கொண்டி ருந்தார். தினமணி ராஜ்கண்ணன் யாரோ பி.ஆர்.ஒ மூலமாக சொல்லிக்கொண்டிருந்தார். எப்படியோ மறு நாள் கிங்க்ஸ் இன்ஸ் டியூட்டில் இருந்து போன் வந்தது தமிழச்சி சொன்னதாக. போய் சேரப்போனால் அங்கும் கடுங்கூட்டம். ஆனால் என்ன. எங்கும் சுத்தமாக சத்தமில்லாமல் இருந்தது. காலை எட்டுமணிக்கு போன என்னை அங்கும் அதே டெஸ்ட்டுகளை மறுபடி எடுத்து, பனி- ரெண்டே முக்காலுக்கு தனியறை ஒதுக்கி அனுப்பினார்கள். அன் றைக்குத்தான் அறிமுகமான கிண்டி பயர் ஆபீஸர் தமிழ்பாண்டி எதையும் பொருட்படுத்தாமல் என் பையெல்லாம் எடுத்துக் கொண்டு கூடவே வந்து எனக்கு உதவி செய்துகொண்டிருந்தார்.

மூன்றாம் தளத்தில் தனி அறை ஒதுக்கினாலும் கழிப்பிடம் பொது தான். ஸ்டான்லிக்கு சளைத்ததில்லை என்றுதான் இருந்தது. எத் தனை தடவை சுத்தம் செய்தாலும் போகிறவர்கள் கொஞ்சம் கூட அதை சுத்தமாக வைத்துக்கொள்ள முயலவில்லை. மாஸ்க்கை டாய்லெட்டில் போட்டுவிட்டு வந்துகொண்டு இருந்தனர். அது மிதந்து மிதந்து வந்துகொண்டிருந்தது. நோயாளிகள் மிச்ச சாப்பாட்டை பழத்தொலிகளை அங்கு பிளாஸ்டிக் கவர்களை அங்கு போட்டுக்கொண்டே இருந்தனர். எதோ கொடையளித்து செல்வது போல் நினைத்து எதற்கும் தண்ணீர் ஊற்றாமல் சென்று கொண்டிருந்தனர். பாடத்திட்டத்தில் கழிப்பறைகளை எப்படி சுத்த மாக வைத்துக்கொள்ளவேண்டும் என்ற பாடத்தைத்தான் பிள்ளை களை முதலில் படிக்க வைக்க வேண்டும். அப்போதான் அடுத்த தலைமுறையாவது உருப்படும் என்று தோணிற்று. டாய்லட்டில் எங்கும் தண்ணீர் நின்றுகொண்டிருந்தது. கதவுகள் சரிவர இயங்க வில்லை. காண்ட்ராக்ட்காரர்கள் கைங்கரியம் துல்லியமாகத் தெரிந் தது. எவ்வளவு நன்றாக கவனித்துகொண்டாலும் இந்த விஷயம் முக்கியமில்லையா. ஏர் போர்ட் டாய்லட் போல எப்பவும் ஆட்கள் கிளீன் பண்ணிக்கொண்டிருக்க வேண்டிய விஷயம் இல்லையா. பிறகெப்படி வியாதி கட்டுக்குள் வரும்.

ஆனால், இதற்கு நேர்மாறாக டாக்டர்கள் நாலு முறை வந்து கவனித்துக்கொண்டார்கள். ஒவ்வொரு முறை வரும்போது காது குறைபாடு உள்ளவர்களிடம் கேட்பது போல உங்கள் பேரென்ன என்று சத்தமாக கேட்டுக்கொண்டே இருந்தனர். அதற்குள் வேறு யாரும் மாறி இருப்பார்கள் என்ற சந்தேகம் இருக்கும் போல அவர்களுக்கு. அவர் மிகச்சிறந்த கவிஞர். ஆவணப்பட இயக்கு னர். இலக்கியவாதி. சிந்தனையாளர். உள்ளே அவரை நன்றாக கவனியுங்கள் என்று சொல்லி ஆதிதிராவிட நலத்துறை மற்றும் பழங்குடி நலத்துறை அமைச்சர் வி.எம். ராஜலக்ஷ்மி அவர்கள் கிங்ஸ் இயக்குனர் நாராயணசாமிக்கு கடிதம் எழுதியிருந்தார். நீதி யரசர் நண்பரும் உரிய அதிகாரிகள் மூலம் நன்றாக பார்த்துக் கொள்ள சொல்லியிருந்தார். நண்பர் கவிஞர் ஜெயபாஸ்கரன் எம்.பி. அன்புமணி பிஏ அவர்கள் மூலம் சொல்லி கவனிக்க சொல்லியிருந்தார். இதனாலெல்லாமும் என் பெயரை அவர்கள் அப்படி கேட்டிருக்கலாம்.

மருத்துவமனையில் அருமையான சாப்பாடு. காலையில் ஏழு மணிக்கு இஞ்சி சாறு. ஏழரைக்கு நல்ல சிறப்பான காலை உணவு. அதன் பின் கபசுர குடிநீர். அதன் பிறகு ஒரு மணி கழித்து பால் இரண்டு அவித்த முட்டை. அதன் பின் ஒரு மணி நேரம் பின் ஏதோ ஒரு சூப். அதன் பின் நல்ல சத்தான இனிப்பு டன் கூடிய சுவையான மதிய சாப்பாடு.

இரண்டு மணி நேரம் கழித்து ஒரு கஞ்சி. அதன் பின் ஒரு மணி நேரம் கழித்து சுண்டல். எலும்பிச்சை சாறு. அதன் பின் தினம் எதாவது ஒரு நெட்ஸ் பாக்கெட் சிறியது. இரவு ஏழு மணிக்கு நல்ல சுவையான உணவு. சாப்பாடு விஷயத்தில் எதோ மாமனார் வீட்டுக்கு மருவங்க வந்த மருமகன்போல் கவனித்துக்கொண்டனர்.

எவ்வளவோ கஷ்ட்டங்களுக்கு மத்தியிலும் நண்பர்கள் சிலரின் உதவியால்தான் இதிலிருந்து மீண்டேன். வாழ்ந்தேன். நண்பர்க ளால்தான் இன்றும் வாழ்கிறேன்.

எனக்கு ஆக்ஸிஜன் தரவில்லை. ட்ரிப் ஏதும் போடவில்லை. மாத் திரைகள் மட்டும் தந்தார்கள். நாலாந்தேதி முதல் இருப்பதால் குறைந்திருக்கும் போல. அஞ்சாம் நாள் பிளட் டெஸ்ட் எடுத்து விட்டு நீங்கள் நன்றாக உள்ளீர்கள் போகலாம் என்று சொல்லி விட்டார்கள். இங்கு டிஸ்சார்ஜ் எல்லாம் உடனடியாக நடந்தது. திரும்பும் போதும் அதே கூட்டம் ஏகப்பட்ட நோயாளிகள் வாசலில் காத்திருந்தனர். அரசாங்க கணக்குகள் எப்போதும் எதிலும் பொய் தானே என்று நினைத்துக்கொண்டேன். நோய் இருப்பது தெரிந்தும் தேர்தலுக்காக பட்டியை திறந்து, மந்தையை ஓட்டி விடுவது போல ஓட்டிவிட்டு, எது நடந்தாலும் எங்களுக்கு எலக்ஷன் தான் முக்கியம் பரப்புங்கடா. சாவுங்கடா என்று அனுப்பிவிட்டு இப்போ எல்லோரும் நீலிக்கண்ணீர் வடிப்பதும் அதிலும் அரசியல் செய் வதும் எதற்கும் கேள்விகேட்காமல் இருக்கும் பாவப்பட்ட ஜென் மங்கள் வாழும் ஒரு தேசத்தில் தானே நடக்கும். ஆளுகிறவன்கள் மலின அரசியல் பண்ணுபவன்கள் எல்லாருமே குறைந்த பட்சம் படித்தவன்களாகவேதான் உள்ளனர். படிச்சவன் சூதும் பாவமும் பண்ணினால் போவான் போவான் ஐயோ என்று போவான் என் கிறான் பாரதி. ம்கூம். ஒருவனும் அப்படி போனதாக தெரிய வில்லை. எல்லோரும் குண்டு கல் மாதிரிதான் இருக்கிறார்கள்.

தமிழ்வலை - 68

'தாய்வீடு' சமூகத்துள் தாய்மொழியின் சொல்வளத்தை வலியுறுத்தும் நோக்குடன் முன்வைக்கப்படும் 'தமிழ்வலை'யை முற்றிலும் சரிவர நிரப்பி அனுப்புவோருள் தேர்ந்தெடுக்கப்படும் ஒருவருக்கு தமிழ் நூல்களும் சஞ்சிகைகளும் பரிசாக வழங்கப்படும்.

பெயர்:

முகவரி:

தொலைபேசி எண்:

மின்னஞ்சல்வரி:



தமிழ்வலை-68 வினா

இடமிருந்து வலம்

1 பரீட்சை
2 வாரம்
3 காய்ந்த பனம் மட்டை
5 அப்துல் ஹமீதின் பேர்போன நிகழ்ச்சி
7 நட்சத்திர அடையாளம்
8 குன்று
10 தங்கக் கரம் கொண்ட மன்னன்
13 தோண்டு
14 கப்பல் நிறுத்தி வைப்பதற்கான சாதனம்
15 ஆடை

மேலிருந்து கீழ்

1 வீரமாமுனிவரின் பேர்போன படைப்பு
3 பொருத்து
4 இறப்பு
6 கீழ்ப்படிவு
7 எரிவெள்ளி
9 பரிவுகொள்
10 செய்யுள் பொருட்சுருக்கம்
11 அரைவாசி
12 புரளி
13 திரள்

தமிழ்வலை போட்டிக்கான விடையை இம்மாதம் 23-ம் தேதிக்கு முன்னர் அஞ்சல் அல்லது மின்னஞ்சல் அல்லது தொலைநகல் வாயிலாக அனுப்பிவைக்கவும்.
அதற்கு தமிழ்வலையைப் பிரதிசெய்து அல்லது படப்பிரதியெடுத்து அல்லது கதிர்ப்பிரதியெடுத்து பயன்படுத்தவும்.
பெறுபேறுகள் நடுவர்களின் முடிபுக்கமைய அடுத்த மாத தாய்வீட்டில் வெளிவரும்.

விடைகளை அனுப்பவேண்டிய முகவரி
மினன்னஞ்சல் முகவரி:
thamilvalai@thaiveedu.com
தொலைநகல்: 416 849 0594

Thaiveedu
P.O.Box #63581
Woodside Square
1571 Sandhurst Cir.
Toronto, ON. M1V 1V0

தமிழ்வலை - 67க்கான விடைகள்



தமிழ்வலை-67 பெறுபேறுகள்

முன்னணிப் போட்டியாளர்

முருகேசு கனகரட்ணம்
சபாநாதன் விசுவலிங்கம், மொன்றியால்,
விஜயா கனகலிங்கம், ரொறன்ரோ.
ஏ.எஸ். மகாலிங்கம் ரொறன்ரோ.
மணிஸ்வரன் மகிந்தா, நோத்யோர்க்
உமா கதிர், ஏஜக்ஸ்
அழகரத்தினம் பவளராணி, நோத்யோர்க்
த.செ. நடராசா, ஸ்கார்பரே
வினோதா வசீகரன்

பரிசுபெறும் போட்டியாளர்

நவநாதன் தம்பு,
ஸ்கார்பரோ.

thamilvalai@thaiveedu.com

தொலைக்காட்சிச் செய்தி என்னும் புதிய துறை

ஒலி, ஒளிபரப்புத்துறை என்றவுடனேயே அத்துறைகளில் படைப்புத் திறமைசார்ந்த, தொழில்நுட்பம் சார்ந்த, நிர்வாகம்சார்ந்த பல பணிகளும் பதவிகளும் உள்ளபோதிலும் எவருமே அறிந்திருக்கும் ஒரே பணியும் பதவியும் அறிவுப்புச்செய்யும் பணியும் அறிவிப்பாளர் பதவியுமே. ஒலி, ஒளிபரப்புத்துறைகளுக்குள் சென்றபின்னர்தான் மற்றைய பணிகளின் முக்கியத்துவமும் மகத்துவமும் தெரியவரும். முக்கியமாக எமது காலத்தில் இலங்கை வானொலியில் வர்த்தகசேவை என்ற தனிச்சேவை இயங்கி, அதிலே பெரும்பாலான பொதுமக்களைக் கவரும் சினிமாப்பாடல்களையும் சினிமாப் பாடல்களைப் பிரதானமாகக்கொண்ட நிகழ்ச்சிகளையும் ஒலிபரப்பியதால் அதில்ப் பணியாற்றிய வர்த்தகசேவை அறிவிப்பாளர்கள் மக்களால் அறியப்பட்டவர்களாகவும் சிலர் புகழ்பெற்றவர்களாகவும் விளங்கினார்கள். இலங்கை ஒலிபரப்புத்துறையில் வர்த்தக சேவை அறிவிப்பாளர்களுக்கு அடுத்ததாக மக்களால் அறியப்பட்டவர்கள் செய்தி வாசிப்பவர்கள். இவர்கள் சில வர்த்தகசேவை அறிவிப்பாளர்கள்போல் அனைத்துமட்ட மக்களாலும் அறியப்பட்ட, புகழ்பெற்ற அறிவிப்பாளர்களாக இல்லாத போதிலும் சராசரிக்கும் மேற்பட்ட உலக அறிவுள்ள, தம்மைச்சுற்றி நடப்பற்றை அறிந்துகொள்வதில் ஆர்வமுள்ள மக்கள் மத்தியில் நன்கு அறியப்பட்டவர்களாக இருந்தார்கள்.

இத்தகையதொரு காலகட்டத்தில் இலங்கை வானொலியில் அறிவிப்பாளர்களாகத் தெரிவுசெய்யப்பட்ட இளைஞர்கள் அனைவருமே வர்த்தகசேவை அறிவிப்பாளர்களாகப் பணியாற்றவே விரும்பினார்கள். அறிவிப்பாளர் தெரிவும் அடிப்படைப் பயிற்சிகளும் முடிவடைந்தபின்னர் யார் தேசியசேவையில் பணியாற்றவேண்டும், யார் வர்த்தகசேவையில் பணியாற்றலாமென்று அவர்களிடமுள்ள தனிப்பட்ட திறமைகளின் அடிப்படையில் ஒலிபரப்பு நிர்வாகிகள் தீர்மானிப்பார்கள்.

வர்த்தகசேவை அறிவிப்பாளர்கள் மக்களால் அறியப்படுவதற்குப் பிரதான காரணம் அதில் ஜனரஞ்சகமான சினிமாப் பாடல்கள் இடம்பெறுவதென்பது ஒன்று, மற்றையது அவர்கள் அறிவிப்புச் செய்யும்போது தமது பெயரை அறிவிக்கலாம். இந்த இரண்டு காரணங்களும் எல்லோருக்கும் பொதுவானவை. ஆனால் ஒவ்வொருவரது தனித்திறமையைப்பொறுத்து அவர்கள் மக்களிடையே அடையும் புகழின் அளவு வேறுபடும்.

ஆனால் தேசியசேவையில் பணியாற்றும் அறிவிப்பாளர்கள் தமது பெயரை அறிவிப்பதில்லை. மேலும் தேசியசேவையை எமது கலை, கலாச்சாரம் முதலியவற்றில் அதிக அக்கறைகொண்ட மக்களே பெரிதும் கேட்பார்கள். இதுபோன்ற காரணங்களால் தேசிய சேவை அறிவிப்பாளர்களைப் பொதுமக்கள் அவ்வளவாக அறியமாட்டார்கள். இதனால் தேசியசேவைக்குத் தெரிவாகும் இளம் அறிவிப்பாளர்கள் எப்படியாவது வர்த்தகசேவைக்குச் சென்றுவிட வேண்டுமென்று கடும் முயற்சிகளை மேற்கொள்வார்கள். சிலர் அதில் வெற்றியும் பெற்றிருக்கிறார்கள். ஆனால் நான் பணியாற்றத் தொடங்கிய காலத்தில் தேசியசேவையில் பணியாற்றினால்த்தான் செய்தி வாசிக்கமுடியுமென்ற விதி மிக இறுக்கமாகக் கடைப்பிடிக்கப்பட்டதால் நான் தேசியசேவையில் பணியாற்றுவதையே விரும்பினேன். காரணம், எனது இலட்சியம் செய்தி வாசிப்பாளராக வரவேண்டுமென்பதாகவே இருந்தது. இதுபற்றி எனது வானொலி அனுபவங்களில் விரிவாக எழுதியிருக்கிறேன்.

இலங்கையில் தொலைக்காட்சியின் வருகையோடு தொலைக்காட்சியில் செய்தி வாசித்தலென்ற புதிய பணி ஆரம்பமாகியது. 1979ம் ஆண்டு தனியாரால் முதல்முதலாக இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட தொலைக்காட்சிச்சேவையான சுயாதீன தொலைக்காட்சிச் சேவை (ITN) ஆரம்பித்த இருமாதங்களிலேயே அரசாங்கத்தால் பொறுப்பேற்கப்பட்டு ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் இயக்குனர் நாயகம் தேமிஸ் குருகே அவர்களின் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டது. ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தைச்சேர்ந்தவர்களால் கிழமைதோறும் ஒரு செய்திச்சஞ்சிகை (News Magazine) மும் மொழிகளிலும் தயாரிக்கப்பட்டு ஐ.ரீ.என்-னில் ஒளிபரப்பப்பட்டது. நாளடைவில் அதன் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டது.

முதலில் கமலா தம்பிராஜாவும் தொடர்ந்து மனோகரி சதாசிவமும் இவர்களைத் தொடர்ந்து வீ.என்.மதிஅழகனும் ஐ.ரீ.என். தொலைக்காட்சியில் தோன்றி செய்திகளை வாசித்தார்கள். இதுதான் இலங்கையில் தொலைக்காட்சித் தமிழ்ச் செய்திவாசிப்பின் ஆரம்பம். பின்னர் 1982ம் ஆண்டு ரூபவாஹினி ஆரம்பிக்கப்பட்டபோது மேற்கூறிய மூவருடன் எஸ். விஸ்வநாதனும் சேர்ந்து ரூபவாஹினியில் செய்திவாசிக்கத் தொடங்கினார்கள். இவர்கள் எல்லோருமே வானொலியில் அறிவிப்பாளர்களாகப் பணியாற்றிக்கொண்டிருந்ததால் இவர்களைத் தெரிவுசெய்யும்போது இவர்களது வாசிப்புப் பற்றிய தெரிவாக அது இருந்திருக்க முடியாது. தொலைக்காட்சி ஊடகமென்றபடியால் அவர்களின் தோற்றத்தெரிவாகவே அது இருந்திருக்கமுடியும்.

அப்போது செய்திவாசிப்பவர்களைத் தெரிவுசெய்தவர்களுக்கும் அது புதியவிடயமென்பதால் தொலைக்காட்சியென்பது மக்கள் பார்க்கும் ஊடகம், அதில் தோன்றுவதற்கு அழகு தேவையென்ற அடிப்படை அறிவு தவிரத் தொலைக்காட்சிச் செய்தி வாசிப்புப் பற்றிய வேறு அறிவு இருந்திருக்கமுடியாது. நல்லவேளையாக அப்போது ஒலிபரப்பில் அறிவிப்பாளர்களாக இருந்தவர்களே ஒளிபரப்பில் செய்திவாசிப்பதற்காகத் தெரிவுசெய்யப்பட்டதால் செய்தி வாசிக்கும் தரத்திற்குப் பங்கம் ஏற்படவில்லை. வெளியிலிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தால் தொலைக்காட்சிச்செய்தி வாசிப்பில் பாரதூரமான விழைவுகள் ஏற்பட்டிருக்குமென்பது எனது கருத்து.

ஆனால் வெகுவிரைவிலேயே அப்போது தொலைக்காட்சியைச் சேர்ந்தவர்களுக்கு அளிக்கப்பட்ட பல்வேறு பயிற்சிகளின் காரணமாகத் தொலைக்காட்சி பற்றிய அறிவும் விழிப்புணர்வும் ஏற்பட்டுவிட்டதால் தெரிவுகளை மேற்கொள்ளும் அதிகார மட்டத்தில் உள்ளவர்கள் தொலைக்காட்சியில்த் தோன்றுபவர்களைத் தெரிவுசெய்யும் அணுகுமுறையும் மாற்றமடையத்தொடங்கியது.

தொலைக்காட்சியில் செய்திவாசிப்பதென்பது ஒரு உத்தியோக பூர்வ செயற்பாடு (official). அதில் சொல்லப்படுகின்ற செய்திகள் பூரணமாக மக்களின் அறிவைச்சென்றடையவேண்டுமானால் அவர்களின் கவனம் செய்திகளல்லாத பிறவிடயங்களில் செல்வதைத் தவிர்க்கவேண்டும். வானொலியில் ஒருவர் செய்தியைக் கேட்கவேண்டுமாயின் அவர் அறிவிப்பாளரின் குரலை உற்றுக் கேட்டால் போதுமானது. மூளை தானாகவே கேட்பவரது கவனத்தைக் அந்த

ஒலியில் குவிக்கும். வேறு புறத்தொந்தரவுகள் இல்லாதவிடத்துக் கேட்பவர் கண்களை மூடிக்கொண்டே முழுமையாக செய்திகளை உள்வாங்கமுடியும். ஆனால் தொலைக்காட்சியில் நேயர்கள் செய் திகளைப் பார்க்கவும் கேட்கவும் வேண்டும். பார்ப்பவரது கவனத் தைத் திசைதிருப்பும் பல விடயங்கள் அதில் இடம்பெறும். ஒரு சுலபமான உதாரணத்தைச் சொல்வதானால், முக்கியஸ்தர் ஒருவ ரின் இறப்புக்கு இறுதிமரியாதைசெலுத்த ஒரு பிரமுகர் செல்வ தாக செய்தியில் காட்டுகிறார்களென்று வைத்துக்கொள்வோம். அந்தப் பிரமுகர் அங்கு சென்று என்னசெய்கிறாரென்பதையே அனைவரும் பார்ப்பார்களென்று சொல்லமுடியாது. அந்தப் பிரமு கரோடு செல்லும் கூட்டத்தில் அல்லது அங்கு குழுமியிருக்கும் மக்கள் கூட்டத்தில் எமக்குத் தெரிந்தவரொருவர் நின்றுவிட்டால் அல்லது ஒரு பிரபலமான நடிகர் நின்றுவிட்டால் நாம் இயல்பா கவே பிரமுகரை விட்டுவிட்டு எமக்குத் தெரிந்தவரில் அல்லது நடி கரில் எமது கவனத்தைச் செலுத்துவோம். தொலைக்காட்சிச் செய் தியில் மக்கள் எதைப்பார்க்கவேண்டுமென்று செய்தி தயாரிப்பவர் கள் நினைக்கிறார்களோ அதைத்தான் மக்களும் பார்ப்பார்க ளென்று சொல்லமுடியாது. இப்படித் தொலைக்காட்சி செய்தி ஒளிபரப்பில் மக்களின் ஒருமித்த கவனச்செறிவைப் பெறமுடியாது என்ற ஒரு விடயமிருக்கும்போது, செய்தி வாசிப்பவர்கள் மக்களின் கவனத்தை மேலும் சிதறடிப்பவர்களாக இருக்கக்கூடாதென்ற ஒரு தொழில்முறைக் கோட்பாடு உண்டு. செய்தி வாசிப்பவர்மீது மக்க ளின் கவனம் செல்லாது பார்த்தக்கொள்ளவேண்டும். அதிக அழகோ அல்லது அவலட்சணமோ தொலைக்காட்சிச் செய்தி வாசிப்பவருக்கு ஏற்ற தகுதியல்ல. இரண்டும் மக்களை செய்தி யில் கவனத்தைச்செலுத்தவிடாது தடை செய்யும்.

எனவே, தொலைக்காட்சிச்செய்தி வாசிப்பவர்கள் சாதாரண ஆனால் திருத்தமான முகஅமைப்புடையவர்களாகவும் செய்தி களை வாசிக்கும்போது மக்களின் கவனத்தைத் திசை திருப்பும் விதத்தில் அங்க அசைவுகளைச் செய்யாதவராகவும் இருக்க வேண்டும். குறிப்பாகப் பெண்கள் அதிகளவு அலங்காரம் செய்து மக்களின் கவனத்தைத் தம்பக்கம் ஈர்க்கக்கூடாது. தொலைக்காட் சியில் தோன்றுபவர்களுக்குச் செய்யப்படும் ஒப்பனை (make up) என்பது அழகுபடுத்துதல் என்பதைவிட அது ஒரு தொழில்நுட்பம் சார்ந்த விடயம். முகத்தைச் சுத்தமாகத் துடைத்து, ஒரு மெல்லிய பூச்சுப் பூசுவார்கள். இதற்கான காரணம் முகத்தில் எண்ணெய்ப்ப தம் (oily) அதிகமிருந்தால் கலையகத்தில் அவர்கள்மீது பாய்ச் சப்படும் ஒளி அதில் பட்டுத்தெறித்துத் தானியங்கி இலத்திரனி யல்க் கமராக்கள் அந்த ஒளித்தெறிப்பை மட்டுப்படுத்த விழையும் போது அதிலிருந்துவரும் பிம்பங்கள் தரமற்றவையாகப்போய்வி டும். இதுவே தொலைக்காட்சியில் ஒப்பனை என்று சொல்லப்படும் செயற்பாட்டுக்குரிய பிரதான காரணம். ஆனால் ஒப்பனை செய் பவர்கள் புருவங்களைச் சீராக்கிவிடுதல், பெண்களுக்கு உதட்டுச் சாயம் தீட்டுதல் போன்றவற்றையும் செய்து அறிவிப்பாளர்களை திருத்தமாகத் தோன்றச்செய்வார்கள்.

இந்திய தொலைக்காட்சி ஊடகங்களில் இப்போது தொழில்முறை யான அணுகுமுறை கடைப்பிடிக்கப்பட்டாலும் ஆரம்பநாட்களில் பெண் செய்திவாசிப்பாளர்கள் விதவிதமான சேலைகள் அணிந்து, மிக அதிகமான முகஒப்பனைசெய்து, காதில் ஜிமிக்கி போன்ற வற்றை அணிந்து, சிலர் பூச்சூடிப் புதுமணப்பெண்போன்ற அலங் காரங்களுடன் செய்தி வாசித்தார்கள். அதுமட்டுமல்ல, தாம் செய்திவாசிக்கும்போது தமது ஒப்பனை, நகை முதலியவற்றைப் பார்க்கவே மக்கள் செய்தி பார்ப்பதாகப் பெருமைப்பட்டுக்கொண் டார்கள். மக்கள் இவர்கள் செய்தியில் என்னசொன்னார்கள் என்ப தில் கவனம் செலுத்தியிருக்கமாட்டார்கள் என்பதே உண்மை. இந் தியாவில் தொலைக்காட்சி வந்ததும் அதை சினிமாவுக்கு அடுத்த ஒரு சாதனமாகவே கருதி, மக்களைக் கவர்ச்சியால் ஈர்க்கவேண்டு மென்று அணுகுமுறையே இருந்தது.

ஆனால் ஆரம்பகாலம்முதல் இலங்கையில் ஒலிபரப்பு, அக்கலை யில் உலகின் முன்னோடியாகத்திகழும் இங்கிலாந்தின் BBC-யின் ஒலிபரப்பு விதிகளையே மிகக் கண்டிப்பாகக்கடைப்பிடித்து ஒலி பரப்புத்துறையில் ஒரு கௌரவமான நிலையில் இருந்தது. பின்னர் ஒளிபரப்பு ஆரம்பமானதும் சர்வதேச ஒளிபரப்பு நியமங்களைக் கடைப்பிடிப்பதில் மிகுந்த கண்டிப்பும் கட்டுப்பாடும் பேணப்பட் டது.

மேலைநாடுகளில் அப்போது தொலைக்காட்சியில் தோன்றும் செய்தி அறிவிப்பாளர்கள் ஆண்களாயிலும் பெண்களாயிலும் தொழில்முறை உடையாகிய சூட் (sute) என்ற ஆடையையே அணிந்தார்கள். ரூபவாஹினியில் அந்த மேல்நாட்டு உடையை அணியாமல் ஆண் அறிவிப்பாளர்களுக்கு சிங்கள அரசியல்வாதி கள் தமது தேசிய உடையாக அணியும் ஒரு இஞ்சியளவில் கழுத் துப்பட்டை (collar) வைத்த நாஷனல் என்று சொல்லப்படுகின்ற ஷேர்ட்டை கோட் தைக்கும் தடித்த துணியில் தைத்து அணியச் சொன்னார்கள். அதுவும் ஒளித்தெறிப்பை அதிகளவில் ஏற்படுத் தும் மென்னிறங்களில் இல்லாமல் மண் நிறத்தில் (brown) இருக்க வேண்டும். அதேபோல் பெண் அறிவிப்பாளர்கள் விதவித மான புடவை உடுத்தி மக்களைக் கவராமல் அவர்களுக்கும் மண் நிறத்

கமலா தம்பிராஜா

மனோகரி சதாசிவம்

வீ.என். மதிஅழகன்

எஸ். விஸ்வநாதன்

திலான புடவை சீருடைபோன்று வழங்கப்பட்டது. அது பாடசா லைகளில் சீருடை அணிவதுபோன்று சமத்துவத்தைப்பேணும் நட வடிக்கையாக அமைந்தது. இப்படி ரூபவாஹினியில் தொழில் நியமங்கள் மிகுந்த கண்டிப்புடன் கடைப்பிடிக்கப்பட்டன.

இவற்றை நான் விரிவாகக் கூறுவதற்குக் காரணம் ரூபவாஹினி யில் செய்தி வாசித்தல் என்ற செயற்பாட்டின் பின்னணியில் என் னென்ன விடயங்களில் கவனம் செலுத்தப்பட்டது என்பதைச் சொல்வது மட்டுமல்ல, இந்த விதிமுறைகள் எவ்வாறு நான் அல்லது என்போன்றவர்கள் ரூபவாஹினியில் செய்திவாசிப்பதற் குத் தெரிவுசெய்யப்பட உதவின என்பதையும் விளக்குவதற்குத் தான். ஆம், அதுவரையில் தொலைக்காட்சியில் தோன்றுவதென் றால் அந்தக்கால சினிமாவில்த் தோன்றுபவர்கள்போல் அழகாக இருக்கவேண்டுமென்ற எண்ணம் மாறத்தொடங்க தெரிவுமுறைக-ளிலும் மாற்றம் ஏற்படத்தொடங்கியது.

ரூபவாஹினியில் ஆரம்பத்திலிருந்தே செய்திவாசித்த நால்வரும் கிரமமாக செய்தி வாசித்துக்கொண்டிருந்தார்கள். இந்தக் காலப் பகுதியில் ஆயிஷா ஜுனைதீனும் ரூபவாஹினியில் செய்தி வாசித் தார். ஆனால் அவர் எப்போது வாசிக்கத் தொடங்கினாரென்ற சரி யான விபரம் தெரியவில்லை. நான் அவரிடம் தொடர்புகொண்டு கேட்டபோது அவர், ஐ.ரீ.என். தொலைக்காட்சி ஆரம்பமாகி ஒலிப ரப்புக்கூட்டுத்தாபனத்தால் பொறுப்பேற்கப்பட்டபோது, அதற்குப் பொறுப்பாகவிருந்த தேமிஸ் குருகே அவர்கள் தன்னிடம் ஐ.ரீ. என்.-னில் செய்திவாசிக்கும்படி கேட்டதாகவும் சில காரணங்களால் அது தவிர்க்கப்பட்டுவிட்டதென்றும் கூறினார். பின்னர் ரூபவாஹினி

ஆரம்பிக்கப்பட்டபோது தொலைக்காட்சியில் செய்திவாசிக்கத் தொடங்கியதாகக் கூறிய அவர், தான் எப்போது ரூபவாஹினியில் செய்தி வாசிக்கத் தொடங்கினேனென்பது சரியாக ஞாபகமில்லை யென்றும் கூறினார். அவரது கூற்றுப்படி ஆயிஷா 1977ம் ஆண்டில் பல்கலைக்கழகப் பட்டப்படிப்பை முடித்துக்கொண்டு கல்விச் சேவையினூடாக ஒலிபரப்புத்துறைக்குள் பிரவேசித்திருக்கிறார்.

ஆயிஷா ஜுனைதீன்

ரஷீட் எம். ஹஃபீல்

P. விக்னேஸ்வரன்

ஜெயந்திமாலா அருள்செல்வநாயகம்

அருணா செல்லத்துரை

சில்வெஸ்டர் பாலசுப்ரமணியம்

பின்னர் அவர் முஸ்லிம்சேவையில் தயாரிப்பாளராகப் பணியாற்றத் தொடங்கியிருக்கவேண்டும். ஏனெனில் அப்போதிலிருந்து எனக்கு அவரை நன்கு தெரியும். ரூபவாஹினியில் செய்திவாசிப்பது அவரது பகுதிநேரப் பணி. சில ஆண்டுகள் ரூபவாஹினியில் செய்திவாசித்த ஆயிஷா ஜுனைதீன் மக்களால் மிகவும் வரவேற்கப்பட்ட செய்திஅறிவிப்பாளர்களில் ஒருவராகப் பணியாற்றிக் கொண்டிருந்தபோதே செய்திவாசிப்பதை நிறுத்திக்கொண்டார்.

1983ம் ஆண்டு, மார்ச் மாதம் 10ம் திகதி. அப்போது ரூபவாஹினிப் பணிப்பாளர்சபையில் தமிழ் அங்கத்தவராகவிருந்த திருமதி. ஆர்.ஆர். நல்லையா அவர்கள் தமிழ் நிகழ்ச்சிகள்பற்றிக் கலந்துரையாடுவதற்கென ஒரு கூட்டத்தைக் கூட்டினார். அதில் மற்றுமொரு பணிப்பாளர்சபை அங்கத்தவரான காமினி பேதிரிஸ் அவர்கள், நிகழ்ச்சிப்பிரிவுக்குப் பொறுப்பான பிரதிப்பணிப்பாளர் நாயகம் ஹென்றி ஜெயசேன அவர்கள், நிகழ்ச்சிப்பிரிவின் இயக்குனர் திருமதி. ஞானம் இரத்தினம் ஆகியோருடன் அப்போது நிகழ்ச்சிப்பிரிவில் பணியாற்றிக்கொண்டிருந்த ஜோ.தேவானந்த், செய்தித் தயாரிப்பாளர் சில்வெஸ்டர் பாலசுப்ரமணியம், தயாரிப்பாளர் எஸ். விஸ்வநாதன், நிகழ்ச்சித் தயாரிப்பு உதவியாளர் E. பாலசுப்ரமணியம் நான் என அனைவரும் கலந்துகொண்டோம். தமிழ்நிகழ்ச்சிகள் பலவற்றைப்பற்றிக் கலந்துரையாடப்பட்ட அந்தக் கூட்டத்தில் திருமதி. நல்லையா அவர்கள் சில்வெஸ்டர் பாலசுப்ரமணியத்திடம் ரூபவாஹினியில் பணியாற்றிக்கொண்டு செய்தியும் வாசித்துக்கொண்டிருக்கும் அறிவிப்பாளர்களுக்கே அதிக சந்தர்ப்பம் கொடுக்கவேண்டுமென்று பணித்து நிகழ்ச்சிப்பணிப்பாளர் திருமதி. இரத்தினம் அவர்களிடம் ரூபவாஹினியில் பணியாற்றுவோரிலிருந்து மேலும் செய்திவாசிப்பாளர்களைத் தெரிவுசெய்து பயிற்றுவிக்கும்படி கேட்டுக்கொண்டார். அதற்கமைய திருமதி. இரத்தினம் அவர்கள் ஒரு தேர்வை நடத்தினார். அதில் ரஷீட் எம். கஃபீலும் நானும் தெரிவானோம். கஃபீலும் நானும் வானொலியில் செய்தி வாசித்துக்கொண்டிருந்ததால் வாசிப்பில் தெரிவாவதில் எந்தப் பிரச்சினையும் இல்லை. நான் 1975ம் ஆண்டிலிருந்து வானொலியில் செய்தி வாசித்துக்கொண்டிருந்தேன். செய்தி வாசிப்பதில் ஓரளவு நேயர்களின் கவனத்தைப் பெற்றிருந்தேனென்று சொல்லலாம். வானொலியில் பல நிகழ்ச்சிகளை குறிப்பாக, தேசிசேவையின் பிரதான நாடகங்களைத் தயாரித்ததால் எனது பெயரும், செய்திகள் வாசிப்பது P. விக்னேஸ்வரன் என்று சொல்லிச் செய்திகள் வாசித்தமையால் எனது குரலும் மக்களிடையே நன்கு பரிச்சயமாகியிருந்தது. கஃபீலும் நல்ல குரல்வளமுடையவராக இருந்தார். அவர் வானொலியில் எப்போது செய்தி வாசிக்கத்தொடங்கினார் என்பது எனக்கு நினைவில்லை. ஆனால் நிச்சயமாக எனக்குப் பின்னர்தான் வாசிக்கத் தொடங்கினாரென்பது தெரியும். நாமிருவரும் 1983ம் ஆண்டு மே மாதத்திலிருந்து ரூபவாஹினியில் செய்தி வாசிக்கத் தொடங்கினோம்.

நானும் கஃபீலும் தொலைக்காட்சிச் செய்தி வாசிக்கத் தொடங்கியதையடுத்து 1985ம் ஆண்டு ஜெயந்திமாலா அருட்செல்வநாயகமும் விமலேஸ்வரி இந்திரனும் செய்திவாசிப்பதற்குத் தெரிவானார்கள். விமலேஸ்வரி இந்திரன் 1970ம் ஆண்டு என்னுடன் பகுதிநேர அறிவிப்பாளராகத் தேசியசேவையில் பணியாற்றத் தொடங்கியவர். அவர் கிரமமாகப் பணியாற்றாவிட்டாலும் அவ்வப்போது தனது அறிவிப்பாளர் பணியைச் செய்துகொண்டிருந்தார். ரூபவாஹினியில் செய்தி வாசிப்பதற்குத் தெரிவான அவர், சில நாட்கள் பயிற்சிக்கு வந்துவிட்டு அதனை நிறுத்திக்கொண்டார். ஜெயந்திமாலா இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் கல்விச்சேவையில் பணிக்குச் சேர்ந்தவர். ரூபவாஹினியிலும் கல்விச்சேவை நிகழ்ச்சிகளில் தோன்றியவர். இவரை செய்தி அறிவிப்பாளராகத் தெரிவுசெய்வதற்கான முயற்சிகளை மேற்கொண்டவர் அப்போது கல்விச்சேவை இயக்குனராகப் பணியாற்றிக்கொண்டிருந்த பியதாஸ ரட்ணசிங்க அவர்கள். அவர் பின்னர் பொது நிகழ்ச்சிப் பிரிவின் பணிப்பாளர் நாயகமாகவும் பணியாற்றினார். பியதாஸ ரட்ணசிங்கவும் நானும் நிகழ்ச்சி உதவித்தயாரிப்பாளர்களாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் பணியாற்றினோம். அவர் 1969ம் ஆண்டிலும் நான் 1970ம் ஆண்டிலும் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் இணைந்தோம்.

நான் இங்கே குறிப்பிடும் செய்திஅறிவிப்பாளர்கள் எல்லோருமே ரூபவாஹினியின் ஆரம்பகாலத்தில் பணியாற்றியவர்கள். பின்னர் பலர் செய்திவாசித்தார்கள். அதுபற்றிய சரியான விபரங்கள் எனக்குத் தெரியாது. அல்லது நினைவில் இல்லை.

வானொலியில் செய்தி வாசிப்பதற்கும் தொலைக்காட்சியில் செய்தி வாசிப்பதற்கும் வேறுபாடுகள் நிறையவே இருக்கின்றன. வானொலியில் செய்தி வாசிப்பதென்பது மிகவும் மகிழ்ச்சியும் திருப்தியும்தரும் ஒரு விடயம். செய்தி ஆசிரியரிடமிருந்து பிரதியைப்பெற்று, சந்தேகங்களை நிவர்த்திசெய்து, வேண்டுமானால் வசன அமைப்பில் அல்லது சொற்பிரயோகங்களில் தேவையான திருத்தங்கள் அல்லது மாற்றங்களைச்செய்து, சொல்லப்பட்டிருக்கும் விடயத்தை நேயர்கள் மிகச்சரியாகப் புரிந்துகொள்ளத்தக்க வகையில் சொற்கூட்டங்களைப்பிரித்து (grouping) கோடிட்டுக் கொண்டுசென்று கலையகத்தில் அமர்ந்தால் செய்தி வாசிப்பவரும் ஒலிவாங்கியும் மட்டும்தான். வேறு எவ்வித கவனச்சிதறலும் இருக்காது. அந்தப் பத்து நிமிடங்களும் செய்தி வாசிப்பவருக்கே உரியது. மிகவும் அனுபவித்து வாசித்துவிட்டு வரலாம். எப்போதாவது தான் மிகமுக்கியமான பிந்திய செய்திகள் எதையேனும் கொடுப்பதற்காக வரும் செய்தி ஆசிரியரால் வாசிப்பவரின் கவனம்

கலைக்கப்படும்.

ஆனால் தொலைக்காட்சியில் அப்படியல்ல. தொலைக்காட்சியில் செய்திகளை வாசிப்பதைவிட அவற்றைச்சொல்லுதல்வேண்டும். முன்னாலிருக்கும் ஒருவருக்கு செய்திகளைச் சொல்லுதல்போன்று வாசிக்கவேண்டும். அதற்காக வாசிக்கும் தொனியை மிகவும் குறைத்துவிடவும் கூடாது. தொனியைக்குறைத்தால் பார்வையாளர்களின் கவனத்தை இழக்கவேண்டியேற்படலாம். மேடையில்ப் பேசுவதற்கும் வானொலியில் பேசுவதற்கும் தொலைக்காட்சியில்ப் பேசுவதற்குமிடையே மிகுந்த வேறுபாடு உண்டு. வானொலி, தொலைக்காட்சியில் அறிவிப்புச்செய்வதற்கும் செய்தி வாசிப்பதற்குமிடையே தொனி வேறுபாடு உண்டு. இந்தத் தொனியின் அளவு பார்வையாளர்களை ஈர்த்து வைத்திருப்பதற்கு மிகவும் அவசிய மானதாகும். தொனியின் அளவு இருக்கவேண்டியதைவிட அதிக மானால் நேயர்களுக்கு, பார்வையாளர்களுக்கு எரிச்சல் ஏற்படக் கூடும். வேண்டிய அளவைவிடக் குறைந்தாலும் நேயர்களின், பார்வையாளர்களின் கவனத்தை ஈர்த்து வைத்திருக்கமுடியாது. இவை பற்றிய ஆழமான பயிற்சியும் அனுபவமுமே நல்ல அறிவிப்பாளர்களை, செய்தி வாசிப்பவர்களை உருவாக்குகின்றன.

தொலைக்காட்சியில் செய்தி வாசிக்கும்போது வானொலியிலும் பார்க்கச் சற்றுக் குறைவான தொனியில் வாசிக்கவேண்டும்.


Meeting with the Tamil Language Programme Personnel
10th March 1983

Present:
Ms R R Nalliah (Member)
Mr H Jayasena (DDG/P)
Mr Joe Dev Anandhan
Mr P. Nigneswaran
Mr Balasubrananiam
Mr Gandini Fedris (Member)
Ms G Rathinam (D/P)
Mr S Balasubrananiam
Mr S Viswanathan

The meeting commenced at 1600 hours in the Rehearsal Room of SLBC
duration each. D/P would look into the possibility of sponsorship for this programme.

News Reading:
Mr Sylvester Balasubrananiam was directed to increase the number of turns to read news to SLBC News Readers; D/P was requested to train more readers from SLBC.

திருமதி. ஆர். ஆர். நல்லையா கூட்டிய கூட்டத்தின் அறிக்கையின் ஒருபகுதி

ஆனால் அப்படி வாசிக்கும்போது சொற்களைச் சரியானபடி கூட்டி உரிய இடங்களில் மூச்சு இடைவெளிகளை (breathing space) விட்டு வாசிக்கும் தன்மையில் பாதிப்பேற்படும். வானொலி போல் சீராக வாசிக்கமுடியாது.

மேலும், காட்டப்படும் காட்சிகளுடன் பொருந்தும்படி வாசிக்க வேண்டுமென்பதால் வாசித்துக்கொண்டிருக்கும்போதே தயாரிப்பாளரின் கட்டளைகளுக்கமைய நிறுத்தியோ காத்திருந்தோ வாசிக்க வேண்டியிருக்கும். இதனால் வானொலியில் செய்தி வாசிப்பது போன்று தொடர்ச்சியான வாசிப்பாக அது இருக்காது. மேலும், தொலைக்காட்சியில் செய்தி வாசிக்கும்போது சற்றுத்தூரத்திலுள்ள கமராவில் பொருத்தப்பட்டிருக்கும் ரெலிப் புரொம்ப்ரர் என்ற கருவியில் எமது பிரதியைப் பார்த்து வாசிப்பதால் அது எமது கட்டுப்பாட்டுக்குள் இல்லாததுபோன்றதொரு நிச்சயமற்ற அல்லது ஒரு பதற்றமான நிலையை ஏற்படுத்தும். ஏனெனில் அதில் வசனங்கள் ஒரு பேப்பரில் எழுதியிருப்பதுபோல் இடதுபுறத்திலிருந்து வலதுபுறமாகச் சீரான வரிசையில் இருக்காது. திரையின் அளவு, எழுத்தின் பருமன் என்பவற்றுக்கேற்ப வசனங்கள் பொருத்தமற்ற இடங்களில்கூட முறிந்து அடுத்தவரிக்குச் சென்றுவிடும்.

ஐ.ரீ.என்-னில் முதலில் செய்திமஞ்சரி தயாரிக்கப்பட்டபோது ரெலிப்-புரொம்ப்ரர் கருவி இருக்கவில்லை. அறிவிப்பாளர்கள் மேசையிலுள்ள பிரதியைப் பார்த்தே வாசித்தார்கள். வசனமுடிவில் மட்டும் கமராவை நிமிர்ந்து பார்ப்பார்கள். இந்தநிலைதான் ரூபவாஹினியின் ஆரம்ப கட்டத்திலும் இருந்தது. அப்போது செய்தி வாசித்த வீ.என். மதிஅழகன் கமராவில் தோன்றிச் சொல்லவேண்டிய செய்தியின் முதல்ப்பகுதியை (intro)ப் பாடமாக்கி கமராவைப் பார்த்துச் சொன்னதால் பார்வையாளர்களின் கவனத்தைப் பெற்றார். 83ம் ஆண்டு நான் செய்திவாசிக்கத் தொடங்கியபோது ரூபவாஹினியில் ரெலிப்-புரொம்ப்ரர் அறிமுகமாகிவிட்டது. ஆனால் அந்த ரெலிப்-புரொம்ப்ரர் தற்போதுள்ள தரத்தில் அமைந்ததல்ல. செய்தி வாசிப்பவரின் மேசையில் வைத்திருக்கும் பிரதியை அவரின் தலைக்கு மேலாக உயரத்தில் வைக்கப்பட்டிருக்கும் கமரா படம்பிடிக்கும். அந்தப் பிம்பம் அறிவிப்பாளரைப் படம்பிடிக்கும் கமராவின் லென்ஸின் முன்னால் பொருத்தப்பட்டிருக்கும் கண்ணாடியில் பிரதிபலிக்குமாறு அனைத்தும் பொருத்தப்பட்டிருக்கும். ஒரு செய்திக்கு முன்னால் சொல்லவேண்டிய அறிமுக வசனங்கள் (intro) ஒரு தாளின் நடுப்பகுதியில் இரண்டிரண்டு இஞ்சி அளவுகொண்ட நீளத்தில் மேலிருந்து கீழாக அச்சிடப்பட்டிருக்கும். அவ்வாறு அச்சிட்டிருந்தால்தான் மேலே பிரதியைப் படம்பிடித்துக் கொண்டிருக்கும் கமராவின் பார்வையில் அந்த வசனங்கள் பூரணமாகத் தெரியும். உதாரணமாக,

இன்று காலை
மலையகத்தின்
இரத்தினபுரிப்பகுதியில்
ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால்
பல வீடுகள்
சேதமாகின

இப்படி எழுதியிருந்தால்தான் தலைக்குமேலாக இருக்கும் கமராவினால் அவற்றைப் பூரணமாகப் படம்பிடிக்கமுடியும். செய்தி எழுதப்பட்ட தாள் மஞ்சள் நிறத்திலிருக்கும். வெள்ளைத்தாளென்றால் ஒளித்தெறிப்பு ஏற்பட்டுப் பிரதியைச் சரியாகப் படமாக்கமுடியாது. இவ்வாறு எழுதப்பட்டிருக்கும் செய்தியை சீராக எழுதப்பட்ட வசனத்தை வாசிப்பதுபோல வாசிக்க முடியாது. மேலும், இந்த முன் செய்தி நீண்டதாக இருப்பின் செய்திவாசிப்பவரே பிரதியைத் தன் கைகளால் மேலே நகர்த்தி முழுவதையும் வாசிக்கவேண்டும். இத்தனை இடர்பாடுகளுக்கிடையேதான் நாம் செய்திகளைச் சரியாக வாசித்தோம்.

செய்திகள் தொழில்த்தரத்துடன் ஒளிபரப்பப்படுவதற்குப் பலரது கடுமையான உழைப்பு அவசியமென்றாலும் செய்திவாசிப்பவர்கள் தங்குதடையின்றிச் சீராக வாசிப்பதற்கு உதவுபவர்கள் செய்திகளைக் கலையகத்திலிருந்து நேரடியாக ஒளிபரப்புக்கேற்றவாறு தயாரிக்கும் தயாரிப்பாளர்கள். வானொலி, தொலைக்காட்சி ஊடகங்களின் செய்தி அறைகள் எப்போதுமே பரபரப்பு நிறைந்தவையாக இருக்கும். பலர் ஒன்றுசேர்ந்து உழைப்பார்கள். வானொலியில் செய்தித்தயாரிப்பாளர் என்ற ஒரு பதவி கிடையாது. ஆனால் தொலைக்காட்சியில் செய்திகள் தயாரிப்பதென்பது தொழில்நுட்ப ரீதியாக மிகநுட்பமான பணியென்பதால் தொலைக்காட்சிச் செய்தியை உரியமுறையில் தயாரித்து, நேரடியாக ஒளிபரப்பும் பணியைத் தயாரிப்பாளர்கள் செய்வார்கள்.

மறைந்த சில்வெஸ்டர் பாலசுப்ரமணியமும் மற்றும் அருணா செல்லத்துரையும் ரூபவாஹினியின் ஆரம்பகாலத் தமிழ்த் தொலைக்காட்சிச் செய்தித்தயாரிப்பாளர்கள். இவர்கள் இருவரில் சில்வெஸ்டர் பாலசுப்ரமணியம் வர்த்தகசேவையில் அறிவிப்பாளராகப் பணியாற்றிக்கொண்டே 1979ம் ஆண்டு ஐ.ரீ.என். ஆரம்பிக்கப்பட்டு அரசாங்கத்தால் பொறுப்பேற்கப்பட்ட காலத்திலிருந்து தொலைக்காட்சிச் செய்திமஞ்சரி தயாரிக்கும் பணியையும் கவனித்தவர். பின்னர் ரூபவாஹினி ஆரம்பிக்கப்பட்டபோது அங்கு செய்தித் தயாரிப்பாளர்களில் ஒருவராகப் பொறுப்பேற்றார். ஐ.ரீ.என். தொலைக்காட்சியில் செய்தித்தயாரிப்பாளரென்பவர் ஒருங்கிணைப்பாளர் மட்டுமே. தொழில்நுட்பரீதியான தயாரிப்பை முற்றுமுழுதாகத் தொழில்நுட்பவியலாளர்கள் மாத்திரமே கையாண்டார்கள். அப்போது ஐ.ரீ.என்.னுக்கென்று தொழில்த்தரம்மிக்க கலையகம் இருக்கவில்லை. ஒலிபரப்புக்கூட்டுத்தாபனப் பயிற்சிநிலையத்தின் கலையகமொன்றில் ஒரு கமராவினால் துண்டுதுண்டாகப் படம்பிடித்து செய்திப்படங்களின்பின்னால் தனித்தனியாக வாசித்து அனைத்தையும் எடிற்றிங்மூலம் ஒருங்கிணைப்பதே ஐ.ரீ.என்.னின் தயாரிப்புமுறையாக இருந்தது. ஆனால் ரூபவாஹினியில் அப்படியல்ல. அங்கு மேற்கொள்ளப்பட்டது சர்வதேச தரத்திலான பூரணமான தயாரிப்புமுறை. செய்தி ஒளிபரப்பை அதற்குவேண்டிய தொழில்நுட்பவியலாளர்களின் துணையுடன் ஆரம்பத்திலிருந்து முடிவுவரை நேரடிஒளிபரப்பாக (live) இயக்குவது தயாரிப்பாளரின் பணி. காலை பணி ஆரம்பித்ததுமுதல் செய்தி ஒளிபரப்பு நிறைவடையும்வரை பல விடயங்களைக் கவனித்து, அவற்றை உரியமுறையில் ஒன்றிணைத்து செய்தித்தயாரிப்பை மேற்கொள்பவர் செய்தித்தயாரிப்பாளர்.

உலகெங்கிலும் இயங்கும் தொழில்முறை ஒளிபரப்பு நிலையங்களில் ஒருநாளில் பல செய்தியறிக்கைகள் ஒளிபரப்பப்படுவதால் அவை ஓயாமல் இயங்கிக்கொண்டே இருக்கும். ஆனால் ரூபவாஹினியில் அப்போது மாலையில் மாத்திரமே ஒளிபரப்பு இடம் பெற்றதால் செய்தியறை காலை பத்துமணிமுதல் சுறுசுறுப்பாக இயங்கத் தொடங்கும். மாலைச்செய்திகள் ஒளிபரப்பப்படும்வரை அந்தப் பரபரப்பு நிலைத்திருக்கும்.

செய்திமுகவர்களிடமிருந்து பெறப்படும் செய்திகள் பாதுக்கையில் இயங்கும் செய்மதிப் பரிவர்த்தனை நிலையத்தினூடாக ஒருநாளில் இரண்டுதடவைகள் பெறப்படும். இவை ரூபவாஹினியின் கட்டுப்பாட்டறையில் ஒளிப்பதிவுசெய்யப்பட்டு செய்தியறைக்கு அனுப்பப்படும். உள்ளூரில் நடைபெறும் செய்திகளை ஏற்கனவே தீர்மானித்தபடி சில தயாரிப்பாளர்கள் படப்பிடிப்பாளர்களுடன் சென்று பதிவுசெய்துகொண்டுவருவார்கள். பதிவுசெய்துவரும் அனைத்துச் செய்திகளிலுமிருந்தும் ஒளிபரப்பவேண்டியவற்றைத் தெரிவுசெய்து, எந்த ஒழுங்கில் ஒளிபரப்புவதென்பதை செய்திப் பிரிவின் பணிப்பாளர், செய்தித்தயாரிப்பாளர் அனைவரும் சேர்ந்து முடிவெடுப்பார்கள். இதை நியூஸ் லைன் அப் என்று சொல்வார்கள். அன்று செய்திஆசிரியர்களாகப் பணிபுரியும் தயாரிப்பாளர்கள் செய்தி மூலப்பிரதியை ஆங்கிலத்தில் எழுதுவார்கள். சில செய்திகள் சிங்களத்திலும் எழுதப்படும். வேறு சில தயாரிப்பாளர்கள் தயாரிக்கப்பட்ட செய்திகளை கட்டுப்பாட்டறைக்கு எடுத்துச் சென்று அந்தச் செய்திப்பிரதிகளுக்கேற்றவாறு படங்களைத் தொகுப்பார்கள். சிலவேளைகளில் தயாரிப்பாளர்கள் வெளிநாட்டுச்செய்திகளோடு வரும் பிரதிகளுக்கேற்ப படங்களைத்தொகுத்து விட்டு அப்பிரதிகளை மொழிபெயர்பாளர்களிடம் கொடுப்பார்கள். மதியம் ஒருமணியளவில் பணிக்குவரும் மொழிபெயர்ப்பாளர்கள் மூலப்பிரதி எந்த மொழியில் எழுதப்பட்டிருக்கிறதோ அதை எடுத்து மற்றைய இரு மொழிகளிலும் அந்தச் செய்தியை மொழிமாற்றம் செய்வார்கள். தமிழ் மொழிபெயர்ப்பாளர்கள் அனைத்துச் செய்திகளையும் மொழிமாற்றம் செய்யவேண்டியிருக்கும்.

ஆரம்பநாட்களில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் செய்திப்பிரிவில் பணியாற்றிய செய்தியாசிரியர்கள் சிலரே ரூபவாஹினியில் அப்பணியைச் செய்தார்கள். காலப்போக்கில் வெளியிலிருந்தும் சிலர் செய்திகளைத் தமிழில் மொழிமாற்றம்செய்ய அமர்த்தப்பட்டார்கள். அவர்களில் காசிம் என்பவரது பெயர் என் ஞாபகத்தில் இருக்கிறது.

அப்போது தமிழ்ச்செய்தி மாலை 6.30க்கு ஒளிபரப்பப்பட்டது. செய்தி அறிவிப்பாளர்கள் மூன்று அல்லது நான்கு மணியளவில் செய்தியறைக்குச் சென்று அங்கு ஏற்கனவே தயாரித்து வைக்கப்பட்டிருக்கும் செய்திப்பிரதிகளை வாசித்து, சந்தேகங்கள் இருப்பின் மொழிபெயர்ப்பாளர், தயாரிப்பாளர் ஆகியோருடன் பேசி அவற்றை நிவர்த்திசெய்து ஆயத்தமாவார்கள். சகல பிரதிகளும் தயாராகி அறிவிப்பாளர் ஆயத்தமானதும் தயாரிப்பாளர் அறிவிப்பாளரை அழைத்துச்சென்று ஒன்றாக அமர்ந்து அந்தச் செய்திகளுக்காகத் தொகுக்கப்பட்ட காட்சிகளைப் பார்ப்பார்கள். அப்போது செய்தியறிவிப்பாளர் பிரதியை வாசித்துக்கொண்டே படங்களைப்பார்த்து தயாரிப்பாளரின் அறிவுறுத்தல்களுக்கமைய அதில் வரும் காட்சிகளுக்கேற்ப எங்கெங்கு நிறுத்தவேண்டும், எவ்வாறு ஆரம்பிக்கவேண்டும், சிலவேளைகளில் எவ்வளவு நேரத்திற்குள் சில காட்சிகளுக்கான செய்தியை வாசித்துவிடவேண்டும் என்பன போன்ற விபரங்களைப் பிரதியில் குறித்துக்கொள்வார். இந்தக் குறிப்புகளை க்யூ (cue)என்று சொல்வார்கள். இவ்வாறு தயாரானதும் அறிவிப்பாளர் செய்தியின் பிரதிகளைத் தன்னுடன் எடுத்துக் கொண்டு கன்ரீனுக்குச் சென்று தேனீர் அருந்தித் தன்னை ஆசுவாசப்படுத்திக்கொண்டு ஒப்பனை அறைக்குச் செல்வார். ஒப்பனை முடிந்ததும் செய்தி வாசிக்கும்போது அணியும் கோர்ட்டை அணிந்துகொண்டு செய்தி ஒளிபரப்பாகும் கலையகத்துக்குச் செல்வார். அப்போது இரண்டாம் இலக்கக் கலையகத்திலிருந்துதான் செய்திகள் ஒளிபரப்பாகின.

செய்தியறிவிப்பாளர் கலையகத்தில் தனது இருக்கையிலமர்ந்து ஒளியமைப்பு, ஒலியமைப்பு முதலியவற்றைச் சரிபார்த்து ஆயத்தமாகி சரியாக 6.30க்கு ஒரு செக்கன்கூட முன்பின்பாக இல்லாமல், காட்சியுடன்கூடிய செய்திக்கான குறியிசை ஒளிபரப்பாகித் தயாரிப்பாளர் க்யூ (cue) கொடுத்ததும் செய்தியை வாசிக்கத் தொடங்குவார். தொடங்கி முடியும்வரை தயாரிப்பாளரின் அறிவுறுத்தல்களுக்கமையவே அவரது க்யூக்களைப் பின்பற்றி செய்தியை வாசிக்கவேண்டும். அந்த அறிவுறுத்தல்கள் தற்காலத்தில் அறிவிப்பாளர்களின் ஒரு காதில் பொருத்தப்பட்டிருக்கும் சிறிய ஒலிக்கருவி மூலம் வழங்கப்படுகிறது. அப்போது ரூபவாஹினியில் அந்த வசதி இருக்கவில்லை. செய்தி அறிவிப்பாளரின் மேசையில் ஒரு சிறு சிவப்பு விளக்குப் பொருத்தப்பட்டிருக்கும். அந்த சிவப்பு விளக்கை உரிய இடங்களில் ஒளிரச்செய்வதன்மூலம் தயாரிப்பாளர் அறிவிப்பாளருக்கான க்யூக்களை வழங்குவார். வாசிக்கப்படும் செய்திகள் திரையில் காட்டப்படும் காட்சிகளோடு பொருந்திப் போவதற்குத் தயாரிப்பாளரின் இந்த அறிவுறுத்தல்களே (cues) பிரதான காரணம். உதாரணமாக, செய்தி அறிவிப்பாளர் 'இன்று சபையில் பிரதமர் பேசும்போது...' என்று வாசிக்கும்போது, தயாரிப்பாளரின் அறிவுறுத்தல் சிவப்பு விளக்காக எரியும். உடனே செய்தியறிவிப்பாளர் வாசிப்பதை நிறுத்த பிரதமரின் பேச்சுப் பார்வையாளர்களுக்குக் கேட்கும். தயாரிப்பாளர் தெரிவுசெய்து வைத்திருந்த பிரதமரின் பேச்சின் அந்தச் சிறுபகுதி முடிவுறும் போது மிகச்சரியான தருணத்தில் சிவப்பு விளக்கால் சைகை செய்வார். அறிவிப்பாளர் தொடர்ந்து மிகுதிச் செய்திகளை வாசிப்பார். மிகநுட்பமாக செக்கன் கணக்கில் கணக்கிட்டுச் செய்யவேண்டிய பணி. இந்தப் பணியை ரூபவாஹினியின் அப்போதைய செய்தித் தயாரிப்பாளர்களான சில்வெஸ்டர் பாலசுப்ரமணியமும் அருணா செல்லத்துரையும் மிகநேர்த்தியாகச் செய்தார்கள். இந்த இரண்டு தயாரிப்பாளர்களும் தமிழ்ச்செய்திகளை இயக்குவதோடு அவ்வப்போது ஆங்கிலச் செய்திகளையும் இயக்குவார்கள். அப்போதெல்லாம் செய்தி முடிவடைந்ததும் ஆங்கிலச் செய்தியறிவிப்பாளர்கள் இவர்களை மனதாரப் பாராட்டுவதைப் பார்த்திருக்கிறேன். வானொலியில் செய்தி வாசிப்பதுபோலல்லாமல் அறிவிப்பாளர்கள் தயாரிப்பாளர்களின் அறிவுறுத்தல்களைச் சரியானவகையில் பின்பற்றுதல், செய்தியின் முன்னறிவுப்புகளை (intro) கமராவை நோக்கிய வாறு சொல்வதற்காக செய்திப்பிரதியை ரெலிப்ரொம்ப்ரர் கமராவில் சரியாக விழும்படி மேல்நோக்கி நகர்த்துதல் போன்ற பலவற்றைச்செய்துகொண்டு முகத்தில் எந்தவித பதற்றத்தையும் காட்டாமல் தோற்றமளிக்கவேண்டும். வானொலியில் செய்திவாசிக்கும் போது ஒலித்தெளிவுக்காக நாம் வாயைச் சரியான விதத்தில் திறந்து, மூடி சீராக வாசிக்கலாம். ஆனால் தொலைக்காட்சியில் அப்படி வாசிக்கமுடியாது. இவ்வளவு சிரமங்களோடு செய்திகளை வாசித்தாலும் இறுதியில் மக்களிடமிருந்து கிடைக்கும் அங்கீகாரம் அந்தச் சிரமங்களைச் சகித்துக்கொள்ளும் மனப்பாங்கைத் தருகிறது.

ரூபவாஹினியில் செய்திவாசித்த அனைவருமே நாடறிந்த அறிவிப்பாளர்களாகத் திகழ்ந்தார்கள். நான் வானொலியில் செய்திவாசித்தபோது குரலால் மட்டுமே அறியப்பட்டவனாக இருந்தேன். ரூபவாஹினியில் வாசிக்கத்தொடங்கியதும் இலங்கையில் தொலைக்காட்சி இரசிகர்கள் அனைவரும் அறிந்த அறிவிப்பாளரானேன். நான் பல தடவைகள் குறிப்பிட்டதுபோல ரூபவாஹினியின் ஒரே ஒளிபரப்பை நாட்டிலுள்ள அனைவரும் பார்த்தமையால் தமிழ் நிகழ்ச்சிகளையும் அறிவிப்பாளர்களையும் நாட்டின் சகல மக்களும் அறிந்துகொண்டார்கள். நான் கம்முதாவ போன்ற அரச நிகழ்ச்சிகளின் நேர்முக வர்ணனைக்கோ அல்லது வேறு தயாரிப்புப் பணிகளுக்கோ தமிழர்பகுதிகளல்லாத பகுதிகளுக்குச் செல்லும்போதெல்லாம் அங்குவாழும் மக்கள் என்னைச் சூழ்ந்து எனது பெயரைச்சொல்லி அழைத்து அன்பாகப் பேசுவார்கள். இது ரூபவாஹினியில் செய்திவாசித்த அனைத்து அறிவிப்பாளர்களுக்கும் அப்போது கிடைத்த அனுபவமாகும்.

நான் இலங்கையில் தொலைக்காட்சியில் செய்திவாசித்து முப்பது வருடங்களுக்கு மேலாகிவிட்டது. அப்போது இளையவர்களாக, சிறுவர்களாக இருந்தவர்கள் என்னை இப்போது இலங்கையிலும் வெவ்வேறு நாடுகளிலும் காணும்போது தாம் தினசரி ரூபவாஹினிச் செய்திகளைப் பார்த்ததாகவும் இன்று யார் செய்திவாசிப்பார்களென்று தம்மிடையே போட்டிபோட்டுக்கொண்டு தொலைக்காட்சியின் முன்பாக ஆவலுடன் காத்திருந்து செய்திகளைப் பார்த்ததாகத் தமது இளமைக்கால நினைவுகளை மீட்டு சந்தோஷப்படும் போது எனக்கும் அது மிகுந்த மகிழ்ச்சியளிக்கிறது.

wikneswaran.p@thaiveedu.com

இல்லை என்பதே பதில்

- அ. முத்துலிங்கம் -

தொடக்கம்:

பெர்சி ஸ்பென்சர் என்பவர் 5ம் வகுப்பு மட்டுமே படித்த ஓர் அமெரிக்கர். இவர் பின்னர் தானாகவே கற்றுக்கொண்டு விஞ்ஞானி ஆனார். 1945ல் ஒரு குளிர்கால பகல் நேரத்தில் கதிர் அலை பற்றிய பரிசோதனை முடிவில் அவர் சட்டைப் பையில் இருந்த சொக்கலெட் உருகிவிட்டது. அது ஏன் நடந்தது என்று வியப்பு மேலிட தொடர்ந்து ஆராய்ச்சி செய்து நுண்ணலை அடுப்பை கண்டுபிடித்தார். இன்று உலகம் முழுக்க பாவனையில் இருக்கும் அடுப்புக்கு மூல காரணமாக இருந்தது ஒரு தற்செயல் நிகழ்வுதான்.

இப்படியான ஒரு தற்செயல் நிகழ்வு 2015ம் ஆண்டு ஜூலை மாதம் 4ம் தேதி நடந்தது. விஜய் ஜானகிராமன் அமெரிக்காவில் 40 வருடமாக பணியாற்றி வரும் பிரபல இருதய நிபுணர். தமிழ் மேல் அதீத பற்றுக் கொண்டவர். இவர் வைதேகி ஹெர்பர்ட் என்பவரை சந்தித்தார். வைதேகி தமிழில் புலமை வாய்ந்தவர். சங்க நூல்கள் பதினெட்டையும் முதன்முதலாக ஆங்கிலத்தில் மொழி-பெயர்த்தவர். ஒரு பல்கலைக்கழகம் செய்ய வேண்டிய பணியை தனியொருவராகச் செய்து வரலாறு படைத்தவர். ஜானகிராமன் அவரைச் சந்தித்தபோது 'தமிழுக்கு நான் ஏதாவது செய்யவேண்டும். என்ன செய்யலாம்?' என்றார். வைதேகி அம்மையார் 'ஹார்வர்ட் பல்கலைக்கழகம் உலகத் தரவரிசையில் முதலாவது இடத்தில் இருக்கிறது. தமிழ் இன்றும் வாழும் ஆதி மொழி செம்மொழி. மேன்மையான இலக்கியங்கள் கொண்டது. இந்த மொழிக்கு, 380 வருட பாரம்பரியம் கொண்ட ஹார்வர்டில் இருக்கை கிடையாது. இது மிகப்பெரிய அநீதி. உலகத்தில் மூத்த மொழி ஒன்றுக்கு மூத்த பல்கலைக்கழகத்தில் இடம் தருவதுதானே முறை' என்றார்.

முதல் பொறி:

இதுவே முதல் பொறி. ஜானகிராமன் ஆழ்ந்து சிந்தித்தார். எத்தனை பெரிய பணி? உலகத் தமிழர்கள் மனது வைத்தால் முடியாத காரியமா என்ற எண்ணம் அலைக்கழித்தது. தமிழ் இருக்கை ஒன்றை உருவாக்குவதில் ஹார்வர்ட் பெரிய ஆர்வம் காட்டவில்லை. 'கேள், கேட்டால்தான் வெற்றி கிடைக்கும்' என்று தோன்றியது. அமெரிக்காவில் வாழும் சுந்தரேசன் சம்பந்தமும் புகழ் பெற்ற மருத்துவர். தமிழில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டவர். இருவருமாக சென்று ஹார்வர்ட் அதிகாரிகளைச் சந்தித்து தங்கள் விருப்பத்தை சொன்னார்கள். விடாப்பிடியான தொலைபேசி உரையாடல்களுக்கு பின்னர் ஹார்வர்ட் சம்மதம் சொல்லியது. ஆறு மில்லியன் டொலர் வைப்பு நிதி கட்டவேண்டும் என்பது நிபந்தனை. ஆளுக்கு அரை மில்லியன் டொலர்கள் செலுத்தி ஹார்வர்ட் நிதி திரட்டலை தொடங்கத் தீர்மானித்தார்கள். அடுத்த ஹார்வர்ட் சந்திப்பில் அவர்களுடன் நானும் நின்றேன். அவர்கள் சார்பில் காசோலையை வழங்கி நிதி திரட்டலை ஆரம்பித்து வைக்கும் பெருமையை எனக்கு கொடுத்தார்கள். தொடர்ந்து அமெரிக்காவில் தமிழ் இருக்கை அமைப்பு அறக்கட்டளையாக பதிவுசெய்யப்பட்டது. இதன் நோக்கம் உலகத்து பல்கலைக் கழகங்களில் தமிழ் இருக்கைகளை உருவாக்குவது. முதல் படியாக ஹார்வர்ட், அதைத் தொடர்ந்து ரொறன்ரோ மற்றும் முக்கிய தமிழ் இருக்கைகள் என்று முடிவுசெய்யப்பட்டது.

ஹார்வர்ட் விழா:

ஹார்வர்ட் ஆரம்ப விழா அமெரிக்காவில் நடக்கவில்லை. 6 டிசம்பர் 2015 அன்று, கனடா, மார்க்கம் நகரில் நடந்தது. பனிசூழ்ந்த இரவுக் கூட்டத்தில் மக்கள் குழுமியிருந்தது உற்சாகம் அளித்தது. இரண்டு மருத்துவர்களும் பேசினார்கள். அப்போது அவர்கள் ஹார்வர்ட் தமிழ் இருக்கை நிதி சேகரிப்பு முடிந்த பின்னர் ரொறன்ரோ பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கை அமைக்கப் போவதாக உறுதியளித்தார்கள். மக்கள் உற்சாகமாக கைதட்டி வரவேற்றார்கள்.

ஹார்வர்ட்டின் வெற்றி:

ஆரம்பத்தில் நினைத்ததுபோல ஹார்வர்ட் நிதி சேகரிப்பு இலகுவாக அமையவில்லை. பல எதிர்ப்புகள் கிளம்பின. பணம் கொடுத்தவர்களிலும் பார்க்க கேள்வி கேட்டவர்களே அதிகம். ஒரிரு சமயம் முயற்சியை கைவிடலாமா என்று கூடத் தடுமாற்றம் ஏற்பட்டது. மருத்துவர் சம்பந்தம் நிதி சேகரிக்கும் கூட்டங்களில் இப்படிப் பேசினார். 'நான் அமெரிக்காவுக்கு வந்தபோது என்னுடைய சொத்து என் சட்டைப் பையில் இருந்த 8 டொலர்தான். நான் இந்த உலகத்தை விடும்போது என் சொத்து அதிலும் குறைவாக இருக்கவேண்டும். ஈத்துவக்கும் இன்பத்துக்கு ஈடில்லை.'

சிறிது சிறிதாக செய்தி உலகம் முழுக்க பரவி ஆதரவு பெருகி யது. தமிழக அரசு $1.5 மில்லியன் நன்கொடை வழங்கியது. தமிழ்நாட்டில் சிறையில் இருந்து வெளியே வந்த ஒருத்தர் சிறை யில் கிடைத்த பணம் முழுவதையும் ஹார்வர்டுக்கு தானம் செய்த போது பத்திரிகைகள் எழுதின. ஒரு கட்டத்தில் பணம் வந்து குவிய, பொது அறிவித்தல் மூலம் பணம் அனுப்பவேண்டாம் என்று கேட்டு நிறுத்தவேண்டி நேர்ந்தது.

ரொறன்ரோ தமிழ் இருக்கை தொடக்கம்:

'தோசைக் கல்லை ஆறப்போடக் கூடாது' என்று மருத்துவர் சம் பந்தத்தின் மனைவி விஜயா அடிக்கடி சொல்வார். 5 மார்ச் 2018ல் ஹார்வர்ட் நிதி சேகரிப்பு முடிவுக்கு வந்தது. சூட்டோடு சூடாக, ரொறன்ரோ தமிழ் இருக்கை முயற்சி மூன்று மாத கால இடை-வெளிக்குள், 10 மே 2018 அன்று ஆரம்பிக்கப்பட்டது. இதை உற் சாகத்தோடு வேகமாக முன்னெடுத்தவர் சிவன் இளங்கோ. ரொறன்ரோ தமிழ் இருக்கைக்கு தேவையான வைப்பு நிதி 3 மில் லியன் டொலர்கள். தமிழர்களின் வாரிவழங்கும் நற்குணத்தில் நம் பிக்கை வைத்து, தமிழ் இருக்கை அமைப்பும், கனடிய தமிழர் பேரவையும் ரொறன்ரோ பல்கலைக்கழகத்துடன் கையொப்பமிட்டு ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்தது. ஹார்வர்டில் மேலதிகமாகச் சேர்ந்த பணத்தில் $197,000 ரொறன்ரோ தமிழ் இருக்கைக்கு வழங்கப்பட்டது. அத்துடன் தமிழ் இருக்கை அமைப்பின் இயக்கு நர்கள் தங்கள் பங்காக $479,000 அளித்து மொத்த தொகை $676,000 ரொறன்ரோ தமிழ் இருக்கை தொடக்கத்திற்கு உதவி யாக இருந்தது. ஹார்வர்ட் போல ரொறன்ரோ தமிழ் இருக்கையும் இலகுவாக அமைந்துவிடும் என நாங்கள் நினைத்தது நடக்க வில்லை. கேள்விக்கு மேல் கேள்வியாக மக்கள் கேட்டார்கள். தமி ழின் பெருமையைக் கூட அறியாத பலர் இருந்தனர். தமிழ் இருக்கை என்பதன் முக்கியத்துவமும் புரியவில்லை. பத்திரிகை கள், ஒன்றுகூடல்கள், வானொலி, சமூக ஊடகங்கள் மூலம் மக்க ளுக்கு செய்தியை எடுத்துச் செல்லவேண்டிய அவசியம் ஏற்பட் டது.

தமிழின் பெருமை:

தமிழ் தொன்மையானது. இரண்டாயிரம் வருடங்களுக்கு மேலான பழமையான இலக்கியங்கள் கொண்டது. தொல்காப்பியம், சங்க இலக்கியம், திருக்குறள், சிலப்பதிகாரம், கம்பராமாயணம், பக்தி இலக்கியங்கள் என தன்னேரில்லாத செல்வங்கள் தமிழில் உள் ளன. எட்டு கோடி மக்கள் தமிழ் பேசுகின்றனர். உலகத்தில் அதி கம் பேசப்படும் மொழிகளில் தமிழ் 19வது இடத்தில் இருக்கிறது. ஆதி மொழியாயினும் இன்றும் வாழும் மொழி என்பதுவே தமிழின் மேன்மை.

ஏன் கனடா?

தமிழை வளர்ப்பதற்கு கனடாவை விட ஒரு சிறந்த நாடு இருப்ப தாகத் தெரியவில்லை. தமிழர்களுக்கும், தமிழுக்கும் மிக அணுக் கமான நாடு. தை மாதத்தை தமிழ் மரபு மாதமாக கனடிய நாடா-ளுமன்றம் 2006ல் அறிவித்திருக்கிறது. ரொறன்ரோ பல்கலைக்கழ கம் இதை முன்னெடுத்து வருடா வருடம் கொண்டாடி வருகிறது. ரொறன்ரோ பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கைக்கான வைப்பு நிதி 3 மில்லியன்கள் திரட்டப்பட்டு இப்பொழுது பேராசிரியர் தேடல் தொடங்கியிருக்கிறது. நாவலர் நெடுஞ்செழியன் பேரில் அறக்கட்டளை நிறுவப்பட்டுள்ளது. ஆண்டு தோறும் தமிழ் ஆராய்ச்சியில் உலகளாவிய விதத்தில் சிறந்தவருக்கு ரொறன்ரோ பல்கலைக்கழகம் விருதும், பணமுடிச்சும் வழங்கி கௌரவிக்கும். கனடா, ஒன்ராறியோ மாகாணத்தில் ஒவ்வொரு வருடமும் மே 18ம் நாள் தமிழின அழிப்பு தொடர்பான அறிவியல் வாரமாக பேணுவ தற்கான சட்டம் ஒருமனதாக நிறைவேறியிருக்கிறது. மூன்று லட்சத் துக்கும் அதிகமான தமிழர்கள் வாழும் கனடா நாட்டில் தமிழை வளர்ப்பதற்கான சூழல் போற்றும்படியாக உள்ளது.

இருக்கை என்ன செய்யும்?

ரொறன்ரோ தமிழ் இருக்கை, தமிழ்ச் செவ்வியல் இலக்கியங்க ளைக் கற்றுத்தருவதோடு பல்வேறு முக்கியமான ஆய்வுகளை

முன்னெடுக்கும். தமிழுக்கான அங்கீகாரத்தை அளிப்பதோடு தொடர் பயன்பாட்டிற்கும், முன்னேற்றத்துக்கும் வலுச்சேர்த்து பல கல்வி நிறுவனங்களுக்கு எடுத்துக்காட்டாக செயல்படும். ஒரு மொழி பேசும் குழுவினரால் ரொறன்ரோ பல்கலைக்கழகத்தில் அமைக்கப்படும் முதல் இருக்கை என்பதால் வேறு இருக்கைக ளுக்கு முன்மாதிரியாக இது அமையும். தமிழ் மொழியின் தொன் மைக்கும் அதன் மேன்மைக்கும் சாட்சியாக என்றென்றும் நிலைத்து நிற்கும். கனடிய அரசின் நல்கைகள், புலமைப்பரிசில்கள், உதவித்தொகை ஆகியவற்றுக்கு வழிகோலும். பல்நாட்டு தமிழ் அறிஞர் மாநாடுகளை சாத்தியமாக்கும்.

உலக அரங்கில் கேள்வி:

கொரோனாவுக்கு முன்னர், நியூ யோர்க்கில் நடந்த ஒரு சம்பவம். Tom Friedman என்ற புலிட்சர் பரிசு பெற்ற எழுத்தாளரை பல ருக்கும் தெரிந்திருக்கும். இவருடைய மனைவி ஆன் ஃபிரீட்மன் Word Planet என்ற அமைப்பை உருவக்கும் முயற்சியில் இருந் தார். 25 மில்லியன் டொலர் செலவில், உலகத்திலுள்ள சிறந்த 20 மொழிகளுக்கு அருங்காட்சியகம் அமைக்கும் திட்டம். 'தமிழ் இருக்கிறதா?' என்று அவரிடம் கேட்டேன். அவர் யோசித்துவிட்டு இல்லை என்றார். நான் 'தமிழ் உலகத்து பேசு மொழிகளில் 19வது இடத்தில் இருக்கிறதே' என்றேன். அவர் பதில் சொல்லா மல் எதிர் திசையில் நடக்க ஆரம்பித்தார். எனக்கு எதற்கு பதில் சொல்லவேண்டும்? தமிழ் இருக்கை அமைந்து, அதற்கு ஒரு பேராசிரியர் நியமிக்கப்பட்டிருந்தால், அவர் உலக அரங்கில் தமிழுக்கான கேள்விகளை எழுப்புவார். உலகத்து மொழிகள் அம ரும் மேசையில் தமிழுக்கு ஓர் இடம் கிடைக்கும்.

என்ன பிரயோசனம்?

நிதி சேகரிக்கும்போது என்னிடம் அதிகமாகக் கேட்கப்பட்ட கேள்வி 'தமிழ் இருக்கையால் எனக்கு என்ன பிரயோசனம்?' என்பதுதான். ஈழத்திலிருந்து, ஒரு வார்த்தை ஆங்கிலம் தெரி யாமல் அகதியாக புலம்பெயர்ந்த ஒருவர் இப்போது மிகப்பெரிய செல்வந்தராக வாழ்கிறார். பிரம்மாண்டமான வீடு. இரண்டு பிள் ளைகள். நிதி திரட்டுவதற்காக அவரிடம் போயிருந்தேன். அவர், 'என்னுடைய இரண்டு பிள்ளைகளுக்கும் தமிழ் தெரியாது. ஆங்கி லம் பேசுகிறார்கள்' என்றார். வீட்டிலே பிள்ளைகள் ஆங்கிலம் பேசினால் வார்த்தைக்கு 5 சதம் தண்டம் அறவிடும் பெற்றோர்க ளும் கனடாவில் இருக்கிறார்கள் என்பதை நான் சொல்ல வில்லை.) 'பேசட்டும், ஆனால் இந்த நாட்டுக்கு நீங்கள் கொண்டு

வந்த மொழி தமிழ் அல்லவா? அதை உங்கள் பிள்ளைகள் படிக் காமல் வேறு யார் படிப்பார்கள்?' 'தமிழை விட்டு ஓடி வந்திருக் கிறேன். தமிழ் இருக்கையால் எனக்கு என்ன பிரயோசனம்?' என்றார். 'இரண்டாயிரம் வருடங்களாக தலைமுறை தலைமுறை யாக தொடர்ந்து வந்த மொழிச்சங்கிலி உங்களுடன் அறுந்து போகிறது. உங்கள் அம்மா பேசிய மொழி. அதைப் பாதுகாக்க வேண்டியது உங்கள் கடமையல்லவா?' என்றேன். நான் சொன் னது அவர் காதை தாண்டிப் போனது. 'எனக்கு என்ன பிரயோச னம்?' என்றார் மறுபடியும்.

ரொறன்ரோ நிதி திரட்டல் அனுபவங்கள்:

நிதி திரட்டலின்போது கிடைத்த அனுபவங்களை மறக்க முடி யாது. 'ஒல்லாது ஒல்லும் என்றலும், ஒல்லுவது இல் என மறுத் தலும்' என்ற வரிகள் அடிக்கடி ஞாபகத்துக்கு வந்தன. இல்லாத போது சிலர் தருவேன் என்றனர். இருக்கும்போதும் மாட்டேன் என்றனர் சிலர். மொன்றியாலில் இருந்து ஒருவர் 30 கேள்விகள் கேட்டார். இருபது தடவை பணம் அனுப்புவதாகச் சொன்னார். பணம் வரவேயில்லை. நியூசீலாந்திலிருந்து வான்கூவர் வரைக்கும் மக்கள் நன்கொடைகள் அனுப்பினர். சிலரை அழைத்து நன்றி சொன்னபோது அவர்கள் கூறியது ஆச்சரியப்பட வைத்தது. பிரான்ஸ் நாட்டில் வாடகைக் கார் ஓட்டும் ஈழத்து இளைஞர் சொன்னார், 'இந்த மொழிக்காகத்தானே என்னை நாட்டை விட்டு துரத்தினார்கள். அந்த மொழிக்கு ஓர் இருக்கை அமைக்கும்போது என் பங்கு இருக்கவேண்டாமா?' இங்கிலாந்துப் பெண்மணி 'தமி ழுக்கு நாடு இல்லாவிட்டால் என்ன? எல்லா நாடும் எமக்குச் சொந்தமானதுதான்' என்று கணியன் பூங்குன்றனையும் தாண்டிப் பேசினார்.' ஆஸ்திரேலியத் தமிழர் 'தமிழ் இருக்கை என்றால் என்ன? அது ஒரு சின்ன தமிழ் நாடுதானே!' சிங்கப்பூர்க்காரர் சொன்னதை மறக்க முடியாது. 'தமிழ் என்ற வார்த்தை இருந்தால் முதலில் பணம் அனுப்புவேன். பின்னர்தான் என்னவென்று விசா ரிப்பேன்.'

ரொறன்ரோ தமிழ் இருக்கை நிதி திரட்டல்:

கொரோனா வந்தபோது, தொடக்க உற்சாகம் வடிந்து நிதி திரட் டல் பிரச்சினை கண்டது. ஆனால் சோர்ந்துவிடாமல் மெய்நிகர் நிகழ்ச்சிகள் மூலம் இசை, நடனம், நாடகம், இலக்கிய உரைகள் என நிதி திரட்டல் தொடர்ந்தது. கனடிய தமிழ் சங்கங்களுடன் வெளிநாட்டு அமைப்புகளும் உதவின. 26 ஏப்ரல் 2021 அன்று தமிழ் இருக்கை மூன்று மில்லியன் டொலர் இலக்கை எட்டியது. இதற்கு எடுத்துக்கொண்ட நாட்கள் 1082. ஒப்பந்த முடிவு தேதி 30 ஜூன் 2023. அதாவது கெடுவுக்கு 26 மாதங்களுக்கு முன்னரே இலக்கை அடைந்துவிட்டது.

ஏறக்குறைய 3700 உலக மக்களும், தமிழ் அமைப்புகளும், இலக்கிய வாசகர்களும், ஈழத்து பள்ளிக்கூடத்திலிருந்து நிதி சேர்த்து அனுப்பிய மாணவர்களும் ஆர்வத்தோடு பங்கு பற்றி வெற்றிக்கு உதவியிருக்கிறார்கள். தமிழக அரசு வழங்கிய 173,317 டொலர்களும், தி.மு.க வழங்கிய 16,513 டொலர்களும், தந்தை செல்வநாயகம் அறக்கட்டளை வழங்கிய 250,000 டொலர்களும், பெயர் சொல்ல விரும்பாத தமிழ் அன்பர் ஒருவர் வழங்கிய 500,000 டொலர்களும் தமிழ் இருக்கைக்கு தேவையான மூன்று மில்லியன் டொலர் இலக்கை துரிதமாக அடைய உதவின.

படிப்பினைகள்:

தமிழ் பற்றாளர்களும், ஆர்வலர்களும், கொடையாளர்களும் உல கம் முழுக்க நிரம்பியிருக்கின்றனர். இவர்களைக் கண்டு பிடிப்ப தில்தான் வெற்றி தங்கியிருக்கிறது. பத்திலே ஒருத்தர் நன்கொடை வழங்கினார். பத்துப்பேர் வழங்க வேண்டுமென்றால் நூறு பேரை அணுகவேண்டும். கலைஞர்கள், கல்வியாளர்கள், தொண்டு நிறு வனங்கள், தமிழ் அமைப்புகள், கிராம நலன்புரி சங்கங்கள், முதி- யோர் அமைப்புகள், பள்ளிக்கூட பழைய மாணவ மாணவியர் அமைப்புகள் ஒத்துழைத்ததனால் கிடைத்தது இந்த வெற்றி. அந் தந்த சங்கங்கள் நிதி திரட்டலை தகுந்த தலைவரிடம் ஒப்புவித் ததுதான் வெற்றியின் முதல் படி. 'இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன்கண் விடல்.'

பாராட்டுகள்:

ரொறன்ரோ பல்கலைக்கழக ஸ்காபுரோ வளாகத்தின் தலைவர் விஸ்டம் டெட்டி இந்த முயற்சியில் தமிழ் சமூகம் ஒன்றாக இணைந்து அர்ப்பணிப்புடனும், விடாமுயற்சியுடனும் செயல்பட் டதை மெச்சினார். அத்துடன் கனடிய நாடாளுமன்றம், தமிழ் இருக்கை வெற்றியை வரவேற்று பாராட்டியது அனைத்துலக தமிழர்களும் பெருமைப்பட வேண்டிய ஒன்று. இந்தப் பணிகளில் முன்னின்று தமிழ் இருக்கை நிறுவுவதற்கு உழைத்த கனடிய பேரவை தலைவர் சிவன் இளங்கோ, டன்ரன் துரைராஜா மற்றும் மருத்துவர் வ. இரகுராமன் ஆகியோர் பாராட்டுக்குரியவர்கள்.

சரியான பொறி:

வைதேகி அம்மையாரை எவ்வளவு பாராட்டினாலும் கொஞ்சம் எஞ்சும். அவர் ஆரம்பித்து வைத்த பொறி 'மரம்படு சிறு தீப் போல' பரவி இன்று ஹார்வர்ட், ரொறன்ரோ, நியூயோர்க், ஹூஸ் டன், லண்டன், ஜேர்மனி என உலகமெங்கும் வியாபித்திருக்கிறது. இன்று உக்கிரெய்ன் மொழிக்கு ஓர் இருக்கை வேண்டுமென்றால் உக்கிரெய்ன் நாடு ஏற்பாடு செய்யும். ஐஸ்லாண்டிக் மொழிக்கு ஐஸ்லாண்ட் அரசாங்கம் உதவி செய்யும். தமிழுக்கு நாடு இல்லை. ஆகவே நாம்தான் செய்யவேண்டும். உலகத் தமிழர்கள் ஒன்றிணைந்து தமிழுக்கான இருக்கை ஒன்றை ரொறன்ரோ பல் கலைக்கழகத்தில் நிறுவியது இதுவே முதல் தடவை. 'ஓர் இனக் குழு இணைந்து செயல்பட்டால் அவர்களால் முடியாதது எதுவுமே இல்லை' என்று கனடா நாடாளுமன்றத்தில் தமிழ் இருக்கை வெற் றியை பாராட்டிப் பேசிய மார்சி இயென் என்ற உறுப்பினர் கூறி னார். இது முடிவல்ல, ஆரம்பம்தான். தமிழின் மேன்மையை முன் னெடுக்கும் கேள்விகளை உலகத் தமிழர்கள் தொடர்ந்து எழுப்ப வேண்டும். அவர்கள் ஒன்றிணைந்தால் கிடைக்கும் ஆற்றல் பல நாடுகளின் பலத்துக்கு சமமானது. என்னுடைய மேசையில் இந்த வாசகம் இருக்கிறது. If you don't ask, the answer will always be 'No.' 'நீ கேள், கேட்காவிட்டால் உனக்கு எப்பொழுதும் கிடைக்கும் பதில் 'இல்லை' என்பதாகவே இருக்கும்.

muththulingam.a@thaiveedu.com

Sky Route Courier Services

Worldwide & Domestic Courier Service

Compare Save Send

♦LOCAL ♦PROVINCIAL ♦NATIONAL ♦INTERNATIONAL

" Lot Cheaper Than You Think"

upto **70% Discount from Major Courier Companies**

416.297.7368

www.skyroutecourier.com

Affordable Courier Rates For Individuals and Businesss

285 Milliken Blvd, unit 30
Scarborough, ON
Off: 416-297-7368

EXPRESS DELIVERY

RESIDENTIAL SECOND MORTGAGES FROM 8.99% QUICKLY AND EFFICIENTLY

Residential 1st & 2nd Mortgages
Commercial 1st & 2nd Mortgages
Refinance & Home Equity Line of Credit
Renovation and Debt Consolidation Loan

DON'T FORGET, WE CAN CLOSE YOUR RESIDENTIAL MORTGAGE WITHIN 48 HOURS

PURCHASE AND REFINANCE

- ✓ Gas Stations, Restaurants and Retail Plazas, Auto Body Shop, Churches, Motels and Cottages
- ✓ Business Loan for Existing and New Business
- ✓ Start up Business and Business Line of Credit
- ✓ Construction Financing for Commercial and Residential
- ✓ Store with Apartment, Duplex, Triplex and Rental Properties
- ✓ Vacant Land & Farm Financing and more...

We can arrange COMMERCIAL MORTGAGES with 10% down
(some conditions may apply)

"Every great business is built on friendship"
CALL FOR FREE CONSULTATION OR VISIT MY OFFICE

T. Antony Ponrajah
Mortgage Agent License: M08004007
Brokerage License# 10216

416.457.0651
Email: antonyres@gmail.com

40 New Delhi Dr. Unit 107A, Markham ON, L3S 0B5
Tel: 416.431.5115

இசைத் தமிழ்ப் பாடற்பரப்பும் சமகாலப் பயன்பாட்டு நிலையும்

7

- கௌசல்யா சுப்பிரமணியன்

தமிழிசை மூவர்களில் ஒருவரான அருணாசலக்கவிராயரின் (கி.பி. 1711-1779) இராமநாடகக் கீர்த்தனை என்ற நூலில் 'தரு' என்ற பெயரிலமைந்த கீர்த்தனை வகையினைச் சென்ற இரு கட்டுரைகளில் நோக்கி வருகிறோம். இக்கட்டுரையிலும் அப்பார்வை தொடர்கின்றது. இப்பார்வையில் முதற்கட்டுரையில் பாம்பே சகோதரிகள் மற்றும் டி.என். சேஷகோபாலன் ஆகியோரின் இசைப்பதிவு முயற்சிகள் நோக்கப்பட்டன. அடுத்து, சில முக்கிய கீர்த்தனைகள் அந்நூலின் கதையம்சத்தினை மையப்படுத்தி நோக்கப்பட்டன. அம்முயற்சி இங்கும் தொடர்கின்றது.

கடந்த கட்டுரையிலே அயோத்யாகாண்டக் கதைப்பகுதிவரை நோக்கினோம். அடுத்தமைவது ஆரணியகாண்டக் கதைப்பகுதியாகும். இதில் முதற்கவனத்துக்கு வருவது, இராவணன் சீதை தயைக் கவர்ந்து செல்வதைப் பார்த்த சடாயு இடைமறித்து இராவணனுக்குப் புத்தி கூறுவதாகவும் எச்சரிக்கை பண்ணுவதாகவும் அமைந்த கீர்த்தனையாகும். இது 'விட்டுவிடடா சீதையை விட்டுவிடடா ராவணா...' என்ற பல்லவித் தொடக்கமுடையது. 'அசாவேரி' இராகத்தில் 'ஆதி' தாளத்தில் மூன்று சரணங்களுடன் அமைந்தது. (இராமநாடகக் கீர்த்தனையில்(பக்:137-138). இக்கீர்த்தனையை இதே தாளத்துடன் கேதாரகௌளை இராகத்தில் ஸ்ரீ சிக்கில் குரு சரண் அவர்கள் பாடியுள்ளார்கள். 'சுடும் நெருப்பாகவுள்ள சீதையின் சொரூபம் தெரியாமல் நரகத்தில் மூழ்கி வேகாதே' எனச் சடாயு இராவணனை எச்சரிப்பதாக இது அமைகிறது. கீழேயுள்ள இணைப்பினில் இக்கீர்த்தனையினைக் கேட்கலாம்.

https://youtu.be/9gw7z3yJII4

அடுத்து, நமது கவனத்துக்குவரும் கீர்த்தனை சுந்தரகாண்டக் கதைப்பகுதியில் சீதையைத் தேடி இலங்கை சென்ற அனுமன் அவளைக் கண்டறியும் சந்தர்ப்பம் சார்ந்ததாகும். பல இடங்களிலும் தேடியும் காணாது கவலையுற்றிருந்த அனுமன் அசோகவனத்தில் அவளைக் காண்கிறான். சீதையானவள், 'இராவணனாலும் அரக்கர்களாலும் பல இன்னல்களை அனுபவித்த நிலையில், 'தன்னை ஒருவரும் வந்து மீட்டுச்செல்லவில்லையே என்ற துயரில் உயிரை மாய்த்துக்கொள்ள உத்தேசிக்கிறாள்'. அச்சமயத்தில் அனுமன், 'தசரத ராமன் தூதன் அனுமான்' எனத் தன்னை அறிமுகம் செய்தபடி முன்னால் குதிக்கிறான் பின் இராமனின் வடிவினை வர்ணிக்கின்றான். அவ்வர்ணனையாக அமைந்ததே இக் கீர்த்தனை.

'அந்தராமசவுந்தரியம் என்னால் அறிந்துசொல்லப்போமோ - அம்மா...' என்ற பல்லவியில் தொடங்கும் இக்கீர்த்தனையானது 'கேதாரகௌளை' இராகத்தில் 'ஆதி' தாளத்தில் அமைந்ததாகும். (இராமநாடகக் கீர்த்தனை(பக்: 192-193). இதனை இசைக் கலைஞர்கள் பாலக்காடு கே.வி. நாராயணஸ்வாமி, மகாராஜபுரம் சந்தானம், சிக்கல் குருசரண், ஓ.எஸ். அருண், பம்பே ஜெயஸ்ரீ போன்ற பலர்இதே இராக தாளங்களில் பாடிப் பிரபல்யப்படுத்தியுள்ளார்கள். இது 'சௌக்ககால'த்தில் பாடப்படுவதாகும். 'சௌக்க காலம்' என்பது குறைந்த வேகத்தில் பாடப்படுவதைக் குறிப்பது. 'துரித காலம்' என்பது இரட்டிப்பு வேகத்தில் பாடப்படுவதாகும். 'மத்திம காலம்' என்பது இரண்டுக்கும் இடைப்பட்ட காலத்தைக் குறிப்பதாகும்.

இக்கீர்த்தனை குறைந்த வேகத்தில் அதாவது 'சௌக்க கால'த்தில் பாடப்படுவதால் இதன் ஆதி தாளமும் 'இரட்டைக்களை'யில் போடப்படுகிறது. 'இரட்டைக்களை' என்பது ஒரு அட்சரமானது இரு தடவைகளில் போடப்படுவதாகும். எனவே எட்டு அட்சரம் கொண்ட ஆதி தாளம் பதினாறு எண்ணிக்கையில் போடப்படுவதாகும். எனவே இவ்வகையில் போடப்படும் தாளத்தினால் பாடலும் குறைந்த வேகத்தில் செல்கிறது. அவற்றோடு சரணத்தின் முதல் நான்கு அடிகளும் சௌக்க காலத்தில் பாடியபின் இறுதி அடியானது மத்திம காலத்தில் சற்று வேகமாகப் பாடப்படுகிறது. பாலக்காட்டு கே.வி. நாராயணஸ்வாமி அவர்களின் மேற்படி பாடிய முறைமையைக் கீழ்வரும் இணைப்பினில்க் கேட்கலாம்.

https://youtu.be/YodXo_cj29I

இக்கீர்த்தனையின் முதற்சரணத்தில் இராமரின் விரிந்த மார்புக்கிணையாக அகன்ற பூமியையும் அவரின் கழுத்துக்கு இணையாக கமுகு மரத்தினையும் பரந்த புஜங்களுக்கு இணையாக மேரும லையையும் உவமையாக ஒப்பிடுவதன் மூலம் இராமரின் அழகை வர்ணிப்பதற்குரிய சந்தர்ப்பம் அனுமனுக்குக் கிடைக்கிறது. இராமர் தன்னைத் தனியே அழைத்து அடையாளமாகக் 'கணையாழி'யினை கொடுத்துச் சொன்ன செய்தியினை' தரித்த திரு ஆழிகொடுத்துன் சேதியைத் தனியே என்னுடன் சொன்ன சாரமும்' என அமைந்த மூன்றாவது சரண அடிகளால் அறிந்து கொள்ளலாம். கணையாழியினைக் கொடுத்ததன் மூலம் சீதைக்கு, தான் இராம தூதன்தான் என்ற நம்பிக்கையையும் ஏற்படுத்துகிறான்.

இக்கீர்த்தனையில் அனுமான் இராமரின் அழகைப்பார்க்க 'பதினாயிரம் கண்கள்' வேணும் எனக் கூறிக் கணையாழியினைக் கொடுக்கிறான். முன்னர் குறிப்பிட்ட கீர்த்தனையொன்றில் சூர்ப்பனகை இராவணனிடம் சீதையை வர்ணிக்கையில் 'காணவேண்டும் லட்சம் கண்கள்...' என்று கூறியதனை இங்கு ஒப்பிடலாம். மேலும் சீதை சபா மண்டபத்திற்குள் வரும் காட்சியைக் கூறும் இன்னோர் இடத்தில் அருணாசலக்கவிராயர் 'அனந்தம் கோடி கண் வேணுமே...' என்கிறார். சென்ற கட்டுரையின் இறுதியில் பார்க்கப்பட்ட 'அன்னை சானகி...' என்ற பல்லவி அடியில் தொடங்கும் கீர்த்தனையின் ஐந்தாவது சரணத்திலே மேற்கூறிய அடி வருகிறது. இவையனைத்தும் அழகின் மிகைப்பாட்டினைக் கூற அருணாசலக் கவிராயரால் பயன்படுத்தப்பட்ட சொற்றொடர்களெனக் கொள்ளலாம்.

இதே கீர்த்தனையினை பம்பே ஜெயஸ்ரீ அவர்கள், மேற்கூறிய 'கேதாரகௌளை' இராகத்தில் நீண்ட ஆலாபனையுடன் பல்லவி அடியில் இருகாலங்களில் ஸ்வரங்கள் பாடிப் பதிவிட்டுள்ளார்கள் இவர் மூன்று சரணங்களில் மேற்சுட்டிய கணையாழியினைக் கொடுத்த முக்கிய நிகழ்வினைச் சுட்டும் அடிகளுடைய மூன்றாவது சரணத்தினையே பாடியுள்ளார்கள். அவர் மிருதங்கம் மற்றும் கடம் போன்ற தாள வாத்தியங்களுக்கும் வாசிப்பதற்கு வாய்ப்புக் கொடுத்துக் கச்சேரியினைத் தரமானதொன்றாக வெளிப்படுத்தியுள்ளார்கள். இதனைக் கீழுள்ள இணைப்பினில் கேட்கலாம்.

https://youtu.be/aU7aHO6SvOI

அடுத்தமைவது, மேற்படி சந்தர்ப்பத்தில் சீதை அனுமனுக்குக்

கூறுவதாக அமைந்ததாகும். 'ஆனந்தபைரவி' இராகத்தில் 'ஜம்பை' தாளத்தில் 'அனுமானே சாமிக்கிந்த அடையாளம் சொல் ஐயா...' என்ற பல்லவித் தொடக்கமுடையதாக இது அமைந்துளது. (இராமநாடகக் கீர்த்தனை(பக்: 199-200) இதனை ஸ்ரீ சஞ்சய் சுப்பிரமணியன் அவர்கள் 'மலையமாருதம்' இராகத்தில் 'ரூபக' தாளத்தில் பாடியுள்ளார்கள். ஐந்து சரணங்கள் கொண்ட இக்கீர்த்தனையின் மூன்றாவது சரணமே பாடப்பட்டு பதிவிடப்பட்டுள்ளதைக் காண்கிறோம். இதன் பல்லவியடியை ஆதாரமாகக் கொண்டு இரண்டாவது காலத்தில் ஸ்வரம் பாடும்பதிவு காணப்படுகிறது. இதனைக் கீழேயுள்ள ஒலி இணைப்பினில் கேட்கலாம்.

https://youtu.be/f_MIhrQJCCk

இக்கீர்த்தனையின் பல்லவியும் அனுபல்லவியும் சீதையானவள் அனுமரிடம், இராமருக்கு தனது நிலையைச் சொல்வதாக அமைந்தனவாகும். இதன் சரணப்பகுதிகள் ஒவ்வொன்றும் இராமர் - சீதை ஆகியோருக்கு மட்டுமே தெரிந்திருக்கக்கூடிய சில கடந்த கால சம்பவங்களை சீதையானவள் நினைவில் மீட்டு அனுமனிடம் கூறுவனவாக அமைந்தனவாகும். ஒவ்வொரு சரணமும் ஒவ்வொரு நிகழ்வினைக் கூறுவனவாகும். இவ்வாறு சீதை இந்நினைவுகளை மீட்டு அனுமனுக்குரைப்பதன் நோக்கம், இராமரைத் திருப்திப்படுத்தவேயாகும். அதன் மூலம் இராமன் வருகை விரைவுபடுத்தப்படும் என அவள் நம்பினாள். இந்த நம்பிக்கை கொண்டு மேலும் சில நாட்கள் உயிர் வாழலாம் என்ற எதிர்பார்ப்பும் அவளுக்கிருந்தது. இக்கீர்த்தனை உணர்த்த வந்த செய்திகள் இவையே எனலாம்.

இவ்வாறு இவற்றில் கூறப்பட்டுள்ள செய்திகள் அனைத்தும் கம்பராமாயணத்தினை அடியொற்றியே அமைந்துள்ளதையும் காண்கிறோம். இக்கீர்த்தனையை ஸ்ரீமதி பம்பே ஜெயஸ்ரீ அவர்களும் 'மலையமாருத' இராகத்தில் 'ரூபக' தாளத்தில் சிறு ஆலாபனையுடன் தொடங்கி, பல்லவி அடியில் இரண்டாம் காலத்தில் ஸ்வரங்கள் பாடிப் பதிவிட்டுள்ளார்கள். இதனை கீழுள்ள இணைப்பினில் சொடுக்குவதன் மூலம் கேட்கலாம்.

https://youtu.be/bnY7cNzfbwU

அடுத்தமையும் கீர்த்தனையானது அனுமன் சீதையைக் கண்ட செய்தியை இராமனிடம் தெரிவிப்பதாக அமைந்ததாகும். 'கண்டேன் கண்டேன் கண்டேன் சீதையைக் கண்டேன்ராகவா...' என்ற பல்லவி அடியில் தொடங்குவதாகும். (இராமநாடகக் கீர்த்தனை: பக்: 221-222). இக்கீர்த்தனையானது 'முகாரி' இராகத்தில் 'அடதாளசாபு' தாளத்தில் நூலில் அமைந்துள்ளதை 'வசந்தா' இராகத்தில் 'ஆதி' தாளத்தில் ஸ்ரீமதி ரஞ்சனி மற்றும் ஸ்ரீமதி காயத்ரி ஆகிய இருவரும் பாடியுள்ளார்கள். மேலும் இதனை ராகுல் வேலால் என்ற சிறுவனும் இதே இராக தாளமுறைமையில் சிறப்புறப் பாடியுள்ளான். மூன்று சரணம் கொண்ட இக்கீர்த்தனையின் முதற்சரணமே இவர்களால் பாடப்பட்டுள்ளது. அவற்றினை முறையே கீழே உள்ள ஒலி இணைப்புகளில் கேட்கலாம்.

https://youtu.be/_0xRgoh8mH8
https://youtu.be/jSAQGpLYiAg

மேற்கூறிய கீர்த்தனையை ஸ்ரீமதி பம்பே ஜெயஸ்ரீ அவர்கள் 'வசந்தா' இராகத்தில் பாடாது 'பாஹேஸ்ரீ' இராகத்தில் 'திஸ்ர' நடையுடன் கூடிய 'ஆதி' தாளத்தில் பாடியுள்ளார்கள். இரண்டு இராகங்களுமே வெவ்வேறான உணர்வுகளை எமக்குக் கொடுக்கின்றன. வசந்தா இராகமானது மகிழ்ச்சிகரமானதொரு சூழலைக் கொடுக்கவல்லது. சீதையைக் கண்ட மகிழ்ச்சியையும் அவள் பாதுகாப்பாக உயிருடன் இருக்கிறாள் என்ற செய்தியையும் இராமருக்குச் சொல்லும் பேற்றினையும் பெற்றிருக்கிறேனே என்ற மகிழ்வில் அனுமன் பாய்ந்து வந்து உணர்த்துதற்கு வசந்தா இராகம் மிகவும் உதவிற்றெனலாம். ஆனால் பாஹேஸ்ரீ இராகம், சீதை உயிரோடிருக்குமிடத்தைக் கூறுவது மட்டுமல்ல அசோகவனத்தில் அவளிருக்கும் துன்பநிலையை இராமனுக்கு உணர்த்துவதன் மூலம் துரிதமாகச் செயற்பட்டு விரைவில் மீட்டெடுக்கத் தூண்டுவதாகவும் அமைந்ததாகும். இதனை பம்பேஜெயஸ்ரீ அவர்கள் உருக்கத்துடன் பாடியுள்ளார்கள். அக்கீர்த்தனையினை கீழுள்ள இணைப்பினில்க் கேட்கலாம்.

https://youtu.be/V5dPtkcGlj8

(பம்பே ஜெயஸ்ரீ அவர்கள் 'திஸ்ர' நடையுடன் கூடிய 'ஆதி' தாளத்தில் பாடியுள்ளார் என்பதற்குரிய சுருக்கமான விளக்கம் வருமாறு: பொதுவாக ஒவ்வொரு தாளத்திற்கு ஐந்து நடைகள் உள. அவை, திஸ்ர(3), சதுஸ்ர(4), கண்ட(5), மிஸ்ர(7), சங்கீர்ண(9) என்பவைகளாகும். இவை முறையே சில ஜதிச்சொற்கட்டுகளால் கூறப்படும். அவை முறையே 'தகிட', 'தகதிமி', 'தகதகிட', 'தகிட தகதிமி', 'தகதிமி தகதகிட' ஆகும். மேற்கூறிய ஆதிதாளம் 'திஸ்ர' நடைக்குரிய ஜதிச்சொற்கட்டான 'தகிட' என்பதை ஒவ்வொரு அட்சரத்திலும் கூறும் கால அளவையில் போடப்படுவதாகும் என்பதே அதன் சுருக்கமான விளக்கமாகும்.)

அடுத்தமையும் கீர்த்தனையானது யுத்தகாண்டத்தில் விபீஷணன் இராமனிடம் அடைக்கலம் புகுந்த சந்தர்ப்பத்தைக் காட்சிப்படுத்துவதாகும். 'இராமனைக் கண்ணாரக் கண்டானே - விபீஷணன் கை - மாமுடிமேல் வைத்துக்கொண்டானே...' என்ற பல்லவி அடியில் இது தொடங்குகிறது. (இராமநாடகக் கீர்த்தனை: பக்: 234-235). 'மோகன' இராகத்தில் 'ஆதி' தாளத்தில் அமைந்த இக்கீர்த்தனையை மதுரை மணி ஐயர் அவர்கள் மேற்கூறிய இராக தாளங்களிலேயே பாடிப் பதிவிட்டுள்ளார்கள். மூன்று சரணங்கள் கொண்ட இக்கீர்த்தனையின் முதலிரண்டு சரணங்கள் மட்டுமே பாடப்பட்டுள்ளன. இதனைக் கீழேயுள்ள இணைப்பினில்க் கேட்கலாம்.

https://www.jiosaavn.com/song/ramanai-kannara/IhgsAkYHdFQ

அடுத்தமையும் கீர்த்தனையும் யுத்தகாண்டத்தில் இராமன் இலங்கைக்குச் செல்வதற்குக் கடலைக் கடக்க முயலும் சந்தர்ப்பம் சார்ந்ததாகும். இதற்காக வழிவிடும் வண்ணம் கேட்டபொழுது அதற்கு வருணன் மறுக்கும் சந்தர்ப்பத்தில் கடலரசனான வருணன் மீது இராமன் அம்பு தொடுக்க முற்பட்டபோது ஏற்பட்ட அழிவுகளைப் பார்த்துப் பொறுக்காத வருணன் இராமனைப் பணிந்து சரணடைகிறான். இந்நிலையில் வருணன் கூற்றாக இக்கீர்த்தனை அமைகிறது.'சரணம் சரணம் ரகுராமா - நீ என்னைத் - தற்காத்த குள் பரந்தாமா...' என்ற பல்லவி அடியில் இது தொடங்குகிறது. (இராமநாடகக் கீர்த்தனை: பக்: 242-243). 'அசாவேரி' இராகத்தில் 'ஆதி' தாளத்தில் அமைந்த இக்கீர்த்தனையை ஸ்ரீமதி பம்பே ஜெயஸ்ரீ அவர்கள் மேற்கூறிய 'அசாவேரி' இராகத்தில் 'மிஸ்ர சாபு' தாளத்தில் பாடியுள்ளார்கள். இதே இராக தாளங்களில் ஸ்ரீமதிகள் ரஞ்சனி - காயத்ரி ஆகியோரும் பாடியுள்ளார்கள் இவையிரண்டையும் கீழேயுள்ள இணைப்புகளில் முறையே கேட்கலாம்.

https://www.jiosaavn.com/song/charanam-charanam/SS0CWDYJfks
https://youtu.be/hG1qc1c6JPk

இராம நாடகக்கீர்த்தனையின் கதையம்சம் சார்ந்த விளக்கங்கள் இத்துடன் நிறைவுக்கு வருகின்றன.

இத்தொடர்பிலே, இந்நூலில் திபதை என்ற பெயரிலமையும் ஈரடிக்கண்ணிகளைக் கொண்ட பாடல்கள் பற்றியும் அவை பாடப்பட்டுள்ள முறைமை பற்றியுமான சில தகவல்கள் அடுத்துச் சுருக்கமாக இங்கு முன்வைக்கப்படுகின்றன.

இராமநாடகக் கீர்த்தனைகளில் விருத்தமொன்றுக்குப் பின்னர் வரும் 'தரு' வகைக் கீர்த்தனைகள் இதுவரை நோக்கியிருந்தோம். இது போன்றே 'திபதை' என்ற வகைசார்ந்த ஈரடியிலமைந்த கீர்த்தனையின் சரண அமைப்புடன் கூடிய கண்ணிகளும் விருத்தமொன்றுக்குப்பின் பாடப்பட்டு வருவதைக் காண்கின்றோம். இவை கதைமாந்தரின் உணர்வு மிகுந்த கட்டங்களின் வெளிப்பாடுகளாகும். இத் திபதையானது கீர்த்தனை வளர்ச்சியின் இடைக்காலத்தில் தோன்றியவை என்பதை கீர்த்தனையின் வடிவ வரலாறு எமக்கு உணர்த்துகிறது. இவ் வடிவத்தினை அருணாசலக்கவிராயர் தமது இசை நாடகத்தில் பாத்திரங்களின் உணர்வு வெளிப் பாட்டுக்குரிய தருணங்களில் பயன்படுத்துகிறார். உணர்வுவெளிப்பாடு என்ற அம்சமானது பலகட்டங்களில் தொடரும் நிலையில்

அதற்கேற்ப ஈரடிக்கண்ணிகளின் எண்ணிக்கையும் அதிகரிக்கின்றன. அருணாசலக்கவிராயர் இதனை நன்குணர்ந்து செயற்பட்டுள்ளார்.

இவ்வாறான அமைப்பிலே கீர்த்தனைக்குரியனவாகக் கொள்ளப்படும் பல்லவி, அனுபல்வி ஆகிய உறுப்புகள் இடம்பெறுவதில்லை. சந்தர்ப்பங்களைச் சுட்டிநிற்கும் விருத்தப்பாக்களைத் தொடர்ந்து நேரடியாகவே மேற்படி திபதைகள் இடம்பெறுகின்றன. எனவேதான் இவ்வாறான அமைப்பானது கீர்த்தனையின் படிமுறை வளர்ச்சியின் ஒரு காலகட்டநிலை எனக் கருதவேண்டியுள்ளது. அவ்வகையில் கீர்த்தனையின் பயன்பாட்டு வளர்ச்சியாக அதாவது பல்தள இயங்குநிலைக்குரியதொரு வளர்ச்சிப்போக்காக நாம் இதனைக் கொள்ளலாம்.

இவை பொதுவாக 'சம்வாதம்', 'புலம்பல்', 'முறையிடல்', 'வதை', 'இரங்கல்', 'கெஞ்சுதல்', 'மோகித்தல்', 'குறையிரத்தல்' போன்ற செயற்பாடுகளில் அமைந்த பாடல்களாகும். இவ்வாறான பயன்பாட்டு நிலையிலுள்ள திபதைகள் இராமநாடகக் கீர்த்தனைகளில் வரும் சில சந்தர்ப்பங்களையும் உதாரணங்களையும் அடுத்து நோக்குவோம்.

'சம்வாத' வகைத் திபதைகள் இருவர் உரையாடுவதாக அமைந்தவையாகும். இவற்றுக்கு உதாரணங்களாக, அயோத்தியா காண்டத்தில் கைகேகிக்கும் தசரதமன்னனுக்கும் இடையிலான உரையாடல், ஆரணிய காண்டத்தில் ஸ்ரீராமருக்கும் சூர்ப்பனகைக்கும் இடையிலான உரையாடல் மற்றும் சீதைக்கும் இராவண சந்நியாசிக்கும் இடையில் நடைபெற்ற உரையாடல் ஆகியவற்றைச் சுட்டலாம்.

'புலம்பல்' முறைமையில் அமைந்த திபதைக்குரிய சந்தர்ப்பங்களுக்கு உதாரணங்களாக, அயோத்தியா காண்டத்தில் ஸ்ரீராமன் வனம் செல்கையில் புரசனங்கள் (நகரமக்கள்) புலம்பல், அயோத்யா காண்டத்தில் தசரதன் மறைவை அறிந்த நிலையில் பரதன் மற்றும் இராமன் ஆகியோர் புலம்பல்கள், கிஷ்கிந்தா காண்டத்தில் வாலி இறந்தபின் தாரை புலம்பல், யுத்தகாண்டத்தில் கும்பகர்ணன் மரணத்தைக் கேட்ட இராவணன் புலம்பல் மற்றும் இராவணன் மறைந்தநிலையில் மண்டோதரி புலம்பல் என்பவற்றைச் சுட்டலாம்.

'முறையிடல்' என்ற வகைக்கு உதாரணமாக, ஆரணியகாண்டத்தில் சூர்ப்பனகை இராவணனிடம் முறையிடல், சுந்தரகாண்டத்தில் சீதை திரிசடையிடம் முறையிடல் என்பவற்றையும் சுட்டலாம்.

'வதை' வகைக்கு, இராட்சத வீரர்கள் வதை மற்றும் கரன், தூஷணன் திரிசிரர்கள் ஆகியோரின் வதைகள் என்பவற்றைச் சில உதாரணங்களாகக் கொள்ளலாம். இவற்றை விட மேலும் பல வகைத் திபதைகளும் இராமநாடகக் கீர்த்தனையில் உள்ளன.

மேற்சுட்டியவாறான திபதைகளுள் சம்வாதத்திலமைந்த திபதைகளுள் ஒன்றினை நோக்குவோம். இது ஆரணியகாண்டக் கதைப் பகுதியில் இடம்பெறுவதாகும். இதன் சந்தர்ப்பத்தைக் கூறும் விருத்தமானது 'வந்த சூர்ப்பனகை தன்னை மதித்தராகவனும்...' என்ற தொடக்கத்தையுடையதாகும். இதனையடுத்து,

'செம்பவளவல்லிபோல எங்கேவந்தாய்
வந்தசேதியென்னசொல் வாய் - பெண்பாவாய்
கும்பிடப்போனதெய்வம் எதிர்வந்ததென்றாசை
கொண்டுகாணவந்தேன் - என்கோவே...'

என்ற சம்வாத திபதை தொடங்குகிறது. (இராமநாடகக் கீர்த்தனை (பக்: 116-119). இவ்வாறு 16 கண்ணிகள் கொண்டு 'மோகன' இராகத்தில் 'ஆதி' தாளத்தில் இத்திபதைப்பகுதி அமைகிறது. இது சம்வாத வகை சார்ந்ததென்பதால் ஒவ்வொரு ஈரடிக்கண்ணியிலும் முதலடிகள் கேள்விகளாகவும் இரண்டாமடிகள் பதில்களாகவும் அமைந்திருக்கின்றன. இங்கு குறிப்பிடப்படும் சம்வாதம் ஸ்ரீராமருக்கும் சூர்ப்பனகைக்கும் இடையில் நடைபெறுவதால் இராமர் சூர்ப்பனகையை நோக்கியுரைக்கையில் 'பெண்பாவாய்' எனவும் சூர்ப்பனகை இராமரை நோக்கியுரைக்கையில் 'என்கோவே' என வும் அமைந்திருத்தலைக் காண்கின்றோம். இவ்விரு சொற்களும் ஒவ்வொறு கண்ணியின் இறுதிச் சீர்களிலும் அமைத்தித்தலைப் பாடலின் முழுவடிவத்திற் கண்டுணர்ந்து கொள்ளலாம். இதனை ஸ்ரீமதி நித்தியஸ்ரீ மகாதேவன் அவர்கள் 'பிலஹரி' இராகத்தில் 'ஆதி' தாளத்தில் பாடியுள்ளார்கள். அதனைக் கீழ்வரும் இணைப்பினில் கேட்க:

https://youtu.be/-7G1Hd5-Eh4

அருணாசலக்கவிராயரின் இராமநாடகக்கீர்த்தனை பற்றிய மேற்படி எனது இக்கட்டுரைத்தொடரில் இதுவரை விளக்கத்துக்கு எடுத்துக் கொள்ளப்படாத சில கீர்த்தனைகளும் உள. அவற்றை ஸ்ரீமதி சுதாஷேசய்யன் அவர்களின் கதை விளக்கத்துடன் சில கலைஞர்கள் பாடியுள்ளார்கள். அவற்றினைப் பின்வரும் இணைப்புகளிற் கேட்கலாம்.

https://youtu.be/xuAYWghatfs
https://youtu.be/ATvtMGOVtA0

இதனையடுத்து 'இராமநாடகக் கீர்த்தனை'யின் தொடக்கநிலை மற்றும் நிறைவுநிலை என்பன பற்றிய சில விளக்கங்கள் இங்கு தரப்படுகின்றன. அவற்றோடு மேற்படி நாடகக்கீர்த்தனை தொடர்பான கவனத்துக்குரிய மேலும் சில கருத்துக்களைக் முன்வைத்து அருணாசலக் கவிராயர் பற்றிய இப்பதிவினை நிறைவு செய்ய விழைகிறேன்.

அருணாசலக்கவிராயர் தமிழ்ப்புலமையிற் சிறந்து விளங்கியவர். அவ்வகையில் நூலின் தொடக்கப்பகுதியில் பண்டைய இலக்கிய ஆக்க மரபுகளைப் பின்பற்றி ஆக்கியோன் பெருமை, காப்பு, பாயிரம், அபசாரசஷமை (குற்றம் பொறுத்தருள வேண்டுதல்), நூற்பெருமை, அவையடக்கம், மங்களம் ஆகிய பகுதிகளை அவர் அமைத்துக் கொண்டுள்ளார்.

இதேபோல் நிறைவுப்பகுதியிலும் சில முறைமைகளை அவர் அமைத்துக் கொண்டுள்ளார். இராமரின் பட்டாபிஷேகத்துடன் இக்கதை சுபமாக நிறைவுற்றபின் மங்களம், சோபனம், வாழ்த்து, நூற்பயன் என்பவை ஒழுங்குமுறையில் பாடியே இவ்விசைநாடகத்தை அவர் நிறைவு செய்துள்ளார்.

இராமகதையில் நிறைவாக ஸ்ரீராமர் பட்டாபிஷேகம் நடைபெறுவதைக் கூறும் விருத்தமும் தருவகைக் கீர்த்தனையும் முறையே பின்வரும் அடிகளில் தொடங்குவன. அவையாவன, 'சித்திரமண்டபம் அதிலே உள்ளம் கொண்டு...' என்பதுவும் 'மகுடாபிஷேகம் கொண்டானே - ஸ்ரீராமச்சந்திரன்...' என்பதுவும் ஆகும். இக்கீர்த்தனையினைப் பாடியதையடுத்து 'ஸ்ரீராமச்சந்திரனுக்கு ஜயமங்களம் - நல்ல...' என்ற 'மங்கள'ப் பாடல் பாடப்படும்.(இம்மங்களம் கதைத் தொடக்கத்திலும் இடம்பெற்ற ஒன்றேயாகும்) அதன்பின் முன்னைய கட்டுரையில் சுட்டப்பட்டதும் பாலகாண்டப்பகுதியில் இடம்பெற்றதுமான 'சோபனம்' சார்ந்ததான 'சோபனம் சோபனம் - ராம - சுவாமிக்கும் சீதைக்கும் சோபனம்...' என்ற கீர்த்தனை பாடப்படும். அதன் பின்னர் 'இரவிகுலம் வாழிசீதாராமர் வாழி...' என்ற வாழ்த்துப்பாடலைப் பாடிய பின் நிறைவாக நூற்பயன் கூறும் விருத்தம் இடம்பெறுகிறது. அவ்விருத்தம் வருமாறு:

ஞானநா யகனாம் ராமன் நாடகம் இசையாற் சொல்லும்
கானபா கவதர் உள்ளம் களித்திட இதனைக் கேட்போர்
தானம்ஆம் உலகிலுள்ள சௌபாக்கியம் மும்பெற் றேநல்
வானநாட் டரசர் ஆக வசிகரம் பெறுவர் தாமே

இதனைப்பாடுவதோடு இக்கீர்த்தனை நாடகம் நிறைவுறுகிறது. தமிழிசை மூவர்களில் மற்றொருவரான மாரிமுத்தா பிள்ளையவர்களின் கீர்த்தனையாக்கங்கள் பற்றி
அடுத்தகட்டுரையிலே
நோக்கு வோம்.

(தொடரும்)

kawsalya.s@thaiveedu.com

BUYERS

If Yathavann Doesn't Negotiate at Least

$10,000 Off The List Price,

He'll Give You $2000 Cash on Closing.

FREE Home Inspection When You Buy With Us.

Sellers

Your Home SOLD in 60 Days Guaranteed!

OR I'LL SELL IT FOR FREE**

**SOME CONDITIONS MAY APPLY

For More Information On My Exclusive Guaranteed Sales Program

ORDER A FREE REPORT BY VISITING
WWW.HOUZZVALUE.CA

Free Home Evaluation.
No Cost. No Obligations

RE/MAX
Crossroads Realty Brokerage Inc.
Independently Owned & Operated
Off:416.491.4002

YATHAVANN
SELVARAJAH
Sales Representative

416-992-4474

முத்தும் பன்றியும்

- லெனட் வுல்ஃப்

தமிழில்:
என்.கே. மகாலிங்கம்

கேணலுடனான நான் - அல்லது அவர் - ஆடிய சீட்டாட்டத்தை முடித்துக் கொண்டேன். பின் வட்டமாக இருந்து புகைபிடிக்கும் அறைக்கு புகைபிடிப்பதற்காகவும் மது அருந்துவதற்காகவும் சென்றோம். எங்களுக்கு முன்பு ஏற்கெனவே மூன்று பேர் கணவடிப்படியில் இருந்தார்கள். நாங்கள் போனவுடன் நாங்களும் அதில் இருப்-பதற்காக வட்டத்தைப் பெரிதுபடுத்தினார்கள். விசாலமான அழ-கற்ற பகட்டான சௌகரியங்களற்ற அந்த உணவகத்தில் இருந்த அவர்களை எனக்குத் தெரியாது. கேணலைத் தவிர மற்றவர் களுடன் நான் பேசியதும் கிடையாது. நான் ஏற்கனவே களைத்துப் போய் பொதுவாகச் சோர்வுற்றிருந்தேன். மடையன் போல என்று இப்பொழுது அதை நினைக்கிறேன் சாப்பிடுவதற்காக அல்லது உணவுப்பட்டியலைப் பார்த்துக் கொண்டிருப்பதற்காக அல்லது கொல்ஃவ் விளையாடுவதற்காக, கடற்கரை நகரமான ரோக்கியின் முன்புறம் நடப்பதற்காக ஒரு கிழமை விடுப்பு எடுத்திருந்தேன்.

அதற்கு முதல் நாள் தான் அங்கே வந்திருந்தேன். ஓய்வு பெற்ற கேணல், குட்டையான தடித்த மனிதர். சிவந்த உதடுகளுக்கு மேலே கோபம் கொண்டவர் போல் வெளியே தள்ளியிருக்கும் கண்கள். அவற்றுக்கும் மேலே எஸ் போன்ற வெண்ணிற மீசை. வாழ்க்கையில் திருப்தி கொண்டவர். ஆனால் ஒரு கணம் கூட வாழ்க்கையைப் புரிந்து கொள்ளாதவர். எவர் புதிதாக அங்கே வந்து சேர்ந்தாலும் ஒரு மணி நேரத்திற்குள்ளேயே அவரைப் பற்றி இவர் அறிந்து கொண்டு விடுவார்.

நாம் எங்கள் மதுவை அருந்தினோம். நான் இங்கிலாந்தில் இப் பொழுது இருக்கிறேன் என்பதை மறந்து கீழை நாட்டு வாய்ப் பாட்டை முணுமுணுத்தேன். அங்கிருந்த மற்ற மூவரில் ஒருவர் ஒரு கணம் பின்புறம் திரும்பி என்னைப் பார்த்தார். அதை நான் சாடையாகக் கவனித்தேன். கேணல் தன் தடித்த சிறிய கால்களை முன்னால் நீட்டி நேர்த்தியான சப்பாத்து விரல்களை தீயை நோக்கி நிமிர்த்தி வைத்திருந்தார். மற்ற இருவரும் பேசிக் கொண் டிருந்தார்கள். சௌகரியமான இருக்கைகளில் இருந்து ஆண்கள் எதைப் பேசுவார்களோ அதை இரவு மணி பத்துக்கும் பதினொன் றுக்கும் இடையில் தீவிரமாக ஊக்கத்துடன் பேசிக் கொண்டிருந் தார்கள். உலக அலுவல்கள் என்று சொல்லப்படுபவற்றை, அரசி யலை, பிரச்சினைகளைப் பற்றிப் பேசினார்கள். தடித்தவர்கள். உண்டு கொழுத்தவர்கள். நம்பிக்கையான குரல்களில் அந்த பெரிய அறையில் இருந்து பேசிக் கொண்டிருந்தார்கள். வலிமை யான, பாதுகாப்பான, குதிரை மயிர் அடைத்த தளபாடங்களில் இருந்து புகை பிடித்துக் கொண்டு, விஸ்கியும் சோடாவும் கலந்த குடியின் சாடையான நாகரிகமான மணம் மணக்க பேசிக் கொண் டிருந்தார்கள். நான் அதைக் கேட்டுக் கொண்டிருந்தேன். அந்தச் சூழ்நிலையில் அவர்கள் இந்தியாவைப் பற்றியும் கீழைத் தேசங்க ளைப் பற்றியும் பேசிக் கொண்டிருந்ததைக் கேட்ட எனக்கு அதிர்ச் சியாக இருந்தது. உணர்ச்சிவசப்பட்டு விட்டேனா? ஓம். ஏனென் றால் கீழைத் தேசத்தில் நான் வாழ்ந்திருக்கிறேன். அந்த வாழ்க்கை வலிமையான குதிரை மயிர் அடைத்த இருக்கைக-ளுடன் ஒத்திசையாதது. நான் அங்கே வாழ்ந்த பதினைந்து ஆண் டுகள் மொத்தமாக என் மனதில் திரும்பி வந்து கொண்டிருந்தன. அந்த நாட்டை எப்படி ஒருவன் வெறுத்தான். அதேவேளை எப்படி அவன் அதை நேசித்தான்!

பிரித்தானிய ஆளுநர் கொடுக்கவிருக்கும் வரவேற்பையும் அரச-னின் விஜயத்தைப் பற்றியும் அவர்கள் பேச ஆரம்பித்ததாக நான் நினைக்கிறேன். பின் இந்திய கலகத்தைப் பற்றி, இந்தியா பற்றி, எமது நிலைப்பாட்டைப் பற்றி, எமது கடமைகள், பொறுப்புக்கள் பற்றி, கீழைத் தேய, மேலைத் தேய பிரச்சினைகளைப் பற்றி எல்லாம் தொடர்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். அவர்களில் எவ ருமே அங்கே சென்றிருக்கவில்லை. சேயிட் துறைமுகத்திலுள்ள பரத்தையர் விடுதிகளுக்கோ இசை உணவு விடுதிகளுக்கோ அவர்கள் சென்றிருக்கவில்லை. அந்தத் துறைமுகம் இளஞ் சிகப் பும் நீலமுமாக விரிந்து கிடக்கும் பாலைவனத்தின் முகப்பில் அமைந்துள்ளது. அப்பாலைவனம் கிழக்கின் இதயத்திற்கும் ஆசி யாவுக்கும் ஆபிரிக்காவிற்கும் நீண்டு செல்லுகின்றது. அவர்க ளுக்கு அவை பற்றி தெரியும். அவர்கள் தங்கள் தடித்த குரல்க ளால், மொத்தமான தலைகளால் அங்குள்ள புதிர்களுக்குத் தீர்வு கண்டு கொண்டிருந்தார்கள். ஆனால் அந்தப் புதிர்களோ ஸ்ஃபிங்ஸ் (பெண்ணின் தலையும் சிங்கத்தின் உடலும் கொண்ட சிறகுகள் கொண்ட பெரும் உருவம்) களிலும் பார்க்கப் பழையன. அவை பற்றியும், எங்கோ இருக்கும் புராதனமான, புதிரான மனி தர்கள் பற்றியும் அறிந்திருந்தார்கள். ஆனால் அவர்களை ஒரு போதும் கண்டிருக்கவில்லை. அவர்களைப் பற்றி இவர்களால் ஒருபோதும் புரிந்து கொள்ளவும் இயலாது. அவர்களில் ஒருத்தன் பங்குத் தரகர். குண்டாக உருண்டு திரண்டிருந்தான். எண்ணெய் வழியும் நெற்றியுடன் சௌகரியத்துடன் இருந்தான். கன்னங்கள் சிவந்திருந்தன. வழுவழுப்பான, மினுங்கும் பழுப்பு நிறத் தலை மயிர். கவனத்துடன் வளர்த்தெடுக்கப்பட்ட சிறிய மீசை. சந்தையில் நல்ல தரகு வேலை. கூர்மையும் தன்னம்பிக்கையும் உள்ளவன். உரத்த சத்தமும் ஏமாற்றும மண்களும். மற்றவர் ஒரு மதகுரு. அவரைப்பற்றி மேலும் சொல்ல வேண்டுமா? அதிகமான மதகுருக் களிலும் பார்க்க வித்தியாசமான மதகுரு. இறுக்கமான உடைய ணிந்திருந்தார். முழங்காலிலிருந்து கணுக்கால் வரை இறுக்கமான காலுறை. அதை லெக்கிங் என்றோ பிறீச்சர்ஸ் (காற்சட்டை) என்றோ சொல்வார்கள்? கெண்டைக்கால் பகுதியைச் சுற்றி அணி வது. அவர் என்ன மதகுரு என்று எனக்குத் சொல்லத் தெரிய வில்லை. அவர் ஒரு பிஷப் ஆ டீனா? கிராம கோயில் அதிகா ரியா? ஆர்ச்டீக்கனா? மூத்த தேவலாய அதிகாரியா? அல்லது ஆக்கிமண்ட்றைற் ஆ? மடாலய புரோகிதரா? என்னவோ அவர்க ளைப் போன்றவர்களில் எனக்கு அவநம்பிக்கையே உள்ளது. கறுப்பு காற்சட்டை அணிந்த புரோகிதர்களைப் பார்க்கிலும் அவர் களில் நான் அவநம்பிக்கைப் படுகிறேன். கறுப்பு உடை ஊடாக மனிதாபிமானம் எதையும் பார்க்க இயலாது. அவர்கள் கடைசிக் கதவுகளையும் சாத்தி விடுவார்கள்.

அவர் ஓர் ஆக்கிடீக்கன் என்று நினைக்கிறேன். அவர் சொன்னார்: 'மேற்கத்தைய நாகரீகத்தை கீழை நாட்டு மக்களின் மீது திணிக்க முடியாது. இந்தியப் பேரரசில் இரண்டு மில்லியன் மக்களுக்கு மேல் வாழ்கிறார்கள் என்று நினைக்கிறேன். கொஞ்சமேனும் குழப்பங்கள் ஏற்படுத்தாது அதைச் செய்ய முடியாது. நான் ஒரு தாராண்மைவாதி என்பது உங்களுக்குத் தெரியும். என் வாழ்க்கை முழுவதும் நான் ஒரு தாராண்மைவாதியே. அதுவொரு குடும்பப் பாரம்பரியம். இருந்தும் கிளாட்ஸ்ரோனின் தன்னாட்சி பிரச்சி-டினையை என்னால் புரிந்து கொள்ள முடியாதுள்ளது என்பதை மனவருத்தத்துடன் சொல்லுகின்றேன். இந்த இயக்கம் நல்லதோர் அடையாளம் போலத் தெரிகிறது. மக்களிடையே விழிப்புணர்ச்சி ஏற்பட்டுள்ளது. ஆனால் என்னைத் தவறாகப் புரிந்து கொள்ளாதீர் கள், தீவிரவாதிகளின் வழிமுறைகளை நான் மன்னிக்கவில்லை. எனக்கான இறைவனின் அழைப்பைத் தவிர வன்முறையின் பயங்கரத்தை இயல்பாகவே வெறுக்கிறேன். வன்முறையை என் னால் மன்னிக்கவே முடியாது. மனித உயிரை எடுப்பது காட்டு மிராண்டித்தனம். அது பயங்கரம். அது பயங்கரம்.'

‘அதை வலிமையான கை கொண்டு அவர்கள் அடக்குவதில்லை,’ என்றார் பங்குத்தரகர் மிக மூர்க்கமாக. ‘கீழை நாட்டில் மிக அதிக தாராண்மைவாதம் இருக்கிறது. மிக அதிக பிதற்றல்களும் உள்ளன. இங்கே அவை எல்லாம் சரி. ஆனால் அவை கிழக்குக்குப் பொருத்தமில்லை. அவர்களுக்கு அடக்கும் வலிமையான கை தான் தேவை. அவர்கள் தான் எங்களுக்கு கடன்பட்டிருக்கிறார்கள். அவர்கள் செய்யும் அவமதிப்புக்களை இனிமேலும் எங்களால் பொறுக்க முடியாது. அவர்களை ஆட்சி செய்யுங்கள் என்று சொல்கிறேன். அவர்களைக் கவனித்தும் கொள்ளுங்கள். அவர்களுக்குப் பாடசாலைகளைக் கட்டிக் கொடுங்கள், அவர்களுக்கு கல்வி தேவை என்றால் பள்ளிகள், மருத்துவமனைகள், தெருக்கள், புகையிரதங்கள் கொடுங்கள். கொள்ளை நோய், காய்ச்சல், பஞ்சம் ஆகியவற்றை இல்லாதொழியுங்கள். யார் அதிகாரம் உள்ளவன் என்று அவர்கள் அறிய வேண்டும். அப்படித்தான் ஒரு கிழக்கு நாட்டை ஆள வேண்டும். நான் ஒரு வெள்ளையன், நீ ஒரு கறுப்பன். நான் உன்னை நன்றாக நடத்துவேன், உனக்கு நீதிமன்றமும் நீதியும் தருவேன். ஆனால் நான் தான் மேலான இனத்தவன். இங்கே நான் தான் எசமான்.’

‘உங்களுக்கு நல்லதிர்ஷ்டம் கிடைக்கட்டும்!’ என்று நான் சொன்ன போது, ஒருத்தன் என்னைத் திரும்பிப் பார்த்தான். அவன் தன் கதிரையில் அசௌகரியமாக உழன்று கொண்டிருந்தான். அவனை நான் கவனமாக ஆராய்ந்தேன். அவனுடைய எரிச்சலுக்குரிய காரணம் என்ன என்று எனக்குப் புரிந்தது. அவனுடைய முகத்தில் அது எழுதப்பட்டிருந்தது. சிறிய, ஒட்ட வெட்டிய வெண்ணிற மீசை, ஆழமான சிகப்பும் பழுப்பும் கலந்த பளபளப்புடன் கூடிய வழுவழுப்பான உறுதியான கன்னங்கள். கண்களைச் சுற்றி எண்ணற்ற சுருக்கங்கள். அனைத்திலும் மேலாக அவன் கண்கள். சுட்டெரிக்கும் சூரியனின் கீழ் வாழ்ந்து விளக்க முடியாத, அர்த்தமற்ற வாழ்க்கையைப் பார்த்துள்ளன. அத்துடன், அவை மெதுவான நிலையான திகைப்பற்றதாக மாறி விட்டன. அவன் அதைப் பார்த்திருக்கிறான் என்பது அவனுக்குத் தெரியும். ‘ஆ’, அவன் தன்னை உணர வெளிக்கிட்டு.. பேச வெளிக்கிட்டால்.. அது எங்களுக்கு நல்ல வேடிக்கையாக இருக்கும்.’

‘ம் ம்,’ என்றான் ஆக்கிடீக்கன். ‘உண்மை, நீ சொல்வதில் உண்மை இருக்கிறது. மெதுவாக நிச்சயமாக. எல்லாம் வேகமாகப் போய்க் கொண்டிருக்கின்றது. நான் சொன்னது போல, வன்முறையையும் சட்டவிரோதச் செயல்களையும் வலிமையான கைகளால் அடக்குவதற்கு முற்றிலும் நான் ஆதரவளிப்பேன். எங்களை மேலான இனம் என்று சொல்லும்போது எங்களுக்கு ஒரு கடமை இருக்கிறது என்பதை உணர்த்துகிறார்கள். உலகியல் சம்பந்தான விஷயங்களிலும் நாங்கள் ஒளியைப் பாய்ச்ச வேண்டும். நான் அதைப் பயபக்தியுடன் நம்புகிறேன். அதைச் சொல்ல நான் வெட்கப்படவில்லை. நாங்கள் அங்கே வாழும் மக்களை அறிந்து கொள்ள முயல்கிறோம். அது தான் அங்குள்ள அமைதியின் மைக்குக் காரணம். நாங்கள் அவர்களுக்கு உதாரணமாக விளங்க விரும்புகிறோம். அவர்களும் எங்களைப் பின்தொடர விரும்புகிறார்கள். நிச்சயமாக, அவர்கள் தங்கள் கால்களில் நிற்க அவர்களை வழிநடத்த நாங்கள் அவர்களுக்கு உதவ வேண்டும். நான் அறிவில்லாமல் பேசவில்லை. நான் அவர்களின் விஷயங்களில் ஆர்வம் காட்டுகிறேன். என்னுடைய சிறிய பாத்திரத்தை நடிக்க விரும்புகிறேன் என்று சொல்லவும் விரும்புகிறேன். மிகப் பெரும் மிஷனரி சங்கங்களில் வேலை செய்ய விரும்புகிறேன். எங்களின் இளைஞர்கள் பலர் மக்களிடையே இருந்து வந்தவர்கள், அதிகம் படித்தவர்கள். நன்றாகப் படித்தவர்கள் அதிலும் விடுதிப் பாடசாலைகளில் படித்தவர்கள். அங்கே வேலை செய்கின்றார்கள். பெரும் இலட்சியங்களுடன் அங்குள்ள ஏழை மக்களிடையே அவர்கள் வசிப்பதை நான் கண்டிருக்கிறேன். அவர்கள் திரும்பி வந்து தங்களின் கதைகளை நேர்மையுடன், ஊதிப்பெருக்காமல் சொல்வதை நான் கேட்டிருக்கிறேன். நம்பிக்கை தரும், ஆறுதல் தரும் செய்தி அது. நாங்கள் எங்கள் உதாரணமான வாழ்க்கையுடன், நடத்தையுடன் மக்களிடம் செல்கின்றோம். அதனால் அவர்கள் எங்களுக்கு மரியாதை தருகிறார்கள்.

அந்த நேரம் யாரோ ஒருவர் முனகுவதைக் கேட்டேன். பின் உரத்த குரலில் அந்நியமான வார்த்தைகளில் கேட்டேன்: ‘காசி முதல் ராமேஸ்வரம் வரை தெரிந்தவன்.’

லெனாட் வுல்ஃப் 1880-1969. லண்டனில் பிறந்தவர். கேம்பிறிட்ஜ் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்றவர். யூத குடும்பத்தைச் சேர்ந்தவர். 1904 இல் சிவில் சேவையில்சேர்ந்து 1911வரை யாழ்ப்பாணம், கண்டி, ஹம்பாந்தோட்டை ஆகிய இடங்களில் கடமையாற்றியுள்ளார். அவர் எழுதிய தன் வரலாற்று நூல்கள் ஐந்து. அதில் ஒரு பாகம் இலங்கையில் வாழ்ந்த காலத்தைப் பற்றியது. அவர் எழுதிய த வில்லேஜ் இன் த யங்கிள் (1913) என்ற நாவல் இலங்கையில் ஆங்கில பாடநூலாக இருந்தது. பல்லாயிரம் மாணவர்கள் பயின்றது. அந்த நாவல் ஹம்பாந்தோட்டைப் பகுதியில் உள்ள ஒரு சிறிய கிராமத்தை பின்னணியாகக் கொண்டது. அது பத்தேகம என்ற சிங்கள திரைப்படமாகவும் எடுக்கப்பட்டுள்ளது. அதை புகழ்பெற்ற லெஸ்ரர் ஜேம்ஸ் பீரிஸ் இயக்கியிருக்கிறார். பல சிங்கள பிரபல நடிகர்கள் அதில் நடித்துள்ளனர். வுல்ஃப் யாழ்ப்பாண கச்சேரியில் ஓஏ ஆகப் பணியாற்றியுள்ளார். அக்காலத்தில் மன்னாரில் முத்துக்குளிப்புக்கு இவர் மேலாண்மை செய்யச் சென்றிருக்கிறார். அதைப் பின்னணியாக வைத்து இந்தச் சிறுகதை எழுதப்பட்டுள்ளது. அவர் இந்தக் கதையைவிட இன்னும் இரண்டு சிறுகதைகளையும் இன்னொரு நாவலையும் - த வைஸ் வேர்ஜின் (1914) - எழுதியிருக்கிறார். அவற்றின்பின் அவர் புனைவுகளை எழுதவில்லை. பல பத்திகள், கட்டுரைகள், கையேடுகள், நூல்களை எழுதியுள்ளார். ஃபேபியன் சோசைற்றி, கூட்டுறவு இயக்கம், தொழிற்கட்சி ஆகியவற்றில் பிரதான பங்களிப்புச் செய்திருக்கிறார். அவர் எழுதிய இன்ரநெஷனல் கவர்மென்ட் என்ற நூல் லீக் ஒஃவ் நேஷன்ஸ் ஐ அமைப்பதற்கும் பின் ஐக்கிய நாடுகள் சபை அமைப்பதற்கும் பல முன்மொழிவுகளை வைத்திருக்கின்றது. அவர் சமகாலத்தவர்களான பெரும் அறிவாளிகளுடன் இவர் நெருக்கமாகப் பழகி இருக்கிறார். ஜி.ஈ.மூர், மேனட் கீன்ஸ், ஈ.எம். ஃபோஸ்ரர், போன்ற ப்பூளும்பெரி குழுவினருடனும் பேற்றன்ட் ரஷெல், ரி.எஸ். எலியற், கிறிஸ்தோபர் இஷவுட், அல்டஸ் ஹக்ஸ்லி ஆகிய பலருடனும் நட்புடன் இருந்திருக்கிறார்.

அவர் வேர்ஜினியாவைத் திருமணம் செய்தார். அவரை ஆழமாக நேசித்தார். அவர் கொடுத்த ஊக்கத்தால் வேர்ஜினியா வுல்ஃப் பல சிறந்த நாவல்களை எழுதிப் புகழ் பெற்ற எழுத்தாளர் ஆனார். வேர்ஜினிய வுல்ஃப் ஒரு பெண்ணிய எழுத்தாளர் என்று இன்று கொண்டாடப்படுகிறார். அவரும் வுல்ஃபும் சேர்ந்து ஹொகார்த் என்ற ஒரு சிறிய பதிப்பகத்தை உருவாக்கினார்கள். அதில் தான் வேர்ஜினியாவின் பல நாவல்கள் பிரசுரமாகின. ரி.எஸ். எலியற்றின் த வேஸ்ற் லான்ட் என்ற நாவலும் பதிப்பிக்கப்பட்டது. வேர்ஜினியா மனவழுத்தத்தாலும், இருமுனைப் பிறழ்வாலும் மனநலம் பாதிக்கப்பட்டு இறுதியில் தற்கொலை செய்துகொண்டார். அதுவரை அவரை லெனாட் வுல்ஃப் முப்பது ஆண்டுகள் பாதுகாத்துள்ளார். பராமரித்துள்ளார். அவரின் எழுத்துக்களைப் பிரசுரித்துள்ளார். அந்தப் புகழால் தான் இவர் பெரிதும் ஆங்கில இலக்கிய உலகில் இன்று அறியப்படுகிறார். ஆனால் இலங்கையில் இன்றும் த வில்லேஜ் இன் த யங்கிள் புகழ் பெற்ற நாவல். ஓர் ஐரோப்பியர் சுதேசிகளின் கண்ணோட்டத்திலிருந்து எழுதிய முதல் நாவல் அது. ஈ.இம். போஸ்ரரின் ஏ பசேஜ் ரு இன்டியா என்ற நாவலுக்கு பத்தாண்டுகளுக்குமுன், ஜோர்ஜ் ஓவலின் பேர்மிஸ் டேயிஸ்க்கு இருபதாண்டுகளுக்குமுன் எழுதப்பட்ட முன்னோடி நாவல் அது.

1900ஆம் ஆரம்பகால யாழ்ப்பாணம் பற்றி அவர் எழுதிய குறிப்புக்களும் காட்சிகளும் எங்களுக்கு அக்காலத்தைய யாழ்ப்பாணம் எப்படி இருந்தது என்றதொரு விளக்கத்தை தருகிறது. அப்போது யாழ்ப்பாண நகரம் வேலிகள் நிறைந்த, இரண்டொரு தெருக்கள் உள்ள ஒரு சிறிய கிராமம். புகையிரத நிலையம் வரவில்லை. மாட்டு வண்டிகள்தான் வாகனங்கள். இவர் யாழ்ப்பாணம் முழுவதும் தன் சைக்கிளில் சுற்றி வந்து தன் அரச கடமைகளைச் செய்திருக்கிறார். கிராமத்தவர்கள் காணிப் பிரச்சினைகளுக்காக கச்சேரிக்கு அடிக்கடி சென்றிருக்கிறார்கள். இவர் அவற்றைத் தீர்த்து வைத்திருக்கிறார். மூன்று நான்கு ஆங்கிலேயர்களே யாழ்ப்பாணம் முழுவதையும் நிர்வகித்திருக்கிறார்கள். இவர் யாழ்ப்பாணக் கோட்டையில் வசித்திருக்கிறார்.

‘மன்னிக்க வேணும், நீங்கள் என்ன சொல்கிறீர்கள்,’ என்றார் ஆக் கிடீக்கன், குறுக்கிட்டவனைத் திரும்பிப் பார்த்து.

‘மன்னித்துக் கொள்ளுங்கள், தீடீரென அது என் மனதில் தோன் றியது. யோசிக்காமல் சொல்லி விட்டேன். அது தமிழிலுள்ள ஒரு பழமொழி.’

‘பரவாயில்லை. கேட்க நல்லாக இருக்கிறது. நீங்கள் இந்தியாவில் வாழ்ந்தவரா? அதை மொழிபெயர்த்துச் சொல்ல முடியுமா?’

‘அதன் பொருள்: பெனாரிசிலிருந்து ராமேஸ்வரம் வரை எனக்கு எல்லாம் தெரியும் என்பதே. நான் அதைக் கடைசியாகக் கேட்டது, எழுபதோ எண்பதோ வயதுள்ள ஒருத்தரிடமிருந்து. அவருக்கு நூறு வயது இருக்கும் போலத் தோன்றினார். அவர் அதைச் சொன்னது, ஒரு வருஷமோ ஒன்றரை வருஷமோ இந்தியாவில் வாழ்ந்த ஒரு ஆங்கிலேய இளைஞனுக்கு. புரிகிறதா?’

‘எனக்குச் சரியாகப் புரிகிறதா என்று தெரியவில்லை. ஆனால் நான் பெனாரிசை கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் ராமேஸ்வ ரத்தைப் பற்றிக் கேள்விப்படவில்லை. அந்தப் பெயரை நான் கேள்விப்பட்டதாக எனக்கு நினைவில்லை.’

நான் சிரித்தேன். என்னால் சிரிப்பை அடக்க முடியவில்லை.

நான் சிரித்தேன். சிரிப்பை என்னால் அடக்க முடியவில்லை. அந் தச் சிறிய ஆங்லோ-இந்தியன் என்னை மூர்க்கத்துடன் பார்த்தான். ‘ஆ, உன்னால் அந்தப் பெயரை நினைவுபடுத்த முடியவில்லை. சரி. அந்தப் பெயர் அங்கே மிகவும் புகழ்வாய்ந்தது. பெரிய இந் துக் கோவில் ஒன்று இந்தியாவின் தெற்கு முனையில் இருக்கிறது. பெனாரிஸ் வடக்கில் இருக்கிறது. அது உனக்குத் தெரியும். அந்த தமிழ் முதியவர் சொன்னது, உன்னுடைய நண்பன் ஒன்றரை ஆண்டுகள் இந்தியாவில் இருந்ததால் அங்குள்ள அத்தனையும் அவனுக்குத் தெரியுமா என்பது தான். அவன் அங்கே எழுபது ஆண்டுகளோ ஏழாயிரம் ஆண்டுகளோ வாழ்ந்த பின்னும் அவ னுக்கு ஒன்றும் தெரியாது என்கிறான். தமிழர்கள் திராவிடர்கள் என்பது உனக்கும் தெரியாது? அவர்கள் அங்கே காலாகாலமாக அங்கே வாழ்கிறார்கள். நாங்கள் அங்கே போவதற்கு முன், டச் சுக்காரர், போர்த்துக்கீசர், முகம்மதியர்கள் அல்லது எங்கள் மைத் துனர்கள் ஆரியர்கள் போவதற்கு முன். அநாகரிகமானவர்கள், கறுப்பர்கள்? இருக்கலாம். ஆனால் அவர்கள் கறுப்பர்கள் என் றால் அதற்குக் காரணம் அங்கு எரிக்கும் சூரியன்தான். ஆயிரக் கணக்கான ஆண்டுகளாக அது அவர்களை கறுப்பாக்கியுள்ளது. எவருக்காவது ஏதாவது தெரியும் என்றால் அவர்களுக்குத் தான் அது தெரியும். தெரியும் என்று அவர்களுக்குத் தெரியாது. தெரி யும் என்று பாசாங்கு செய்வதும் இல்லை. ஆனால் நீங்கள் இரு கனவான்களும் உங்களுக்கு எல்லாம் தெரியும் என்று பாசாங்கு செய்கிறீர்கள். காசி முதல் ராமேஸ்வரம்வரை, அந்தச் சூரியனை ஒருக்காலும் பார்க்காமலே.

‘அன்பானவரே,’ என்று ஆச்டீக்கன் ஆரவாரமாக ஆரம்பித்தார். அவரைத் தரகர் இடைநிறுத்தினார். அவர் ஏற்கெனவே பல கிளாஸ் விஸ்கியும் சோடாவும் அருந்தியிருந்தார். அதனால் அவரின் பேச்சு மிகவும் சூடாகி இருந்தது. ‘பரிகாசம் செய்வது மிகவும் சுலபம். நீ அங்கே சில ஆண்டுகள் வாழ்ந்திருந்தாலும்..’

‘நான்? முப்பது ஆண்டுகள் வாழ்ந்திருக்கிறேன். அவர்கள் குறைந் தது ஏழாயிரம் ஆண்டுகள் வாழ்ந்திருக்கிறார்கள்?’

‘நீ முப்பது ஆண்டுகள் வாழ்ந்திருந்தாலும் உனக்கு எல்லாம் தெரியும் என்று அர்த்தமில்லை என்று சொல்கிறேன். ராமிஸ்வ ரமோ என்ன நாசமானப் போன இடமோ. அதை நான் கேள்விப் பட்டதே இல்லை. அது எனக்குத் தெரியவும் தேவையில்லை. உனக்கு அது தெரிய வேண்டிய தேவை இருந்தது. ஏனென்றால் அது உன் வேலையின் ஒரு பகுதி என்று நினைக்கிறேன். நான் பத்திரிகை வாசிக்கிறேன், இந்தியாவைப் பற்றிப் புத்தகங்களும் வாசித்திருக்கிறேன். அங்கே என்ன நடக்கிறது என்பது எனக்குத் தெரியும். ஒருவனுக்குத் தேவையான அளவு தரவுகள் தெரியும். கிழக்குக்கும் மேற்குக்கும் உள்ள வித்தியாசம் தெரியும். அதிலி ருந்து ஒரு அபிப்பிராயத்தை உருவாக்கவும் முடியும். நீ சொன்ன ராமிசைப் பற்றி நான் கேள்விப்படாமல் இருந்தாலும் எனக்கொரு அபிப்பிராயத்தை உருவாக்க எனக்கு உரிமை இருக்கிறது. நீ அங்கே வாழ்ந்திருக்கிறாய். ஆனால் உன்னால் மரத்துக்கும் காட் டுக்கும் வித்தியாசம் தெரியாது. எங்களால் அதைப் பார்க்க முடி யும். ஏனென்றால் நாங்கள் தூர இருந்து அவற்றைப் பார்க்கி றோம்.’

‘இருக்கலாம், சற்றுத் தவறாகப் புரிந்து கொண்டுள்ளீர்கள். உரை யாடல் சற்று சூடாகி விட்டது. தேவையில்லாமல். எங்கள் அபிப் பிராயத்தை நாங்கள் எங்களுக்குள் வைத்துக் கொள்ளுவோம். இந்தக் கனவான் அங்கே வாழ்ந்திருக்கிறார். அவர் சொல்வதை நாங்கள் கேட்பது மிகவும் ஆர்வம் ஊட்டுவதாக இருக்கும். ஆனால் அவர் சொன்னது எனக்குப் அதிகம் புரியவில்லை என்று சொல்லத்தான் வேண்டும்,’ என்றார் ஆச்டீக்கன்.

சிறிய மனிதன் அமைதியாக இருந்தான். பின்னால் சாய்ந்து கொண்டிருந்தான். அவன் கண்கள் சீலிங்கில் பதிந்திருந்தன. பின் முறுவலித்து விட்டுச் சொன்னான்: ‘நான் என் அபிப்பிராயத்தைச் சொல்லவில்லை. நீங்கள் விரும்பினால் விபரங்கள் என்று நீங்கள் சொல்லுபவற்றையும், பார்த்தவற்றையும், மெய் நிகழ்ச்சிகளையும் சொல்லுவேன். அதன் பின் நீங்கள் அவற்றின் மேலுள்ள உங்கள் அபிப்பிராயத்தை எனக்குச் சொல்லலாம்.’
அவர்கள் தங்கள் ஒப்புதலை முணுமுணுத்தார்கள்.

‘பாருங்கள். அது பதினைந்து பதினேழு ஆண்டுகளுக்கு முன் நடந்தது. இங்கிலாந்து அளவுக்குப் பெரிய மாவட்டத்துக்கு நான் பொறுப்பாக இருந்தேன். அங்கே இருபது ஐரோப்பியர்கள் வாழ்ந் தார்கள், மிஷனரிகளையும் சேர்த்தால். இருபது மில்லியன் தமிழர் களும் தெலுங்கர்களும் இருந்தார்கள். பத்தொன்பதாயிரம் மில்லி யன் தமிழர்களும் தெலுங்கர்களும் ஆண்டில் ஒரு தரமாவது வெள்ளையன் ஒருத்தனையாவது பார்த்திருக்க மாட்டார்கள். அல் லது பார்த்திருந்தாலும் தெள்ளுப்பூச்சிகள் கடித்த சாம்பல் நிற பெண்குதிரையில் தங்கள் கிராமத்தின் ஊடாகச் சென்ற, வெயிலி ருந்து காக்கும் தொப்பி அணிந்து சவாரி செய்த ஒருத்தனை ஒரு கணம் தான் பார்த்திருப்பார்கள். சரி, கடவுள் அருளால் அந்த மாவட்டத்தில் மிக நீண்ட கடற்கரையோரம் இருந்தது. அதுவொரு தரிசான மணல் காடு. அதில் முள் பற்றைக் காட்டை தவிர வே- றொன்றும் இல்லை. அது முந்நூறு மைல் வரை பரந்திருந்தது. அங்கே சிறு நகரங்களோ கிராமங்களோ நீரோ கிடைக்காது. தனிய மணலும் பற்றைகளும் தான். அத்துடன் சூரியனும். நெருப் பாய் எரிக்கும் சூரியனைக் குறிப்பிட மறந்து போனேன். கடற் கரைக்குத் தள்ளியுள்ள கடலில் ஒரு இடத்தில் முப்பதோ நாற் பதோ அடி ஆழத்தின் அடியில் மில்லியன் கணக்கான சிப்பிகள் கிடந்து இனப்பெருக்கம் செய்யும். சில சிப்பிகளுக்குள் முத்துக் கள் இருக்கும்.’

சரி, நாங்கள் இந்தியாவையும் அதைச் சுற்றியுள்ள கடலையும் ஆளுகின்றோம். ஆகவே கடலும் எங்களுக்கே சொந்தம். அதிலி ருக்கும் சிப்பிகளும் அவற்றுள் இருக்கும் முத்துகளும் எங்களு டையதே. ஆனால் அவை முப்பது அடி ஆழத்துள் கிடக்கின்றன. அவற்றை எப்படி மேலே எடுப்பது என்பதே கேள்வி. நாங்கள் முன்னேறியவர்கள் என்றபடியால் அவற்றை அள்ளி எடுக்கலாம் என்றோ முத்துக்குளிப்போரை கொண்டு, முக்குளிக்கும் ஆடைக- ளுடன் அவற்றை அள்ளலாம் என்றோ நீங்கள் நினைக்கலாம். ஆனால் அதை அப்படி எங்களால் செய்ய முடியாது. அதுவும் இந்தியாவில். சிப்பிகளையும் முத்துக்களையும் அவர்கள் ஆதி காலம் முதலே முக்குளித்து எடுக்கிறார்கள். பழுப்பு நிற மனிதர் கள், வெறும் கச்சையுடன் நீண்ட மர ஓடத்திலிருந்து நீலக் கட லுக்குள் கால்களை முதலில் வைத்து குளி ஓடி சிப்பிகளை கட லின் அடிப்பகுதியிலிருந்து வாரி அள்ளி அரையில் கட்டியிருந்த பறிக்குள் போடுவார்கள். நாங்கள் அங்கே போவதற்கு முன்னரே அவர்கள் அதை நூற்றாண்டு நூற்றாண்டுகளாகச் செய்து வருகி- றார்கள். ஒருத்தன் சொன்னது போல எங்கள் முதாதையர்கள் நோர்வே சமவெளிகளில் பன்றிகளை மேய்த்துக் கொண்டிருந்த போது அவர்கள் அதைச் செய்து கொண்டிருந்தார்கள். பெர்சிய வளைகுடாவில் இருந்து அரபுகள் பாய் விரித்த தோணிகளில் வந்து முத்துக்களை எடுத்தார்கள். முத்துக்கள் அங்கிருந்து சொல மன் அரசனுக்கும் ஷீபா ராணிக்கும் சென்று சேர்ந்தன. அவர்கள் இன்னும் வந்து கொண்டிருந்தார்கள். அந்த மாவட்டத்திலிருந்த தமிழர்களும் சோனகர்களும் வந்தார்கள். அவர்கள் பழைய முறை யிலேயே முத்துக் குளித்தார்கள். சொலமன் காலத்திலிருந்தது

போலவே பாய் விரித்த நீண்ட மரக்கலங்களிலிருந்து இறங்கிக் குளியோடுவார்கள். எந்த வித்தியாசமும் இல்லை. ஆனால் நாங்கள் அதாவது எங்கள் அரசாங்கம் அவர்கள் எடுத்த சிப்பியில் மூன்றில் இரண்டு பகுதியை எடுத்து விடும். மூன்றில் ஒரு பகுதியை முத்துக் குளித்தவர்களுக்கு விட்டு விடுவோம். முத்துக் குளித்ததன் கூலியாக அரபியர்களுக்கோ, தமிழர்களுக்கோ சோனகர்களுக்கோ விட்டு விடுவோம்.

ஒவ்வொரு மூன்று ஆண்டுகளுக்கு ஒரு தரம் முத்துச்சலாபம் - முத்து திணைக்களம் - ஒன்றை ஏற்படுத்துவோம். அது ஆறு கிழமைகள அல்லது இரண்டு மாதங்கள்வரை இயங்கும். இரண்டு மொன்சூன் பருவக்காற்றுக்கு இடைப்பட்ட காலத்தில். அந்தக் காலத்தில் தான் அங்கே கடல் அமைதியாக இருக்கும். நான் அதைக் கண்காணிப்பதற்காகவும் அரசாங்கத்தின் பங்கை எடுப்பதற்காகவும் விற்பதற்காகவும், அமைதியை நிலைநாட்டுவதற்காகவும், கொள்ளையடிப்போரை தடுப்பதற்காகவும், பெரியம்மை, கொள்ளை நோய்களை தடுப்பதற்காகவும் அங்கே செல்வேன். எங்களுக்கு ஒரு முகாம் இருக்கும். வனாந்திரத்தில். நினைவில் வைத்திருங்கள், கடலோரமுள்ள சூட்டு மணல் மேல். ஒரே இரவில் எழும்பிய ஒரு நகரம் அது. முப்பதோ நாற்பதோ ஆயிரம் மக்களைக் கொண்ட பெரிய நகரம். சிறிய இந்தியா. ஏறக்குறைய ஆசியா. சிறிய ஆபிரிக்காவும் கூட. எல்லா மாவட்டங்களிலிருந்தும் வருவார்கள். தமிழர்கள், தெலுங்கர்கள், தடித்த செட்டிகள், பார்சிகள், பம்பாய் வியாபாரிகள், இலங்கைச் சிங்களவர்கள், அராபியர்கள், நீக்ரோக்கள். அவர்கள் சோமாலியர்களாக இருக்கலாம். அவர்கள் அராபியர்களின் அடிமைகளாக இருந்தவர்கள். அதுவொரு பெரியதொரு சூதாட்டம். ஒவ்வொருவரும் சிப்பிகளை வாங்கினார்கள், அவற்றில் முத்துக் கிடைக்கலாம் என்று நினைத்தார்கள். அந்த முகாமை சரியாக மேலாண்மை செய்வதற்கு ஐம்பது வெள்ளையர்கள் தேவையாக இருக்கும். ஆனால் அவர்கள் இங்கிலாந்திலிருந்து அப்போது தான் சேவையில் சேர்ந்த இருபத்து நாலு வயதுள்ள இளைய சின்னஞ் சிறுவனான எனக்கு அந்த வேலையை தந்தார்கள். அவனுக்கும் சொந்த அபிப்பிராயங்கள் இருந்தன. விடுதிப் பள்ளியில் படித்தவன். பரிசுகளையும் புலமைப்பரிசுகளையும் வென்றவன். சிவில் சேவை 'தேர்விலும்' சித்தி அடைந்தவன். ஓம், அவனுக்கும் அபிப்பிராயங்கள் இருந்தன. அவன் முதல் முதல் இங்கே வந்தபோது அவற்றை எனக்கு விளங்கப்படுத்தி இருக்கிறான். அவன் அந்த முகாமை விட்டு வெளியே வந்தபோது சில புதிய விசயங்களையும் கண்டிருக்கிறான் என்று நினைக்கிறேன். அந்த விபரங்களையும், நடந்தவற்றையும், தகவல்களையும் தரவுகளையும் கண்டிருக்கிறான் என்று நீங்கள் நினைக்கலாம். அதையும் தான். அங்கே மனிதர்கள் இறப்பதை கண்டிருக்கிறான். அதை அவன் படித்த விடுதி பள்ளியில் கண்டிருக்கவில்லை. அதாவது கொள்ளை நோயால் அல்லது வாந்திபேதி நோயால் இறப்பதை. ஈக்கள் போல இறப்பதை. பார்த்த இடம் எல்லாம். மரங்களின் கீழே, ஓடங்களில். அவனுடைய சிறிய கொட்டிலின் வெளியே. அத்துடன் அவன் ஈக்களையும் கண்டிருக்கிறான். மில்லியன் பில்லியன் கணக்கில். ரீங்கரித்துக் கொண்டு, ஊர்ந்து கொண்டு, அவன் கைகளில், சுத்தமான முகத்தில், அவன் உணவில். இரவும் பகலும் ஆறு கிழமைகள் மில்லியன் கணக்காக அழுகி நாற்றமெடுக்கும் சிப்பிகளின் நாற்றத்தை மணந்து கொண்டிருந்திருக்கிறான். நாலு அல்லது ஐந்து முறை நோயில் கிடந்திருக்கிறான். ஆறு கிழமைகள் கிடந்திருக்கிறான். சிலவேளை ஒரு நாளைக்கு நாலோ ஐந்து முறை. அதன் மணம் அப்படி. ஆரோக்கியமற்றதா? ஓம், மிக மிக. அதை ஏன் அனுமதித்தார்கள்? முத்துக்களுக்காக. ஓம், முத்துக்களுக்காக. கடலிலிருந்து சிப்பிகளை எடுப்பது போல சிப்பிகளிலிருந்து முத்துக்களை எடுக்க வேண்டும். முத்துக்கள் மிகவும் சிறியவையாக சிப்பிகளில் ஒட்டிக் கொண்டிருக்கும். அதனால் மில்லியன் கணக்கான அந்தச் சிப்பிகளை தோணிகளின் குடைவில் வெயிலில் அழுக விட்டு விடுவார்கள். வெயிலில் கிடந்து அவை நன்றாக அழுகும். ஈக்கள் வந்து அவற்றின் மேல் முட்டை இடும். முட்டைகளிலிருந்து புழுக்கள் வெளியே வரும். புழுக்களிலிருந்து இன்னும் அதிக ஈக்கள் பெருகும். புழுக்களுக்கும் வெயிலுக்கும் இடையே கிடந்து சிப்பிகளின் ஓடுகள் மறைந்து போகும். முத்துக்களையும் சிறிய மணல்களையும் தோணியின் அடியில் விட்டிருப்பார்கள். அந்த முறை விஞ்ஞானரீதியற்றதா? ஓம், சிலவேளை. எப்படியிருந்தாலும் அது எங்கள் முகாம். எங்கள் தளம். சொலமன் காலத்திலிருந்தது போலவே. எப்படியோ அது கிழக்கு. என்ன விருந்தாலும், என்ன காரணம் இருந்தாலும், இறுதியில் மில்லியன் கணக்கான ஈக்கள், நாற்றம். அந்தத் துர்நாற்றத்தை, கடவுளே! இப்பொழுதும் என்னால் மணக்க முடியும்.

அங்கே இன்னொரு வெள்ளையன் இருந்தான். அவன் ஒரு தோட்டத்துரை. அப்படி அவன் சொல்லியிருந்தான். முத்துக்கள் 'வாங்க விற்க' வந்திருந்தான். இரண்டாவது நாள் சூரியாஸ்தமன நேரத்தில் உள்ளூர் மரக்கலத்தில் வந்திருந்தான். சிவத்த முகம். சிவத்த மூக்கு. ஒரு கிழக்கு நாட்டிற்கு ஆரோக்கியமற்ற மொத்த மான உடலமைப்பு உடையவன். விழிகளின் வெண்கோளம் நீல மும் சிகப்பும் கலந்தது. கண்களில் நீர் கசிந்து கொண்டிருந்தது. முன் கை ஆடிக் கொண்டிருந்தது. முதலில் மறுத்து விட்டு, பின் விஸ்கியும் சோடாவும் குடித்தான். கிழக்கு நாட்டில் அதுவொரு மோசமான அறிகுறி. மிகவும் அழுக்கான வெள்ளை நிற காற்சட் டையும் சட்டைக்குப் பதிலாக பனியனும் அணிந்திருந்தான். அவ- னிடம் எந்தவிதமான பயணப் பைகளும் இருக்கவில்லை. அவன் ஒரு வெள்ளையன். அதனால் அன்றிரவும் அதன் பின் வந்த இர வுகளும் எங்களுடன் சாப்பிட்டான்.

இரண்டாவது கிழமை அவனுக்கு முதல் முறையாக அந்தச் சன்னி நடுக்கம் வந்தது. றொப்சனும் நானும் சிப்பிகளை கவனித்துக் கொண்டு அவனையும் கவனித்தோம். மதுவடிமைத்தனத்தால் சன்னி நடுக்கம் வராமல் இருக்கும்போது கதைத்தான். பெரும் கதைகாரன். அத்துடன் அவனுக்கு சில அபிப்பிராயங்களும் இருந்தன. நான் மாலையில் வேலையில்லாமல் சும்மா குந்தி இருக்கும் நாட்கள் மிகவும் குறைவு. ஆனால் சிலவேளைகளில் வள்ளங்கள் நேரத்துடன் கரை சேர்ந்து விட்டால், சிப்பிகளும் பகிரப்பட்டு விட்டால், என் கொட்டிலுக்கு முன்னால் குந்தி இருப் பேன், அவனும் றொப்சனும் இந்தியாவிலும் ஆசியாவிலும் சில வேளை ஆபிரிக்காவிலும் குடியேறி விடுவதைப் பற்றிக் கதைத் துக் கொண்டிருப்பார்கள். அவற்றை நான் கேட்டுக் கொண்டி ருப்பேன். நாங்கள் மணலில் போட்டிருந்த எங்கள் நீண்ட கதிரை களில் இருந்து ஊதா நிறக் கடலின் மேலாக இரத்தம் போன்ற தங்க நிறத்தில் தோன்றும் சூரியாஸ்தமனத்தைப் பார்த்துக் கொண் டிருப்போம். அந்நேரம் அண்மையிலிருந்த கடுகு மரத்தில் போய்த் தூங்குவதற்குப் பறக்கும் ஈக்கள் தவிர எதுவும் அசை யவோ நகரவோ செய்யாது. பில்லியன் கணக்கான ஈக்கள் வழு வழுப்பான இலைகளிலும் சிறிய கிளைகளிலும் ரீங்கரித்துக் கொண்டு கூட்டமாக தூங்கிக் கொண்டிருக்கும். அந்தக் கிளைக ளும் இலைகளும் மிகவும் கறுப்பாகத் தோன்றும். முழு மரமுமே கறுப்புத் திராட்சை வற்றல் நோயால் சடுதியாக பீடிக்கப்பட்டது போலத் தோன்றும். கடல் கூட அமைதியான வெப்பக் காற்றால் அசைய முயல்வது போலத் தோன்றும். இடைக்கிடை மட்டுமே சிறிய அலைகள் மிகவும் மெதுவாக சோர்வுடன் மேலேழுந்து ஒரு கணம் அந்தரத்தில் நின்று பின் தட் என்ற சிறு சத்தத்துடன் சோர் வுடன் மணலில் விழும்.

முகத்தில் திடமான பொருள் ஒன்று மோதுவது போல சூடான அசைவற்ற காற்றிலும் செத்த சிப்பிகளின் நாற்றத்தின் நடுவிலும் அவற்றை நான் கவனித்துக் கொண்டிருப்பேன். நீண்ட கதிரைக- ளிலிருந்து நெற்றியில் வியர்வைத் துளிகள் இருந்து பின் இடைக் கிடை மூக்கின் வழியாக வழிந்து கொண்டிருக்கும்போதும் அவர் கள் கதைத்துக் கொண்டே இருப்பார்கள். றொப்சனைப் பொறுத்த வரையில் எந்தப் பிழைகளும் செய்யாதவன் என்று தான் நினைக் கிறேன். அடிப்படையில் அவன் நல்லவன். ஆனால் அந்த நாற் றத்தின் நடுவில் அவன் எனக்கு எரிச்சலூட்டினான். தன்னிலும், பிரித்தானிய பள்ளி நிர்வாகக் குழுவிலும், வாழ்க்கையிலும் தன் 'அபிப்பிராயத்திலும்' ஐயத்துக்கிடமற்று தன்னம்பிக்கை கொண்ட வன். பிரித்தானிய பள்ளியில் ஏதோவொரு வெறுக்கத்தக்க அரசி யல் விஞ்ஞான கையேட்டிலும் விரிவுரைகளிலும் குறிப்பிட்ட தன் படி இந்திய நிர்வாகத்தையும் செய்யப் போகிறான் என்றான். தன் வாழ்க்கையையும் சில குறிப்பிட்ட பாட நூலில் அல்லது அரிச்சு வடியில் குறிப்பிட்டபடி கொண்டு செல்வான் என்பதில் எனக்கு நம்பிக்கை உள்ளது என்று துணிந்து சொல்லுவேன். அவன் எதை யும் இன்னும் காணவில்லை. இருந்தும் அவை எப் படி இருக்கும் என்று அவனுக்கு மிகவும் நுட்பமாகத் தெரியும். வாழ்க்கையில் அவனுக்கு எதுவும் ஆச்சரியமானதோ, மலைப்பை உண்டுபண் ணுவதோ, எதிர்பாராததோ இல்லை. ஆனால் அவன் எந்த நெருக் கடிக்கும் தயாராகவே இருந்தான். பூர்வீக மக்களு டனான எமது நடத்தைகளில் நாங்கள் எல்லோருமே தவறு செய்தோம். வெப்ப மானி மாலை 6 மணிக்கு 99 பாகையில் நின்றபோது அவன் என்னைச் சற்று எரிச்சல் படுத்தினான். ஆனால் அதிலும் பார்க்க என்னை எரிச்சலடையச் செய்தவை, சுதேசிகள் செய்யும் தவறுகள். எப்படி அவர்கள் வாழ வேண்டும், அவர்களுக்கு அதை எப்படிக் கற்பிக்க வேண்டும் என்பதையும் அறிந்திருந்தேன்.

ஆனால் றொப்சனுடைய அபிப்பிராயங்கள் ஆர்வமூட்டுபவை. மிகவும் ஆர்வமூட்டுபவை. மிகப்பரந்த இந்திய வானத்துக்குக் கீழே நீண்ட கதிரைகளில் முகாமுக்கு அருகாமையில் இருந்து கொண்டிருந்தோம். மோசசும் ஆப்ரகாமும் வாழ்ந்த காலத்தில் இருந்தது போல வானம் அப்படியே இருந்தது. எங்களுக்குப் பின் னால் மைல் கணக்காக காடுகள் இருந்தன. இந்தியாவின் முந் நூறு மில்லியன் மக்கள், விடுதிப் பள்ளியில் படித்த ஒரு சிறுவ- னின் உயர்ந்த குரலை அந்த தாழ்ந்த இனத்தினர் கேட்டுக் கொண்டிருந்தார்கள். கவனியுங்கள் இனம் என்ற சொல்லை. பெக் காமிலுள்ள உள்ள மக்களிலும் பார்க்க இந்தியாவில் அதிக இனங்கள் இருக்கின்றன. நாங்கள் நிச்சயமாக உயர்ந்த இனம் தான். அவர்கள் ஏணியின் கடைசிப் படியில் நின்று விட்டவர்கள். நாங்கள் ஏறக்குறைய ஏணியின் மேல் படியில் ஏறி விட்டோம். அவர்கள் அங்கே பல்லாயிரம் ஆண்டுகள் பின் தங்கி விட்டார் கள். ஆனால் அவர்களின் கையைப் பிடித்து நாங்கள் இருக்கும் மேல் படிக்குத் தூக்கி விட நேரம் போகாது. அதை இப்படித் தான் செய்ய வேண்டும்: அவர்கள் எங்கள் சகோதரர்கள், தாழ்ந்த சகோதரர்கள். பகுத்தறிவால் விவாதித்து, அவர்களின் மூடத்தனங் களிலிருந்தும் பிழையான நம்பிக்கைகளிலிருந்தும் அவர்களை மீட்டெடுக்க வேண்டும். கல்வியால், விஞ்ஞான அறிவால், உதார ணங்களால், ஓம், உதாரணத்தை அவன் மறக்கவில்லை, அவனுக் குப் பக்கத்திலிருந்த சிவந்த மூக்கும், நீர் வடியும் கண்களும் உடைய வைற் தலையை ஆட்டி தன் ஒப்புதலைத் தெரிவித்தான். இவை எல்லாம் விஞ்ஞானரீதியாகவும், தர்க்கரீதியாகவும், முறை யாகவும் செய்யப்பட வேண்டும். அப்படி என்றால், ஒரு ஆணை யாளர் ஒரு மாகாணத்தில் ஐந்து ஆண்டுகளில் புரட்சிகரமான மாற்றங்களைக் கொண்டு வரலாம். இப்பொழுது நடைபெறும் கல கங்களிடையேயும் இந்தியாவை யப்பானாக மாற்றி விடலாம். வக் கீல்களையும் மாணவர்களையும் ஐரோப்பிய நாகரீகத்தின் ஏணி யில் ஏற்றி விடலாம். அதாவது, புகழ்பெற்ற விடுதிப் பள்ளிகளின் தேவதைகளாக மாற்றி விடலாம். 'ஆனால் இங்கே உங்கள் ஒருவரிடமும் தெளிவான திட்டங்கள் ஏதும் இல்லை, நீங்கள் ஒரு வரும் எந்த அமைப்பையும் அடிப்படையாகக் கொண்டு செயல் படுவதில்லை, உங்களிடம் எந்தவிதமான கண்ணோட்டங்களும் இல்லை. அதன் விளைவு என்னவென்றால்,' -இந்த இடத்தில் சிலவேளை அவன் இறந்த சிப்பிகளால் ஊக்கப்படுத்தப்பட்டுள் ளான் என்று நினைத்தேன்-' கிழக்கை நீங்கள் கைப்பற்றாமல் கிழக்கு உங்களைக் கைப்பற்றி விட்டது,' என்றான் உயர்ந்த குரலில்.

வைற் அதனை நேர்மையுடன் ஒப்புக் கொண்டான், அதாவது, அறிவுடனும் நிதானத்துடன் இருக்கும்போது. அவனுடைய அனுப வமின்மையைப் பற்றி நான் குற்றம் சொல்லவில்லை. முதலில் அவன் அதிகம் பேசாதவனாக இருந்தான். பின் அவன் தன்னைப் பற்றி அதிகம், மிக அதிகம், பேசினான். அவனுடைய அனுபவங் களைச் சொன்னான். அதைப் பற்றி என்னால் குற்றம் சாட்ட முடியாது. ஒருத்தன் மதுவடிமைத்தனத்திலிருந்து விடுபடும்போது அப்படித்தான் கதைப்பான். அவன் தன்னை ஒரு கனவான் என்று சொன்னான். அது உண்மை என்று நான் நம்புகிறேன். அவன் இங்கிலாந்தில் பொதுப் பள்ளியில் படித்திருக்கிறான், செல்ரன் ஹாம் அல்லது றெப்ரனில். ஆனால் அவன் உள்நாட்டில் ஒரு கனவானாக வெற்றி பெறவில்லை. அதனால் அவனைக் கிழக்கில் பயணம் செய்ய அனுப்பி இருக்கிறார்கள். அதை அவனும் விரும்பியிருக்கிறான். அது அவனுக்குப் பொருத்தமாகவும் அமைந்திருக்கிறது. அதனால் அவன் அசாமில் தோட்டத்துரை யாகி இருக்கிறான். அது நடந்தது பதினைந்து ஆண்டுகளுக்கு முன். ஆனால் அவன் அசாமை விரும்பவில்லை: அதிர்ஷ்டம் அவனுக்கு எதிராக இருந்திருக்கிறது. எப்பொழுதும் அப்படித் தான். பின் அவன் அலைந்து திரிய வெளிக்கிட்டான். இந்தியா வில் ஒருத்தன் அலைய வெளிக்கிட்டால் அப்படித்தான். வர்த்தர்க ளின் அலுவலகங்களில் எழுத்தராகப் பணியாற்றினான். கல்கத்தா வில் புடவைக் கடையில் வேலை பார்த்தான். அதிர்ஷ்டம் எப்பொ முதுமே அவனுக்கு எதிராகவே வேலை செய்தது. பின் இந்தியா வில் மேலும் கீழும் நாடோடியாகத் திரிந்தான். இலங்கை, பர்மா ஊடாகத் திரிந்தான். ஒருமுறை மலாயா மாநிலங்களுக்கும் சென் றிருக்கிறான். ஒருமுறை மிகவும் மோசமான நிலைக்கு ஆளான- போது ஜாவாவில் கற்பூரம் பயிர் செய்வது பற்றிப் பேசி இருக்

கிறான். ஒருமுறை கடலில் நாடோடியாகத் திரிந்தபோது மாலுமி யாகவும் இருந்திருக்கிறான். டெக்கானில் எங்கோ குதிரை கள் விற்றிருக்கிறான். அவை அவனுடையவை அல்ல. உள்ளூர் வீதிக ளில் மாதக்கணக்காக நாடோடியாகத் திரிந்திருக்கிறான். தென்னிந் தியாவிலுள்ள சிறியதொரு கிராமத்தில் ஒரு தமிழ்ப் பெண்ணுடன் ஆறு மாதங்கள் வாழ்ந்திருக்கிறான். இப்பொழுது அவன் முத்துக் கள் 'வாங்கி விற்கிறான்.' 'இந்தியா என்னைப் பிடித்துக் கொண் டது. இந்தியாவும் கிழக்கும் என்னைப் பிடித்துக் கொண்டது' என்று சொன்னான்.

அவனிடமும் சில அபிப்பிராயங்கள் இருந்தன. றொப்சனிடம் இருந்தது போல. ஆனால் இன்னும் அதிகமாக. 'வலிமையான கை' வந்து, 'ஆட்சி' செய்கிறது. நாங்கள் இந்தியாவை இன்னும் கூடுதலாக ஆட்சி செய்ய வேண்டும். இப்பொழுது அதை நாங் கள் செய்யவில்லை. ஏன், அவன் பல நூறு இடங்களுக்குச் சென்றிருக்கிறான். ஆனால் அவ்விடங்களில் உள்ள மக்கள் அவ னைத் தவிர வேறொரு ஆங்கிலேயனையும் பார்த்ததில்லை. (ஆண்டவனே, யோசித்துப் பாருங்கள்) இந்தியாவில் மறைவாக உள்ள செல்வத்தையும் அதை எப்படிச் சுரண்டி எடுக்கலாம் என் பதைப் பற்றியும் அதிகமாகப் பேசிக் கொண்டிருந்தான். தங்கம் இருக்கும் இடங்கள் பற்றி அவனுக்குத் தெரியும். அதை தோண்டி எடுக்க முடியும், அதற்கு கொஞ்ச முதல் வேண்டும். நிலக்கரியும் இரும்பும் கூட அங்கே இருக்கலாம். றேடியம் என்ற இந்தப் புதிய பொருளும் இருக்கலாம். ஆனால் நாங்கள் அதில் ஆர்வம் காட்டுபவர்களோ, முற்போக்கானவர்களோ அல்ல. அரசாங்கம் எப்பொழுதும் அப்படியான செயல்களைச் செய்யாமல் தடைகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. ஐரோப்பியர்களின் முயற்சிக ளுக்கு எதிராக சுதேசிகளை பற்றிய போலிக் காரணங்களைக் காட்டி அதைத் தடுத்து விடுவார்கள். அவன் சுதேசிகளின் நன் மைக்காகவும் செயல்படுவான். அவர்களை கண்டிப்பாக ஆனால் அன்பாக நடத்துவான் என்று நினைத்தேன். குறிப்பாக உள்ளூர் பெண்களை. அவனுடைய பற்கள் கூர்மையானவை, கூரியவை. ஒவ்வொரு பல்லுக்கும் இடையில் நீக்கல் இருந்தன. கன்னத்திலும் தாடையிலும் ஏதோ இருந்தது. அந்த வகை மாதிரியை உங் களுக்குத் தெரியும் தானே.

முத்துக்குளிப்பு நடைபெற்றபோது அவனுடன் கதைப்பதற்கு அதிக நேரம் இருக்கவில்லை. வேலை செய்ய வேண்டியிருந்தது. ஒவ்வொரு இரவும் முந்நூறோ நானோறோ படகுகளில் அவர்கள் போய் நடுப்பகல்வரை முத்துக் குளிப்பார்கள். பின் சிப்பிகளைக் கொண்டு வந்து அரசு அமைத்த மிகப் பெரிய வேலி அடைப் புக்குள் போடுவார்கள். அங்கே அரசு தன் பங்கை எடுத்துக் கொள்ளும். காற்று அனுகூலமாக இருந்தால் எல்லாப் படகுகளும் மாலை ஆறு மணிக்கே வந்து விடும். அந்த நாட்களில் மாலை ஏழு மணிக்கே வேலை முடிந்து விடும். ஆனால் காற்று கரையிலி ருந்து மேலே வீச ஆரம்பித்தால் படகுகள் சிதறி அங்குமிங்கும் அலைந்து இரவு முழுவதும் ஒவ்வொன்றாகத் தான் வந்து சேரும். றொப்சனும் நானும் எல்லாப்படகுகளும் வந்து சேரும்வரை வேலி அடைப்பிற்குள் இருப்போம். கடைசிப் படகு வந்தவுடன் சிப்பி களை அடைப்புக்குள் எடுத்து வரச் செய்து அரசு தன் பங்கை எடுத்துக் கொள்ளும்வரை நாங்கள் இருக்க வேண்டும்.

அந்த ஆண்டு காற்று சாதகமாக வீசவில்லை. அதனால் அந்த வேலி அடைப்புக்குள் நாற்பத்தெட்டு மணித்தியாலங்கள் இருந் தேன். றொப்சன் அதைத் தனியே சமாளிக்கக் கஷ்டப்பட்டான். அதனால் அவனைத் தனியாக இருக்கவிட நான் விரும்பவில்லை. இரண்டாயிரம் அராபியர்கள், தமிழர்கள், நீக்ரோக்கள், சோனகர் கள். ஒவ்வொருவரும் ஒன்றோ இரண்டோ பைச் சிப்பிகளுடன் நூற்றைம்பது யார் அகலமும் நூற்றைம்பது யார் நீளமும் உள்ள வேலி அடைப்புக்குள் வந்தால், தைரியமில்லாத முப்பது உள் ளூர் உதவியாளர்களையும் பன்னிரண்டு உள்ளூர் காவல்படையின ரையும் மட்டும் வைத்துக் கொண்டு அவர்களைக் கட்டுப்படுத்த முடியாது. றொப்சன் தன் அறிவை உபயோகித்து கட்டுப்படுத்த கஷ்டப்பட்டான். முதல் முறை அப்படி அவன் முயன்றபோது ஏறக்குறைய கலகமே ஏற்பட்டு விட்டது. ஒரு பைக்குள்ளிருந்து விழுந்த மூன்று சிப்பிகள் யாருக்கு உரிமை என்பதே தகராறுக்குக் காரணம். அவை அரபியர்களுக்கா, தமிழர்களுக்கா என்று. அரபி யர்களுக்குத் தமிழ் தெரியவில்லை, தமிழர்களுக்கு அரபு புரிய வில்லை. பயந்ததொரு காவலன் ஒருவன் என்னை அங்கே அழைத்துச் சென்றபோது அறுபதோ எழுபதோ பேர் பெரிய பொல்லுகளுடன் சண்டை பிடித்துக் கொண்டிருந்தார்கள். ஆயுதங் களாக வேலி அடைப்பிலிருந்து பிடுங்கிய பொல்லுகள். அடைப் புக்கு வெளியே றொப்சன் கூட்டிலிருந்து கலைக்கப்பட்ட கோழி யைப் போல அங்குமிங்கும் ஓடிக் கொண்டிருந்தான். வாடிய முகமும் நீலக் கண்களில் கண்ணீருமாக. சண்டை பிடிப்பவர்களை நாங்கள் பிரித்து விட்டபோது அவர்கள் ஒரு தமிழனைக் கொன்று, ஒன்பதோ பத்துப் பேரின் தலையை உடைத்து விட்டிருந்தார்கள். றொப்சன் இறந்த தமிழனுக்காக மிகவும் கவலைப்பட்டான். இரண் டொரு நிமிஷங்கள் முற்றாக நிலைகுலைந்தும் விட்டான் என்று நினைக்கிறேன்.

பின் வைற்றுக்கு இரண்டாவது வலிப்பு வந்து விட்டது. அவன் மிக வும் மோசமான நிலையில் இருந்தான். அவன் தற்கொலை செய்ய விரும்பினான். தன்னைக் கொல்லுவதற்கு முன் மற்றவர்களைக் கொல்ல விரும்பினான். இரண்டு இரவுகளாக நான் நித்திரை கொள்ளவில்லை. திரும்பவும் காற்று பிழையாக வீசியதால் இன்னொரு இரவு அந்த வேலி அடைப்புக்குள் இருக்க வேண்டும் என்பது எனக்கு தெரிந்தது. எனது கொட்டிலில் வைற்றுக்கு ஒரு கட்டில் கொடுத்திருந்தேன். வீதியில் அவனை அலைய விடுவது நல்லதல்ல. 'திரும்பவும் தனக்கு விசர் பிடித்து விட்டதென்று' என்று என்னிடம் சொல்ல றொப்சன் வாடிய முகத்துடன் வந்தி ருந்தான். நான் வைற்றை துவக்குப் பிடியால் அடித்து விழுத்த வேண்டியதாயிற்று. அவன் பருத்த பெரிய உருவம் உடையவன். நான் நாற்பத்தெட்டு மணித்தியாலம் நித்திரை கொள்ளவில்லை. அத்துடன், ஈக்களும் செத்த சிப்பிகளின் நாற்றமும்.

யன்னல்களின் திரை மறைப்புக்களுக்குப் பின்னால் இருக்கும் உங்களுக்கு அவை புரியாது. குதிரை மயிரால் பின்னப்பட்ட, சாயமும் அரக்கும் பூசப்பட்ட கதிரைகளை மணந்து கொண்டிருக் கும் உங்களுக்கு நான் சொன்னவை எல்லாம் உண்மையில்லா தவை போலவும் சிலவேளை துர்க்கனவுகள் போலவும் இருக்க லாம். ஆச்சரியம் என்னவென்றால் அவை அங்கே துர்க்கனவுகள் அல்ல. மிகவும் உண்மையானவை. அப்படித்தான் பலவும் நடந் தன. அங்கே எதுவும் நடக்கும். அவை அதிர்ச்சியையோ திகைப் பையோ தரா. அந்த வெப்பத்தில் ஈக்கள் இடையே வெறும் கைகளால், முகத்திலுள்ள தோல் உரியும்வரை, மணிக்காக ஒருத்தன் தன் வேலையைச் செய்து கொண்டிருப்பான். அத்துடன் நாற்றத்தையும் சேர்த்துக் கொள்ளுங்கள். அதுவொரு துர்க்கன வல்ல. சில ஆயிரம் அரபியர்களும் இந்தியர்களும் கடலடியில் இருந்து முத்துச்சிப்பிகளை அள்ளுகிறார்கள். அதுவொரு புதிய விஷயமல்ல. அது பழையது. பைபிள் காலம் அளவுக்குப் பழை யது. அப்படி அரபியர்கள் சொன்னார்கள். அதைப்பற்றிச் சிந்திப் பதற்கு அதிக நேரமிருக்கவில்லை. அதை அவர்கள் உணர்ந்தி ருக்கிறார்கள். அவதானித்திருக்கிறார்கள். அவை அமைதியாக நடைபெறும்போது பார்த்திருக்கிறார்கள். ஆச்சரியப்படாமல், கிழக் கிலுள்ளவர்கள் செய்வது போல. வேலை நடைபெற்றுக் கொண்டே இருக்கும். அதற்காக ஒருத்தன் காத்திருப்பதில்லை. அவன் தன் வேலையைச் செய்து கொண்டிருப்பான். நாற்பத்தெட்டு மணி நேர மும் தொடர்ந்து கொண்டிருப்பான். அதனால் அதைப்பற்றி சிந் திப்பதற்கு ஒருத்தனுக்கு நேரமோ விருப்பமோ இருந்ததில்லை. ஒருத்தனை ஒருத்தன் கொல்லாமல் தடுத்தால், அல்லது களவாடா மல் தடுத்தால், அல்லது முகாமை எரிக்காமல் தடுத்தால், அல் லது கொலரா அல்லது கொள்ளை நோய் அல்லது அம்மை நோய் வராமல் தடுத்தால், மூன்று நாட்களில் ஒரு இரவாவது நித்திரை கொண்டால் ஒருத்தன் திருப்திப்பட்டு விடுவான். அதற் கிடையில் றெப்ரினில் இருந்து வந்த கனவான் ஒருத்தனைத் துவக் குப் பிடியால் தலையில் அடித்து வீழ்த்தியதைப் பற்றி அவன் அதிகம் கவலைப்படவில்லை.

'இந்தியாவை பிடிப்பது அல்ல, இந்தியா உன்னைப் பிடிப்பதற்கு விடுகிறோம்,' என்று றொப்சன் அழைப்பான் என்றே நான் எதிர் பார்த்தேன். சரி, என் அபிப்பிராயத்தை சொல்ல முடியாது என்று சொன்னேன். என்னால் முடியாது: நான் உனக்கு உண்மைகளைச் சொல்லுகிறேன். எனக்குத் தேவை அங்கே நடக்கும் உண்மை-களைச் சொல்வதே. எல்லாவற்றிற்கும் மேலாக, அவை தான் உங்கள் அபிப்பிராயத்திற்குத் தேவையான தரவுகள், இல்லையா? இங்கே விஷயங்கள் மிகவும் வித்தியாசமாக உணரப்படுகின்றன. நீங்கள் உண்மை வாழ்க்கையிலிருந்து எவ்வளவோ தூரத்தில் இருக்கிறீர்கள். அவற்றிற்கு இடையில் அவற்றைத் தடுக்கும் யன் னல்கள், திரைத்தடுப்புகள், திரைச்சீலைகள். பின் எதுவும் நடப்

பதில்லை. சம்பவங்கள் நடப்பதற்காக நீங்கள் காத்திருக்கக் கூடாது. இங்கே சம்பவங்கள் நிகழும்போது பார்த்துக் கொண்டி ருப்பதில்லை. நீங்கள் எப்பொழுதும் எப்படியோ எதையாவது செய்து கொண்டிருக்கிறீர்கள். அவர்கள் யாரென ஆண்டவனுக் குத் தான் தெரியும் அமைப்புகள், பார்வைகள், அபிப்பிராயங்க ளைப் பொறுத்தவரையில். அங்கே நீங்கள் வாழ்க்கைக்கு அரு கில் இருக்கிறீர்கள். ஒவ்வொரு நாள் காலையிலும் தகரத் தொட் டிக்குள்ளிருந்து குளித்தால் ஈர மண்ணைத்தான் மணப்பீர்கள். தவிர்க்க முடியாதது போல எல்லா விஷயங்களும் மெதுவாகத் தான் நிகழும். உங்களால் ஒன்றும் செய்ய முடியாது. நீங்கள் முந் நூறு மில்லியன் மக்களுடன் சேர்ந்து பார்த்துக் கொண்டிருக்க வேண்டியதுதான். அங்கே எல்லாம் இருக்கிறது என்று நீங்கள் உணர்கிறீர்கள். சூரியோதயத்தில், சூரியாஸ்தமனத்தில். ஒவ்வொரு நாளும், மிகப்பெரியளவில், தவிர்க்க முடியாதளவு, மர்மமான நிகழ்வுகளும் நிகழ்கின்றன. உலகமே விழித்தெழுகின்றது அல் லது பெரும் ஆகாய வளைவில் துயிலச் செல்லுகின்றது என்று நீங்கள் உணர்கிறீர்கள், நீங்கள் உங்களைச் சிறிதாக உணர்கிறீர் கள். மிகவும் சக்தி வாய்ந்தவர்களாக உணரவில்லை. ஆனால் லண்டனில் அல்லது ரோக்கியில் சூரியன் உதிக்கிறது, மறைகிறது என்று யார் தான் உணர்ந்தார்கள்? அது அப்படியல்ல: நீங்கள் மின்சார விளக்கைச் சும்மா போடுகிறீர்கள், அணைக்கிறீர்கள்.

வைற் அன்றிரவு மிக மோசமான நிலைக்கு ஆளாகி விட்டான். துவக்குப் பிடியால் அடித்து அதிலிருந்து அவன் மீண்ட பின் அவனைக் கட்டிலுடன் சேர்த்துக் கட்டினேன். றொப்சன் அழுதான். அவன் தன் மனத் தைரியத்தை இழந்து விட்டான். வேலி அடைப் புக்கு நான் திரும்பவும் போக வேண்டியிருந்தது. அதனால் அவனைக் கொட்டிலில் இருந்து வைற்றைக் கவனிக்கச் சொன் னேன். அவனை மடக்குக் கட்டிலில் கயிற்றால் கட்டி வைத்த பின் னரும் கூட அவனைத் தனியே விடுவது பாதுகாப்பில்லை. அதுவே வாரு வெளிப்படையான புதிய நெருக்கடி நிலைமை. அது பற்றி அரச கையேடு ஒன்றும் சொல்லவில்லை. கொட்டிலுக்குள் கட்டி லில் கட்டப்பட்டிருக்கும் அவனை றொப்சனால் தனியாகப் பார்க்க முடியாது. வைற் வேதனையில் நெளிந்து கொண்டு அலங்கோல மாகக் கிடந்தான். அதைப் பார்ப்பதைச் சகிக்க முடியாது. அவ னுடைய முகம்? மதுவடிமையிலிருந்து மீளும் ஒருவனுடைய முகத் தைக் கடைசிக் கட்டத்தில் பார்த்திருக்கிறீர்களா? மன்னிக்கவும், அதை நீங்கள் பார்த்திருக்க மாட்டீர்கள். அது அத்தனை அழ கானதல்ல. அத்துடன் வைற் பிரமை பிடித்துக் போய் ஆவிக ளைக் கண்டு கொண்டிருந்தான். அதுவும் அழகானதல்ல. அவர் களுக்கு மதுவடிமைப் பிரச்சினை வந்தால் உங்களுக்குத் தெரிந்த நாவல்களில் வருவது போல பாம்புகளைக் காண மாட்டார்கள். அவனுக்கு ஏற்பட்ட பிரச்சினைகளும் அவன் செய்த பிரச்சினைக ளும் அவையும் நல்லவை அல்ல. சாதாரணமானவை விரும்பப் படாத அளவில் திரிபுபடுத்தப்பட்டன. நூற்றுக் கணக்கான மீன் கொத்திப் பறவைகள் அவன் படுத்திருந்த கட்டிலின் பக்கத்திலி ருந்து கீச்சுக் கீச்சென்று கத்திக் கொண்டு எழும்பி பறந்து கொண் டிருந்தன. மென்மையான சிறிய இறகுகள் உள்ள உடல்கள் அவ னுடைய வெறும் மேனியை உரசிக் கொண்டு செல்வதை அவன் உணர்ந்து கொண்டிருந்தான். எங்கிருந்தோ வந்து அவனுக்கடியில் இருந்து கொண்டு சிறகடித்து யன்னல் ஊடாகப் பறந்தன. அது அவனுக்குப் பெரும் பயத்தையும் வேதனையையும் உண்டாக்கி யது. அதை நிறுத்தச் சொல்லி ஆண்டவனைப் பிரார்த்தித்தான். அந்தப் பிரார்த்தனையை ஒருவன் தன் குளிர்ந்த இதயத்தால் தான் கேட்க முடியும்.

றொப்சனைப் பார்ப்பதற்கும் அலங்கோலமாக இருந்தது, நல்லறி வுள்ள ஒரு மனிதன் பயத்தால் நிலைகுலைந்து இருப்பதை நான் வெறுக்கிறேன். மோசமாகப் பயந்து போயிருப்பதை வெறுக்கி றேன். கடைசியில் அவன் பிரம்பு நாற்காலியில் இருந்து குழந்தை யைப் போல அழுதான். நல்லது, அது அவனுக்கு சற்று ஆறுத லாக இருந்தது. ஆனால் அவனைத் தனியாக வைற்றுடன் விடத் தகுதியற்றிருந்தான். வைற்றை வேலி அடைப்புக்குள் கொண்டு போக வேண்டியிருந்தது. அவனை நான் இருந்த மேசைக்குப் பக்கத்தில் ஒரு கம்பத்தில் சணல் கயிற்றால் கட்டி வைத்தேன். வேறு எதையும் செய்வதற்கில்லை. றொப்சன் மிகவும் பிந்தி வந்து எனக்குப் பக்கத்தில் இருந்து இரவு முழுவதும் வைற்றைப் பார்த்துக் கொண்டிருந்தான். பயந்து போய் ஆனால் ஆர்வத்துடன் இருந்தான்.

காட்டிலிருந்து வெட்டி வந்த கரடு முரடான குற்றிகளைக் கொண்டு மணல் தரையில் அடைத்த பெரிய வேலி அடைப்பு ஒன்றை உங்களால் கற்பனை பண்ணிப் பார்க்க முடிகிறதா? தேங்காய் எண்ணையில் பற்ற வைத்த சில பந்தங்களால் வெளிச் சம் ஊட்டப்பட்டிருந்தது. அங்கே ஒரு வெள்ளையன் ஒரு கம்பத் தில் கட்ட வைக்கப்பட்டிருந்தான். அவன் அந்த சிமிட்டும் ஒளி யில் பிதற்றிக் கொண்டும் நெளிந்து கொண்டும் இருந்தான். றொப் சனின் பயம் கலந்த வெள்ளை முகத்தையும் அது காட்டியது. சிப்பிகளை ஏற்றுக் கொள்ளும் நேரத்துக்கும் அரபியருக்கும் சோமாலியர்களுக்கும் தமிழர்களுக்கும் சோனகர்களுக்கும் இடையே ஏற்படும் பிரச்சினைகளை தீர்த்து வைக்கும் நேரத்திற் கும் இடையில் நான் மேசையில் இருந்து என்னுடைய அறிக்கை ஒன்றையும் எழுதினேன். (அதை அடுத்த நாள் காலையில் அஞ்சலோட்டக்காரனிடம் கொடுத்து அனுப்ப வேண்டும்) அதில் நகரத்திலுள்ள ஆங்கிலப் பாடசாலைகளில் பிரெஞ் மொழியை அறிமுகப்படுத்தலாம் என்ற ஆலோசனையை எழுதியிருந்தேன். அது நல்லதொரு அறிக்கை அல்ல. வைற் இரவு பத்து மணிக் கும் காலை நாலு மணிக்கும் இடையே உள்ள நேரத்தில் தன் முழு வாழ்க்கை வரலாற்றையும் எங்களுக்குச் சொல்லியிருந்தான். அவன் எதையும் கற்பனைக்கு விடவில்லை. ஒரு சமய குரு அந்தளவு நேரத்துக்குள் தான் செய்த பாவங்கள் எல்லாவற்றையும் சொல்லியிருப்பார். ஓ, மன்னியுங்கள். அவனைப் போன்றவர்கள் செய்த, செய்யக் கூடிய கதைகளை எந்த அதிர்ச்சியும் அடை யாமல் கேட்குமளவுக்கு நான் அங்கே அத்தனை காலம் வாழ்ந்தி ருக்கிறேன். குறிப்பாக, 'சீரழிந்துபோன,' வெள்ளையர்களைப் பற்றி. வைற்றின் வாழ்க்கைக் கதையை அவன் சொன்னபோது என்னால் அதைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. பதினைந்து ஆண்டுகள் இந்தியாவின் மேலிருந்து கீழ்வரை களவுகள் செய்தோ மோசடிகள் செய்தோ வாழ்ந்திருக்கிறான். அவை மிக மோசமானவை. காரணம், அவன் சென்ற எல்லா இடங்களிலும் அவனுடைய சொந்த வெள்ளைக்காரர்களையே மோசடி செய்யா மலோ ஏமாற்றாமலோ அவன் இருந்ததில்லை. சுதேசிகளிடம் அவன் பல மோசடிகளைச் செய்து விட்டு தப்பி வந்தவையே அவற்றிலும் பார்க்க மிக அதிகம். உள்ளூர் ஆண்களிடமும் பெண்களிடமும், 'நாகரிகம்' அற்றவர்களிடம், காட்டுக் கிராமங்க ளில், மலைகளில் கூட மோசடி செய்திருக்கிறான். ஆண்டவனே! அவை இரக்கமற்றவை, நாகரிமற்றவை, மோசமானவை, கொடூர மானவை. நான் முன்னர் சொன்னது போல, அவன் வாய்க்குள் உள்ள பற்கள் கூரானவை, இடைவெளிகள் உள்ளவை.

அவனுடைய குற்றவுணர்வு தான் மிகப் பயங்கரமானது. அங்கே கம்பத்தில் கட்டப்பட்டு, மினுங்கும் விளக்கு ஒளியில் வேதனை யில் நெளிந்து கொண்டிருந்தான். பயம், கிடைக்கப் போகிற தண்டனை, மரணம், பயங்கரங்கள், உண்மையான பயங்கரங்கள், பைத்தியம் வரப் போகிறதென்ற போலிப் பயங்கரம் என்று எல்லாவற்றுக்குமான குற்றவுணர்வு அது.

வேலி அடைப்புக்குள்ளிருந்து அடிக்கடி அவன் இடும் கூக்குரல் கள், சபித்தல்கள், பயம் பற்றிய கரகரப்பான குரலில் முணு முணுப்புக்கள் தவிர வேறெந்த சத்தமும் அன்றிரவு கேட்க வில்லை. விசாலமான ஆகாயத்தின் அமைதியில் நாங்கள் மட்டும் தனியே இருப்பது போலத் தோன்றியது. இடைக்கிடையே கடற் கரையில் மோதும் சிற்றலைகள். கடலிலிருந்து வரும் குழப்பமான முணுமுணுப்பு. சிலவேளை ஒரு படகிலிருந்து மற்றப் படகில் இருப்பவரை அழைக்கும் ஓலக்குரல்கள். 'அப்துல்லா! அப் துல்லா!' அதன் பின் நான் கடற்கரைக்குச் செல்வேன். அங்கே படகுகள் கிடக்கும். பத்து, பதினைந்து, இருபது என்று. அவை கரையிலிருந்து வருவனவாக இருக்கலாம். நிலவில் சோகமாக, புதிராக. பெரிய வட்டமான துடுப்புகள் விசிறும் சிறிய அலைக ளில் மிதந்து கொண்டு. மெதுவாக அசையும் துடுப்புக்கள் தவிர, அங்கே இறந்தவர்கள் மட்டுமே கிடக்கிறார்கள் என்று நினைப் பார்கள். படகுக்குள் கரையொதுங்கும்வரை எந்த அசைவுமே இருக்காது. அதன் பின் இருண்ட நிழல்கள். அவையும் படகுக ளில் இறந்தவர்கள் போல கிடப்பவர்களும் உயிர் பெற்று எழு வார்கள். பின் சடுதியான கரகரப்பான குரல்களின் இரைச்சல் சத்தம், ஓலங்கள், அழைப்புகள், வாய்ச்சண்டைகள். கை அசைவு களுடன், அங்குமிங்கும் ஓடிக் கொண்டிருக்கும் நிழல்களுடன் படகுகள் ஒன்றாகத் திரண்டு வரும். சிப்பிச் சாக்குகளின் பாரத் தால் தள்ளாடிக் கொண்டிருக்கும் படகுகளின் ஓரத்திலிருந்து கட

லுக்குள் ஒவ்வொரு சாக்காகப் போடுவார்கள். அவற்றால் கடலும் கரையும் நிரம்பும். அராபியர்கள், நீக்ரோக்கள், தமிழர்கள், சாக்குகளின் பாரத்தால் கூனிக் கொண்டு கடலுக்குள்ளிருந்து நீர் வழிந்தோட கரையேறுவார்கள். வேலி அடைப்புக்குள் இரைந்து கொண்டு வந்து சிப்பி மூட்டைகளை பெரும் சத்ததுடன் கீழே போடுவார்கள். அவ்விடம் முழுவதும் தள்ளாடிக் கொண்டிருக்கும் உருவங்களாக இருக்கும். வித்தியாசம் வித்தியாசமான மொழிகளில் அழைத்துக் கொண்டிருக்கும் மனிதர்கள். கடலின் மணம்.

எல்லாவற்றிலும் மேலாக கம்பத்தில் கட்டப்பட்டு வேதனையில் நெளிந்து கொண்டு கிடந்த பைத்தியக்காரனின் ஓலங்களும் பிரார்த்தனைகளும். வந்தவர்கள் அவனைச் சுற்றி வர நின்று உற்றுப் பார்த்துக் கொண்டு நிற்பார்கள். பந்தங்களின் வெளிச்சம் கடலிலிருந்து வெளியேறிய நீர் வழிய, மினுங்கும் அவர்களின் கருமையான முகங்களில் படும். அப்போது அவர்கள் அமைதியாக, உணர்ச்சிகளற்று, கடுமையாகத் தோன்றுவது போலக் காணப்படுவார்கள். வெளிச்சம் கண்களின் வளையங்களிலும் மின்னும். அவனை மதிப்பிட்டார்கள், அளவிட்டார்கள். அமைதியான பொறுமையான அவர்களின் கண்கள் நடைபெறும் விஷயங்களை ஆச்சரியமில்லாமல் கவனித்தன. ஏறக்குறைய நிர்வாணமாக, குந்தியிருந்த தமிழர்களின் கரிய உருவங்கள் அமைதியாகவும் அதிக கவனமில்லாமலும் அவனைக் கவனித்தன. அழுக்கான நீண்ட இரவுடையில், கரும் தாடியுடன் இருந்த அரபியர்கள் தமது அடித்தொண்டைக் குரல்களில் அவனைப் பற்றி ஆர்வத்துடன் விவாதித்தார்கள். ஆறடி ஆறங்குல மிகப் பெரிய நீக்ரோ ஒருத்தன் அக்கூட்டத்திற்கு மேலாகத் தோன்றினான். சாக்குகளையும் நீண்ட தொரு அங்கியையும் உடையாக உடுத்திருந்தான். அவன் முதுகில் பத்து கோப்பிப் பானைகள் தொங்கின. கொக்கோ விதைக்குள் ஓட்டிய இரும்பு குழாயைக் கையில் வைத்துக் கொண்டு மர்மச் சிரிப்புடன் அவன் நின்று கொண்டிருந்தான்.

அவர்கள் உண்மையான மனிதர்கள் அல்ல என்றும், நரகத்தின் பிசாசுகள் என்றும் தன்னைத் துன்புறுத்துவதற்காக அனுப்பப்பட்டவர்கள் என்று வைற் எண்ணினான். அவர்களைச் சபித்தான். அவர்களைப் பார்த்து குசுகுசுத்தான். கோபத்துடன் பார்த்தான். சாகிப்புக்குச் சுகமில்லை என்றும், வெப்பம் அவனுக்கு ஒத்து வர வில்லை என்றும் அவர்களுக்கு விளங்கப்படுத்த வேண்டியிருந்தது. அவர்களை அவ்விடத்திலிருந்து போகவும் சொன்னேன். அவர்கள் அதைப் புரிந்து கொண்டு, சலாம் சொல்லி விட்டு மெதுவாக கண்ணியத்துடன் விலகிச் சென்றார்கள்.

இரவில் எத்தனை தரம் அப்படி நடக்கவில்லை என்று எனக்குத் தெரியாது. ஆனால் காலையில் வைற் மிகவும் பலவீனமடையத் தொடங்கினான். தொடர்ந்து அனுங்கிக் கொண்டிருந்தான். வலியினால் வருந்தினான். கிழக்கில் சாம்பல் நிறம் தோன்றியபோது சடுதியாக வலிப்பினால் துடித்தான். அந்தப் பயங்கரத்தைப் பார்க்கச் சகிக்கவில்லை. ஒரு பெண்ணைக் கொண்டு வரும்படி யாரிடமோ கத்தினான். தொடர்ந்து கத்திக் கொண்டிருந்தபோதே அவனுடைய தலை பின்னால் சரிந்தது. அவன் இறந்து போனான். பயங்கரமான அவசரத்துடன் அவனைக் கட்டியிருந்த கயிற்றை வேகமாக வெட்டினேன். அவன் முகத்தில் தெரிந்த பயங்கரத்தை மூடினேன். றொப்சன் தன் கதிரையில் இருந்து தேம்பிக் கொண்டிருந்தான். கைகள் முகத்தை தாங்கி இருந்தன.

அந்தக் கணம் கடற்கரை ஓரத்தில் நான் தேவைப்படுகிறேன் என்று எனக்கொரு தகவல் சொல்லப்பட்டது. நான் அங்கே விரைந்தேன். கிழக்கிலிருந்து வந்த மங்கலான வெளிச்சத்தில் கடல் குளிராகவும் சாம்பல் நிறத்துடனும் இருப்பது போலத் தோன்றியது. குளிர்ந்த சிறு காற்று தண்ணீரின் மேற்பரப்பை சற்று அலைத்துக் கொண்டிருந்தது. வானத்திற்கு எதிராக கருமையாக ஒற்றைப் படகு ஒன்று கரையோரத்தில் மெதுவாக மேலும் கீழும் ஆடிக் கொண்டு நின்றது. படகில் அரபியன் ஒருத்தனின் இறந்த உடலை வைத்திருந்தார்கள். குளி ஓடியபோது சடுதியாக இறந்துள்ளான். சடலத்தை கரைக்குக் கொண்டு வருவதற்கு என்னுடைய அனுமதி தேவைப்பட்டது. நான்கு பேர் படகை நோக்கி கடலுக்குள் இறங்கி நடந்து சென்றார்கள். சடலத்தை வெளியே தூக்கி தோளில் சுமந்து கொண்டு திரும்பவும் நீருள் மெதுவாக நடந்து வந்தார்கள். இறந்தவனின் கால் பாதங்கள் வெளியே நீட்டிக் கொண்டிருந்தன. தூக்கிச் சென்றவர்களின் தோள்களின் மேலாக கால் விரல்கள் மேல் நோக்கி மிகவும் விறைத்துப் போய்க் காணப்பட்டன. பின் உடல் மணலில் வைக்கப்பட்டது. தாடி வைத்திருந்த இறந்தவன் மங்கலமான ஒளியில் மிகவும் அமைதியாகவும் மிகவும் கம்பீரமாகவும் தோன்றினான். அவனுடைய சகோதரனான இன்னொரு அரபியன் இறந்தவனின் தலைமாட்டிற்கு அருகில் மணலில் குந்தியிருந்தான். அவன் தன்னைச் சாக்கால் மூடியிருந்தான். அவன் தேம்புவது எனக்குக் கேட்டது. அதிகாலையில் கடற்கரை மிகவும் அமைதியாக மிகவும் குளிராக அசையாமல் இருந்தது.

அப்போது உயாந்ததோர் உருவம் முன்னால் வந்தது. அவன் தான் அராபிய சேய்க். படகின் தலைவன். தேம்பிக் கொண்டிருந்தவனின் தலையில் கைவைத்து அமைதியாக, நயமாக, கருணையுடன் அவனுடன் பேசினான். அரபு மொழி எனக்குப் புரியவில்லை. ஆனால் அவன் என்ன சொல்கிறான் என்பது எனக்குப் புரிந்தது. இறந்தவன் வாழ்ந்தான், வேலை செய்தான், இறந்து போனான். வேலை செய்யும்போதே துன்பப்படாமல் இறந்து போனான். அப்படி இறப்பதையே ஆண்கள் விரும்ப வேண்டும். அவன் ஒரு மகனை விட்டுச் சென்றிருக்கிறான். அப்படி பேச்சு அமைதியாக, நயமாகச் சென்று கொண்டிருந்தது. அவனுடைய பேச்சில் **கல்லாஸ்** என்ற வார்த்தையை தொடர்ந்து கேட்டுக் கொண்டிருந்தேன். அதன் அர்த்தம் எல்லாம் முடிந்து விட்டது என்பதே. சாம்பல் நிற வானத்தின் பின்னணியில் உருவங்களைப் பார்த்துக் கொண்டிருந்தேன். இறந்தவனின் நீண்ட மெலிந்த உருவரைவு. அதில் கால் விரல்கள் வெளியே நீட்டிக் கொண்டிருந்தன. வளையாமல் நேராக. பின் குனிந்து வளைந்து அழுது கொண்டிருந்தவனின் உருவம். பக்கத்தில் உயர்ந்த நேரான சேய்க். அசையாமல், சோகமாக, புதிராக. சாம்பல் நிற வானத்தின் கீழ், சாம்பல் நிற கடலின் ஒரு பகுதியாக அவர்களின் தோற்றம்.

சடுதியாக ஆகாயத்தில் அதிகாலை சிகப்பாக வெளித் தோன்றியது. சேய்க் நின்று, அந்த நான்கு ஆண்களுக்கும் கைச் சைகையால் எதையோ சொன்னான். அவர்கள் இறந்தவனை தங்கள் தோள்களில் தூக்கினார்கள். குளிர் காற்றால் அலைக்கழித்த கடற்கரை ஓரமாக அவர்கள் அவனைத் தூரக் கொண்டு சென்றார்கள். அவர்களின் பக்கத்தில் சேய்க் நடந்து சென்று கொண்டிருந்தான். அவன் கை ஒன்றை இறந்தவனின் சகோதரனின் தோளில் கனிவுடன் போட்டிருந்தான். அவர்கள் அமைதியாகவும், கண்ணியமாகவும் போய்க் கொண்டிருந்ததை நான் பார்த்துக் கொண்டிருந்தேன். அவர்களின் தோள்களில் இறந்தவனின் கால் விரல்கள் நேராக, விறைத்துப் போய் நீட்டிக் கொண்டிருந்தன.

அதன் பின் நானும் அவ்விடத்திலிருந்து விலகிச் சென்றேன், வைற்றின் சவ அடக்கத்தை ஒழுங்கு செய்வதற்காக. அதை உடனடியாகச் செய்ய வேண்டியிருந்தது.

கைபிடிக்கும் அறை அமைதியாக இருந்தது. நான் சுற்றிவரப் பார்த்தேன். கேணல் வாயைத் திறந்து கொண்டு தூங்கி விட்டிருந்தார். வியாபாரி சலிப்படைந்து காணப்பட்டார். மதகுரு வெளிப்படையாகவே எரிச்சலடைந்திருந்தார்.

'நேரமாகி விட்டது என்று நினைக்கிறேன்,' என்றார் அவர். 'இப்போ ஒரு மணிக்கு மேலாகி விட்டது.' என்று சொல்லிக் கொண்டு எழுந்தார். 'சாதாரணமான ஒரு விசயத்தை மிகவும் அசாதாரணமான சூழலுக்குக் கொண்டு சென்று விட்டாய் என்று நீ நினைக்க வில்லையா?'

ஆணையாளர் நெருப்பில் எஞ்சியிருந்த சில சிவந்த நிலக்கரியைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

'இன்னொரு தமிழ் பழமொழி இருக்கிறது,' என்றார் அவர்: 'பூனை பானைக்குள் தலையை ஓட்டிக் கொண்டு உலகமே இருண்டு விட்டது என்று சொன்னதாம்,'

mahalingam.k@thaiveedu.com

OUR FREE SERVICES / WHY? REALTOR KATHIR

For Home Owners

- ✓ Home Staging
- ✓ Newspaper & Flyer Advertisement
- ✓ High Resolution Picture & Virtual Tour
- ✓ Four Page Colour Feature Sheets
- ✓ Weekends Open House
- ✓ Guaranteed Weekly Feedback
- ✓ Social Media Marketing
- ✓ Full MLS Listing Service
- ✓ Sale Sign & Direction Signs
- ✓ Market Evaluation
- ✓ Radio & Web Tool Advertisement
- ✓ Professional & Friendly Service

LOW Commission

- Over 10 yrs Experience Realtor
- Multi Award Winner Since 2006
- Excellent Negotiation Skill
- Quick Sale with Low Commission
- Professional & Friendly Services
- Home Sellers' Programme
- Home Buyers' Programme
- Mortgage Brokers, Lawyers, Inspector Team.
- Getting Low Rate Mortgage

SELL WITH KATHIR
& GET MAX. PRICE

Buy with Kathir & Get Dream Home

HomeLife/Future Realty Inc.,
Brokerage *Independently Owned and Operated
O: (905)201-9977 F: (905)201-9229
205-7 Eastvale Dr., Markham,Ont, L3S 4N8

Kathir Kathirgamanathan B.A,
Real Estate Broker
Dir: 416-230-6462

அரிய சந்தர்ப்பத்தைத் தவற விடாதீர்கள்!

முற்றிலும் இலவசமான சேவை!

12வருடத்திற்கு மேற்பட்ட
உங்கள் Gas Furnace இற்கான CO அளவீடு
வீட்டிற்கு வந்து பரிசோதிக்கப்படும்.

AATEK
HEATING & COOLING

$2100 Rebate Available Now
call us 416-414-2280

- FREE Inspection in GTA
- Over 10 yrs in Business Experience
- Flat Rate Pricing
- Parts and Labour guarantee
- Guaranteed Repairs
- Professional Service
- Fully Insured

10 வருடங்களுக்கு மேலாக ரொரண்டோவின்
முன்னணி நிறுவனங்களில் பணியாற்றிய
அனுபவத்துடன்

Gas Furnaces, Air Conditioners,
Thankless Water Heater, Gas line install

Licensed Technician | ELENGO THIYAGARAJAH

ALL MAJOR APPLIANCES E : aatekcanada@gmail.com

We Are Specialists in customs homes Ductwork System

We Are Professional trouble shooters for all major gas appliances

416.414.2280

பாசக் குடித்தனம்

- நெடுந்தீவு மகேஷ்

அவர்கள் தனிக்குடித்தனம் வந்து, இப்பொழுது மாதங்கள் பலவாகிவிட்டன. மாமன் மாமி மைத்துனரோடு சண்டையிட்டு மனைவியை இழுத்துக்கொண்டு இந்த வாடகை வீட்டுக்கு வந்த குமாரசாமியின் மனதில் ஏனோ ஒரு தனிமை உணர்வு.

எனினும், அவனிடம் தொற்றிக் கொண்ட கௌரவம் அவனைத் தனிமையிற் கட்டிப் போட்டு இரசித்தது. இதுநாள்வரை அவனது மனைவி குடும்பத்தினரோடு அவன் வைத்திருந்த அன்பையும் உறவையும் எப்படி ஒரு நொடிக்குள்ளாகவே உதிர்த்த வார்த்தை உதறி எறிந்தது? அன்பு செய்த வீட்டை விட்டு மனைவி, பெட்டி படுக்கைகளோடு எவ்வாறு தனிக்குடித்தனம் வர நேர்ந்தது?

இப்பொழுது அயலில் உறவென்று யாரையும் உதவிக்கு அழைக்க இயலாத தனிமை!

திருமணத்தின் பின்னும் அவன் தாய்வீட்டோடு குலவிக் களித்த நாட்கள் காலத்தால் கடந்து போய்க் கொண்டிருந்தாலும் பெற்றோருடனான உறவு நினைவில் ஒட்டிக் கொண்டே இருந்தது.

இங்கே திருமணம் செய்தபின்னான நாள்களில் அவனது மனைவி வீட்டாரோடு இருந்த நெருக்கம் ஏனோ படிப்படியாகப் பல்வேறு சிறுசிறு சம்பவங்களால் நூலிழையாக மெலிந்தது.

நல்லவைகளை விருப்போடு ஏற்றுக் கொள்ளும் மனம். நல்லவை தோன்ற வழங்கப்படும் அறிவுரைகளை ஏனோ ஏற்றுக் கொள்ள மறுக்கிறது.

ஒரு சில நாள்களேனும் மது அருந்தாமல் இருக்க மறக்காத மனம், அதனையே தனது வாழ்நாளின் பெருமகிழ்வாக்கிக் கொண்டது. அதனால் குடும்பத்தில் விளையும் சண்டை சச்சரவுகளையும் அவமானங்களையும் அவனது இந்த மதுமயக்கம் சிந்திக்கத் தூண்டியதில்லை.

எங்கேயும் எவரிடமிருந்தும் எத்தனை நன்மைகளைப் பெற்றாலும் அவரிடமிருந்து வீசப்படும் அவமானப்படுத்தும் ஒரு விநாடி வார்த்தைகளை ஏனோ தாங்கிக் கொள்ள முடிவதில்லை. அத்தகைய ஒரு வார்த்தையே மனைவியையும் இழுத்துக் கொண்டு குமாரசாமி, மாமன் வீட்டிலிருந்து புயலெனப் புறப்பட்டு வெளியேறக் காரணமாகிவிட்டது.

மது அருந்துதல் அவமானமா? மது அருந்தி மயங்கிய நிலையில்

மனைவியோடும் மாமன், மாமி, மைத்துனரோடு சண்டையிட்டுத் தனது செயலுக்கு நியாயம் கற்பித்தல் அவமானமா?

எது அவமானம்? என்று புலப்படவில்லை.

மாமன் மருமகனைக் 'குடிகாரன்' என்று கோபத்தோடு ஏசியது அவமானம் என்று குமுறிக் கொண்டு வீட்டை விட்டு வெளியேறியது நியாயமா?

'போன புத்தியை ஆனை கட்டி இழுத்தாலும் அது திரும்பப் போவதில்லை.' குமாரசாமியார் இப்பொழுது வேதனைப்பட்டார். குமாரசாமியரின் மனைவி தனது தாய், தந்தையரைப் பார்க்க விரும்பி அனுமதி கேட்ட போதெல்லாம் அவள் தாய்வீடு திரும்புவது தனக்கு அவமானம் எனக் கருதி அவளைத் தடுத்தும் வந்தார்

குடும்பம் ஒன்றுபட்டிருந்தபோது தேவைகளுக்காக அங்கிங்கென அலையவேண்டியதாய் இருந்ததில்லை. மனைவியை இப்பொழுது தனியாக விட்டுவிட்டு வேலையென்று சென்று திரும்பினாலும் அவளை ஆதரவோடு பார்க்கவும் ஒரு சிறிதளவேனும் உதவவும் எவரும் அவர்களின் அருகிலில்லை.

இப்பொழுது பெற்றோரைப் பிரிந்து தனித்திருப்பதால் தனது மனைவி தாங்கிக் கொள்ளும் வேதனைகளுக்கோ எல்லையில்லை. போகப் போக அது அவருக்குப் புரிந்தது.
மனதை உறுத்தும் துயரங்களைச் சொல்லி அழவும் அவரருகே ஒருவருமே இல்லை என்றானபோது... மீண்டும் மனைவியின் வீட்டுக்கே போய் விடலாமா? குமாரசாமி சிந்தித்தார். அதற்கும் அவரது கௌரவம் தடைபோட்டிருந்தது.

குமாரசாமியார் கௌரவம் கொண்டு தமக்கென எடுத்து வந்த பெட்டி படுக்கைகளும் பொன் பொருட்களும் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து போனது. இந்த நிலையில் குடிப்பழக்கத்தையும் மெல்ல மெல்லக் குறைத்துக் கொண்டார்.

தமக்கானது எனக் கூட்டிவந்த பசுமாடு ஒன்றுதான் அவருடையதென முழுமையாய் எஞ்சி நின்றது. இன்று அதனையும் இருபதாயிரத்திற்கு விற்றுவிட்ட நிலையில், காசை வைத்துக் கொண்டு... இதுவும் தொலைந்து விட்டால் என்ன செய்வதென்றே குழம்பிக் கிடந்தார்.

காசு ஒன்றுமே செய்யாது. காசை வைத்திருப்பவன்தான் சிந்தித்துச் செயற்பட வேண்டும்.

குமாரசாமியார் பகல் முழுவதும் படுக்கையில் சாய்ந்து கிடந்தாலும் தூக்கம் வருவதாகத் தெரியவில்லை. விழித்தபடியே எதையெதையெல்லாமோ சிந்தித்தார்.

தூக்கத்தை வரவழைக்க அவர் மிகவும் சிரமப்பட்டார்.

கண் மயங்கும் பொழுதில் திடீரென, வீட்டுப் படலையை ஏதோ தள்ளும் முட்டும் அரவம் கேட்டது.

முப்பது கிலோமீற்றர் தூரத்தில் வதியும் பணக்காரரான பரமசாமிக்கென விற்ற அவர் வளர்த்த பசுமாடு, குமாரசாமியரின் வீட்டு வாசலில் கதறும் குரல் திடீரெனக் காதில் உதைத்தது.

காலையில் விற்றது மாலைக்குள்ளாகவே குமாரசாமியரின் வீட்டுக்குத் திரும்பிவிட்டது.

குமாரசாமிக்குப் பணம் தந்து பரமசாமி தனது மாட்டுத் தொழுவத்தில் கட்டிப் போட்ட அந்தப் பசுமாடு, அதனைக் கட்டி இறுக்கிய தடித்த கயிறையும் அறுத்துக் கொண்டு, பரமசாமியருக்கும் சொல்லிக் கொள்ளாமல் குமாரசாமியரின் வீட்டு வாசலில் இப்பொழுது கதறுகிறது.

குமாரசாமி எட்டிப் பார்த்தார். படலையை நோக்கி நடந்தார்.

அவரை கண்ட பசு அவரையும் அசட்டை செய்து உச்ச ஸ்தாயியில் மீண்டும் மீண்டும் உரத்துக் கதறியது.

குமாரசாமியிலும் மேலான அன்பை அவரது மனைவி மீதிலேயே அந்தப் பசுமாடு வைத்திருந்தது. அது அவருக்குத் தெரியும்.

முச்சிரைக்கக் கதறும் பசுவைப் பார்த்ததும் ஒரு மிருகம் கொண்டிருக்கும் பாசஉணர்வின் ஒரு சிறு துளியேனும் தன்னிடம் இல்லையே என்ற வெட்கம் அவரைப் பிய்த்துத் தின்றது.

மானம், அவமானம் இவைகளுக்கும் அப்பால் பாசம், நேசம், அன்பு இவைகளால் வடிவமைக்கப்படும் வாழ்க்கையில் எத்தனை அழகு!

குமாரசாமியார் படலையைத் திறந்ததும், பசுவின்மீது அவர் வைத்த பார்வையை அசட்டை செய்து, அவரது மனைவியை நாடி ஓடும் பசுவின் செய்கை அவருக்குப் பாசத்தின் மேன்மையை உணர்த்தியது.

ஊமையாகிப்போன வார்த்தைகளோடு உறங்கிகக்கிடந்த மனம் விழித்துக் கொண்டது.

பசுமாட்டை விற்றுச் வந்த காசைக் கையிலெடுத்துக் கொண்டு பரமசாமியாரின் வீடு நோக்கி விரைந்தார்.

எண்ணத்தில் எழுந்து வருத்திய ஏதோ ஓர் இனம் புரியாத அன்பைச் சிதைக்கும் குறைபாடு, அவரிடத்தில் இருந்து நீங்கி விட்டதான நிம்மதி!

சென்ற வேகத்திலேயே வீட்டுக்குத் திரும்பினார்.

மனம் ஆறுதல் அடைந்தது.

ஆயிரம் நல்ல வார்த்தைகளால் அரவணைத்திருந்த அன்பு,

ஒரு நொடிப் பொழுதில் தவறுகளை உணர்த்தி நல்லதைச் செய்யத் தூண்டும் ஒரு கடின வார்த்தையால் அன்பு அழிந்து போவதில்லை. புத்திமதிகளை ஏற்றுக்கொள்பவனே திருந்திவாழும் திடவுறுதியைப் பெறுவான்

குமாரசாமியார் மனைவியையும் அழைத்துக்கொண்டு அன்பு வாழும் மாமனாரின் வீட்டுக்கு நடக்கத் தொடங்கினார்.

mahesu@thaiveedu.com

தாய்வீடு இதழ் பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம். விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.

E-mail: info@thaiveedu.com
Fax: 1416-849-0594 Tel: 1416-657-6406

அடுத்தமுறை...

- குமார் புனிதவேல் -

அந்த டொயோட்டா வாகனம் 401 கடுகதித்தெருவில் வேகக் கட்டுப்பாட்டையும் மிஞ்சி ஓடிக் கொண்டிருந்தது. சுந்தரத்தின் கவனமெல்லாம் லண்டனில் இருந்து திரும்பும் மனைவி சாந்தியின் விமானம் எட்டுமணிக்கு வருவதற்குள்முன் விமானநிலையத்தை அடையவேண்டும் என்பதிலே இருந்தது.

திருமணமாகிய கடைசி பன்னிரண்டு வருடங்களில் இதுவே முதல் முறை இருவரும் இவ்வளவு நாட்கள் பிரிந்து இருந்தது. சாந்தி தன் மூத்த அக்காவின் மகள் மிதிலாவின் பூப்புனிதவிழாவிற்கு சென்றுவிட்டு திரும்புகிறாள். பள்ளிக்கூட நாட்கள் என்பதால் சுந்தரத்திற்கும் இரு பிள்ளைகளுக்கும் செல்ல முடியவில்லை.

சுந்தரம் வேலையால் வந்த உடனே பிள்ளைகளை ஏற்றிக் கொண்டு ஏஜக்ஸ் இல் இருந்து ஐந்து மணிக்கே புறப்பட்டு விட்டார். போகும் வழியில் இரவுச் சாப்பாட்டிற்கு உணவகத்தில் உணவு பெறுவதில்தான் நேரதாமதமானது. வேலைமுடிந்து வந்த வர்கள் இரவுச்சாப்பாட்டை உணவகத்தில் வாங்கிச் செல்ல நெடிய வரிசையில் நின்று கொண்டிருந்ததால் நேரம் சென்று விட்டது.

விமானநிலைய வாகனத்தரிப்பிடத்தில் தனது காரை நிறுத்திவிட்டு பிள்ளைகளோடு விமானநிலையத்துக்குள் புகவும் கைத்தொலை பேசி ஒலிக்கவும் சரியாக இருந்தது. தனது விமானம் இறங்கி விட்டதை அறிவிக்க சாந்தி அழைத்திருந்தாள்.

தொலைபேசி அழைப்பிற்கும் வெளியில் வருவதற்கும் குறைந்தது அரைமணித்தியாலமாவது ஆகும் என்பதால் அங்கிருந்த டிம் ஹோட்டன்ஸ் கடையில் தனக்கு ஒரு கோப்பியும் பிள்ளைகளுக்கு 'ஐஸ் கப்பசீனோ'வும் வாங்கி அங்கு இருந்து சுவைத்தார்கள்.

சாந்தி வந்ததும் காரில் ஏறி வீட்டிற்கு பயணமாகிறார்கள். இப்போ கடுகதிப்பாதையில் வாகன நெருக்கடி இல்லை, ஆனால் சுந்தரத்தின் கார் ஏஜக்ஸ் நோக்கி கடுகதிப்பாதையில் மெதுவாக சென்று கொண்டிருந்தது. சுந்தரத்தின் மகன் தனுஷ், 'அப்பா வரேக்க அந்தளவு நெரிசிலிலை வேகமாக கார் செலுத்தினீர்கள். இப்ப என்ன மெதுவாக கார் ஒட்டுகிறீர்கள?' என்றான். உடனே மகள் ராதா 'அம்மா பக்கத்தில இருக்கிறதும் பாதையில டிரஃபிக் பொலீஸ் இருப்பதும் ஒன்றுதான்' என்றாள். காருக்குள் ஒரே கும் மாளம்தான்.

வீட்டு வளவுக்குள் வந்ததும் சுந்தரம் காரில் இருந்தபடி கராச் கதவை திறந்து உள்ளே நிறுத்திவிட்டு உட்கதவால் வீட்டுக் குள்ளே செல்ல முற்படுகையில் அவர்களது வளர்ப்பு நாய் 'Buddy' ஓடிவந்து சாந்தி மேல் பாய்ந்தது, நக்கியது, சுற்றிச் சுழன்றது. அதற்கு சாந்தியைக் கண்டதும் பெரிய மகிழ்ச்சி.

கனடாச் செய்திகளையும் லண்டன் செய்திகளையும் மாறிமாறிப் பரிமாறிக் கொண்டு உணவகத்திலிருந்து கொண்டுவந்த சாப் பாட்டை சாப்பிட்டு முடித்தார்கள். இரவு பத்துமணிக்கு பிள்ளை கள் தங்களது அறைக்கு படுக்கச் சென்றபின் சுந்தரமும் சாந்தி யும் தங்களது அறைக்குச் சென்று கடந்த நாட்களை இரைமீட்டுக் கொண்டிருந்தார்கள்.

ஆறுதலாய் கதைத்துக் கொண்டிருந்த சுந்தரத்திற்கு நெஞ்சில் இடதுபக்கத்தில் கொஞ்சம் நோவது போல் இருந்தது. சாந்தியிடம் தனது நோவை சொன்னதும் சாந்தி 'கொஞ்சம் சுடுதண்ணீர் கொண்டு வாறன். குடிச்சால் லேசாக இருக்கும்' என்று சொன்ன படி அறைக்கு வெளியே சென்றாள்.

சுடுநீரைக் குடித்தாலும் சுந்தரத்திற்கு வலி குறைவதாய் இல்லை. கொஞ்சம் கூடுவது போல் இருந்தது. 'ஏதோ ஒருமாதிரி நோகு தப்பா' என்றார் சுந்தரம்.

உடனே சாந்தி 'இருங்கள் மருந்தலுமாரியில் Tigerbalm, Vintogen இருக்கிறது. கொண்டு வருகிறேன்' என்று எழுந்து ஓடினாள். சுந்த ரத்திற்கு மூச்சடைப்பது போல் இருந்தது. சாந்தி திரும்பி வந்த போது சுந்தரம் மூச்சுப்பேச்சு இல்லாமல் படுத்திருக்கவே சாந்தி, 'அத்தான் எழும்புங்கோ எழும்புங்கோ' எனக் கத்தவே பிள்ளைகள் தங்கள் அறையிலிருந்து ஓடி வந்தார்கள்.

சுந்தரத்திற்குத் தான் எடையில்லாது, பலூன் போல மிதப்பது போலிருந்தது. அவர் அறையின் சீலிங்கில் இருந்து கீழே பார்த் துக் கொண்டிருந்தார். கட்டிலில் தான் படுத்திருப்பது தெரிந்தது. அங்கு நடப்பது அனைத்தும் படம் பாரப்பது போல் இருந்தது.

'அம்மா artificial respiration கொடுங்கோ' எனக் கத்தினாள் மகள்.

சாந்திக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. சுந்தரத்தின் நெஞ்சை மீண்டும் மீண்டும் அழுத்தினாள். தன் பங்குக்குத் தனுஷ் தொலைபேசியை எடுத்து 911இனை அழைத்தான். அதில் அழைத்தவரிடம் வீட்டில் அப்பா மயங்கி விட்டார் என்பதைத் தெரிவித்து விலாசத்தை எல்லாம் தெளிவாக தனுஷ் சொல்வதை யும் சாந்தியும் மகளும் அவஸ்தைப் படுவதையும் சுந்தரம் பார்க் கின்றார். சுந்தரத்துக்கு பதட்டமோ அல்லது எவ்வித உணர்வு களோ இருக்கவில்லை.

சற்று நேரத்தில், தூக்கத்திலிருந்து விழித்தது போன்ற உணர்வு. இப்போது தான் சீலிங்கில் இல்லை, உடம்புடன் கட்டிலில் படுத் திருப்பதை உணர்ந்தார். மகள் சத்தமாக 'அப்பா எழும்பிட்டார், அப்பா எழும்பிட்டார்' என்று கத்தினாள். சாந்தியும் 'அத்தான், அத்தான்' எனக் குழறினாள்.

நான் எப்படி சீலிங்கிற்கு சென்றேன்? எப்படி விழாமல் பலூன் போல மேலே நின்றேன்? யோசித்த சுந்தரம், தான் உடம்பிலிருந்து புறப்பட்டதை உணர்ந்தார்.

இதுதானா இறப்பு என்பது? அப்படி என்றால் நான் உடம்பிலி ருக்கவில்லையா? என யோசிக்கவும்... நெஞ்சு நோவது போலிருந் தாலும் முன்னையைப்போல் இருக்கவில்லை. சுந்தரத்திற்கோ ஒரே குழப்பமாக இருந்தது. தான் அறைமுகட்டில் இருந்து பார்த்தது எல்லாம் நல்ல ஞாபகமாய் இருந்தது. திரும்பத் திரும்ப யோசித் துப் பார்த்தார். எப்படி அங்கு சென்றார்? எப்படித் திரும்பினார் என்பது ஞாபகமில்லை. இது தான் மரணம் என்றால்... இறைவன் எங்கே?

சாந்தியின் கேள்விக்கும் குழந்தைகளின் கேள்விக்கும் பதில் கூற முடியாது சுந்தரத்திற்கு எல்லாம் குழப்பமாக இருந்தது. வைத்திய உதவியாளர்களுடன் வாகனம் வந்தது. அவர்கள் வருகையுடன் வீட்டில் ஒரே ஆரவாரமாய் இருந்தது. வந்த வைத்தியர் சுந்தரத் திற்கு இதயத்துடிப்பு மிகவும் மெதுவாக இருப்பதாகவும் வைத்தி யசாலைக்கு கூட்டிச் சென்று பரிசோதித்து விட்டு என்ன செய்வது என முடிவெடுக்கலாம் என அவர்கள் கொண்டு வந்த காலில்லாப் படுக்கையில் சுந்தரத்தைத் தூக்கிக் கொண்டு வைத்தியசாலைக்கு புறப்பட்டார்கள்.

அம்புலன்ஸில் ஒருவர் மட்டுமே உடன் செல்லலாம் என்றவுடன் ஆடும், புலியும், புல்லுக்கட்டுடன் ஆற்றைக் கடந்த கதைதான் எல்லாருக்கும் ஞாபகத்துக்கு வந்தது. சாந்தி அம்பியுலன்ஸில் போனால் இரண்டு சிறுபிள்ளைகளை வீட்டில் தனியே விட்டுச் செல்ல முடியாது.

அப்போ சாந்திதான் ஒரு சிறப்பான யோசனை சொன்னாள். தனுஷ் அப்பாவுடன் அம்பியுலன்ஸில் போகட்டும் தானும் மகளும் காரில் அவர்களை பின் தொடர்ந்து செல்வோம் என்று.

அன்று இரவு முழுவதும் வைத்தியசாலையில் தங்க நேரிட்டது, வைத்தியர்கள் அவரது இருதயத்தில் சிறுதடங்கல் உள்ளதாகவும் அதுபற்றி இப்போ ஒன்றும் செய்யத் தேவை இல்லை என்றும் கூறி வீட்டுக்கு அனுப்பிவிட்டார்கள். அடுத்தநாள் வீடு வந்து ஒர எவு வழமைக்குத் திரும்பியபின் சுந்தரம் அறையில் தனியாக படுத்திருந்து கொண்டு பதில் தெரியாத கேள்விக்கு விடை தேனார்.

அன்று இரவு தான் இறந்தேனா அல்லது மயக்கமா? நான் சீலிங் கில் இருந்து கவனித்தது எப்படி? நான் உடம்பை விட்டு வெளி- யேறி மீண்டும் திரும்பினேனா? இவ்வளவிலும் கடவுள் எங்கே?

அடுத்தமுறை உடலை விட்டு வெளியேறினால் இன்னும் கவன- மாக விளக்கம் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று எண்ணுகை யில் சுந்தரத்தின் முகத்தில் ஒரு புன்னகை வந்தது. அடுத்தமுறை வெளியேறு.

kumar.punithavel@thaiveedu.com



பனிவிழும் பனை வனம்

- செல்வம் அருளானந்தம்

‘மத்திய கிழக்கில வேலைவாய்ப்புகளை வாங்கித் தாற கொம்பனி ஏதோ சிக்கலிலை இருக்கு... கொஞ்சம் பொறுக்க வேணும்’ எண்டு எங்கட ஏஜென்சிக்காரர் திரும்பத் திரும்பச் சொல்ல எனக்குச் சந்தேகம்வரத் தொடங்கிட்டுது. காசை வாங்கிப்போட்டு ஏமாத்தப் போறாங்கள் எண்டு மனம் சொல்லத் தொடங்கிட்டுது.

வெளிநாட்டுக்குப் போகாட்டியும் பரவாயில்லை. கட்டின பணத்தை யாவது திரும்பி வாங்கிவிட வேண்டும் எண்டு நினைச்சு அடிக்கடி பருத்தித்துறைக்குப் போனன். சில வேளை சந்திரனும் என்னுடன் வருவார்.

முதலாளி எத்தனையோ பேரைக் வெளிநாட்டக்கு அனுப்பினவர். இப்ப அவருக்கு ஏதோ சிக்கல்தான்... நீ அந்தரப்படாதை, அப்படிச் சரிவராவிட்டால் முழுப்பணத்தை திருப்பி வாங்கலாம் எண்டு சந்திரன் சொன்னார். இப்படி இவர் கனதரம் சொல்லிட்டார்.

சந்திரனைப் புரிஞ்சு கொள்ள முடியயேல்லை. என்னை எனக்கே புரிஞ்சுகொள்ள முடியேல்லை... இதில எங்க மற்றவர்களை விளங்கிக் கொள்ளுறது?

போன தடவையும் பரித்தித்துறைக்கு ஒண்டாய்தான் வந்தனாங்கள். யன்னல் கரையோடை நான் இருந்தனான். பக்கதிலை சந்திரன் இருந்தார். நீர்வேலியிலை ஆக்கள ஏத்துறத்துக்காக பஸ் நிண்டுது. சந்திரன் என்னைத் தாண்டி யன்னலுக்காலை தலையை வெளியிலை நீட்டி எட்டிப் பார்த்தார். வெளியிலை ஒருவர் சிகரெட் பிடித்துக் கொண்டிருக்க, சந்திரன் அவரைக் கூப்பிட்டார். அவர் திரும்பிப் பார்க்க, ‘அண்ண.. உந்த நெருப்பை கொஞ்சம் தாங் கண்ணை, என்ர சிகரெடடைப் பத்த வைச்சுட்டுத் தாறன் எண்டு இவர் கேட்க, அவரும் பெரிய மனசோட குடுத்தார்.

சிகரெட்டை வாங்கின சந்திரன், கீழ குனிஞ்சு வாங்கின சிக ரெட்டை இழுக்கத் தொடங்கினார். சிகரெட்டைக் குடுத்த அப் பாவி, எட்டி எட்டிப் பார்க்க, சந்திரன் சிகரெட்டை அனுபவிச்சு இழுத்துக் கொண்டிருந்தார். சிகரெட்டைக் குடுத்தவர் குதிச்சுக் குதிச்சு சந்திரனைத் தேடினதைப் பார்க்கப் பரிதாபமாய் இருந் தது. பஸ் வெளிக்கிடேக்க சந்திரன் நிமிர்ந்து சிகரெட்டைக் குடுத் தார். அதிலை முக்கால்வாசி முடிஞ்சிருந்தது. அந்ததாள் திகைச் சுப் போய் நிண்டுது.

நான் சந்திரனை முறைச்சு பார்க்க, ‘சிகரெட் தந்தவரின்ரை முகத் தைப் பார்க்க பெரிய கறுமமாயக் கிடக்கல்லோ’ என்னைப் பார்த் துச் சிரிச்சுகொண்டு சொன்னார்.

நான் அவரை கொஞ்ச விலத்தி நடக்க வெளிக்கிட்டாலும் என்ர நெருங்கிய நண்பன் தான்தான் எண்ட மாதிரி நடப்பார். அவருடைய துணை எனக்கு நல்லது என்ற எண்ணமும் அன்பும் எனக்கு இருந்தது.

அவர் தன்ர குறைநிறைகளையும் என்னோட பகிர்ந்து கொள்வார். அவர் யாழப்பாண நகரை அண்டின ஒரு பகுதியிலை வாழ்ந்தா

லும் அவற்றை சொந்த இடம் அதில்லை.

சொந்த ஊரிலை ஏதோ பிரச்சினைப்பட்டு இங்க வந்து சின்னம்மா முறையான ஒருவரின்ர வீட்டில தங்கியிருக்கிறார்.

அவருரோட பழகத்தொடங்கிய நாள்களிலை தேத்தண்ணி குடிக்கிறத்துக்காக ஏதாவது தேநீர் கடைக்குப் போவம். ஆனா சந்திரன் கொஞ்சம் தயங்கி தயங்கித்தான் வருவார். ஒருநாள் ஏன் எண்டு கேக்க, 'என்னர சொந்த ஊரிலை இப்படிக் கடைக்குப்போய் தேத்தண்ணீ குடிச்சு அடி வாங்கியிருக்கின்றன்' எண்டு மனந் திறந்து சொல்லுவார். 'ஏன் இப்பவும் அப்பிடி நடக்குதோ?' எண்டு கேட்க, 'ரவுனுக்குள்ளதான் மாற்றம் வந்திருக்கு. நான் பிறந்த ஊரில் சாதி ஆதிக்கம் இப்பையும் பெரிசா இருக்கு. சில கடைகளில எங்களுக்கெண்டு வேற ஏதனம் இருக்கும். அதிலை வாங்கித் தேத்தண்ணி குடிச்சாலும் அங்க இருக்க விடமாட்டாங்கள். இதை எதிர்த்துக் கதைச்சு அடி வாங்கியிருக்கிறம் அல்லது அடிச்சிருக்கிறம்' எண்டு சொன்னார்.
நீங்கள் எப்பவும் ரவுணுக்குள்ளைதானே திரியிறியள்... அப்ப எப்பிடி உங்கட முதலாளியட்டை வேலை செய்யுறியள்? என்ன வேலை செய்யுறியள்? எண்டு கேட்டன். அவர் கப்பல் ஏஜென்சி-யோட வேலை செய்த காலத்திலை நான் ரெலிக்கிளாக்காய் வேலைக்குப் போய்ச் சேர்ந்தன். அவருக்கு என்னைப் பிடிச்சுக் கொண்டுது. கப்பல் ஏஜென்சி இல்லாமல் போனபிறகும் அவர் கூப்பிட்டு சில வேலைகளைத் தருவார். அது பல மாதிரி தொட்டாட்டு வேலைகள்தான்... எண்டு இழுத்து, சரி அதுகளைப் பற்றிப் பிறகு கதைப்பம் எண்டு அந்தக்கதையை அதோட முடிச்சிட்டார்.

சந்திரனைப் பார்த்தால் சரியாய் நடிகர் நாகேஸ் மாதிரி. ஆனால் நடத்தையைப் பார்த்தால் நாடகர் வீரப்பா மாதிரி. சந்திரன் தன்னை ஒரு சண்டியனாகவே மற்றவர்களுக்கு காட்ட விரும்பினார். ஒருக்கா அவரைப்பற்றி ராசகுலம் சொல்லேக்கை, சந்திரன் சண்டியன் இல்லை, ஆனா தன்னை ஒரு சண்டியன் எண்டு (F)பீல் பண்ணிக் கொண்டிருக்கிறார்.

சண்டியனுக்குரிய உடல் வலு இல்லாவிட்டாலும் தான் இருக்கின்ற ஊர் சார்ந்தும் தன் உறவுகள் சார்ந்தும் ஒரு பெருமிதம் இருக்கும். அதைவிட அடிபிடிக்காறன் எண்டு பெயர் எடுத்தால்தான் எதிர்காலத்தில் நல்லாய் வாழலாம் எண்டு நம்புறவர் சந்திரன். அந்த நமபிக்கைகளை எனக்கு உறுதிப்படுத்துறத்துக்காக யாழ்ப்பாணத்திலை உள்ள சிலபேரின்ர பெயர்களைச் சொல்லுவார். சந்திரன் அடிபிடியளுக்குப் போனதை நான் பார்த்தது இல்லை.

'யாழ்பாண ரவுனுக்குள்ளை சாதிவலு இல்லாமல் பணக்காரப் பின்னணி, பெரிய படிப்புப் பின்னணி எண்டு எதுவும் இல்லாமல் சுழண்டு கொண்டு திரிய வேணுமெண்டால் சண்டியர் மாதிரி ஒரு தோற்றம் இருக்க வேணும்' எண்டு எனக்கொரு தடவை சொல்லியிருக்கிறார்.

அதற்கு உதாரணமாக தனக்கு நடந்த கதையொண்டையும் சொன்னார்.

தன்னர உடம்பு மெல்லிசாக இருக்கு எண்டு நினைச்சு, உடற் பயிற்சி செய்து உடம்பை ஏத்துவம் எண்டு யாழப்பாணத்திலை இருக்கிற வை.எம்.சி.ஏ.க்கு போய் பதிஞ்சு, போய் வந்திருக்கிறார். அப்பிடிப் போறவாற காலத்திலை அங்க வந்து போற பிரபலமான பொடிபில்டரோட ஏதோ ராத்திப் போட்டார். இங்கையும் சாதிதான் முன்னால வந்து நிண்டது. அவன் சந்திரனைப் பார்த்து 'உங்களுக்கெல்லாம் பொடிபில்பில்டிங் கேட்குதோ?' எண்ட மாதிரி ஏதோ நக்கல் அடிச்சிருக்கிறான். இவர் வழமைபோல் தன்னர வாய் சண்டித்தனத்தை விட்டிருக்கிறார். அந்த பொடி பில்டர் எடுத்தவாக்கிலை சந்திரனைத் தள்ளி விட்டிட்டான். இவ ராலை திருப்பி அடிக்க முடியாமல் போச்சுது. அவர் பெரிய மலையன். வெப்பியாரத்தோடு வந்துவிட்டார்.

இது நடந்து இரண்டொரு கிழமையாலை இவற்றை ஊரைச் சேர்ந்த நாலைஞ்சு பேர் இவருக்கு அடிச்ச பொடிபில்லர் இருக்கிற ஊரிலை நடந்த ஒரு செத்தவீட்டுக்குக் கார்ப்பிடிச்சுப் போக வெளிக்கிட்டினம்.

அந்த நாலைஞ்சு பேரிலை இரண்டு பேர் யாழ்பாண பஸ் ஸ்ராண்டிலை மிக அறியப்பட்ட சண்டியர்கள். அவங்கள் சந்திரனுக்கு உறவினர்கள்தான். நானும் சும்மாதான் இருக்கிறன்... உங்களோட காரிலை வரட்டோ என கேட்டுச் சந்திரனும் அந்தக் காரிலை ஏறிட்டார்.

செத்தவீட்டாலை திரும்பி வரேக்கை சொல்லியிருக்கிறார்... 'பொடி பில்லற்ரை படலையடியிலை ஒருக்காக் காரை நிற்பாட்டுங்கோ அவரட்டை ஒரு அலுவல் கதைச்சுப்போட்டு ஐஞ்சு நிமிடத்திலை வந்திடுவன்' எண்டு.

சந்திரனுக்கு நல்லாய்த் தெரியும்... பொடி பில்டர் இந்த நேரத்திலை வீட்டிலை நிற்க்கமாட்டார் எண்டு. இவர் படலையைத் திறந்து உள்ளுக்குப்போய் பொடிபில்லிரின்ரை பெயரைச் சொல்லி 'வெளியிலை வா' எண்டு கூப்பிட்டிருக்கிறார்.

பொடிபில்டரின்ரை தாயும் தங்கச்சிதாரும் வெளியிலை வந்து என்னெண்டு கேட்டிருக்கினம். அதுக்கிடையில் காருக்குள் இருந்தவை இவர் போய்வர ஐஞ்சு பத்து நிமிடம் செல்லும் எண்டு நினைச்சுக் காராலை இறங்கி சிகரெட் பிடிக்கத் தொடங்கினாங்கள்.

வெளியில வந்த தாய், என்ன விசயம்? என்று கேட்க, இன்னென்ன ஆட்களோடை சந்திரன் வந்து அவசரமாய் உன்னைத் தேடிப் போட்டுப் போனவர் எண்டு சொல்லுங்கோ எண்டு, மெல்லமாகவும் கோபமாகவும் சொல்லிப்போட்டு வந்திட்டார்.

அடுத்தநாள் வை.எம் சி வாசலிலையே சந்திரனுக்காகக் காத்திருந்த பொடிபில்டர், 'என்ன சந்திரன் பகிடி வெற்றி தெரியாதோ? அண்டைக்கு நான் பகிடிக்கல்லோ தள்ளினான் மச்சான் - மன்னிச்சு கொள்ளடா' எண்டு சொல்லிச் சமாதானம் ஆனாராம்.

பருத்தித்துறைக்குப் போனால் ஏஜென்சிக்காரர் அங்கு இல்லை என்ற வழமையான கதையை கேட்டுப் போட்டு நான் உடனே திரும்புறதில்லை. பக்கத்தில் இருக்கிற ஒரு தேத்தண்ணீரக் கடையிலை இருந்து தேத்தண்ணீ குடிச்சு கடைக்காரோட பேசிப் போட்டுத்தான் வெளிக்கிடுவன்.

அவரை அறிமுகப்படுத்தினது சந்திரன்தான். அந்தக் கடைக்காரருக்கு 40, 45 வயது இருக்கலாம். வாரி இழுத்த தலைமயிரும் நெற்றி நிறைய திருநீறு பூசிய முகமுமாய் வெள்ளை வேட்டி சட்டையோடு இருப்பார். என்ன வருத்தமோ தெரியாது... என் ஊர் தலையாட்டி இமானுவல் அப்புபோலை இவற்றை தலையும் மெல்லமாய் ஆடிக்கொண்டிருக்கும்.

முதல்நாள் அந்தக் கடைக்கு போகேக்கைச் சந்திரன் சொன்னான். 'உனக்குச் சீர்காழி கோவிந்தராஜனை நல்லாய் பிடிக்கும் எண்டும் நீ தமிழ்நாட்டுக்குப் போன இடத்திலை அவரைச் சந்திச்சநீ எண்டும் சொல்லப்போறன்' எண்டார்.

'எனக்குச் சீர்காழியைப் பிடிக்கும்தான்.. அதையேன் தேத்தண்ணீக் கடைக்காரருக்குச் சொல்லப் போறாய்? சீர்காழி கோவிந்தராஜனை கிட்டத்திலை வைச்சு நான் பார்த்தது கூட இல்லை. ஏன் இந்தப் பொய்?' எண்டு கேட்டன்.

நீ பேசாமல் இரு. அவருக்குச் சீர்காழி எண்டா உயிர். உனக்குச் சீர்காழியைத் தெரியும் எண்டால் தேத்தண்ணீக்குக் காசு வேண்டமாட்டார் எண்டு சொல்லிக்கொண்டு கடைக்குள்ள போயிற்றார்.

தேத்தண்ணீயை அவர் கொண்டு வந்து தரேக்கை, 'இவனுக்கும் சீர்காழியை பிடிக்கும். போன வருசமும் தமிழ்நாட்டுக்குப் போய் சீர்காழியைப் பார்த்தவன் என்று சொல்லிப்போட்டு, என்னைப் பார்த்து, முதலாளிக்கும் உன்னைப் போல் சீர்காழியைச் சரியாய் பிடிக்கும். வருசத்தில் ஒரு தடவையாவது தமிழ்நாட்டுக்குப் போய், சீர்காழியைப் பார்ப்பார். ஏன் கணக்க, இப்ப நடந்த சுட்டி புரம் கச்சேரிக்கு அவரைக் கொண்டு வந்ததிலை ஐயாவுக்கு பெரிய பங்கு இருக்கு' எண்டு எனக்கு அவரை அறிமுகப்படுத்தினான்.

ஓ அப்படியா! எண்ட ஆடுகின்ற தலையை மேலும் பலமாய் ஆட்

டினார். ஆட்டுதல் கொஞ்சம் வித்தியாசமாய் இருந்தது. 'சீர்காழி யின்ரை பாட்டுகளிலை உங்களுக்கு என்ன பாட்டுப் பிடிக்கும்?' எண்டவொரு கேள்வியையும் அவர் என்னட்டைக் கேட்டார்.

சீர்காழி கோவிந்தராஜன் சுட்டிபுரம் அம்மன் கோயிலுக்கு வந்து கச்சேரி செய்தபோது பாடின...

சுட்டிபுரம் வாழும் சில சுந்தரியே கண்ணிகேயெ
எட்டி உந்தன் கால் பிடிந்தேன்
கருணை கண்ணால் பாரும்....

பாடி பாடி பக்தி செய்து பரவேசம் ஆனேன் அம்மா
நாடி நீர் நீர் சொரிய நான் உருகி நின்றறேன்.

எண்ட பாட்டுத்தான் யாழ்ப்பாணத்திலை பிரபலமாக இருந்தது. அது ஞாபகத்திலை இருந்ததாலை நான் அரிகண்டக் குரலிலை மெல்ல பாடிக் காட்டினன்.

மனுசன் உருகி விட்டார்.

அந்த உற்சாகத்தில் அவரை பரவசப்படுத்துவம் எண்டு நினைச்சு உள்ளம் உருகுததையா எண்டு சொல்லி வாயைத் திறக்க, சந்திரன் இடுப்பிலை மெல்ல இடிச்சு, டேய், அது ரி.எம்.எஸ். பாடின பாட்டு எண்டு சொல்ல, நான் சுதாகரிச்சுக் கொண்டு, இந்தப் பாட்டை சீர்காழி பாடியிருந்தால் எப்படியிருக்கும்? எண்டு ஒரு சுத்துச் சுத்தினன்.

'அற்புதமான கற்பனை ராசா..' என கன்னத்தைத் தட்டிச் சொன்ன கடைக்காரர் தேத்தண்ணீக்குக் காசு வேண்டாம் எண்டு சொல்லிட்டார். அதுக்குத்தானே இத்தனை நாடகமும்.

ஏஜென்சிகாரரட்டை வரேக்கையெல்லாம் தன்ர கடைக்கு வரவேணும் எண்டு ஒரு அன்புக் கட்டளையும் போட்டார்.

அடுத்தமுறை அங்க போகமுதல் எங்கடை ஊரில் இருக்கிற செல்வராசா அண்ணனிட்டைப் போய் சினிமாப் பாட்டு புத்தங்கள் வேண்டி மதுரை அரசாளும் மீனாட்சி பாடலை பாடமாக்கினன்.

திருப்பிக் அங்க போனபோது...,

தில்லையிலை அவள் பெயர் சிவகாமி
திருக்கடவூரில் அபிராமி...
திரிபுரசுந்தரி சீர்காழியிலை
சிலசக்தி பார்வதிகயிலையிலே..

எண்டு பாடிக்காட்ட, எங்கட நட்பு நெருக்கமாயிட்டுது. சந்திரன் வராத ஒரு நாளிரை அவரைச் சந்திச்சபோது கொஞ்சம் அரசியல் பேச்சும் வந்தது.

அவர் என்ர ஊரைக் கேட்டார். 'கேள்விபட்ட ஊர்தான்.. அங்காலைப் பக்கங்கள் தெரியாது.. அங்கையிருந்து வந்தா இவரட்டை காசு கட்டின நீங்கள்? எண்டு சொல்லிப்போட்டு, தன்ர ஊர் எது வெண்டும் சொன்னார்.

இது இண்டைக்கு ஆமி பொலிசுக்கு சிம்மசொப்பனமாய் இருக்கும் ஊரல்லோ... எண்டு சொன்ன நான், இவரிட்ட 'கன்' விசயங்கள அறியலாம் எண்டு நினைச்சுக் கதையை வளர்த்தன்.

'உங்கடை ஊர்தானே இண்டைக்குப் போராட்டதிலை முன்னுக்கு நிக்குது' எண்ட நான் சொல்ல, அவர் 'அப்படிச் சொல்லப்படாது... எல்லா ஊர்களிலும் தான் இண்டைக்கு இளைஞர்கள் போராட்டுத்துக்கு போகத் தொடங்கிட்டாங்கள். எங்கடை ஊரைப்பற்றித் தெரியும்தானே... பெருவாரியான ஆட்கள் தமிழரசுக்கட்சி ஆதரவாளர்கள்' எண்டு சொன்ன அவர், 'இண்டையப் பிரச்சினையள் அதாலை வரேல்லை' எண்டு சொல்லிக் கதைக்கிற மூட்டுக்கு வந்தார். இவருக்கும் இப்ப நடக்கிற சம்பவங்களுக்கும் ஏதாவது தொடர்பு இருக்குமோ? எண்டு நான் யோசிச்சுக் கொண்டிருக்க...,

'இப்ப ஒரு பத்து வருசத்துக்கு முதலில, சரியாய் சொன்னால் 67ம் ஆண்டு ஒரு பிரச்சினையில எங்கள் ஊரிலை. பொலிஸ் தங்கட அடாவடித்தனத்தைக் காட்ட வெளிக்கிட்டுது. துவக்காலையும் சுட்டாங்கள். அதிலை எங்கடை ஊரில உள்ள ஒரு பெரிய முதலாளியின்ரை மகன் ஒருவர் செத்துப் போனார். ஏழு பேருக்குக் கடுமையான காயம். பிறகு பொலீசுக்கு எதிராக பருத்தித்துறையில நீதிவான் அதைப் படுகொலையெண்டு தீர்ப்பளித்தார். ஆனால் யாழ்ப்பாண சுப்ரீம் கோட்டிலை அந்த மூன்று பொலிசாரும் குற்றவாளிகள் இல்லையெண்டு விடுதலையாயிட்டாங்கள்.

இது எங்களுக்கெல்லாம் பெரிய கோபத்தைத் தந்தது. கொஞ்ச இளைஞர்கள் அந்த பொலிஸ்காரருக்கு அடி போடவேணும் எண்டு வெளிக்கிட்டாங்கள். சின்ன சின்ன ஆயுதங்களோட சில தாக்குதல்களும் செய்தாங்கள். இது இப்படியிருக்க 68ம் ஆண்டு மாவிட்புரம் கோயிலில நுழையும் போராட்டம் நடக்கது. அதிலை இப்போ தியாகியாகிப் போன சிவகுமாரும் தீண்டாமைக்கு எதிராக போராடின ஆட்களோடு நிண்டார். அதிலை எங்கடை பெடியள் இரண்டு பேரும் நிண்டாங்கள். அதில ஒருவனான பட்டுவோட சிவகுமாருக்குத் தொடர்பு ஏற்பட்டுச்சுது. பிறகு ஒருநாள் சிவகுமாரன் பட்டுவையும் மற்ற நண்பர்களையும் தேடி எங்கடை ஊருக்கு வந்தார்.

சிவகுமாரனுடைய பிரச்சினை, சாதிமான்களும் அதைத் தலைமை தாங்கிய சுந்தரலிங்கமும் அவருடைய சின்னுகளான பஞ்சாட்சரம் நடராசாவும்தான். இவை சிவகுமாரின்ரை ஊரைச் சேர்ந்த ஆட்கள் தான். இதிலை குறிப்பாய் நடராசாவோடை அவருக்கு கொழுவல் வந்திட்டுது. அவருக்கு அரசு ஆதரவாளர்களோடையும் பொலிசோடையும் தொடர்புகள் இருந்தது. அவரை வெருட்டுறத்துக்குப் பொம் தேவை எண்டுதான் எங்கட ஊருக்கு சிவகுமார் வந்தவர்.

இன்னெரு பக்கத்தாலை சத்தியசீலன் போன்ற போரட்ட முன்னோடிகளும் எங்கடை ஊருக்கு வரத் தொடங்கிச்சினம். உங்களுக்குத் தெரியும்தானே.. நடராசன் காட்டிக்கொடுத்துத்தான் சிவகுமாரன் கொல்லப்பட்டான். அற்புதமான் பெடியன்... பிறகு நடராசனையும் வேறை பெடியள் பொம் எறிஞ்சு கொண்டு போட்டாங்கள்.' எண்டு சொல்லி கொஞ்சம் அமைதியானார்.

பிறகு அவரே தொடர்ந்தார்.

இப்ப இப்பதான் ஏதேதோ இயக்கப் பேரெல்லாம் சொல்லுறாங்கள். ஏழெட்டு வருசங்களுக்கு முதல் எழுந்தமானமாய்த்தான் இவையெல்லாம் தொடங்கியிருக்க வேணும். சிங்கள அரசுகளின்ரை தமிழ் எதிர்ப்பு நடவடிக்கைகளை மக்களுக்கும் தெரியப் படுத்தினதிலை தமிழரசுக்கட்சிக்குப் பெரிய பங்களிப்பு இருக்கு.

மலைநாட்டு தமிழரின்ரை குடியுரிமையைப் பறிச்சதுபோல வடகிழக்கு தமிழர்களுக்கும் நடக்க போகுது எண்டும் அரசாங்கம் எங்கடை நிலத்தைப் பறிச்சு, படிப்பைப் பறிச்சு தமிழர்களை ஒடுக்க நினைக்கது எண்டும் தமிழ்மக்களுக்குத் திரும்பத் திரும்பச் சொல்லி அரசாங்கத்தின்ரை இனவாத முகத்தை வெளிப்படுத்தினது தமிழரசுக் கட்சிதான். அதாலைதான் ஊருக்கு ஊர் இளைஞர்கள் போராட்டத்துக்குப் போய்க்கொண்டிருக்கிறாங்கள்.

பருத்தித்துறை தொடங்கி பொத்துவில்வரை நூற்றுக்கணக்கான பெடியள் இன்றைக்கு முன்னாலை வந்து இயங்குகிற நிலை உருவாகிட்டுது.

ஆனால் என்ன... ஒருவன் போராட முன்னுக்கு வந்தால் ஒன்பது பேர் காட்டிக்கொடுக்க நிற்கிறாங்கள். தமிழ்ச்சாதியின்ரை தலை விதி இதுதான் எண்டு தொடர்ந்து கதைச்சுக் கொண்டிருந்தார்.

எனக்கு வெளிக்கிட நேரம் வந்திட்டுது. வழமைபோல இண்டைக்கும் அவர் தேத்தண்ணிக்குக் காசு வாங்கேல்லை.

கடைக்காரர் கதைச்ச கதைகள் எந்தளவுக்கு உண்மையாய் இருக்கும் எண்டு நினைச்சுக்கொண்டு யாழ்ப்பாணம் போற 750 பஸ்சைத் தேடிப் போனன்.

selvam.a@thaiveedu.com

பேசாப்பொருள்

- வல்லிபுரம் சுகந்தன்

குறிப்பறிவுறுத்தல்:

‘உங்களுக்கு வரவர வீட்டில அக்கறையே இல்லாமப் போய்ற்றுது. நான் ஒருத்தி கிடந்து எல்லாத்தையும் என்ரை தலையில அள்ளிப்போட்டுக்கொண்டு மாரடிக்க வேண்டிக்கிடக்கு, ஐயோ நான்படுற பாடிருக்கே நாய்படாப்பாடு’.

‘உமக்கென்னப்பா நடந்தது இப்ப. ஒரு மனுசன் வேலையால களைச்சு விழுந்து வந்து நிம்மதியா கொஞ்சநேரம் big boss பார்ப்பமெண்டால். இப்ப உமக்கு என்னப்பா பிரச்சினை?’

‘எனக்கென்ன பிரச்சினை? உவன் ஜெயந்தனுக்குத்தான் ஏதோ பிரச்சினை போலக்கிடக்கு’.

‘என்னப்பா சொல்லுறீர்? அவனுக்கென்ன பிரச்சினை? வாற செப்ரம்பருக்குத் தான் யூனிவேர்சிற்றிக்குப் போக இருக்கிறான். அதுக்குள்ளை அவனுக்கென்ன பிரச்சினை வந்தது?’

‘நீங்க கொஞ்சம் ஜெயந்தனோட கதைக்கவேணும். ஆளின்ரை நடவடிக்கைகள் கொஞ்சநாளா ஒரு மாதிரிக் கிடக்கு. நானும் நாலைஞ்சுதாரம் கேட்டுப் பாத்திற்றன். ஒண்டுஞ் சொல்லுறானில்லை. எனக்கெண்டால் சரியான பயமாய்க்கிடக்கு’.

‘சரியப்பா விடும். நான் அவனைப் பாத்துக் கொள்ளுறன். இந்த விக்டோரியா லோங் வீக்கென்ட்டுக்கு அவனை எங்கையும் பார்க்கிற்குக் கூட்டிக்கொண்டு போய்க் கதைக்கிறன்.’

‘ஓமப்பா. உங்களோடையெண்டால் அவன் மனம் விட்டுக் கதைப்பான். நான் வந்தா இடைஞ்சலாயிருக்கும். நீங்க மட்டும் அவனைக் கூட்டிக்கொண்டுபோய் வடிவா என்ன பிரச்சினை எண்டு கேளுங்கோ. ஒண்டுக்கும் அவனைப் பேசிக்கீசிப் போடாதேங்கோ. பிறகு ஒண்டு கிடக்க ஒண்டு நடந்துதெண்டால், குஞ்சாச்சி பேரனும் சூசைட் பண்ண முதல் உப்பிடித்தான் ஒருமாதிரித் திரிஞ்சவனொமெண்டு சனம் கதைச்சது.’

‘நீர் சும்மா விசர்க்கதை கதை கதைக்கிறீர். நாங்க என்ன அவையைப் போல அவ்வளவு strict-ஆவா அவனை வளர்க்கிறம். இந்த லொக்டவுண் வந்து எல்லாரையும் வீட்டுக்குள்ள முடக்கினதால எல்லாச் சனமுமே இப்ப கொஞ்சம் டிப்றசனாத்தான் இருக்கு. இதுக்குப் போய் இப்படிக் கவலைப்படுறீர்’.

‘இல்லையப்பா. பெத்த மனசுக்கு ஏதோ நல்லதாப் படேல்ல. அதுதான் நீங்க ஒருக்கா அவனிட்ட ஓப்பிணா மனம் விட்டு அவனுக்கு என்ன பிரச்சினை எண்டு கேட்டு அதைத் தீர்த்து வைச்சிற்றீங்க எண்டால் நானும் நிம்மதியா இருந்திருவன். எங்களுக்கு இருக்கிறதோ ஒண்டே ஒண்டு கண்ணே கண்ணெண்டு இந்த ஒரே ஒரு குருத்துத்தான். அதுக்கு ஒண்டெண்டால் பிறகு நானும் குஞ்சாச்சியின்ரை மோளைப் போல நடைப்பிணமாத்தான் திரிய வேண்டியிருக்கும்.

‘சும்மா விசர்க்கதை கதைக்கிறத முதலில நிப்பாட்டும். உமக்கு இப்ப எங்களுக்கு ஒரேயொரு பிள்ளைதான் இருக்கெண்டுறது கவலையெண்டா வாரும் அப்ப இண்டைக்கே இன்னொண்டுக்கு ஆயத்தப்படுத்துவம்’.

‘நாப்பது வயதிலதான் நாய்க்குணம் எண்டுவாங்கள், என்ர மனுச

னுக்கு அது அம்பது வயசில வருகுது போல'.

'ஐம்பதிலும் ஆசை வருமெண்டு பாட்டே இருக்கடியப்பா'.

'இது போறபோக்குச் சரியில்லாமக் கிடக்கு. வயதுக்கு வந்த பிள் ளையை வீட்டில வைச்சுக்கொண்டு. எனக்குக் குசினிக்குள்ள நிறைய வேல கிடக்கு நான் போகவேணும. நீங்க ஜேனோட கதைக்க வேணுமெண்டிறத மறந்திடாதீங்க'.

'சரி சரி. எல்லாம் விளங்குது. கெதியா குசினி வேலைகளை முடி யும்'.

கரப்பினுங் கையிகந் தொல்லாநின் உண்கண்
உரைக்கல் உறுவதொன் றுண்டு

- குறள் 1271

நாணுத் துறவுரைத்தல்:

'அம்மா! நான் உங்களிட்டை ஒண்டு சொல்ல வேணும் அம்மா. அது உங்களுக்குப் பிடிக்காது எண்டு தெரியும், But உங்க ளுக்குத் தெரியாம அதைச் செய்ய நான் விரும்பேல்லை'.

எழில் வந்து என்னிடம் அப்படிச் சொன்னபோது நான் அதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளாமல்... 'அப்பிடி என்னடி பெரிசா எங்களுக்குப் பிடிக்காததைச் செய்யப் போறாய்? நீ கேட்டு இது வரைக்கும் எதுக்கு நானோ அல்லது உன்ரை கொப்பரோ மாட்ட னெண்டு சொல்லியிருக்கிறம்?'

'இல்லையம்மா இது கொஞ்சம் சீரியசான விசயம். அப்பாவோட இதைப்பற்றிக் கதைக்கேலாது. அதாலதான் உங்களிட்டைச் சொல்லுறன்'.

'அப்படி என்னடி இந்த வயதில உனக்கு சீரியசான விசயம்?'

'We are planning to have sex'.

'What the...? என்னடி உளறுறாய்?'

'ஓம் அம்மா, நேற்று whatsapp-இல இதைப்பற்றி நானும் ஜெயந் தனும் சீரியஸா டிஸ்கஸ் பண்ணீற்றுத்தான் உங்களிட்டச் சொல்லு றன்'.

'உனக்கென்னடி விசர்கிசர் பிடிச்சிற்றுதா? சும்மா என்னோட வந்து விளையாடுறதுக்கு உனக்கு வேறை விசயம் ஒண்டும் கிடைக்கேல் லையா?

'அம்மா! I'm talking serious'.

'நல்லா வேண்டப்போற என்னட்ட. முளைச்சு இன்னும் மூண்டு இலைகூட விடயில்ல. பார் அதுக்குள்ள கதைக்கிற கதையை. வரட்டும் இண்டைக்கு கொப்பர். பொம்பிளைப் பிள்ளையெண்டு அளவுக்கு மீறிச் செல்லம் குடுத்து உன்னைக் குட்டிச் சுவராக்கிப் போட்டேர். எக்கணம் தெரிஞ்சவை ஆற்றையும் காதில இந்தக் கதை விழுந்துதெண்டா குடும்ப மானமே போச்சு. கண்டறியாத போன் ஒண்ட வாங்கிக் குடுத்து, முதலில உந்தப் போனைத்தான் அடிச்சு உடைக்க வேணும்.'

'அம்மா! Please இப்பை எதுக்கு இவ்வளவு ரென்ஷனாகிறீங்க?' இந்தக் கொரோணா lockdown-ஆல எங்கட prom-உம் நடக்காது போல இருக்கு. நாங்க மட்டுமில்லை எங்கட மற்ற பிரண்ட்ஸ் இதைப்பற்றிக் கதைச்சவை.'

'பிள்ளை! உன்ரை கதையைக் கேக்கக் கேக்க எனக்கு ரத்த மெல்லாம் கொதிச்சு உடம்பெல்லாம் பதறத் தொடங்குது. உந்தக் கனடாவுக்கு வந்து பிள்ளைகளை வளர்க்கிறதுக்கு மனிசர் படுற பாடு இருக்கே! கடவுளே!'

'இது இதுதான் அம்மா உங்கடை பிரச்சினை. நீங்க இன்னமும் உங்கட காலத்தில ஊரில இருந்த மாதிரியே இப்பையும் இஞ்சை இருக்கவேணும் எண்டு நினைக்கிறீங்கள் அம்மா? ஊரிலயே இப்ப எவ்வளவோ மாறிப்போய் இருக்கோ'.

'பிள்ளை நாங்க எங்க இருந்தாலும் தமிழர்தான். எங்களுக்கெண்டு ஒரு பண்பாடு இருக்கு. சும்மா மற்ற இன ஆக்கள் மாதிரி கண்டவங்களோடையும் படுத்தெழும்பிறது இல்லை எங்கட பண் பாடு. சின்னனில இருந்து உனக்குத் தமிழையும் எங்கடை பண் பாட்டையும் வடிவாச் சொல்லித் தந்து தானே வளர்த்தனான். பிற கென்னத்துக்கு இப்ப இப்பிடித் தறிகெட்டு அலையிற? இது உன்ரை பிழையில்லை. உனரை பிறண்ட்ஸ்தான் உன்னையும் நல்லாப் பழுதாக்கிப் போட்டுதுகள். பண்டியோட சேந்த கண்டும் பீ தின்னுமாம்'.

'Please mind your words அம்மா! எதுக்கு இப்பை என்ரை பிறண்ட்ஸ்ஸைத் திட்டுறீங்கள். இது முழுக்க முழுக்க என்ரை முடிவதான். என்ரை பிறண்ட்ஸ் ஒண்டும் என்னை force பண் ணேல்லை. அதுசரி மற்ற இன ஆக்களைப் பற்றி உங்களுக்கு என்ன தெரியுமெண்டு இப்பிடிக் கதைக்கிறீங்கள்? அவையும் தங் கட partners-க்கு genuine-ஆத்தான் இருக்கினம். என்ன, ஒரு கொஞ்சப்பேர் செய்யிற பிழையளை வைச்சுக்கொண்டு முழு இன மும் அப்படியெண்டு நினைக்கிறது எவ்வளவு பிழை தெரியுமா?'

'ஓ! உனக்கு இப்ப இதுகள் எண்டா எல்லாம் நல்ல வடியாத் தெரியும் என்ன? வருகுது நல்லா வாயில. அவள் லோறாவை இஞ்ச வீட்ட வந்து உன்னோட பழக விட்டது சரியான பிழையாப் போச்சு. அந்தப் பிரஞ்சுக்காரிதான் உன்ரை மனசையும் கெடுத் துப் போட்டாள்.'

'அம்மா லோறாவைப் பற்றிப் பிழையாக் கதைக்காதீங்கோ. அவ ளும் என்னைப் போலதான். அவளின்ரை அம்மாட்டை அவளும் இதைப்பற்றி இரண்டு கிழமைக்கு முதல் கதைச்சவளாம். லோறா வின்ரை அம்மா ஒரு நாள் முழுக்கச் சாப்பிடாமக் கிடந்தவாவாம். பிறகும் ஒரு கிழமையா சரியான அப்செற்றா இருந்தவாவாம். அதுக்குப் பிறகுதான் சரியெண்டு சொன்னவாவாம். அதுமட்டுமில் லாம பமிலி டொக்டரோட கதைச்சு birth control pills-உக்கும் priscription வேண்டிக் குடுத்தவாவாம்.'

'அதுகளுக்கென்ன? அதுகள் என்ன எங்களைப் போல கற்பு, மானம் எண்டு பண்பாட்டோடையா வாழுதுகள்? நான்தான் பெரிய பிழைவிட்டிட்டன். உன்னைத் தமிழ்ப் பெட்டையளோட மட்டும்தான் பழக விட்டிருந்திருக்க வேணும்'.

'அம்மா! நீங்க கோபத்தில தேவையில்லாமா மற்றாக்களைப் பற்றி பிழைபிழையாக் கதைக்கிறீங்கள். தமிழாக்களோட மட்டும் நான் பழகியிருந்தா எனக்கு இந்த feelings வந்திருக்காது எண்டு நினைக்கிறீங்களோ? உங்க, எங்கட ஸ்கூலில படிச்ச ஒரு அக்கா வுக்கு என்ன நடந்தது எண்டு எனக்கும் தெரியும். அவாவின்ரை அம்மாவும் லோறாவின்ரை அம்மா போல இருந்திருந்தா. ப்ச். விடுங்கோ. எங்களுக்கேன் தேவையில்லாம மற்றாக்களின்ரை கதைகள்? நீங்க என்ரை வயசில இருக்கேக்குள்ள உங்களுக்கு இந்த feelings ஒண்டும் இருக்கேல்லையா?'

'உங்கடை வயசில நாங்க ஷெல்லுக்கும், ஹெலிக்கும், பொம்ம ருக்கும் பயந்து பயந்து உயிரைக் கையில பிடிச்சுக் கொண்டு வாழ்ந்தனாங்களே தவிர, உன்னை மாதிரி இப்பிடி ஒண்டும் அம ரில திரியேல்ல. எங்கட பெடியளின்ரை காலத்தில பெம்பிளைப் பிள்ளைகள் எல்லாம் எவ்வளவு சுதந்திரமா வாழ்ந்தாலும் ஒருத்த ரும் எங்கட பண்பாட்டை மீறினதில்லை'.

'அப்ப அந்தக் காலத்தில ஊரில ஒருத்தரும் லவ் பண்ணவு மில்லை. ஒருத்தருக்கும் பிள்ளைகளும் பிறக்கவுமில்லை எண்டு சொல்லுறீங்களோ?'

'நிப்பாட்டடி! நீ கதைக்கிறதைக் கேக்க என்ரை காதெல்லாம் கூசுது. கடவுளே! நான் என்ன பாவம் செய்தனோ? எனக்கெண்டு இப்பிடி ஒண்டு வந்து பிறந்திருக்கே? இதிலும் விட நீ பிறக்காம இருந்திருந்தா நான் எவ்வளவு சந்தோஷமா இருந்திருப்பன். இந்த

வயிறெரிஞ்சு சொல்லுறன். நீ நல்லாவே இருக்கமாட்ட.'

'அம்மா please இப்பிடிக் கதைக்காதீங்கோ. நான் என்ரை feelings-ஐ உங்களிட்டச் சொன்னனான். நீங்கள் என்னை understand பண்ணுவீங்கள் எண்டு நினைச்சன். யாமினி அப்பையும் திருப்பித் திருப்பிச் சொன்னவள், இதுகளைப் பற்றி வீட்டில கதைக்காதை. எங்கடை parents இதுகளைப் பெரிய பிரச்சினை ஆக்குவினம் எண்டு. ஆனா லோறா தான் சொன்னவள் எங்கட parents தான் எங்கட actual well-wishers எண்டும் அவையைத்தான் நாங்க கட்டாயம் respect பண்ண வேணுமெண்டும். அதாலதான் என்ரை லைப்ல நடக்க இருந்த ஒரு இம்போட்டனற் விசயத்தை, அது உங்களுக்குப் பிடிக்காதெண்டு தெரிஞ்சும் உங்களிட்டைச் சொன்னனான். யாமினி சரியாய்த்தான் சொல்லியிருக்கிறாள். சரி விடுங்கோம்மா. இப்பிடி உங்களிட்டைத் திட்டு வாங்கிறதிலும் விட நான் ஒண்டையும் அனுபவிக்காமலே சும்மா இருந்தே செத்துப் போகிறன்.'

'ஐயோ! என்ரை எழில்குஞ்சு, ஏனம்மா அம்மாவைப் போட்டு இப்பிடிக் கொல்லுறாய். நீ நல்லா இருக்கவேணும் எண்டுதானே நானும் உன்ரை அப்பாவும் இப்படிக் கஸ்ரப்படுகிறம். பார் அந்த மனுசன் இந்தக் கொரோனாக்குள்ளயும் இருக்க நிக்க நேரமில்லாமா ரெண்டு வேலைக்குப் போகுது. உன்ரை யூனிவர்சிற்றிப் படிப்புக்கு நீ லோன் எடுத்துக் கஷ்ரப்படக் கூடாதெண்டு ஏற்கனவே உனக்கு RESP-யில தேவையான அளவு காசு சேத்தாப் பிறகும், உனக்கெண்டு ஒரு வீடும் வேண்டிவிட்டு அந்த மோட்கேஜ் காசும் கட்டுறதுக்காக எவ்வளவு கஷ்ரப்படுகுது? நீ நல்லாப் படிச்சுப் பெரியாளா வரவேணும். உனக்குப் பிடிச்சமாதிரியே நல்ல மாப்பிள்ளை பார்த்துக் கட்டி வைக்கவேணுமெண்டு எவ்வளவு கனவுகள் எங்களிட்ட இருக்கு. ஏனம்மா நீ எங்களைப்புரிஞ்சு கொள்ள மாட்டன் எண்டுற? இந்த வயசில இதெல்லாம் கூடாதம்மா.'

'நீங்க எல்லாரும் உங்கட கனவுகளுக்கும் feelings-களுக்கும் தான் இம்போட்டன்ற் குடுக்கிறீங்களே ஒழிய, என்ரை feelings-ஐ விளங்கிக் கொள்ளுறீங்களில்லை. சரி விடுங்கோ. நான் ஜெயந்தனிட்டைச் சொல்லுறன் அவனெண்டா என்னை நல்லா understand பண்ணுவான்.'

கடலன்ன காமம் உழந்தும் மடலேறாப்
பெண்ணிற் பெருந்தக்க தில்

- குறள் 1137

புணர்ச்சி விதும்பல்:

'ஜென்! தோளுக்கு மூத்தாத் தோழன் எண்டு சொல்லுறது. அப்பா உன்னோட ஒரு பிரண்டாத்தானே பழகிறனான். பிள்ளை ஏன் இப்ப கொஞ்ச நாளா ஒரு மாதிரி இருக்கிறீங்கள்?'

'open-ஆச் சொல்லுறதெண்டால் எனக்கு இதைப்பற்றி உங்களோட கதைக்கக் கொஞ்சம் awkward இருக்கப்பா'.

'ஏனப்பு அப்பிடி நினைக்கிறாய்? அப்பாவை உங்கட ஒரு நல்ல பிரண்டா நினைச்சு open-ஆக் கதையப்பு. அம்மாவும் உன்னைப் பற்றிச் சரியாக் கவலைப்படுகிறா.'

'என்ரை feelings உங்களுக்கு விளங்குமா எண்டுதான் எனக்கு doubt-ஆ இருக்கப்பா'.

'நானும் உங்கட வயசெல்லாம் கடந்துதான் வந்தனான். என்ரை பிள்ளை ஆரையும் love பண்ணினாலும் பரவாயில்லை. அப்பா பேசமாட்டேர். நீங்க உங்கட பிரச்சினையைச் சொல்லுங்கோ. அத solve பண்ணுறதுக்கு அப்பாவும் உங்களுக்கு help பண்ணுவார்.'

'எழிலை எனக்கு நல்லாப் பிடிக்குமப்பா'.

'ஓ! உங்கட பிரண்ட் எழிலைச் சொல்லுறீங்களோ? ஓம் அவா நல்ல பிள்ளை தானே. ஏன் அவாக்கு உங்களில விருப்பமில்லையாமா?'

'இல்லையப்பா. அவளுக்கும் என்னில சரியான விருப்பம். I think we are in love'.

'It's OK அப்பு. Love பண்ணுறது ஒண்டும் பிழையான விசயம் இல்லைத்தானே. அது உங்கட படிப்பைக் குழப்பாம இருந்தாச் சரி. உதுக்கா நீங்கள் இவ்வளவு யோசிச்சனீங்கள். நான் என்னவோ ஏதோ எண்டு பயந்து போனன். இதுக்கேன் நீங்க ஒரு மாதிரி இருக்கிறீங்கள்? நல்ல happy-ஆ energetic-ஆ எல்லோ இருக்க வேணும்.'

'இல்லையப்பா. எழிலின்ரை வீட்டில அது கொஞ்சம் பெரிய பிரச்சினை ஆகீற்றுது.'

'ஏனடா அவைக்கு என்ன பிரச்சினை? இந்த வயசில எதுக்கிந்த லவ் எண்டு பிரச்சினை பண்ணுகினமா?'

'அதில்லையப்பா. அதை என்னெண்டு உங்களிட்டைச் சொல்லிறது எண்டுதான் தெரியேல்லை அப்பா'.

'எனக்குத் தெரிஞ்சு அவையும் எங்கட ஆக்கள்தான். பிறகு என்ன தான் அவைக்குப் பிரச்சினை? ஆரு எழிலின்ரை அப்பாவா பிரச்சினை பண்ணுறார்?'

'ஐயோ அப்பா! எழிலின்ரை அப்பாவுக்கு இதைப்பற்றி ஒண்டுமே தெரியாது. அவாவின்ரை அம்மாதான். அவா இப்ப எழிலோட பெரிசாக் கதைக்கிறதும் இல்லையாம்.'

'அவா கோபப்படுறதிலயும் ஒரு ஞாயம் இருக்குத்தானே. நீ அவாவின்ரை point-இல இருந்து யோசிச்சுப் பார். இந்த வயசிலையே லவ் எண்டா எந்தப் parents தான் பயப்பிடமாட்டினம். அதிலையும் பொம்பிளைப் பிள்ளையை வைச்சிருக்கிறவை. பயப்பிடுவினம் தானே.'

'ஓம் அப்பா. அது சரியெண்டு இப்ப எனக்கு விளங்குது. ஆனா அவா உங்கள, அம்மாவைப் பற்றியெல்லாம் கூடாமப் பேசின வாவாம். பிள்ளையை ஒழுங்கா வளக்கத் தெரியாமக் காவாலி போல வளத்திருக்கிறீங்களாம் எண்டும் சொன்னவாவாம். அதுதான் எனக்கு சரியான guilty-ஆ இருக்கு'.

'இந்த வயசில கனபேருக்கும் ஒரு crush வாறது சகஜம். நீங்க இன்னும் கொஞ்சம் deep-ஆப்போய் லவ் பண்ணத் தொடங்கீற்றீங்க. சரி விடு. இதைப்பற்றியெல்லாம் கனக்கக் கவலைப்படாத'.

'Love மட்டுமில்லையப்பா நாங்க அதுக்கும் கொஞ்சம் கூடவா think பண்ணின்னாங்கள். அதை எழில் அவளின்ரை அம்மாட்டைச் சொல்லப்போய்த்தான் இவ்வளவு பிரச்சினையும்'.

'அப்பிடி என்னடா love-க்கும் மேலால think பண்ணின்னீங்க?'

'அது வந்து, வந்து... Ezhil and me talked about having...'

'Having...?'

'அப்ப்ப்பா, அதை எப்பிடி என்ரை வாயால உங்களிட்டைச் சொல்லுறது. நாங்க அவசரப்பட்டிருக்கக் கூடாதுதான். ஆனா...'

'You mean sex?'

'mmmm, yah, I'm so sorry அப்பா.'

'It's OK ஜேன். We can talk openly. You are an adult now.'

'Thanks pa. So, we planned to have it after the pandemic. Some of our other friends talked about to have the first experience in our prom night, but due to the pandemic, maybe we won't have it. That's why...'

‘I can understand it ஜென். நீங்க ரெண்டு பேரும் அதை விரும் பினால் நாங்க அதைத் தடுக்க ஏலாது. உங்கட இந்த வயசக் கடந்துதான் நாங்களும் வந்தனாங்கள். அந்த உணர்ச்சிகளையும் கடந்துதான் வந்தனாங்கள்.

‘Thanks pa. எங்க நீங்க என்னைப் பேசப்போறீங்களோ எண்டு நான் சரியாப் பயந்துகொண்டிருந்தனான்’.

‘நீ இப்பிடி open-ஆ என்னோட கதைச்சது எனக்கும் நல்ல சந் தோஷம். ஒரு அப்பாவா இல்லாமா இதையெல்லாம் கடந்துவந்த உன்ரை ஒரு நல்ல பிரண்டா உனக்குச் சில விசயங்களைச் சொல்ல விரும்பிறன். அதையும் கேட்டிட்டு நீ என்ன முடிவெடுத் தாலும் சந்தோஷமா அப்பா அதை accept பண்ணுவார். அதை இப்பவே உனக்கு அப்பா promise பண்ணுறார். சரியா?’

‘சரியப்பா’.

‘இந்த Teenage வயசிலதான் ஹோர்மன்கள் சுரக்கத் தொடங்கிறது. பாலியல் உந்துதல்கள் ஏற்படுகிறது எல்லாம் ஏற்கனவே நீங்கள் படிச்சிருப்பீங்கள். ஆனால் இன்னொண்டையும் நீங்க நினைவில வைச்சிருக்க வேணும். செக்ஸ் எண்டுறது எல்லா உயிர்களுக்குமே அளவில்லாத pleasure-ஐத் தருகிறது.

கண்டுகேட்டு உண்டுயிர்த்து உற்றறியும் ஐம்புலனும்
ஒண்தொடி கண்ணே உள

எண்டு வள்ளுவரும் சொல்லியிருக்கிறார். எண்டாலும், அது அடிப் படையில இன்னொரு உயிரை உற்பத்தியாக்குகின்ற செயல். இன்னொரு உயிரியை உற்பத்தியாக்குவதற்கு எவ்வளவு சக்தி தேவைப்படும் என்று யோசிச்சுப் பார்த்திருக்கிறியா? இந்த சக் தியை விரயமாக்காமல் எங்கட கவனத்தைப் படிப்பிலயோ விளை யாட்டிலயோ இல்லாட்டி எங்களுக்கு விருப்பமான ஒரு பொழுது போக்கிலயோ பயன்படுத்தினால் அதனால கிடைக்கிற பயன் எங்கட பிற்கால வாழ்க்கைக்கு நல்ல பிரயோசனமாயிருக்குமே. அதுக்காக செக்ஸே கூடாது எண்டு நான் சொல்ல வரேல்ல. ஆனா இந்தக் காலத்தில, இந்த வயசு வந்து எங்கட வருங்கால வாழ்க்கையை வளமாக்குவதற்குத் தேவையான விடயங்களைச் செய்ய வேண்டிய வயசு. அப்பிடிச் செய்தீங்களெண்டா பிற்காலத் தில கஷ்ரப்படாம வாழலாம்.’

‘நீங்க சொல்லுறது சரிதான் அப்பா, ஆனா என்னால என்ரை mind-அக் control பண்ணேல்லாம இருக்கு. எப்ப பார்த்தாலும் அந்த ஞாபகவே வந்து படுத்துது. கனவில கூட’.

‘You mean wet dreams?’

தலையைக் குனிந்து கொண்டான்.

‘Don’t worry ஜென். It’s normal, I too had it. So, you don’t need to feel guilty. இதுகளையெல்லாம் நீ பெரிசா எடுக்கத் தேவை யில்லை. இது தொந்தரவா இருக்கெண்டு நீ நினைச்சியெண்டால் நீ தியானம் பழகலாம். அது உனக்கு நிறைய help பண்ணும் எண்டு நினைக்கிறன். அது மட்டுமில்ல இப்ப நாங்க எல்லாருமே முந்தி மாதிரி வெளியில போய்த் திரியாம வீட்டுக்குள்ளேயே அடைஞ்சு கிடக்கிறதாலயும் தனிய இருக்கிறதாலயும் தான் இப்பி-டியான நினைவுகள் வாறது. அதால இதைப்பற்றி நீ guilty-ஆ feel பண்ணத் தேவையில்ல. Please feel relax’.

‘Thanks pa. I’m so relaxed now after talking to you’.

‘நான் உன்னை எதுக்குமே force பண்ணேல்லை ஜென். இது உன்ரை லைப். நீதான் முடிவெடுக்கவேணும். ஒருவேளை if you still feel you want to have sex, please consider the protection for both of you. உனக்கு நான் என்ன சொல்ல வாறன் எண்டு விளங்கும் எண்டு நினைக்கிறன்.

‘Don’t worry அப்பா!. நான் இப்ப நல்ல தெளிவாயிற்றன். என் னால இனி இந்த situation-அ வடிவா handle பண்ணேலும். Thank you so much pa. உங்கட இந்த help-இற்கு.’

மலரினும் மெல்லிது காமம் சிலரதன்
செவ்வி தலைப்படு வார்

- குறள் 1289

suganthan.v@thaiveedu.com

பிடரி சிலுப்பிய பாரசீகப் பேரரசு

இன்றைய ஈரான் தேசத்தில் எங்கோ ஒரு மூலையில், கி.மு 559ம் ஆண்டில் அதிகம் அறிமுகமில்லாத வீரன் ஒருவன் சிறியதொரு தேசத்தின் அரசனாக முடி சூட்டிக்கொள்கிறான். தான் உலக வரலாற்றை தலைகீழாக திருப்பி போடப் போகிறேன் என்பதை அப்போது அவன் அறிந்-திருக்கவில்லை

அவனுடைய குட்டி தேசம் மெதியா எனும் பேரரசுக்கு அடங்கிய நாடு. கப்பம் கட்டி, கைகட்டி, வாய் பொத்தி நிற்கும் பலமற்ற ஒரு நாடு.

இதில் வேடிக்கை என்னவென்றால், அவன் கப்பம் கட்டுகின்ற மெதியா பேரரசின் சக்கரவர்த்தி வேறு யாரும் கிடையாது, அந்த இளைஞனின் சொந்தப் பாட்டனார் தான்.

ஆறு வருடங்கள் அவனது ஆட்சி சாதாரணமாகத்தான் போனது.

கி.மு 553ம் ஆண்டு பாட்டனாருக்கு ஒன்றில் பைத்தியம் பிடித்தி-ருக்க வேண்டும் அல்லது பேரனை ஒரு தட்டுத் தட்டி வைத்தி-ருக்க வேண்டும் என்று அவர் நினைத்திருக்க வேண்டும்.

ஹார்பகஸ் எனும் படைத்தளபதி தலைமையில் பாட்டனின் படை, பேரனின் தேசத்தை நோக்கி பாய்ந்து வந்தது.

அந்தப் பெரும் படையை தலைமை தாங்கி வந்த தளபதிக்கு இந்த வீரனைக் கண்டதும் தனிப்பாசம் வந்திருக்க வேண்டும்.

போர் தொடுக்க வேண்டிய தளபதி வீரனின் அருகில் பொறு-மையாக வந்து கை கோர்த்துக் கொண்டான். தனியாளாக மட்டு-மல்ல, கூட்டிக் கொண்டு வந்த படையின் அரைப்பங்குப் பலத்து-டன்.

தளபதி ஹார்பகஸ் இற்கு, பேரன் மீதான பாட்டனின் போர்வெறி சினத்தை தந்திருக்க வேண்டும். பாட்டனாருக்கு எதிராக கலகம் செய்யுமாறு வீரனை தூண்டிப் போனான்.

அந்த வீரன் வேறு வழியின்றி போர் உடை பூண்டான். அவனது சிறு படை பேரரசின் தலைநகரை நோக்கி அணிவகுக்கத் தொடங்-கியது. அன்று தொடங்கிய அற்புத வீரனின் போர்ப் பயணம் நீண்ட நாட்கள் நடந்தது.

அவனது பெரும் வீரத்தாலும், போர் உத்தியாலும் மெதியா பேர-ரசு இறுதியில் மண்டியிட்டது. கப்பம் கட்டியவன் இப்போது அதே சாம்ராஜ்ஜியத்தின் அரச சிம்மாசனத்தில் கம்பீரமாக அமர்ந்திருக்-கிறான்.

பேரரசை வெற்றி கொண்ட பின்பும் அவனது போர்ப்பசி அடங்க-வில்லை. அண்டை நாடுகள் ஒவ்வொன்றாக அவன் காலடியில் வீழ்ந்தன.

அவனது தலைமையில் பாரசீகப் பேரரசு எனும் புதியதோர் சாம்-ராஜ்ஜியம் உத்வேகமாக வரலாற்றில் பிரம்மாண்டமாக எழுந்தது.

இன்றுவரை உலகத்தில் தோன்றிய மிகச்சிறந்த சக்கரவர்த்திகளின் வரிசையில் முதன்மையானவனாக கருதப்படும் சைரஸின் வரலாறு இப்படித்தான் தொடங்கியது.

சைரஸ் ஸ்தாபித்த பாரசீக சாம்ராஜ்ஜியம் தான் உலகின் முதலா-வது வல்லரசு, அத்தனை பலம். இருபத்தைந்து இலட்சம் வீரர்-களை கொண்டது அவனது அசைக்க முடியாத படை என கிரேக்க வரலாற்றாசிரியர் ஹெரோடோடஸ் கொஞ்சம் மிகைப்படுத்-தியே எழுதி வைத்திருக்கிறார்.

வெற்றி கொள்ளப்படும் மக்களை அவன் கண்ணியமாக நடத்தி-னான். வழமையான வெறிபிடித்த மன்னர்களைப் போல், தோற்றுப் போன மன்னர்களை அவன் கொல்வது கிடையாது. கூடவே வைத்-துக் கொள்வான். வெற்றி கொண்ட அவர்களது நாட்டை அற்புத-மாக ஆள்வது எப்படி என்று தோற்றவர்களிடமே ஆலோசனையும் கேட்டுக் கொள்வான்.

சைரஸின் ஆட்சி காலத்தில் சகிப்புத்தன்மை உச்சத்தைத் தொட்டி-ருந்ததை இப்போதும் சரித்திர ஆசிரியர்கள் வியந்து பார்க்கிறார்-கள்.

இன்றுவரை உலகில் தோன்றிய அத்தனை சாம்ராஜ்ஜியங்களின் வரலாற்றிலும், பாரசீக மன்னன் சைரஸ் போன்று தன் ஆட்சியின் கீழிருந்த அத்தனை மதங்களையும், அத்தனை மக்களையும் சரிச-மமாக, அன்புடன் ஆண்டு போனவன் வேறு எவனும் கிடையவே கிடையாது.

அவனுடைய இந்தப் பெருங்குணம்தான் பாபிலோனிய மக்களை-யும் கவர்ந்து இழுத்தது.

புகழ்மிக்க பாபிலோனிய பேரரசன் நெபுகட்னேசர் உருவாக்கி வைத்த பலம் மிக்க பாபிலோனிய சாம்ராஜ்ஜியம் அவனது மறை-வின் பின், கொஞ்சம் கொஞ்சமாக உருக்குலைந்து நெபோனிடஸ் என்ற மன்னனின் காலத்தில் குழப்பத்தின் உச்சியை அடைந்தது. சொந்த மன்னனை விட அண்டை நாட்டு சைரஸ் மன்னனுக்கு பாபிலோனியாவில் ஆதரவு கூடியது.

கி.மு. 539ல் சைரஸ் பாபிலோனியாவை போரின்றியே கைப்பற்ற,

பாபிலோனியர்கள் மகிழ்ந்து போய் அவனுக்கு பட்டுக் கம்பளம் விரித்து வரவேற்றார்கள்.

பாபிலோனியர்களின் கடவுள் மார்டுக் தெரிவு செய்த அற்புதமான ஆட்சியாளன் நான் தான் என பேரரசன் சைரஸ் முழங்க, பாபி-லோனியர்கள் அவனைத் தங்கள் சொந்த மன்னனாகவே கொண் டாட தொடங்கினார்கள்.

பாபிலோனியாவில் சைரஸ் அடுத்து செய்த காரியத்தை இன்றும் கூட யூதர்கள் நன்றியுடன் நினைவு கூறுகிறார்கள்.

கி.மு. 586ல், பாபிலோனிய பேரரசன் நெபுகட்னேசர் யூதர்களின் முதல் கோயிலை இடித்து, ஆயிரக்கணக்கான யூத மக்களை அடிமைகளாக பாபிலோனியாவிற்கு கொண்டு வந்திருந்தான். அத் தனை யூத அடிமைகளையும் விடுவித்த சைரஸ், அவர்களை மீண்டும் ஜெருசலேமில் குடியேற்றியும் வைத்தான். இடிந்து போன சொலமன் கோயிலை மீண்டும் கட்ட உதவியும் செய்தான். இத னால்தான் யூத இனம் சைரஸ் மன்னனை ஹீரோ லெவலில் இப் போதும் வைத்திருக்கிறது. ஜெருசலேமில் அவனது பெயரில் வீதி ஒன்றும் இருக்கிறது.

பைபிளில் கூட அவனது பெருமை பேசப்படுகிறது.

பாபிலோனியாவில் கண்டெடுக்கப்பட்ட, சைரஸ் காலத்தைய மண் உருளை ஒன்றில் பேரரசன் சைரஸ் நிறைய விடயங்களை எழுதி வைத்திருக்கிறான்.

'சைரஸ் உருளை' என சரித்திரத்தில் பெரும்புகழ் பெற்ற அந்த ஆவணம் தான் உலக வரலாற்றில் முதன்முதலாக மனித உரி மைகளை பட்டியலிட்ட மகத்தான ஆவணம்.

மத்தியதரை கடல் தொடங்கி, இந்தியாவின் சிந்து நதி வரை பரந்த பாரசீக பேரரசின் அத்தனை மக்களும் தங்கள் மன்னன் சைரஸை உளமார விரும்பினார்கள் என்றும், இந்தப் பெருமை சரித்திரத்தில் எந்த ஒரு சக்கரவர்த்திக்கும் கிடைக்காதது எனவும் பல வரலாற்றாசிரியர்கள் அவனது ஆட்சியை புகழ்கிறார்கள்.

தத்துவஞானி சோக்கிரட்டீஸின் மாணவனான ஸெனோபொன், மாமன்னன் சைரஸின் ஆட்சி பற்றி எழுதிய 'சைரஸ்பீடியா' என் னும் புத்தகம் காலங்கள் பல கடந்தும் வாசிக்கப்படுவது. அமெ ரிக்க நாடு உருவான போது, சக்கரவர்த்தி சைரஸின் ஆட்சி முறையை பின்பற்றித்தான் பல்கலாச்சார மக்களை ஒன்றிணைக் கும் யாப்பை அதன் தலைவர்கள் தயாரித்தார்கள்.

சைரஸின் தலைமையில், பாரசீக சாம்ராஜ்ஜியம் தொடர்ந்து விரிந் தது. லிடியா எனப்பட்ட தற்போதைய துருக்கிய பிரதேசத்தையும் சைரஸ் கைப்பற்றிப் போனான். இது கிரேக்கர்களின் ஒரு குடி யேற்ற நாடு.

கிரேக்கர்களுக்கு பாரசீகர்களை கிஞ்சித்தும் பிடிக்காது. அவர்-களை காட்டுமிராண்டிகள் என்றே கிரேக்கர்கள் கருதினார்கள். கிரேக்கர்களுக்கு கொஞ்சம் தலைக்கனம் ஜாஸ்தி. தங்களது கிரேக்க மொழி பேசாதவர்களை அவர்கள் கொஞ்சமும் மதிப்பது கிடையாது.

ஆனாலும், பாரசீக வீரத்தின் முன்னாலும், சைரஸின் புகழின் முன்னாலும் அவர்களால் எதுவும் செய்ய முடியவில்லை. வெறுப் பின் உச்சத்தில் அவர்கள் இருந்தாலும், சைரஸின் அற்புத ஆட்சியை அவர்களால் போற்றாமலும் இருக்க முடியவில்லை. கிரேக்கம் புகழ்ந்த ஒரேயொரு பாரசீக மன்னன் சைரஸ் மட்டும்தான்.

அன்றைய உலக சனத்தொகையில் அரைவாசி சனத்தொகை அவனது ஆட்சியின் கீழ் இருந்தது,

இன்று வரை உலகில் தோன்றிய எந்த ஒரு சாம்ராஜ்யமும் உலக சனத்தொகையில் அரைவாசியை ஆண்டதே கிடையாது.

உலக சரித்திரம் கண்ட ஒப்பற்ற இலட்சிய பேரரசன் சைரஸ், கி.மு 530ம் ஆண்டில் தனது எழுபதாவது வயதில் இறந்து போனான். அவன் எப்படி இறந்தான் என்பதில் வரலாற்றாசிரி யர்கள் இருவேறு கருத்துக்களைச் சொல்கிறார்கள். போர்க்களத் தில் அவன் இறந்தான் என்றும், இல்லையில்லை, அவன் தன் அரண்மனையில் இயற்கையாகவே இறந்து போனான் எனவும் சரித்திரத்தில் குறிப்புக்கள் இருக்கின்றன.

அவனுக்கு பின் அவனது மகன் இரண்டாவது காம்பஸீஸ் ஆட் சிக்கு வந்தான். புலிக்கு பிறந்தது, இன்னுமொரு புலிக்குட்டியா கவே இருந்தது. எகிப்தின் மீதும், ஆபிரிக்க நாடுகள் மீதும் அது உடனேயே பாய்ந்தது. பாரசீக சாம்ராஜ்ஜியம் மேலும் விரியத் தொடங்கியது.

nimal.nagaraj@thaiveedu.com

நீங்கள் ஒரு பிறைவேட் மோட்கேஜ் கொடுப்பவரா?

உங்கள் முதலீட்டை மீள பெற சிக்கலாக உள்ளதா?

அப்படியானால் இப்படிப்பட்ட சில சிக்கல்களை எதிர்கொள்கிறீர்களா?

அடமானம் எடுத்தவர்கள் மாதாந்த கட்டுப்பணம் செலுத்த தவறுதல்.

மற்றைய மோட்கேஜ்களுக்கு ஒழுங்காக பணம் செலுத்த தவறுதல்.

வீட்டுக் காப்புறுதி கட்டணம் ஒழுங்காக செலுத்த தவறுதல்.

கொண்டோ காசு, புறப்பட்டி ரக்ஸ் செலுத்த தவறுதல்.

வேறு மோட்கேஜ் கொடுத்தவர்கள் பவர் ஒப் சேல் நோட்டீஸ் அனுப்பி இருப்பது.

அடமானம் பெற்றவர்கள் மீளத்தர முடியாமல் மறுக்கும் நிலைமை.

வருமுன் காப்பதே சிறந்தது

COURT FILE NO.:

ONTARIO
SUPERIOR COURT OF JUSTICE

BETWEEN:

[redacted] Plaintiff

- AND -

[redacted] Defendant

STATEMENT OF CLAIM (MORTGAGE ACTION - FORECLOSURE)

TO THE DEFENDANTS

A LEGAL PROCEEDING HAS BEEN COMMENCED AGAINST YOU by the Plaintiff. The claim made against you is set out in the following pages.

IF YOU WISH TO DEFEND THIS PROCEEDING, you or an Ontario lawyer acting for you must prepare a statement of defence in Form 18A prescribed by the Rules of Civil Procedure, serve it on the Plaintiff's lawyer or, where the Plaintiff does not have a lawyer, serve it on the Plaintiff, and file it, with proof of service in this court office, WITHIN TWENTY (20) DAYS after this Statement of Claim is served on you, if you are served in Ontario.

If you are served in another province or territory of Canada or in the United States of America, the period for serving and filing your Statement of Defence is 40 days. If you are served outside Canada and the United States of America, the period is 60 days.

SPECIMEN

NOTICE OF SALE UNDER CHARGE

TO: THE PARTIES SHOWN ON SCHEDULE "A" ATTACHED HERETO

TAKE NOTICE that default has been made respecting payments and other covenants under a certain charge of land made between [redacted] as chargor and [redacted] as chargee, on the security of:

[redacted], METROPOLITAN TORONTO CONDOMINIUM PT BLK 47 66M2131, PTS 15, 16, 17, 18 & 19 66R15502 AS DESCRIBED IN SCHEDULE "A" OF DECLARATION B203234 SCARBOROUGH, CITY OF TORONTO

PIN [redacted], Toronto, Ontario

Municipally known as: [redacted] M3V 5E3.

and registered in the Land Registry Office for the Land Titles Division of Toronto (No. 80), on the 20th day of December, 2017 as Instrument No. [redacted] (the "Charge").

AND [redacted] hereby gives you notice that the amounts now due on the Charge for principal, interest and costs, are as follows:

Principal Balance	$70,000.00
Interest to October 22, 2019	$6,928.00
Pre-Payment Interest Penalty	$2,598.00
NSF Fee	$1,200.00
Administration Fee	$1,500.00
Statement Preparation Fee (3)	$475.00
Legal Fees and Disbursements to the date of this letter	$2,500.00
TOTAL	**$85,201.00**

SPECIMEN

(each amount for costs being up to and including the service of this notice only, and thereafter such further costs and disbursements will be charged as may be proper), together with interest at the rate of 13.00% per annum, on the principal, interest and costs hereinbefore mentioned, from May 15, 2019.

AND UNLESS the said sums are paid on or before June 20, 2019, the undersigned shall sell the property covered by the said Charge under the provisions contained in it.

THIS NOTICE is given to you as you appear to have an interest in the charged property and may be entitled to redeem the same.

DATED at Toronto, Ontario on May 14, 2019.

[redacted]
By its solicitors

[redacted]
Barrister & Solicitor

[redacted]

தயா PK கந்தையா BAS, LLB (Hons)
வழக்கறிஞர்

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்

416-333-1001
(மெசேஜ்சிலை விடுங்கோ, கட்டாயம் திரும்பி உங்களுக்கு போன் அடிப்பேன்)

KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
Credit Recovery - Mortgage Enforcement - Real Estate Law - Family Law
Legal Advise - Legal Research - Legal Analysis - Legal Referrals - Document Review - Document Drafting

Thaya PK Kandiah BAS, LLB (Hons)
Barrister, Solicitor & Notary Public


NO MEDICAL
UP TO $500,000
✓ $0 first month's premium
✓ No medical exams
✓ Simple and straightforward
✓ 18-80 years can apply
MEDICAL INUSRANCE FOR SUPER VISA
100% REFUND IF VISA DENIED
Sritharan Thurairajah
Chartered Life Underwriter, Certified Health Insurance Specialist
Direct: 416.918.9771
Business: 416.321.2500
MDRT Member of Million Dollar Round Table
Life100 INSURANCE & INVESTMENTS INC.
10 Milner Business Court, Suite 208, Scarborough, ON M1B 3C6
Web: www.life100.ca, E-mail: info@life100.ca
La Capitale
iA Financial Group
Are you getting Million Dollar advice

Residential Mortgages | Commercial Business Loans | 1st and 2nd Mortgages | Private Funds Available
Debt Consolidation - Refinance | No Income Confirmation | No Down Payment Confirmation
Call me more details...
KAPITAL CARE MORTGAGE INC.
Rambo Tharmalingam
Mortgage Agent
5200 Finch Ave. E. Unit 306, Scarborough, ON. M1S 4Z5
647-290-3416 / 416-543-1111

Call Me First and Say "YES" to Get Your Dream Home at a Dream Rate!
For all your Mortgage needs
Peter Sober
Manager, Mobile Mortgage Specialist
Paragon Sales Award
Dir: 416-275-3571
Pager: 1-866-767-5446 | Fax: 905-240-3882
Email: peter.sober@td.com
Your Smile Is My Best Return!
Purchase, Pre-Approvals, Refinances, Renewals and Switch, Builder Purchase, Home Line Of Credit, Self Employed, New Immigrants, Multi-Rental Properties.
TD
Five Branch Locations to serve you better
Scarborough, Markham, Ajax, Brampton & Mississauga

புது
ரங்கனாஸ் நகைமாடம்
647-702-2159
MARKHAM & STEELES
YELLOW BUILING
6055 STEELES AVE ESCARBOROUGH, ON M1V 5P6

COMMITTED TO EXCELLENCE
Call me now to get your HOME SOLD 416-725-7284
21
CENTURY 21
Percy Fulton Ltd.
Ravi Kana
Cell 416.725.7284 (RAVI)

"Serving With Dignity, Compassion and Excellence"
WELL GUARD INSURANCE
220 Commerce Valley Dr W Suite 480, Thornhill, ON L3T 0A8
LOTUS Funeral and Cremation Centre Inc.
121 City View Dr, Etobicoke, ON M9W 5A8.
Patricia Peter BBM
Licenced Funeral Preplanning Director & After Care Advisor
Licenced Insurance & Investment Advisor
Direct: 416-834 5753
Email: advisorpat10@gmail.com

Residential Mortgages | Commercial Business Loans
1st and 2nd Mortgages | Private Funds Available
Debt Consolidation - Refinance | No Income Confirmation
Call us more details...
KAPITAL CARE MORTGAGE INC.
Rambo Tharmalingam
Mortgage Agent
647-290-3416
Kethes Sivasubramaniyam
Mortgage Agent
416-873-5780
5200 Finch Ave. East, Unit 306, Toronto, ON. M1S 4Z5

DEVADAS LAW
PROFESSIONAL CORPORATION
Real Estate
HST
Tax Law
Family law
Immigration
Business law
Employment Law
Estate Planning and Last Wills
Vasuki Devadas
Barrister, Solicitor & Notary Public
vasuki@vdlaw.ca
Vinayagamoorthy Devadas CPA, CMA, MBA
Barrister & Solicitor
devadas@vdlaw.ca
1415 Kennedy Road, Unit 3 | Toronto, Ontario | M1P 2L6
Next to NBC at Kennedy & Ellesmere
Tel: (416) 266-1234 | Fax: (416) 266-2000 | www.vdlaw.ca
Contacting us should be easy as 1,2,3,4 Just remember "266"

NAVA WILSON LLP
BARRISTERS AND SOLICITORS
10 Milner Business Court, Suite 210
Toronto, ON M1B 3C6
416.321.1100
416.321.1107
info@navawilson.law
www.navawilson.law

RAMAN HOME COMFORT INC
HEATING
Quality Products, Certified Technicians, Reliable Service & Reasonable Prices
எக்கூடாக Furnace வாங்கும்போது ஒன்ராரியோ அரசு வழங்கும் Rebateஐப் பெற்றுக்கொள்ளலாம்
SAVE $2000 WHEN PURCHASING A NEW HIGH-EFFICIENCY FURNACE
LENNOX
Raman Chelliah
Sales Person
647-893-4414
Tel: 416-332-2989
Email: info@ramanhomecomfort.com
Scarborough : C105-6055 Steeles Ave. East, Scarborough, ON M1X0A7

15 years of Success
500+ Agents
Selva Vettyvel
Broker of Record
VettyvelLaw
Rishani Vettyvel
Real Estate Law
HomeLife/Future Realty Inc., Brokerage
416.568.4301
416.261.1544

AEREN Thiyagarajah BEng
Realtor
aeren.realtor@gmail.com
Dir: 647-888 3500
DILEEP Thangavel
Realtor
dileep.realtor@gmail.com
Dir: 416-666 2300
BUS: 905 201 9977 | FAX: 905 201 9229
HomeLife/ Future Realty Inc., Brokerage
Independently Owned And Operated
205 - 7 Eastvale Drive, Markham, ON L3S 4N8

அனைத்து மோட்கேஜ் தேவைகளுக்கும்
BonaFide Mortgage Solutions Inc.
the true freedom...
Brokerage Lic# 10216
Suren Nathan AMP
Mortgage Broker
License# M08004479
Dir. 416-436-1111
Office. 416-548-7475 Fax: 416-548-7496
suren@bonafidemortgage.ca,
7 Eastvale Drive,Unit 203, Markham, ON, L3S 4N8

ALL YOUR REAL ESTATE & MORTGAGE NEEDS
வீடு என்பது தொழுனைம் அல்ல
கனவுகளை விலக்கு...
Thana Yoganathan
416.418.5749
HOMELIFE LANDMARK REALTY INC.,BROKERAGE* OFFICE: 905-305-1600

வீடு வியாபார நிலையம்
வாங்க விற்க
HomeLife Today Realty Ltd.,
Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto, ON, M1P 4S6
Bus: 416-298-3200, Fax: 416-298-3440,
E-mail: kuna@kunahomes.ca
*Independently Owned and Operated.
Kuna Nagalingam
Sales Representative
Sujatha Kunasegar
Sales Representative
416.402.4545

RAMACHANDRAN LAW
CIVIL LITIGATION
REAL ESTATE
FAMILY
CORPORATE
EMPLOYMENT
WILLS & ESTATE
VITHU RAMACHANDRAN
Barrister & Solicitor
416-902-8225

Ahilan Thanabalasingham
Sales Representative
416.617.1767
RE/MAX Royal Properties Realty Ltd.,
Brokerage
Office: 905.471.0002
7595 Markham Road, Unit 19 Markham, ON L3S 0B6

UTHAYAN SIVARAJAH
416.301.5555
SUGAN SIVARAJAH 416.890.9999
RAJ SIVARAJAH 416.843.3333
SIVAKUMAR SIVARAJAH 416.453.7777
ignite
PYRAMIDGROUP

LIFEPLAN INVESTMENTS
Ahilan Balachandran, CFP, CLU, CHS, EPC
Founder and CEO
WE CAN HELP BUILD YOUR FUTURE
Insurance • Investments • Tax and Estate Planning
905-294-PLAN (7526)
www.lifeplaninvestments.ca
416-894-2009
Download Free MyLIFEPLAN App

Your Lifelong Realtor
Nanda Kandasamy
Broker
DIR: 416 457 4509
OFF: 416 270 1111
RE/MAX ACE

Mega Financial Group
Call Now
Raj Nadarajah
416-666-1120

நீங்கள் வீடு வாங்கும்போது
$8475.00
வரை அரச வரிச்சலுகை
பெற்றுக்கொள்ள தகுதியானவரா?
விபரங்களுக்கு 416-888-9492

Rathiga Thillaivannan BCom
Sales Representative
Buying / Selling/ Leasing/ Investing
Dir: 647.839.0079
rathiga24@hotmail.com
Homelife/Future Realty Inc.,Brokerage*
Bus: 905.201.9977 Fax: 905.201.9229
205-7 Eastvale Dr, Markham ON. L3S 4N8

GAJAN
MAHARAJAPATHY
416.999.2777
RE/MAX COMMUNITY
Realtorgajan.com

Sri Vallipuranathar
Certified Insolvency & Bankruptcy Counsellor
CDC Credit Solution Centre
309-80 Corporate Drive
Scarborough, ON M1H 3G8
Tel: 416.439.0224
Cell: 416.450.5011

Vaheesan Jeyaveerasingam
Sales Representative
Re/Max Ace Realty Inc. Brokerage
3-1286 Kennedy Road, Scarborough, Ontario. M1P2L5
Dir:
Bus:416-270-1111 | Fax:416-270-7000
www.vaheesanrealtor.com.
Email:gvaheesan@hotmail.com
RE/MAX ACE

BUY / SELL / INVEST
Please Contact
RAVI PARAMU
Broker
Dir : 416-262-4176
Bus : 416-298-3200
rparamu1558@gmail.com
HomeLife Today Realty Ltd.,
Brokerage* 31 Progress Ave, Suite 210,Toronto ON,M1P 4S6

NOW HIRING
JOIN OUR DYNAMIC TEAM
iNFORCE LIFE Financial Services Inc.
Dir 416-909-0400 Bus 416-321-6000 x400
QUALITY ADVICE YOU CAN TRUST
CHANDRAN RASALINGAM DHS
President & CEO

Tharma Iyathurai
Sales Representative
HomeLife/GTA Realty Inc., Brokerage*
5215 Finch Ave. E., Suite: 203
Toronto, Ontario
Cell: 416 505 8532
Office: 416 321 6000
Fax: 416 321 6063
tharma11@yahoo.com
5215 Finch Ave. E., Suite: 203, Toronto, Ontario

DR. YALINI ARAVINTHAN BDS. DDS.
DENTIST
KAI Smiles Dental Clinic
ALL YOUR DENTAL NEEDS...
CALL US: 905-554-5524
7475 KENNEDY RD, MARKHAM, ON L3S 3J6

RE/MAX NORTH REALTY
077 566 0000
www.remaxnorth.lk
info@remaxnorth.lk
83 Kannathiddy Road, Jaffna
LATHAN VARATHARAJAH
Broker Owner
+94 76 403 3331
+1 416 230 7007